E-ISSN: 2581-7140

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES (Ijtlls)

A Bi-Yearly Peer-Reviewed International Journal

திருவள்ளுவர் கல்லூரி - பாபநாசம்

ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி - திருநெல்வேலி

பாத்திமா கல்லூரி - மதுரை

பாரதிதாசன் பல்கலைக்கழகம் - திருச்சி

பிரபா இலக்கியப் பதிப்பகம் - சங்கரன்கோவில்

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம் - மலேசியா

இணைந்து நடத்தும் மாபெரும்

பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்கம்

நாள் : 12.05.2019 – 16.05.2019

நிகழிடம் : சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம் - மலேசியா

தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்

LIFE ETHICS EVINCED IN TAMIL LITERATURE

சிறப்பிதழ் 2 : தொகுதி - 1 மே 2019

SPECIAL ISSUE II : VOL – 1, MAY 2019

தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்

LIFE ETHICS EVINCED IN TAMIL LITERATURE

Advisory Editorial Board

PUBLISHER: D. Maheswari,
3/350, Veterinary Hospital Back side,
Virudhunagar – 626001.
Mobile: 8526769556
Mail: maheswari@ijtlls.com
dmakesh88@gmail.com, ijtllsetamiljournal@gmail.com

PUBLISHER'S MESSAGE

Aim & Objectives

International Journal for Tamil Language and Tamil Studies is an online Peer-Reviewed International Journal published twice in a year on July and January, which is published by **Maheswari Publishers,** patronized by **Pandian Educational Trust, Virudhunagar, Tamil Nadu, India**. It also publishes **Literary Druid, for English Language and Literature (Online)** to foster research in the domain areas**.**

International Journal for Tamil Language and Tamil Studies aims to bring down Academic Research to promote research support for the academicians and scholars in the field of Tamil Language and Literature. Research through this medium is motivating in all aspects of main and inter-disciplines by consequent projects and e-publication. Making Internationalization of the research works in the globalized world aid the scholarly community to develop scholarly profile in research through the quality of publications. The audacity and vision of academic research on internet could foster green printing and open access nature in research. All of these motivate best distribution of research that produces positive outcomes for the betterment of the world.

Disclaimer

International Journal for Tamil Language and Tamil Studies is committed to research Ethics and consider plagiarism as a crime. The authors are advised to adhere academic ethics with respect to acknowledgment of quotations from other works. The Publisher & Editors will not be held responsible for any lapse of the provider regarding plagiarism in their manuscripts. The submissions ought to be original, must accompany the declaration form stating your research paper as an original work, and has not been published elsewhere for any research purpose. The contributor will be the sole responsibility for such lapses on any legal issues and publication ethics.

Contact ijtllsetamiljournal@gmail.com for submission and other information. See www.ijtlls.com for guidelines.

D. Maheswari
Publisher and Director

Message from the Editor-in-Chief

International Journal for Tamil Language and Tamil Studies is an online Peer-reviewed International Journal of Tamil Language and Literature which is committed to academic research, welcomes scholars and students all over the world who to advance their status of academic career and society by their scholarly ideas. The journal welcomes publications of quality papers on the domain area.

Research ought to be active to create a major frontier in the academic world. It must augment the neo-theoretical frame that facilitates re-evaluation and augmentation of existing practices and thoughts. In due course, this will effect in a prime discovery and lean to the knowledge acquired. Research is to establish, substantiate facts, restate previous works ant to resolve issues. An active venture to endow cogent approach to these types for educational reformations through academic research has become the central intent of the journal.

D. Maheswari

வாழ்த்துரை



முனைவர்.சு.சுந்தரம்

முதல்வர், திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்

14.05.2019 - செவ்வாய்க்கிழமை திருவள்ளுவர் கல்லூரி தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர்.அ.பாக்கியமுத்து சுல்தான் இட்ரிசு கல்வியல் பல்கலைக்கழகம் மலேசியாவில் நடத்தும் "தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்" என்ற பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்கத்தை மனதார வாழ்த்துகிறேன். முயற்சி, ஆர்வம், வேகம் இவரிடம் இருப்பதைப் பார்க்கிறேன். பல நாடுகளில் உள்ள பேராசிரியர்கள் கட்டுரையாளர்கள் தொடர்பு இவருக்கு உள்ளது. இந்த கருத்தரங்கம் வழியாக வெளிவரும் ISSN- ஆய்விதழ், இலக்கியக் கட்டுரைகள் எல்லோருக்கும் பயன் உள்ளதாக அமையும் என நம்புகிறேன். சமீபத்தில் பணிக்கு வந்த பேராசிரியர்கள் மற்றும் ஆய்வு மாணவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட "தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்" (IJTLLS) மூலமாக கட்டுரை பதிப்பு பெறுவது என்பது சிறப்பு. முதல்வர் என்ற முறையில் கட்டுரை எழுதிய பேராசிரியர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்னும் பல நாடுகளில் நடக்கும் கருத்தரங்குகளில் பங்குபெற்று தமிழை வளர்க்க, அநேக ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுத உங்களைத் தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன். இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்த எங்கள் கல்லூரியோடு இணைந்த அனைத்துக் கல்லூரி நிர்வாகம், முதல்வர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் அனைவருக்கும் நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மலேசியா சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கும் நன்றி.

நன்றி

அன்புடன்

முதல்வர்.சு.சுந்தரம்

பாராட்டுரை



உயர்திரு.இரா.நடராஜன்

நிர்வாக அலுவலர், திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்

எம் கல்லூரியில் பணியாற்றும் முனைவர்.அ.பாக்கியமுத்து, தமிழ்த்துறை இணைப்பேராசிரியரின் முயற்சி பாராட்டுக்குரியது. பல கல்லூரிகளை இணைத்துப் “பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்கம்” மலேசியாவில் நடத்தி ‘‘தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்’’ (IJTLLS) மூலமாக பேராசிரியர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயனுள்ள விதத்தில் கட்டுரைகளை அச்சிட்டு வெளியிடுகிற இந்தக் கருத்தரங்கம் சிறப்புக்குரியது; பராட்டுக்குரியது. பல வெளிநாட்டுக் கருத்தரங்குகள் நடத்தியவர். வெளிநாட்டுக் கருத்தரங்குகளில் பங்கு பெற்றவர். இன்னும் பல கருத்தரங்குகள், தமிழ்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடத்தி வெற்றி காண வாழ்த்துகிறேன். கட்டுரை வழங்கிய ஆய்வாளர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள். நன்றி, வாழ்க! வளமுடன்!

நட்புடன்

இரா.நடராஜன்

அணிந்துரை



முனைவர்.ச.சதாசிவம்

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சென்னைகிறித்தவக் கல்லூரி
தாம்பரம், சென்னை

தாமிரபரணி நதி தவழ்ந்து விளையாடுகிற நெல்லைச் சீமையில் கல்விப்பணியில் தன் நிகரற்று விளங்கும் பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரியின் தமிழ்த்துறையோடு மலேசியா சுல்தான் இட்ரிஸ் கல்வியல் பல்கலைக்கழகம், திருநெல்வேலி ராணி அண்ணா அரசினர் மகளிர் கல்லூரி தமிழ்த்துறை, பாத்திமா மகளிர் கல்லூரி தமிழ்த்துறை, பிரபா இலக்கியப் பதிப்பகம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து "தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் எனும் பொருண்மையில் பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்கம் நடத்த திட்டமிட்டு செவ்வனே நிறைவேற்றியிருப்பது தமிழ்கூறு நல்லுலகிற்கு மிகுந்த பயன் நல்குவதாகும்.

ஆய்வாளர்களின் தரம் மிக்க ஆய்வுக் கட்டுரைகளை "தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்" (IJTLLS) மூலமாக முறையே வெளியிட்டு தனது ஆரோக்கியமான பயணத்தால் ஆய்வுலகிற்குப் பெருமை சேர்த்து வருகிறவர் முனைவர்.அ.பாக்கியமுத்து.

நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளைப் பெற்று நூலாக்கம் செய்து வெளியிடுவது என்பது அசாத்தியமானது. எப்போதும் இல்லாத அளவிற்குத் தற்போது ஆய்வாளர்கள் எண்ணிக்கை அதிகம். தமிழ் மொழிக்கும், இலக்கியத்திற்கும் பெருமை சேர்க்கும் விதமாய் இன்றைய ஆய்வுகள் வீறு நடைபோடுகின்றன. இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி. அக்கண்ணாடியின் வாயிலாக நம் முன்னோர்களின் வாழ்வு பிரதிபலிப்பதைக் காணலாம். நன்மை தீமைகளை அறிந்து வாழலாம். தொன்மை எனும் ஆணிவேரில் இருந்துதான் மலர்கள் எனும் இன்றைய புதுமைகள் காட்சியளிக்கின்றன.

புதிய வாழ்க்கை கற்றுத்தந்த பாடத்திலிருந்து புதிய வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ளலாம். காலச் சூழலுக்கேற்ப பழையனக் கழிந்து புதியன புகுந்து இலக்கியத்தையும் மக்கள் வாழ்வையும் வளப்படுத்துதல் வேண்டும். இக்கருத்தரங்கின் முதன்மை அமைப்பாளர் முனைவர்.அ.பாக்கியமுத்து அவர்கள் தனது அன்பாலும், அரவணைத்துச் செல்லும் பண்பாலும் அனைவரின் மனதிலும் இடம் பிடித்தவர். இலங்கைப் பயணத்தின் போது முனைவர் இ.பாக்கியமுத்து அவர்களின் வருகை எங்கள் அனைவருக்கும் மகிழ்வை அளித்தது. ஒவ்வொரு பணியையும் முன் நின்று திறம்படச் செய்து முடித்தல் என்பது அவருக்கு கைவந்த கலை. முனைவர் அ.பாக்கியமுத்து அவர்களின் இக்கருத்தரங்கு பணி சிறந்தோங்க நாம் அனைவரும் அவருக்கு உறுதுணையாக நிற்போம்.

இக்கருத்தரங்கில் **முனைவர் அ.பாக்கியமுத்து** அவர்களுக்கு உறுதுணையாக நின்ற முனைவர்.இரா.உமாதேவி, முனைவாசெ.வில்சன், ஜெ.சந்திரகலா, முனைவர் டயானாகிறிஸ்டி ஆகியோரின் தமிப்பணி சிறக்கட்டும்.

காலங்கடந்து நிற்கும் பணியைத் திருவள்ளுவர் கல்லூரியின் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் **முனைவர் அ.பாக்கியமுத்து** அவர்கள் செய்து முடித்திருப்பது போற்றத்தக்கது அன்னாரின் தமிழ்ப்பணி மேலும் சிறக்க இறையருள் கிட்டட்டும்.

நட்புடன்

சு.சதாசிவம்
செம்மூதாய் பதிப்பம், சென்னை

வாழ்த்துரை



நந்திரவம். பா.சம்பத் குமார்
துணைத்தலைவர்
தென்னிந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தயாரிப்பாளர்கள் சங்கம் (கில்டு)
தி.நகர், சென்னை

எல்லா கல்லூரிகளிலும் வரலாற்றுத்துறை உண்டு. பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரிக்கு என சிறப்பான வரலாறே உண்டு. வற்றாத நதியாக வளம் வரும் இடமான பொதிகைச் சாரலில், இயற்கை எழில் கொஞ்ச ஒய்யாரமாய் வீற்றிருக்கிறது. மடங்கள் பொதுவாக, ஆன்மிகத் தொண்டினையே முதன்மையாக நோக்கும்.

ஆனால், தவத்திரு.குன்றக்குடி அடிகளாரின், சீர்தமிழ் பற்றினால், மக்கள் பணியே, மகேசன் பணியெனக் கொண்டு, எளியோரின் அறிவுக் கண்களைத் திறக்க, கல்லூரியை நிறுவி, பாதை வகுத்து, வழிகாட்டி இருக்கிறார். தமிழ் மணக்கும் அடிகளாரின் வழியில், தவத்திரு.பொன்னம்பல தேசிக அடிகளாரும் சமூகப் பணியில் தொடர்ந்து பயணிப்பது பாராட்டிற்கு உரியது.

அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தாகக் கொண்டு, 52 – ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் திருவள்ளுவர் கல்லூரி – தமிழ்த்துறையின் சார்பில், ஆற்றி வரும் பணிகள் ஏராளமாகும்.

“பிறப்பொக்கும்” வள்ளுவம்தனை உலகினுக்கே உணர்த்திய திருவள்ளுவர் பெயர் தாங்கிய கல்லூரி என்பதும் வெகுச்சிறப்பு. சிலர் தமிழினக் கூறுகளைத் திட்டமிட்டு புதைத்திட எண்ணிடும் வேளையில், இலக்கியங்களில் புதைந்துள்ள வைரக் கருத்துக்களை வெளிக்கொணர, பன்னாட்டுக் கருத்தரங்கம், மலேசியாவில் நடத்திடுவது மெய்யாகவே மெச்சக்கூடியது.

பன்னாட்டுக் கருத்தரங்கின் வாயிலாக, எண்ணிலா ஆய்வுக் கருத்துக்களைத் தங்களது கல்லூரி மாணவர்களுக்கும் சேர, மடைமாற்றி பயனடைய இணைத்து, உயிரெனத் தனக்குள் ஓடவிட்டு, வாழ்வியலாகவும் மாற்றலாம்.

இரண்டாவதானக் கருத்தினையே, முதன்மையாக் கொண்டு, செயல்பாட்டு நிலையில் பயனுள்ளதாக்கி, அடுத்த தலைமுறைக்கு இலகுவாகக் கொண்டுபோய் சேர்த்து இருக்கிறார்கள். தமிழரின் புதுமையான சிந்தனைகளின் வாழ்வியலை அடையாளப்படுத்தி இருக்கிறார்கள்.

உதட்டளவில் உச்சரித்துச் செல்வோர் மத்தியில், உண்மையோடு அனைவரின் வாழ்வினில் பிணைக்க, உறுதியான செயலை நிறுவியும் இருக்கிறார்கள் புரியாமலேயே, சடங்காய் போய்க்கொண்டிருக்கும் சமூகத்தின் சங்கடத்தைத் தீர்க்க முனைப்புக் காட்டியது உளப்பூர்வமான பாராட்டிற்குரியது.

திறனாளர்களுக்கு வாய்ப்பையும், பயனாளர்களுக்கு வழியையும் ஒருசேரக் காட்டியது கருத்தரங்கக் குழுவினரின் உள்ளார்ந்த திறனையும், மதிநுட்பத்தையும் வெளிப்படுத்தி உள்ளது.

இச்சீரிய முயற்சியை எடுத்த கல்லூரி நிறுவனர் தவத்திரு.அடிகளார் அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் க.சுந்தரம் அவர்களுக்கும், கருத்தரங்க அமைப்பாளரும், தமிழ்த்துறை இணைப்பேராசிரியருமான முனைவர்.அ.பாக்கியமுத்து அவர்களுக்கும் மற்றும் துணையானோர் அத்துணை பேருக்கும் பாராட்டுக்கள், மேன்மையான பணிகள் தொடர, செழிக்க வாழ்த்துக்கள்.

நந்திரவம்.பா.சம்பத்குமார்
துணைத்தலைவர்

அணிந்துரை



முனைவர் அரு உமா தேவராஜன்
இயக்குநர்
Dr.APJ.அப்துல்கலாம் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம், சேலம்.

‘தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்’ என்ற இந்த மலேசியா பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்க ஆய்வு கோவை இப்பொழுது உங்கள் கரங்களில் தவழ்கிறது. இந்நூலின் கட்டுரைகள் ‘இலக்கியம்’ என்னும் இழையில் கோர்த்தமணிகளைக் கொண்ட அழகிய மாலையாகத் திகழ்கிறது.

நந்தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் ஒல்காப்பெரும் புகழ் பெற்றவை. இவை தமிழர் தம் அறிவுக் கருவூலம் உலக மாந்தரினம் வாழ வாழ்க்கை நெறிகாட்டி மக்களை மாக்களினின்று பிரித்து இருள் நீக்கும் காளாமணி விளக்கு ஒழுக்க உறையுள் விழுப்பெருமுழு மணிநாகரிகம், போர், குடி, படை, செல்வம், காதல் வாழ்வு, அன்புமுறை, நாடு, நகர்வளம் பிற யாவும் சுரந்து அறிவு வேட்கை ஆற்றும் வற்றாத ஊற்று, இத்தகு உயர் தனி இலக்கியங்களில் மனித வாழ்க்கை நெறிமுறைகள் என்ற ஆய்வு நோக்கை காணவேண்டும் எனும் வேட்கையே இப்பன்னாட்டுக் கருத்தரங்கின் தோற்றுவாய்.

இந்த தலைப்பைக் கருத்தரங்க குழுவினர் தேர்ந்தெடுக்கக் காரணம் வாழ்க்கையும் ஒழுக்கமும் கைக்கோர்க்க வேண்டும் என்ற அவாவே! உலக மக்கள் அனைவரும் நீடூழிவாழ நினைப்பது இயல்பே. எனினும் ஒழுக்கமும் மறந்தால் மனித மாண்பு மாறும். தொன்மம் நாடுவோர் ஒழுக்கத்தை ஏற்க மறுத்தால் வளர்ச்சி குன்றும். இவ்விரண்டும் இணைந்து பயணித்தால் மட்டுமே வாழ்வு வளம் பெறும். செய்திகளை வேட்டையாடும் ஆய்வு முறை அறிவியல் துறைக்கு ஏற்புடையது. இலக்கியத்துறைக்கு எவ்வாறு ஏற்புடையது? உணர்வு என்னும் உயர்நிலை வெளிப்பட வாய்ப்பில்லை. தமிழறிஞர்கள் உணர்வது உணர்த்த நினைப்பதும் தேவை அன்றோ?

உணர்வுக்கூறுகளை வெளிப்படுத்த செய்திகள் உறுதுணையானால் இரண்டும் ஒன்றைஒன்று தழுவி நிற்குமானால் ஆய்வு வலுப்பட்டு நிற்கும். அந்த நம்பிக்கையில் கருத்தும் காட்சியும் இணைகின்றன. சில கட்டுரைகள் செய்தியில் கவனம் செலுத்தும். சில உணர்வின் ஊற்றையே நாடும். சில இரண்டையும் இணைத்துப் பார்ப்பதற்கு இடமளிக்கும். இவற்றை ஒரு சேரக்காண்பதே கருத்தரங்க ஆய்வு நூலின் கருத்தாகும். "தமிழ் மொழிக்குயர் மொழிதரணியிலுள்ளதெனில் வெகுளியற்றிருப்பேன்". வண்ணச்சபரம் தண்டபாணி சுவாமிகள் கூறுவார். உயர்தனித் தமிழ்மொழியில் வாழ்க்கையினின்று தோன்றி வாழ்க்கைக்கு வழிகாட்டும் இலக்கியங்கள் காலத்திற்கேற்பக் கோலம் கொண்டு விளங்குபவை. காலம் மாறும் பொழுது கருத்தும் மாறுவது இயல்பு. கருத்தின் மாற்றம் இலக்கியத்தைத் தோற்றுவிக்கிறது. மாறி வரும் காலத்திற்கு ஈடு கொடுக்க தமிழன்னை புதிய கவிஞர்கள், எழுத்தாளர்கள் என நவீன இலக்கியத்திற்கும் பிள்ளைகளை ஈன்று கொண்டேயிருக்கிறாள்.

ஆயிரக்கணக்கான நூல்கள் எழுதப்பட்டு அச்சாகின்றன.. எத்தகைய நூல்களைக்கற்க வேண்டும் என்று தீர்மானித்தல் கடினம். ''சில நூல்களை மேலோட்டமாகவும், சிலவற்றை ஆழ்ந்தும், சிலவற்றை அப்படியே மனதில் ஈர்த்தும் கற்க வேண்டும்" என்பார் பேக்கன். வள்ளுவம், 'கற்க கசடறக் கற்பவை' என்று அறிவுறுத்துவதை இங்கு நோக்கற்பாலது.

நம் வாழ்நாள் குறைவு. ஆனால் படைப்பாளர்கள் சங்க காலத்தில் படைத்த இயற்றியுள்ள இலக்கியங்களோ ஏராளம். அவை அனைத்தும் ஓதி உணர்வது அரிது. ஆனால் இது போன்ற ஓர் ஆய்வு நூலில் பன்முக இலக்கியங்களின் கருத்தையும் உணர்வையும் சுவையையும் ஆய்வுமுறையையும் புலமையையும் வெளிப்படுத்துபவை. பாராட்டத்தக்க இந்நூல் பலராலும் படிக்கப்பெறும். பாராட்டப்பெறும் என்பது என் விழைவு என் வேண்டுகோள். தமிழ் கூறும் நல்லுலகம் இந்நூலினை ஏற்று வாழ்த்தும், போற்றும். கருத்தரங்க அமைப்பாளர் பதிப்பாசிரியர் முனைவர்.அ.பாக்கியமுத்து அவர்களுக்கு வாழ்த்துக்கள்.

முனைவர் அரு உமா தேவராஜன்

வாழ்த்துரை



முனைவர் கோ. உப்பிலி சீனிவாசன்
உதவிப் பேராசிரியர், தேர்வுத் துறை
சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

கல்வி சார்ந்து சமுதாயத்தின் மீது மட்டும் அக்கறை கொள்ளாமல், தமிழ் வளர்க்கின்ற சமுதாயத்தினையும் நேசித்தும், வளர்த்தும், கொண்டிருக்கின்ற நான்கு கல்வி நிறுவனங்கள் மற்றும் பதிப்பகம் - திருவள்ளுவர் கல்லூரி, தமிழ்த்துறை – பாபநாசம், மலேசியா சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகம், பாத்திமா மகளிர் கல்லூரி – மதுரை – பாரதிதாசன் பல்கலைக்கழகம்- திருச்சி, பிரபா இலக்கியப் பதிப்பகம், சங்கரன்கோவில் மற்றும் “தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்” (IJTLLS) ஒரு புரட்சி இலக்கோடு இணைந்து இப்பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்துவதில் பல்வேறு நன்மைகள் உள்ளன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

முதலாவதாக வேறுபட்ட அனுபவங்களின் சங்கமம் என்பதால் இக்கருத்தரங்கானது சீரும் சிறப்புமாக அமையும் என்பதைத் தொடர்ந்து மிகப் பெரிய பணியினை இவர்கள் பகிர்ந்து செய்வதால் பணிகள் பளுவின்றி தொய்வுமின்றி இனிதாகவே முடியும். வருங்காலங்களில் இது போன்ற கூட்டு முயற்சிகள் தொடர்ந்து நடைபெற இக்கருத்தானது முன்னோடியாக திகழ்ந்திருக்கிறது என்பதனைக் காணும்பொழுது மனது மட்டற்ற மகிழ்ச்சியை அடைகின்றது.

தமிழ் இலக்கியங்கள் தொன்மைகளையும், புதுமைகளையும் அக்காலம் தொட்டே இணைத்து வழிகளிலும் பல்வேறு முறைகளில் எடுத்துரைத்தன. அந்நோக்கோடு இம்மாநாட்டினை நடத்த திட்டமிட்டு செயல்பட்டு மாநாட்டுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல்கள் ஒவ்வொன்றும் நம் வாழ்வைச் சீர்படுத்திக் கொள்ள உதவும் இத்தருணத்தில் பயனுள்ள கட்டுரைகளை அளித்த பேராசிரியப் பெருமக்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் என்ற பன்னாட்டுக் கருத்தரங்கு இனிதே நடைபெற்று அதன் நோக்கம் முழுமையாக நிறைவேற வாழ்த்துகிறேன்.

வாழ்த்தின் மகிழ்வில்
முனைவர் கோ.உப்பிலி சீனிவாசன்

பதிப்புரை



முனைவர். அ.பாக்கியமுத்து
தமிழ்த்துறை இணைப்பேராசிரியர், திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்.
பதிப்பாசிரியர் - பிரபா இலக்கியப் பதிப்பகம்
ஆசிரியர் - ‘‘மருதம்’’ பன்னாட்டுத் தமிழாராய்ச்சிக் காலாண்டிதழ்

“தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் என்ற பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்கத் தலைப்பை தேர்வு செய்ததில் இருந்து கருத்தரங்க நாள் வரை என்னோடு பணி செய்த இராணி அண்ணா கல்லூரிப் பேராசிரியர் முனைவர்.இரா.உமாதேவி, மதுரை பாத்திமா கல்லூரியில் பேராசிரியர் முனைவர்.இரா.டயானா கிறிஸ்டி, பாரதிதாசன் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் ஜெ.சந்திரகலா, அண்ணாமலைப் பல்கலைக்கழக முனைவர்.செ.வில்சன் போன்ற ஒருங்கிணைப்பாளர்கள் என்னோடு சேர்ந்து மலேசியக் கருத்தரங்கம் சிறப்பாக நடத்த ஒத்துழைப்பு அளித்துள்ளார்கள். நன்றியை மனப்பூர்வமாகத் தெரிவிக்கிறேன். எம் கல்லூரி நிர்வாகம், முதல்வர், தமிழ்த்துறைத்தலைவர், தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், அனைவருக்கும் நன்றி. கட்டுரை வழங்கிய தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பேராசிரியப் பெருமக்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும், வெளிநாட்டு கட்டுரையாளர்களுக்கும் நன்றி.

பிரபா இலக்கியப் பதிப்பகம், எனக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்துதவியது. பன்னாட்டுத் தமிழாராய்ச்சிக் காலாண்டிதழ் (மருதம்) 2019 மார்ச் இதழ் இந்த கருத்தரங்கத்தின் வழி வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சிறந்த இலக்கியக் கட்டுரைகள் “மருதம்” காலாண்டிதழ் பிரபா இலக்கிப் பதிப்பகம் வழியாக வெளிவர இருக்கிறது.

சங்க இலக்கிய நூல்கள், புராண நூல்கள், பக்தி இலக்கிய நூல்கள், காப்பிய நூல்கள், நாவல், சார்ந்த கட்டுரைகள் தந்துள்ளீர்கள். தரம் வாய்ந்த கட்டுரைகள் ‘‘தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்’’ (IJTLLS) மூலமாக வெளிவருவது சிறப்பு. அதற்காக பதிப்பாசிரியர் திருமதி. த.மகேஸ்வரி அவர்களுக்கும்

நன்றி. இந்தக் கட்டுரைகள் அனைத்தும் எதிர்கால ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவும் என்பதில் ஐயம் இல்லை. மலேசியா மட்டுமல்ல பல வெளிநாடுகளிலும் தமிழ்ப்பணி, தமிழாராய்ச்சி செய்யத் துவங்கியுள்ளேன். என்னால் இந்த தமிழுக்கு தமிழ் மக்களுக்கு, என்ன செய்ய முடியுமோ அதை எந்த வழியிலாவது செய்வதற்கு தயாராகி உள்ளேன். ஜாதி, மதம், மொழி, நாடு, தேசம் கடந்து தமிழில் தொலைதூரப் பார்வையோடு தமிழை உயர்த்த, தமிழ் வளர்க்க சிந்திப்போம். இனி, அடிக்கடி உங்களோடு நான், என்னோடு நீங்களாக மாறலாம். வாருங்கள் தமிழை வளர்க்கப் புறப்படுவோம்.

தமிழால் இணைவோம்

அறிவால் உயர்வோம்

வாழ்க தமிழ்

நன்றி

பதிப்புரை மற்றும் நன்றியுரை



திருமதி. த.மகேஸ்வரி,
இயக்குநா் மற்றும் பதிப்பாசிரியா் - IJTLLS,
தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,
விருதுநகா் - 626 001.

தமிழ்மொழி மற்றும் இலக்கியத்திற்காக எமது **தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (IJTLLS)** தம் இலக்கிய மற்றும் ஆராய்ச்சி அரும்பணியை செய்து வருகின்றது.

தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் என்ற பொருண்மையில் கருத்தரங்கம் நடத்தி அதை எமது ஆய்விதழ் வாயிலாக வெளிக்கொணர ஒப்புதல் அளித்த திருவள்ளுவா் கல்லூரி நிா்வாகம், முதல்வா், மற்றும் பிற பல்கலைக்கழக மற்றும் கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவா், தமிழ்த்துறைப் பேராசிரியா்கள் அனைவருக்கும் நன்றி.

இப்பன்னாட்டு கருத்தரங்கத்தின் ஓா் அங்கமாக **தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (IJTLLS)** செம்மையாய் செயல்பட்டு ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் பதிப்பு செய்து உள்ளது. எதிா்காலத்தில் தமிழ் ஆராய்ச்சிகளை உலக அரங்கத்திற்கு எடுத்துச் செல்ல ஓா் ஆய்வுக்களமாக எமது இதழ் செயல்பட்டு வருகிறது. அதற்கு தமது உறுதுணை அளித்த அனைவருக்கும் நன்றி.

பன்னாட்டு கருத்தரங்கில் தமது ஆய்வை செம்மை நிறுத்தி தமிழ்மொழி, தமிழா் நாகரிகம், தமிழா் பண்பாடு மற்றும் கலாச்சாரம் போன்ற பொருண்மையில் கிடைத்த தரவுகள் கட்டுரைகளை வழங்கி சிறப்பித்த தமிழ் பேராசிரியா்கள், ஏனைய அனைத்து துறைப் பேராசிரியா்கள், எழுத்தாளா்கள், தமிழ் ஆா்வலா்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவா்களை மனதார பாராட்டுகிறோம்.

நன்றி

திருமதி. த.மகேஸ்வரி
இயக்குநா் மற்றும் பதிப்பாசிரியா் - IJTLLS

பொருளடக்கம்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

சங்க இலக்கியங்கள் காட்டும் உச்சபட்ச வாழ்வியல் சிந்தனைகள்
Lofty Social Ethics Shown in Sangam Literature

கொ. அம்பேத்கார், ஆசிரியர்.
அரூர். தருமபுரி மாவட்டம்.

Abstract

The paper traces the lifestyle and the high moral ethics practiced by the people of the Sangam times of Tamil Nadu. The people lived a high life with morale, having conscious and awareness on all sorts of life and life oriented setup. Even the sangam verses glorify the feats of war done by the triunvirs of Tamil Nadu. It also fosters the need of chaste and noblelife. These evidences can be seen in the poems. Hence, the study propagates to unfold the richness of those poems.

Keywords: Lofty, Social Ethics, Sangam Literature

“போர் பற்றிப் பெருமிதமாகப் பாடுகின்ற சங்க இலக்கியம், போர் வேண்டாம் என்ற குரலையும் தன்னுட்கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. ஆட்சியின் வெற்றியென்பது உழைக்கும் மக்களின் உற்பத்தியிலேயே அடங்கியிருக்கிறது.” என்கிற முற்போக்கு கருத்தை காணமுடிகிறது.

சங்க இலக்கியத்தில் சமாதானக்குரல்

சங்க இலக்கியத்தில் காதலும் வீரமும் சமபங்கு வகிக்கின்றன. காதல் வாழ்வை அகம் என்றும் போர் மற்றும், புகழ், வாழ்க்கைத்தத்துவம் போன்ற அனைத்தும் புறம் என்றும் பகுத்து இலக்கியம் படைக்கப்பட்டுள்ளது. காதலும் வீரமும் சங்க காலப் பண்பாடு என்றும் கூறப்படுகிறது. கூடவே வாழ்க்கைக் கூறுகள், வாழ்க்கை பற்றிய தத்துவப் பார்வை, உலக அளாவிய மானுட நேயம் முதலானவையும் சங்க இலக்கியத்தில் மணி மணியாய்ப் பொதிந்துள்ளன. போர் பற்றி நிறையவே பாடப்பட்டிருந்தாலும் அமைதி, சமாதனம், போன்ற குரலும் பரவலாக ஒலிப்பதைக் காணமுடியும்.

அதியமான் தகடூர் நாட்டை ஆண்ட சங்ககால மன்னன். இவனைப் பற்றி ஔவையார் பல பாடல்களைப் பாடியுள்ளார். தனக்குக் கிடைத்த அரு நெல்லிக் கனியைத் தமிழ்க் கவிஞரான ஔவைக்குக் கொடுத்துப் புகழ் பெற்ற செய்தியும் நாமறிந்ததே! அதியான் மீது போர் தொடுக்க முனைகிறான் தொண்டைமான் எனும் மன்னன். இந்தப் போரைத் தவிர்க்க வேண்டி அதியமானின் தூதராக ஔவையார் தொண்டைமானிடம் சொல்கிறார். தொண்டைமான் தன் படைப் பெருமையை விளக்கப் படைக்கலக் கொட்டிலைக் காட்டினான். அவனது படைக்கலக் கொட்டிலைக் கண்ட ஔவையார் அவனைப் புகழ்வது போலப் பழித்தும், அதியமானை இகழ்வது போலப் புகழ்ந்தும் கூறினார். இதன் நோக்கம் போரைத் தவிர்பபதே.

இங்குள்ள படைக்கலன்கள் நன்கு நெய்பூசப் பட்டு, மாலை அணிவிக்கப்பட்டு, மயில் பீலி சூட்டப்பட்டு காவலையுடைய அகன்ற அரண்மனையில் உள்ளன. எந்தநாளும், பொருள் இருக்கும்போது வருபவர்க்குத் தந்து உணவு அளிப்பான். பொருள் இல்லாது போனால் இருப்பதை வைத்துக் கொண்டு பலரோடும் உண்கின்ற வறியவரின் சுற்றத்தார்க்குத் தலைவன் எம்.அதியமான். அவனது கூரிய முனையையுடைய படைக்கலங்கள் பகைவரைக்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

குத்தியதால் அவற்றின் முனையும், பக்கமும் மழுங்கிக் போய்விட்டன. அவை சீர் செய்வதற்காகக் கொல்லனின் உலைக்கூடத்தில் உள்ளன. என்று எடுத்துரைத்து, அதியமானது போர்ப் பயிற்சியும், தொண்டைமானது பயிற்சி இன்மையையும் எடுத்து விளங்குவதன் மூலம் போரைத் தவிர்க மறைமுக பொருளை தந்தார் ஔவையார்.

“இவ்வே பீலி அணிந்து மாலைசூட்டிக்
கண்திரள் நோன் காழ்திருத்தி நெய் அணிந்து
கடியுடையவியக் நகரவ்வே அவ்வே
பகைவர்க்குத்திக் கோடு நுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ – என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல் எம் கோமான் வைந்நுதி வேலே
(அவ் - அவை் இவ் - இவை) புறம்: 221

அதியமானின் படைக்கலங்கள் போர் செய்ததனால் முனை மழுங்கிச் சரிசெய்ய உலைக்களத்தில் இருக்கின்றன. அதியமானின் படைகள் பயிற்சி அடைந்துள்ளன. தொண்டைமான் படைக்கலங்கள் போரில் ஈடுபடாததால் முனை மழுங்காமல் அப்படியே உள்ளன. அவனது படை பயிற்சியின்றி இருக்கிறது. இதை நயமாக எடுத்துரைத்துப் போரைத் தவிர்த்தார். ஔவையார்.

போர் பற்றிப் பெருமிதமாகப் பாடுகின்ற சங்க இலக்கியம், போர் வேண்டாம் என்ற குரலையும் தன்னுட் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. ஆட்சியின் வெற்றியென்பது உழைக்கும் மக்களின் உற்பத்தியிலேயே அடங்கியிருக்கிறது. பகைவரைப் பணிய வைக்க வேண்டுமானால் உழைக்கும் உழவர் குடிகளைக்காத்து ஓம்ப வேண்டும். நாட்டை ஒரு குழந்தையைப் பாதுகாப்பது போல் பாதுகாத்து கவனமாக ஆட்சி செய்ய வேண்டும். இதற்குப் போர் தவிர்க்கபடல் வேண்டும் என்கிற சமாதானக்குரல் சங்க இலக்கியத்தில் வைரம் போல் மின்னுவதை பரவலாகக் காணமுடியும். ஒரு நாடு என்பது அமைதியுடன் இருக்கும்போதுதான், வளம் பெருகும், அவ்வளமே நாட்டினை ஆளும் மன்னனுக்கு வெற்றியைத் தரும். எனவே அம்மன்னன் செல்வம் பெருக்குவதற் ஆதாரமாய் விளங்கும் உழவர் குடியைக் காக்க வேண்டும். அவ்வாறு காத்தால் பகைவரும் அம்மன்னனை அடி பணிவர் என்பது வெள்ளைக்குடி நாகனாரின் கருத்தாகும்.

மன்னனுடைய வெற்றி என்பது உழவர்கள் உழுகின்ற ஏரின் கொடு முனையில் தான் உள்ளது என்று பாடுகிறார். வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர். உழவர்கள் உழுது விளைத்து வளம் சேர்ப்பதால் நாடு சிறக்கும். அரசுக்கும் வருவாய் கூடும். நாட்டில் அமைதி இருக்கும் போதுதான் உற்பத்தி பெருகும். உற்பத்திக்குக் காரணம் உழைப்பாளர்களான உழவர்கள். எனவே மன்னனின் வெற்றி என்பது உழைக்கும் மக்களின் உற்பத்திச் செயல்பாட்டில் உள்ளது என்பதை வெள்ளைக்குடிநாகனார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனிடம் எடுத்துரைக்கிறார்.

பொரு படை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்று சால் மருங்கின் ஈன்றதன் பயனே
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை அல்லன செயற்கை யிற்றோன்றினும்
காவலர்ப் பழிக்கும் இக்கண்ணகன் ஞாலம்
அது நற்கறித்தனையாயின் நீயும்
நொது மலாளர் பொது மொழி கொள்ளாது
பகடு புறந்தருநர் பாரம் ஓம்பிக்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

குடி புறம் தருகுவையாயின் நின்
அடிபுறந்தருகுவா் அடங்காதோரே. புறம்: 35

பெருமானே,

நின்படை போரில் பெறுகின்ற வெற்றி உழும்
கலப்பை நிலத்தில் உழுது ஊன்று சாலிடத்து
விளைந்த நெல்லின் பயனாகும். மழை பெய்ய
வேண்டிய காலத்தில் பெய்யாது போனாலும்
விளைச்சல் குறைந்தாலும்
வறட்சி மிகுந்தாலும் மன்னரையே உலகம்
பழித்துரைக்கும். அதை நன்றாக நீ அறிந்தாய்
என்றால் நீயும் புறங் கூறுகின்றவரின்

சொற்களைக் கேளாமல் ஏரைக்காப்பவரின் உழவா் குடியைக் காத்து மற்ற குடிகளையும் காப்பாயானால் உன்பகைவா் உன்அடியைப் போற்றுவா்.

ஒரு நாடு என்பது அமைதியுடன் இருக்கும்போதுதான், வளம் பெருகும். அவ்வளமே நாட்டினை ஆளும் மன்னனுக்கு வெற்றியைத் தரும். எனவே அம்மன்னன் செல்வம் பெருக்குவதற்கு ஆதாரமாய் விளங்கும் உழவா் குடியைக் காக்க வேண்டும். அவ்வாறு காத்தால் பகைவரும் அம்மன்னனை அடி பணிவா் என்பது வெள்ளைக்குடி நாகனாரின் கருத்தாகும். இதோ போன்று நா்வெரூ உத்தலைமாா் என்னும் புலவா் சேரமான் கருவூா் ஏறிய ஒள்வாட் கோப் பெருஞ்சேரல் இரும் பொறை என்ற மன்னனிடம் ஓா் அருமையான கருத்தைக் கூறுகிறாா். மன்னா, நீ அருளையும் அன்பையும் நீக்கிப் பாவம் செய்து நீங்காத நரகத்தை அடைபவருடன் சேராதே! ஒரு குழந்தையை எவ்வாறு போற்றிக் காக்கிறோமோ அது போல நாட்டைக் காக்க வேண்டும் என்கிறாா்.

அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங்கொள்பவரோடு ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோதானே அது பெறல் அருங்குரைத்தே
அன்ப் தொடா்பு உடையவரிடத்தில் உண்டாவது
அருள்' பிறரது துன்பம்
கண்டவிடத்துத்தோன்றும் இரக்கம்
நிரயம்' தோன்றும் இரக்கம் நரகம்.

இதுவரை, வெற்றி என்பது உழவரின் உழைப்பின் காரணமாக வருவது. உழைப்பும் அதன் காரணமாக விளைச்சலும் பெருக நாட்டில் அமைதி வேண்டும். நாட்டை ஒரு குழந்தையைப் போல் பாதுகாக்க வேண்டும். இதற்கும் அமைதியான சூழல் இருந்தால்தான் இயலும் என்ற செய்தியே சங்க இலக்கியத்தில் உச்சபட்ச சமாதானக் குரலாய் பாா்க்க முடிகிறது.

பிற உயிரையும் - தன் உயிா்போல் காக்கும் மாண்பு: (அகநானூறு)

பாடியவா் : குறுங்குடி மருதனாா்
திணை : முல்லை
துறை : தோழி தலைமகனைப் பருவங்காட்டி வற்புறுத்தியது.

“தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆா்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடான்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது,
நெடும் பெருங்குன்றத்து அமன்ற காந்தட்
போதவிழ் அலரின் நாறும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

ஆய்த்ததாடி அரிவை! நின் மாணலம் படந்ததே (அகம் : 15)

குறுமலை நாட்டினனான நின் தலைவன் ஆர்பரிக்கும் ஒலி மிகுந்த விழவினையுடை உறந்தை மாநாகருக்கு கீழ்ப்பாலுள்ளதாகிய நீண்ட பெரிய மலையினடத்தே, நெருங்கும் போது காந்தளின் இதழ்கள் கட்டவிழ்ந்து மலர்ந்தால் நின்னுடைய அழகினை அவ்விடத்தே நினைத்துவிடுவான். மேலும், பூத்த சோலையிலே தம் துணையோடு வாழ்ந்த யாழ் நரம்பு ஒலித்தாற் போல முரலுகின்ற தேனையுண்ணும் வண்டினங்கள் பேதுற்று மயங்குமோ என அஞ்சி தன் தேர்மணிகளின் நாவை ஒலியாமற் கட்டுபவன் நின் தலைவன். தேரைச் செலுத்துவதிலேயே மாட்சிமைப்பட்டவனான அவன், விரைந்து தேரைச் செலுத்தி வந்து உன்னிடத்தே தோன்றுவான். அதனால் நீ வருத்தத்தை கைவிடுவாயாக! என தோழி கூற்றாக இடம் பெருகிறது.

இதன் மூலம் 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் தன் உயிர்போல் , பிற உயிர்களான, பறவை, விலங்கு, வண்டினத்திற்கும் துன்பம் இழைக்காமல் வாழ்ந்தார்கள் என்கிற மனிதேநேய மான்பை காணமுடிகிறது.

“உயிரைவிட மானம் பெரிது”

“குழவி யிறப்பனு மூன்றடி பிறப்பினும்
ஆளன்றென்று வாளிற்றப்பார்
தோடர்படு ஞமலியி னிடர்படுத்திரீஇய
கேளல் கேளீர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத
தாமிரத் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே. புறம் : 74.

சோழ நாட்டை ஆண்ட வந்த செங்கணானுக்கும், சேரமான் கணைக்காலிரும் பொறைக்கும், போர் ஏற்பட்டு சேரமான் கணைக்காலிரும் பொறை தோல்வியுற்று குடவாயிற் கோட்டத்து சிறையில் அடைக்கப்பட்டாள். அப்போது நீர்வேட்கை ஏற்பட, காவலன் நேரம் கழித்து கொண்டு வந்து கொடுத்த நீரை பருகாமல் மானம் பெரிதென நினைத்து இறந்தார் என்பது செய்தியாகும். மேலும் “மானத்தை பெறாத சேரமான் அரசனாக இருக்கமாட்டான். குழந்யைாக இருப்பினும், சதை பிண்டமாக ஒரு குழந்தை பிறந்து இறந்தாலும், அதை வாளால் வெட்டிய பிறகே புதைக்க அனுமதிக்கப்படுவர். அப்படிப்பட்ட வீரத்திற்க்கும், மானத்திற்கு பேர் போனவர்கள் நாம். அப்படி இருக்கும் சூழலில் முகம் தெரியா காவலன் தாகத்திற்க்கு தண்ணீர் கேட்டபோது – காலதாமதமாக கொண்டு வந்த நீரை பருகாமல் இறப்பதே சிறந்தது… என கூறி உயிர் நீத்தான் சேரமான் கணைக்காலிரும்பொறை.

முடிவுரை

ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழன், சமாதானக் கருத்தை கூறிய முற்போக்கு பார்வை கொண்டவனாகவும், பிற உயிர்க்கு துன்பம் கொடுக்காதவனாகவும், உயிரைவிட மானம் பெரிதென வாழ்ந்த இனமாக தமிழன் இருந்தான் என்பதும், இப்படிப்பட்ட உச்சபட்ட மானுட சிந்தனைகள் கொடுத்த பெருமைக்குறியவர்கள் தமிழர்கள் என்பதை யவராலும் மறுக்க முடியாது.

துணைநூற்பட்டியல்

1. உ.வே. சாமிநாதையர் - புறநானூறு மூலமும் உரையும், உ.வே.சா.பதிப்பு, சென்னை, ஆறாம் பதிப்பு - 1963.
2. ஔவை சு. துரைச்சாமிப்பிள்ளை, முனைவர்.கதிர்முருகு - சங்க இலக்கியம் மூலமும் உரையும், அகநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை - 60001

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

குறள் உணர்த்தும் ஈகை என்னும் வாழ்வியல் நெறி
Charity Instructed as a Norm of Life in Thirukkural

முனைவர் அல்தாஜ் பேகம், உதவித்தமிழ்ப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.

Abstract

The purpose of the paper is to bring down the virtues of life from "Thirukkural". In the Tamil society, Kural leads a great influence in everybody's lives. The study focuses on the virtue 'Charity' as evinced in the "Kural". Charity is the noble virtue donated by every man of the Tamil society. They give more importance to it. Thiruvalluvar gave more significance to charity. Hence, the paper studies the need and effects of charity.

Keywords: Charity, Norm, Life, Thirukkural

முன்னுரை

"உடலின் ஒரு பகுதியே கை
உதவுலின் பெரும் பகுதியே ஈகை"

"அழகிய உலகம் அழகிய முகம் - ஆனால் அழுக்கு உள்ளம்" இது தான் இன்றைய இயந்திர உலகம். இயந்திரமான இக்கணினி உலகில் மனிதர்களின் இனிய இதயங்கள்ஈகையை ஈந்து வாகை சூடுவதை மறந்து இரும்புகளாகி துரு பிடித்து விடுமோ? என்ற நிலையை நாம் பல இடங்களில் காணலாம். மேலும் வாழ்க்கைக்கு பணமே மூலதனம் என நினைத்துக் கொண்டு, வாழ்வின் நல்அறங்களை சிறுகச்சிறுக சிதைத்து,சுயநலச் சூழலில் இன்று நாம் வாழ்ந்து வருகின்றோம். இந்நிலையை மாற்றி, மனிதர்களை மனிதநேயமுள்ளவர்களாக மாற்ற முயற்சிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அதனை திருக்குறளின் ஒளியில் காண்போம்.

ஈகை

ஈகை கொடுத்தல் கை, கரம். கைகளால் கொடுத்தல். மனித (உடல்) வளர்ச்சிக்கு முப்பது வந்தால் முற்றுப்புள்ளி. ஈகைக்கு ஏது முற்றுப்புள்ளி. ஏனெனில் மனிதன் இருக்கும்போதும் இறந்தபின்பும் தொடர்ந்து வரும் நற்பொருள் ஈகை மட்டுமே. எது இயங்கிக்கொண்டிருக்கிறதோ அது நிகழ்ச்சி. நாம் தானம் செய்வது நிகழ்ச்சி. அத்தானம் இறந்த பின்னும் நிலைத்து நிற்கும். வாழ்க்கை ஓட்டத்தில் தானம் செய்து உயரலாம் பிறரையும் உயர்த்தலாம். அதனால் தான் வள்ளுவப் பெருந்தகை,

"வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து"(குறள்:221)

நற்செயலே ஈகை

நற்செயல் எனும் அறமே ஈகை. அறங்களில் பல அறங்கள் உள. அதில் ஈகையே தலைமை வாய்ந்தது. அதனால்தான் அக்காலத்திலிருந்தே தரும் தருமம் தலைகாப்பதோடு தக்க சமயத்தில் உயிரையும் காக்கும் என்றனர். இதனையே வள்ளுவர் "ஈகை என்னும் அறக்கவசம் அது உன் வாழ்வின் உயிர்க்கவசம்" என்கிறார். மேலும் ஈகையே அறம்.அவ்வறமே இன்பம் என்கிறார் இதனை,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

"அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல்".(குறள்:39)
"வீழ்நாள் படா அமை நன்றாற்றின் அஃ.தொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்". (குறள்:38)

என்ற குறள்களின் வழி அறியலாம்.

ஞாலத்தின் மாணப்பெரிது

சமயத்தில் உதவியவர்களை "கடவுள் போல் உதவினீர்" "கும்பிடப்போனதெய்வம் குறுக்கே வந்தது" என்கிறோம். துன்ப காலத்தில் செய்த உதவி பூமியை விடப்பெரிது என்பதை,"காலத்தினால் செய்த உதவி…" எனவும் (குறள்:102) அதனை மறக்கக்கூடாது என்பதை "மறவற்க மாசற்றார் கேண்மை…" எனவும் (குறள்:108) குறிப்பிடுகின்றார் வள்ளுவர்.

ஈகையின் சிறப்புகள்

அன்பும் கருணையும் கலந்தது தான் ஈகை. உயிர் மட்டுமே உலகின் சிறந்த வாசனைப்பொருள். அது இல்லையேல் உடல் நாற்றமெடுக்கும்.அவன் ஈந்தால் இறந்தும் வாசமெடுக்கும். இறைவனே ஈகை குணம் பெற்றிருப்பதால் தான் மனிதனிடமும் அந்நற்பண்பை எதிர்பார்க்கின்றார் இறைவன். ஈகைக்குணம் மனிதனின் நற்பண்புகளில் தலைமையானது அது அனைவராலும் கட்டாயம் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதால், திருக்குறளின் பல இடங்களில் ஈகை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏழையின் உழைப்பையும் பொருளையும் ஏமாற்றுபவர்களுக்குத் தக்க தண்டனை காத்திருக்கின்றது என அறநூல்கள் அச்சமூட்டி மனிதர்களுக்கு எச்சரிக்கை செய்கின்றன.

இறைவனின் நன்னெறிப்படி நடப்பவர் தவிர பிறர் சிராத்துல் முஸ்தகீம் எனும் துன்பப்பாலத்தை கடக்க முடியாது எனத் திருக்குர்ஆன் (1:5) தன் ஆரம்ப அத்தியாயத்திலேயே அறிவித்து விடுகின்றது. அவ்வாறே திருக்குறளும் தன் முதல் அதிகாரமான கடவுள் வாழ்த்தில் இறைநெறிப்படி நடப்பவர் தவிர பிறர் துன்பக் கடலை கடக்க முடியாது என்பதை, "அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால்…" எனச் சுட்டுகின்றது (குறள்:8) வான்சிறப்பில் மழை இன்றேல் தானம், தவம் இரண்டும் நடைபெறாது என்பதை,

"தானம் தவம் இரண்டும் வியன் உலகம்
வானம் வழங்காதெனின்" (குறள்:19)

அதுவே ஈதல் இசைப்பட வாழ்தலாகும் (குறள்:231) என்று ஈதலை முதன்மைப்படுத்துகின்றார் வள்ளுவர். திருக்குறள் ஏழ்மை நிலையில் உள்ளோரை, இரவலர் (அ) வறியவர் என்றே பெரும்பாலும் குறிப்பிடுகின்றது. இவர்களின் அவலநிலைக்குப் பரிகாரம் தேடுவது ஒவ்வொருவரின் கடமையாகும் என்பதை வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் வள்ளுவர் சான்று காட்டிச் சென்றுள்ளார். ஏனெனில் **ஈகை** என 23வது அதிகாரத்தில் ஈகைப் பற்றிப் பேசிய வள்ளுவர் வறுமையின் நிலைமைகளை (செய்நன்றியறிதல் -102,108) (ஒப்புரவறிதல்-217) (இரவு,இரவச்சம்-1061, 1062) எனப் பல தலைப்புக்களில் கூறி இரத்தலின் கொடுமையை உணர்த்துவது மக்கள் ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் தான். "நிச்சயமாக ஒவ்வொன்றிற்கும் ஒரு திறவுகோல் உள்ளது.

சொர்க்கத்தின் திறவுகோல் எளியோரை நேசிப்பதாகும்."என்கின்றது நபிமொழி. "தொழுங்கள் தொண்டாற்றுங்கள்" என இரண்டையும் சில இடங்களில் (2:3,43,277 5:55 9:5 19:55 33:33) இணைத்தே பேசுகின்ற குர்ஆன் கிட்டத்தட்ட 30 இடங்களில் ஈகை பற்றியே பதிவு செய்துள்ளது. பைபிளின் பல இடங்களில் ஏசுநாதர் ஈதலின் அவசியத்தைக் குறிப்பிட்டுள்ளார். திருமூலரின் திருமந்திரமும் ஈகையின் சிறப்பை போற்றுகின்றது. ஈகையின் மேன்மையை உணர்ந்த வள்ளுவர் 23வது அதிகாரமாக ஈகையை அமைத்து 10 (221-230)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

பாடல்களை பாடியதோடு நில்லாமல், இரவு, இரவச்சம் (1061-1070) என மேலும், 20 குறள்கள் இயற்றியுள்ளார். மேலும் இரவெனத்துவங்கும் இரக்க-1051, இரத்தலின்-229,இரப்பன்-1060, இரவார்இரப்ப-1035, இரத்தலும்-1054, இரவென்னும்-1068 இரவுள்ள-1069 என்ற 10 குறள்களையும், ஈவெனத்துவங்கும் ஈட்டம் 1003, ஈதல்-231, ஈத்துவக்கும்-228, ஈவார்-1059 என 4 குறள்களோடு மொத்தம் 14 குறள்களை முதன்மைபடுத்திப்பாடி ஈதலின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றார்.

ஏழைகளின் பசி

ஏழைகளின் பசி துன்பம் நிறைந்தது என்பதால் இந்நிலையைக் கண்டு கொந்தளிக்கின்றனர் பாரதியும் வள்ளுவரும், “தனியொருவனுக்கு உணவில்லையெனில் இச்சகத்தினை அழித்திடுவோம்” என்றார் பாரதி. வள்ளுவன் மிக்கபசி, பிணி, பகை இல்லா நாடே சிறந்த நாடு என்பதை, “உறுபசியும் ஓவாப்பிணியும் செருபகையும் சேரதியல்வது நாடு” (குறள்:734) என்பார். இரத்தலின் வேதனையை,

“இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக இவ்வுலகியற்றியான்” (குறள்:1062) என்பார்.

எச்சரிக்கையும் தண்டனையும்

ஏழைகளின் பசியும் வறுமையும் கொடுமைகள் நிறைந்தது என்பதால் தான் ஏழைகளுக்கு உள்ளம் உவந்து கொடுக்காமல் இருப்பவர்களை திருக்குறள் பின்வருமாறு எச்சரிக்கின்றது. பிறருக்கு உதவாதவரின் உள்ளம் அழிந்து விடும் என்பதை ‘இன்றிக்கெடும்’, ‘யாங்கொளிக்கும் கொல்லோ’ (குறள்: 1069,1070) என்ற குறள்கள் மூலம் உணரலாம்.

யாசித்தல் கூடாது

யாசித்தல் கொடுமையானது. எனவே “கேட்கும் முன் கொடுத்துவிட வேண்டும்.” எனக்குறள்கள் (1066, 1067) சான்று பகர்கின்றன. வறுமை கொடியது என்பதை, “கொடிது கொடிது வறுமை கொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை” என ஔவையாரும் கூறியுள்ளார். இரப்பவர்க்கு அன்புடன் அளிக்க வேண்டும் எனக் கூறும் வள்ளுவர், இரப்பதை விரும்பவில்லை என்பதிலிருந்து உழைப்பதையே உன்னதமாகக் கருதுவதும், ஏழையின் நிலையறிந்து கேட்கும்முன் கொடுத்துவிட வேண்டும் என்பதும் புலனாகின்றது.

பெண்கள் கட்டாயம் பேண வேண்டும்

ஈகையை ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் கட்டாயம் பேண வேண்டும் எனத் திருக்குறள் போதிக்கின்றது. பெண்கள் குடும்பத்தின் குத்து விளக்குகள் என்பதால் தான், திருவள்ளுவர் பெண்களுக்காக “வாழ்க்கைத்துணை நலம்”என ஒரு தனி அத்தியாயமே அளித்துள்ளார். இல்லாளின் மேன்மையை, “இல்லதென் இல்லாள் மாண்பானாள்” இ “மங்கலம் என்ப மனைமாட்சி” (குறள்: 53,60) என்கிறார். கணவன் மனைவியருக்கிடையே அன்பும் அறமும் (ஈகை)அவசியம் என்பதை வள்ளுவர்,

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது” (குறள்:45)

என அன்பும் ஈகையும் இல்வாழ்க்கையை மேம்படுத்தும் கருவிகள் என்பார். இதனையே சிலம்பும் சீறாவும் பின்வருமாறு காட்டுகின்றன.

“அறவோர்க்களித்தலும் அந்தணர்க்கு ஓம்பலும்....
தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர்க்கோடலும் இழந்த என்னை”

என கோவலனின்றி அறம் செய்ய முடியாமல் வருந்தும் கண்ணகியின் குணத்தை சிலம்பில் இளங்கோவடிகள் காட்டுவார். உமறுப்புலவர் சீறாவில்,

“வணக்கமும் அறிவும் சேர்ந்த பொறையும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

இணக்கமும் வறியோர்க்கு ஈயும் இரக்கமும்'' (சீறா: பாதை போந்த படலம்:18) வணக்கமும் ஈயும் இரக்கமும் என அன்னை கதீஜாவின் குணத்தை சேர்த்தே காட்டுவார்.

சுற்றப்பட ஒழுகல்

திருவள்ளுவர் ஒருவன் செல்வம் பெற்ற பயனை, "சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல்" (குறள்: 524) எனக் காட்டுவார். இச்சுற்றம் ஏழையாயின் அவர்களுக்கு முதன்மை அளித்து, பின்பு மற்றவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. திருக்குறளைப் போல் தமிழின் பல இலக்கியங்கள் ஈகையை வலியுறுத்தி மக்களுக்கு அறிவுறுத்துவதைக் காணலாம். சங்க இலக்கிய பதினெண்மேற்கணக்கு நூல்களிலும் ஈகைச்செய்திகள் இடம்பெறுகின்றன.

வச்சிரநந்தி முனிவர் 4ம் தமிழ்ச்சங்கத்தில் அறத்தை மையமிட்டு பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என 18 நூல்களை காட்டியுள்ளார். "ஈயேன் என்றல்" இழிவானது என்பதை, "ஈயென இரத்தல் இழிந்தன்று, ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று…" (புறநானூறு) என்றும், எல்லோரும் உறவினரே என எண்ணும் பண்பே அனைவரையும் நேசிக்க வைக்கும் அறம் என்பதை,"யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர் தர வாரா'' (புறம்) என்ற பாடல் உணர்த்துகின்றது.

ஈதலில் பலவகை அதில் இது ஒரு வகை.மறக்குடியில் பிறந்த மங்கை ஒருத்தி, தன் தந்தை,தன் கணவன், தன் ஒரே மகன் என தன் இரத்த பந்தங்களை நாட்டுக்காக ஈந்து தியாகம் செய்த அவள் வீரத்தை, "கெடுக சிந்தை கடிதிவள் துணிவே…'' என அவள் துணிவாக தன் இன்னுயிர்களை ஈந்ததை வரலாறு பதிவு செய்துள்ளது. ஔவையார் ஆத்திச்சூடியின் முதல் வரியிலேயே ஈகை பற்றிக் கூறுவதோடு, பெரும்பாலும் ஈகை குறித்தே ஒன்றுக்கு மேற்பட்ட வரிகளை இடம் பெறச்செய்துள்ளார். அறம் செய விரும்பு, இயல்வது கரவேல், ஈவது விலக்கேல், ஐயம் இட்டு உண். தானமது விரும்பு.நன்மை கடைப்படி. பொருள்தனைப் போற்று என்பன. இலக்கியம் காட்டும் கடையேழு வள்ளல்கள் ஈகையில் சிறந்தவர்கள். சான்றாகச் சில.

ஈவதில் பாரி

புல்லிய குணத்தார் செல்லினும் பாரி உவந்து வழங்குதலைக் கடமையாக உடையவன் அவன் வாரி வழங்குதில் மழை போன்றவன் என்பதை,

"மடவர் மெல்லியர் செல்லினும் கடவன் மாரி கை வன்மையே'' (புறம்106)

"பாரி ஒருவனும் அல்லன் மாரியும் உண்டு'' (புறம்107)

பரிசிலர் இரப்பின் வாரேன் எனக் கூறாது உடனே வருவான் பாரி (புறம்108) என்பன அவன் ஈகைப்பண்பைப் பறைசாற்றும். உதவி செய்பவர் மழை போன்றவர் என்பதை,"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரி மாட்டு…'' (குறள்:211) என்ற குறள் வழித்தெளியலாம்.

அதியனும் ஔவையும்

ஒப்பற்ற நெல்லிக்கனியை அதியன் ஔவைக்கு ஈந்ததோடல்லாமல், தலைநாள் போன்றே அனைவருக்கும் விருந்தோம்பும் பண்புடையவன் என்பதை, "சிறிய கட்டிபெறினே எமக்கீயும் மன்னே'' என்பார் ஔவை. இதனை நம் சமூகம் நன்குணர்ந்து ஒருவருக்கொருவர் உதவிசெய்து ஒற்றுமையுடனும் சமூகநல்லிணக்கணத்துடனும் செயலாற்றி வாழ்வில் உயரவேண்டும்.

இன்றைய நிலை மாற வேண்டும்

"மரந்தான்மரந்தான் எல்லாம் மரம் தான் ஆனால் அவை ஈதலை மறக்கவில்லை. மறந்தான்மறந்தான் அவன் எல்லாம் மறந்தான் ஈதலையும் மறந்தான்.'' இந்நிலை மாற வேண்டும். *அசுத்தம் இல்லா இயற்கை, ஆபத்து தராத செயற்கை, எது உண்மையானது*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்று அறியும் மனமும்,ஈகைக்குணமும் சமூக நோக்கமும், நாட்டுப்பற்றும் ஆகியவை அடுத்த தலைமுறைக்குச் போய்ச் சேருமானால் எல்லாத் தலைமுறையும் செழித்து வாழும்.

நூற்பட்டியல்

1. *திருக்குறள்.*
2. *திருக்குர்ஆன்.*

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

சிலப்பதிகாரத்தில் தமிழரின் மரபுக் கலைகள்
The Cultural Fine Arts of the Tamils in *Silapathikaram*

ஆ.ஆன்றோ நிஷாந்தி (முனைவர் பட்ட ஆய்வாளர்)
முனைவர் த. மகிலா ஜெனி (நெறியாளர்)
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர் - 629 802.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி.

Abstract

The paper traces the cultural arts of the Tamils as depicted in the famous epic *Silapathikaram. It shows the artistic trends practiced by the people of the 2nd Century Tamil Nadu. The people lived a tradition of having various types of rituals. In the tradition of them, the Kooothu enacting is the very interesting art in their culture. The article traces the types of it in a brief manner. These are videly seen in the epic. Hence, the deciphers the values of the artistic tradition in the epic.*

Keywords: Cultural, Fine Arts, Tamils, *Silapathikaram*

முன்னுரை

கலை என்பது மன உணர்வுகளின் வெளிப்பாடாகும். நம் முன்னோர்களின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை நாட்டுப்புறக் கலைகள் வெளிப் படுத்தியுள்ளன. இக்கலைகளே சமுதாயத்தின் ஆவணமாகத் திகழ்கின்றன. கிராமியக்கலைகள் தகவல் பரப்பும் ஊடகமாகவும், பழக்கவழக்கப் பண்பாட்டுப் பெட்டகமாகவும் திகழ்ந்துள்ளன. நமது பாட்டன், முப்பாட்டன் காலத்திலிருந்து இன்றுவரை புழக்கத்திலிருக்கும் பாரம்பரிய கலைகளின் மகிமையை இளையத் தலைமுறைக்கு எடுத்துரைக்கும் நோக்குடன் சிலப்பதிகாரத்தில் காணப்படும் தமிழரின் பாரம்பரியத்தை அடையாளப்படுத்திய கூத்துக்கலைக் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரம்

தமிழில் கிடைத்துள்ள முதல் காப்பியம் சிலப்பதிகாரமாகும். சிலம்பு காரணமாகத் தோன்றிய கதையாததால் 'சிலப்பதிகாரம்' எனப் பெயர் பெற்றது. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள். கோவலன் என்ற குடிமகனைப் பாட்டுடைத்தலைவனாகத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளதால் 'குடிமக்கள் காப்பியம்' என்றும் அழைப்பர்.
இக்காப்பியம் புகார்க்காண்டம் (10 பகுதிகள்), மதுரைக் காண்டம் (13 பகுதிகள்), வஞ்சிக் காண்டம் (7 பகுதிகள்) ஆகிய மூன்று காண்டங்ளையும், 30 பகுதிகளையும் கொண்டது. அழகியல் கூறுகளைக் கொண்ட சிறந்த காப்பியம் என்ற பெருமையுடையது சிலப்பதிகாரம். "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" என்று பாரதியாரால் புகழ்ந்து பாடப்பெற்ற நூலாகும்.

கூத்து விளக்கம்

வேடம் புனைந்து இரவு தொடங்கி விடியும் வரை கதைத் தழுவி ஆடப்படும் நாடகமே கூத்தாகும். கூத்து என்ற சொல் முதலில் நடனத்தையும் பின்பு கதைத் தழுவி வரும் நாடகத்தையும் குறிப்பிடுகிறது. "போலச் செய்தல்" முறையினால் கூத்துகள் தோன்றியது. கூத்துக்கலை கிராமத்தின் மண்வாசனையையும், அவர்கள் மதம் மீது கொண்ட பற்றுதலையும் வெளிப்படுத்தும் வகையில் அமைகிறது. கூத்தாடுபவர்களைக் கூத்தர் "கொங்கணைக்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

கூத்தரும்" (சிலம்பு. 26:106) கூத்தியர் "ஆடற்கூத்தியர்" (சிலம்பு. 5:50) என்று சிலப்பதிகாரம் குறிப்பிட்டுள்ளது. கூத்தாடும் இடத்தில் நிறைய மக்கள் வந்து கூடுவர்.

"கூத்தாட்டு அவைக்குழாத்து அற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந்துர்" (சிலம்பு. 5:50)

ஆடாதவரையும் ஆழவைக்கும், பாடாதவரையும் பாடவைக்கும் கூத்துக்கள் தமிழரின் வாழிவியலோடு இரண்டறக் கலந்தவையாகும்.

கூத்தின் இலக்கணம்

கூத்தாடுபவர் கூத்தின் இலக்கணங்களைக் கடைபிடித்து கூத்தாட வேண்டும். கூத்து அகக்கூத்து, புறக்கூத்து என இருவகைப்படும். இதனை வேத்தியல், பொதுவியல் எனவும் குறிப்பிடுவர்.

"இருவகை கூத்தின் இலக்கணம் அறித்து" (சிலம்பு. 3:12)

வேந்தர்கள் முன்னிலையில் இசையோடு சேர்த்து நடிக்கப்படுவதை வேத்தியல் என்றும், பொதுமக்களின் முன்னிலையில் நடிக்கப்படுவதைப் பொதுவியல் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

"வேத்துஇயல், பொதுஇயல் என்றுஇரு திறத்தின்
நாட்டிய நல்நூல் நன்கு கடைப்பிடித்து" (சிலம்பு. 5:50)

குரவைக் கூத்து

பண்டையச் சமுதாய மக்களின் பொழுதுபோக்கு விளையாட்டுகளுள் ஒன்று குரவைக் கூத்தாகும். குரவைக் கூத்தினை "மலைநடனம்" எனவும் குறிப்பிடுவர். குரவை ஆட்டத்தில் பங்கு கொள்வோர் ஒருவரையொருவர் தழுவிக் கொள்ளுதலே குரவைக் கூத்தின் தலையாய நெறிமுறையாகும். குரவைக் கூத்து, பழந்தமிழரின் இசைக்கலை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. சிறுபறை, தொண்டகப்பறை, ஆம்பற்குழல், தண்ணுமை என்று பலவித இசைக் கருவிகள் குரவைக் கூடத்தில் பயன்பட்டுள்ளன.

ஆயர்பாடியின் பூந்தாதுகள் நிறைந்த மன்றத்திலே, பலராமனுடன் கண்ணன் விளையாடிய வாலசரிதை நாடகங்களில், வேல் போன்ற நீண்ட கண்களையுடைய பிஞ்ஞைப் பிராட்டியோடு கண்ணன் ஆடிய குரவைக் கூத்தினை ஆய மகளிர் ஆடியுள்ளனர்.

"ஆயர் பாடியில் எருமன்றத்து
மாயவனுடன் தம்முன் ஆடிய
வாலசரிதை நாடகங்களில்,
வேல்நெடுங்கண் பிஞ்ஞையோடு ஆடிய
குரவை ஆடுதும் யாம் என்றாள்" (சிலம்பு. 17:5)

துணங்கைக் கூத்து

துணங்கைக் கூத்து என்பது பண்டைத் தமிழகத்தில் மகளிர் ஆடிய கூத்தாகும். இது பெண்கள் பலர் கூடி கை கோர்த்து ஆடும் கூத்து. நாளங்காடியில் காவற் பூதத்துக் கோயிலின் வாயிலிலுள்ள பலிப்பீடிகையில் எள்ளுருண்டை, திணைச்சோறு, பூ, நறும்புகை, பொங்கல் ஆகியவற்றைப் படைத்து மறக்குடி மகளிர் வழபட்டபின்பு, இணைந்து ஆரவாரத்துடன் துணங்கைக் கூத்தாடி விழாக் கொண்டாடியுள்ளனர்.

"புழுக்கலும், நோலையும், விழுக்குஉடை மடையும்,
பூவும், புகையும், பொங்கலும், சொரிந்து,
துணங்கையர் குரவையர் அனங்குஎழுத்து ஆடி" (சிலம்பு. 5: 68-70)

துணங்கையில் மகளிர் மட்டுமே இணைந்தாட வேண்டுமென்ற வரையறை இருந்திருக்கின்றது. மகளிரோடு ஆட விரும்பிய ஆண்கள் தங்களது உருவத்தினை மாற்றி மகளிரைப் போல் உருப்புனைந்து கொண்டு ஆடியுள்ளனர்.

"குழையன கோதையன் குறும்மைத் தொடியன்
விழவு அயர் துணங்க தழூஉ கம்செல்வ" (நற்றிணை 50:2,3)

முறைப்படி பயிற்சி மேற்கொண்டபின் தக்க முன்னேற்பாடுகளுடன் இறை வழிபாட்டின் போது துணங்கைக் கூத்து ஆடப்படும். துணங்கைக் கூத்து இரவு நேரங்களில் தான் நடத்தப்பட்டுள்ளது.

"சுடரும் பாண்டில் திருநாறு விளக்கத்து
முழா இமிழ் துணங்கை" (பதிற்றுப்பத்து 52:13)

மரக்கால் கூத்து

கொதிக்கின்ற சினம் கொண்ட அவுணர்கள் துர்க்கையைக் கொல்ல பாம்பு, தேள், பூரான் போன்ற விஷப்பூச்சிகளின் உருவம் கொண்டு நெளிவதைக் கண்டதும், பொறுக்க முடியாமல் துர்க்கை (காளி) மரக்காலினை அணிந்து அவர்களை மிதித்து நசுக்கிக் கொல்லும் போது ஆடிய கூத்து மரக்கால் கூத்தாகும். மரக்கால் கொண்டு ஆடும் ஆட்டமாதலால் மரக்காடல் எனப் பெயர் பெற்றது.

"காய்சின அவுணர் கடுந்தொழில் பொறாஅன்,
மாயவன் ஆடிய மரக்கால் ஆடலும்" (சிலம்பு.6:58,59)

கொன்றை மலரும், துளசியும் சேர்த்து தொடுத்த மலர்மாலையைத் தோள்மீது சூடி, போர்முனையில் அசுரர்கள் துன்பத்தால் வாடி நிற்க, தேவர்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும் நோக்கத்தில் குமரிக் கோலத்தில் துர்க்கை மரக்கால் கூத்து ஆடியதாக வேட்டுபவர்கள் வியந்துள்ளனர்.

"துன்று மலர்ப்பிணையல் தோள்மேல் இட்டு – ஆங்கு
அசுரர் வாட, அமர்க்கு ஆடிய
குமரிக் கோலத்துக் கூத்துள் படுமே" (சிலம்பு.12:10)

மரக்கால் கூத்து இக்காலத்தில் "பொய்க்கால் குதிரை" ஆட்டமாக ஆடப்படுகின்றது. காலில் கட்டைக் கட்டி ஆடுதல் தமிழ்நாட்டில் மட்டுமின்றி ஆந்திரா, ஒரிசா, மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களிலும் தற்போது ஆடப்படுகின்றது.

சாக்கையர் கூத்து

சாக்கைக் கூத்து என்பது புராணக் கதைகளைக் கூறி நடித்து ஆடப்படும் ஒருவகைக் கூத்தாகும். இக்கூத்தினை ஆடுபவர் "சாக்கையர்" எனப்படுவர். கதை, நகைச்சுவை, நடிப்பு ஆகியவற்றில் சாக்கையர் திறமை மிக்கவராவர். சேரன் அவையில் சாக்கையன், உமாதேவியை இடப்பாகத்தில் தாங்கியபடி இமையவனான சிவபெருமான் ஆடிய "கொடுகொட்டி" என்னும் கூத்தை ஆடிக் காட்டியுள்ளான். சிவபெருமான் திரிபுரத்தை எரித்த போது தீப்பற்றி எரிவதைக் கண்டு வெற்றிக்களிப்பில் கைகொட்டி நின்று ஆடியது கொடுகொட்டியாகும்.

"உமையவள் ஒருதிறன் ஆக ஓங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்
பர்த்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
கூத்தச் சாக்கையன் ஆடலின் மகிழ்ந்து" (சிலம்பு.28:74-77)

கொடுகொட்டிக் கூத்தை ஆடிய சாக்கையர் பறையூரைச் சேர்ந்தவன் என்றும், அவ்வூர் நான்மறையோரைக் கொண்டதென்றும் சிலப்பதிகாரம் விளக்கியுள்ளது.

முடிவுரை

தமிழ்ச் சமூகம் உலகளவில் உச்சத்தைத் தொட்டதற்கு அடிப்படை ஆணிவேராக இருந்தது தமிழரின் கலைகளாகும். கூத்துக்கலை தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் மூலை முடுக்கெல்லாம் பாட்டொளி வீசிப் பறந்தக் கலையாகும். அக்காலத்தில் மக்கள் இறைவன் மீதும், வழிபாட்டின் மீதும் கொண்டிருந்த நம்பிக்கையின் வெளிப்பாடே கூத்துக்கலை வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்துள்ளன. இன்றைய காலக்கட்டத்தில் கூத்துக்கலை பல்வேறு வடிவங்களில் மாற்றம் பெற்றாலும் மக்களிடம் தனது செல்வாக்கைத் தக்க

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

வைத்துக் கொள்ள முடியாமல் அழிவின் விளிம்பில் உள்ளன. கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட தமிழர் மரபுக்கலைகளை மீட்டெடுப்போம் தமிழர் பண்பாட்டை பறைசாற்றுவோம்.

பயன்பட்ட நூற்கள்

1. புலியூர்க்கேசிகன், *சிலப்பதிகாரம்*, சாரதா பதிப்பகம், 2014.
2. அ.ப. பாலையன் *நற்றிணை*, சாரதா பதிப்பகம், 2017
3. எ.ஃ.ப். பாக்யமேரி, *காலந்தோறும் தமிழர் கலைகள்*, பூவேந்தன் பதிப்பகம், 2013
4. யு.சுவாமிநாதன், *சங்க கால வரலாறு, விஜயா சபரி பதிப்பகம், 1991*
5. *மயிலை. சீனி.வேங்கடசாமி, நுண்*கலைகள், பூம்புகார் பதிப்பகம், 2006.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

சிலப்பதிகாரத்தில் மனிதநேயம்
Humanity in *Silapathikaram*

அ.ஆன்றோ பிரவீனா, இளம் முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி) நாகர்கோவில்.

Abstract

The paper traces the cultural arts of the Tamils as depicted in the famous epic *Silapathikaram. It shows the artistic trends practiced by the people of the 2nd Century Tamil Nadu. The people lived a tradition of having various types of rituals. In the tradition of them, the Kooothu enacting is the very interesting art in their culture. The article traces the types of it in a brief manner. These are videly seen in the epic. Hence, the deciphers the values of the artistic tradition in the epic.*

Keywords: Humanity, Tamil Culture, *Silapathikaram*

முன்னுரை

மனித வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்ததாகும். இவ்வாழ்க்கையை மனிதன் சரியாக அமைத்துக் கொள்வதற்கு மனிதநேயம் மிகவும் அவசியமானதாகும். இன்றைய மனிதனின் வாழ்வியல் மனித நேயங்களை மறந்து மனம் போன போக்கில் வாழும் நிலையைக் காண முடிகிறது. நாகரிக வளர்ச்சியில் மனிதம் மறந்து மானிடர் வாழும் அவல நிலையைக் களைந்து நல்வாழ்விற்கு வழிகாட்டும் சிலப்பதிகாரத்தில் காணப்படும் மனிதநேயப் பண்புகளை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

சிலப்பதிகாரம்

தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரமாகும். சிலம்பு காரணமாக உருவான கதையாதலால் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது. வணிகர் குலத்தில் பிறந்து, குலவொழுக்கப்படி திருமணம் செய்து, இல்லறம் நடத்திய கோவலன் கண்ணகி வாழ்க்கை வரலாற்றை விளக்குவதாகும். இன்பியலும், துன்பியலும் கலந்து எழுதப்பட்ட இந்நூலை இயற்றியவர் இளங்கோவடிகள் ஆவார். சிலம்பில் தமிழரின் ஒன்றுகலந்து வாழும் பண்பு, தமிழ் மக்களின் வாழ்வியல் நெறிகள் போன்றவை ஒளியிட்டு மிளிர்கின்றன.

மனிதநேயம்

மனிதர்களுக்குரிய உயரியப் பண்புகளில் ஒன்று மனிதநேயம். மனித இனத்தை விலங்கினத்திலிருந்து பிரித்துக்காட்டுவது மனித நேயமாகும். ஒரு உயிரின் மீது வைக்கும் அன்பு, பாசம், பக்தி, கருணை, இரக்கம், நட்பு, காதல்,நேயம், ஜீவகாருண்யம் போன்றவையெல்லாம் மனிதநேயமாகும். இயலாமையால் வருந்தும் பிறரின் துன்பத்தைப் போக்குவதற்கு இரக்க குணத்துடனும், இளகிய மனத்துடனும் செயல்புரிவதே மனிதநேயம்.

"அரம் போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்" (குறள் 997)

மனித நேயம் மற்றவர்களை மக்கட்பண்பு இல்லாதவர் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். மனிதநேயப் பண்புகள் பிறரிடம் கொடுக்கக் கொடுக்க குறையாது வளரும் தன்மையுடையதாகும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

கருணை மறவன்

கோவலன் மாதவி மகள் மணிமேகலைக்கு பெயர் கூட்டும் விழாவின் போது வயது முதிர்ந்த மறையோன் கோவலனிடம் தானம் பெறுவதற்காக தளர்ந்த நடையுடன் வந்து கொண்டிருந்தான். மறையோனைப் பாகர்க்கும் அடங்காத யானையொன்று சினத்துடன் தும்பிக்கையால் பற்றியது. இதனைக் கண்ட கோவலன் தன் கருணையுள்ளத்தினால் விரைந்து சென்ற யானையை அடக்கி மறையோனைக் காப்பாற்றினான்.

"மைஇருங் குன்றின் விஞ்சையன் ஏய்ப்பப்
பிடர்த்தலை இருந்து, பெருஞ்சினம் பிறழாக்
கடக்களிறு அடக்கிய கருணை மறவர்" (சிலம்பு. 14:51 -53)

உயிர்களிடம் கொண்ட இரக்கம் காரணமாக யானையைக் கொல்லாமல் விட்டு தனது கருணை உள்ளத்தினையும், மறப் பண்பினையும் கோவலன் வெளிப்படுத்தியுள்ளான்.

வறியவருக்கு உதவுதல்

பத்தினி ஒருத்தியின் கணவனிடம் சென்று, அவன் மனைவி பழிச்சொற்களை அடையுமாறு பொய்ம்மை கூறினான் வறியவன் ஒருவன். பொய் சொல்லும் கீழ் மகன்களை உண்ணும் பூதம் வறியவனை அறைந்துக் கொன்றது. அவனை இழந்து வருந்திய அவன் தாய், மனைவி மற்றும் சுற்றத்தார் முதலியோருக்கும் சொந்த உறவினைப்போலப் பொருளுதவி செய்து, அவர்களுடைய பசித் துன்பத்தினைப் போக்கி பல ஆண்டுகள் காத்த உயர்குணச் செம்மல் கோவலன் ஆவான்.

"சுற்றத் தோர்க்கும் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய இளைஞரின பசிப்பிணி அறுத்துப்
பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல் " (சிலம்பு.15:88-90)

கைம்மாறு செய்வதற்கும் இயலாத ஏழைகளின் பெரும் பசியினைப் போக்குபவரே உண்மையான மனித நேயம் உடையவராவார் என்பதை சிலப்பதிகாரம் கோவலன் வழியாக விளக்கியுள்ளது.

இரக்க உணர்வு

இரக்கம் என்பது பிறரது நிலையைக் கண்டு மனதில் ஏற்படக் கூடிய ஒருவித உணர்ச்சி மாற்றமாகும். கண்ணகி பிறரது நலனில் அக்கரை கொண்டவளாகத் திகழ்ந்துள்ளாள். பரத்தையர் தன்னை எள்ளி நகையாடிய போது கவுந்தியடிகள் முட்கள் நிறைந்த காட்டில் முதுநரியாகும் படி வழங்கிய சாபத்தை நீக்கும் பொருட்டு அவர்கள் மீது இரக்கம் கொண்டுள்ளாள்.

"நெறியின் நீங்கியோர் நீர் அல கூறினும்
அறியா மைஎன்று அறியல் வேண்டும்" (சிலம்பு.10: 236,237)

பிறருக்கு எவ்வித இடையூறும் ஏற்படக் கூடாது என்ற இரக்கக்குணம் பெற்றவளாகக் கண்ணகி திகழ்ந்துள்ளாள்.

தேவந்தியின் நட்பு

எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் உலகில் இருக்கும் ஒரே உறவு நட்பாகும். தேவந்தி கண்ணகியின் தோழியாவாள். பார்ப்பனப் பெண்ணான தேவந்தி பாசண்ட சாத்தனின் மனைவியாவாள். தேவந்தி பிரிந்து போன தனது கணவன் மீண்டும் தன்னுடன் இணைவதற்காக புனித நீராடல் செய்யும்போது, கோவலனைப் பிரிந்த தோழி கண்ணகியின் துன்ப நிலையையெண்ணி வருந்தி, கண்ணகியிருக்குமிடம் சென்று ஆறுதல் கூறியுள்ளாள். உடலில் இருந்து உடை விலக அதை தடுத்துக்காக்கும் கை போன்று நண்பனுக்கு துன்பம் வரும்போது உடனே சென்று போக்குவதே நல்ல நட்பு என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" (குறள். 788)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

சேரன் செங்குட்டுபனிடம் சென்று தேவந்தி தன்னை அறிமுகப்படுத்தும் போது கண்ணகியின் பெருமைக் கூறி, அவளுடையத் தோழி என்று கூறியுள்ளாள்.

"முடிமன்னர் மூவரும் காத்துஓம்பும் தெய்வ
வடபேர் இமய மலையிற் பிறந்து
கடுவிரல் கங்கைப் புனல்சூடிப் போந்த
தொகுவளைத் தோழிக்குத் தோழிநான் கண்டீர்
சோனாட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர்" (சிலம்பு.29:2)

பாண்டியர்களின் பண்புள்ளம்

மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் அறநெறி தவறாமலும், நாட்டு மக்களுக்கு எவ்வித துன்பமும் தராமல் செங்கோலாட்சி செய்துள்ளான். மதுராபுரி என்னும் குலதெய்வம் கோவலன் இறந்த துயரத்திலிருந்த கண்ணகியிடம், பாண்டிய மன்னன் அந்தணர் ஓதும் மறையொலியன்றி ஆராய்ச்சி மணியின் ஓசையினை கேட்டறியாதவன் பகை மன்னரைத் தவிர, குடிமக்கள் பழிதூற்றும் கொடுங்கோலன் இல்லை என்று கூறியுள்ளாள்.

"மறைநா ஓசை அல்லது யாவதும்
மணிநா ஓசை கேட்டதும் இலனே
அடிதொழுது இறைஞ்சா மன்னர் அல்லது
குடிபழி தூற்றும் கோலனும் அல்லன்" (சிலம்பு.23: 31-34)

இதன் மூலம் பாண்டிய மன்னன் மக்களை மதிக்கின்ற உயர்ந்த பண்பினை உடையவர் என்பது தெளிவாகிறது.

கண்ணகியின் தாய்மையுள்ளம்

கோவலன் கொலை செய்யப்பட்டதும் கண்ணகி மதுரை நகரினை அழிக்க தீக்கடவுளை ஏவினாள். பார்ப்பனர், அறவோர், பசு, பத்தினிப் பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் ஆகியோரை விடுத்து தீயக்குணம் உடையோரை அழிக்கும்படி கூறியதன் மூலம் கண்ணகியின் தாய்மை குணம் வெளிப்பட்டுள்ளது.

"பார்ப்பனர், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர்,
மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க" (சிலம்பு.21: 53-55)

கவுந்தியடிகள் வடக்கிருத்தல்

வடக்குப் பக்கமாக அமர்ந்து உணவு உண்ணாமலிருந்து இறப்பது வடக்கிருத்தலாகும். பொறுக்கமுடியாத மனவேதனையைத் தருகின்ற போது வடக்கிருந்து உயிர் விடலாம் என்பது சமணக் கொள்கையாகும். கவுந்தியடிகள் சமண பெண் துறவியாார். கோவலன் கண்ணகி மதுரைக்கு செல்லும்போது வழித்துணையாக சென்றவர். இருவர் மீதும் மாறாப் பற்று வைத்திருந்த கவுந்தியடிகள் அவர்களின் பிரிவினால் மனத்துயர் அடைந்து, வடக்கிருந்து தன்னுயிரை துறந்துள்ளார்.

"தவந்தரு சிறப்பிற் கவுந்தி சீற்றம்
நிவந்தோங்கு செங்கோல் நீனில வேந்தன்
....உண்ணா நோன்போடு உயர்பதிப் பெயர்த்தலும்" (சிலம்பு.27: 79-83)

முடிவுரை

மனிதனை மனிதனாக அடையாளம் காட்டுவது மனித நேயப் பண்பாகும். உலகில் வாழும் எல்லா உயிர்களிடமும் அன்பு, இரக்கம், நட்பு, உதவி செய்தல் போன்ற பண்புகளை வெளிப்படுத்த வேண்டும் என்பதை சிலப்பதிகாரம் தெளிவுபடுத்தியுள்ளது. நவீன உலகில் மக்களின் வாழ்க்கைச் சூழல்கள் மாறிவிட்டன. வீட்டிற்கு வீடு பெரிய சுவர்களைக் கட்டி மற்றவர்களுக்கு நேருவது என்னவென்று தெரியாமல் வாழ்கின்ற இந்தகாலச் சூழலில், மனிதநேயப்பண்பான ஒருவருக்கொருவர் உதவிச் செய்து வாழும் முறைகள் மேலும் வளர வேண்டும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

பயன்பட்ட நூற்கள்

1. புலியூர்க்கேசிகன், *சிலப்பதிகாரம்*, சாரதா பதிப்பகம், 2014.
2. பாரதியார் உரை, *திருக்குறள்*, தமிழ் மண் பதிப்பகம், 2009
3. செ.அஜிதா, *நவீன உலகிற்கு வழிகாட்டும் அற இலக்கியங்கள்*, ஸ்மார்ட் பதிப்பகம், 2015.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

திருக்குறளில் வாழ்வியல் சிந்தனைகள்
Thoughts of Life Ethics in *Thirikkural*

முனைவர்.ஜ.இந்திரா உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி-8.

Abstract

The paper finds out the thoughts of ethical life in the universal diadactic work Thirukkural. The real fact on the work is completely diadactic and is valuable to the people of all ages. The article traces the glimpses of life oriented moral codes in Thirukkural in a brief manner. It focuses on the themes such as love on humanity, education, discipline, hospitality, friendship, indebtedness, charity and other related values in the treatise. These are the very important virtues followed by the Tamil People on the times when Thiruvallluvar wrote the treatise. Its importance is very much noted for the basic virtuous qualitied embedded with the life of the people. Hence, the article deciphers the evidences of culture, tradition and the values through deciphering the moral treatise.

Keywords: Thoughts, Life Ethics, *Thirikkural*

முன்னுரை

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”

என திருவள்ளுவருக்கு புகழ் மாலையாக பாமாலையைச் சூட்டுகின்றார் பாரதியார். தமிழ் இலக்கிய நூல்களுள் முதன்மையானது திருக்குறள். சாதி, மத, சமய வேற்றுமை இல்லாமல் உலக மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுவான நீதிகளைக் கூறுவது இந்நூல். எல்லாப் பொருளும் இதன்பால் உள் இதன் பால் இல்லாத எப்பொருளும் இல்லையால் என்றுபாராட்டப்படும் பெருமையுடையது. மனிதனை சீர்படுத்தி செம்மைப்படுத்தும் மனித வாழ்க்கையின் அகராதி மற்றும் கலைக்களஞ்சியம் திருக்குறள் என கூறின் அது மிகையாகாது. இத்தகைய வள்ளுவரின் வாழ்வியல் நெறிகளை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

அன்புடைமை

மனித உலகத்தை இணைத்து வாழச் செய்யும் அற்புத சக்தி அன்புக்கே உண்டு. விண்ணையும் மண்ணையும் இணைக்கும் பேராற்றல் அன்புக்கே உண்டு. வள்ளுவா் இத்தகைய அன்பினை

“அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு” (குறள் :72)

என்றும், அன்பில்லாதவர்கள் எல்லாப் பொருட்களும் தமக்கே சொந்தம் என்று சொல்லி உரிமை கொண்டாடுவார்கள். அன்புள்ளவர்கள் தம் உயிரும் உடம்பும்கூட மற்றவர்க்காக என்றும் வாழ்வார்கள் என்று குறள் கூறுகிறது.

அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிருள்ள உடம்பாகும். அன்பில்லாதவர்க்குள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்திக் கொண்டிருக்கும் வெற்றுடம்பேயாகும் என்பது

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

"அன்பின் வழியது உயிர்நிலை அ∴திலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" (குறள் : 80)

என்னும் குறளாலும் தெளிவாகிறது.

கல்வி

நாட்டின் எதிர்காலம் இளைஞர்கள் கையில்தான் உள்ளது. இளைஞர்களை நல்லவர்களாக சிறந்தவர்களாக உருவாக்க கல்வி மிகவும் அவசியம். கல்விச்செல்வமே நிலையான செல்வம் ஆகும். இதனையே வள்ளுவர்,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்ற யவை" (குறள் : 400)

பொருட்செல்வம் வெள்ளத்தாலும் வெழுந்தழலாலும் அழியக் கூடியது. கள்வர்களால் கவர்ந்து செல்லக்கூடியது. பிறருக்குக் கொடுத்தால் குறையும் தன்மை வாய்ந்தது. கல்விச் செல்வமோ பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க வளரும் தன்மையுடையது. அதனால்தான் கல்வியைக் 'கேடில் விழுச்செல்வம்' என்று கூறுகின்றார்.

கற்பவற்றைக் கசடறக் கற்க வேண்டும் பின்பு கற்ற வழியிலேயே நிற்க வேண்டும் என்பதை வள்ளுவர்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள் : 391) என்கிறது குறள்

ஒழுக்கம்

மனித வாழ்க்கையை முறையாக வளப்படுத்தி வளர்ப்பது ஒழுக்கம். ஒழுக்கத்தினால் மட்டுமே தகுதியும் பதவியும் அதனால் பல பெருமைகளும் பெற முடியும் ஆகையால் அந்த ஒழுக்கத்தை உயிர்போலக் காக்க வேண்டும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்" (குறள் : 131)

ஒரு செயல் அவனின் ஒழுக்கத்தினால் மட்டுமே போற்றப்படுகின்றது.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பைத் தரும்" (குறள் : 138)

ஒழுக்கம் என்பது ஒரு மனிதன் வாழ்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும். ஒரு மனிதனை சிறந்த மனிதனாக மாற்றுகின்றது.

விருந்தோம்பல்

பண்டைத் தமிழ்நாட்டில் இல்லற வாழ்க்கையின் முதன்மை கடமைகளுள் ஒன்றாகவே விருந்தோம்பல் கருதப்பட்டது. கணவனும் மனைவியும் இயைந்துதான் அக்கடனை நிறைவேற்ற முடியும் என்றும் அறிந்திருந்தார்கள். கோவலன் தன்னை விட்டுப் பிரிந்ததனால் இல்லறக் கடன்களுள் ஒன்றாகிய விருந்தோம்புதலை ஆற்ற இயலவில்லை எனக் கண்ணகி கோவலனிடம் மதுரையில் கூறி வருந்தியதை சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது. இதனையே திருவள்ளுவர்,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள் 81)

இல்லற வாழ்க்கை உடையவர்களே நிலை பெற்ற வாழ்க்கையுடையவர்கள். அவர்கள் அறநெறி போற்றி இல்லறத்தை நடத்துவதே விருந்தினரைப் போற்றி அவர்கட்கு உதவி செய்வதற்குத்தான். பிறருக்கு உதவி செய்யும் விருந்தோம்பலைக் கடைப்பிடிக்கவில்லையானால் இல்லறத்தால் பயனில்லை.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

செய்ந்நன்றியறிதல்

எத்தகைய அறத்தை அழித்தவர்க்கும் அப்பாவத்திலிருந்து தப்புவதற்கு வழியுண்டு. ஆனால் செய்ந்நன்றி கொன்ற பாவத்தினின்று தப்புவதற்கு வழியேயில்லை என்று வள்ளுவர் கூறுவதனை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள் : 110)

என்பதற்கேற்ப செய்நன்றி நினைப்பதற்காகத் தன் உயிரையே பணயமாக வைத்துக் கர்ணனும், கும்பக்கர்ணனும் குறள் கண்ட வாழ்வை வாழ்ந்து காட்டி விட்டார்கள்.

உதவி வேண்டி நின்ற காலத்தில் தப்பாது செய்த உதவி சிறியதாக இருந்தாலும் செய்யப்பட்ட காலத்தை மனதில் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் நில உலகத்தை விட மிகப்பெரியதாம் என்பதனை

"காலத்தினாற் செய்த உதவி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" (குறள் : 102)

என்னும் குறள் நன்றியின் நலத்தைப் புலப்படுத்துகிறது.

நட்பு

உண்மையான நண்பனை ஆபத்துக்காலத்தில் அடையாளம் கண்டு கொள்ளலாம். எனவேதான் 'அருமை சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்" என்னும் பழமொழியை முன்னோர் வழங்கி வந்தனர். இதனை வள்ளுவர்

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவது ஆம் நட்பு" (குறள் : 788)

என்னும் குறளில் விளக்குகின்றார். அதாவது நல்ல நண்பன் என்பவன் துன்பம் வந்த காலத்தில் எவ்விதம் உதவுவானெனில் இடுப்பிலுள்ள ஆடை நழுவி விட்டபோது, ஒருவனுடைய கை அவனை அறியாமல் மானம் காக்க சரி செய்வது போல நண்பனுக்குத் துன்பம் வந்ததை அறிந்த அக்கணமே அத்துன்பத்தை தீர்த்து விடுவான். இப்படி இல்லாத நட்பு நமக்குத் தேவையில்லை என்கிறார்.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பர். எனவே உள்ளத்தைக் காட்டும் கண்ணாடியான முக இயல்பைக் கொண்டே ஓரளவு அறிந்து கொள்ளலாம். அவ்விதம் நட்பு கொள்ளும்போது

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு" (குறள்: 786)

அதாவது முகம் மலருவதுடன் நெஞ்சமும் ஒத்து மகிழும் உறவே உண்மை நட்பு என்கின்றது வள்ளுவம்.

துன்பம் விழையாமை

ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்கிறது சிலப்பதிகாரம். ஒருவருக்கு முன்னொரு காலத்தில் நாம் துன்பம் செய்தோமென்றால், பிற்காலத்தில் அத்துன்பங்கள் தாமாகவே நம்மை வந்து சேரும். எந்த ஒரு காலத்திலும் யாருக்கும் மனதளவில் கூட துன்பங்கள் செய்யக்கூடாது.

"பிறர்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்" (குறள் : 319)

"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணா செய்யாமை தலை" (குறள் : 317)

எந்த ஒரு உயிர்க்கும் எப்பொழுதும் எக்காலத்தும் துன்பங்கள் செய்யக்கூடாது என்று அறிவுறுத்துகின்றார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

மனிதப்பண்பு

மனிதப் பிறவியில் ஏற்றத்தாழ்வு இல்லை அன்பினால் அனைவரும் பிணைக்கப்பட வேண்டும். உயர் தன்மையில் இருந்தும் உரிமைத் தன்மையில் இருந்தும் வழுக்கி விழாமல் இருப்பவர் எவரோ அவரே மனிதப் பண்பு உடையவர். அவர்களே அறிவு நிறைவு பெற்று பிறர் வாழ்வில் நலம்காண விழைபவர் எவரோ அவரை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" (இல்வாழ்க்கை : 10)

என்று பண்பும் பயனும் மிக்க இல்லறத்தை நடத்துபவன் எல்லோராலும் போற்றப்பட்டு உயர்த் தெய்வநிலைக்கு உரியனவாக மதிக்கப்படுகின்றனர் என்கிறார் வள்ளுவர்.

ஈகை

ஒரு பொருளும் இல்லாத ஏழைக்கு அவருக்கு வேண்டிய ஒன்றைக் கொடுத்தலே 'ஈகை' எனப்படும்.

"வறியார்க்கொன் றீவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து" (குறள் : 221)

வறியவர்களுக்கு ஈவதே ஈகைப் பண்பாகும் வறியவர் அல்லாத பிறர்க்குக் கொடுப்பதெல்லாம் ஒரு பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதற்குச் சமம் என்று ஈகைக்கு இலக்கணம் வகுத்தார் வள்ளுவர். ஆகவே ஈகை என்னும் சிறந்த அறத்தை வாழ்க்கையின் ஓர் உயரிய பண்பாகக் கைக்கொள்ள வேண்டும்.

முடிவுரை

திருக்குறள் வாழ்வியல் விழுமியங்களின் களஞ்சியமாகத் திகழ்கிறது. மனிதர்கள் வாழ்வில் எவ்விதத் துன்பமுமின்றி வாழ வேண்டுமென்றால் இன்னாசெய்யாமை, உயிர் கொல்லாமை, செய்நன்றி அறிதல், ஒழுக்கம், அன்பு, கல்வி, விருந்தோம்பல், நட்பு இதுபோன்ற அறச்செயல்கள் என்ன என்பதை அறிந்துகொண்டு அதன்வழி நடக்க வேண்டும். மனிதர்களுக்கு மனிதர்கள் நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். வள்ளுவர் வகுத்துக் காட்டும் வாழ்வியல் நெறிகளின்படி வாழும் வாழ்வே சிறந்த வாழ்வு என்பதில் ஐயமில்லை.

துணைநூற்பட்டியல்

1. தண்டபாணி சுவாமிகள், திருவள்ளுவ நாயனார் சுருக்கம், 1908.
2. உ.வே. சாமிநாதையர், திருவள்ளுவரும் திருக்குறளும், 1936.
3. ப. முருகன், திருக்குறள் திறவுகோல், 2007.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

கோபல்ல கிராமம் நாவல் உணர்த்தும் சமுதாயச் செய்திகள்
Social Matters Instructed in the Novel Gopalla Village

முனைவர் பொ. இராமநாதன், இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ்.ஆர்.என்.எம்.கல்லூரி(தன்னாட்சி), சாத்தூர்-626203

Abstract

The paper traces out the social matters as depicted in the novel "Gopalla Village". First, it details the biography of the Krishna Rajanarayana Perumal and moves to the eliciting of the novel "Gopalla Village". It tell of te Karisal Land and the Nayak sect life in mst of its parts. The reason behind putting the name 'Gopalla Villllage' and the origin of the Kammavar sect and other interesting walks of life lived by the people amidst native ethinic people can be seen in the novel. Hence, the article deciphers the facts and matters evinced in the novel.

Keywords: Social Matters, Instructed, Novel, *Gopalla Village*

கோவில்பட்டிக்கு அருகில் உள்ள இடைச்செவல் கிராமத்தில் 16.9.1923 இல் பிறந்தவர் ஸ்ரீ கிருஷ்ண ராஜநாராயணப் பெருமாள் ராமானுஜன். சுருக்கமாக கி.ரா. எனவும் கி.ராஜநாராயணன் எனவும் அழைக்கப்படுகிறார். இவர் தனது நாற்பதாவது வயதில்தான் கதை எழுத ஆரம்பித்தார். தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்ட சாகித்ய அகாதெமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. கரிசல் தமிழின் முன்னோடியான இவர் சிறுகதை, நாவல், கிராமியக் கதைகள், கடிதங்கள், அகராதி, வரலாறு என்று பலவித இலக்கிய முயற்சிகளில் சாதனைப் புரிந்திருக்கிறார். கிராம வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் மனிதாபிமானத்தோடு ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் ஒரு விசாலமான பார்வை கி.ரா.விற்கு உண்டு.

"கோபல்ல கிராமம்" உருவாக அம்மக்கள் தங்களோடும் பிறரோடும் நிகழ்த்திய போராட்டத்தை விளக்கும் நாவல்தான் 'கோபல்ல கிராமம்'. அவர்கள் ஆந்திரத்திலிருந்து இடம் பெயர்ந்து குடியேறியதும் வளர்ந்ததும் இந்நாவலில் சொல்லப்பட்டுள்ளது. கம்மவார்களின் வரலாற்றைக் கூறும் நாட்டார் நாவலாக இது விளங்குகிறது. கரிசல்மண்ணையும் நாயக்கர் இனத்தையும் இரண்டு கண்களாகக் கொண்டு கதையை வடிப்பதில் கி.ரா.கைதேர்ந்தவர். இன்று வழக்கத்தில் இல்லாமல் மறந்தும் மறைந்தும் போய்க் கொண்டிருக்கிற பல செய்திகளை இவரின் படைப்பில் காணலாம். "நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடம் ஒதுங்கினேன் ஒதுங்கியவன் பள்ளிக்கூடத்தைப் பார்க்காமல் மழையையே பார்த்துக் கொண்டு இருந்துவிட்டேன்" என்ற கி.ரா.வின் வார்த்தைகள் வாசிப்பவர் மனதில் நெருடலை உண்டாக்குபவை 'என்னுடைய எழுத்துகள் மௌனத்தில் பிறந்தவை. அதை மௌனமாகப் படித்தாலே அதன் சீவனை அறிய முடியும்' என்ற அவரின் வார்த்தைகள் கதை, வாசிப்புக்கு மட்டுமல்ல சுவாசிப்பிற்கும்தான் என்று கூறுவதைப் போல் உள்ளன.

கி.ரா.வின் "கோபல்ல கிராமம்" நாவல் உணர்த்தும் சமுதாயச் செய்திகளைத் தொகுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

பெயர்க்காரணம்

'கோபல்ல' என்ற கிராமத்திற்குப் பெயர்வந்ததற்குப் பசுமாடு தான் காரணம் எனவும், கம்மவார் என்று பெயர் வந்ததற்குப் பெண்கள் வளையம் போன்ற 'கம்ம' என்ற காது ஆபரணத்தை அணிந்ததுதான் காரணம் எனவும் கி.ரா. விளக்கியுள்ளார். (கி.ராஜநாராயணன், கோபல்ல கிராம மக்கள், காவ்யா பதிப்பகம், ப.30)

கிராமத்தை உருவாக்குதல்

கோபல்ல கிராமம் உருவான விதத்தைக் கி.ரா. தனது நாவலில் விளக்கமாகக் கூறியுள்ளார்.

அவர்கள் மழைக்காலம் தொடங்குவதற்கு முன் பல சிறிய மண்குடிசைகள் கட்டிக் கொண்டார்கள். முதலில் கட்டி முடித்தது அம்மன் கோயில் தான். மஞ்சணத்தி, பூவரசு, வேம்பு முதலிய நீண்ட மரக்கிளைகளால் முகடு கூட்டிப் பனை நார்களால் கட்டினார்கள். சீகைப்புற்களையும் ஐம்புத் தட்டைகளையும் அறுத்துக் காயவைத்து அவற்றால் கூரைவேய்ந்தார்கள்.

பிரம்மாண்டமான பரந்த கள்ளிக் காட்டோடு அவர்கள் போராடினார்கள். மழைக்காலத்துக்கு முன்னால் கொஞ்சம் நிலங்களைத் திருத்தலாம் என்றால் அது அவ்வளவு லேசில் முடியாது போலிருந்தது. கள்ளிச் செடிகளைத் தரையோடு தோண்டி வேரோடும் வேரடி மண்ணோடும் பெயர்த்தெரிய வேண்டியதிருந்தது. தோண்டும் போது பெயரும் பாறைக்கற்களை அப்புறப்படுத்த வேண்டியதிருந்தது. (ப.78)

இவ்வாறு சிரமப்பட்டு நிலங்களைச் சீர்திருத்தி கிராமத்தை உருவாக்கினார்கள்.

குளம் வெட்டுதல்

வீடுகள் கட்ட ஆரம்பித்தார்கள். கிராமம் முறையாக வளர ஆரம்பித்தது. மழையினால் தேங்கிய தண்ணீர் காணாததால் குடிநீர்க் கிணறுகள் தோண்டினார்கள். கால்நடைகளின் தண்ணீர் வசதிக்காகக் கம்மாயைத் தோண்டி அகலப்படுத்தினார்கள். கம்மாயின் கரைகளைச் சுற்றிலும் பலப்படுத்தி அதில் நீண்ட நாட்கள் நிற்கக் கூடிய மரங்களாக நட்டார்கள்.

ஒவ்வொரு குடும்பத்தாரும் அவர்களுடைய பெயர் சொல்லும் படியாக ஒரு மரம் நடவேண்டும் என்று ஊர்ப்பொதுவிலிருந்து ஏற்பாடு. இதனால் கம்மாயைச் சுற்றிலும் மட்டுமல்ல ஊரின் பல முக்கியமான இடங்களிலும் மரங்கள் நட்டு வளர்க்கப்பட்டன. அந்த நாட்களில் மனிதபலமும் மனித எண்ணிக்கையும் அதிகமுள்ள குடும்பம் தான் பெரிய குடும்பம். பெரிய வீடு, மனித பலம் அதிகமுள்ள குடும்பத்தால் அதிக நிலத்தைச் சீர்திருத்தி அதிகக் கால்நடைகளையும் வைத்துப் பராமரிக்க முடியும் (ப.90)

ஆல இலையில் சாப்பாடு

கரிசல் காட்டில் வாழை இலை பிரபல்யம் அடையாத காலம். கோபல்ல கிராமத்தின் மக்கள் விரதம் விடும் நாட்களில் மட்டும் ஆல இலைகளைச் சேர்த்து வைத்து அதைச் சோளத்தட்டை ஈக்கிகளால் தைத்து அந்த இலையில்தான் சாப்பிடுவது வழக்கம். மற்ற நாட்களில் எல்லாம் அவர்கள் கும்பா, வட்டில், தாலம், மரவை போன்றவற்றில் உண்பார்கள் (ப.22)

விசுவாமித்திரன் உருவாக்கியது

பிரம்மா உலகத்தைப் படைத்த போது பசுமாடுகளைத்தான் உண்டாக்கினாராம். போட்டி உலகத்தை உண்டாக்கிய விசுவாமித்திரன், பசு மாடுகளுக்குப் போட்டியாக எருமை மாடுகளையும், தென்னை மரத்துக்குப் போட்டியாக பனை மரத்தையும், முஞ்சூறுக்குப் போட்டியாகப் பெருச்சாளிகளையும் உண்டாக்கியதாக கி.ரா. குறிப்பிடுகிறார் (ப.27)

வைக்கோல் போர் மேய்தல்

கோபல்ல கிராமத்திற்குள் நுழைவதற்கு முன்னால் பாதையின், இருபுறமும் களத்து மேடுகளில் தீவனப்படப்புகள் தெரிந்தன. வைக்கோல் போர் வெறும் குவித்து வைப்பு அல்ல. அதிலும் ஒரு ஒழுங்கு முறை உண்டு. கம்மந்தட்டைகளையும் சோள நாத்துகளையும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

அப்படியே அடுக்கினால் மழைக்காலத்தில் தண்ணீர் இறங்கி கூளம் வீணாய் மக்கிப்போய் விடும். கால்நடைகள் தின்ன முடியாதபடி ஆகிவிடும். ஆகவே இவைகளைச் சரியான நீள அகலத்தில் அடுக்கி அதுக்கென்றுள்ள தட்டுப்பலகைகளால் தட்டி சுவர் போல ஒழுங்கு படுத்தி பிறகு இந்த மாதிரி இரு பக்கமும் சாய்ப்பாக இறக்கி சூரித்தட்டைகளால் குத்தி அவைகளால் பின்னி சரி செய்து முடித்து விடுவார்கள். இதனால் காற்றிலிருந்தும் மழையிலிருந்தும் இவைகளுக்குப் பாதுகாப்பு கிடைக்கிறது.

கூரைமேய்தல்

வீட்டுக்கூரை மேய்ச்சல் நடக்கும் போது மேலே ஒருவன் இருந்து கொண்டு ஓலையையோ தட்டையையோ வைத்து ஆக்கையை, ஆக்கை ஊசியின் நுனியிலுள்ள துவாரத்தில் கோர்த்து உள்ளே குத்திச் செலுத்துவான். கூரைக்கு அடியில் உள்ளே இருக்கும் ஆக்கை பிடிப்பவன் அந்த ஊசி நுனியிலிருக்கும் ஆக்கையை உருவிக் கொண்டு ‘ம்’ என்று ஒரு அடையாள ஒலி கொடுப்பான். மேலே உள்ளவன் ஊசியைக் குத்துவான். உள்ளே இருக்கும் ஆக்கை பிடிப்பவன் அதன் நுனியில் முதலில் தான் உருவிய ஆக்கையின் நுனியை ஊசியின் நுனியில் கோர்த்து அடையாள ஒலி கொடுத்தவுடன் மேலேயிருப்பவன் ஊசியை இழுத்து ஆக்கையை உருவி இரண்டு நுனிகளையும் இறுக்கி முடிந்து விடுவான். இந்த மாதிரி ஆக்கை பிடித்து முடிந்தால் தான் கூரை, முகட்டுக் கம்புகளில் சரிந்துவிடாமல் இருப்புக்கொள்ளும் (ப.130)

பசுவும் கன்றும்

கால்நடை சம்பந்தப்பட்ட சகல நோய்களுக்கும் வாகடம் புல்லையாதான் வைத்தியர். காம்பு வீங்கிய மடி, இரத்தம் கசியும் காம்பு, சரியாகக் கூளம் தின்னாமலும் தண்ணீர் குடிக்காமலும் நிற்கும் மாடுகள் முதலியவற்றுக்கு அவர் பூசும் பச்சிலை ரொம்பச் சொன்னாங்கம்.

வாகடம் புல்லைய்யா இன்னொரு காரியம் செய்வார். அதுக்குத் ‘தழையிறது’ என்று பெயர். கன்றுக்குட்டி இறந்து போன பசுமாட்டோடு, பசுமாடு இறந்து போன கன்றுக்குட்டியைச் சேர்ந்து வைப்பது. இது மற்றவர்கள் நினைக்கிற மாதிரி லேசான காரியமில்லை. மாடுகளுக்கு மோப்ப சக்தி அதிகம். கண்கள் பார்க்க முடியாத கரும் இருட்டில் கூட வேற்றுக் கன்றுக் குட்டியைக் கொண்டு போய் ஒரு பசுமாட்டில் பால் குடிக்க வைத்து விட முடியாது. முகர்ந்து பார்த்து உதைத்துத் தள்ளி விடும். ஆகவே தழையவிட வேண்டிய கன்றுக்குட்டியைப் பசுவின் கண்ணில் காட்டாமல் வைத்துக் கொள்வார்.

பசுவை அவர் முன்னால் பத்திக் கொண்டு போவார். பின்னால் ஒருத்தன் கன்றுக்குட்டியைக் கொண்டு வருவான். கூடங்காட்டில் இரண்டு மரங்கள் நெருக்கமாக இருக்கிற ஒரு இடத்தில் அதன் மத்தியில் பசுமாட்டை நிறுத்தி கயிறுகளால் அசைய முடியாமல் கட்டிப் போட்டுக் கொள்வார்.

இரண்டு கைகளையும் சேர்த்து ஒட்டவைத்துக் கொண்டு பையப் பைய்ய கொஞ்சம் கொஞ்சமாகப் பசுமாட்டின் ‘அறைக்குள்’ மெதுவாக நுழைப்பார். பசுமாடு ரொம்பச் சிரமப்படும். பார்க்கிறவர்களுக்கு, ‘ஐயோ இது வேண்டாமே’ என்று தோன்றும். முழங்கைகள் வரைக்கும் நுழைத்து சிறிது சிறிதாக ‘அறை’யை அகலப்படுத்துவார். மாடு பிரசவ வேதனைப்படும். அந்த வலி அதற்கு, தான் ஒரு கன்றை இப்பொழுது ஈனப்போவதாகவே ஒரு தோற்றம் கொடுத்துவிடும். இந்த சமயத்தில் புல்லய்யா அந்தக் கன்றை மறைத்து வைத்திருப்பவனைச் சைகை காட்டி அழைத்து அவன் கன்றைக்கிட்டே கொண்டு வந்ததும் ‘அறை’யினுள் இருந்த தனது கைகளைப் பளிச்சென்று வெளியே இழுத்து தனது கைகளில் படிந்த இரத்தத்தையும் நிண நீரையும் அந்தக் கன்றின் மேல் தடவுவார். கூட வந்திருந்த ஆள் பசுமாட்டின் கட்டுகளை வேகமாக அவிழ்த்து விடுவான். மாடு ஆவலாக ஓடி வந்து கன்றுக்குட்டியைப் பாசத்தோடு நக்கும். முதல் நாள் வேத்துக் கன்றுக்குட்டி என்று வாடையால் அறிந்து உதைத்த அதே பசு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

இன்று அதே கன்றுக்குட்டியை இப்பொழுது தான் ஈன்ற கன்று என்று நினைத்து ஆசையோடு நக்கிக் கொடுக்கிறது. இனி அந்தக் கன்றுக்குட்டி பிழைத்துக் கொள்ளும்.

ஒரு தரம் ஒரு பசுவுக்குக் கன்று செத்துப் பிறந்தது. புல்லையா கிடைக்கு ஓடிச்சென்று மூன்று குட்டிகள் போட்டு பால் இல்லாமல் க்'டப்படும் ஆட்டுக்குட்டிகளில் ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்து அந்தப் பசுவில் தழைய வைத்தார். பசுமாட்டில் வெள்ளாட்டுக்குட்டி பால் குடிப்பதையும் அந்தப்பசு அதைப் பாசத்தோடு நக்கிக் கொடுப்பதையும் பார்த்து ஊரே மூக்கின் மேல் விரலை வைத்தது. (ப.104)

இந்தப் பக்கத்திலுள்ள பசுக்களின் பாலே ரொம்ப ருசியாக இருக்கும். இதற்குக் காரணம் அவைகள் மேயும் அறுகம்புல்லும், உண்ணும் பருத்திக் கொட்டையும் நாத்தும் தான் (ப.133).

ருசிக்கல்

ஸ்ரீனி நாயக்கருக்குக் கொத்தமல்லி இலைத்துவையல் என்றால் உயிர். அதை நாள் பூராவும் தொட்டு நாக்கில் தடவிக் கொண்டே இருக்கலாம். அதுக்குத்தோதாக வரகரிசிச் சோறும் முளைத் தயிரும் இருக்கும். முளைத்தயிர் என்றால் புளிப்பில்லாதது. பால், தயிராக முளைவிடும் பக்குவத்தில் இருப்பது. எங்கக்சிக்குப் பாலை உறைகுத்தும் பக்குவம் தெரியும். ரொம்பவும் ஆறிவிடாமல் நகவெதும்பலாய் பால் ஆறி வரும் போது தனது புரு'னுக்கு என்று ஒரு தனி ஏனத்தில் ஊற்றி, மோரில் ஆள்க்காட்டிவிரலை இரண்டாவது கோடு வரைக்கும் முக்கி உதறி விட்டு அந்த விரலைப் பாலில் கலக்கி மட்டுமே வைப்பாள். காலையில் பார்த்தால் அது கட்டித்தயிராக இருக்கும்.

விளக்குப் பொருத்திவிட்டால் அதாவது சூரிய அஸ்தமனத்துக்குப் பிறகு உப்பை, உப்பு என்று சொல்ல மாட்டார்கள். 'ருசிக்கல்' என்று தான் சொல்வார்கள் (ப.140)

கிராம முன்சீப்

ஒருநாள் வெள்ளைக்கார அதிகாரி கோபல்ல கிராமத்தின் கோட்டையார் வீட்டிற்கு வந்திருந்தார். இந்தக் கிராமத்துக்கு மணியமாக (கிராம முன்சீப்) கும்பினியின் சார்பாகக் கோவிந்தப்ப நாயக்கரை நியமிக்க வந்துள்ளதாக அந்த அதிகாரி சொன்னார். இதைக் கேட்ட கோவிந்தப்ப நாயக்கரின் முகத்தில் திகைப்பும் செம்மையும் பரவியது. கும்பினியார் ஏற்கனவே இந்த நாட்டுக்கு வந்து பல இடங்களைச் சேர்த்துக் கொண்டு ராஜ்யம் பண்ணுகிறார்கள் என்கிற விஷயத்தை அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். துலுக்க ராஜாக்களைப் போலக் கும்பினியான் நம்முடைய பெண்டுகளைத் தூக்கிக் கொண்டு போனதாகவோ, கற்பழித்ததாகவோ செய்திகள் இல்லை. இந்த ஒரு காரணத்துக்காகவே அவர்களுக்குக் கும்பினியான் உயர்ந்து தோன்றினான். (ப.135)

மங்கம்மா சாலை

மங்கம்மா சாலை வழியாகக் கும்பினிப்படை வீரர்களோடு பலர் தலைச்சுமையில் சாமான்கள் கொண்டு சென்றனர். கோபல்ல கிராமத்திலும் வந்து அவர்கள் சுமைதூக்க ஆட்களைக் கேட்டார்கள். ஆரம்பத்தில் இவர்களும் அதில் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். நாட்கள் ஆக ஆக இது ஒரு பெரிய தொந்தரவாகத் தெரிந்தது. இந்தத் தொந்தரவிலிருந்து தப்பிக்கக் கிராமத்து ஜனங்கள் பல உபாயங்களைக் கையாள ஆரம்பித்தார்கள்.

ஈரக்கசிவுள்ள கருப்பட்டியைப் பிட்டு உடம்பில் கால்கைகளில் அங்கங்கே ஒட்ட வைத்து பழைய துணிகளைக் கிழித்து, காயங்கள் புண்களுக்குக் கட்டுகள் போடுவது மாதிரி கட்டிக் கொள்வார்கள். அந்த இனிப்பு வாசனைக்குக் கணக்கில்லாமல் ஈக்கள் வந்து அந்தக் கட்டுகளின் மேல் மொய்க்கும். இப்படிக் கட்டுகள் போட்ட ஈக்கள் மொய்க்கும் ஆட்களை வெள்ளைக்காரர்கள் வேண்டாம் என்று சொல்லி விடுவார்கள். ஆனால் எல்லோருமே இப்படிக்கட்டுகள் போட்டுக் கொண்டு போக முடியுமா? சந்தேகம் வந்து விடுமே இதனால் இவர்கள் ஒரு தந்திரம் செய்தனர். அம்மை நோய் வந்ததாக ஊருக்குள் நுழையும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

இடங்களில் எல்லாம் வேப்பிலைத் தோரணம் கட்டினர். வீடு தவறாமல் வாசலில் வேப்பங் குழையைச் சொருகினர். வேப்பங்குழைகள் சொருகிய நிறைகுடங்களைத் தெருவின் ஒவ்வொரு வீட்டின் முன்னாலும் வைத்தனர்.

வெள்ளைக்காரர்கள் அம்மை நோய் என்றால் திரும்பிப் பார்க்காமல் ஓடிவிடுவார்கள். எனவே இந்த ஊரின் பக்கமே வரவில்லை. கிராமத்து மக்கள் வெள்ளைக்காரன் மீது பல நாடோடி ஏசல் பாடல்களை இயற்றிப் பாடினார்கள்.

> "ஐ சக்கை ஐ
> அரைப்படி நெய்
> வெள்ளைக்காரன் தொப்பியிலே
> விளக்குப் பொருத்திவை"

கோபல்ல கிராமமும் சுற்றுப்புறமும் கும்பினியின் ஆட்சிக்குக் கீழே வந்து பல வருடங்கள் ஆகியும் எந்த மாறுதலும் உண்டாகிவிடவில்லை. (ப.137)

இடதுகைப்பழக்கம்

1858 ஆம் வருʻம் விக்டோரியா மகாராணி கும்பினி ஆட்சியைத் தானே ஏற்றுக் கொண்டதாக ஒரு அறிக்கை விட்டிருந்தாள். கும்பினி ஆட்சி போய் மகராணியின் ஆட்சியின் கீழ் வந்துவிட்டோம் என்றதும் ஜனங்களுக்கு ஒரு சந்தோʻம் வந்தது. அவர்களுக்கு ராணிமங்கம்மாவின் ஆட்சியைப் பற்றிய ஞாபகம் வந்தது ராணி விக்டோரியா கூட பார்க்கிறதுக்கு ஒரு வேளை ராணிமங்கம்மா மாதிரியே இருக்கலாம் என்று நினைத்தனர். மங்கம்மா சாலை எப்படி வந்தது என்பதற்கு ஜனங்கள் ஒரு கதை சொல்வார்கள்.

ஒரு நாள் ஆலோசனை மண்டபத்தில் முக்கியமானவர்களோடு ராணி மங்கம்மாள் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தளாம். அவளுக்கு எதிரே தாம்பூலப் பெட்டி இருந்தது. ராணி இடது கையினால் பாக்கை வாயில் போட்டாள். அனைவரும் திடுக்கிட்டனர். மங்கலப்பொருளைச் சபையின் மத்தியில் இடது கையினால் போட்டுக் கொண்ட தப்பிதத்துக்குப் பரிகாரமாகத்தான் ராணி மங்கம்மாள், சாலையைப் போட்டாளாம்.

இந்தக்கதையை மங்கத்தாயாரு அம்மாவிடம் யார் சொன்னாலும், மெதுவாகச்சிரித்துவிட்டு ரகசியமான சன்னக் குரலில், 'சின்ன வயசிலேயே எனக்கு ராணி மங்கம்மாவைத் தெரியும். கொஞ்சநாள் அங்கே அரண்மனையில் தங்கி இருந்திருக்கோம். அந்த மகராசிக்கு நம்மளப் போல வலதுகை விளங்காது. எல்லாம் இடது கைதான். இது ரொம்ப பேருக்குத் தெரியாது' என்று சொல்வாள் (ப.150)

இவ்வாறு கி.ரா. தனது "கோபல்ல கிராமம்" நாவலில் அக்காலச் சமுதாயத்தில் நிகழந்த பல்வேறு நிகழ்வுகளை விளக்கி எழுதியுள்ளார்.

நூற்பட்டியல்

1. கிருஷ்ண ராஜநாராயணப் பெருமாள் ராமானுஜன். "கோபல்ல கிராமம்". காலச்சுவடு பதிப்பகம் 2012.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

திருக்குறள் காட்டும் வாழ்வியலில் விருந்தோம்பல்
Hospitality in Life as Shown in *Thirukkural*

முனைவர் ஆ.பா. இராமலெட்சுமி, உதவிப்பேராசிரியை,
தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு), தெ.தி.இந்துக் கல்லூரி, நாகர்கோவில்.

Abstract

The paper tries to bring the sense of hospitality as portrayed in the diadactic treatise "Thirukkural". The Tamil people have a very strong sense of hospitality in every aspect of life. They give more importance to it at every time of celebration or any cultural or private ritual. They feel it a greatest boon to feed food and to give shelter to the deserved and poor."Thirukkural" speaks much more of it in one of its chapters. Hence, the article deciphers the facts and matters evinced in the moral treatise.

Keywords: Hospitality, Life, *Thirukkural*

முன்னுரை

தமிழ் மக்களின் தனிப்பண்பு விருந்தோம்பல் ஆகும். தம்மிடம் இருப்பது மிக எளிய உணவாக இருப்பினும் இன்முகத்தோடு தெரிந்தவர்களுக்கும், முன்பின் அறிந்திராத புதியவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கும் வழக்கம் இன்றும் நம்மிடையே காணப்பட்டு வருகிறது. இல்லறத்தில் அதிகமாக கவனம் செலுத்தும் பெண்கள் தம்முடைய இல்லத்திற்கு வருவோருக்கு இனிய உணவினை படைத்து இனிமையான சொற்களைப் பேசி பொறுப்புடன் நடந்துக் கொண்டதை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்.

அறநெறியில் விருந்தோம்பல்

உணவு உண்பதற்கு அழகே விருந்தினரோடு உண்ணுதல் ஆகும். இன்முகத்தோடு உணவு அளிப்பவள் விருந்தினரை வாசல் வரை வந்து வழியனுப்பி வேறு விருந்தினர்கள் வருகின்றனரா என வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கும் வழக்கமும் காணப்பட்டது. தொல்காப்பியர் விருந்தினை 'புதுமை' என்ற பொருளில் கூறுகிறார்.

"விருந்து புறந்தருதலுஞ் சுற்றம் ஓம்பினும்
பிறவு மன்ன கிழவோன் மாண்புகள்" (தொல். 3:150)

என இல்லறத்துப் பெண்களை சுட்டிக்காட்டுகிறது. இதனையே வள்ளுவம்,

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு" (குறள். 86)

கணவனை விட்டுப் பிரிந்திருந்ததினால் விருந்தோம்பல் போன்ற இல்லறக் கடமைகளில் வழுவ நேர்ந்ததை வள்ளுவம் வழி நின்று கண்ணகி காப்பியத்தில் கூற்றாக,

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்வோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

என்று இளங்கோவடிகள் கூறுகிறார்.

கம்பராமாயணத்தில் இராமனை விட்டுப் பிரிந்திருந்த சீதை விருந்தோம்பல் ஆற்ற முடியாததை கம்பன் தன்னுடைய காவியத்தில்,

"விருந்து வந்தபோது என்னுறுமோ என வெதும்பும்"

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்று கூறியுள்ளார்.

சங்க இலக்கியத்தில் "உண்டி கொடுத்தோா; உயிர் கொடுத்தோரே" என்ற வரிகள் உணவு முக்கியத்துவத்தை அறிவுறுத்துகிறது. சிறுத்தொண்டர் தன்னுடைய ஒரே மகனை தானும், தன் மனைவியும் சிவதொண்டருக்கு விருந்து அளித்தார். வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு உணவு படைக்க மழை என்று பாராது இரவு நேரத்தில் நனைந்து கொண்டே வயலுக்கு சென்று விதைத்த நெல்லை பொறுக்கிக் கொண்டு வந்து அவற்றை வறுத்து உணவு சமைத்து சிவ அடியார்க்கு அளிக்கும் இளையான்குடி மாறநாயனாரின் வழியும் விருந்தோம்பல் சிறப்பை அறியலாம். மேலும், பரிவாக பேசியும், பாசத்தோடு உணவு அளிக்காதவரிடம் உணவைப் பெறுதல் கூடாது என்பதை,

"பரிந்துஓம்பி 'பற்றற்றேம்' என்பர் விருந்துஓம்பி
வேள்வி தலைப் படாதார்" (குறள். 88)

என்றும் ஔவையாரின் நீதிநூல்கள்,

"உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார்தம் மனையில்
உண்ணாமை . . . . ."

கோடான கோடி நன்மை கிடைக்கும் என்பதனை எடுத்துக்காட்டுகிறார்.

இன்முகத்தோடு விருந்து வழங்காதவர்களின் இல்வாழ்க்கை சிறப்பாக அமையாது என்பதை பழமொழி நானூறு,

"வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து
வாளாண்மை யாலும் வலியராய்த் தாளாண்மை
தாழ்க்கு மடியோளிலராய் வருந்தாதார்
வாழ்க்கை திருந்துத லின்று" (ப.நா. 151)

முக குறிப்பு அறிந்தும், முகமலர்ச்சியோடும் உணவு வழங்கினால் மங்கலமும், அனைத்து செல்வமும் பெருகும். நாள்தோறும் பிறருக்கு உணவு அளித்தல் வாழ்வியல் துன்பங்களைப் போக்கி இன்பம் தரும்.

இவ்வுலகில் வாழ்கின்றவர்களுக்கெல்லாம் உணவு கொடுத்தவர்கள் உயிர் கொடுத்தவர் ஆவார் என்பதை மணிமேகலையில் பாத்திரம் பெற்ற காதையில் சாத்தனார் எடுத்துக்காட்டுகிறார்.

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டிக் கொடுத்தோர் உயிர் கொடுத்தோரோ"

என்பதை கூடுதலாக அறியலாம். மேலும், மணிமேகலையில் எத்தனையோ அறங்களை சொன்னாலும் மக்களின் பசியை பெரிதாக எடுத்துக்காட்டுகிறது. காப்பியங்களில் கோவலனும் கண்ணகி திருமணம் சில ஆண்டுகள் விருந்தோம்பல் என்னும் நற்செயல் செய்ததை,

"மறப்பருங் கேண்மை யோடறப்பரி சாரமும்
விருந்து புரந்தருஉம் பெருந்தனர் வாழ்க்கை"

என்றப் பாடல்வரிகள் மூலம் உணரலாம்.

விருந்தும் மருந்தும் மூன்று நாள் என்பர். ஆனால் சங்க இலக்கியங்களில் புறநானூற்றில் முதல் நாள் வரவேற்றதைப் போன்று முகம் மாறாது அத்தனை நாட்களும் உபசரித்ததை,

"ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன்" (புறம். 101)

என்ற பாடலின் மூலம் அறியலாம். உணவு வழங்கல் என்பதைவிட, இனிமையாக பேசி உபசரித்தல் முதன்மையான பண்பு ஆகும்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" (குறள். 90)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்ற வரிகள் மூலம் அறியலாம். மேலும் ஆய்ச்சியர்கள் தன்னை நாடி வருவோர்க்கு மேய்ச்சல் தொழிலில் இருந்து வந்த பசுக்களின் இனிய பாலை கொடுத்து மகிழ்ந்ததை, 'மலைபடுகடாம்' மூலம் அறியலாம்.

பகுத்துண்ணுதல்

பகுத்து உண்ணுதல் தமிழர் பழக்க வழக்கங்களில் ஒன்றாக காணப்படுகிறது. தொல்காப்பியர் காலத்தில் பெருஞ்சோற்று நிலை என்ற தொடர் காணப்படுகிறது. போருக்குச் சென்று வந்த பிறகும், போருக்குச் செல்வதற்கு முன்னரும் அரசன் வீரர்களுக்கு கொடுக்கும் உணவு பெருஞ்சோற்று நிலையாகும். இவற்றில் பகுத்துண்ணுதல் காணப்படுகிறது. சங்க இலக்கியங்களில் 'கிடைத்ததற்கரிய அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத் தமிழர் உண்டலும் இலரே' என்ற வரிகளில் கிடைத்ததற்கரிய அமிழ்தம் கிடைத்தாலும் தான் மட்டும் உண்ணாமல் விருந்தினர்களோடு பகுத்து உண்டார்கள் என்பதை அறியமுடிகிறது. மேலும் பரிசு பெற்று வந்த பாணன் ஏழ்மையில் இருக்கும் குடும்பத்தினருடன் பகுத்து உணவு உண்ட நிலையை ஆற்றுப்படை நூற்களில் காணமுடிகிறது. சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்ற புலால் உணவை கடுமையாக கண்டித்து உணவு முறையில் சில மாற்றங்களை எடுத்துரைக்கின்றார் திருவள்ளுவர். தன் உடம்பை பெருக்க செய்ய வேறு உயிரின் உடம்பை உண்ண கூடாது. ஊண் உண்டால் உயிர்கள் அழிந்துபோகும். ஊனை உண்பவர் கொலைத் தொழில் செய்வதற்கு ஒப்பாவர். புலால் புண் போன்றது. குற்றமற்றவர் ஓர் உயிரிலிருந்து பிரிந்த ஊனை உண்ணமாட்டார்.

முடிவுரை

"விருந்தோம்பல்" எனும் உயர்பண்பு பண்டைத் தமிழகத்தில் தலையாயக் கடமையாகக் கருதப்பட்டது. இல்லற வாழ்வின் மிகச்சிறந்த அறமாக விருந்தோம்பல் காணப்பட்டது. பண்டைத் தமிழர்கள் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் உயர் பண்புடையவர்களாகத் திகழ்ந்தனர். மக்கள் மட்டுமல்ல மன்னர்களும் இன்முகத்துடன் அருகிலிருந்து தன்னை நாடி வந்த பரிசிலர்களுக்குச் சிறப்பாக விருந்தளித்து ஏற்றிப் போற்றியதை எடுத்துரைக்கின்றன. விருந்தோம்பும் பண்பு தமிழர்களுடன் கூட பிறந்ததாகும். மற்றோரின் பசியறிந்து அவர்களது பசியை ஆற்றுவதை அறங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்தது என்ற மிக உயர்ந்த கொள்கையை உடையவர்கள் தமிழர்கள் என்பதை அறியப்படுகிறது. பழங்காலத்தில் விருந்தோம்பல் பண்பு உயர்வாகப் போற்றப்பட்டது. விருந்து என்பது உறவினர்களைக் குறிக்காது. புதியவர்களைக் குறித்தது. மேலும ஒரு பெண்ணுக்குரிய இல்லற அறம், விருந்தோம்பல் என்பதை வள்ளுவம் முதல் தமிழரின் அனைத்து இலக்கியங்களும் எடுத்துக்காட்டுகிறது என்பதை அறியலாம். உலக உயிர்களின் தேவைகளுள் முதன்மையானது உணவு. உணவுக்காக உலகு தோன்றிய நாள்முதல் உயிரினங்கள் அலைந்து கொண்டே இருக்கின்றன. பசியால் வாடி வருந்துவோரைச் சங்க இலக்கியம் முதலாகக் காணலாம். பசி தீர்த்தலே அறங்களில் தலையானது என்ற கருத்தினைச் நம்முடைய இலக்கியங்கள் குறித்துள்ளன. மன்னர்கள் செய்யதக்க அறமாகவும் இது கூறப்பட்டுள்ளது. விருந்தோம்புதல் என்ற உயர்பண்பு பசி நீக்கும் நோக்கிலேயே அறமாகக் கூறப்பட்டுள்ளமை சிந்திக்கத்தக்கதாகும். உயிர்களின் பசிப்பிணி போக்குதலே அறங்களில் தலையாய அறமாக வள்ளுவம் எடுத்துக்காட்டுவதை அறியலாம்.

துணைநூற் பட்டியல்

1. நாமக்கல் கவிஞர், *திருக்குறள்*, ஏழாம் பதிப்பு 2000
2. சுத்தானந்த பாரதியார், *திருக்குறளின்பம்*, 1967.
3. தி.இரா.அண்ணாமலை, *திருவள்ளுவர் மருந்து*, 1957.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

புறநானூற்றில் வளரி
Valari in *Purananooru*

ப. இளங்கோவன், முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி – 24.

Abstract

The paper tries evince about the use of the weapon Valari used in the Sangam times. There are lots of evidences on the use of the very strange and dangerous and potential weapon, like today's Boomerang utilized by the Tamil warriors. The study gives keen details about the use of weaponry at the Sangam period, size and shape of the Valari, Tamil people and Valari, use of it in war, Valari in "Purananooru", Training of Valari and Valari at musems. Hence, the article deciphers the facts and matters regarding the glimpses taken from "Purananooru"

Keywords: Valari, Weapon, Tamil Warriors, *Purananooru*

முன்னுரை

இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த சங்க இலக்கியங்களை அகம், புறம் என இரண்டாக வகைப்படுத்துவர். இவற்றுள் புறம் சங்ககாலப் போர் முறைகளையும் போர்களில் பழந்தமிழர்கள் பயன்படுத்திய போர்க்கருவிகள் பற்றியும் பெரிதும் விளக்குகின்றன. சங்க காலப் போர்க்கருவிகளை அறிய தொல்காப்பிய புறத்திணையியலும், மரபியலும் துணைப் புரிகின்றன. புற இலக்கியமான புறநானூறு வாள், வில், வேல் ஆகிய முதன்மையான போர்க் கருவிகளை விளக்குவதோடு மறத்தமிழனின் அடையாளமாகத் திகழும் 'வளரி' எனும் போர்க்கருவிப் பற்றியும் விளக்குகிறது. இப்போர்க்கருவிப் பற்றியக் கருத்துக்களை புறநானூற்றுப் பாடல்கள் வழிநின்று விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

போர்க்கருவி

போர்க்கருவி அல்லது படைக்கலம் என்பது ஒன்றைத் தாக்கவோ அல்லது தடுக்கவோ, அச்சமூட்டவோ அல்லது தற்காத்துக்கொள்ளவோ பயன்படலாம். பொதுவாக சேதத்தை ஏற்படுத்தக்கூடிய எதனையும் போர்க்கருவி எனலாம். சாதாரன தடியில் துவங்கிய போர்க்கருவி இன்று கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணை வரை வளர்ந்திருக்கிறது.

தமிழரின் போர்க்கருவிகள்

தொல்காப்பியர் காலம் முதலாக தமிழ்கள் வாள், வில், வேல் ஆகிய மூன்று முதன்மையானப் போர்க்கருவிகளைக் கையாண்டு வந்துள்ளனர். இதனை,

"வில்லும் வேலுங் கழலுங் கண்ணியும்
தாரும் ஆரமுந் தேரு மாவும்
மன்பெறு மரபின் ஏனோர்க் குரிய"[1]

எனும் தொல்காப்பிய நூற்பாவின் வழி அறிந்துகொள்ள முடிகின்றது. மேலும் இந்நூற்பாவை கூர்ந்து நோக்கினால் மன்னர்கள் தேர், குதிரையேறிப் போர் புரிந்தனர். ஏனையோர் வாள், வில், வேல் கொண்டு போர்புரிந்தனர் என்பதும் புலனாகும். இம்முதன்மை கருவிகள் தவிர வேறு சில போர்க்கருவிகளும் தமிழர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. அடார், அரம், அரிவாள், ஆயுதக்காம்பு, எ·.கு கண்ணாடி தைத்த கேடகம், கணிச்சிப்படை, கலப்பை, கழிப்பிணிப்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

பலகை, காழை.ஃ.கம், கிளிகடிகருவி, குந்தாலி, குறடு, கேடகம், கோடாலி, சக்கரம், சிறியிலை எ.ஃ.கம், சேறுகுத்தி, தறிகை, துடுப்பு, நவியம், படைவாள், பூண்கட்டிய தண்டு, மழு, வாள், வில், வேலுறை ஆகிய கருவிகளையும் தமிழர் பயன்படுத்தியதாக புறநானூற்றின் முன்னுரையில் உ.வே.சா. குறிப்பிடுகின்றார்.

தமிழர் போர்க்கருவி வளரி

வளரி என்பது ஓடித்தப்பிப்பவர்களைப் பிடிப்பதற்கும், தன்னை தாக்க வருபவர்களிடமிருந்து தற்காத்துகொள்ளவும் தமிழரால் பயன்படுத்தப்பட்ட ஓர் ஆயுதமாகும். ஒருபுறம் கனமாகவும் மற்றொருபுறம் இலேசாகவும் கூர்மையாகவும் மரம் அல்லது இரும்பினால் பிறை வடிவாகச் செய்த ஒருவகை எறிகருவி, வளரித்தடி என்று வளரி என்பதற்கு விக்சனரி அகராதிப் பொருள் தருகிறது.[2] வளரி என்பதற்கு சுழல்படை என தமிழ் இலக்கிய அகராதி விளக்கம் தருகிறது.[3]

'வளரி' ஓர் எறியாயுதம். கரையில் இருந்து எறிந்தால், தண்ணீரின் மீது சீவிச் செல்லும் சித்துக்கல் போல காற்றின் மீது சீவிச்சென்று இலக்கைத் தாக்கும். நின்ற இடத்தில் இருந்து எதிரியைத் தாக்கப் பயன்பட்ட வேல்கம்பு, அதுவே தூரத்தில் சென்று தாக்கவேண்டிய தேவை வந்தபோது பாய்ந்து செல்லும் குத்தீட்டியாக பரிணமித்தது. கைவீச்சு வரை போரிட முடிந்த ஆயுதம் இப்போது கையெறியும் தூரம் வரை போய்த்தாக்கும் பலமான ஆயுதமாக மாறியது. நவீன காலத்தில் துப்பாக்கி ஏவுகணை ஆனதைப்போல.

வாள் வளரியானதும் அப்படித்தான். நின்ற இடத்தில் இருந்து எதிரியை வீழ்த்தப் பயன்பட்ட வாள், தூரத்தில் இருக்கும் எதிரியைத் தாக்கவேண்டிய தேவை வந்தது. காற்றில் சுழன்று பறக்கும் வடிவத்துக்கு மாறியது. நீண்ட வாள் பிறை நிலவாக வளைந்தது. தன்னை தாங்கிப்பிடிக்கும் கைப்பிடியை, வாளின் நுனி வளைந்து வந்து பார்த்தபோது வளரி ஆனது.[4] 'வளரி' என்னும் இக்கருவியை வளைதடி, திகிரி, எறிகோல், குறுங்கோல், பாறாவளை, சக்ராயுதம், சுழல்படை, படை வட்டம், கள்ளர்தடி என்றும் அழைத்தனர்.

வளரியின் அமைப்பு

வளரி ஆஸ்திரேலிய ஆதிவாசிகளால் உபயோகப் படுத்தப்பட்ட பூமராங் வகை ஆயுத வடிவமைப்பை உடையது. பூமராங் எறிந்தவனுக்கே திரும்பி வந்துவிடும். ஆனால் தமிழனால் பயன் படுத்தப்பட்ட வளரி அப்படியல்ல. வளரிகள் பல்வேறு அமைப்பில் அமைந்துள்ளன. சாதாரணமாக வளைந்த இறக்கை வடிவமான மரத்தால் ஆனது. சில வளரிகளின் விளிம்புகள் பட்டையாக கூராக இருக்கும். தமிழன் பயன்படுத்திய வளரிகள் மரம், இரும்பு, தந்தம் போன்றவற்றால் செய்யப்பட்டவையாகும். இவ்வளரிகள் இலக்கை தாக்குபவையாகவும், இலக்கைத்தாக்கிவிட்டு எறிந்தவனுக்கே மீண்டும் வரும் வகையிலும் அமைக்கப்பட்டிருந்தன.

வளரி எறியப்படும் முறை

- வளரி என்பது மரத்திலும், இரும்பிலும் செய்யக்கூடிய ஆயுதமாகும்.
- வளரி ஆயுதம் பிறை வடிவில் இருக்கும்.
- ஒரு முனையானது மறுமுனையை விட கனமானதாக இருக்கும்.
- வளரியை லேசான எடையுள்ள முனையை கையில் பிடிக்க வேண்டும்.
- எறிவதற்கு முன்பாக வளரியை தோல்பட்டை அளவு தூக்கி நன்றாக சுழற்ற வேண்டும்.
- சுழற்றிக்கொண்டிருக்கும் போதே குறிவைத்துள்ள பொருளின் மீது உத்வேகத்துடன் வீச வேண்டும்.

என்று திவான் விஜய இரகுநாத பல்லவராயர் விளக்கம் கொடுத்துள்ளார். மேலும் பொதுவாக வளரியைச் சுழற்றியே எறியப்படும். அவ்வாறு எறியப்படும் போது கிடைமட்டமாகவோ அல்லது சுழன்று சென்றோ இலக்கினைத் தாக்கும். ஒருவரை உயிருடன் பிடிக்க காலை நோக்கியும், உயிராபத்தை விளைவிக்க கழுத்தை நோக்கியும் வளரியை எறிவர்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

புறநானூற்றில் வளரி

சங்க இலக்கியங்களுள் ஒன்றாகத் திகழும் புறநானூற்றில் வளரியைத் திகிரி, எறிகோல், குறுங்கோல் என்று புலவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. புறநானூற்று 347ஆம் பாடலில்,

"மணநாறு மார்பின், மறப்போர் அகுதை
குண்டு நீர் வரைப்பின், கூடல் அன்ன"

எனும் இவ்வடிகள் அகுதை என்ற குறுநில மன்னன் பண்டையநாளில் கடல்சார்ந்த ஊராகிய கூடல் நகரை ஆட்சி செய்த குறுநிலத்தலைவன் ஆவான். இவன் பொன்புனை திகிரி (உலோகத்தாலான சக்ராயுதம்) என்ற ஆயுதத்தை கண் இமைக்கும் நேரத்திற்குள் கண்டது உண்மையோ, பொய்யோ என்று வியக்கும் வகையில் விரைந்து செலுத்த வல்ல வீரன் என்பதை,

"…அகுதைகண் தோன்றிய
பொன்புனை திகிரியின் பொய்யாகியரோ!" (புறம்.233)

என்ற இப்பாடலடிகளின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

எறிகோல்

ஒருமுறை அதியமானுடைய பகைவருள் ஒருவன் ஔவையாரைக் கண்டு உங்கள் நாட்டில் சிறந்த போர் செய்யும் வீரன் உள்ளனரா என வினவியபோது ஔவையார்,

"எறிகோல் அஞ்சா அரவின் அன்ன
சிறுவன் மள்ளரும் உளரே" (புறம்.89)

என்று பெருமிதத்துடன் உரைக்கின்றார். அதாவது எதிரிகளை நடுங்க வைக்கும் வளரிக்கு அஞ்சாத பெரும் வீரம் பொருந்திய படைவீரர்கள் உள்ளனர் என்று உரைக்கின்றார். இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள 'எறிகோல்' என்பது வளரியைக் குறிப்பதாக அமைகிறது.

குறுங்கோல்

இலக்கினை தாக்குவதற்கு பண்டையங்காலங்களில் வளரியை பயன்படுத்தியுள்ளனர். இவ்வளரியை குறுங்கோல் என்றும் குறுங்கோல் வளைத்தடி என்றும் அழைப்பர். இதனை, குறுங்கோல் எறிந்த நெடுஞ்செவிக் குறுமுயல் (புறம்.339) என்ற பாடலடியின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. இங்கே குறுங்கோல் என்பது வளரியைச் சுட்டுகிறது.

தற்காலத்தில் வளரி

தமிழகத்தில் வளரி இருபதாம் நூற்றாண்டு வரை இருந்தமைக்கு வரலாறே சாட்சியாகத் திகழ்கிறது. சின்னமருது, பெரியமருது என அழைக்கப்படும் மருது பாண்டியர்கள் கி.பி.1780ஆம் ஆண்டில் நவாப்களுக்கு எதிராகவும், கி.பி.1801ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும் போரில் வளரியைப் பயன்படுத்தியுள்ளனர். கி.பி.1795ல் சிவகங்கையை ஆட்சி செய்த சின்னமருதுவிடம் வளரி வீச கற்றுக்கொண்டதாகவும், திறமையுடையவர்கள் இவ்வளரியை வீசினால் நூறு கஜ தூரத்திற்குச் சென்று இலக்கைத் துல்லியமாகத் தாக்கும் என்றும் கர்னல் ஜேம்ஸ் வேல்ஸ் தனது 'ராணுவ நினைவுகள்' என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

மதுரை மாவட்டத்தில் கி.பி.1883ஆம் ஆண்டு வளரி பயன்படுத்துவதை தான் நேரில் பார்த்தாக ஆர்.ப்ரூஸ்பூட் என்ற ஆங்கிலேயர் பதிவு செய்துள்ளார். கி.பி.1801ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஆயுதத் தடைச்சட்டத்திற்கு பிறகும், கி.பி.1915ல் மதுரை மாவட்டத்தில் குற்றப்பரம்பரைச் சட்டத்தை எதிர்த்து உசிலம்பட்டி வட்டம் பெருங்காம நல்லூரில் பெருங்கிளர்ச்சி வெடித்துப் பிறகும் வளரிக்கு தடைவிதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழர்களிடமிருந்து 22000 வளரிகள் கைப்பற்றப்பட்டதாக சு.வெங்கடேசன் குறிப்பிடுகின்றார்.

கி.பி.1952ல் ஜமீன் ஒழிப்பு சட்டப்படி திருநெல்வேலி மாவட்டம், அம்பா சமுத்திரம் அருகே உள்ள சிங்கம்பட்டி ஜமீன் அரண்மனையும், அந்த ஜமீனுக்கு சொந்தமான 74

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

ஆயிரம் ஏக்கர் நிலங்களும் அரசால் கையகப்படுத்தப்பட்டன. ஜமீன் அரண்மனை சுற்றுலா தளமாகத் திகழ்கிறது. இச்சிங்கம்பட்டி ஜமீனிடம் வளரிபடை இருந்தது வரலாற்றுச் செய்தியாகும்.

- 2001ஆம் ஆண்டு சு.வெங்கடேசன் எழுதிய காவல் கோட்டம் நாவலில் இவ்வளரிப் பற்றிய வரலாற்றினையும் குறிப்பிட்டுள்ளார்.
- வளரியின் வரலாற்றை மையமாகக்கொண்டு பொன்ராமின் இயக்கத்தில் 2018ஆம் ஆண்டு 'சீமராஜா' என்ற பெயரில் திரைப்படம் வெளிவந்துள்ளது.

வளரிப் பயிற்சி

தமிழர் வீரத்தின் அடையாளமாகத் திகழும் வளரிக்கலையை ஈரோட்டை அடுத்துள்ள ராசாம்பாளையும் எஸ்.எஸ்.பி. நகர் பகுதியைச் சேர்ந்த காமராஜ் இலவசமாகக் கற்றுத்தருகின்றார். (02.10.2018 Polimer News)

வளரிக் காட்சியகங்கள்

ஒரு காலத்தில் தமிழர் வீரத்தின் அடையாளமாகவும், விசையின் குறியீடாகவும் திகழ்ந்த வளரி இன்று காட்சிப் பொருளாக கீழ்காணும் இடங்களில் காட்சியளிக்கிறது.

- மதுரை மாவட்டம் கோவிலாங்குளத்தில் உள்ள 'பட்டாச்சாமி' கோவிலில் 200 வளரிகள் ஆண்டுதோறும் படையலிட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.
- இராமநாதபுர ராமவிலாசத்தில் தொல்லியல் துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.
- புதுக்கோட்டை திருக்கோகர்னத்தில் உள்ள அருங்காட்சியகம்.
- திருநெல்வேலி அரசு அருங்காட்சியகம்.
- சென்னை அரசு அருங்காட்சியகம்.

முடிவுரை

- சங்க இலக்கியமாகத் திகழும் புறநானூற்றில் திகிரி, எறிகோல், குறுங்கோல் என்றழைக்கப்படும் 'வளரி' போர்களில் பயன்பட்டதோடல்லாமல் தமிழரின் தற்காப்புக் கலையாகவும் திகழ்ந்திருக்கிறது.
- சங்க காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரை நம்மிடையே உயிர்ப்புடன் இருந்த வளரி இன்று ஆங்கிலேயரின் அடக்குமுறையால் காட்சிப் பொருளாக் காணமுடிகின்றது.
- அழிந்து போன தமிழர் கலைகள் பல இருக்க, வளரிக்கலையைக் காப்பாற்ற முயற்சிக்கும் காமராஜ் போன்றவர்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.
- ஆயிரம் அடக்குமுறைகள் வந்தாலும் வரலாற்று நினைவுகளையும், வரலாற்றுக் கலைகளையும் ஒருபோதும் கைவிடலாகாது. அவ்வகையில் 'வளரிக்கலையை' மீட்டெடுப்பது மக்களாகிய நமது கரங்களிலேயே உள்ளது.

சான்றெண் விளக்கம்

1. இளம்பூரணர். *தொல்காப்பியம் பொருளதிகாரம், மரபியல்* நூற்பா எண் - 628.
2. www.wiktionary.org.
3. வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், *தமிழ் இலக்கிய அகராதி*, ப.186.
4. சு.வெங்கடேசன். *வளரி – கதைகளின் கதை.* விகடன் - 03.06.2016.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

சிற்றிலக்கியங்கள்
Minor Literary Works

முனைவர் இரா. உத்தமி, உதவி பேராசிரியை,
சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி, நல்லூர், திருநெல்வேலி.

Abstract

The paper tries brings forth the minor literature of the Tamil Literature. First and foremost, the article explains about the meaning of Prabantham and goes on to detail about the time of the period, quality, types and development. The types such as Ula, Anthadi,Kovai, Kalambagam,Thoothu, Sathagam, Pallu, Kuravanchi and Parani are explained with suitable examples. It also quotes the time span where the certain type was famous. Hence, the article make sense of the facts and matters regarding the glimpses taken from the minor literary types.

Keywords: Minor Literary Works, Tamil Literature

முன்னுரை

தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்கள் இன்பத்தைத் தருவதோடு வாழ்வியல் நெறிகளையும் எடுத்துரைப்பன. தமிழ் இலக்கியங்கள் வரலாற்றின் 'பொற்காலம்' என இரண்டு கால கட்டங்களைக் கூறுவர். ஒன்று பழைய இலக்கியங்களான பாட்டும் தொகையும் தோன்றிய சங்ககாலம். மற்றொன்று, சோழ மன்னர்களின் ஆட்சிக்காலம். சோழர் காலத்தில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றின. இவ்விலக்கியங்களுள் பேரிலக்கிய நூல்களும் சிற்றிலக்கிய நூல்களும் அடங்கும். அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களை எடுத்துரைக்கும் நூல்கள் 'பேரிலக்கியங்கள' எனப்படும். அவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தவிர்த்து உரைக்கும் நூல்கள் 'சிற்றிலக்கியங்கள்' எனப்படும். சிற்றிலக்கியங்கள் தெய்வங்களையும் மாந்தரையும் புகழ்ந்து எழுதப்பட்டன. குறிப்பிட்ட மக்கள் இனத்தின் பண்பாட்டை விவரிக்கும் நோக்கில் எழுதப்பட்டன. இவ்வாறு பல்வேறு நோக்கங்களை உடையதாகச் சிற்றிலக்கியத் தோற்றம் காணப்படுகிறது. சிற்றிலக்கியங்களின் தோற்றம், வளர்ச்சி மற்றும் வகைகள், தன்மைகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பிரபந்தம் என்பதன் விளக்கம்

சிற்றிலக்கியத்தை வடமொழியில் 'பிரபந்தம்' எனக் கட்டுவர். 'பிரபந்தம்' என்னும் சொல்லுக்கு 'நன்கு கட்டப்பட்டது' என்று பொருள். பதினொன்றாம் திருமுறை 'பிரபந்த மாலை' என்றே அழைக்கப்பட்டது. காரணம், அந்நூலில் பல்வேறு வகையான சிற்றிலக்கியங்களின் தன்மை விரவிக் காணப்பட்டது. தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தம் என வழக்காறுண்டெனினும் பன்னூறு வகைமைகள் காணப்படுகின்றன. பிரபந்தம் என்ற சொல் தமிழ் வழக்கில் சிறிய இலக்கிய நூல்களைச் சிறப்பாகக் கட்டத் தொடங்கியது. அதற்கு நிகராகச் சிற்றிலக்கியம் என்ற சொல்லும் வழக்காற்றில் வரத் தொடங்கியது. தமிழில் நெடும் பாடல்களால் அமைந்த பிரபந்த வகைகளைச் 'சிற்றிலக்கியம்' என்றும் குறிப்பிடுகிறோம். இடைக்காலம் பிற்பகுதி இதன் தோற்றத்திற்கான வித்தும் வளர்ச்சியும் சங்க காலத்திலேயே

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

காணப்படுகின்றன. ஆற்றுப்படை ஒரு துறையாகவும் தனிப்பெரும் பாடல்களாகவும் அன்றே வளர்ந்தமைந்தன. அகப் புறத் துறைகள் பல தனித்தனிச் சிற்றிலக்கியங்களாகக் கிளைத்தன.

சிற்றிலக்கியக் காலம்

ஏனைய இலக்கிய வகைகளைப் போலவே சிற்றிலக்கிய வகையும் தமிழில் காலந்தோறும் கிளைத்து வந்திருக்கிறது. சங்க இலக்கியத்திலேயே இவ்வகைமைகள் பல கிளைவிட்டன. நீதியிலக்கியங்கள் சில சிற்றிலக்கிய வகைமைகளாகவே செழித்தன. பக்தி இலக்கியம் சார்ந்த சிற்றிலக்கியங்களும் பல்கின. பதினைந்து, பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளை நாம் சிற்றிலக்கியக் காலமென்றே அழைக்கலாம். நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் என்று அழைக்கலாம். சிற்றிலக்கியங்கள் தெய்வங்களையும் மாந்தரையும் புகழ்ந்து எழுதப்பட்டன. குறிப்பிட்ட மக்கள் இனத்தின் பண்பாட்டை விவரிக்கும் நோக்கில் எழுதப்பட்டன. இவ்வாறு பல்வேறு நோக்கங்களை உடையதாகச் சிற்றிலக்கியத் தோற்றம் காணப்படுகிறது.

சிற்றிலக்கியங்களின் தன்மை

சிற்றிலக்கியங்கள் மிகுதியான கற்பனையைக் கொண்டு அமைந்தவை. சிற்றிலக்கியங்களின் பாடுபொருளாகச் சிற்றின்பமும், பேரின்பமும் அடங்கியுள்ளன. பொதுவாக, இறைவன், அரசன், வள்ளல், குரு ஆகியோரின் சிறப்பினை எடுத்துரைப்பதனையே தமது நோக்கமாகக் கொண்டு விளங்கின. சிற்றிலக்கியங்கள் அகம் பற்றியன, புறம் பற்றியன, பக்தி பற்றியன எனச் சில பிரிவுகளாகப் பகுத்து நோக்கத்தக்கன. பொதுவாகச் சிற்றிலக்கியங்கள் தனிப்பாடல்களின் தொகையாகவும், தொடர்நிலைச் செய்யுளாகவும், சொற்றொடர் நிலையாகவும் அமையும்.

சிற்றிலக்கிய வகைகள்

தமிழில் 96 வகைப் பிரபந்தங்கள் என்று கூறுவது இலக்கிய வழக்கு. ஆனால் இந்த எண்ணிக்கையும் நூல்களின் வகையும், சிற்றிலக்கிய அமைப்பிலக்கணத்தை விவரிக்கிற பாட்டியல் நூல்களில் வேறுபடுகின்றன. பன்னிரு பாட்டியலில் 64, வெண்பாட்டியலில் 55, நவநீதபாட்டியலில் 45, சிதம்பரப் பாட்டியலில் 59, இலக்கண விளக்கத்தில் 64, தொன்னூல் விளக்கத்தில் 96, பிரபந்தத்திரட்டில் 106 வகைகள் விவரிக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் இருநூற்றுக்கும் மேற்பட்ட வகைகள் விவரிக்கப்பட்டிருத்தலை அறிய முடிகிறது. இத்தகைய வேறுபாடு சிற்றிலக்கியங்கள் வரையறையின்றிப் புதிதாகத் தோன்றத்தக்கவை என்பதையே காட்டுகிறது. இவை தவிர, இந்த இலக்கணத்தைப் பாட்டியல் என்ற ஒரு பிரிவாக்கி, எழுத்து, சொல், பொருள், யாப்பு, பாட்டியல், அணி என அறுவகை இலக்கணமாக்கி விவரிக்கிற புதிய முயற்சியும் இலக்கண அறிஞர்களிடம் காணப்படுகிறது. இலக்கண விளக்கம் பொருளதிகாரத்தின் ஓர் இயலாகப் பாட்டியலை அமைத்துள்ளது. இப்பாட்டியல் பிற்காலப் பாட்டியல்களுள் சிறந்தது. தொன்னூல் விளக்கம் பாட்டியலைச் செய்யுள் மரபியல் என்று குறிப்பிடுகிறது. தமிழ்ச் சிற்றிலக்கியங்களின் தொகுதி விரிவானது. அவற்றுள் சில கவிஞர்களின் உள்ளத்தையும் அறிஞர்களின் கவனத்தையும் பெரிதும் ஈர்த்துள்ளன.

சிற்றிலக்கிய வளர்ச்சி

96 வகை சிற்றிலக்கியங்களுள் எண்ணிக்கை அளவில் மிகுதியாகப் படைக்கப்பட்ட சிற்றிலக்கிய வகைகளாக உலா, தூது, அந்தாதி, கோவை, சதகம், மடல், பிள்ளைத்தமிழ் ஆகியவற்றைச் சுட்டலாம். ந.வீ செயராமன், “தொல்காப்பியர் காலத்தில் இடம்பெற்ற சிற்றிலக்கிய வித்துச் சங்ககாலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு, ஐந்தாம் நூற்றாண்டில் துளிர்த்து, ஏழாம் நூற்றாண்டில் கோவையாகச் செடியாகி, எட்டாம் நூற்றாண்டில் உலாவாக மரமாகி, ஒன்பதாம் நூற்றாண்டில் கலம்பகமாகக் கிளைத்து பதினொன்றாம் நூற்றாண்டில் சதகமாகவும், பரணியாகவும் அரும்பிப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் பிள்ளைத்தமிழ் மொட்டாகிப் பதினான்காம் நூற்றாண்டில் தூதாகப் பூத்துப் பதினாறாம் நூற்றாண்டில் பள்ளாகக் காய்த்து பதினெட்டாம் நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்தது” என்று தமது

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

'சிற்றிலக்கியச் செல்வம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றின் வழியாகத் தமிழ்ச் சிற்றிலக்கியத்தின் வளர்ச்சி நிலையினை அறிய முடிகின்றது.

அந்தாதி இலக்கியம்

சிற்றிலக்கியங்களுள் எண்ணிக்கையாலும் பொருட்சிறப்பாலும் முதலிடம் பெற்றுத் திகழும் பெருமை அந்தாதி இலக்கியத்திற்கு உண்டு. அந்தாதி அமைப்பினைச் சங்க இலக்கியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் ஆங்காங்கே காணலாம். காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி, சேரமான் பெருமாள் நாயனாரின் பொன் வண்ணத்தந்தாதி, திருமழிசையாழ்வாரின் திருவந்தாதி, கம்பரின் சடகோபர் அந்தாதி, பிள்ளைப் பெருமாளையங்காரின் திருவரங்கத்தந்தாதி ஆகியன குறிப்பிடத்தக்க அந்தாதி இலக்கியங்கள் ஆகும்.

உலா

பாட்டுடைத் தலைவன் உலா வரும்போது அவனது எழிலில் ஈடுபட்டுப் பல்வேறு பருவத்துப் பெண்டிரும் காமுறுவதாகப் பாடுவது உலா. இலக்கிய மரபு பாட்டுடைத் தலைவனின் பெருங்கருணைத் திறத்தையும் வள்ளன்மையையும் குடிச்சிறப்பையும் பெருமைகளையும் உலா நூல்கள் எடுத்துரைக்கின்றன. உலா இலக்கியங்களின் எண்ணிக்கை மிகுதியாக உளது. அவற்றுள் சேரமான் பெருமான் நாயனார் பாடிய திருக்கயிலாய உலாவே பழைமையானது.

கோவை

அன்புக் காதல் நிகழ்ச்சிகளை நிரலாகத் தொடுத்துப் பாடுவது கோவை இலக்கியம் ஆகும். சிற்றிலக்கிய வகைகளுள் அதிக எண்ணிக்கையில் நூல்கள் இயற்றப்பட்ட சிற்றிலக்கிய வகை 'கோவை" ஆகும். பல கோவை நூல்கள் தமிழில் உள்ளன. மணிவாசகர் பாடிய திருச்சிற்றம்பலக் கோவையே முதல் கோவை நூலாகும்.

கலம்பகம்

கலம்பக இலக்கியங்கள் அகப்பொருள், புறப்பொருள் கூறுபாடுகள் நிறைந்தவை. இவற்றில் பலவகைப் பாக்களும் பாவினங்களும் விரவிக் காணப்படுகின்றன. கலம்பகம் என்ற சொல்லுக்குக் 'கலவை' என்று பொருள். பாக்களாலும், பொருளாலும், உறுப்பாலும் கலவைநிலை பெற்று விளங்குவது கலம்பகம். தெய்வங்களையோ, மக்களுள் சிறந்தாரையோ தலைவனாக வைத்து பாடப்படும். கி.பி.9 ஆம் நூற்றாண்டில் எழுந்த நந்திக் கலம்பகமே காலத்தால் முந்திய கலம்பக நூல் என்பர்.

தூது

சிறப்பிற்கு உரிய சிற்றிலக்கியங்களுள் தூதும் ஒன்று. காதலர்கள் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்காகத் தோழியையோ, தோழனையோ தூது அனுப்பும் நிகழ்ச்சி அகத்திணையில் காணப்படுகிறது. தூது அனுப்பப்படுகிற பொருளால் இவ்விலக்கியம் பெயரிடப்படுகிறது. நெஞ்சு, கிளி, வண்டு, பணம், துகில், நெல், தமிழ், பொன், செருப்பு போல்வனவற்றைத் தூதாக விடுத்த இலக்கியங்கள் உள்ளன. தூது நூல்களில் திருமாலிருஞ்சோலைமலை அழகர் கிள்ளை விடுதூதும், தமிழ்விடு தூதும் சிறப்பு வாய்ந்தவை.

சதகம்

பாடல்களின் எண்ணிக்கையால் பெயர் பெற்றுள்ள சிற்றிலக்கியங்களுள் சதகம் முதன்மை பெற்று விளங்குகின்றது. சதகம் நூறு பாடல்களைக் கொண்ட நூலாகும். சதக இலக்கியத்தை நான்கு வகையாகப் பகுப்பர். அவை 'மண்டல சதகம், துதி சதகம், நீதி சதகம், தனிநபர் சதகம்' என்பவையாகும். நூலாசிரியன் தான் விரும்பி வழிபடும் கடவுளை முன்னிலைப்படுத்தியும், நீதி, ஒழுக்கம் சார்ந்த பண்பு நலன்களை எடுத்துரைக்கும் வகையிலும் அமையும்.

பள்ளு

பாட்டுடைத் தலைவனை ஏற்றிப் பாடுவதுடன் உழவுத் தொழிலாளரின் எளிய

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

வாழ்க்கை முறையை அவர்கள் சூழலுடன் எடுத்தியம்பும் சிற்றிலக்கிய வகை பள்ளு இலக்கியமாகும். பள்ளு இலக்கிய மருதத்திணையை ஒட்டியதாக உள்ளது. கி.பி.18ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'முக்கூடற்பள்ளு' நூலே முதல் பள்ளு நூலாகக் கருதப்படுகின்றது. 'நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது' என்ற பழமொழி பள்ளு இலக்கியத்தின் அதீதப் பெருக்கத்தினை உணர்த்துகின்றது.

குறவஞ்சி

குறி கூறும் குறவர் சமுதாயத்தை மையப்படுத்திய சிற்றிலக்கியம் குறவஞ்சி இலக்கியமாகும். பாட்டுடைத் தலைவனை அவனது உலாவின் போது கண்டு, காதல் கொண்டு, விரக வேதனையால் வாடித் தவிக்கும் தலைவியொருத்திக்குக் குறக் குலத்தைச் சேர்ந்த வஞ்சியொருத்தி குறி கூறுவதாக வரும் பொருளமைதியைக் கொண்டது குறவஞ்சி இலக்கியம். கி.பி. 18ஆம் நூற்றாண்டில் திரிகூடராசப்பக் கவிராயரால் இயற்றப்பட்ட திருக்குற்றாலக் குறவஞ்சியே முதல் குறவஞ்சி இலக்கியமாகும்.

பரணி

வெற்றியின் தெய்வமாகிய காளியின் பிறந்த நட்சத்திரம் பரணி ஆகும். போர்க்களத்தில் உயிர்நீத்த பகைவர்களின் உடலில் இருந்து பேய்கள் கூழ் சமைத்து பரணி நாளில் உண்டு மகிழ்வதால் இந்நூல் பரணி எனப்பட்டது. பரணி இலக்கியம் விண், மண், நரகம் மூன்றினையும் இணைத்துக் கூறும் சிறப்புடையது. சிற்றிலக்கியங்களுள் பரணி தோற்றோரின் பெயரால் அமைக்கப்படுகிறது. தக்கயாகப் பரணி இத்தகையது. ஒட்டக்கூத்தர் பாடியுள்ளார். இதுவே முதற் பரணியாகும். பரணி வகையுள் கலிங்கத்துப்பரணி மிகச் சிறப்பானது.

முடிவுரை

சிற்றிலக்கிய வகைகள் பல பக்தி இயக்க காலத்தில் உருப்பெற்றாலும், அவை செழித்து வளர்ந்த காலம், நாயக்க மன்னர்கள் ஆட்சிக் காலமே. சிற்றிலக்கியத்துக்கான தோற்ற மூலக் கூறுகள் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன. சிற்றிலக்கியங்களின் கருப்பொருளும், யாப்பமைப்பும் இன்னதுவே, இத்துணையவே என்னும் வரையறையைக் கடந்தவை. அவை காலச் சூழலுக்கும் கவிஞர்களின் வாழ்க்கைச் சூழல், புலமை வளத்திற்கும் ஏற்பக் கட்டுப்பாடற்று அமையத் தக்கன. எனவே ஒரு காலத்தைய சிற்றிலக்கிய வகை மற்றொரு காலத்தில் பின்பற்றப்பட வேண்டும் என்ற நிலை இன்றி, புதிது புதிதாக வகைகள் தோன்றி, சிற்றிலக்கிய வரலாற்றின் பரப்பு மிகுதற்கு வாய்ப்பு உள்ளது.

துணை நூல்கள்

1. *சிற்றிலக்கிய அகராதி,* ந.வீ.செயராமன், பாரி நிலையம்.
2. *சிற்றிலக்கியப் புலவர் அகராதி,* ந.வீ.செயராமன், பாரி நிலையம்.
3. *முக்கூடற்பள்ளு*, புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

குறுந்தொகையில் பெண் புலவர்கள்
Women Bards in *Kurunthokai*

ச.உமாதேவி, முனைவர் பட்ட ஆய்வாளர்,
இராஜா நந்திவர்மன் கலை அறிவியல் கல்லூரி, தெள்ளாறு – 604406.

Abstract

The paper brings forth the role of women poets in "Kurunthokai". The literary collection comes under " Ettuthokai" which means 'good' in sense. It is evident that there are 205 poets had written verses in the collection. Out of them, eighteen are women bards. So,it is sublime that women poets had existed at Sangam Period. Women Poets like Avvaiyar, Velliveethiyar, Allur Nanmulaiyar, Kakai Padiniyar, Aathi manthiyar and Okkur Masathiyar are well known poets of that times. Hence, the article make sense of the facts and matters regarding the women bards and bring down their artistic and aesthetic talents through their works.

Keywords: Women, Bards, *Kurunthokai, Avvaiyar, Other Poets*

முன்னுரை

சங்க இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்வியலை நமக்கு படம்பிடித்துக் காட்டுவனவாக அமைகின்றன. அக்கால மக்களின் பண்புகளை நமக்கு எடுத்துக்காட்டுவதோடு மனிதர்களின் வாழ்வியல் வரலாற்றைப் பற்றி அறிந்திடவும் உதவி புரிகின்றன. அவ்வகையில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகை பாடல்களைப் பாடிய பெண்பாற் புலவர்களில் சிலரின் கற்பனைத்திறனையும், படைப்பாற்றலையும், உவமைத்திறனையும் எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குறுந்தொகை

எட்டுத்தொகை நூல்களில் நல்ல என்ற அடைமொழியில் அழைக்கப்படுவது *குறுந்தொகை.* இந்நூல் அகம் சார்ந்த செய்திகளை தருவதோடு, எண்ணற்ற செய்திகளை கொண்டு கற்போர்க்கு இன்பம் பயக்க வல்லதாய் உள்ளது. அதிகமான உரையாசிரியர்களால் மேற்கோள்கள் எடுத்தாளப்படும் சிறப்பு வாய்ந்த நூலாகவும் குறுந்தொகை திகழ்கிறது. குறுந்தொகையில் 205 புலவர்கள் பாடல்களைப் பாடியுள்ளனர். இதில் பெண்பாற் புலவர்கள் பதினெட்டு பேர் பாடல்களை இயற்றியுள்ளனர்.

பெண் புலவர்கள்

சங்க காலப் பெண்பாற் கவிஞர்களின் எண்ணிக்கை குறித்த விவாதங்கள் பல உள்ளன. பெண் கவிஞர்களின் எண்ணிக்கையினை உ.வே.சா. 38 எனவும், எஸ்.வையாபுரிப்பிள்ளை 30 எனவும் குறிப்பிடுகின்றனர். எனினும் ஔவை து.நடராஜன் அவர்கள் 41 என்று குறிப்பிடும் எண்ணிக்கைப் பலராலும் ஏற்புடையப் பெற்றுள்ளது.

சங்கப் பெண் கவிஞர்கள் தந்திருக்கும் படைப்புகள் வழியாக அணுகிடும்போது அன்றைய காலகட்டத்துப் பெண்கள் பற்றிய புரிதலை நுணுக்கமாக நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. அவர்களின் படைப்புகளின் வழி அவர்களின் அறிவு, கல்வி ஆகியவை போற்றப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருப்பதை அறியலாம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

குறுந்தொகையில் பல பாடல்களை பெண்பாற் புலவர்கள் பாடியுள்ளனர். அள்ளுர் நன்முல்லையார், ஆதிமந்தியார், ஊண்பித்தையார், ஒக்கூர் மாசாத்தியார், ஒளவையார், கச்சிப்பேட்டு நன்னாகையார், கழார்க்கீரன் எயிற்றியார், காக்கைப் பாடினியார் நச்செள்ளையார், குன்றியனார், நல்வெள்ளியார், நன்னாகையார், நெடும்பல்லியத்தை, பூங்கன் உத்திரையார், பொன்மணியார், வருமுலையாரித்தி, வெண்பூதியார், வெண்மணிப் பூதியார், வெள்ளி வீதியார் ஆகிய 18 பெண்பாற் கவிஞர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்களுள் அள்ளுர் நன்முல்லையார், ஒளவையார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், வெள்ளி வீதியார், ஆதிமந்தியார் ஆகியோர் புகழ் வாய்ந்தவர்களாக தெரிகின்றது. ஆதிமந்தியார் என்பவர் கரிகாற்பெருவளத்தானுடைய மகள் என்பதையும் அறியலாம்.

அள்ளுர் நன்முல்லையார்

"அள்ளுர்" என்பது பாண்டி நாட்டில் மருத நிலத்தின் கண்ணுள்ள ஊராகும். சிவகங்கை மாவட்டத்திலுள்ள அள்ளுர் என்ற ஊரில் வாழ்ந்த பெண் கவிஞர் இவர். இவரின் இயற்பெயர் "முல்லை" என்பதாகும். அகம், புறம் சார்ந்த பாடல்களை பதிவு செய்துள்ளார். இவரின் பாடல்கள் ஆண், பெண் மனஉணர்வுகளை மிக நுட்பமாக வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

மடலேறுதல் என்பது சங்க காலத்தில் இருந்த ஒரு வழக்கமாகும். தொல்காப்பியர் மடலேறுதலைக் கைக்கிளைப் பிரிவில் வைத்துப் பேசியுள்ளார். குறுந்தொகையில் 32-வது பாடலாக இடம் பெற்றுள்ள இவரின் பாடல் தலைவன் கூற்றாக அமைகிறது. தங்களது காதலை பெண் ஏற்கவில்லை என்றால் அப்பெண்ணின் மனதை மாற்றி விரும்பச் செய்ய ஆண்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையே மடலேறுதல் ஆகும்.

"காலையும் பகலுங் கையறு மாலையும்
ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்
மாவென மடலோடு மறுகிற் றோன்றித்
தெற்றெனத் தூற்றலும் பழியே
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே" (குறு. 32)

தலைவன் தன்னுடைய உருவத்தையும், தன்னால் விரும்பப்படும் பெண்ணின் உருவத்தையும் ஓவியமாக வரைந்து அலங்கரிக்கப்பட்ட மடல்மீது அமர்ந்து ஊருக்குத் தன் காதலை ஆண் வெளிப்படுத்துவது மடலேறுவது என்று சங்க மரபு குறிப்பிடுகிறது. பெண்கள் மடலேறுவது இல்லை.

ஒரு நாளை ஆறு சிறுபொழுதுகளாகப் பகுத்துக் காண்பது தமிழ்நெறி. பொருள் தேடச் செல்லலாம் என்று நினைத்த தலைவன் தன் காதலியை எண்ணிப் பின்தங்கிவிட்டான். எந்த நேரத்திலும் காமம் பொய்யாகிவிடுகிறது. அது மெய்யாகிக் கிட்டுவதற்கு மடலேறலாம் என்றால் ஊர்மக்கள் என்னை தூற்றுவார்கள்.

ஊர்மக்கள் என்னைத் தூற்றினால் எனக்குப் பழி. அவ்வாறு என்னைத் தூற்றாமல் வாழ்த்தினால் என் காதலியின் பெற்றோர்க்குப் பழி. அதனால் மடலேறுதல் தக்கதன்று - நான் என் செய்வேன் என்று வருந்துகிறான் தலைவன்.

மேலும், குறுந்தொகையில் 237-வது பாடலும் தலைவன் கூற்றாக பாடியுள்ளார். பொருளுக்காகத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் அதனை கொண்டு வருகையில் தலைவியைக் காண வேண்டும் என்ற ஆவல் மிகுதியால், தன் நெஞ்சம் தனக்கு முன்பே அவள்பால் விரைந்து சென்றுவிட்டது என்று தேர்பாகனிடம் சொல்லுகிறான். மற்ற பாடல்கள் தலைவி கூற்றாக அமைகின்றது. தன்னைப் பிரிந்து சென்ற தலைவனின் பிரிவால் ஏற்பட்ட துயரின் வலியினைப் பேசுவதாக அமைந்துள்ளன. பிரிவுத்துயரின் உணர்வுகளை அழகுபட எடுத்தியம்பும் பாடல்கள் குறுந்தொகையில் சிறப்பாக அமைந்துள்ளன. தலைவன்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தலைவியைப் பிரிந்து சென்ற பாதையோ வரட்சியான நிலப்பகுதி. அந்நிலத்தை வருணிக்கும் புலவரின் கற்பனைத்திறன் அழகுபட அமைந்துள்ளது.

"உள்ளார் கொல்லோ - தோழி! - கிள்ளை
வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்
புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வாள்உகிர்ப்
பொலங்கல ஒருகாசு ஏய்க்கும்
நிலங்கரி கள்ளிஅம் காடு இறந்தோரே?" (குறு. 67)

பொருள் தேடக் காட்டு வழியில் சென்றவர் அங்குப் பழுத்திருக்கும் வேப்பம்பழத்தைப் பார்க்கும்போது வேனில் காலம் வந்துவிட்டதே என்று எண்ணமாட்டாரோ? என்று தலைமகள் தன் தோழியிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இங்கு வேப்பம்பழம் பொன்முத்துக்களுக்கு உவமையாக பாடப்பட்டுள்ளது.

ஔவையார்

இவர் அதியமான் நெடுமானஞ்சியிடம் அமுதமாகிய நெல்லிக்கனி பெற்று அவனைப் புகழ்ந்து பாடியவர். சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் விறலியர் மரபினைச் சார்ந்தவர். இவருடைய பாடல்களை நுணுகி ஆராய்ந்தால் இவர் இளவயது மங்கை என்பதை அறியமுடிகின்றது. ஔவையார் மன்னர்களிடம் செல்வாக்கு மிக்கவராக விளங்கினார். மன்னர்களிடையே தூது சென்று போரினை நிறுத்தும் வல்லமை பெற்றவராகவும், மன்னர்கள் செய்யும் தவறுகளை இடிந்துரைக்கும் ஆற்றல் பெற்றவராகவும் திகழ்ந்துள்ளார். தொண்டைமானின் படைக்கலன்களைப் புகழ்வதுபோல் பழித்து அவனிடம் அதியமானின் போர் திறத்தை வெளிப்படுத்திய தன்மை அவரது வீரத்தையும், ஆற்றலையும் வெளிப்படுத்துகின்றது. இவர் குறுந்தொகையில் பதினைந்து பாடல்களைப் பாடியுள்ளார்.

பெண் புலவர்கள் பெண்ணின் நுண்மையான மனஉணர்வுகளைக் கண்டும் அனுபவித்தும் பாடல்களைப் பாடியுள்ளனர். தலைவியின் உளவியலை அறியாத தாய் கட்டுப்பார்ப்பது வழக்கம். இப்பாடலில் தோழியின் பங்கு உளவியலுக்குச் சான்றாகும். தலைவியின் களவுக்காதலை கூடியிருப்பவர்களுக்குக் குறிப்பாக தாய்க்குப் புலப்படுத்துமாறு வெளிப்படுத்தச் சொல்வது புலவரின் கவித்திறனுக்கு எடுத்துக்காட்டாகும்.

"அகவன் மகளே யகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே, அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே'' (குறு. 23)

தலைவியினுடைய காம நோயை அறிய மாட்டாத தாயார் அவள் வேறுபாட்டின் காரணத்தை ஆராயும் பொருட்டு அகவன் மகளாகிய கட்டுவிச்சியை அழைத்துக் கட்டுப் பார்ப்பது வழக்கம். கட்டுவிச்சி முறத்தில் நெல்லையிட்டு அதனை எண்ணி அதனாற்போந்த சில நிமித்தங்களை அறிந்து, "இவள் முருகனால் அணங்கப்பட்டாள்" என்று கூறுவாள். இவ்வகவன் மகள் தெய்வமேறிக் குறிகூறுதலும் உண்டு. இவளைப் பிற்காலத்தார் குறத்தி என்றும் கூறுவர்.

தலைவன் பொருள் தேடச் செல்கிறான். செல்லும் வழியெல்லாம் தலைவியை நினைத்துக் கொண்டே செல்கின்றான். இதனால் தலைவி மீது ஏற்படும் காம உணர்வானது வெள்ளப்பெருக்கு போன்று பெருகுகின்றது. எனினும், பொருள் தேடிச் சென்று இடையில் திரும்ப முடியாத இவ்வுலகத்து இயல்பினால் ஏற்படும் தலைவனின் உள்ளப் போராட்ட நிலையை,

"...நினைத்தனெ னல்லெனோ பெரிதே நினைத்து
மருண்டனெ னல்லெனோ வுலகத்துப் பண்பே
.....அனைப் பெருங் காம மீண்டுகடைக் கொளவே'' (குறு. 99)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்ற பாடலில் ஔவையார் திறம்பட விளக்குகின்றார்.

பருவ மாற்றத்தின் அடிப்படையில் கார்ப்பருவம் இயல்பாக வருகின்றது. இந்நிலையில் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியைத் தேற்றிய தோழியிடம், பாம்புகள் இறந்துபடுமாறு மிகுந்த வேகத்தோடு இடிக்கப்படும் இடியோசையும், புயல்காற்றோடு வரும் பெருமழையும் தலைவனைப் பிரிந்திருக்கும் என்மீது இரக்கம் காட்டாது துன்புறுத்துகின்றன என்கிறாள். இதனை,

> “நெடுவரை மருங்கிற் பாம்புபட விடிக்கும்
> கடுவிசை யுருமின் கழறுகுர லளைஇக்
> .... ஆரளி யிலையோ நீயே பேரிசை
> ..... துணையில ரளியர் பெண்டிரி∴ தெவனே” (குறு.158)

என்ற பாடலடிகளால் அறியலாம். குறுந்தொகையில் பெண்பாற் புலவர்களில் அதிக எண்ணிக்கையில் பாடல்களை இயற்றியுள்ளவர் ஔவையார் ஆகும். இவர் தலைவன், தலைவி, தோழி, பரத்தை, செவிலித்தாய் என்று பலதரப்பட்ட மனஉணர்வுகளை தம் பாடல்களில் பதிவு செய்துள்ளார்.

காக்கைபாடினியார் நச்செள்ளையார்

பாடினி - பாடுபவள். செள்ளை என்பது பெண்பாலார்க்கு இயற்பெயராகப் பண்டைக் காலத்து வழங்கி வந்ததாக தெரிகிறது. “நல்” என்பது அடைமொழியாகும். இவர் ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் என்னும் அரசன் மீது பதிற்றுப் பத்துள் ஆறாம் பத்தைப் பாடி, அணிகலனுக்கு என்று ஒன்பது துலாம் பொன்னும், நூறாயிரம் பொற்காசுகளும் பரிசு பெற்றவர்.

நாள்தோறும் காக்கைக்குச் சோறிடும் வழக்கத்தைப் பெண்கள் மேற்கொண்டிருந்தனர். இதனை,

> “திண்டேர் நள்ளி கானத் தண்டர்
> பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
> பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
> விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே” (குறு. 210)

என்ற இந்தப் பாடலில் காக்கைக்குச் சோறிடும் வழக்கம் குறிக்கப்பெற்றுள்ளது. காக்கைச் சோறிடுவதன் வழியாக அக்காக்கை கரைதலைச் செய்யும். காக்கை கரைதல் என்பது இனியவர் ஒருவரின் வருகை நிகழப் போகிறது என்பதை எடுத்துரைக்கும் நம்பிக்கையைத் தருவதாகும். இதன் காரணமாகப் பிரிந்த தலைவன் வருவான் என்றெண்ணித் தலைவி காக்கைகளுக்குச் சோறிடுகிறாள். “விருந்துவரக் கரைந்து காக்கையது பலியே” என்று காக்கை கரைந்தமையைப் பாராட்டிப் பாடியமையால் அவர் அருமை கருதி காக்கை பாடினியார் என்ற சிறப்பு பெயரால் ஆன்றோரால் அழைக்கப்பட்டார்.

வெள்ளி வீதியார்

இவர் குறந்தொகையில் எட்டு பாடல்களைப் பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்கள் தம் அனுபவங்களையே கூறுவதாக அமைத்துள்ளார். தலைவனை அடையாத தனது உயிர் இனி அழியட்டும் என்று தலைவி வருந்துவதை,

> “சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டிற்
> றெற்றென விறீஇயரோ வைய மற்றியாம்
> நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே
> பாணர், பசுமீன் சொரிந்த மண்டை போல
> எமக்கும் பெரும்புல வாகி
> நும்மும் பெறேஎ மிறீஇயரெம் முயிரே” (குறு. 169)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

இப்பாடலில் பச்சை மீனைச் சொரிந்த பாணரது உண்கலத்தைப் போல, எமக்குப் பெரிதான வெறுப்பைத் தருவதாகி, உம்மையும் பெறாமல் என் உயிரும் கெட்டு அழிந்து போதாக எனத் தலைவி உரைப்பதாய் வெள்ளிவீதியார் எடுத்தியம்புகிறார்.

மேலும், மனமே அனைத்திற்கும் அடிப்படை. அவ்வகையில் வெள்ளிவீதியாரின் பாடலின் வழியே புலவரின் மனஉறுதியினை அறியலாம்.

“நிலந்தொட்டுப் புகாஅர் வான மேறார்
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்
நாட்டி னாட்டி னூரி னூரிற்
குடிமுறை குடிமுறை தேரிற்
கெடுநரு முளரோநங் காத லோரே” (குறு. 130)

இப்பாடலில் தலைவன் தன்மீதான காதல் மிகுதியால் நாக உலகின் பெண்கள், விண்ணுலக அர மகளிர், நீரர மகளிர் ஆகிய பெண்களை நாடிச் செல்லமாட்டார் என உறுதியாக நம்பினாள், இத்தகைய மனஉறுதி பெண்களின் உளவியலுக்குச் சான்று பகர்கின்றன.

மேலும், தலைவி தலைவனுடன் போனபின்பு அவர்களைப் பாலை நிலத்தில் தேடிச் சென்ற செவிலித்தாய் அவர்களை காணாமல் வருந்துவதை மிக அழகாக, நுட்பமாக உணர்வு ரீதியாக படம்பிடித்துக் காட்டுகின்றார் வெள்ளிவீதியார். இதனை,

“காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே” (குறு. 44)

என்னும் பாடலடிகளால் அறியலாம்.

ஆதிமந்தியார்

சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானுடைய மகளானவள் ஆதிமந்தியார், இவர் பெயர் மந்தி எனவும் வழங்கப்படுகிறார். சேர நாட்டு மன்னனான ஆட்டனத்தியை மணந்து கொண்டாள். ஒருமுறை காவிரி ஆட்டனத்தியை வெள்ளத்தில் அடித்துச் சென்றுவிட்டதால், ஆதிமந்தி ஆற்றங்கரை ஓரமாகவே சென்று கதறினாள். இறுதியில் கடற்கரையோரமாகக் கரை ஒதுங்கிய கணவனைக் கண்டு மகிழ்ந்தாள். குறுந்தொகையில் தலைவி கூற்றாக வரும் 31-ம் பாடல் ஆதிமந்தியார் இயற்றியதாகும். வெள்ளிவீதியார் மற்றும் பரணர் முதலியோர் இவரை பாராட்டி உள்ளார்கள்.

“மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தமீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோ ராடுகள மகளே யென்கைக்
கோடீ ரிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே!” (குறு. 31)

“விழவின் கண்ணும் துணங்கையின் கண்ணும் காணேன் என்றது தலைவன் வீரன் என்பதையும் ஆடுகள மகன் என்பதையும் புலப்படுத்தியது. யானும் ஓர் ஆடுகள மகளே என்றது தான் துணங்கை ஆடியதையும் குரிசிலும் ஓர் ஆடுகள மகனே என்றது அவன் அத்துணங்கைக்குத் தலைக்கை கொடுத்தான் என்பதையும் புலப்படுத்தி அறத்தோடு நின்றதாயிற்று. அவனை நினைத்து என் கைவளையல் நழுவுகிறது. அவன் இப்பொழுது எங்கே உள்ளானோ? பல இடங்களில் தேடியும் கண்டேனில்லை” என்று உண்மையைத் தோழிக்கு வெளிப்படுத்துவதாக அமைகிறது இப்பாடல்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

முடிவுரை

பெண்பாற் புலவர்கள் தாங்கள் அறிந்த செய்திகளைக் கொண்டும் தங்களுக்கு நெருக்கமாக இருந்த பொருள்களைக் கொண்டு உவமைகளை அமைத்து தமது கற்பனைத் திறத்தையும் கவியாற்றலையும் வெளிப்படுத்தியுள்ளனர். குறுந்தொகைப் பெண்பாற்புலவர்கள் மொழிப்புலமை வாய்ந்தவர்களாகவும் மொழிவளம் மிகுந்தவர்களாகவும், கவியாற்றலிலும், கற்பனைத்திறத்திலும் சிறந்தவர்களாகவும் விளங்கியுள்ளதை அறிய முடிகிறது. தங்கள் பாடல்களில் பெண்களின் மன உணர்வுகளை மட்டுமின்றி ஆண்களின் மன உணர்வுகளையும் ஆழமாகப் பதிவு செய்துள்ளனர். தலைவியின் இயல்பான வாழ்க்கை நடப்புகளைக் கூர்ந்து கவனித்துப் பதிவு செய்யும் எழுத்துக்களாக பெண்பாற்புலவர்களின் எழுத்துக்கள் அமைகின்றன.

ஔவையார், வெள்ளிவீதியார், அள்ளூர் நன்முலையார், காக்கை பாடினியார், ஆதிமந்தியார், ஒக்கூர் மசாத்தியார் போன்றோர் தமது கவித்திறனால் இலக்கியத்துள் தனியிடம் பெற்று விளங்கினார்கள் என்பதை அவர்களின் பாடல்கள் வழியே அறிய முடிகின்றது.

துணைநின்ற நூல்கள்

1. இராகவையங்கார்,ரா., (உ.ஆ). *குறுந்தொகை விளக்கம்.* அண்ணாமலைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு - 1993.
2. சண்முகம் பிள்ளை,மு., (ப.ஆ). *குறுந்தொகை மூலமும் உரையும்.* தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மறுபதிப்பு - 1994.
3. சாமிநாதையர், உ.வே., (உ.ஆ). *குறுந்தொகை.* அண்ணாமலைப் பல்கலைக்கழகம், (திருப்பனந்தாள் காசிமட நிதிய வெளியீடு), முதற்பதிப்பு - 1983.
4. சோமசுந்தரனார், பொ.வே., (உ.ஆ.). *குறுந்தொகை மூலமும் உரையும்.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 522, டி.டி.கே. சாலை, சென்னை. மறுபதிப்பு, 2007.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

நெய்தலில் தலைவியின் இரங்கற் செய்திகள்
The Mourning of the Beloved in Neithal (Sea) Land

முனைவர்.இரா.உமாதேவி, உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி - 8

Abstract

The purpose of the article is to give out the details of the state of mourning of the beloved (Thalaivi) for her husband (Thalaivan) in the sea oriented land (Neithal). The coastal area of the Sangam Age is described a challenging one. The man of the family oars into the sea for livelihood. The beloved of the lover feels agitated and crumbs to mourning for the safe return of the husband. These glimpses can be seen in the verses of the Sangam poetry. Hence, the paper tries to unfold the messages regarding the topic.

Keywords: Mourning, Beloved, Neithal (Sea) Land

முன்னுரை

ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு உரிப்பொருள் உள்ளது. அந்தந்த உரிப்பொருள் அந்த நிலத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையில் நடைபெறும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. இவ்வகையில் நெய்தல் நில உரிப்பொருளான 'இரங்கலும் இரங்கல் நிமித்தமும்' அந்நிலத்தில் வாழும் தலைமகன் தலைமகளை பிரிந்து பொருள் ஈட்டுவதற்காகவோ அல்லது திருமணம் செய்ய எண்ணியோ அல்லது மணம் முடித்த பின்போ பொருள் ஈட்டும் பொருட்டு வேறிடங்களுக்குச் செல்வான். இந்தக் காலங்களில் தலைவனைப் பிரிந்து தலைவியின் செயல்பாடுகளை குறிப்பிதாக அமைவது தான் நெய்தலின் இரங்கற் செய்திகள் ஆகும். இக்கட்டுரையானது நெய்தல் நிலத்தில் நடைபெறும் தலைவியின் இரங்கற் செய்திகளை எடுத்துக்கூறுவதாக உள்ளது.

நெய்தல் நிலம்

ஐவகை நிலங்களில் ஒன்றான கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் நிலம் என்றழைக்கப்படுகிறது. முற்றிலும் மணலால் சூழ்ந்த பகுதி என்பதனால் இதனை, ''வருணன் மேய பெருமணல் உலகம்''. நெய்தல் என்கிறார் தொல்காப்பியர். இதற்கு உரைவிளக்கம் செய்த நச்சினார்க்கினியர் வருணனைத் தெய்வமாக வழிபடுகின்ற மக்கள் வாழ்கின்ற பகுதியே நெய்தல் நிலம் என்கிறார்.

கடலும் கடற்கரையும்

உயிரினங்கள் வாழ்கின்ற இப்பூமி மூன்று பங்கு நீரினால் சூழப்பட்டுள்ளது. இப்பரப்பினை உடைய இவ்வுலகத்தைப் பற்றிக் கடியலூர் உருந்திரங்கண்ணனார் கூறும் பொழுது ''புலவுக் கடலுடுத்த...... மலர்தலையுலகம்'' புலால் நாற்றத்தையுடைய கடல் சூழ்ந்த அகன்ற இடத்தையுடைய உலகம் என்கிறார்.

''நளியிரு முந்நீர் ஏணியாக
வழியிடை வழங்கா வானஞ்சூடிய
மண்புனி கிடக்கை''

என்று புறநானூறு கூறுகிறது. கடற்கரைப் பகுதி வாணிகம் மற்றும் பொருளாதரத்தில் சிறந்து விளங்கியதால் கடலும் கடற்பரப்பும் இலக்கியங்களில் பல பெயர்களால் வழங்கப்படுகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

"அழுவம், ஆதி, ஓதம், பரப்பகம், பரப்பு, பரவை, பௌம், புணரி, திசைச்சுரம், நீரகம், நீர், முகநீர், முந்நீர் கார்கோள்" என்ற பெயர்களால் வழங்கப் பெறுகின்றன.

நெய்தல் நிலம் - பெயர்க்காரணம்

நெய்தல் நிலத்தில் பலவகையான பூக்கள் இருப்பினும், நெய்தல் என்ற பூவானது மிகுதியாகக் காணப்படுவதால் அந்நிலத்திற்கு நெய்தல் என்ற பெயர் ஏற்பட்டதாக ஒருசாரார் கூறுவர். காணும் இடங்களிலெல்லாம் நெய்தற் பூவே காணப்படுவதாக அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, ஐங்குறுநூறு, சிறுபானாற்றுப்படை, பதிற்றுப்பத்து, மதுரைக்காஞ்சி, போன்ற சங்க நூற்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. "கனைத்த நெய்தற் கண் போன்ற மாமலர்" என்று *அகநானூறு* கூறுகிறது.

நெய்தலின் உரிப்பொருள்

தலைவனைப் பிரிந்த தலைவி தலைவன் கூறிய கூற்றினில் நம்பிக்கைக் கொண்டு பொறுத்திருந்து பார்ப்பாள் பொறுத்திறுந்து பார்த்துப் பார்த்து தலைவன் வாராவிடில், பொறுமை எல்லை கடந்து, வருத்தம் தாங்காது, தன் முன் காணப்படுவன உயர்திணைப் பொருளாயினும், அ∴றிணைப் பொருளாயினும் அவைகளிடமெல்லாம் தன் குறை தோன்றக் கூறுவாள் தலைவி. இவ்வாறு கூறுதலே நெய்தல் திணையின் உரிப்பொருள் என்று பேசப்படும் இரங்கலாகும். தொல்காப்பியத்தில்,

"கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவன் இரங்கலும்
உண்டென மொழிப ஓரிடத்தான்" (தொல்.பொருள்.அகத்.நூ.7)

என்ற நூற்பாவில் "பிரிந்தவன் இரங்கலானது ஒருவரை ஒருவர் பிரிந்த இடத்து இரங்கல், இது நெட்டாறு சென்றவழி இரங்குதல் இன்மையானும், ஒருவழித்தணந்த வழி ஆற்றுதலின்றி வேட்கை மிகுதியால் இரங்குதலாலும் வேறு ஓதப்பட்டது" என்பார் இளம்பூரணர். இது பெருந்திணைக்குரியது என்று இளம்பூரணர் கூற "பாலைக்கண் நெய்தல் மயங்குவது" என்று நச்சினார்க்கினியர் கூறுகின்றார்.

"கிழவனை மகடூஉப் புலம்பெரி தாகலின்
அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்" (தொல்.பொரு. அகத்.நச்.உரை,நூ.17)

என்று கூறுவதற்கு ஏற்ப தலைவி தனிமைத் துயரிலும் காம மிகுதியிலும் புலம்புவது நெய்தல் திணை எனக் கூறப்படுகின்றது.

தலைவியின் தவிப்பு

தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கை மேற்கொண்ட காலத்தில் தலைவனைத் தினமும் கண்டு மகிழ்ந்த தலைவி, தலைவன் பொருள் தேடுதல் பொருட்டு பிரியும் நிலையில் வருந்துகின்றாள். தலைவனை மீண்டும் காண வேண்டும் என்ற தவிப்பு தலைவிக்கு ஏற்படுகிறது. இந்நிலையில் அவன் தினமும் வந்தொழுகும் கடற்கரையை நோக்கி அவள் நெஞ்சம் செல்கின்றது. அங்கு அவனைக் காணாததால் கடல் அலை போல அவளது நெஞ்சம் தடுமாறி நிற்பதை,

"இருங்கழி யோதம்போல் தடுமாறி
வருந்தினை அளியஎண் மடங்கெழு நெஞ்சே" (கலி. 123,18-19)

என்ற இந்த பாடல் வரிகள் சுட்டிக்காட்டுகின்றன. இன்னுவரை இத்தேடலும் ஏக்கமும் தொடர்கிறது எனில் மிகையாகாது.

தலைவியின் மன உணர்வு

தலைவியின் காதலை அவள் வீட்டார் அறிந்து கொள்கின்றனர். இதோடு தலைவனையும் பிரிந்து இருக்கின்றாள். இந்நிலையில் அவளின் அழகு, பொலிவு இழந்து காணப்படுகின்றது. தலைவன் தன்னைப் பிரிந்ததால் வந்த துன்பத்தைஎண்ணி வருந்துகின்றாள். இச்சூழலில் தலைவன் காதல் மகளிருடன் மகிழ்ந்து தலைவியை மறந்து இருக்கின்றான்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

இதனைக் கண்ட தலைவி, அவன் தன் பண்பில் மாறுபட்டாலும் தன்னைச் சிறிதளவாயினும் நினைந்து அன்பு கூர்ந்தாலே போதும், தன்நெஞ்சம் அவன் செய்த துன்பங்களையெல்லாம் மறந்து மகிழும் என்று தலைவனை எண்ணிக் கூறுகின்றாள். இதனை,

"அருளி யவன்சிறி தளித்தக் காலென்
மருளி நெஞ்சம் மகிழ்தலுங் காண்பல்" (கலி. 122,14-15)

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. இந்நிகழ்வு தலைவியின் மன உணர்வுகளை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

தலைவியின் துயரம்

இரவு நேரம் நெருங்க நெருங்கத் தலைவின் வருத்த நிலையும் வளர்ந்து கொண்டே செல்வதை உணர்ந்த தோழி, தலைவி வருந்துவதற்கான காரணத்தை எண்ணிப் பார்க்கின்றாள். மாலைகள் சிவந்த வானத்தால் ஒளியைப் பெறுகின்றன. வண்டுகள் கூட்டம் கூட்டமாக மலர்களில் பாய்ந்து ஊதுகின்றன, தாழைகள் அடர்ந்திருக்கும் சோலைகளில் நாரைகள் ஒலிக்கின்றன, அலைகள் ஒலியடங்கியுள்ளன, மீன்படகுகள் எல்லாம் வேட்டையாடுதலை விட்டுவிட்டன, செவ்வானம் தோன்றியுள்ளது, தன் துணையைச் சிறிது காலங்கூட பிரியாமலிருக்கும் அன்றில் பறவைகள் மணல் மேட்டில் இருக்கும் பனை மரத்தின் உள்மடலில் சேர்ந்து தங்கியுள்ளன, கழியிலுள்ள மலர்களின் இதழ்கள் குவிந்துள்ளன, சோலைகளால் சூழப்பெற்ற வீடுகளில் உள்ள புன்னையின் நறுமணம் மிக்க மலர்கள் பொன் போன்ற நிறத்தைக் கொண்டு விரிந்துள்ளன, பகல் பொழுதை மெல்ல மெல்ல போக்கி, ஞாயிறின் வெம்மை குறைய இரவு வந்தால் இவளின் நிலை என்னாகுமோ என்று தலைவியை எண்ணி இரங்கி உரைக்கின்றாள. இதற்குத் தலைவியானவள்,

முதுமை அடைந்த மரத்தைவிட்டு எப்பொழுதும் நீங்காமல் தங்கும், முழங்கும் வாயையுடைய பேராந்தை விரைந்து குமுறி ஒலிப்பதும், பேய் இயங்குவதுமாகிய பாதி இரவில், மனம் உருகும் துன்பத்தைச் செய்த அன்பில்லாதவனது அறிவுடை மொழியை உண்மை என விரும்பினேன். குற்றம் என்னுடையதேயன்றி அவனுடையதன்று என்று கூறித் தன்னைத்தானே வருத்திக் கொள்கிறாள்.

"மண்டிலம் மழுகு மலைநிறங் கிளர
வண்டினம் மலர்பாய்ந்து ஊத மீமிசைக்
கண்டற் கானற் குருகினம் ஒலிப்பக்
கரையா டலவின் அளைவயிற் செறியத்
திரைபா டவியத் திமிழ்தொழில் மறபபச்
செக்கர் தோன்றத் துணைபுணர் அன்றில்
எக்கர்ப் பெண்ணை அகமடல் சேரக்
கழிமலர் கமழ்முகங் கரப்பப் பொழன்மனைப்
புன்னை நறுவீ பொன்னிறங் கொளாஅ
எல்லை பைப்பயக் கழிப்பி எல்லுற
யாங்கா குவள்கொல் தானே நீங்காத
முதுமரத்து உறையும் முரவுவாய் முதுபுள
கதுமெனக் குழறுங் கழுதுவழங் கரைநாள்
நெஞ்சுநெகிழ் பருவரல் செய்த
அன்பி லாளன் அறிவுநயந் தேனே" (அகம். 260,1-15)

தலைவனின் அன்பில்லாத மொழியை உண்மை என்று நம்பியது தன்னுடைய குற்றம் என்றும் அது தலைவனுடைய குற்றம் இல்லை என்றும் கூறும் தலைவியின் துன்ப நிலையினை இப்பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தலைவி உயிர்வாழ முடியாத நிலை

பொதுவாக ஒரு கருத்தை மற்றவர் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு உலகியல் விவகாரங்களில் பல புள்ளி விவரங்களையும் அறிவின் அடிப்படையில் பற்பலா வாதங்களைக் காட்டலாம். இலக்கியத்தில் உணர்ச்சியின் அடிப்படையிலேயே வாதங்கள் நிகழும். மற்றவரைத் தம் கருத்துக்குத் திருப்ப உணர்ச்சியைச் சற்று மிகுதியாகத்தான் காட்டிப் பேச வேண்டும். இது மனித இயல்பு. ஆகவே மனத்தை மாற்றும் பாடல்களின் உணர்ச்சி மீதுறல் காணப்படுவது இயல்பு. ஆகவே மனத்தை மாற்றும் பாடல்களின் உணர்ச்சி மீதுறல் காணப்படுவது இயற்கையே. இதனடிப்படையில் சங்கப் பாடல்கள் காணப்படுகின்றன.

தான் காதல் கொண்ட தலைவனைச் சந்திக்க முடியாதபடி தலைவியை வீட்டுக்காவலில் வைத்துவடுகிறாள் தாய். இதனால், தன் உள்ளத்தைக் கவர்ந்த தலைவனைக் காணமுடியாமல் தலைவி வருந்துகின்றாள. இந்நிலையில் தலைவியின் உள்ளப்பாங்கினைப் பற்றிப் பாடும் பொழுது புலவர் உணர்ச்சி இழப்பைச் சரிக்கட்ட இயல்வதில் பாடல் உணர்ச்சியின் எல்லைக்கே சென்று விடுகின்றது.

"பூ விடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமொடு
உடனுயிர் போகுக தில்ல, கட னறிந்
திருவேம் ஆகிய உலகத்
தொருவ மாகிய புன்மை நாம் உயற்கே" (குறுந்.57,1-6)

தலைவியின் கூற்றாக அமைந்த இப்படலில் தலைவி, தலைவனைக் காணாமலேயே இறந்துவிடுவேன் என்று கூறுவதாக அமைந்துள்ளது. இவற்றில் நீர்வாழ் பறவையை உவமையாகக் காட்டிப் பிரிந்து வாழ்வதை விட இறப்பதே மேல் என்று தலைவி வருந்துகின்ற செய்தி காணப்படுகின்றது.

தலைவியின் தூக்கமற்ற நிலை

தலைவனைப் பிரிந்திருக்கும் காலத்தில் ஆற்றியிருத்தல்தான் மகளிர் கடமை என்று சொல்லும் தோழியிடம் தலைவி, மான் அடிக்ளைப் போன்ற தாழை மலர்களைப் பெண்கள் தாங்கள் விளையாடுவதற்காக அதனைப் பறிப்பார்கள். அந்தப் பெண்களின் நோக்கம் விளையாட்டு ஒன்றுதான். மலர் வருந்துவது அவர்களுக்குத் தெரியாது. இவ்வாறு மகளிர் மலர்களை வருந்துவது போலத் தலைவன் என்னை வருத்துகின்றான. இதனால் என்னுடைய கண்கள் தூக்கமில்லாமல் திண்டாடுகின்றன என்று கூறுகின்றாள். இதனை,

"மான்அடி அன்ன கவட்டிலை அடும்பின்
தார்மணி அன்ன ஒண்பூக் கொழுதி
ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும்
புள்இமிழ் பெருங்கடற் சேர்ப்பனை
உள்ளேன் தோழி படீஇயர்என் கண்ணே" (குறுந். 243,1-5)

என்று கூறுவதிலிருந்து தலைவனைத் தலைவி சேர்ந்திருக்க முடியாத சூழல், தலைவி வருந்துவதற்கு காரணமாகவும், தூக்கமில்லாமல் வாடுவதற்குக் காரணமாகவும் அமைந்து விடுவதை அறிய முடிகின்றது.

புலம்பலும் வருந்தலும்

தலைவன் போர்ப் பாசறையில் இருக்கின்றான. இந்நிலையில் தலைவியின் மன வருத்தத்தினைக் கண்டோர் சென்று தலைவனிடம் கூறுவர். தலைவனே தலைவியானவள் உன்னை நினைத்து நினைத்து வருந்துகின்றாள். இந்நிலையில் தலைவனின் பிரிவை எண்ணி நிலவினைப் பழித்துரைக்கின்றாள். ஏனெனில் நிலவானது கூடினார்க்கு இன்பமும், பிரிந்தார்க்குத் துன்பமும் தருவதாக புலம்புகின்றாள் என்று கூறுகின்றனர். இதனை,

"பிரிந்தவர்க்கு நோயாகிப் புணர்ந்தவர்க்குப் புனையாகித்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

திருந்தாத் செயிளல்லாமல் இல்லையோ நினக்கு" (கலி. 148,18-19)

என்ற அடிகள் சுட்டிக்காட்டுகின்றன. இதன் மூலம் தலைவி வருந்தும் நிலை கண்டோர் கூற்று மூலம் வெளிப்படுவதைக் காணமுடிகின்றது.

முடிவுரை

நெய்தல் நிலக் கடற்கரைச் சோலையானது பல மரங்கள் அடர்ந்து, உதிர்ந்து மலரும் மெத்தென்ற மணலும் பொருந்திப் பழகுவதற்கு இனிதாக இருப்பதால் கருத்தொருமிக்க தலைவனும் தலைவியும் தம்முள் அளவளாவதற்கு ஏற்ற இடமாகப் பயன்பட்டது. தலைவனைப் பிரிந்த தலைவி தனது மனக்கவலையை வெளிப்படுத்தும் விதமாகவும், தலைவியின் மன உணர்வான இரங்கல் உணர்வினை வெளிப்படுத்தும் விதமாகவும் நெய்தல் பாடல்கள் அமைந்துள்ளன. இக்கட்டுரையானது நெய்தல் நில உரிப்பொருளான இரங்கலும் இரங்கல் நிமித்தம் என்பதன் மூலமாக தலைவியின் பல்வேறு மன உணர்வுகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

துணைநூற்பட்டியல்

1. ஔவை சு. துரைச்சாமிப்பிள்ளை, முனைவர். கதிர்முருகு - சங்க இலக்கியம் மூலமும் உரையும், *அகநானூறு*, சாரதா பதிப்பகம், சென்னை – 60001.
2. ஔவை சு. துரைச்சாமிப்பிள்ளை, முனைவர். கதிர்முருகு - சங்க இலக்கியம் மூலமும் உரையும், *குறுந்தொகை*, சாரதா பதிப்பகம், சென்னை – 60001.
3. ஔவை சு. துரைச்சாமிப்பிள்ளை, முனைவர். கதிர்முருகு - சங்க இலக்கியம் மூலமும் உரையும், *கலித்தொகை*, சாரதா பதிப்பகம், சென்னை – 60001.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

வாழும் போதும்… வாழ்க்கைக்குப் பிறகும்…
While Living... After Living...

முனைவர் இரா. ஏஞ்சல், உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி, (தன்னாட்சி) மதுரை – 18.

Abstract

The paper scrutinies about the virtues to be followed while living and the outcomes after our living in this article. Life is a precious one to live with perfection. Virtues help to lead a good life. There are some works in Tamil Literature such as "Kondraivendan", "Aathichudi", "Moothurai", "Nalvali" deals and teaches moral virtues to lead happy and glorious life. Hence, the article traces the facts and matters regarding the values and the virtues foster ethical life.

Keywords: While and After Living, *Kondraivendan, Aathichudi, Moothurai, Nalvali*

இந்திய ஆயுள் காப்பீட்டுத் கழகத்தின் விளம்பர வாசகமே, "வாழும் போதும்… வாழ்க்கைக்குப் பிறகும்…" என்பது ஆகும். இந்த விளம்பர வாசகத்திற்கான உட்பொருள் யாதெனின், 'ஆயுள் காப்பீட்டுத் கழகம் நல்கும் பல்வேறு வகையிலான காப்பீட்டுத் திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்: இக் காப்பீட்டுக் கழகத் திட்ட சந்தாதாரராக நீங்கள் மாறிய பின்பு ஒரு வேளை உயிரிழப்பு ஏற்பட்டால் கூட, பின்னாளில் அக் காப்பீட்டுத் திட்டத்தொகை உங்கள் குடும்ப உறவினர்களுக்கு உதவும்' என்பதாகும். இந்த விளம்பரத்திற்கான உட்பொருள் பொருள்சார் சிந்தனைத் தூண்டலாக அமையக் காணலாம். ஆனால் இதே கருத்தை இலக்கிய அடிப்படையில் நாம் ஆய்விற்கு உட்படுத்தினோம் என்றால் இலக்கியங்கள் நம் வாழ்வின் இம்மைக்கும் மறுமைக்குமான வாழ்வியல் அறவிதிகளை நமக்குக் கற்றுத் தருகின்றன எனும் பொருளைத் தருவதாய் அமையக் காணலாம். அந்த அடிப்படையில் நீதி நூல்கள் வெளிப்படுத்தும் வாழ்வியல் அறநெறிகள் நம் வாழ்வின் வளமைக்குக் காட்டும் படிப்பினைகளாக அமையுமாற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

'ங' – நெறி

உயிரெழுத்துக்கள் - 12, மெய்யெழுத்துக்கள் - 18, உயிர்மெய் எழுத்துக்கள் - 246, ஆய்த எழுத்து – 1 ஆக மொத்தம் - 247. இவற்றுள் 'ழ' சிறப்பெழுத்து என்பதும் சில எழுத்துக்கள் பல்வேறு வகையான 'தனி' எழுத்துச் சிறப்புடையவை என்பதும் நம் தமிழ்மொழியின் பெருமையையும் தமிழ் எழுத்துக்களுக்கே உரித்தான தனிச்சிறப்பையும் காட்டும். அந்த அடிப்படையில் 'ங'என்னும் எழுத்து குறித்த சிறப்புச் செய்தியை ஆத்திசூடி பதிவு செய்துள்ளது. ஔவையின் ஆத்திசூடியில் இடம்பெறும், "ஙப் போல் வளை" (ஆத்திசூடி, பா. எ.15) என்னும் அடியில் 'ங' எழுத்தின் சிறப்புக் குறித்துச் சுட்டப்படுகிறது. இதன் பொருள் யாதெனின் ஙகர எழுத்தைப் போல உன் சொந்தங்களைத் தழுவிக் கொள்ள வேண்டும் என்பதாகும். கூட்டுக்குடும்பம் சிதைந்து என்று தனிக்குடும்ப வாழ்க்கை பரவத் தொடங்கியதோ, அன்றிலிருந்தே தன்னலம் பெருகலாயிற்று எனலாம். ஏனெனில் ஒரு காலத்தில் நம் தமிழ்ப்பண்பாடும் கலாச்சாரமும் உலகளவில் முன்னுதாரணமாய்த் திகழ்ந்தது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

ஆனால் இன்று அதன் எச்சங்களே மிஞ்சியுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. அறிவியல் முன்னேற்றம் அடைந்து அறவியல் புறந்தள்ளப்பட்டு அன்பியல் கண்டு கொள்ளப்படாததன் விளைவே உறவு சிதையக் காரணமாகி விட்டது. உறவு பேணுதலின் சிறப்பை,

"குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை" (கொன்றை வேந்தன் பா. எண். 18),

"சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்" (கொன்றை வேந்தன் பா. எண். 30)

என்னும் பாடல் அடிகள் உணர்த்தும். அவ்வாறு நாம் நடந்து கொள்ளாவிடின் அதாவது உற்றார் உறவினருடன் நாம் இணங்கி நடக்காவிடின் நேரும் அவலத்தை,

"ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்" (கொன்றை வேந்தன் பா. எண். 6)

என்று சற்றுக் கடினமாகக் கருத்தை அறிவுறுத்தும் தொனியில் நீதிஇலக்கியம் பதிவு செய்கிறது. மண்ணிற்குள்ளே புதைந்து விளையும் கிழங்கு வகைகளின் புற மண்ணைத் தட்டி விட்டு, அவற்றை உண்ணும் பயன்பாட்டிற்கு நாம் பயன்படுத்தல் போல உறவுகளின் குறைகளைப் பொருட்படுத்தாது உறவுகளைப் பேணவேண்டும் என்பதை உணர்த்துவதாய் இக் கருத்தியல் அமைகிறது.

கோது - அகல் நெறி

"கோதாட் டொழி" (ஆத்திசூடி, பா. எண் 42) என்கிறது ஆத்திசூடி. கோது என்றால் குற்றம். ஆட்டு என்றால் விளையாட்டு. ஒழி என்றால் நீக்கி விடு என்பதே இதன் பொருள். 'ஓடி விளையாடு பாப்பா' என்றான் பாட்டுக்கொருபுலவன் பாரதி. ஆனால் 'கோதாட்டொழி' என்கிறது ஆத்திசூடி. இன்றைய காலச் சூழலில் சுட்டப்படும் கோதாடு எதுவெனின் நம் கைகளில் தவழும் கைபேசியே! ஏனெனில் கைபேசியின் பயன்பாடு அதற்கான நோக்கப் பயன்பாட்டை நீக்கி, தேவையற்ற தாக்கப் பயன்பாட்டை விதைத்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. குழந்தைகள் முதல் பெரியோர் வரையிலுமாக கைபேசி மாயவலைக்குள் சிக்குண்டோராய், கணினி உலகினைக் கைக்குள் அடக்கி வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றனர். கைபேசி கதிரியக்க வீச்சினால் உடல்நலமும் இயற்கை வளமும் பாதிக்கப்படுகிறது. கைபேசிகள் இயங்கக் காரணமாய் இருக்கும் கதிரியக்கக் கோபுரங்களில் இருந்து வெளிவரும் கதிர்கள் சூழல் மாசுபாடு அடையக் காரணமாய் உள்ளன. குறிப்பாய் பறவையினங்கள், சிட்டுக்குருவி இனங்கள் காணாமல் போய்க்கொண்டிருக்கின்றன. இம் மாய உலகில் இருந்து மீண்டு வர தனித்தனி மனித முயற்சியே தேவை. அதுவே இச்சிக்கலுக்கான தீர்வாய் அமையும்.

தொன்மை - நெறி

தொன்மை எனின் பழமை. பழமையான பலவற்றை, பல்வேறு நிலைகளில் நாம் இழந்து விட்டோம். அதன் விளைவுகள் இன்று பெரும் அக, புற பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன அல்லது ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இன்றைய உணவு, உடை, உறைவிடம் இவற்றுடன் ஒப்பிட்டு நோக்கிடின் நம் பாரம்பரியச்சிதைவு, பண்பாட்டுச்சிதைவு இவற்றிற்கான காரணிகளாக நாம் இருப்பதை உணர முடியும். துரித வகை உணவுகள் நமக்குக் கெடுதியையே விளைவிக்கின்றன என்று தெரிந்தாலும் கூட, வீதிக்கு வீதி துரித உணவுத் தள்ளுவண்டிக்கடைகள் பெருக்கம் அதிகமாகிக் கொண்டிருக்கத்தான் செய்கின்றன. 'பழமைக்குத் திரும்புவோம்' எனும் கருத்து 'ஒலி'களாக மட்டுமே ஒலித்துக் கொண்டிருக்கின்றன. புலனங்களில் மட்டும் பழமையின் பெருமைகளைப் பகரவும் பகிரவும் செய்கிறோம். ஆனால் பயன்பாட்டில் நடைமுறைப்படுத்துகிறோமா? என்பதைச் சிந்தித்து, சிந்தித்தவற்றை பழகியலுக்கு உட்படுத்தினால் மட்டுமே பாழாகிப் போன, பாழாகிக் கொண்டிருக்கும் தொன்மைகளுக்கு மீட்டுருவாக்கம் கொடுக்க முடியும். இக் கருத்தையே, "தொன்மை மறவேல்" (ஆத்திசூடி, பா. எண். 64) எனப் பதிவு செய்துள்ளது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தெய்வநெறி

கடவுள் இருக்கின்றாரா? இல்லையா? என்பது அவரவர் தனிப்பட்ட கருத்தியலுக்கு உட்பட்டது. ஆனால் நமக்கு அப்பாற்பட்ட சக்தி நம்மை ஆட்டுவிக்கிறது என்பது உண்மையே! நீதி நூல்கள் கடவுள் நம்பிக்கை குறித்த செய்தியைப் பதிவு செய்துள்ளன.

"தெய்வம் இகழேல்" (ஆத்திசூடி, பா. எண். 64)

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" (கொன்றைவேந்தன், பா.எண் 2)

"தெய்வம் சீறின் கைதவ மாளும்" (கொன்றைவேந்தன், பா.எண் 43)

"வையம் தோறும் தெய்வம் தொழு" (கொன்றைவேந்தன், பா.எண் 89)

இக்கருத்துக்களுக்குச் சிந்தனை வடிவம் கொடுத்துச் சிந்தித்துப் பார்த்தால் உண்மையைக் கண்டுணர முடியும். பழங்கால இயற்கை வழிபாட்டு முறையுடன் இவற்றை நோக்கும் போது தெய்வநெறிக்கோட்பாடு மனிதனை நன்னெறிப்படுத்தும் சிந்தனைக் கோட்பாடாக அமையக் காணலாம். இத்தெய்வ நெறிக் கோட்பாடே மனிதனை நன்னெறிக்கு இட்டுச் செல்கிறது. இந்த தெய்வ நெறிக்கோட்பாடே நாம் செய்யும் நல்லவையோ அல்லவையோ நமக்கும் நம் தலைமுறைக்கும் நல்வினையாய் அல்லது தீவினையாய் அமையும் என்ற கருத்தை நமக்குள் விதைக்கின்றன. ஆனால் நவீனத்திற்கும் அறிவியலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் இன்றைய காலகட்டத்தில் தெய்வ வழிபாட்டு முறைகளும் தெய்வ நம்பிக்கைகளும் கூட முரண்படுகின்றன. தெய்வத்திற்கே விலைபேசும் கூட்டம் ஒருபுறம். தெய்வச்சிலைகளைக் கடத்தும் கூட்டம் ஒருபுறம், கோவில்களை இடிக்கும் கூட்டம் ஒருபுறம், கோவில் வழிபாடுகளில் சாதி, இனப் பாகுபாடு காட்டும் ஒரு புறம் என்று இருப்பினும் கூட,

"நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யெனப் பெய்யும் மழை" (மூதுரை வாக்குண்டாம்,பா.எண்,10)

என்னும் பாடல் அடிகள் சுட்டும் செய்தி போல,யாரோ ஒரு நல்லவர் பொருட்டேனும் தெய்வம் இவ் உலகைக் காக்கிறது என்ற சிந்தனையை இப் பாடல் முன் வைக்கிறது. ஏனெனில், 'அன்பே கடவுள்' என்கிறது கிறித்தவம். 'அன்பே சிவம்' என்கிறது இந்துத்துவம். 'அன்பே உருவானவன்' என்கிறது இஸ்லாமியம். எல்லாச் சமயங்களும் கற்பிக்கும் படிப்பினைகள் "தீயசெயல்களை நீக்கி நல்ல செயல்களைச் செய்" என்பதே!

"புண்ணியமாம் பாவம்போம் போனநாள் செய்தவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் - எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத்தோர் சொல்லும்
தீதொழிய நன்மை செயல்." (நல்வழி, பா. எண் 1)

அதாவது தீய செயல்களை விலக்கி நல்ல செயல்களைச் செய் என்பதே எல்லாச் சமயங்களும் கூறும் போதனையாகும். இதனை உணர்ந்து வாழும்போது தெய்வ நம்பிக்கையும் மனித மாண்புகளும் உயர்வதோடு மனிதமும் மலரும்.

இயற் 'கை' நெறி

இயற்கையோடு இயைந்ததே வாழ்க்கை. இதனை மாற்ற முற்பட்டதன் விளைவு அல்லது மாற்ற முற்படுவதன் விளைவே காலநிலை மாற்றம், புயல், மழை, வெள்ளம், நிலநடுக்கம் போன்ற எதிர்பாரா இயற்கைப் பேரிடர்கள் எனலாம். இயற்கையை மாசுபடுத்துவதன் விளைவால் ஐம்பூதங்களும் மாசடைகின்றன. பழங்காலத்தில் மனிதன் இயற்கையோடு கொண்டிருந்த உறவே மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவுக்கும் மனித மதிப்பீடுகளுக்கும் வலு சேர்த்தது. அதனால் தான் ஈகையறத்தின் அடைமொழியாக, 'மாரியன்ன வண்கை' என்னும் புகழ்மொழி அடைமொழியாய் உருப்பெற்றது,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

ஏனெனில் இயற்கை தன் நிலையில் திரியும் போது மனித மாண்பும் மதிப்பிழக்கிறது. இக்கருத்தையே, "வானம் சுருங்கிடில் தானம் சுருங்கும்" (கொன்றைவேந்தன், பா.எண். 82) என்னும் பாடலடி பதிவு செய்கிறது. எனவே இயற்கை அறம் பேணி சூழலியல் சிந்தனையை வளர்த்து மனித மதிப்பீடுகளை மையப்படுத்தி வாழ வேண்டும் என்ற கருத்தியலை முன்வைக்கிறது.

தொழில் நெறி

'செய்யும் தொழிலே தெய்வம்' என்பார். தொழில்களில் சிறந்த தொழில் பயிர்த்தொழிலே. ஆனால் இற்றைய நாட்களில் விவசாயிகளின் வாழ்க்கை போர்க்களமாக மாறிக் கொண்டிருக்கிறது.

"பூமி திருத்தியுண்" (ஆத்திசூடி, பா. எண். 82)

"பருவத்தே பயிர் செய்" (ஆத்திசூடி, பா. எண். 22)

"ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே – ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு" (நல்வழி பா. எண்.12)

என்பவை நீதிநூல்கள் வெளிப்படுத்தும் பயிர்த்தொழில் குறித்த பதிவுகள். இன்று விவசாய நிலங்கள் வீட்டடி மனைகளாகவும் அடுக்ககங்களாகவும் தொழிற்கூடங்களாகவும் மாறி விட்டன. பதினெட்டாம் நூற்றாண்டு வரை நம் மண்ணும் பயிரும் வளமையுடன் திகழ்ந்தன. பெருகி வரும் மக்கள் தொகைப்பெருக்கமும் விளைநிலங்கள் குறைந்து விடக் காரணமாயிற்று. கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள் நாம் மேற்கொண்ட பசுமைப்புரட்சி வேளாண்மையில் இரசாயன உரம், பூச்சிமருந்து, தனிப்பயிர் சாகுபடி அதிகமாகி கடைசியில் மண்ணை உயிரற்றதாக்கி விட்டது. உலகில் மொத்தம் 1,00,000 நெல்வகைகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 30,000 வகை நெல் வகைகள் பழங்குடி மக்களால் பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் நம்முடைய மெத்தனமான போக்கினால் நெல் வகைகள் அழிந்து விட்டன.

மேலைநாடுகளில் தடைசெய்யப்பட்ட மீதைர் பாரத்தியான் என்று தடைசெய்யப்பட்ட பூச்சிமருந்து இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு 300 டன்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிலோட்டன், ஹெப்டாக்லர் போன்ற ரசாயனங்கள் மேலைநாடுகளில் தடை செய்யப்பட்டவை. ஆனால் இவற்றைத் தயாரிக்கும் அமெரிக்கக் கம்பெனிகள் அவைகளை மூன்றாம் உலக நாடுகளில் கொட்டுகின்றன. நம் தனிப்பட்ட வளர்ச்சி நிலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் நாம் வேளாண்மைத்துறை சார் செயல்களுக்கு முன்னுரிமை கொடுத்திட முன்வரல் வேண்டும். வேளாண்மைப் படிப்பிற்கு முன்னுரிமை தந்து இளைய சமுதாயம், மாற்றம் படைத்திட முன்வரல் வேண்டும். இப்படியான மாற்றங்களால் மட்டுமே பயிர்த்தொழில் வருங்காலத்தில் ஓரளவாவது காக்கப்பட வாய்ப்புள்ளது. அவ்வாறில்லையெனின் பயிர்த்தொழில் மட்டுமல்லாது மனித குலமும் கேள்விக்குறியாகவும் ஆச்சரியக்குறியாகவும் மாறி விடும் என்பதில் ஐயமில்லை.

இலக்கியம் என்னும் சொல்லாட்சி இலக்கு + நெறி எனப்பொருள் தருதல் போல, நல்இலக்குகளை அடைவதற்கான நெறிகளையும் கற்றுத் தருகிறது. இந்நன்னெறிச் சிந்தனைகளை சங்க இலக்கியம் முதலாக, தற்கால இலக்கியம் ஈறாகப் பதிவு செய்துள்ளன. இவ்விலக்கிய ஒழுக்கவிதிகளைப் பின்பற்றி வாழ்ந்திட்டால் மட்டுமே, தமிழன் என்று தலைநிமிர்ந்து, மனிதன் என்னும் மாண்புடையவனாக வாழ முடியும். வெறும் கட்டுரைப் பதிவுகளும் கருத்தரங்க அமர்வுகளும் மட்டும் வாழ்வியல் நெறி கூறாது. மாறாக

"உள்ள தொழிய ஒருவர்க் கொருவர்சுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில் - வெள்ளக்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

கடலோடி மீண்டும் கரையேறி னாலென்
உடலோடு வாழும் உயிர்க்கு" (நல்வழி, பா.எண்.6)

அதாவது இவ்வுலகில் அவரவர்க்கென அமைந்த இன்பத்தை மட்டுமே அவரவர் அனுபவிக்க முடியும் என்பதை உணர்ந்து அழுக்காறு, அவா, அச்சம் அகற்றி நல் மனசாட்சி படைத்தோராய் வாழ்ந்தால் எந்நாளும் இன்பமே! துன்பம் இல்லை.

நூற்பட்டியல்

1. *அவ்வையார் பாடல்கள்*, வானதி பதிப்பகம், 1994.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

சிறுபஞ்சமூலம் காட்டும் பெண்ணியல்புகள்
Qualities of Women from *Sirupanchamoolam*

முனைவர். பெ. கண்மணி, உதவிப் பேராசிரியர்,
தமிழ்த் துறை, அரசு மகளிர் கல்வியியல் கல்லூரி, கோவை.

Abstract

The paper deals about the qualities of women in the work "Sirupanchamoolam". It describes about the facts that qualifies the quality of woman. Woman is the central core of Tamil life. Women are often given very high status. In all of the ancient Tamil literary works, woman are shown in a best and befitting manner. The paper evinces about the five who saves woman, women ethics, chaste women, awareness of woman, evil woman, family woman and those who want to be intelligent. Hence, the article outshows the facts regarding the values and the virtues for woman to foster ethical life.

Keywords: Qualities, Women, *Sirupanchamoolam,* Virtue

முன்னுரை

"எங்கெங்கு காணினும் சக்தியடா" என மகாகவி பாரதியார் முழக்கமிட்டது போல எல்லா இடத்திலும் நிறைந்துள்ள பெண்ணையும், பெண் இயல்புகளையும் எவரும் எளிதில் மறுத்துவிட முடியாது. 'சக்தியின்றி சிவனில்லை' என்ற சொல்வழக்கும் இதனை உணர்த்துவதாகவே அமைந்துள்ளது. இலக்கிய உலகில் பெண் இயல்புகள் பற்றி பேசும் இலக்கியங்களே அதிகம் எனலாம். "மாசல்சீர்ப் பெண்ணினுள் கற்புடையாள் பெற்றார், சாவா உடம்பெய்தினார். – (திரிகடுகம் பா.எண்.16)" என்ற பாடல் வரிகள் மாசில்லாத பெண்களுள் சிறந்த கற்புடைய பெண்ணை மனைவியாகப் பெற்றவர் எக்காலத்தும் இறவாத புகழுடம்பை பெற்றவராவார் எனக் கூறுகிறது. பெண் தன்னோடு, தன்னைச் சார்ந்தவர்களையும் உயர்த்தும் உயரிய எண்ணம் கொண்டவள். தன் அன்பறிவினால் அனைத்தையும் வெற்றி கொள்ளும் இயல்பினை கடல் ஆழமென கொண்டிருக்கும் தன்மை பெற்றவள். அத்தகைய பெண்களின் இயல்பு பற்றி சிறுபஞ்சமூலம் கூறும் கருத்துகளை ஆய்வதே கட்டுரைப் பொருண்மையாம்.

சிறுபஞ்சமூலம்

மனித வாழ்க்கைக்கு பயன்படும் கருத்துகளை உள்ளடக்கிய சிறுபஞ்சமூலம் பெயரில் சிறிதெனினும் பொருளில் மிகப் பெரியதாகும் பதார்த்த குண சிந்தாமணி என்ற நூலும் பொருட்டொகை நிகண்டும் சிறுவழுதுணை நெருஞ்சி, சிறுமல்லி, பெருமல்லி கண்டங்கத்தரி ஆகிய ஐந்து வேர்களும் சேர்ந்துதான் சிறுபஞ்சமூலம் என்று கூறுகின்றன உடல் நோய் தீர்க்கும் இவ்வைந்து வேர்களைப் போல், மனநோய் தீர்க்கும் மருந்தாக இந்நூல் காணப்படுகிறது சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற இலக்கணவிதியின் அடிப்படையில் நான்கு வரி பாடலில் ஐந்து கருத்துகளை கொண்ட சிறுபஞ்சமூலம் வாழ்வியல் வழிகாட்டி நூலென கொள்ளத்தக்க சிறப்புடையதாகும். மல்லிவர் தோள் என்பதால் மற்போரில் சிறந்து விளங்கிய வீரனாக அறியப்பட்ட காரியாசன் என்பவரே சிறுபஞ்சமூலத்தின் நூலாசிரியராவார்.

பெண்மைக்கழகு

தன்னை அடக்கியாளும் தன்மை கொண்ட பெண் போற்றுத்தலுக்குரியவள். மனமடக்க

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

கற்றால் மற்றவை தானே அடங்கும் என்ற வித்தை தெரிந்தவள் பெண். இருபினும் பெண்களுக்கு சிறப்பினைத் தருவன பற்றி *சிறுபஞ்சமூலம்,*

"வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித் - திருவாக்குந்
தெய்வதையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு" (பா.எண். 43)

என்ற பாடலில் கணவரது வருவாய் அறிதல் அதற்கேற்றவாறு செலவு செய்தல், சுற்றத்தினர் பயந்து ஒதுங்காமல் தம்மை விரும்பும்படி நடந்து கொள்ளுதல், விருந்தோம்மல், செல்வம் தருகின்ற தெய்வத்தை வழிபாடு செய்தல் ஆகிய ஐந்தினைக் குறிப்பிடுகிறது. "வினையே ஆடவர்குயிரே" – என வினைமேற்சென்று பொருள் தேடுதல் ஆண்மகனுக்குரிய ஒன்றாக கருதப்பட்டால் பெண்களின் சிறப்புகளுள் ஒன்றாக கணவனின் வருவாய்கேற்ற செலவு செய்தல் அமையப் பெற்றிருக்கலாம். பெண்கள் வீட்டிலே இருக்கவேண்டிய சூழலால் சுற்றம் தழுவலும், விருந்தோம்பலும், தெய்வவழிபாடும் சிறப்பென வலியுறுத்தப்பட்டதாக இருக்கலாம். எவ்வாறு இருப்பினும் மேற்கூறிய ஐந்து பண்புகளும் பெண்மைக்கு அழகு சேர்க்கும் நற்பண்புகளேயாம் பெண்கள் இல்லத்திலே இருந்த நிலை தற்போது மாறி பொருளீட்டும் பணி மேற்கொண்டாலும் இப்பண்புகளை பேணிக் காத்தல் இனிய வாழ்க்கைகான அடித்தளமாக அமையும்.

பெண்ணை காக்கும் ஐவர்

அன்புக்கும், பொறுமைக்கும் இலக்கணமாக அமையும் பெண்ணின் கற்பு காக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஒழுக்கப் பண்பின் முதல் அடையாளமாகக் கருதப்படும் கற்பினை காத்துக் கொள்ளும் பொறுப்பு முதலில் அப்பெண்ணுக்கே ஆகும்.

"சிறைக் காப்புவென் செய்யும் - பெண்டிர்க்கு
மனக் காப்பே காப்பு" –(குறள்)

ஏன திருவள்ளுவர் பெண்ணின் கற்பை மனக்காப்பென கூறியுள்ளமை இங்கு நினைவு கூறத்தக்கது. இருப்பினும் சில வேளைகளில் கற்பினை காத்துக் கொள்ள இயலாத நிலை பிறரால் ஏற்படின் அவ்வமயம் அப்பெண்ணின் கற்பினை காக்க வேண்டியவர் எவர்ரெவர் என்பதை சிறுபஞ்சமூலம் கூறுகிறது. அதாவது ஒரு பெண்ணின் கற்புக்கு அழிவு வராமல் காக்கத்தக்கவர். 1.தன்னைக் கொண்ட கணவன், 2. கணவனுடன் பிறந்தவன், 3.தன்மாமன், 4. மகன், 5.தந்தை என ஐவரென்பதை,

"கொண்டான் கொழுநன் உடன்பிறந்தான் தன்மாமன்
வண்டார்பூந் தொங்கல் மகன்தந்தை – வண்தாராய்!
யாப்பார்பூங் கோதை அணிஇழையை நன்கியையக்
காப்பார் கருது மிடத்து." (பா.எண். 54)

என்ற பாடல் வழி அறியலாம். பெண் தன் கற்பை இழக்க நேரிடும் துன்பச் சூழலில் காக்க வேண்டிய பொறுப்பான உறவு முறைகளை சிறுபஞ்சமூலத்தில் காணமுடிகிறது. இதன்வழி பெண்களுக்கான பாதுகாப்பு உணர்வு கணவன் தவிர மற்ற உறவுகளாலும் கிடைக்கப் பெறும் தன்மை அக்காலத்தே வழக்கில் இருந்தது தமிழர் பண்பாடினை பறைசாற்றுவதாகும்.

பெண்ணறங்கள்

எவ்வுயிர்க்கும் எவ்வித தீங்கும் செய்யாத செயல்களே அறச் செயல்கள் என சான்றோர்களால் கூறப்படுகிறது. மனிதர்கள் யாவரும் பிறர்க்குதவுதல் பொய்சொல்லாதிருத்தல், தீங்கிழைக்க எண்ணாதிருத்தல் போன்ற அறச் செயல்களை தத்தமக்கு இயன்ற அளவுக்கு மேற்கொண்டு வருகின்றனர். அவ்வகையில் பெண்களுக்கென சில அறங்கள் சிறுபஞ்சமூலத்தில் குறிப்பிட்டுள்ளது. இக்கருத்தினை,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

"கலங்காமைக் காத்தல் கருப்பம் சினதந்தால்
இலங்காமை பேரறத்தால் ஈற்றும் - விலங்காமைக்
கோடல் குழவி மருந்து வெருட்டாமை
நாடின் அறம்பெருமை நாட்டு" (பா.எண். 74)

என்ற பாடலில் காணலாம். அதாவது வயிற்றுனுள் கருவினை அழியாமல் பாதுகாத்தல, கரு சிதைந்தால் அறத் தன்மையால் பிறர் அறியாமல் மறையப் பெயர்த்து வாங்குதல், குழந்தையைப் பாதுகாத்தல், அதற்கு நோய்வரின் மருந்து கொடுத்தல், குழந்தையை அச்சுறுத்தாமல் வளர்த்தல் ஆகிய ஐந்தும் பெண்மைக்கும், தாய்மைக்கும் உரிய அறங்களாக கூறப்பட்டுள்ளமை அறியப்படுகிறது. மேலும்,

"ஈன்றெடுத்தல் சூல் புறம் செய்தல் குழவியை
ஒன்றெடுத்தல் சூ லேற்ற கன்னியை – ஆன்ற
அழிந்தாளை இல்வைத்தல் பேரறமா ஆற்ற
மொழிந்தார் முதுநிலார் முன்பு" (பா.72)"

என்ற பாடல் வழி, தானீன்ற குழந்தையை தானே பாதுகாத்து வளர்த்தல், தான் கொண்ட கர்ப்பத்தை பாதுகாத்தல், வளர்ப்பவர் குழந்தையை கண்டெடுத்து வளர்த்தல், கர்ப்பவதியையும், மிகவும் அழிந்தவளையும் தன்னுடைய இல்லத்தில் வைத்து பாதுகாத்தல் இவ்வைந்தும், நூலறிவுள்ள சான்றோர்களால் போற்றிக் கூறப்பட்டுள்ளன என்பதும் அறியப்படுகிறது. இவ்வாறாக பெண்கள் பின்பற்ற வேண்டிய அறங்கள் பற்றிய செய்திகள் சிறுபஞ்ச மூலத்தில் காணப்படுவது இன்றளவும் பெண்களால் மறுக்க இயலாத அறங்களே ஆகும். இத்தகு அறவாழ்வினை அறிந்து வாழ்வதனை நடத்தும் பெண்கள் மக்கட்பேறால் மகிழ்ச்சியும், மற்ற அறங்களால் மன நிம்மதியும் கொண்டு வெற்றிப் பாதையிலே பயணிக்கும் பாக்கியம் பெற்றவராவர்.

கற்புடை பெண்

காலம் நாகரீகமாக மாறினாலும் கற்பு தன் பண்பை மாற்றிக் கொண்டதில்லை. பெண்களின் சிறப்பு அழகா? கற்பா? என்ற வினா எழுப்பினால் கற்பு என்பதே அனைவரின் விடையாக அமையும். கற்புடைய பெண் தன் கணவர்க்கு அமிர்தம் போன்றவள் என்பதனை, "கற்புடை பெண்ணமிர்து" (பா.எண.4) என்ற சிறுபஞ்சமூல வரிகளில் காணலாம். மேலும், "கொண்டான் வழியொழுகல் பெண்மகள்" (பா.எண்.15) என்ற வரிகள் பெண் தன்னை மணந்து கொண்டவனின் சொற்படி. கேட்டு அதன்படியே வாழ்வினை மேற்கொள்ளுதலே பெண்ணிற்குரிய இயல்பும் பண்பும் என்ற நியதியை உணர்த்துவதாக அமைந்துள்ளது. தன்மை மணம் புரிந்த மணவாளன், மனமறிந்து நடப்பதும் கற்பு நிலையாகவே கருதப்பட்டுள்ளது.

பெண் விளிப்பு

பெண் பிறப்பு மென்மையும், இரக்கமும் அன்பும் இயற்கையிலே கிடைக்கப்பெறும் தன்மை கொண்ட காரணத்தினால் சொல்ல கருதிய கருத்துகளை பெண்களை விளித்து கூறுகிறது *சிறுபஞ்சமூலம்.*

"பெண்ணின் இடைதரிக்கு நுன்மை வனப்பாகும்" (பா. எண். 7)
"கண்டல் அவிர்பூங் கதுப்பினாய்" -(பா.எண். 14)
"வாள் சான்ற கூந்தல்" (பா.எண். 46)
"பொன்பெறும் பூஞ்சுணங்கின் மென்முலையாய்" (பா.எண்.48)
"யாப்பார்பூல் கோதை அணி இழைய" (பா.எண். 54)
"கொம்பு மறைக்கும் இடையாய்" (பா.எண். 89)
"மைத்தக நீண்ட மலர்க் கண்ணாய்" (பா.எண்.62)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

போன்ற பெண்ணை விளித்து கூறும் பாடல்கள் சிறுபஞ்சமூலத்தில் காணப்படுவதை அறியலாம்.

தீயபெண்களின் தீத்தொழில்

அன்பையும் பண்பையும் உள்ளமதில் கொண்ட பெண்கள் பெருமளவு வாழும் இவ்வுலகில் தீய குணங்களைக் கொண்ட பெண்களும் வாழ்வது வெட்கத்திற்குரியது. தீய குணங்களோடு உலாவுவது உயிரற்ற சடலத்தின் மதிப்பினைகூட பெறத் தகுதியற்ற நிலையாகும் இத்தகு தீய குணங்கள் கொண்ட தீத்தொழில்கள் குறித்து சிறுபஞ்சமூலம்,

> "கள்ளுண்டல் காணில் கணவன் பிரிந்துரைதல்
> வெள்கில ளாய்பிறர் இல்சேறல் - உள்ளிப்
> பிறர்கருமம் ஆராய்தல் தீப்பெண் கிளமைத்
> திறமதுதீப் பெண்ணின் தொழில்" (பா.எண். 25)

என்ற பாடலில் கள்ளுண்டு களித்தல், தன் கணவனது சேர்க்கைளை பிரிந்து வாழ்தல், நாணமற்றவளாய் பிறர் இல்லத்திற்குச் செல்லுதல், பிறர் கருமத்தை நினைத்துப் பிறருடன் ஆராய்தல், தீய பெண்களோடு இணங்குதல் போன்ற ஐந்தும் தீய பெண்களுக்குரிய தீத் தொழில்களாகக் குறிப்பிடுகிறது. பெண்களின் இயல்பினையும், அறங்களையும் வெகுவாகக் கூறிய சிறுபஞ்சமூலம் தீயபெண்களின குணநலன்கள் குறித்தும் குறிப்பிட்டுள்ளது அறிய தக்கதாகும். மேலும், அடிமையாக பெண்கள் வாழ்ந்திருப்பதினையும் சிறுபஞ்சமூலம் காட்டுகிறது.

> "தொழீஇ அடவுண்ணார் தோழரில் துஞ்சார்
> வழீஇய பிறர்பொருளை வெளவார்- கெழீஇக்
> கலந்தபின் கீழ்காணார் காணாய் மடவாய்
> புலந்தபின் போற்றார் புலை" (பா.எண். 38)

என்ற வரிகள் (தொழீ – தொழுத்தை, அடிமையவள்) அடிமைப்பெண் சமைத்த உணவை அறிவுடையார் உண்ணமாட்டார் அறிவுடையாரை உயர்வாகக் கூறிய இடத்து சமையல் தொழில் செய்யும் பெண்களை இழிவாகக் கருத இடமளிப்பது வருத்தத்திற்குரியது. இதன் வாயிலாக பெண்கள் சமையல் தொழில் மட்டும் செய்யும் அடிமைகளாக நடத்தப்பட்டிருக்கும் செய்தியும் கிடைக்கிறது.

அறிவுடையார் வெறுக்கும் செயல்கள்

எதனையும் ஆராய்ந்து மேற்கொள்ளும் தன்மையுடைய அறிவுடையார் தம் சான்றாண்மைக்கு தீங்கென நினைப்பவற்றை சட்டென மறுத்தும், வெறுத்தும் விடுவர். பெண்களைப் பொறுத்தவரையில்,

> "பூவாதான் பூப்புப் புறங்கொடுத் தான் இலிங்கி
> ஓவாதாள் கோலம் ஒருபொழுதும் - காவாதான்
> யார்யார் பிறர்மனையாள் உள்ளிட்டில் வைவரையும்
> சாரார் பகைபோல் சலித்து" (பா.எண்.42)

என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளபடி பருவமடையாத கன்னி, மாதவிடாய் நீங்கியவள், தவமுடையவள், எக்காலத்தும் ஒப்பனை செய்தலில் நீங்காது தன் கற்பனைக் கலக்காத பொதுமகள், பிறர் மனையாள் என்று சொல்லப்பட்ட பெண் ஆகியோரை அறிவுடையோர் பகைவர் போல வெறுத்து அவர் சேரமாட்டார் என்பதாம். மேலும்,

> "அரம் போல் கிளையடங்காப் பெண்வியக்கத் தொண்டு
> மரம் போல் மகன் மாறாய் நின்று – கரம் போலக்
> கள்ள நோய் காணும் அயல் ஐந்தும் ஆகுமேல்
> உள்ளநோய் வேண்டா உயிர்க்கு" (பா.எண். 62)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்ற வரிகளில் அரம்போலத் தன்னைத் தேய்கிற உறவும், அடங்காத மனைவியும் உள்ளக் கவலையினை அதிகமாக ஏற்படுத்துவர் என்பது கூறப்பட்டுள்ளது.

"வரைவில்லாப் பெண்வையார் மன்னைப் புற்றேறார்
புரையில்லார் நள்ளார் போர் வேந்தன் - வரைபோல்
கடுங்களிறு விட்டுழிச் செல்லார் வழங்கார்
கொடும்புலி கொட்கும் வழி" (பா.எண். 80)

என்ற வரிகள் மூலம் சான்றோர்கள் மணஞ்செய்தல் இல்லாப் பொதுமகளைத் தமக்கு மனைவியராகத் தம் வீட்டில் வைத்துக் கொள்ளமாட்டார்கள் என்பதும் அறியப்படுகிறது. "பெண் என்றால் பேயும் இரங்கும்" என்ற பழமொழி பெண்களின் நடத்தையால் சான்றோரிடத்து பொய்த்துப் போன நிலையினையும் சிறுபஞ்சமூலத்தில் காணமுடிகிறது.

இல்லறத்தில் பெண்

"புல்லறத்தின் நன்று மனை வாழ்க்கை போற்றுடைத்தே
நல்லறத்தா ரோடு நடக்கலாம்.." (பா.எண்.93)

என்ற வரிகள் மூலம் மனைவியோடு கூடிவாழும் இல்லற வாழக்கை புல்லிய துறவறத்தை விட மேலானது எனக் கூறப்பட்டது பெண்ணிற்கு பெருமை சேர்ப்பதாகும். உலகியல் விருப்பு வெறுப்புகளை கடந்து கடுந்தவமியற்றி காணக் கிடைக்காத அரிய பொருளான தமக்கும் மேலானதொரு சக்தியை கண்டுணர்ந்த நிலையே துறவறம. அதைவிட மேலானது இல்லறம் என சிறுபஞ்சமூலம் கூறுவது ஒரு கோணத்தில் பெண்களின் சிறப்பு என்றும் அறியப்படலாம்.

மானிடப்பிறப்பினால் ஏற்படும் ஆசாபாசங்கள் அனைத்தும் துறந்தபின் மேற்கொள்ளும் அறநெறியான துறவறம் அரசர், ஆண்டி என்ற வேறுபாடு இன்றி அனைவராலும் மதிக்கப்படும் உயரிய நிலை. அந்நிலையில் துறவறம் மேற்கொள்வோர்க்கு எத்தகைய இடையூறும் எழாது. ஆனால் இல்லற வாழ்வில் ஏற்படும் இடையூறுகளையும் ஏற்று பதியுடன் இணைந்து பதியைத் தவிர்த்து பிற மீதான பற்றற்ற வாழ்க்கையினை கொண்டு பதியின் பாதையை பின்பற்றி நடத்தல் அரிதென்பதாலே துறவறத்தைவிட மேலானது மனைவியோடு கூடிவாழும் இல்லறவாழ்க்கை எனக் கூறப்பட்டுள்ளதாக அறியலாம்.

முடிவுரை

நீடித்து நிலைத்து நிற்கும் எதுவாகிலும் அதன் பொருள் அழிவற்ற தன்மைகொண்டதாக அமைந்திருக்கும். சில வாழ்வியல் நியதிகள் மாறினாலும் நீதிகள் மாறுவதில்லை என்பதை மெய்பிக்கும் வகையில் நீதி நூல்களுள் ஒன்றான சிறுபஞ்ச மூலம் விளங்குகிறது. அந்நூலில் பெண்கள் குறித்து கூறப்பட்ட பெண் அறங்கள், பெண்மைக்கழகு, பெண்மையைக் காக்க கடமைப்பட்டவர்கள், கற்புடை பெண்கள், தீய தொழில் கொண்ட பெண்கள் போன்ற கருத்துகள் இன்றளவும் பொருந்துவதாய் அமைந்துள்ளன.

பழமையான நூல்களில் பண்பை வெளிப்படுத்தும் கருத்துகள் காலத்துக்கு ஏற்ற வகையில் பயன்படுத்திக் கொள்ளும் பன்முகத்தன்மை கொண்டதாக அமைந்துள்ளமை பாராட்டுக்குரியது மட்டுமல்ல. வியப்பிற்குரியது மட்டுமல்ல. நம் வாழ்வதனை மேம்படுத்திக் கொள்ளுவதற்குமான திசை காட்டியுமாகும். அறிந்து பயன்படுத்தி பக்குவம் பெற்றிடுவோம். பெண்ணாய் பிறந்தோர் நல்லனவாற்றி பெருமை கொள்வோம்.

துணைநூற் பட்டியல்

1. எம்.நாராயணவேலுப்பிள்ளை. *பதினெண் கீழ்க்கணக்க நூல்கள்*, நர்மதா பதிப்பகம், தி.நகர், சென்னை-1
2. வ.சுப. மாணிக்கம் (உ.ஆ). *திருக்குறள்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு-2000.
3. *பாரதிதாசன் கவிதைகள்*, திருமகள் நிலையம், தி.நகர், சென்னை-17.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

வள்ளுவம் ஒலிக்கும் வேளாண் குரல்கள்
Agricultural Voices from Valluvam

முனைவர் ச.கந்தன், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை – 627 002.

Abstract

The article deals with the agricultural importance as prescribed in the universal work "Thirukkural". It explains what is agriculture and what is its need to evince the vitalness of agriculture. The importance of rain and its associateness with agriculture as voiced in the Kural is detailed for understanding. Rain and ritual for it, the quality of land and agriculture are widely spoken by Valluvar in his diadactic work. Those facts are put forth to tell the importance of agriculture in this paper. Hence, the article gives out the facts regarding agriculture from "Thirukkural".

Keywords: Agriculture, Voices, Thiruvalluvar, Valluvam

நாடோடியாகத் திரிந்த மனிதன் ஓரிடத்தில் நிலையாகத் தங்கி பயிரிடத் தொடங்கிய போது உலகில் உழவுத் தொழில் தோன்றி விட்டது. ஒரு நாட்டின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைவது உழவுத் தொழிலாகும். உலகமெங்கும் பெருவாரியான மக்கள் உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். உழவுத் தொழிலின் பெருமையினை உணர்த்த வள்ளுவர் உழவு என்னும் பெயரில் ஓர் அதிகாரத்தைப் படைத்துள்ளார். திருக்குறளில் வேளாண் வாழ்வியலை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

வேளாண்மைசொல் விளக்கம்

வேளாண்மை தொழிலைச் செய்பவர்களுக்கு அதில் உள்ள சிக்கல்கள் என்னவென்று உணர முடியும் . அதனைச் சிறப்பாகச் செய்ய ஆராயும் நுண்ணறிவு வேண்டும். அவ்வறிவினை இயல்பாக வேளாளர்கள் பெற்றுள்ளனர். வேளாளர்க்கு இரக்கமும் அறிவும் ஈகையுந் தொன்று தொட்டு இருந்து வருகின்றன எனலாம். இதன் சொற்பொருள் விளக்கத்தை

"ஈகைக்குப் பெயரான வேளாண்மை என்னுஞ்சொல் அவ்வீகைக்குக்
கருவியான பயிர் தொழிலுக்கும் பெயராயிற்று"

என்று மறைமலையடிகள் கூறுகிறர். (மறைமலையடிகள், வேளாளர் நாகரிகம் ப.119) ஈகை என்பதற்கு வேளாண்மை என்பது பொருளாகும்."வேளாண்மை என்ற சொல் உபகாரம், கொடை, பயிர்த் தொழில், உண்மை, விவசாயம் என்று பொருள்படும்'' என்று மதுரைத் தமிழ்ப் பேரகராதி வேளாண்மை என்னும் சொல்லுக்கு விளக்கம் தருவதாக ஆய்வுக்கோவை கூறுகிறது.

மழையின் சிறப்பு

உலகத்திற்கு மழை இன்றியமையாதது. மழையால் உலக உயிர்கள் நிலைபெற்று வாழ்கின்றன. உலகம் அழியாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. அமிழ்தம் உண்டவர்கள் சாவாது இந்த உலகில் நிலைபெற்று வாழ்வர். அதுபோல இந்த உலக மக்களை வாழ வைக்கின்ற மழையை வள்ளுவர் அமிழ்தம் என்கிறார். இதனை,

"வான்நின்று உலகம் வழங்கி வருவதால்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தானமிழ்தம் என்றுணரற் பாற்று" (கு.எ.11)

என்ற குறளில் கூறுகின்றார். மக்கள் முதல் விலங்குகள் , பறவைகள் , புல் , செடி , கொடி வரை அனைத்திற்கும் வானில் இருந்து பொழிகின்ற மழை அமிழ்தமாக இருக்கின்றது. கவிஞர் முகிலன் தனது கவிதை வரிகளில்

, "மலையாலே உலகமது வாழ்வதாலே
மழைநீரே அமிழ்தமாகும்! இல்லை என்றால்
பிழைப்பில்லை உணவில்லை உயிர்கள் இல்லை
போலருகே பாலை வனம் தணதில் வேகும்"

(கானகர் முகிலன், வள்ளுவர் உலகம் ஊரறிந்த தமிழில்,ப-11) என்று கூறுகிறார். மழை இல்லை என்றால் இந்த உலகம் பாலைவனமாகி விடும் என்கிறார்.

மழையும் வழிபாடும்

மழை பெய்ய வேண்டி கடவுளை வழிபடும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வரும் ஒன்றாகும். மாதம் மும்மாரி பெய்தால் இரு போகம் விளையும். மும்மாரி பொழிந்து, முப்போகம் விளைய வேண்டும் என்று மக்கள் இறைவனை வணங்கிய செய்தி இலக்கியங்களில் காணப்படுகிறது. மழை பொழிவதனால் வழிபாடுகள் அனைத்தும் நடைபெறுகின்றன என்கிறார் வள்ளுவர். இதனை,

"சிறப்போடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு" (கு.எ.18)

என்ற குறளில் மழை பெய்யாமல் பொய்த்துப் போகுமானால் இவ்வுலகில் வானோர்க்காகச் செய்யப்படும் பூசனைகளும், வழிபாடுகளும் நடைபெறாது என்று கூறுகிறார். மலையில் வாழக்கூடிய குறவர்கள் மழை பெய்ய வழிபாடு செய்தனர். இதனை,

"மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்
மாரியொன்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்"

(புலியூர்க்கேசிகன் (உ.ஆ) முக்கூடற்பள்ளு, பா.எ.36) என்று மலையை மழைமேகம் சூழ்க எனக் கூறி மலர் தூவி வழிபாடு செய்த செய்தினை முக்கூடற்பள்ளு சுட்டுகிறது.

நிலத்தின் இயல்பு

வேளாண்மைக்கு நீர் மிகவும் இன்றியமையாதது. அந்த நீரின் தன்மை நிலத்தின் இயல்பினைப் பொறுத்து அமையும். நெய்தல் நிலம் கடலும் கடல் சார்ந்த இடமாகும். நெய்தல் நிலத்தில் உள்ள நீர் பெரும்பாலும் உப்புத் தன்மை பொருந்தியதாகக் காணப்படும். வள்ளுவர் இதனை,

"நிலத்து இயல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்து இயல்பது ஆகும் அறிவு" (கு.எண் 452)

என்று மக்களின் அறிவை நிலத்தின் இயல்பைப் பொறுத்துக் காணப்படும் நீருக்கு உவமையாகக் கூறுகிறார். நெய்தல் நிலப்பகுதியில் மழை நன்கு பெய்தால் களர் நிலம் பார்வைக்கு நல்ல நிலத்தைப் போல் தெரிந்தாலும்,எவ்வளவு உழுதாலும் பயன் தராது. அந்நிலத்தில் இட்ட விதையும் அழிந்து விடும். வள்ளுவர் கல்வி கற்காதவர்கள் பெயருக்கு உயிரோடு இருக்கிறார் என்று சொல்லப்படுவர்.அவர்கள் ஒன்றும் விளையாத களர் நிலத்திற்கு ஒப்பாவார்கள் என்று கூறுகிறார். இதனை,

"உள்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனை கல்லா தவர்" (கு.எண் 406)

என்ற குறள் மூலம் உவமையாக எடுத்துக்காட்டுகிறார்.

களர் நிலத்தை உலர் நிலம் என்றும் கூறுவர். களர் நிலத்தில் புல் விளையும். பயிர்கள் செழித்து வளராது என்று திருவள்ளுவர் கூறிய அதே கருத்தினைப் பாரதிதாசன்,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

"கல்வி இல்லாப் பெண் களர் நிலம்
இந்நிலத்தில் புல் விளைந்திடலாம்
நல்ல புதல்வர்கள் விளைவதில்லை" (பாரதிதாசன், குடும்ப விளக்கு, ப.எ.84)

என்று உவமையாகக் கூறுகிறார்.

உழவுத் தொழில்

உழவுத் தொழிலானது உலகிற்கு உணவு அளிக்கும் தொழிலாக விளங்குகிறது. பண்டைய காலம் முதல் தமிழர்கள் உழவுத் தொழிலில் சிறப்புப் பெற்றிருந்தனர். உழவுத் தொழில் அழிந்தால் உலகில் உணவுப் பஞ்சம் ஏற்படும்உயிரிழப்பு ஏற்படும.உழவுத் தொழில் செய்கின்ற உழவர்களின் சிறப்பினை வள்ளுவர்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றுஎல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்" (கு.எ.1033)

என்கிறார். பிறதொழில்களை மேற்கொள்பவர்கள் அனைவரும் உழவுத் தொழில் செய்பவரை நம்பி வாழ வேண்டியுள்ளது.வயலை நம்புகின்றவர் வாழ்வில் வளமின்றித் துன்பமில்லை என்பதனைக் கண்ணதாசனின்,

"வயலை நம்பி வாழ்ந்திருந்தா கண்ணம்மா – ஒரு
பயலை நம்பித் தேவையில்லை சின்னம்மா"

(கண்ணதாசன் திரைப்படப்பாடல்கள், ப.276) என்ற வரிகள் மூலம் அறிய முடிகிறது. உழவர்களின் உழைப்பின் மேன்மையை,

"உழுவார் உலகத்தார்க்கு ஆனி அஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து" (கு.எ.1032) என்கிறார் வள்ளுவர்.

உழவின் சிறப்பு

மெய்வருத்தம் கருதி உலக மக்கள் பல தொழில்களைச் செய்து திரிந்தாலும் ஏர்த் தொழில் முன்னால் நிற்க இந்த உலகம் ஏரின்பின் நிற்கின்றது. செய்யும் பொழுது எவ்வளவு துன்பம் ஏற்பட்டாலும் உழவுத் தொழில் சிறப்புடையது என்கிறார் வள்ளுவர். இதனை

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை" (கு.எ. 1031)

என்ற குறள் மூலம் அறியலாம். ஒரு நாட்டின் வளம் அந்த நாட்டிலிருந்து பிற நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களின் அளவினைப் பொறுத்து அமைகின்றது.வயல்வெளியில் ஆர்வத்துடன் வேலை செய்வதால் பிற நாட்டினரிடம் கையேந்த வேண்டிய அவசியம இல்லை என்பதனை,

"என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்
ஒழுங்காய்ப் பாடுபடு வயல்காட்டில்
உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில்"

என்ற திரையிசைப்பாடல் மூலம் அறியலாம்.

பாரதியார் பல தொழில்களைப் பற்றிக் கூறுகின்றபோது, உழவுத் தொழிலின் பெருமையினை உணர்ந்து அதனை முதலில் வைத்துக் கூறுகிறார். இதனை,

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" (பாரதி கவிதைகள் ப.718)

என்ற பாடல் வரிகள் மூலம் தெளிவாக அறியமுடியும். மக்கள் உயிர் வாழ்வதற்குரிய இன்றியமையாத தேவை உணவாகும். தொழில்களுக்கெல்வாம் உயிர் நாடி உழவுத் தொழிலாகும். உழவின் சிறப்பினை ஔவையார்,

"வரப்பு உயர் நீர் உயரும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயரும்''

(புலியூர்க்கேசிகன் (உ–ஆ) ஔவையார் தனிப்பாடல்கள் ப. 971) என்கிறார். மன்னனை வாழ்த்தும் போது உன் நாட்டில் உழவுத் தொழில் சிறந்து விளங்கினால் இந்த உலகமே உன்னுடைய வெண்கொற்றக்குடையின் கீழ் வந்து தங்கும் என்கிறார். இக்கருத்தினை வள்ளுவர்,

''பலகுடை நிழலும் தங்குடைக் கீழக் காண்பர்
அலகுடை நீலவர்'' (கு.எண் 1034)

என்ற குறளில் கூறுகிறார்.ஏர் முனையால் நிலத்தை உழுது உழவுத் தொழில் செய்யும் உழவர்கள் பல நாடுகளை ஆட்சி செய்யும் வல்லமை பெற்ற மன்னர்களையும் தங்கள் வேளாண்மைத் தொழிலை எதிர்பார்க்கும்படி செய்வார்கள் என்று கூறுகிறார்.

உழவும் உணவும்

உணவின்றி எந்த உயிரும் உயிர் வாழ முடியாது. உயிர்களை வாழ வைக்கும் உணவு மிக இன்றியமையாததாய் விளங்குகிறது. இதனைப் புறநானூறு,

''உண்டி கொடுத்தோ ருயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்''

என்கிறது. அந்த உணவு மக்களுக்குக் கிடைக்க உதவுவது தொழில் ஆகும். இதனைத் திருவள்ளுவர்,

''உழவினார் மைம்மடங்கின் இல்லை விழுவதூஉம்
விட்டேம்என் பார்க்கு நிலை'' (கு.எ 1036)

என்கிறார்.

''நாண்அணி களையும் மாண்எழில் சிதைக்கும்
பூண்அணி மாதரோடு புறங்கடை நிலத்தும்
பசிப்பிணி என்னும் பாவி''

என்ற மணிமேகலையின் பாடல் வரிகள் மூலம் அறிய முடியும். இதன் மூலம் உழவுத் தொழில் அனைத்து உயிர்களுக்கும் உணவு அளிக்கக்கூடிய தொழில் என்பதை அறிய முடிகிறது.

பயிரைப் பாதுகாத்தல்

ஏர் கொண்டு நிலத்தை உழுது பயிருக்கு ஏற்ற நல்ல உரம் இடுதல் வேண்டும். அதன் பின் நீர் பாய்ச்சுதல் வேண்டும். இம்மூன்றையும் செய்தால் மட்டும் போதாது நிலத்திற்குப் பாதுகாப்பு மிகவும் இன்றியமையாதது ஆகும்.

இதனை வள்ளுவர்,

''ஏரினும் நன்றால் எருவிடுதல் நட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு'' (கு.எ 1038)

என்கிறார். பரணில் நின்ற படி திணைப் பயிரை இளமகளிர் காவல் காத்த செய்தி இலக்கியங்களில் காணப்படுகிறது. நிலம் முழுவதும் பார்வையில் படும்படி உயரமான இடங்களில் பரண்களை அமைப்பர். இதனை,

''களிற்றுத் துப்பு அஞ்சா புலியதன் இதனத்து
சிறுதிணை வியன்புலம் காப்பின்'' (நற்றிணை, பா.எ 351)

என்ற நற்றிணை வரிகள் உணர்த்தும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

நிலத்திற்கு உரியவன் தினமும் சென்று நிலத்தைப் பார்க்காவிட்டால் அந்த நிலம் அவனுடைய மனைவியைப் போல் வெறுத்து அவனிடம் ஊடல் கொள்ளும் என்பதை வள்ளுவர்

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்" (கு.எ 1039)

என்ற வரிகள் மூலம் புலப்படுத்துகிறார்.

துணைநூற்பட்டியல்

1. வ.சுப. மாணிக்கம் (உ.ஆ) - *திருக்குறள்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு-2000.
2. ஞா. தேவநெயப்பாவாணர், *திருக்குறள் தமிழ் மரபுகள்*, 1969.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

மருத நிலத்தில் கொடிகள்
Climbers in the Marutham Land

ரா.கமலா, ஆய்வியல் நிறைஞர், தமிழ் உயராய்வு மையம்,
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி.

Abstract

The article deciphers about the climbers seen in the Sangam times through the literary evidences. Many of the climbers existed are very sparse to see now but some of them are seen today also. Pakanrai, Pirappam, Aambal and Adumpankodi are very noted type of climbers seen on the Sangam times and are seen in the literary works. Many climbers are also there. To know about them is the need of the time and the article do it in action in the forthcoming research article. Hence, the article gives out the facts regarding the climbers from "Akananooru", Inkurunooru" and "Purananooru".

Keywords: Climbers, Marutham Land, Pakanrai, Pirappam, Aambal, Adumpankodi

முன்னுரை

மருதநில மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையினை வாழ்ந்தனர். மருதநிலத்தில் காணப்பட்ட கொடிகள் பற்றி ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். மரம், செடி, கொடிகள் எந்த நேரத்தில் பூக்கும், காய்க்கும் என்பதை மக்கள் அறிந்திருந்தனர். கொடி வகைகள் துவளும் தன்மை கொண்ட அல்லது ஒன்றின் மேல் படரக் கூடியது ஆகும். பொதுவாக பந்தல், கயிறு, வேறு மரங்கள் என வேறொரு பொருளின் பிடியுடன் இச்செடிகள் வளரும். தாவரங்களில் கொடி வகை மிக மென்மையானவை வலுவற்றவை. கொடி வகைகளில் பாகல், சுரைக்காய், திராட்சை, வெள்ளரி, அடும்பு, கொவ்வை, தூதுவளை, பிரண்டை, அவரை பகன்றை, போன்றவை காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் பகன்றை, வள்ளை பிரப்பம், ஆம்பல், அடுப்பங்கொடி போன்றவை காணப்படுகின்றன. இவற்றின் செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

பகன்றைக் கொடி

மருதநிலத்தில் காணப்படும் ஒரு வகையான கொடி பகன்றை கொடியாகும். இது வெண்ணிற மலர்களை உடையது. பகன்றைக் கொடி கொழு கொழுப்பாக செந்நிறம் கொண்டிருக்கும். இக்கொடி, வயல்களிலும் காணப்படும். மகளிரும், மைந்தரும் பகன்றை மலரைக் கண்ணியாகக் கட்டித் தலையில் சூடிக் கொள்வர். மகளிர் சேலை கட்டும் கொச்சகம் (கொசுவம்) போல மடிப்புகளுடன் காணப்படும்.

பகன்றைப் பூவானது பெரிய இலைகளுடன் கிண்ணத்தில் உள்ள நுரைத்த பால் போல பூக்கும். சங்க கால மகளிர் குவித்து விளையாடிய மலர்களில் ஒன்று பகன்றைக் கொடியின் மலர் ஆகும். மருதநில மக்கள் கிழட்டுப் பசுவுக்கு உணவாக பகன்றைக் கொடியை கொடுத்தனர். எருமைக் கன்று பகன்றைக் கொடி படர்ந்துள்ள கொம்பினை உண்பதற்கு அஞ்சும் என்ற செய்தி,

"பகன்றை வான்மலர் மிடைந்த கோட்டைக்
கருந்தாள் எருமைக் கன்று வெரூ உம்"[1]

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்ற ஐங்கறுநூற்றுப் பாடலில் காணப்படுகின்றது. மேலும் அகநானூற்றில், ஓரம்போகியார் பகன்றைக் கொடி பற்றி கூறிய செய்தி,

"தூங்கு சேற்று அள்ளல் துஞ்சிப் பொழுதுபடப்
பைந்தின் வராஅல் குறையப் பெயர்தந்து
குரூஉக் கொடிப் பகன்றை சூடி மூதூர்ப்"[2]

எருமைக் கடா ஒன்று ஆம்பல் பூ நிறைந்துள்ள நீர் நிலையில் மேய்ந்து கொண்டிருந்தது. பின்னர் இரவு நேரத்தில் உறங்கியது. காலையில் வரால் மீன்கள் எருமையின் கால்களில் மிதிபட்டு இறக்குமாறு எருமையானது அந்நீர் நிலையை விட்டு வெளியேறியது. அக்காட்சி வெள்ளிய பகன்றைக் கொடிப்பூவை தலையில் சூடியது போல இருந்தது என ஓரம்போகியார் கூறியுள்ளர்.

வள்ளைக்கொடி

வள்ளைத் தாவரம் மருத நில நீர் நிலைகளில் அதிகமாக வாய்க்காலிலும், ஓடையிலும் கொடியாக படர்ந்து வளரும். வள்ளைக் கொடி நீண்ட தண்டினை உடையது. கணுக்களில் வேர்கள் தோன்றி ஆழமற்ற இடங்களில் வேரூன்றியும், தண்டில் துளையைப் பெற்றுள்ளதால், ஆழமான இடங்களில் மிதந்தும் காணப்படும். சற்று பெரிதான வள்ளைக் கொடியின் மலர் காலையில் மலரும் தன்மை உடையது. வள்ளைத் தண்டில் உள்ளது போல துளையிட்டு அணி செய்யப்பட்ட காதுகள் என வள்ளைத் தண்டின் துளையை சீத்தலைச் சாத்தனார்,

"வள்ளைத் தாள் போல் வடிகாது இவை
காண் உள் ஊன்"[3]

என மணிமேகலையில் கூறியுள்ளார். வள்ளைக் கொடியினை நண்டானது அறுத்து செல்லும் நிகழ்வினை, ஐங்குநூற்றுப்பாடலானது,

"கரந்தையஞ் செறுவில் துணைதுறந்து, களவன்
வள்ளை மென்கால் அறுக்கும் ஊரன்"[4]

கரந்தையை உடைய அழகிய பொலிவான வயலினிடத்தே, பெட்டை நண்டினை விட்டு ஆண் நண்டானது செல்லும். செல்லும் போது அருகே உள்ள வள்ளைக் கொடியினை அறுத்து விட்டுச் செல்லும் அத்தகைய மெல்லிய தண்டினை உடையது வள்ளைக் கொடியாகும்.

வயலைக்கொடி

சங்க காலத்தில் வயலைக்கொடி வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கப்பட்டது. அதன் கொடி சிவப்பாக காணப்படும், அக்கால மகளிர் தங்களுக்குத் தழையாடை செய்து கொள்ள இதனைப் பயன்படுத்தினர். மேலும் இதனை சமைத்துண்ணும் கீரையாகவும் பயன்படுத்தினர். இக்கொடியின் கீரை கண் எரிச்சல் நோய்க்கு மருந்தாகவும் மூக்கு, தொண்டையிலருந்து வடியும் திரவத்திற்கு இலைச்சாறு மருந்தாகவும் பயன்படுகின்றன. வயலைக் கொடியை, பசலைக் கொடி என்றும் கூறுவர். வயலைக் கொடியுடன் ஆம்பல் கொடியையும் சேர்ந்து ஆடையாக உடுத்துவதை,

"மனைநகு வயலை மரன் இவர் கொழுங்கொடி
அரிமலர் ஆம்பலொடு தழஉ அணிப் பொலிந்து"[5]

கூத்தாடும் பரத்தையுடன் தலைவனும்இ மரத்தின் மீது படர்ந்துள்ள வயலைக் கொடியுடன் சேர்த்து ஆம்பல் கொடியையும் சேர்த்துத் தழைகளை ஆடையாக உடுத்திக் கொண்டு விழாவில் கூத்தாடினர் என்று அகநானூறுப் பாடல் கூறுகின்றது. வயலைக் கொடியானது, வீட்டில் நட்டு வளர்க்கப்பட்டது. அவை கொடியாகப் படர்ந்து வேழத்தினை சுற்றிப் படருகின்றது. என்பதனை, "மனைநடு வயலை வேழம் சுற்றும்"[6] ஐங்குறுநூற்றுப் பாடல் வரி கூறுகின்றது. மேலும் மற்றொரு பாடலில் வயலைக் கொடியினை,

"வயலைச் செங்கொடிப் பிணையல் தைஇச்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

செவ்விரல் சிவந்த சேயரி மழைக்கண்"[7]

தலைவியின் விரல்கள் வயலைக் கொடியினை தொடுதலால் ஏற்கனவே சிவந்த தன்னுடைய விரல்கள் இன்னும் அதிகமாக சிவக்கின்றது என்ற செய்தியை பாடலின் மூலம் உணர முடிகின்றது.

பிரப்பங்கொடி

பிரப்பங் கொடியும், கொடித் தாவரங்களில் ஒன்றாகும். இக்கொடியானது பரந்து கிடக்கும் பொய்கையிலே பிரப்பங் கொடியோடு ஈங்கையும் சேர்ந்து நீண்டு வளரும் என்பதை,

"பரந்த பொய்கைப் பிரம்பொடு நீடிய
முட்டிகாம் பீங்கைத் துய்த்தலைப் புது வீ"[8]

அகநானூறுப் பாடல் கூறுகின்றது. மேலும் பிரம்புக் கொடிகளிடத்தே கிடக்கும் நீர் நாய் வாளை மீனை காலை உணவாக உண்ணும் என்ற செய்தியினை,

"அரில் பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
வாளை நாள் இரை பெறூா உம்"[9]

என பிரம்பங்கொடி பற்றி குநற்தொகைப் பாடல் விளக்குகின்றது.

முடிவுரை

சங்க கால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையினை வாழ்ந்தனர் தாவரங்களின் வள்ச்சி நிலையினைப் பற்றி மருதநில மக்கள் அறிந்திருந்தனர். எந்த தாவரங்கள் எந்த கால கட்டங்களில் செழுமை அடையும் என்று புரிந்து வைத்திருந்தனர். மருத நிலத்தின் கொடிகளாக, பகன்றை, வள்ளை, வயலை, பிரப்பங்கொடி போன்றவை காணப்பட்டன என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. ஐங்கறுனூறு - 97, ப.125.
2. அகநானூறு - 316, ப.37.
3. மணிமேகலை - 169, ப.129.
4. ஐங்குறுநூறு - 26, ப.42.
5. அகநானூறு - 176, ப.527.
6. ஐங்குறுநூறு - 11, ப.24.
7. மேலது - 52, ப.70.
8. அகநானூறு - 306, ப.15.
9. குறுந்தொகை - 364, ப.871.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019

Available at: www.ijtlls.com

தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறி
The Ethics of Life as Shown by Tamil Literature

துரை.கருணாகரன், நற்றமிழ்ப்பாவலர்
கவிஞாயிறு, பெரும்புலவர். ஆம்பூர்.

Abstract

The article favours to note down the ethics of Tamil life from the evident literary sources. The culture af the Tamils are reflected and preserved in the literary works for many thousand years. The moral ethics followed by them are really a deal of perseverance and discipline and sagacity, which are lucidly seen in the literary works without any sort of bias or exaggeration. Friendship, chastity, morale, Discipline at Sangam times, social life, moral life in "Pattinapalai", Universal laws, "Perunkathai", moral in "Thembavani", Kambar's Moral ethics are shown explicitly in the paper. Hence, the article gives out the facts from various literary sources.

Keywords: Ethics, Life, Shown, Tamil Literature

வாயில்

தமிழும், தமிழரும், தமிழகமும் பண்டைய பெருமைப்பெற்று விளங்குவதற்கு தமிழ்வீறு உண்டாக்கவல்ல இலக்கியங்களே சான்றாம். அத்தகைய இலக்கியங்களிலிருந்து மூவாத பார் புரக்கும் காவலர்களிலிருந்து மாண்பளிக்கும் மக்கள் வரை தாங்கள் வாழ்ந்து நெறிபட ஏற்றமுறு வகையில் எடுத்தியம்பும் செய்திகள் பலவற்றை ஈண்டு தொகுக்குவாம்.

மரபின் வழி கல்வி

பண்பாட்டு சீர்மையும், நாகரீக செழுமையும் செழித்தோங்கவல்ல செய்திகள் உள்ளடங்கப்பெற்றனவாக வாழ்வரங்கிலே நெடுங்காலம் வேறூன்றிய கருத்தே இலக்கியத்தில் இடம்பெறும். இலக்கிய மரபிலே ஆழங்காற்பட்ட பண்புகள் சீர்மை சார்ந்ததாக அமைந்திருக்கும் இலக்கியங்கள், மக்கள் என்றென்றும் போற்றுவர். மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு நல்ல கல்வியை கற்க வேண்டுவது இன்றியமையா வாழ்வியல் நெறி என்பதை

'கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்குத் தக.'

என்பதை நோக்கின் ஆயப்புகுங்கால்

'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினினும் கற்கை நன்றே.'

எனும் நறுந்தொகை கூறுமாற்றும். கல்வி கற்க வேண்டிய முறை குறித்தும் அவ்வாறு கற்றாரின் பெருமை குறித்தும்

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே'.

என புறம்கூறும் செய்தியோடு ஒப்ப நோக்கி எண்ணத்தக்கதே.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

நட்பில் ஆழ்

ஒரு மனிதன் தன்னைப்போன்றே பிற மனிதர்களிடம் எப்படி பழக வேண்டும் என்பதை துருவி ஆராய்ந்து நட்பு, தீநட்பு, கூடாநட்பு, பழைமை நட்பராய்தல், சிற்றினஞ்சேராமை, பெரியாரை துணைக்கோடல் என ஏழு தலைப்புகளில் எழுபது குறட்பாக்களில் மாந்தரினம் நட்பு பாராட்டும் தெளிவு குறித்து நடப்பியலாய் காட்டிப்போவார் நற்றமிழ்ப் பேராசான் வள்ளுவப் பெருந்தகை.

அகவொழுக்கக் கற்பு நெறி

போருக்குச் சென்ற கணவன் நாள்கள் பல ஆகியும் வீடு திரும்பவில்லை. அவன் பிரிவால் துயருற்ற அவன் தலைவி, களம் நோக்கி கணவனைத்தேடி வருகின்றாள். அதோ, அவள் கணவன். வீரப்போர் புரிகின்றான். பகைவீரர்கள் பலர். அவன் வாளுக்கு இரையாகின்றனர். என்ன கொடுமை இது? வஞ்சகன் ஒருவன் மறைந்து நின்று அந்த வீரமறவனின் மார்பிலே ஈட்டி ஒன்றை பாய்ச்சுகிறான். புவியின் மீது சாய்கிறான் அவ்வீரன். அதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவன் மனைவி. அவன் சாயும் இடம்நோக்கி சென்று சோர்ந்து தரைமீது விழுகின்றாள். தன் உடலின் மீது அவன் உடலும் விழுமாறு செய்கின்றாள். அவள் கற்பின் செல்வி. தன்னைத்தவிர கணவன் வேறு யாரையும், வேறு எந்தப் பெண்ணையும் தொடக்கூடாது என்று எண்ணுகிறாள்.

பூமிதேவி ஒரு பெண். அவள் மீது அவன் விழாதபடி உடலால் அவனை தாங்கிக் கொள்கிறாள். மீண்டும் அவளுக்கு ஒரு நினைப்பு. உடலை விட்டு விண்ணுலகம் செல்லும் தன் கணவனின் அங்குள்ள அரம்பை மகளிரை புணர்ந்துவிட்டால் என்ன ஆவது என்று எண்ணி, அவனுக்கு முன் தான் இறந்து தன்னுயிர் முன்னதாக விண்ணுலகம் செல்லுமாறு செய்து, பின்னால் வருகின்ற கணவன் உயிரை தன்னுயிராய் தழுவிக்கொள்கிறாள். என்னே வியத்தகு கற்பனை. சயங்கொண்டாரின் கற்பனை ஊற்றின் நுழைப்புலத்திற்கு இஃதோர் சான்று. மகளிரின் கற்பு நெறியை வாழ்வியல் நெறியாக்க உணர்த்தும் கற்பனையைப் பின்பற்றுவார் இன்று உளரோ. அகவொழுக்க வாழ்வியலை செவ்விதின் நோக்கி பின்பற்றலாமே.

அறங்கூறு அவயம்

நீதி நெறி பிறழாமல் செயலாற்றிய மன்றம் "அறங்கூறு அவையம்". அதுதான் சங்க காலத்து நீதிமன்றம். 'அறமறக்கண்ட நெறிமாண் அவயம்' என புறம் 68 ஆம் பாடல் கூறும். அறங்கூறு அவயத்தில் வழக்கு தொடுக்கப்பட்ட இரு கட்சியினரும், தீர்ப்பு என்ன வரப்போகிறதோ என்ற ஐயத்தினால் தோன்றிய அச்சத்தை நீக்கி, இரு கட்சியினரும் ஏற்றுக் கொள்ளும்படி கருத்தை சொல்லி விளக்கி நடுநிலை தவறாமல் வழக்கு தொடுத்த இருபாலரையும் சமமாக எண்ணி தராசுகோல் போல் சரியாக தீர்ப்பு வழங்குவார் என

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து.
ஞெமன்கோல் அன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூறு அவயம்".

மதுரைக்காஞ்சி மாண்பமை நீதியரசர்களுக்கு வேண்டிய நன்னெறியை நனித்தே உரைக்கும் வாழ்வியல் நெறியாம்.

சங்க காலத்தில் சமூக நீதி

சமூக நீதிக்கு நம் அரசமைப்பு சட்டம் கொடுத்துள்ள முக்கியத்துவம் போல உலகத்தில் உள்ள எந்த நாட்டு அரசமைப்பு சட்டமும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பின்தங்கிய வகுப்பினருக்கு சமூக நீதி வழங்க வேண்டும் என்று அரசமைப்பு சட்டம் வலியுறுத்துகிறது. சமுதாயத்தில் உள்ள யாவருக்கும் சம வாய்ப்பு, சம அந்தஸ்து, சம உரிமை வழங்குவதன் மூலம் சமூக நீதி நடைமுறைப்படுத்த வேண்டும் என அரசமைப்பு சட்டம் கூறுகிறது. இத்தகைய சமூக நீதி சங்க காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

மக்கள் செய்து வந்த தொழிலுக்கு ஏற்ப பல குலங்கள் தோன்றியிருந்தன. இக்குலங்களுள் உணவு கலப்போ, திருமண கலப்போ தடை செய்யப்படவில்லை. ஒவ்வொரு குலமும் சமுதாயத்தின் ஓர் உறுப்பாக செயல்பட்டு வந்தது. கல்வி பயிலும் உரிமை தனிப்பட்ட உரிமையாக அன்று இல்லை. எக்குலத்தைச் சார்ந்தவரும் செல்வர், வறியர் என்று பாராமல் ஆண், பெண் என பிரிவுபடாமல் கல்வி கற்கும் வாய்ப்பு சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் கிட்டியிருந்தது.

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே".

எனும் புறப்பாட்டால் சங்க காலத்தில் கல்வியில் சம வாய்ப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தது என தெரிய வரும். ஆட்சி செய்யும் அரசனையும் விலங்கு வேட்டைக்கு செல்லும் வேடனையும் ஒன்றாக்கி அவர்களின் அடிப்படைத் தேவைகளான உண்பதில், உடுப்பதில் வேற்றுமை இல்லை. இருவருக்கும் உண்பது உழக்கு உணவுதான், உடுப்பது கீழ், மேல் என்ற இரண்டு உடைதான் என சமூக நீதியின் சிறப்பை 'தென்கடல் வளாகம் பொதுமையின்றி' எனும் புறப்பாட்டு வாழ்வியல் நெறியை வகுத்து போகும்.

சமுதாய வாழ்வியல்

சமுதாய வாழ்வியலை படம் பிடித்துக்காட்டும் ஒப்பற்ற நூல் வள்ளுவம் ஒன்றே. அந்நூல் காட்டிய புதுநெறி - பொதுநெறி - ஒப்புரவு நெறி. குறியெதிர்ப்பு எதுவும் அறவே இல்லாமல் ஊருணி, பழுமரம், பயன்மரம், மருந்துமரம் போல வாழ்தல் ஒப்புரவு கலந்த வாழ்க்கை முறை. இத்தகைய வாழ்வியல் நெறிமுறையில் புதியதோர் சமுதாய அமைப்பு உருவாகக் துணைசெய்யும். 'இம்மை செய்தது மறுமைக்கு ஆம்' என்ற எண்ணம் இயல்பாகவே அமைந்த ஒழுகலாறு. வள்ளுவப் பொருட்பாலில் மேம்பட கடைப்பிடித்து ஒழுக வேண்டிய காரணிகளை முறைப்படுத்துவார். மக்கள் விருந்தோம்பலில் சிறந்த பெருவாழ்வு வாழ நெறி அமைத்தமை, வாய்மை, மானம், சான்றாண்மை, அதிகாரங்கள் மூலம் சமுதாயத்தை மேலோங்கும் வாழ்வியலாக செம்மைப்படுத்தும் அதிகாரங்கள் எனலாம். வள்ளுவத்தை நுகர்பொருளாக்கிக் கொண்டாலே போதும். நிகரிலா பெருவாழ்வு வாழ நேரிடதாம்.

பட்டினப்பாலையில் நேர்மை சார்ந்த வாழ்வியல் நெறி

அருமையான பொருள்கள் விற்கும் வணிகர்கள் தங்கள் நேர்மையிலிருந்து சிறிதும் வழுவதில்லை. நடுநிலைமையைப் போற்றி பழிக்கு அஞ்சி எப்போதும் உண்மையே பேசும் இயல்புடையவர்களாக இருந்தார்கள். தங்களுடைய பொருட்களையும் ஒரு தன்மையாகவே நினைக்கிறார்கள். பிறரிடம் இருந்து பொருட்களை விலைக்கு வாங்கும்போது மிகுதியாக கொள்ளாமலும் பிறருக்கு விற்கும்போது குறைவாக கொடுக்காமலும் நேர்மையை கடைப்பிடித்து ஒழுகினார்கள். தாங்கள் விற்கும் ஒவ்வொரு பொருளையும் நியாயமான விலை கூறியே அவர்கள் வாணிகம் செய்கிறார்கள். விருந்து போற்றும் திறம் அவர்களின் மிகையான பண்பாம். சோற்றை வடித்த கஞ்சி ஆற்று வெள்ளம்போல் தெருக்களில் பெருக்கெடுத்து ஓடுகிறதாம்.

"சோறு ஆக்கிய கொழுங் கஞ்சி
யாறுபோல பரந்தொழுகி"

எனும் வரிகள் வண்ணமிட்டு காட்டும். கொலை செய்வதை வெறுத்தவர்கள், களவு செய்தலை கனவிலும் கருதாதவர்கள், தேவர்களை தொழுது அவர்களுக்கு வேள்வியின் மூலம் பலி கொடுப்பார்கள். நல்ல பசுக்களையும், எருதுகளையும் காத்தோம்புவர். வேத வித்தகர்களை போற்றுவர். நல்லொழுக்கத்திலிருந்து நழுவாமல் மேழிச்செல்வமே சிறந்தது என போற்றி

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

வாழ்ந்தார்கள். அப்படிப்பட்ட வாழ்வியல் நெறிகளை வகுத்துக்கொண்ட பண்டைய தமிழர்கள் இன்று ஏன் அவர்களைப்போல அத்தகைய வாழ்வியல் நெறிகளை கைக்கொள்ளவில்லை.

உலக நியதியில்

வாழ்க்கை எல்லோருக்கும் எப்பொழுதும் ஒரே சீராக அமைவதில்லை. மேலே இருப்பது கீழேயும், கீழே இருப்பது மேலேயும் மாறி மாறி சென்றுக் கொண்டிருப்பது உலக நியதி. இதனை மனோன்மணியும்:

"காலம் என்பது கறங்குபோற் சுழன்று
மேலது கீழா, கீழது மேலா
மாற்றிடும் தோற்றம்" - எனப்புகலும்.

மெய்மையில் செல்வம் ஓரிடத்தில் நில்லாமல் வண்டியின் சக்கரம்போல சுழன்றுக் கொண்டே இருக்கும் என நாலடி நவிலும் நெறியை உணராது வாழ்வது அறியாமையிலும் அறியாமையன்றோ?

கம்பனின் நெறி

பிறருக்காக ஒருவன் சாவது மேலுகைத் தரும் எனக் கம்பன்

"ஆவுக்காயினும், அந்தணர்க்காயினும்
யாவர்காயினும், எளியவர்காயினும்
சாவப்பெற்றவ ரேதகை வானுறை
தெவருந்தொழுந் தேவர்களாகுவர்."

என எவர் துன்புற்றாலும் அவருக்கு உதவி செய்ய வேண்டும். துன்பத்தை நீக்க அவர் உயிரையும் தருவது உயர்ந்ததாம் எனும் விழுமிய நெறி ஒன்றை விதந்தோதுகிறது இராமயணப்பாடல்.

பெருங்கதை கூறும் வாழ்வியல்

தமிழர் மரபு அறநெறி போற்றுதல் நாடும் நலம்பெற எண்ணும் ஆட்சியாலும் நிலங்களையும், நீர் நிலைகளையும் புதுப்பித்தான். நகரத்தையும், வணிகத்தலங்களையும் சீர்படுத்தினான். சிதைந்தவையல்லாது, புதைந்தவற்றையும் புதுக்கினான். கொடுங்கோல் ஆட்சியாகிய அயலவர் ஆட்சியை மாற்றிச் செங்கோல் ஆட்சியில் நாட்டுக்கும், மக்களுக்கும் உரிய செயல்களை முறைப்படுத்தியமை கொங்குவேளிரது பேரறிவுத் திறத்தை வெளிப்படுத்துவதாக அமைந்த வாழ்வியல் நெறி. நாடாள்வோருக்கு இன்றும் போற்றுவதற்குரிய இச்செயல் தமக்கு உற்ற உடம்பாக அரசியல் நடாத்தும் பாங்கினை பகிர்கிறார். நாடாள் வேந்தனுக்கு, கிளை - தாள், துணை - தோள், பல் - மக்கள், கண் - தோழர், முடி - குரவர், அடி - ஏவலர்கள் என விவரித்து குடிதழீ கோலோச்சும் நெறியை ஆளும் அரசுக்கு அறைந்தறைந்து கூறுவது செம்மைக்குரியது.

தேம்பாவணி கூறும் அறம்

அறம் வலியுறுத்த வந்த வீரமாமுனிவர் அறம் செய்ய துணிவார்க்கு எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும். அதற்காக அஞ்சல் கூடாது. எதிர்த்து துணிந்தாலே பயன் உண்டு. இதனை விளக்க கார்முகத்தே அலரும் முல்லையின் செயலையும், கதிர்முகத்து அலரும் தாமரையின் இயல்பினையும்

"கார்முகத்து அலரும் முல்லை
கதிர்முகத்து அலரும் கஞ்சம்
சீர்முகத்து அலரும் நெஞ்சின்
சிலர் துணிந்து அறத்தை செய்வார்"

எனக்கூறும் செய்தி அறத்தை துணிந்து செய்ய அறிவுறுத்தும் வாழ்வியல் நெறியாம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

அருளறம்

பசித்துன்பத்தை தொலைப்பது என்பது மாந்தர்தம் அருளறத்தாலேயே என்று தெளிந்து மணிமேகலை காப்பியத்தில்

"அரசர் தானே அருளறம் பூண்டால்
உண்டியும் உடையும் உறையுளு மல்லது
கண்டதில்"

என்பதில் வேந்தர்களின் அருளறக் கடைமைகளை மக்களும் செல்வரும் மேற்கொண்டு ஒழுகவேண்டும் எனவும், இதை ஏன் வாழ்வியலின் கூறாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பது அனைவரின் விருப்பம்.

முடிவுரை

வாழ்வியல் நெறிகள் பல உள. எளிதாக ஏற்கக்கூடிய வாழ்வியலை பின்தொடர்வதால் சமுதாயம் சிறப்புறும், செழிப்புறும். கடிதான வாழ்வியல் நெறிமுறைகளை நடைமுறைப்படுத்த சமுதாய வல்லுநர்கள் ஆட்சியாளர்கள் நீதித்துறையாளர்கள் என அந்த முறைமைகள் உலாவருமானால் நாடும், அரசியலும், அரசியல் சார் மக்களும் பின்பற்றி ஒழுக சமுதாயம் மேலோங்கும், மிளிர்ந்து மெருகேரும்.

துணைநூற்பட்டியல்

1. இளம்பூரணர் (உ.ஆ), *தொல்காப்பியம் பொருளதிகாரம்*, கழக வெளியீடு, சென்னை, 1970.
2. கா.கோவிந்தன், *பண்டைத் தமிழர் போர்நெறி*, வள்ளுவர் பண்ணை, சென்னை, 1984.
3. சு.வித்தியானந்தன், *தமிழர் சால்பு*, பாரி புத்தகப்பண்ணை, சென்னை, 1971.
4. *பட்டினப்பாலை.* திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,79, பிரகாசம் சாலை,
   சென்னை – 600 001.
5. மறைமலையடிகள். பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, மறுபதிப்பு – 1966. திருநெல்வேலி.
6. சாமிநாதஐயர் உ.வே., *பெருங்கதை*, சாமிநாதஐயர் உ.வே, சாமிநாதஐயர் பதிப்பு - 2000.
7. ஸ்ரீசந்திரன். ஜெ., *பெருங்கதை சிறப்பியல்பு,* வர்த்தமானன் பதிப்பகம் - 2005.
8. பி.ஜி.கருத்திருமன், *கம்பர் கவியும் கருத்தும்*, தமிழ்ப் புத்தகாலயம்,, திருவல்லிக்கேணி, சென்னை-05.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்
Social Civil Guidance by *Thirukkural*

முனைவர்.மா.கலாமணி, ஸ்ரீ வெங்கடேஸ்வரா சர்வதேசமேல்நிலைப்பள்ளி.
ஓத்தக்குதிரை, கோபி வட்டம், ஈரோடு மாவட்டம் - 638476.

Abstract

The article tries to bring down the guidances of "Thirukkural" on civil life. It is very important to live joyous to keep life with ethical codes. "Thirukkural is a ever ending source of diadactic ideas and facts. It is a great boon to have closely studying the virtues enunciated by the classical moral treatise. Hence, the article traces the virtues of life in an integrated manner.

Keywords: Social, Civil Guidance, *Thirukkural*

முன்னுரை

"இலக்கியம்" என்பது தூய தமிழ்ச்சொல். இதனை "இலக்கு - இயம்" எனப் பிரிக்கலாம். இது குறிக்கோளை இயம்புவது என்னும் பொருளைத் தருவது. வாழ்வின் குறிக்கோளை வகையுற இயம்புவதே இலக்கியமாகும். ஆகவே இலக்கியத்தின் துணை கொண்டு அவ்விலக்கியத்திற்குரிய மக்களின் வாழ்வியலை அறிதல் கூடும். தமிழில் இலக்கியத்தின் துணை கொண்டு தமிழ் மக்களின் வாழ்வியலை அறியலாம். தமிழ் மக்களின் வாழ்வியலை அறிவதற்குத் துணை புரிவனவற்றுள் முதன்மை இடம் பெறுவது தமிழ் இலக்கியமேயாகும். தமிழ் இலக்கியம் தொன்மை நலம் சான்றது. அதன் தோற்றக் காலம் எதுவென யாராலும் அறுதியிட்டுக் கூற முடியாது. பலவகை இலக்கியங்கள் அழிந்து போன நிலையிலும் இன்று நமக்குக் கிடைத்துள்ள எட்டுத்தொகை பத்துப்பாட்டு பதினெண்கீழ்க்கணக்கு காப்பியங்கள் மூலம் நம் தமிழ் மக்களின் வாழ்க்கை நெறிமுறைகள், பண்பாடு, நாகரிகம் ,போன்றவற்றை அறிந்து கொள்ள முடிகிறது. அவ்வாறு நீதி இலக்கியமான திருக்குறள் கூறும் மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

நோக்கம்

இக்கட்டுரையின் நோக்கம் நீதி இலக்கிய நுல்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகளை ஆராய்ந்து கூறுவதாகும். இதில் புலவர்கள் கூறிய வாழ்வியல் நெறிமுறைகளையும், மனிதன் மனிதனாக வாழ மனிதனுக்கு இருக்க வேண்டிய இயல்புகள் பற்றியும் தெய்வப்புலவர் வள்ளுவர் கூறிய வாழ்வியல் நெறிமுறைகளையும், மற்ற நீதி நூல்களில் கூறியுள்ள வாழ்வியல் நெறிமுறைகளையும் உலகில் மனிதனாகத் தோன்றிய அனைவருக்கும் உரிய வாழ்வியல் நெறிமுறைகளைப் பற்றிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நெறிமுறைகள்

அதாவது ஒரு சமூகத்தில் மனிதன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று அச்சமுதாயத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் விதிகளே நெறிமுறைகளாகும். இந்நெறிமுறைகள் எழுதப்படாத விதிகள் எனவும் கருதப்படுகிறது. சில மனிதர்கள்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தவறானவர்கள் என முத்திரை குத்தப்படுகிறார்கள் என்றால் அவர்கள் சமூக நெறிகளை கடைப்பிடிக்கத் தெறியாதவர்களாக இருப்பார்கள்

வாழ்வியல் நெறிமுறைகள்

வாழ்வியல் நெறிமுறைகள் என்ற சொல்லிற்கு ஆங்கில சொற்களஞ்சியம் குறிப்பிடும் பொருள் "நுவுர்ஐஊளு" என்பதாகும். "Ethics" என்ற சொல்லுக்கு இணையாக தமிழில் அறநெறிகள் அறிவியல் நன்னெறிக்கோட்பாடுகள், வாழ்வியல் ஒழுகலாறுகள், பண்புகள், ஒழுக்கமுறைகள் முதலான சொற்கள் வழங்கி வருகின்றன. இவற்றுள் வாழ்வியல் நெறிகள் என்ற சொல்லே பரவலான ஏற்பினைப் பெற்றுள்ளது . வழக்கிலும் நிலைபெற்றுள்ளது.

சமூகத்தில் முழுமையும் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவ வேண்டுமெனில் ஒவ்வொரு தனி மனிதனும் தனக்கென்று சில கடைமைகளையும், கட்டுப்பாடுகளையும், ஒழுக்கங்களையும் விதித்துக் கொள்ள வேண்டும் இந்த கடமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் தொகுப்புகளைத் தான் நாம் வாழ்வியல் நெறிமுறைகள் என்று கூறுகிறோம். வேறுவகையில் குறிப்பிடுவது என்றால் ஒரு தனி மனிதன் பிறரிடம் எந்தெந்த பண்புகளை எதிர்பார்க்கிறானோ அந்தப் பண்புகளைத் தானும் பெற்றிருக்க வேண்டும் என என்னும் போது அந்தப் பண்புகள் யாவும் தன் வாழ்வில் பின்பற்ற வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகளாக ஆகி விடுகின்றன.

வாழ்வியல் நெறிமுறைகளின் வகைகள்

உலக சொற்களஞ்சியங்கள் வாழ்வியல் நெறிகளின் பல்வேறு வகைகளை அடையாளம் காட்டியுள்ளன. அவற்றை ஆங்கிலத்தில "The Code of Ethics" என்கின்றனர். வாழ்வியல் நெறிமுறைகள் என்றென்றும் மாறாதவை இவை உலகப் பொதுவானவை. இவை இரு பிரிவுகளாக உள்ளன.

- தனிமனிதவாழ்வியல் நெறிமுறைகள் (Personal Ethics)
- சமூகவாழ்வியல் நெறிமுறைகள். (Social Ethics)

சமூக நெறிகளை அறம் ,பொருள் ,இன்பம் என மூன்றாக பகுத்துக் கூறுவது பண்டைத் தமிழர் மரபு. "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு" என்பது தொல்காப்பிய நூற்பா. இவ்வுலகில் வாழும் அனைத்து உயிர்களும் இன்பத்தைத் தழுவி நிற்கும். இன்ப நுகர்ச்சிக்குத் தேவைப்படுவது பொருள். அப்பொருள் அறவழியில் வர வேண்டும் என்பதே பண்டைத் தமிழரின் வாழ்வியல் அறநெறியாகும். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றுடன் வீடு என்ற ஒன்றையும் சேர்த்து உறுதிப் பொருள்களை நான்கு என்றது பின்னை வழக்கு.

திருவள்ளுவர் கூறும் வாழ்வியல் நெறிமுறைகள்

தெய்வப்புலவர், செந்நாப்போதார் எனப் போற்றப்படும் திருவள்ளுவர் உலக மக்களுக்குத் தேவையான கருத்துக்களை இரண்டே அடியில் கூறியிருப்பது சிறப்பிற்குரியது. முப்பாலில் நான்கு பகுப்பையும் அடக்கிக் கூறியிருப்பது அவரின் தனித்தன்மை ஆகும். இதனையே பின்வரும் திருக்குறள் வாயிலாக உணர்த்துகிறார்

> "வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும். (குறள் எண் - 50)

நீதி இலக்கியங்களை வாழ்வியல் நெறிமுறைகள் நோக்கில் ஆராய்வதற்கு மிகுந்த இடமுள்ளது. அறம் சார்ந்த வாழ்வியல் நெறிகள், பொருள் சார்ந்த வாழ்வியல் நெறிகள், இன்பம் சார்ந்த வாழ்வியல் நெறிகள் என்ற மூன்று நிலைகளில் ஆய்வு மேற்கொண்டுள்ளது.

அறம் சார்ந்த வாழ்வியல் நெறிகள்

அறம் சார்ந்த வாழ்வியல் நெறிகளில் வாய்மை, பொய்யாமை, செய்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்கம் உடைமை, பிறன் இல் விழையாமை, புறங்கூறாமை ,பயனில சொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை பற்றிய சிறப்புக் குறிப்புகள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறள் என்னும் நூலில் திருவள்ளுவர் சுட்டும் வாழ்வியல் அற நெறிகள் ஆகும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

பொருள் சார்ந்த வாழ்வியல் நெறிகள்

பொருளின் நிலையாமைப் பண்பைப் பற்றிப் பேசுவதுடன் நில்லாமல் பொருளின் அருமையையும் தேவையையும், முதன்மையையும் வலியுறுத்திக் கூறியிருப்பது நீதி இலக்கியத்தின் தனித்தன்மை ஆகும்.

"அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (குறள் எண் - 247)

இன்பம் சார்ந்த வாழ்வியல் நெறிகள்

இன்பம் சார்ந்த வாழ்வியல் நெறிகள் என்னும் நோக்கில் நீதி இலக்கியத்தை நுணுகி ஆராயும் போது கிடைக்கும் வாழ்வியல் உண்மைகள் திட்பமும், நுட்பமும் வாய்ந்தவை ஆகும். வெறும் உடல் இன்பம் பற்றி மட்டும் சங்க இலக்கியங்கள் பேசவில்லை. அவற்றிற்கு மேலாக தலைவன் தலைவி உள்ளப்புணர்ச்சிக்குச் சங்க இலக்கியம் முதன்மை தந்துள்ளது. (எ.கா) "அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (குறுந்தொகை 40)

விருந்தோம்பல் பண்பு

தமிழர்களின் இன்னும் சொல்லப்போனால் இந்திய மண்ணின் தலையாய மிகச் சிறந்த குணம் வீட்டிற்கு வந்த விருந்தினரை மனம் கோணாமல் உபசரித்து வழியனுப்புவது.

"செல்லிருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவருக்கு" (குறள் - 86)

வந்த விருந்தினரைப் பேணும் விதம் பற்றி மேலுள்ள குறள் மூலம் கூறியுள்ளார். வீடு தேடி வரும் விருந்தினரை நன்முறையில் உபசரிக்கா விட்டால் அந்த விருந்தினர் நிலை குறித்து,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" (குறள் - 90)

எல்லா மலரினும் மென்னையானது அனிச்சம் பூ. அப்பூவை முகர்ந்து பார்த்தால் வாடி விடும். ஆனால் வரும் விருந்தினர்கள் அப்பூவினும் மென்மையானவர்கள் என்றும் ,அவ்விருந்தினரை முகம் மாறி நோக்கினால் அனிச்சம் பூ வாடுவதனைப் போல விருந்தினர் முகம் வாடிவிடுவர் என்று விருந்தோம்பல் என்ற வாழ்வியல் கூற்றின் மென்மையை அனிச்ச மலருக்கு ஒப்பிடுகிறார் வள்ளுவர். இவ்வாறாக இல்வாழ்க்கையில் வாழ்வியல் கோட்பாட்டைக் கூறும் வள்ளுவர் தனிமனிதனுக்கென்று சில வாழ்வியல் நெறிகளையும் கூறியுள்ளார்.

இன்னா செய்யாமை

ஒருவன் தான் செய்த பாவ புண்ணியங்களின் பலன்களை அனுபவிக்க வேண்டும் என்றும் ஒருவனுக்கு முற்பகல் தீங்கு செய்தால் பிற்பகலிலேயே அத்தீங்கை அனுபவிக்க நேரும் என்ற நீதியையும் வலியுறுத்துகிறார் திருவள்ளுவர் இதனை,

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்." (குறள்- 319)

ஒருவன் தனக்கு இன்னாத செயல்களைச் செய்தாலும் பழிக்குப் பழி வாங்காமல் அவர் நாணும் படி அவருக்கு நன்மை செய்ய வேண்டும். இதனை வள்ளுவர்

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்". (குறள் - 314)

என்று கூறுகிறார்.

புறங்கூறாமை

மனிதனுக்கு மனிதன் தீங்கு செய்யாதது மட்டுமல்ல செய்த தீமையை மன்னித்து விட வேண்டும் என்று கூறும் வள்ளுவர் ஒருவரைப் பற்றி அவர் இல்லாத போது அவரைப் பற்றிப் புறங்கூறுதல் கூடாது. இதுவே சாலச் சிறந்த பண்பு என்று கூறுகிறார். பேசும் போதும் நமக்கும் பிறர்க்கும் பயனுடைய சொற்களையே பேச வேண்டும். பயனில்லாத சொற்களைச் சொல்லக் கூடாது என்பதனை,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்."

என்று அறிவுரை கூறுகிறார்.

இனியவை கூறல்

மனிதனின் வாழ்நாள் சிறிது . அதில் சாதிக்க வேண்டியவை எண்ணற்றவை. கூடிவாழும் மனிதர்களுடன் நல்லுறவு இருந்தால் தான் வாழ்க்கையில் நல்ல காரியங்களைச் சாதிக்க முடியும். நல்லுறவு கொள்ள நல்மொழிகளைப் பேசத் தெரிந்திருக்க வேண்டும். பிறர் மனம் புண்படாத படி பேசத் தெரிதல் வேண்டும் என்றும் கூறியுள்ளார். இனிய சொற்கள் இருக்கும் போது கசப்பான சொற்களைப் பேசுவது கனி இருக்கும் போது காயை உண்பதற்குச் சமமானது என்று கூறுகிறார்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்க் கவர்ந்தற்று." (குறள் - 100)

என்று கூறுகிறார்.

ஒழுக்கம்

தனிமனிதன் ஒருவன் நல்லொழுக்கத்துடன் வாழ்வது அவன் சார்ந்த சமுதாயத்திற்கு உயர்வையும் பெருமையையும் தரும். ஒழுக்கத்தின் சிறப்பையும் ஒழுக்கத்தின் மேன்மையையும் திருவள்ளுவர்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்'' (குறள் - 131)

அறவழியில் பொருளீட்டல்

பொருள் சேர்க்க விரும்பும் மனிதன் அவனுடைய திறத்தினை அறிந்து நேர்மையான சிந்தனையோடு பொருளீட்ட வேண்டும். அவ்வாறு பொருள் ஈட்டுவதால் கிடைக்கும் இன்பம் மிகப் பெரியது என்பதனை அறிந்த வள்ளுவர்,

"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்'' (குறள் - 753)

என்று வலியுறுத்தியுள்ளதை அறிய முடிகிறது. வள்ளுவரின் கருத்தை ஒட்டி ஆடம் ஸ்மித்தும் பின்வருமாறு தனது கருத்தினை, "மனிதனின் வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையானது பொருள் சேர்த்தலாகும். ஒரு நாடு அல்லது ஒரு மனிதன் பொருளினைச் சேர்க்க அயராது உழைக்க வேண்டும். அதன் மூலம் அவன் வளர்ச்சி அடைய முடியும். இதற்கு அவன் திறமையுடன் நேர்மையான சிந்தனையோடு பொருளினைச் சேர்க்க வேண்டும்" என்று கூறியுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

கல்விச் செல்வம்

பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அடிப்படையாக அமைவது கல்வியாகும். கல்வியைச் செல்வமாகக் கருதிய வள்ளுவர்,

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை." (குறள் - 411)

என்று பாடியுள்ளார். அதாவது செவி வழியாக கற்கக் கூடிய கல்வியினை ஒரு செல்வம் என்றும் அதுவே தலையாய செல்வம் என்றும் கூறுகிறார். மதிக்கத் தகாதவர்களைக் கூட மதிக்கும் அளவிற்கு மாற்றும் சிறப்பு கல்விக்கு உண்டு.

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்'' (குறள் - 751)

என வள்ளுவர் கூறியதன் மூலம்," கற்றோருக்கு செல்லும் இடமெல்லாம் சிறப்பு" என்ற வாக்கியம் உருவானது எனலாம். அதற்காக கல்வி கற்காதவன் அவமதிப்புக்கு உரியவர்கள்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்பது பொருளல்ல. அனைவரும் கல்விச் செல்வத்தைப் பெற வேண்டும் என்பது குறிக்கோளாக இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கூடாத நட்பு

யாரை நட்பாகக் கொள்ள வேண்டும் என்று கூறிய பின் யாருடைய நட்பை விலக்க வேண்டும் என்றும் கூறுகிறார். தம்முடைய காரியம் ஆகும் வரை ஒத்திருந்து , காரியம் முடிந்ததும் விலகிச் செல்பவர் நட்பு கூடாத ஒன்று. அன்பு பிணிப்பு இல்லாதவர் நட்பு வைக்கோலில் பற்றியத் தீப்போல நீடித்து நிற்றலின்றி அழியும் மன ஒற்றுமை இல்லாதவர் நட்பு துன்பம் தரும் என்ற எச்சரிக்கையும் செய்கிறார். இதனை வள்ளுவர்,

"வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எறிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்." (குறள் - 435)

அன்பு

அன்பு என்பது உயர்திணைக்கு மட்டும் உரியதல்ல அஃறிணை உயிர்களுக்கும் உரித்தான பண்பாகும். எல்லா உயிர்களும் அன்பால் ஒன்றாக்கப்படுகின்றன. அன்பின் சிறப்பினை உணர்ந்த வள்ளுவர்,

"என்பிலதனை வெயில் போலக் காயுமே
அன்பி லதனை அறம்." (குறள் - 77)

எலும்பு இல்லாத புழு போன்ற உயிரினங்கள் வெய்யில் சுட்டெரித்து அழிப்பது போல, அன்பு இல்லாத உயிர்களை அறம் சுட்டெரித்து விடும் என அன்பின்மை அறத்திற்குப் பகை எனக் கூறுகிறார். அன்பு என்ற பண்பினால் இவ்வையகம் திளைக்கும் என்பதை உணர்ந்த வள்ளுவர் அன்பினைப் பற்றித் தெளிவாகக் கூறியுள்ளார்.

திருக்குறளில் நாகரிகக் கூறுகள்:

மக்கள் எல்லாராலும் விரும்பத்தக்க நாகரிகத்தையே விரும்புவர். தமக்கு நெருக்கமானவர் நஞ்சையே தருகிறார் என அறிந்தும் கண்ணோட்டம் காரணமாக அதை உண்டு அவருடன் பழகுவர் எனும் நாகரிகக் கோட்பாட்டைக் காணலாம்.

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிக வேண்டுவ பவர்" (குறள் - 580)

முடிவுரை

தமிழில் நீதி நூல்கள் காலந்தோறும் வளர்ந்து ஓர தனியிடத்தைப் பெற்றுள்ளன. புதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நீதி நூலான திருக்குறள் உலகிற் சிறந்த தலையாய சிறிதனைகளை செறிவுடனும் ,தெளிவுடனும் மனிதனுக்குத் தேவையான வாழ்வியல் நெறிமுறைகளை எடுத்துக் கூறியதனை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. வரதராசன்.மு. *திருக்குறள்*, சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், மறுபதிப்பு- 2004.
2. வ.சுப. மாணிக்கம் (உ.ஆ). *திருக்குறள்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு- 2000.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

பண்டைய கால விளையாட்டும் அதன் பயன்களும்
Sport of the Ancient Times and its Uses

சு. கலைவாணி, உதவி பேராசிரியை,
கல்வியியல் துறை, அண்ணாமலை பல்கலைக்கழகம், தமிழ்நாடு.

Abstract

The article tries to elicit the sports practices in vogue at the ancient times in Tamil Nadu. Sport is an integral part of the Tamils. They give more awareness to it. Many of the sports are very useful to maintain physical health and mental strength. So, the Tamils followed the sporting habit in their lives. Many of the traditional sports and games are highly interesting but nowadays our children are lokking like the withered petals instead of being a blooming blossom. The main purpose of the article is to bring down to notice about the sports and games. This will enable the elders to insist them to rely on it. Hence, the article traces the different typed of sports and games.

Keywords: Sports, Games, Ancient Times, Uses

முன்னுரை

தமிழகத்தின் பாரம்பரிய திருவிழாக்கள் பண்டிகைகள் சடங்கு சம்பிரதாயங்கள் உணவுகள் இவற்றோடு மறக்கப்பட்ட நமது பாரம்பரிய விளையாட்டைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். பொழுதுபோக்கு என்றால் “தொலைக்காட்சி” விளையாட்டு என்றால் “விடியோகேம்” எனச் சொல்லும் அளவிற்கு இன்றைய சிறுவர்களின் உலகத்தை நவீன சாதனங்கள் அவர்களின் வாழ்க்கையை மாற்றி அமைந்துள்ளது. வாழ்கையின் முக்கியத்துவதை விவரிக்கும் விளையாட்டுகளை சொல்லிக் கொடுக்க இக்கால பெரியோர்களுக்கு நேரமில்லை. உடலுக்கு வலுவூட்டல், வளைந்து கொடுக்கும் தன்மை, தைரியம், விரைவாக செயலாற்றல், மனசக்தி, அறிவுத்திறன் மேம்பாடு, மனக்கூர்மை, படைப்பாற்றல், நினைவாற்றல் மேம்பாடு உட்பட உடல் மனப்பயிற்சியின் எல்லா அம்சங்களையும் கொண்டது நமது பாரம்பரிய விளையாட்டுகள்.

ஒருவர் விளையாட்டில் ஈடுபடும் போது தான் அவரின் பொறுமை, நேர்மை, ஒழுக்கம், கீழ்படிதல் என அனைத்து நற்குணங்களையும் கண்டறிய இயலும் என்கிறார்கள் உளவியல் வல்லுநர்கள். ஆனால் நமது பாரம்பரிய விளையாட்டுகளில் மட்டும் தான் நடுவர், விளையாடுபவர்கள், வேடிக்கை பார்ப்பவர்கள் ஆகிய அனைவரிடமும் தாக்கங்கள் ஏற்படும். மேற்கத்திய நாடுகளின் விளையாட்டுகளில் காணப்படதா பல அம்சங்களை பாரம்பரிய விளையாட்டுகளில் காணலாம். குறிப்பாக தாய் தந்தை பெரியோர்கள் உறவுகள் நட்புகள் என அனைவரின் குணங்களையும் செதுக்குவதாக அமைந்துள்ளது. தமிழனின் பாரம்பரிய விளையாட்டுகள் மூலம் உணர்வுகளைக் கட்டுப்படுத்தவும் கூடி வாழும் இயல்பை வளர்த்துக் கொள்ளவும் வெற்றி தோல்விகளைச் சமமாக நினைக்கவும் கூடி விளையாடவேண்டும் என்ற அழுத்தமான செய்திகளை நமது முன்னோர்கள் வகுத்து சென்றுள்ளனர் அவ்வாறு இருந்த நம் காலம் கடந்த விளையாட்டுகளையும் அவற்றின் சில பயன்களையும் சுருக்கமாக காண்போம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

விளையாட்டு

விளையாட்டு என்பது பொழுது போக்குக்காகவும், மகிழ்ச்சிக்ககாகவும், சில வேளைகளில் கற்பித்தல் நோக்கத்துக்காகவும் நடத்தப்படும் கட்டமைப்புக் கொண்ட ஒரு செயற்பாடு ஆகும். விளையாட்டு சில சமயங்களில் வேலை, என்பதுடன் தொடர்புடையது போல் காணப்படுகிறது. ஆனால், வேலை ஊதியத்துக்காகச் செய்யப்படுவது. விளையாட்டு ஒரு கலை என்றும் குறிப்பிடப்படுவது உண்டு. ஆனால் கலையைப்போல் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒன்றாக விளையாட்டு இருப்பதில்லை. இருந்தாலும், எப்போதும் இவற்றுக்கு இடையேயான எல்லைகள் தெளிவாக இருப்பதில்லை

"ஓடி விளையாடு பாப்பா
நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா.
கூடி விளையாடு பாப்பா"

என்பது பாரதியின் கூற்று. விளையாட்டு அனைத்து மனிதர்களும் இயல்பாக விரும்பி ஈடுபடும் செயற்பாடுகளில் ஒன்று. நாம் விளையாட்டுக்களை போட்டியாக விளையாடுகின்றனர். ஆதனால் மனிதர்கள் வெற்றி தோல்விளை சாதரணமாகக்கொண்டுள்ளனர்.

காலத்தால் மறைந்த பாரம்பரிய விளையாட்டுகள்

நவீனசாதனங்கள் (தொழில்நுட்பம்) நம்மை வசப்படுத்தும் முன்பு கோடைக்காலத்தில் நாம் விளையாடிய விளையாட்டுகள் இன்று வெறும் கனவாகிவிட்டது. அந்த காலங்களில் விடுமுறை நாட்களில் பெரியவர்கள் வீட்டின் திண்ணையில் விளையாடும் விளையாட்டுகள், இன்று நம் கையில் இருக்கும் ஸ்மார்ட்போனில் வந்துவிட்டது. தெருக்களில் சிறுவர் சிறுமிகள் விளையாடிய காலம் மாறி இன்று ஸ்மார்ட்போனில் விளையாடுவதால் தெருக்களும் வெறுச்சோடி கிடைக்கிறது. அப்படி நாம் மறந்த தமிழ் பாரம்பரிய விளையாட்டுகள் சிலவற்றை பார்போம்

பப்புகஞ்சி

"அனைவரும் அமுதக் குழந்தைகள்" என்கிறார் சுவாமி விவேகானந்தர். அந்த அமுதக் குழந்தைக்கு அமுது ஊட்டும் போதே ஒரு விளையாட்டைக் கண்டறிந்தது நமது சிறப்பு "அ" என்னும் உயிரெழுத்தை குழந்தைக்கு கற்றுத் தரும் அன்னை தனது குழந்தைக்கு கற்றுத் தரும் முதல் விளையாட்டு பப்புகஞ்சி இது 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான விளையாட்டு. குழந்தையின் பிஞ்சு விரல்களை தாய் பிடித்து கொண்டு இது சோறு. இது பருப்பு, இது காய், இது ரசம், இது அப்பளம் என வீட்டில் சமைக்கப்படும் உணவுகளை முதலில் அறிமுகப்படுத்தி பின் அனைத்தையும் நன்றாகப் பிசைந்து இது அப்பாவுக்கு இது அக்காவுக்கு இது தாத்தாவுக்கு இது மாமாவுக்கு என அனைத்து உறவுகளுக்கும் கொடுத்து இறுதியாக பாப்பாவுக்கு என விளையாட்டின் வழியே உணவையும் உணர்வையும் குழந்தைக்கு தாய் ஊட்டுவதே இந்த விளையாட்டு. பசித்த மற்றவர்களுக்கு உணவளித்த பின்பே நாம் சாப்பிடவேண்டும் என்றும் இருக்கின்ற உணவை பகிர்ந்து உண்ண வேண்டும் என்ற உயரிய எண்ணங்களை அந்த மழலை மனதில் முதலில் பதியமிடும் விளையாட்டு இது.

பூப்பறிக்கவருகிறோம்

3 முதல் 10 வரையுள்ள குழந்தைகள் இரண்டு அணிகளாக பிரிந்து தெரு அல்லது திறந்தவெளிப் பகுதிகளில் விளையாடும் விளையாட்டு பூப்பறிக்க வருகிறோம். தரையின் நடுவே ஒரு கோடு வரைந்தபின் ஆட்டம் தொடங்கும்.

"பூப்பறிக்கவருகிறோம் பூப்பறிக்கவருகிறோம்
யாரைஅனுப்பபோறீங்க யாரை அனுப்பபோறீங்க,
ராணியை அனுப்பபோகிறோம் ராணியை அனுப்பபோகிறோம்
எந்த பூ வேண்டும்... எந்த பூ வேண்டும்,
மல்லிகைப் பூ வேண்டும் மல்லிகைப் பூ வேண்டும்"

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்று பாடி முடித்தவுடன் இரண்டு அணிகளிலிருந்தும் ஒருவர் கோட்டின் அருகே வந்து ஒருவரையொருவர் தன் அணி பக்கம் இழுக்க வேண்டும், யார் அந்த கோட்டைத் தாண்டுகிறாரோ அவர் அவுட். இது குழந்தைகள் மிகவும் சந்தோஷமாக விளையாடும் விளையாட்டு. குழந்தைகளை பூக்களாக அறிமுகப்படுத்தும் இவ்விளையாட்டின் மூலம் குழந்தைகளின் பதில் சொல்லும் திறன், பாடும் திறன், உடல் வலு, எண்களைப்பற்றிய அறிமுகம் மேம்படுகிறது.

திருடன்-போலீஸ்

கிராமப்புறங்களில் குழந்தைகள் விளையாடிய மற்றொரு அற்புத விளையாட்டு திருடன்-போலீஸ். கோடை காலங்களில் வீட்டிற்குள் அமர்ந்து விளையாடும் விளையாட்டு. இது ஐந்து பேர் சேர்ந்து விளையாடும் விளையாட்டு. ஒரு காகிதத்தை எடுத்து சிறு சிறு சதுரமாக வெட்டி அதில் ராஜா, ராணி, மந்திரி, போலீஸ், திருடன் என எழுதி மடித்து தரையில் போட்டவுடன் ஆளுக்கொரு சீட்டை எடுத்துக்கொள்வர். பின்பு போலீஸ் என்று எழுதியுள்ள சீட்டு யாரிடம் உ்ளளது என்பதை அறிவர். அந்த சீட்டு உள்ளவர் நான் தான் போலீஸ் என்றவுடன் மற்ற நால்வரும் அமைதியாக இருப்பார்கள். போலீஸ் சீட்டு வைத்து உள்ளவர் திருடன் சீட்டு வைத்திரப்பவரை கண்டுபிடிக்க வேண்டும். திருடன் சீட்டு வைத்திருப்பவருக்கு எந்த வெற்றி புள்ளியும் இல்லாததால் அவர் போலீசிடம் தப்பிக்க பல்வேறு முகபாவனைகளை கையாள்வார். அதை கூர்ந்து நோக்கி நால்வரின் திருடனை கண்டறிய வேண்டும். ஒருவரின் முகத்தைப் பார்த்து அவரின் மனநிலையைக் கணிக்கின்ற சவாலான உளவியல் பயிற்சியைக் கொண்டது இந்த திருடன் போலீஸ் விளையாட்டு. இவ்விளையாட்டின் மூலம் இன்பதுன்பங்கள் கள்ளகபடம் எனப் பல்வேறு மனநிலைகளையும் இளம் பருத்திலேயே குழந்தைகள் அறிந்து கொள்வதற்கான பயிற்சி வழங்கப்படு உள்ளதாக அறியமுடியும்.

தன்னம்பிக்கை தரும் நொண்டி விளையாட்டு

நாம் மறந்த பண்டைய விளையாட்டுக்களை முற்றிலும் மறந்த விளையாட்டுகளில் ஒன்று தான் நொண்டி விளையாட்டு. ஒற்றைக்காலில் தவ்வி நடப்பது நொண்டி. ஓடுபவர்களை நொண்டி அடித்துத் தொடுவது நொண்டி விளையாட்டு. நொண்டி அடித்துச் செல்பவர் ஒருவரைத் தொட்டால், தொடப்பட்டவர் ஆட்டத்திலிருந்து வெளியேற வேண்டும். குறிப்பிட்ட எல்லைக்குள் காலை ஊன்றினால் அதற்கு முன் தொடப்பட்டவர் உள்ளே மீண்டும் வந்து ஓடும் வாய்ப்பை பெறுவார். இவ்வாறு நொண்டி விளையாட்டு தொடரும். நொண்டி விளையாட்டிற்கு இத்தனை பேர் விளையாட வேண்டும் என வரைமுறை எதுவும் இல்லை. இதில் எத்தனை பேர் வேண்டுமானாலும் கலந்துக்கொள்ளலாம். இது குழந்தைகளுக்கு நல்ல உடற்பியற்சி ஆகும். நொண்டி விளையாட்டு குழந்தைகளின் உடலுக்கு ஒரு புத்துணர்ச்சியை அளித்து, அவர்களின் சோம்பேறித்தனத்தை குறைக்கிறது. இது கால்களுக்கு இடையே ரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துகிறது. இழப்பில் ஈடுகட்டும் ஆற்றலைத் தருவதோடு, தன்னம்பிக்கையையும் அதிகரிக்கிறது.

பல்லாங்குழி

பெரும்பாலும் வயது வந்த பெண்கள் தங்களது தோழிகளுடன் வீட்டினுள் அமர்ந்து பல்லாங்குழி ஆடுவது வழக்கம். வட்டமாக குழி உள்ள பலகையில் புளியங்கோட்டை அல்லது சோழி அல்லது முத்துகளை சேர்த்து ஆடுவர்கள். கடைசி மணி தீரும் வரை ஆட்டம் நீடிக்கும்.

விரலுக்கு பயிற்சியும் கணக்கு பயிற்சியும் பெற முடியும் என் நம்பினர். பல்லாங்குழி விளையாடினால் நீண்ட நாள் சளித்தொல்லை, கண்பார்வை போன்ற பிரச்சனைகள் குணமடையும் ஆனால் பல்லாங்குழி ஆடவேண்டிய கைகள் இன்று செல் போனில், கம்யூட்டரிலும் பட்டன்களை தட்டிக்கொண்டிருக்கிறது. 40-50 வயதில் கண்ணாடி மாட்டிக்கொண்ட காலம் போய் 4-14 வயதிலேயே கண் பார்வை கோளாறுகளால் கண்ணாடிகள் மாட்டிவிட்டோம் நம் பிள்ளைகளுக்கு.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

விளையாட்டின் பயன்கள்

ஓய்வு என்றால் படுத்து உறங்குவதல்ல, செய்கின்ற சேலையை மாற்றிச் செய்வதும் விருப்பமானவர்களுடன் சேர்ந்து உறவாடுவதும் விளையாடிக்களிப்பதும் ஆகும். "உடலினை உறுதி செய்" என்று கூறிய பாரதியார் "ஓடிவிளையாடு பாப்பா" என்றும் நமக்காக பாடி உள்ளார். சத்துணவு, உடற்பயிற்சி, மாலை நேர விளையாட்டுக்களினால் நம் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம். உடலும் மனமும் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையதால் மனமகிழ்சியினால் உடல் புத்துணர்ச்சி அடைகின்றது.

விளையாட்டுக்களினால் குழு ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, வெற்றி, தோல்வியை ஏற்றுக் கொள்ளும் சகிப்புத்தன்மை, நட்புணர்வு, உற்சாகம் வளருவதுடன் உடலின் உள்ள கழிவு உப்புகள் வியர்வையாக வெளியேறும். அதிக வியர்வை நீராவியாகும் போது நம் உடல் குளிர்ந்து உடல் வெப்பம் சீராகின்றது. வியர்வைச் சுரப்பிகள் நம் உடலின் ஓர் கூலகக் கருவியாகப் பயன்படுகின்றது. நம் உடல் பருமனைக் குறைக்க உதவும் 'டாப்மைன்' என்ற சுரக்கும் பொருள் மூளையில் சுரக்கிறது.

கிராமங்களில் பொதுவாக விளையாடும் விளையாட்டுக்கள் பல்லாங்குழி, தாயம், ஆடுபுலி ஆட்டம், குலை குலையாய் முந்திரிக்காய், பரமபதம், நொண்டி, கண்ணாம்மூச்சி, தட்டாங்கல் மற்றும் கபடி எனப் பல உள்ளன.

குழந்தைகளின் மூளைக்கு கிடைக்கும் ஐந்து நன்மைகள்

குழந்தைகள் வளர்ந்து வேலைக்கான தேர்வுக்குச் செல்லும்போது, அவர்களின் கல்வித்தகுதியோடு, எல்லாவித திறமைகளுக்கும், நல்ல உடல் நலமும், சிறந்த உடல்வாகும் கணக்கில் எடுக்கப்படுகிறது. குழந்தைப்பருத்திலிருந்தே விளையாட்டுகள், உடற்பயிற்சிக் கூடங்களில் சிறப்புப் பயிற்சியில் பங்கேற்று கோடை விடுமுறையிலும் சிறந்த உடல் மற்றும் மனநிலையோடு வளர்வது நமது நாட்டின் வளர்ச்சியாகும்.

விளையாட்டு உடல்பயிற்சியினால் குழந்தைகளுக்கு ஏற்படும் நன்மைகள்,

- உறுதியான தசைகள், எலும்பு வளர்ச்சி, மூட்டு சேரும் இடங்களில் உறுதி.
- அதிக ஆக்ஸிஜன் எடுத்துக்கொள்வதால் பரந்து, விரிந்த ஆரோக்கியமான நுரையீரல்.
- வலிமையான இதயம்.
- சீரான ரத்த ஓட்டம்.
- நன்றாக பசி எடுத்து, ஒவ்வொரு வேளைக்கும் நன்றாக உணவு உட்கொள்ளுதல்.
- உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும், ஒன்றோடு ஒன்று இணைந்து சிறந்த செயல்பாடு.
- எல்லோரோடும் சேர்ந்து விளையாடுவதால் மனிதநேய உணர்வு ஏற்படுதல்.
- சாதி, மத பேதமில்லாமல் நல்ல நண்பர்கள் கிடைத்தல்.
- முன்னேற்றத்தின் காரணமாக நல்ல போட்டி மனப்பான்மை உண்டாகுதல்.
- மனம், உடல் இரண்டையும் விளையாட்டு, உடற்பயிற்சிகளில் செலுத்துவதால் கெட்டப் பழக்க வழக்கங்களுக்கு அடிமையாவது தவிர்க்கப்படுதல்.
- சாதனைகள் வாழ்கைக்கு அவசியம் என்பதை உணரச் செய்யும் வாய்ப்புகள்.
- சுத்தத்தோடு கூடிய ஒழுக்கம்.
- உறுதியான தன்னம்பிக்கை.
- ஆதிக சந்தோஷம்.
- புதுமையாக செய்வது நல்ல பேரும் புகழும் வாங்க வேண்டும் என்ற உத்வேகம்.
- மிக முக்கியமாக நாட்டுப்பற்று ஏற்படுதல்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

விளையாட்டு, உடற்பயிற்சியால் குழந்தைகளின் மூளைக்கு கிடைக்கும் 5 நன்மைகள்

- உடல் வளர்ச்சியோடு கூடிய நல்ல மன வளர்ச்சி காரணமாக பள்ளிப் பாடங்களை நன்றாக புரிந்துகொண்டு, மனதில் பதிய வைத்து நல்ல மதிப்பெண்கள் பெறுகிறார்கள்.
- எந்த முடிவு எடுக்கும்போதும் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். உடற்பயிற்சி, விளையாட்டுகளில் ஈடுபடும் குழந்தைகளின் மூளை, மற்ற குழந்தைகளைவிட 25 சதவீதம் அதிகம் செயல்படுவதாக விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளார்கள்.
- உடற்பயிற்சி உறுதியான இதயத்தை, மூளையை சிறப்பாக செயல்பட தூண்டிக்கொண்டே இருக்கிறது.
- குழந்தைக்கு ஒரு வரப்பிரசாதமாக நினைவாற்றலை அளிக்கிறது.
- மனவலிமை, நடை, உடல் அமைப்புகள் சிறப்புப் பெற்று, மூளை வளர்சியும் தெளிவாக இருப்பதால், உடற்பயிற்சியில் ஈடுபடும் குழந்தைகள் எப்போதும் உலகின் உச்சியில் இருப்பது போல உணர்கின்றனர்.

முடிவுரை

இன்றைய குழந்தைகள் காகித பூக்களல்ல. அவர்கள் பட்டாம்பூச்சிகள். வண்ண மலர்களைச் (பெரியோர்களை) சுற்றியே அவர்கள் உலகம். அந்தவண்ணப் பட்டாம்பூச்சிகளின் எதிர்காலவாழ்வு சிறக்க தேனை வழங்கும் மலர்களாக பெரியோர்கள் (நாம்) இருப்போம். நற்குணங்களை விதைக்கும் நம் பாரம்பரிய விளையாட்டுகளை குழந்தைக்கு கற்றுக் கொடுப்போம். தமிழர்களின் பழங்கால விளையாட்டுகளை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்போம். தமிழர்களின் பழங்கால கலையை மீட்டெடுப்போம். குழந்தைகள் மட்டும் அல்ல நமது தமிழ் பாரம்பரியமும் நமது பொக்கிஷம் என்பதை மறவாமல் இருப்போம்.

துணைநூற்பட்டியல்

1. வானமாமலை.நா., *தமிழர் நாட்டுப் பாடல்கள்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடட், சென்னை, 1964.
2. இளங்கோ.நா., *நாட்டுப்புறக்காதல் பாடல்களும் அகப்பொருள் மரபுகளும்*, காவ்யா பதிப்பகம், சென்னை. 2005.
3. சக்திவேல்.சு., *நாட்டுப்புற இயல் ஆய்வு*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, திருத்திய பதிப்பு, 1983.
4. சுப்புரெட்டியார்.ந., *தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை*, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை,
நான்காம் பதிப்பு, 2002.
5. தமிழண்ணல், *சங்கமரபு*, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2009.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

இலக்கணங்களில் பழமொழிகளின் ஆளுமை
The Influence of Proverbs in Grammar

கிங்ஸ்லி. ஜோ, உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை, ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில் - 629 003.

Abstract

The article tries to explain the influence of proverbs in grammar. The rhyme, metaphor, simile, and other aspects of figures of speech in Tamil grammar has deep influence from the proverbs. The purpose of the article is to find out the glimpses with suitable evidences. "Yapparunkalam" and "Tolkappiam" written by Tolkapppiar elicits lots of authentic quotes about such influences. Hence, the article traces the different typed of sports and games.

Keywords: Influence, Proverbs, Grammar, *Tolkappiam*, Tolkapppiar

பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி. படித்த மக்களின் பேச்சில் உள்ள இலக்கணம் பாமர மக்களின் பேச்சிலும் உள்ளது. படிக்காதவர்கள் சொற்களைத் திருத்தமாக ஒலிக்கின்றனர். நாகரிகமான சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேசுகின்றனர். திருத்தமாக ஒலித்ததும் நாகரிகமாகப் பேசுதலும் இலக்கணம் அல்ல. சொற்களைத் தக்க இடங்களில் அமைத்தலும் சொற்களோடு ஏற்ற உருபு முதலியவற்றை சேர்த்தலுமே இலக்கணம் எனப்படும். இத்தகைய இலக்கணம் படிக்காத மக்களின் பேச்சிலும் உள்ளது. இவ்வாறு ஆராய்ந்தால் நாட்டுப்புற மக்களின் பேச்சிலும் இலக்கணம் உள்ளது.

நாட்டார் வழக்காறுகளுள் பழமொழி நிலைத்த தொடர் அமைப்புடைய வழக்காற்று வகைமையாகும். அதாவது ஒருவழக்காற்றைப் பல முறை சொன்னாலும் ஒரே மாதிரியாகத்தான் ஒருவர் குறிப்பிடுவார். இதனையே நிலைத்தத் தொடரமைப்பு என்பர். இத்தகைய இறுக்கமான அமைப்புடைய சிதைந்து போகும் இழைவுக் கூறுகள் மொழியைச் சார்ந்தமையும், அதாவது வழக்காறுகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் ஒலியன்களும் உருபன்களும் இழைவுக்கூறுகளை அமைக்க உதவும். உதாரணமாகப் பழமொழியின் இழைவு கூறுகள், எதுகையும், மோனையும் இது போன்ற பிறவுமாகும்.

மோனை 1

தொல்காப்பியர் மோனை பற்றிக் கூறும் போது, "அடிதொறுந் தலையெழுத் தொடுப்பது மோனை" (தொல். செய் 86) அதாவது ஒவ்வொரு அடியிலும் முதல் எழுத்து ஒன்று போல் வருவது மோனைத் தொடையாகும்.

"மேனாமினுக்கியை கொண்டவனும் கெட்டான்
மேட்டுல பயிரிட்டவனும் கெட்டான்"
"தட்டான் தாளப் பறந்தல்
தப்பாமல் மழை பெய்யும்"
"கூலி வேலை செய்பவன் மேற்கே பார்ப்பான்
கூத்தாடி கிழக்கே பார்ப்பான்"
"பத்து மிளகு இருந்தால்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

புகைவன் வீட்டிலும் உண்ணலாம்"

"வாதம் போக்கும் முடக்கத்தான்!

வாரிசு கொடுக்கும் முருங்கைத் தான்"

ஆகியப் பழமொழிகளில் மோனைத் தொடை அமைந்திருப்பதைக் காணலாம்.

எதுகை 2

எதுமைப் பற்றித் தொல்காப்பியர் கூறும் போது, "அடி தொறும் முதலெழுத்தொன்றாமல் இரண்டாமெழுத்து ஒன்றின் எதுகையாகும்", என்கிறார். (தொல். செய் 87) அதாவது அடிகள் தோறும் முதல் எழுத்து ஒன்றிவராமல் இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது எதுகைத் தொடையாகும்.

"கரு இல்லாத முட்டையும்

குரு இல்லாத வித்தையும் ஒன்று தான்"

"பணம் பந்தியிலே

குணம் குப்பையிலே"

"எல்லு முறிய வேலை செய்து

பல்லு முறிய தின்னு"

தள்ள எட்டடி பாஞ்சா

பிள்ள பதினாறடி பாயும்"

போன்ற பழமொழிகளில் எதுகைத் தொடை அமைந்திருப்பதைக் காணலாம்.

முரண்

முரண் பற்றித் தொல்காப்பியர்,

"மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே" (தொ.செய்.89) அதாவது அடிதோறும் வந்த சொல்லினாலும் பொருளினும் மாறுபட்டு வருவது முரண் தொடையாகும்.

"மாடு அசைந்து தின்னும்

வீடு அசையாமல் தின்னும்"

இதில் அசைந்து அசையாமல் என்பவை முரண்பட்டு வந்துள்ளன.

"மாமியார் இட்டா மண்குடம்

மருமகள் இட்டா பொன்குடம்"

இதில் மண்குடம், பொன்குடம் எனக் கூறப்பட்டது முரண் தொடையாகும்.

உவமை

உவமைக்காகத் தொல்காப்பியர் உவமையியல் எனத் தனி இயலையே அமைத்துள்ளார். உவமைப் பற்றி தொல்காப்பியர் "ஒருபுடை ஒப்புமை பற்றி உவமை உணர்த்துதல்" என்கிறார். ஏதேனும் ஒரு பொருளை வேறு ஒரு பொருளுக்கு ஒப்புமைப்படுத்திக் கூறுவது உவமை.

"செவிடன் காதுல சங்கு ஊதுவது போல"

செவிடனுடைய காதில் சங்கு ஊதினால் அது அவனுக்கும் கேட்காது. அது போலவே சிலருக்கு எவ்வளவு தான் அறிவுரை கூறினாலும் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதற்கு உவமையாக இது கூறப்பட்டது.

பொழிப்பு 1 - 3

"முதலொடு மூன்றாம் சீர்த்தொடை பொழிப்பே" (யாப்பருங்கலம்- 43)

ஒவ்வொரு அடியிலும் ஒன்றாவது சீரும் மூன்றாவது சீரும் ஒன்றுபோல அமைவது பொழிப்பு எனப்படும்.

குணத்தை மாற்றக் குருவில்லை – பொழிப்பு மோனை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

எண் இல்லாதவன் கண் இல்லாதன் - பொழிப்பு எதுகை

போன்றவை ஓரேடியில் பொழிப்பு மோனையாகவும் பொழிப்பு எதுகையாகவும் அமைவதைக் காணலாம்.

கூழை 1, 2, 3

"மூவொரு சீரும் முதல்வரத் தொடுப்பது
கூழை என்மனார் குறியுணர்ந்தோரே" (யாப்பருங்கலம் - 45)

ஓவ்வொரு அடியிலும் முதல் மூன்று சீரிலும் முதல் எழுத்து ஒன்று போல் வருவது கூழையாகும்.

அப்பன் அருமை அப்பன் மாண்டால் தெரியும் - கூழை மோனை
எட்டின மட்டும் வெட்டும் கத்தி - கூழை எதுகை

போன்றவை ஓரடியில் கூழை மோனையாகவும் கூழை எதுகையாகவும் அமைவதைக் காணலாம்.

ஒரூஉ 1, 4

"சீரிரண்டு இடைவிடத் தொடுப்பது ஒரூஉத் தொடை" (யாப்பருங்கலம் - 41)

ஓவ்வொரு அடியிலும் ஒன்றாவது சீரும் நான்காவது சீரும் ஒன்றுபோல அமைவது ஒரூஉ எனப்படும்.

தவிட்டுக்கு வந்த கைதான் தங்கத்துக்கு வரும் - ஒரூஉ மோனை
தான் ஆடா விட்டாலும் தன் சதை ஆடும் - ஒரூஉ எதுகை

போன்றவை ஓரடியில் ஒரூஉ மோனையாகவும் ஒரூஉ எதுகையாகவும் வருவதைக் காணலாம்.

மேற்கதுவாய் 1, 3, 4

"முதலயற் சீரொழித்து அல்லன மூன்றின்
மிசைவரத் தொடுப்பது மேற்கது வாயே" (யாப்பருங்கலம் - 4, 6)

ஓரடியில் முதற்சீரும் மூன்றாம் நான்காம் சீர்களில் முதல் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது மேற்கதுவாய் ஆகும்.

உள்ளே பகையும் உதட்டிலே உறவுமா? - மேற்கதுவாய் மோனை
எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டென்ன? - மேற்கதுவாய் எதுகை

இவ்வரிகளில் மேற்கதுவாய் மோனையாகவும் மேற்கதுவாய் எதுகையாகவும் இடம் பெறுவதைக் காணலாம்.

கீழக்கதுவாய் 1, 2, 4

"ஈறறயல் சீரொழித்து எல்லாம் தொடுப்பது
கீழக்கது வாயின் கிழமையது ஆகும்" (யாப்பருங்கலம் - 47)

ஓரடியில் முதற்சீரும் இரண்டாம் நான்காம் சீர்களில் முதல் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது கீழ்க்கதுவாய் எனப்படும்.

"எய்கிறவன் ஏய்தால் அம்பு ஏன்ன செய்யும்?" - கீழ்க்கதுவாய் மோனை
"கனத்தால் இனமாகும் பாதைதால் சனமாகும்." - கீழ்க்கதுவாய் எதுகை

போன்ற வரிகளில் கீழ்க்கதுவாய் மோரனையாகவும் கீழ்க்கதுவாய் எதுகையாகவும் வருவதைக் காணலாம்.

முற்று 1, 2, 3, 4

"சீர்தொறும் தொடுப்பது முற்றெனப்படுமே" (யாப்பருங்கலம் - 48)

ஓரடியில் அனைத்து சீர்களிலும் ஓர் எழுத்து ஒன்றுவது முற்று எனப்படும்.

"கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்
முன்னவனே முன்னின்றால் முடியாதப்பொருள் முளதோ?"

போன்றவை ஒரடியில் அனைத்து சீர்களிலும் ஒன்றுபோல் வருவதைக் காணலாம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

அடுக்குத்தொடர்

ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கி வரும் வினைகளை சிறப்பித்து வராமல் விரைவு அச்சம் முதலிய பல பொருள்களை உணர்த்த வரும். தனித் தனியே பிரித்தால் பொருள் தரும் சொல்லாக அமையும். இவ்வாறு பழமொழிகளும் அடுக்குத்தொடரில் வருகின்றது.

"பண்ணப்பண்ணப் பலவிதம்
பழகப் பழகப் பாலும் புளிக்கும்
வரவர மாமியார் வீட்டு கழுதைப் போல
வழவழத்த உறவைப் பார்க்கிலும் வயிரம் பற்றிய பகை நன்று"

போன்ற பழமொழிகள் அடுக்குத் தொடரில் வருவதைக் காணலாம்."

ஒவ்வொரு பகுதிகளிலும் வழங்கப்படுகின்றப் பழமொழிகள் அப்பகுதி மக்கள் பேச்சு வழக்கிலேயே அமைந்திருக்கும். அதுபோலவே மக்களிடையே வழங்கப்படுகின்ற பழமொழிகளும் பேச்சு வழக்கில் உள்ளன. மேலும் இவற்றில் இலக்கணமும் அமைந்துள்ளன. அவற்றை எதுகை, மோனை, முரண், உவமை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று, அடுக்குத்தொடர் எனப் பல இலக்கண வடிவங்களில் பழமொழிகள் நாட்டுப்புற மக்களிடம் வழங்கி வருவதை நாம் அறிய முடிகிறது.

துணை நூல்கள்

1. இளம்பூரணர், (உ.ஆ) - தொல்காப்பியம் பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, முதல்பதிப்பு - 1970.
2. நச்சினார்க்கினியம். தொல்காப்பியம் எழுத்ததிகாரம். தமிழ்மண் பதிப்பகம், சென்னை. 2003.
3. கோபாலையர் தி.வே தழிழ் இலக்கணப் பேரகராதி எழுத்து (தொகுதி.1,2,). தமிழ்மண் பதிப்பகம், சென்னை. 2003.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தொல்காப்பியம் காட்டும் அகவாழ்வு
Civil Life in *Tholkappiam*

அ. கிறிஸ்டியானா, முனைவர் பட்ட ஆய்வாளர்,
தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, திருநெல்வேலி - 627 012.

Abstract

The research article tries to decipher the meaning of 'Akam', domestic life which involves family, love, philanthrophy, fame etc. It gives examples from the poet Nachnarkuiniar. Then, it also deals with'Puram' which focuses mainly with war and feats. In the same manner, it also gives out examples from "Tholkappiam". It tells of the structures and the archetypal meanings of the civil life through the evident sources. Hence, the article esemplasts the meaning of the proposed theme.

Keywords: Civil, Life, *Tholkappiam*

முன்னுரை

தமிழ் மொழிக்கு உயிரும், உடம்பும் என்று மதிக்கத்தக்க சங்க இலக்கியம் பெரும்பாலும் காதல் வாழ்வு பற்றி கூறும் அகவிலக்கியமாகும். 'அகப்பொருள் இலக்கியம் என்று பெயர் பெற்றிருப்பினும். இல்லற வாழ்வு தொடர்பான செய்திகளும், இயற்கைச் சூழல்களும் அரசியல், போரியல் நெறிகளும், உயர்ந்த எண்ணங்களும் இவ்விலக்கியங்களில் நிரம்பக் கிடைக்கின்றன."[1] இத்தகைய அகவிலக்கியங்களில் அமையும் அகவாழ்வு இலக்கண நூல்கள் வழிநின்று இக்கட்டுரை வழியாக காணலாம்.

அகப்பொருள் - விளக்கம்

அகம் என்பது பொதுவாகக் காதற் பாடல்களைக் குறிக்கும். உள்ளத்தில் புலப்படும் உணர்வுகள் அகம் என்றும், போர், வீரம், கொடை, ஆட்சி, புகழ் முதலிய பிற வாழ்க்கைத் துறைகளைப் புறம் என்றும் கூறுதல் தமிழ் மரபாகும் ஆனால் இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் அகம் என்பதற்குத் தனியே விளக்கம் கூறவில்லை எனினும் அதற்கு உரையெழுதிய இளம்பூரணர், "அகப்பொருளாவது போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆய பயன் தானே அறிதலின் அகம்"[2] என்கிறார்.

இதனை பற்றி நச்சினார்க்கினியர் கூறுமிடத்து,

"ஒத்த அன்பான ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய். யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்புறுவதோர் பொருளாதலின் நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகுபெயர்"[3]
என விளக்குவார்.

அகம் என்னும் சொல், மனம், உள்ளிடம், இடம் உள்ளிட்ட பலபொருள் தரும் ஓர் சொல்லாகும். அகமென்பது உள்ளமாகிய மன உணர்வினால் நுகர்ந்து இனபமுறும் காம இன்பத்தை உணர்த்துகிறது. அகம் என்னும் சொல்லுக்கு உள்ளம் என்னும் பொருள் அடிப்படையில் எழுந்த விளக்கங்களாகும். மேலும், இச்சொல் இல்லத்தையும் குறிக்கும். இல்லத்தில் உள்ள அக உறுப்பினர்களான தாய், தந்தை, தலைவி, தோழி, தலைவன், பாங்கன், இளையோர் போன்றோரைக் கொண்டு அமைவதால் அகம் எனப்படும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

அகத்திணை மரபுகள் - விளக்கம்

"எந்த பொருளை எந்தச் சொல்லினால் எந்த நெறியுறச் சான்றோர்கள் சொல்லினார்களோ, அந்தப் பொருளை அந்தச் அந்நெறியுறச் சொல்லுதலே மரபு"[4] என்பர். ஆதலால் இலக்கியங்கள் மரபு வழிப்பட்ட சொற்களால் அமைய வேண்டும். மரபு நெறியிலிருந்து சிறிதளவும் திரிதல் கூடாது எனத் தொல்காப்பியம் அழுத்தந்திருத்தமாக எடுத்துரைக்கின்றது.

"மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபு வழிப்பட்ட சொல்லி னான்"[5]

இதனைப் பற்றி மேலும் ஒரு நூற்பாவில் மரபு திரியமானால், உலகத்துச் சொல்லெல்லாம் பொருளிழந்தும் போகும் என்பதை,

"மரபுநிலை திரியிற் பிரிது பிரிதாகும்"[6]

எனத் தொல்காப்பியம் உணர்ந்துகின்றது. இலக்கண நூல்களும் மரபுநிலை திரியாமை மாட்சிமைக்கு உரியது என்று கூறுகின்றன.

மரபுவழி அகத்தினை மரபுகள்

தமிழில் காலத்தால் முற்பட்டது சங்க இலக்கியம். அதனைத் திணை இலக்கியம் எனில் பொருத்தமுடையதாகும். ஏனெனில், அதனை அகத்திணை, புறத்திணை என்னும் இரு வகையினதாகப் பாகுபடுத்தியுள்ளனர். எனவே, இதனைப் பொருள் இலக்கியம் எனக்கொண்டு அகப்பொருள், புறப்பொருள் என வழங்கப்படுகிறது.

அகப்பொருள் - விளக்கம்

அகப்பொருள் என்பது மனதளவில் உய்த்துணரப்படும் ஓர் உணர்வாகும். அது உள்ளம் மட்டும் நுகரும் பொருளாகும். அதனை உணர்ந்தவாறே கூறவியலாத் தன்மை கொண்டது. உணர்ந்தவரேயன்றிப் பிறர் அறியவியலாததாகும்.

"மணப்பருவமுற்ற ஆணும், பெண்ணும் மனம் ஒன்றுபட்டு இருவரும் ஒருவராய் ஒன்றி வாழும் நிகழ்ச்சியை அகவொழுக்கம்"[7] என்பர்.

அகவொழுக்கம் என்பதே அகத்திணையாகும். அஃது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கனுள், இன்பம் ஒன்றினை மட்டுமே குறிக்கோளாகிக் கொண்டு பாடப்பெறுவன அகப்பொருள் பாடல்களாகும்.

புறப்பொருள் - விளக்கம்

புறப்பொருள் என்பது வெளியுலக வாழ்க்கை பற்றியதாகும். காதல் அல்லாத பிற மானிடப் பொருட்களைப் பற்றியதாகும்.

"புறப்பொருளாவது மறஞ்செய்தலும்,
அறஞ்செய்தலும் ஆகலான் அவற்றான்
ஆயபயன் பிறருக்குப் புலனாதலின் புறம்"[8]

என்கிறார் இளம்பூரணர்.

அகத்திணையும், அமைப்பு முறையும்

சங்க அக இலக்கியங்கள் கூறும் பொருளும், அவற்றைக் கூறும் முறையிலும் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குட்பட்டு விளங்குவதைக் காண முடிகிறது. இவ்வகைப் பாடல்களில் இடம்பெறும் உணர்வுகள் உலகியலில் பொதுத் தன்மையைக் கொண்டு விளங்குகின்றன. எனவே அவற்றின் அடிப்படையில் அமைந்த அகத்திணைப் பொருளான காமமோ பருவம் நிரம்பிய உயர்திணை, அஃறிணை உயிர்க்கெல்லாம் பொதுவாய் அமைந்த ஒன்றாகும். இதனை,

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வருஉம் மேவற்றாகும்".

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்னும் நூற்பாவில் எல்லாவுயிர்க்கும் இன்பமென்பது தன் மனம் பொருந்தி வரும் விருப்பத்தையுடையது என்கிறார் தொல்காப்பியர். இத்தகைய இன்ப உணர்வை, காமத் துடிப்பை நெறிப்படுத்திய பொருளாகக் கொண்டு அமைந்தவை அகத்திணைப் பாடல்களாகும்.

தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற குறிக்கோள் நெறியுடன் வாழ்ந்தவர்கள் சங்கப் புலவர்கள் அதனால் அவ்விலக்கியங்களைப் படைத்து உலகிற்கு வழங்கினர் எனலாம்.

தொல்காப்பித்தில் வழக்கு

நாடக வழக்கும் உலகியல் வழக்கும் இணைந்த புலன் நெறி வழக்கில் அகப்பொருள் பாடல்கள் அமைந்துள்ளதைக் காண முடிகிறது. எனினும், இதனைப் பற்றிக் கூற வந்த தொல்காப்பியர்,

> "வழக்கெனப் பருவ உயர்ந்தோர் மேற்றே
> நிகழ்ச்சி அவர்கட் டாகவான்"[10]

என்ற நூற்பாவில் நூலின் நிகழ்ச்சி உயர்தோரைப் பற்றியதாக இருக்க வேண்டுமெனச் சுட்டுகின்றார்.

> "உலகமென்ப உயர்ந்தோர் மாட்டே"[11]

இதில் வழக்கு என்பது உலகிலுள்ள உயர்ந்தோர் வழக்காதலை நிகண்டுகளும் கூறுகின்றன.

> "உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்
> வழக்குப்பழிப் படுதல் செய்யுட்குக்கடனே"[12]

எனச் செவ்வியல் இலக்கிய மாந்தரையும், அவர் தம் மொழியையும் இலக்கியப்படுத்த வேண்டுமெனத் தொல்காப்பியம் வரையறுக்கின்றது. நாடக வழக்கு, உலகியல் வழக்கு பாடல் சான்ற புலனெறி வழக்கு ஆகிய மூன்றையும் முறையே, "சுவைபட வருபனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல், உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது, இவ்விரு வகையாலும் பாடல் சான்ற கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்க் கூறப்படுவது அகப் பொருள்"[13] என இளம்பூரணர் பொருளுரைப்பதை இங்கு எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

முடிவுரை

தொல்காப்பியத்தின் வழி தமிழர்களின் உண்மையான அடையாளங்களை வெளிக் கொணர்வது அறிஞர்களின் முன்னுள்ள முக்கியக் கடமையாகும்.

துணை நின்ற நூல்கள்

1. வ.சு.ப மாணிக்கம் சங்க நெறி, ப.25.
2. இளம்பூரணனார் (உ.ஆ), தொல் பொருள்., நூல் எ.12, நூ.எ.1.
3. கு.மோகனராசு, திருக்குறளில் மரபுகள் ப.124.
4. இளம்பூரணனார் (உ.ஆ), மு.நூ.நூ.எ.92., நூ. எ. 93.
5. ஆ.இராமகிருட்டிணன், அகத்திணை மாந்தர் ப.1.
6. இளம் பூரணனார் (உ. ஆ), மு.நூ. நூ. எ.3.
7. மேலது நு. எ. 27, நூ . எ. 94.
8. பிங்கல முனிவர், பிங்கல நிகண்டு , சூ. எ 134.
9. இளம்பூரணனார் (உ. ஆ)., மு. நூ. நூ. எ. 21, நூ. எ. 56.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

அற இலக்கியங்களில் ஒழுக்கமுடைமை
Moralhood in Diadactic Literary Works

முனைவர் டே. கிறிஸ்துமணி, உதவிப்பேராசிரியர்
முதுகலைத் தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி – 17.

Abstract

The research article focuses on the diadactic literatures and their insistence on moralhood. After the Sangam period, the formulating of "Pathnenkeelkanaku" books, mainly deals with diadactic literature. They are namely " Thirukkural", " Naladiar", "Palamozhi Nanooru", " Inna Narpathu", "Iniyavai Narpathu", " Nanmanikadigai", " Thrikadugam", " Sirpanchamoolam", "Elathi", "Muthumozhikanchi" and " Aacharakoovai". They deliver diadactic messages which favour life in a bestowed manner. Hence, the article encompasses the ideas from them.

Keywords: Moralhood, Diadactic, Literary Works

சங்க காலத்திற்குப் பின் தோன்றிய சங்கம் மருவிய காலத்து இலக்கியங்களான *பதினெண்கீழ்க் கணக்கு* நூல்களில் பதினோரு நூல்கள் அறம் சார்ந்தவை. அவை *திருக்குறள், நாலடியார் பழமொழி நானூறு, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக்கோவை* என்பன. இவ்வற நூல்களில் ஒழுக்கம் உடைமை பற்றிய கருத்துக்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

'மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே, முழுநிறை வடிவமே அறம்' என்று கூறுவர். அறம் என்ற சொல் ஒழுக்கம் என்னும் பொருள்படும். பிற விலங்குகளைப் போலன்றி மனிதன் ஒழுக்கமுடையவனாக வாழ்வதற்கு வேண்டிய நெறிமுறைகளை அறநூல்கள் வலியுறுத்துகின்றன. "அறமாவது, மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாகும். அது ஒழுக்கம், வழக்கு, தண்டமென மூவகைப்படும்" என்று பரிமேலழகர் விளக்குகின்றார். அறம் என்னும் சொல்லுக்கு தமிழில் எட்டு வகையான பொருள்கள் வழங்கி வருகின்றன. பொதுவாக அது நற்பண்பு அல்லது நல்லொழுக்கம் என்னும் பொருளிலேயே தமிழ் இலக்கியங்களில் வழங்கப் பெற்றிருப்பதை நாம் காணுகின்றோம் என்று க.த.திருநாவுக்கரசு கூறுகின்றார்.

பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்கள் மனித சமுதாயம் ஒழுக்கத்துடன் வாழ வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன. திருக்குறள் அறநூல்களில் தனிச்சிறப்பை பெற்ற நூல். அறத்துப்பாலில் 13-வது அதிகாரத்தில் ஒழுக்கம் உடைமை என்ற அதிகாரத்தை வள்ளுவர் வகுத்துள்ளார். தனி மனிதன் நற்பண்புகள் கொண்டவனாக இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். ஒழுக்கம் உயிரைவிட மேலானது. அதனைக் காப்பாற்ற வேண்டும் என்பதை,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (குறள். 131)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்று கூறுகின்றார். எத்தனை இடையூறுகள் வந்தாலும் ஒழுக்கத்தை விடாது கடைபிடிக்க வேண்டும் (132). சிறந்த குடிப்பிறப்பின் அடையாளம் ஒழுக்கம் (133) பார்ப்பானுக்கு ஓதுதலைவிட ஒழுக்கமே முக்கியம் (134) ஒழுக்கம் உயர்வைத் தரும் (135) துன்பம் நேரும்போதும் சான்றோர் ஒழுக்கம் தவறி நடக்க மாட்டார்கள் (136), ஒழுக்கம் மேன்மை தரும், ஒழுக்கம் இன்மை பழியைத் தரும் (137) நல்லொழுக்கம் நன்மையையும், தீயொழுக்கம் துன்பத்தையும் தரும் (138) பொய், புறங்கூறுதல் கடுஞ்சொல் ஆகிய தீயனவற்றை ஒழுக்கமுடையார் கூறமாட்டார் (139) உயர்ந்தோர் கடைபிடித்த ஒழுக்க நெறிகளைப் பின்பற்ற வேண்டும். அவற்றைப் பின்பற்றாதவர் அறிவற்றவர் (140) என ஒழுக்கம் உடையோரின் உயர்வையும், நன்மையையும், ஒழுக்கமற்றவரின் இழிவையும் வள்ளுவர் விளக்கிக் கூறுகின்றார்.

பழமொழி நானூற்றில் ஒழுக்கம் எனும் அதிகாரம் அமைந்துள்ளது. எனினும் அவற்றுள் ஒருசில பாடல்கள் மட்டும் ஒழுக்கம் பற்றிக் கூறுகின்றன. ஒவ்வொருவரும் தம் உயர் குடிக்கேற்ப சிறந்த ஒழுக்கமுடையவராக வாழ்வது பசு நெய்யின் மென்மேலும் பாலை ஊற்றியது போன்ற இனியது என்பதை,

“விழுத்தொடையர் ஆகி விளங்கி, தொல்வந்தார்
ஒழுக்கு உடையர் ஆகி ஒழுகல், - பழத்தெங்கு
செய்த்தலை வீழும் புனல் ஊர – அ∴தே, நன்
நெய்த்தலைப் பால் உக்குவிடல்” (பழமொழி 34)

எனும் அடிகள் விளக்குகின்றன. மேலும் ஒருவனுக்குப் பொருந்தாத பழி ஏற்படின் ஒழுக்கத்தால் மட்டுமே தீர்க்க முடியும் (40) தீமை வரும் என்றாலும் தனக்கு இழுக்கு தராதவற்றையே செய்தல் வேண்டும் (39) என்று ஒழுக்கமுடைமையின் சிறப்பு வலியுறுத்தப்படுகின்றது.

நான்மணிக்கடிகை, சிறந்த ஒழுக்கங்களைக் கடைபிடிப்பவன் இனியவன் என எல்லோராலும் பாராட்டப்படுவான் (58) என்றும் ‘திருவும் திணை வகையான் நில்லா’ என ஒழுக்கம் இல்லாதவரிடத்துச் செல்வம் தங்காது (39) என்ற கருத்தை வலியுறுத்துகின்றது.

திரிகடுகத்தில் ஒழுக்கம் குறித்து 4 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. மனவுறுதியுடன் கூடிய நல்லொழுக்கம் உடைய ஆசான் உயர்ந்தவர் (26) பழிக்கு அஞ்சுபவனின் நல்லொழுக்கமானது அறத்தின் பயனை நீங்காதவாறு கட்டுகின்ற கயிறு போன்றது (23) தந்தையையும் தாயையும் வழிபட்டு வந்த ஒழுக்கம் உயர்வைத் தரும் (56) குறைவற்ற ஒழுக்கத்தைத் தெளிந்து நடவாதவன் பெற்ற அழகு புதரில் விதைத்த விதையைப் போல பலனற்றுப் போகும் (80) என்று ஒழுக்கம் வலியுறுத்தப்படுகின்றது. உயர்ந்த ஒழுக்கத்தைப் பின்பற்றாதவன் பிறந்தும் பிறவாதவருக்குச் சமம் என்பதை,

“விழுத்திணை தோன்றாதவனும்
பிறந்தும் பிறவாதவர்” (92)

எனும் அடிகள் விளக்குகின்றன.

தம்மை நட்பு கொள்ளாதவரிடத்து அன்பு வைப்பவனும், பெண்களைக் காக்கத் தவறிய முட்டாளும், பண்பற்ற இழிவான சொற்களைப் பேசுபவனும் ஒழுக்கம் கடைபிடியாதவர் என்னும் கருத்தை,

“நண்பு இலார் மாட்டு நசைக் கிழமை செய்வானும்
பெண்பாலைக் காப்பு இகழும் பேதையும், பண்புஇல்
இழுக்கு ஆய சொல்லாடு வானும், - இம்மூவர்
ஒழுக்கம் கடைபிடியாதவர்” (திரி. 94)

எனும் அடிகள் சுட்டுகின்றன. நல்லொழுக்கம் இல்லாதவரை கற்புடையாளர் (திரி. 97) எனக் கூறுகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

சிறுபஞ்சமூலத்தில் ஒழுக்கம் பற்றி, தான் பிறந்த குடியை நினைத்து, நல்லொழுக்கத்திலிருந்து சிறிதும் தவறாமல், பிறர் மதிக்கும்படி நடந்து, பிறரால் சாக என்று சொல்லும்படி ஒழுகாமல் சான்றோரால் வாழ்க என வாழ்தல் வேண்டும் (68) என ஒழுக்கத்தின் செயல்பாட்டைக் கூறுகின்றது. இதனை,

"தான் பிறந்த இல் நினைந்து தன்னைக் கடைப்பிடித்து
தான் பிறரால் கருதற்பாடு உணர்ந்து; தான் பிறரால்
சாவ என வாழான், சான்றோரால், பல்யாண்டும்
வாழ்க! என வாழ்தல் நன்று" (68)

இச்செய்யுள் வாழ வேண்டிய நெறியைச் சுட்டுகின்றது.

முதுமொழிக்காஞ்சி, கல்வியை விட ஒழுக்கமே மேலானது என்பதை, "ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை" (1:1) என்றும் கீழோர் ஒழுக்கம் சிறந்தோரும் பழியார், (முது.3:10) என்றும் இரு கருத்துக்களை முன் வைக்கிறது. ஒழுக்கமில்லாதவரிடம் தமக்குள்ள உறவை வெளிப்படுத்துவது துன்பத்தைத் தரும் என்ற கருத்தை இன்னா நாற்பது எடுத்துக் கூறுகின்றது (இன்னா.28).

ஆசாரக்கோவை

இந்நூல் ஆசாரம் என்பதற்கு ஒழுக்கம் என்றே பொருள் தருகின்றது. முதற்பாடலில் ஒழுக்கத்தின் உயிர்நாடியாக (விதை) பிறர் செய்த நன்மையை மறவாமை, பொறையுடைமை, இனிய சொல் கூறுதல், எவ்வுயிர்க்கும் இன்னா செய்யாமை, கல்வி, உதவி செய்தல், அறிவுடைமை, நல்லவரோடு நட்பு கொள்தல் ஆகிய எட்டு பண்புகளைக் குறிப்பிடுகின்றது. இதனை,

"நன்றியறிதல், பொறை உடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல், அறிவுடைமை,
நல் இனத்தவரோடு நட்டல், இவை எட்டும்
சொல்லிய ஆசார வித்து" (1)

எனும் பாடல் குறிப்பிடுகின்றது.

ஒழுக்கத்தில் தவறாதவர் பெறும் பயன்

வாழ்வில் ஒழுக்கம் தவறாதவர் மிக்க பயன் பெறுவர். அதனை,

"பிறப்பு நெடுவாழ்க்கை, செல்வம், வனப்பு
நிலக்கிழமை, மீக்கூற்றம், கல்வி, நோய் இன்மை,
இலக்கணத்தால், இவ்வெட்டும் எய்துப – என்றும்
ஒழுக்கம் பிழையாதவர்" (ஆ.கோவை 2)

என்ற பாடல் நற்குடிப் பிறந்த, நீண்ட ஆயுள், செல்வம், அழகு, நில உடைமை சொல்வன்மை, கல்வி, நோய் இன்மை ஆகிய தன்மைகளை ஒழுக்கம் பிறழாதவர் அடைவார் என்பதை விளக்குகின்றது (36). மேலும் திறம் கண்டார் நெறியாக துறவிகளைப் பேணுதல், பழிக்கு நாணுதல், தாம் கற்றதை பெருமையாக பெரியோர் முன் சொல்லாமை ஆகியவற்றைக் கூறுகின்றது (ஆ.கோவை 63). மேலும், ஒழுக்கமுடையவர் செல்லக் கூடாத இடங்களாக கூத்தாடுமிடம், விழா நடக்குமிடம், மணம் செய்யுமிடம், கொலை நடக்குமிடம், போர்க்களம், பகைவர் ஆகியவற்றை,

"கூத்தும், விழவும், மணமும், கொலைக் களமும்,
ஆர்த்த முனையுள்ளும், வேறு இடத்தும், ஒத்தும்,
ஒழுக்கம் உடையவர் செல்லாரே; செல்லின்,
இழுக்கம் இழவும் தரும" (ஆசார. 62)

என்ற பாடல் விளக்குகின்றது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 **Available at: www.ijtlls.com**

முடிவுரை

இன்றைய சமுதாயத்தின் மிக முக்கியமான தேவை ஒழுக்கம். பெரியோர் முதல் சிறியோர் வரை எங்கும் ஒழுக்கச் சீர்கேடுகளைக் காண்கிறோம். இவ்வறநூல்கள் இச்சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் தீய ஒழுக்கங்களைக் களைய முயலுகின்றன. மேலும் சங்கம் மருவிய காலத்தில் எழுந்த பதினெண்கீழ்க் கணக்கு அறநூல்களில் நாலடியார் தவிர திருக்குறள் முதலிய பிற அறநூல்களில் ஒழுக்கம் பற்றிய கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. ஒழுக்கத்தின் உயர்வு, மேன்மை, ஒழுக்கத்தைக் கடைபிடியாதவர் எய்தும் இழிவு, பழி ஆகியவற்றைக் கூறி ஒழுக்கம் உயிரைவிடப் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கூறி எச்சரிக்கின்றது. அலைபேசி, இணையதளம் ஆகியவற்றின் பிடியில் சிக்கித் தவிக்கும் இன்றைய இளைய சமுதாயம் ஒழுக்கத்தை கடைபிடிக்காவிடில் மிகப்பெரும் சிக்கலுக்கு ஆளாவார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

துணைநூற் பட்டியல்

1. எம்.நாராயணவேலுப்பிள்ளை. *பதினெண் கீழ்க்கணக்க நூல்கள்.* நர்மதா பதிப்பகம், தி.நகர், சென்னை-1
2. திருக்குறள் வீ.முனியசாமி (உ.ஆ). *உலகப்பொதுமறை திருக்குறள்.* 1983.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

புறநானூற்றில் வாழ்வியல் அறநெறிகள்
Life Oriented Morals in *Purananooru*

ரா.சங்கரி, முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி. – 8.

Abstract

The research article focuses on the Sangam age, the Golden age of the Tamils. The age is noted for the ethical way of living with great awareness. One of the valuable literary work is the "Purananooru". It deals with the feats of the Tamil Triumvirate but in in notion it delivers the ethical code of life at every point. It speaks of hospitality, politics, revering the learned and so on. Hence, the article traces such elements in the verses of "Purananooru".

Keywords: Life, Orientation, Morals, *Purananooru*

முன்னுரை

சங்க காலம் பொற்காலமாகும். அவ்வாறு போற்றுவதற்கானக் காரணம் மக்களின் நெறிப்பட்ட வொழ்க்கை முறையும் மன்னர்களின் வள்ளல் தன்மையும், புலவர்களின் மனிதநேயப் பண்புமே ஆகும். மனித வாழ்வைச் சிறப்பாகவும், உயர்வாகவும் எடுத்துக் கூறுவது புறநானூறு ஆகும். பண்டைத் தமிழர்கள் சில தனித்த உயப் பண்புகளுடன் வாழ்ந்தனர். புகழுக்காக உயிரையும் கொடுத்தனர் அவர்கள் ஆடம்பர வாழ்க்கைக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. உயர்ந்த சிந்தனைகளைக் கொண்டு பரந்த நோக்கோடு சான்றோர்களாக வாழ்ந்தனர். உலக மாந்தர் ஒவ்வொருவருவரும் எவ்வாறு வாழ வேண்டும் என்ற முறை குறித்தும், சிறந்த இலக்கியக் கருத்து வளமும், மனித மாண்பும் நிரம்பியதாகப் புறநானூறு விளங்குகின்றது. இப்புறநானூற்றில் காணப்படும் வாழ்வியல் நெறிகள் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

வாழ்வியல் அறம்

அன்புடமை, பகுத்தறிதல், வாய்மை, குற்றங்கூறல், வினைத்தூய்மை, கள்ளுண்ணாமை, வெகுளாமை ஆகியவற்றை அறங்களாக வள்ளுவர் கூறுகின்றார். 'அன்பு' என்பது வாழும் உயிர்களுக்குப் பொதுவான ஒன்றாகும். இது இயற்கை உணர்வுகளில் ஒன்று. அதனால் தான் மனிதப்பிறவியது விழுமியது என்று சான்றோரால் போற்றப்பெற்றது. பண்டைத் தமிழர்கள் தங்கள் வாழ்க்கையை ஒழுங்கு முறையுடன், அறநெறியுடன் ஒரு வரையறைக்குள் அமைத்துக் கொண்டு அன்பு வழியில் வாழ்ந்தனர். எல்லா நிலைகளிலும் அறத்தை வலியுறுத்திச் சென்றனர்.

அன்பும், கருணையும் மானிடப் பண்பின் இரு கண்களாகும். கடையெழு வள்ளல்களில் ஒருவனான பேகன், பிறருக்குக் கொடுப்பதையே கொள்கையாகக் கொண்டவன். கேட்பவர், தேவைப்படுவோர் யார்? என்று கேட்பதில்லை. தன்னிடம் வருபவர்களைக் கொண்டு உடனே அருள் உள்ளத்துடன் கொடை உயர்வில் செயல்படுபவன் பேகன். இவ்வாறு பண்டைத் தமிழரின் ஒழுகலாறுகளும், அறமும் எவ்விதம் பேசப்பட்டுள்ளன என்பதை உரைக்கிறது.

விருந்தோம்பல்

தன் இல்லத்திற்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பது தமிழர்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

பண்பாடு இல்லற மகளிர்க்கு இன்றியமையாத மாண்புகளுள் விருந்டீதாம்பலும் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதனை தொல்காப்பியர்,

"விருந்து புறந்தறிதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்" (தொல் -1098)

எனக் கூறுகின்றனர். இதனையே சங்க இலக்கியங்களும், மனிதநேயப் பண்புகளில் விருந்தோம்பலே சிறந்த பண்பாடாகப் பேசி நிற்கின்றது. பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பது மனிதநேயத்தின் முதற்படியாகும். நம் சங்கச் சான்றோர் விருந்தோம்பலைப் பெரும் பேறாகவும், கடமையாகவும் கருதி உள்ளனர் என்பதை,

"சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்
இருங் கிளைச் சிறாஅர்க்காண்டும் கண்டும்
மற்றும் மற்றும் வினவுவதும், தெற்றென
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ? சேய்த்தோ? கூறுமின், எமக்கே" (புறம் -173)

எனும் புறநானூற்றுப் பாடல் பசியை நோய் என்றும், உணவை மருந்து என்றும் வழங்குவதால் உணவை அளிக்கும் பண்ணனைப் 'பசிப்பிணி மருத்துவன்' என்று கிள்ளி வளவன் பாடியது பண்ணனின் விருந்தோம்பல் பண்பைப் எடுத்துரைக்கின்றது.

"நெருநை வந்த விருந்தின்று மற்றுத்தன்
இரும் புடைப் பழலான் வைத்தணன் இன்று இக்
கருங் கோட்டுச் சீறியாழ் பணையம்" (புறம் -316)

எனும் பாடலின் மூலம் தன்னை நாடிவரும் விருந்தினர்களை உபசரிப்பதற்காகத் தன் வட்படையையும், சிறிய யாழினையும் பணையமாக வைத்தான் என்று கள்ளிற் கடையத்தனின் விருந்தோம்பல் பண்பை வெண்ணகனார் படம் பிடித்துக் காட்டியுள்ளார். மேலும், ஔவையார் அதியமானின் விருந்தோம்பல் பண்பை, "வெள்ளி வெண் கலந்து ஊட்டல்" (புறம் -390) எனும் வரிகளின் மூலம் வெள்ளி, வெண்கலம் போன்ற பாத்திரத்தில் உணவு படைத்துச் சுற்றத்தார்களின் பசித்துன்பத்தைப் போக்கினான் என்று புகழ்ந்து பாடியுள்ளார். 'தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்' எனும் சிறப்புச் சொற்றொடர் மூலம் தன்னிடம் உள்ள உணவு குறைவாக இருந்தபோதிலும், எவ்வளவு விருந்தினர் வந்தாலும், உணவினை முறையாக உபசரிப்பவர்கள் சங்கத் தமிழ்ப்பெண்கள் என்பதனை,

"தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள்,
நீள்தொடும் பந்தர் ஊன்முறை ஊட்டும்
இற்பொடு மகடூ உப் போல" (புறம் -331)

எனும் வரிகளின் மூலம் தமிழ்ப்பெண்கள் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை உபசரிப்பதில் தலைசிறந்தவர்கள் என்பதை காணமுடிகின்றது.

குடும்பம்

ஒரு ஆணும், ஒரு பெண்ணும் இணைந்து வாழ்வதைக் குடும்பம் எனலாம். அக்குடும்பத்தில் ஒரு குழந்தையோ அல்லது பல குழந்தைகளோ மற்றும் ஆணின் பெற்றோரும் அல்லது பெண்ணின் பெற்றோரும் அக்குடும்பத்தின் உறுப்பினர்களாக இருப்பார்கள். இத்தகைய குடும்பத்தில் இல்லறம் சிறப்பாக இமைய வேண்டுமானால் அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையும் பெறுதல் வேண்டும். இதனை நம் புறப்பாடல்களின் வாயிலாக அறிய முடிகின்றது.

பிசிராந்தையார் எனும் புலவர் தன் தலை நரைக்காமல் இருப்பதற்குக் காரணம் நல்ல மனைவியும், அறிவு நிரம்பிய பிள்ளைகளும் தனக்கு மிகுந்த மகிழ்ச்சி தரும்படி அமைந்திருப்பதே காரணம் என்று கூறுவதன் மூலம் இச்செய்தி உரைக்கின்றது. "மாண்ட என்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

மனைவியொடு, மக்களும் நிரம்பினர்" (புறம் -191) எனும் பாடலடிகள் மூலம் வியந்து கூறியுள்ளார். மேலும் சங்ககாலம் பெண்கள் வறுமையிலும் செம்மையாய் குடும்பம் நடத்தினார்கள் என்பதை,

"குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து,
சிறிது புறப்பட்டன்றோ இலளே" (புறம் -333)

எனும் வரிகளின் மூலம் வீட்டில் எதுவும் இல்லாத நிலையில் வருகின்ற வருந்தினர்களுக்கு முகம் சுளிக்கபமல் விதை நெல்லைக் குத்தி விருந்தாக்கினாள் என்பதன் வாயிலாகச் செம்மையாகக் குடும்பம் நடத்தினர் என்று அறிய முடிகின்றது.

அரசியல்

'Politics' எனும் ஆங்கிலச் சொல்லின் வாயிலாகத் தோன்றியது அரசியல் என்ற சொல்லாகும். சமூகம், குடும்பம், சமயம் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டது அரசு என்ற அமைப்பாகும். சங்க காலத்திய அரசில் மன்னன் பெருமக்கள் மக்களைக் கண்ணாகவும், உயிராகவும், உடலாகவும் கருதினார் என்று பல்வேறு காலங்களில் வாழ்ந்த சான்றோர்கள் கூறியுள்ளனர். சங்ககால மன்னர்கள் எந்நிலையிலும் அறநெறி பிறழாமல், நடுநிலை தவறாமல், நேர்மையுடன் ஆட்சி நடத்தல் வேண்டும் என்பதே சான்றோரின் அறிவுரை நாட்டின் குடிகளைக் காக்கும் மன்னன் செங்கோல் ஆட்சி என்று திருவள்ளுவரும்,

"வேலென்று வென்றி தருவது, மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்" (திருக்குறள்-546)

எனச் சிறப்பித்துள்ளார். சங்ககால மன்னர்கள் அறநெறி தவறாத மாண்புடையவர்களாக விளங்கியுள்ளனர். நல்லாட்சி செய்யும் மன்னன் ஞாயிறு போன்று வீரமும், திங்களைப் போன்று மென்மையும், மழை போன்று கொடைத் தன்மையில் சிறந்தும் வியங்க வேண்டும் என்று முன்னோர்கள் மூன்று அறங்களை வகுத்துள்ளனர்,

"ஞாயிற்று அன்ன நெற்றியில் வெந்திறல் ஆண்மையும்,
திங்கள் அன்ன தன் பெருஞ் சாயலும்,
வானத்து அன்ன வன்மையும் மூன்றும்
உடைய ஆகி" (புறம் -55)

எனும் புறநானூற்று அடிகள் மறத்திலும், அறம் கடைப்பிடித்தவர்கள் சங்ககால மன்னர்கள் என்று சிறப்பிக்கின்றது. போர் என்றால் புனைந்த வீரக்கழல் அணிந்த வீரர்கள் விருப்பம் கொள்வர் என்று தன் நாட்டு வீரர்களின் பெருமையைக் கூறுவது அறநெறியையும், ஆட்சிச் சிறப்பையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

"போர் எனின் புகழும் புனை கழல் மறவர்
காடு இடைக் கிடந்த நாடு நனி சேய
செல்வேம் அல்லேம் என்னார்" (புறம் -39)

எனும் புறப்பாடல் வீரமறவர்கள் காட்டுக்கு இடைப்பட்ட நாடுகள் வெகு தொலைவில் உள்ளன என்பதன் மூலம் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள் பண்டைய வீரர்கள் என்பதைக் கோவூர்க்கிழார் பாடியுள்ளமைச் சோழ நலங்கிள்ளியின் நல்லாட்சிக்குச் சிறந்த சான்றாக அமைகின்றது.

மனிதநேயப் பண்புகள்

மனிதநேயம் என்பது மனிதர்களிடையே காணப்படும் அன்புணர்வைக் குறிப்பதாகும். ஒருவரின் மனம் நெகிழும்படி மற்றொருவர் அவர்மேல் வெளிப்படுத்தும் அன்பும், நட்பும் கலந்த உணர்வே மனிதநேயம் எனலாம். மனிதநேயம் இரக்கத்தை வெளிக்காட்டும் கண்ணாடி ஆகும். மனிதநேயப் பண்புகள் பிறருக்கு உதவுதல், பசி, துன்பத்தை துடைத்தல், பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமை, பிற மனிதர்களை மதித்தல், கலிங்கம் நல்கல், கற்றோரைப் போற்றும் பண்பு எனும் நோக்கில் புறநானூறு அமைந்திருக்கிறது. கிள்ளிவளவன்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

மலையமான குழந்தைகளை யானையின் முன் இட்டுக் கொல்ல முயன்றான். கோவூர்கிழார் எனும் புலவர் சோழ மன்னர்களின் மரபினை எடுத்துக்கூறி அதனைத் தடுத்து நிறுத்தினார்.

"நீயே புறவின் அல்லல் அன்றியுமி, பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை,
....விருந்தின புன் கணோ உடையர்
கேட்டனை ஆயின், நீ வேட்டது செய்ம்மே" (புறம் - 46, 1-8)

எனும் பாடல் வரிகள் மனிதநேயத்தின் உயர் தன்மையை உயர்த்திக் காட்டுகின்றது.

கலிங்கம் நல்கல்

'ஆள் பாதி ஆடை பாதி' எனும் பழமொழிக்கேற்ப ஒரு மனிதனின் அழகையும், மதிப்பையும் உயர்த்திக் காட்டும் கருவியாக ஆடை திகழ்கின்றது. அவன் அணிகின்ற உடையை வைத்து மதிப்பிடலாம். இதனையே 'உண்ணாமல் போனாலும் உடுத்தாமல் போகாதே' எனும் பழமொழியின் வாயிலாக அறிய முடிகிறது. இதனைப் புறநானூற்றுப் பாடல்களும் படம் பிடித்துக் காட்டுகின்றன. சங்க காலத்தில் வறுமையால் வாடிய இரவலர்கள் புரவலர்களைப் பார்த்ததும் முதலில் பெறுவது உடுத்த ஆடையாகும்.

"முதுநீர்ப் பாசி அன்ன உடைகளைந்து
திருமலர் அன்ன புதுமடிக் கொளீஇ" (புறம் -390)

எனும் ஔவையின் பாடல் அதியமானின் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றது. இணைப் பொருநன் கிழிந்திருந்த கந்தலான ஆடையை அணிந்திருந்தான். அதைக் களைந்து மெல்லிய இழைகொண்டு நெய்த புது ஆடையை வழங்கினான் அதியன் மகன் பொகுட்டெழினி.

"ஊர் உண் கேணிப் பகட்டு இலைப்பாசி
வேர்ப்புரை சிதா அர் நீக்கி, நேர்கரை
நுண்நூல் கலிங்கம் உட்டு" (புறம் -392)

எனும் வரிகளின் மூலம் எழினியின் இரக்கக் குணத்தை ஔவையார் சிறப்பாகப் பாடியுள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

கற்றாரைப் போற்றும் பண்பு

தனிமனித நாகரீக வளர்ச்சிக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைவது கல்வி ஆகும். சமுதாயத்தில் காணப்படும் மூடநம்பிக்கை என்னும் இருளைப் போக்கி நம்பிக்கை எனும் வெளிச்சத்தைக் கொடுக்கும் கலங்கரை விளக்காகக் கல்விச் சுடர் விட்டு ஒளிர்கிறது. அத்தகைய கல்வியைப் பிச்சை எடுத்தாவது கற்க வேண்டும் என்பதைப் 'பிச்சைப் புகினும் கற்கை நன்றே' எனும் வரிகளின் மூலம் அறிய முடிகிறது. சங்க கால மன்னர்களும், மக்களும் கற்றவர்களைப் போற்றினர். கல்வியைப் போற்றினர்.

"அறியாது ஏறிய என்னைத் தெறுவர
இரு பாற்படுக்கும் நின் வாள் வாய் ஒழித்ததை
அதுஉம் சாலும், நல் தமிழ் முழுது அறிதல்
அதனொடும் அமையாது, அணுக வந்து, நின்
மதனுடைய முழவுத்தோள் ஒச்சி தண்ணென
வீசியோயே" (புறம்- 50.8-13)

எனும் பாடல் மூலம், சேரன் இரும்பொறை முரசு கட்டிலில் ஏறியது தவறு எனத் தண்டிக்காது கவரி வீசினான் என்பது மோசிகீரனின் தமிழ்ப்புலமையைப் போற்றுமாறு அமைந்துள்ளது. கற்றாருக்குச் சிறப்பளித்தலே சிறந்த அறம் என்று கூறப்பட்டுள்ளது.

நிறைவாக

சங்க இலக்கிமான புறநானூறு ஒப்பற்ற அறிவுச் சுரங்கமாக, படிப்போருக்கு இன்பம் நல்குவதுடன் வாழ்வியல் அறத்தையும் உணர்த்தி வாழ்வாங்கு வாழ்வதற்குத் துணை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

புரிகின்றது. சங்கப்புலவர்கள் தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்தனர் என்பதைப் பெருமித உணர்வோடு எடுத்துக்காட்டும் சிறந்த இலக்கியமாகப் புறநானூறு விளக்குகிறது.

துணைநூற்பட்டியல்

முதன்மைச்சான்றாதாரங்கள்

1. புறநானூறு (மூலமும் உரையும்) புத்தகம்-1, 2 - செயபால் இரா, முனைவர், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41- பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை- 600 098, முதல் பதிப்பு, ஏப்ரல்- 2004.

துணைமைச்சான்றாதாரங்கள்

1. *தமிழ் நிகண்டுகள்*, தொகுதி-1 - சுப்பிரமணியன் ச.வே, (ப.ஆ), மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 608 001, முதற்பதிப்பு – 2008.
2. *தொல்காப்பியம்*, ச.வே. சுப்பிரமணியன் (உ.ஆ), மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600 108, எட்டாம் பதிப்பு – 2006.
3. *பழந்தமிழர் அரசியல் கோட்பாடுகள்*, தேவநேயப்பாவாணர். ஞா, மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600 108,

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

நாட்டார் கதைக்குடும்பம்
Classification of Nattar (County) Tales

முனைவர் கு.சண்முகப்பிரியா, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரி, சாத்தான்குளம்.

Abstract

The research paper targets to evince the classification of the Nattar (county) tales. Of Tamil nadu. The classification of them is very vital because to identify the similar types in the tales. For eg. "Cindrella" is a western tale tales around the crudeness of the stepmother. Likewise in Tamilnadu there are many tales are regarding to the cruelness of stepmothers. These are the very important need to classify these gentes. Hence, the research article traces such evidences to classify the genre family.

Keywords: Classification, Genre, Nattar (County), Tales

முன்னுரை

வாய்மொழிக் கதைகளில் புராணம், பழமரபுக்கதை, நாட்டார் கதை, வேடிக்கைக்கதை என்னும் நான்கு பெரும் பிரிவுகள் உள்ளன. இவற்றுள் நாட்டார்கதையில் பலவகையான கதைகள் அடங்கும். இவற்றை வகைப்படுத்த உலகளவில் பலமுறைகள் பின்பற்றப்படுகின்றன. தாவரவியல், விலங்கியல் ஆகிய புலங்களில் தாவரங்களையும், விலங்குகளையும் வகைப்படுத்த 'குடும்பம்' (Family) என்னும் கருத்தாக்கம் பயன்படுத்தப்படுகின்றது. ஒத்த பண்புகளைக் கொண்ட நாட்டார் கதைகள் ஒரே பண்பாட்டிற்குள்ளும் வெவ்வேறு பண்பாடுகளிலும் வழக்கிலிருந்து அறிய முடிகின்றது.

வகைப்படுத்துதல்

நாட்டார் வழக்காற்றியல் புலத்தில் வாய்மொழிக்கதைகள் இன்றியமையாத இடத்தை வகிக்கின்றன. உலகளவில் இவை குறித்த ஆய்வுகளே மிகுதி என்பது குறிப்பிடத்தக்கது. வழக்காறுகளை வகைப்படுத்தும் முறையியல்களும் வாய்மொழிக் கதைகளில் இருந்தே தொடங்கப்பெற்றன.

"ஒரே மாதிரியானவற்றை இனங்கண்டு ஒன்றாக்குதலே வகைப்படுத்துதல்" என்பர் (தே.லூர்து 2000: 52) ஒரே மாதிரியானவற்றை எவ்வாறு இனங்காண்பது? அதற்கான அலகுகள் என்ன? என்ற கேள்விகள் நாட்டார் வழக்காற்றியல் புலத்தில் மீண்டும் மீண்டும் எழுப்பப்படுபவையாகும். வாய்மொழிக் கதைகளை வகைப்படுத்த கதைக்கூறு (Motif), கதை வகை (Tale type) ஆகிய அலகுகள் அன்டி, ஆர்னி (Aanti, Aarne) போன்றவர்களால் அறிமுகம் செய்யப்பெற்றன. இவ்வலகுகளை ஸ்டித் தாம்சன் செழுமைப்படுத்தி 1951இல் தெளிவாக வரையறுத்துக் காட்டினார்.

வாய்மொழிக்கதைகளை வகைப்படுத்த பல்வேறு வகையான அலகுகள் உலகளவில் பயன்படுத்தப்படுகின்றன. அவை கதைக்கூறு, கதைவகை, அடிக்கருத்து, நம்பிக்கை, காலம், இடம், வகை மாதிரி பாத்திரங்கள், கதைக்கரு, பயன்பாடு, சூழல், கதைகேட்பவர்கள், கதைசொல்லி, கதையின் அளவு ஆகியவையாகும். ஒவ்வொரு ஆய்வாளரும் வெவ்வேறு அலகுகளைப் பயன்படுத்துவதால் குறிப்பிட்ட ஒரே கதை வெவ்வேறு வகையைச் சேர்ந்ததாக

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

வகைப்படுத்தப்படுவதைக் காணலாம். அமைப்பியல் அடிப்படயிலான வகைப்படுத்துதல் மூலமே இந்தச் சிக்கலைத் தவிர்க்கமுடியம் என்பது விளாதிமிர் பிராப்பின் (1968) கருத்தாகும்.

குதைகளை அமைப்பியல் ஆய்வுக்குட்படுத்திப் பின்னர் வகைப்படுத்துவதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதை அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஞா.ஸ்டீபன் 1984:112) பல்வேறு வகைக்கதைகள் கலந்த ஒரு கதைத் தொகுப்பை அமைப்பியல் ஆய்வுக்குட்படுத்துவது இயலாது. ஒரு குறிப்பிட்ட வகை கதைத் தொகுதியையே அமைப்பியல் ஆய்வுக்கு உட்படுத்த இயலும். சான்றாக தேவதைக் கதைகள், மூடக்கதைகள், தந்திரக்கதைகள் என்பன போன்ற தனித்த வகைமைகளையே தெரிவு செய்ய இயலும். அமைப்பியல் ஆய்வுக்குட்படுத்தும் முன்னர் ஒரு வகையான வகைப்படுத்துதல் தேவையாகும்.

பனுவலிடை உறவு

ஒரு கதை ஒன்றுக்கு மேற்பட்ட பண்பாடுகளில் வழக்கில் இருக்கலாம். ஸ்டித்தாம்சனின் கதை வகை எண்ணற்ற கதைகள் ஒன்றுக்கு மேற்பட்ட பண்பாடுகளில் சிறுசிறு மாற்றங்களுடன் வழக்கிலிருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. சான்றாக சின்ட்ரெல்லா கதையைக் குறிப்பிடலாம். சிற்றன்னையின் கொடுமை என்பதே சின்ட்ரெல்லா கதையின் அடிக்கருத்தாகும. இக்கதை இந்தியா உட்பட உலகின் பல்வேறு நாடுகளில் வழக்கில் உள்ளது. எப்படித் தாம்சனின் கதைவகை அடைவில் இக்கதை AT 510 என்ற எண்ணின் கீழ் அடைவு செய்யப்பெற்றுள்ளது. இவ்வெண்ணின் கீழ் 1000க்கும் மேற்பட்ட வடிவங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. மேலும் AT 510A, AT510B ஆகிய எண்களின் கீழும் இக்கதையின் திரிபு வடிவங்கள் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

அடிக்கருத்து உரவு

AT 510B இல் இடம் பெற்றுள்ள கதை வடிவத்தில் தாய் இறந்தபின் தந்தை தன் மகளைத் திருமணம் செய்துகொள்ள விரும்ப, அவள் வேலைக்காரியின் உதவியுடன் இளவரசன் ஒருவனைத் திருமணம் செய்து கொள்கிறாள் என அமைகின்றது.

1) தாயை இழந்த மகள் கொடுமைக்குள்ளாதல்.
2) தாயின் ஆவி அல்லது வேறு ஒருவர் மூலம் மாயாஜால உதவிபெறுதல்.
3) இளவரசனைத் திருமணம் செய்தல்.

சின்ட்ரெல்லா கதையைக் போன்றே தமிழிலும் பொதுவான அடிக்கருத்துகளைக் கொண்ட கதைகள் பல வழக்கிலுள்ளன. ஒரே கதையோடு தொடர்புடைய ஏராளமான வடிவங்களும் காணப்படுகின்றன. சான்றாக இராமாயணக்கதை, மகாபாரதக்கதை, கோவலன் கண்ணகி கதை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இக்கதைகளுக்கு ஏராளமான வடிவங்களும் தோற்ற உறவுக் கதைகளும் வழக்கில் இருப்பதைக் காணலாம். “கிருஷ்ணன் தூது, பஞ்சபாண்டவர் வனவாசம், கர்ணமகாராஜன் சண்டை, தருமர் அசுவமேத யாகம், பஞ்சபாண்டவர் வைகுந்தர்கும்மி, வைகுந்த அம்மானை, ஆதிபருவம், விராட பருவம் போன்றவை மகாபாரதத்தைத் தழுவியமைந்தவை. அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை, புலந்திரன் களவுமாலை, புலந்திரன் தூது, ஆரவல்லி சூரவல்லி கதை, அபிமன்னன் சுந்தரி மாலை, பொன்னுருவி மசக்கை, ஏணியேற்றம், துரோபதை குறம் போன்றவை மகாபாரதக் கதைமாந்தரையும், அதில் காணப்படாத புதிய மாந்தரையும் கொண்டு சிணைத்தவை” (தே.லூர்து 1997: 1998)

ஒரே மாதிரியான அடிக்கருத்துகள், தோற்றத்தின் அடிப்படையிலன உறவு ஆகியவற்றின் காரணமாக ஒன்றோடொன்று தொடர்புடைய கதைகளை ஒன்று சேர்க்கும் போது அக்கதைகள் அனைத்தும் அடிக்கருத்து, நம்பிக்கை, சூழல், பயன்பாடு, வகைமாதிரி பாத்திரம் ஆகிய கூறுகளில் ஒத்த தன்மையுடையதாக இருக்கும் என்று எதிர்பார்க்க இயலாது. சான்றாக மகாபாரதத்தோடு தோற்றத் தொடர்புடைய கதைகளைக் குறிப்பிடலாம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தோற்ற உறவு

மகாபாரதத்திலிருந்து கிளைத்த கதைகளில் அடிக்கருத்துகள் வேறுபட்டாலும் தோற்ற உறவு எல்லாக் கதைகளுக்கும் ஒன்றுதான் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு விளக்கப்பெற்ற சான்றுகளின் மூலம் சுதந்திரமான தனித்த கதைகள் என்று தோற்றமளித்தாலும அவை ஏதோ ஒருவகையில் ஒன்றோடொன்று உறவுடையனவாகவே காணப்படுகின்றன என உணரலாம். கதைகளுக்கிடையிலான இந்த உறவுகளைக் கண்டுபிடிப்பதன் மூலம் அக்கதைகளை வெவ்வேறு தொகுதிகளால் பிரித்துப் பார்க்கலாம். இதற்குப் ‘குடும்பம்’ என்ற கருத்தாக்கத்தைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் உள்ளன. ஒத்த மரபணுப் பண்புகளைக் கொண்டு தாவரக் குடும்பங்களை அல்லது விலங்குக் குடும்பங்களை இனங்காண்பது போல் ஒத்த பண்புகளைக் கொண்ட கதைகளை இனங்கண்டு அவற்கைக் கதைக் குடும்பங்களாகப் பிரித்து பார்க்க இயலும். ஒத்த அடிக்கருத்து அடிப்படையில் சின்ட்ரெல்லா கதைத் தொகுதியைச் சின்ட்ரெல்லா கதைக் குடும்பம் என்றும், மகாபாரதக் கதைக்தொகுதியை மகாபாரதக் கதைக்குடும்பம் என்றும் அடையாளப்படுத்தும் வாய்ப்புகள் உள்ளன.

கதைக்குடும்பம்

கதைக்குடும்பம் என்னும் கருத்தாக்கத்தின் அடிப்படையில் கதைகளை வகைமைப்படுத்த முதலில் கதைக்குடும்பம் என்றால் என்ன? என்பது வரையறுக்கப்பட வேண்டும். மேலும் கதைக்குடும்பத்திற்குரிய அடிப்படைப் பண்புகளும் தெளிவாக்கப்படல் வேண்டும். கதைக்குடும்பம் என்னும் கருத்தாக்கம் நாட்டார் வழக்காற்றியல் புலத்தில் இதுவரை பேசப்படவில்லை. ஆனால் ஊலஉடந என்னும் கலைச்சொல் குறிப்பிட்ட ஒரு கதையோடு தொடர்புடைய வெளிப்டையாகத் தெரியும் கதைத் தொகுதியை அடையாளப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றது. ‘குடும்பம்’ என்னும் கருத்தாக்கம் மொழியை வகைப்படுத்துவதில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பெற்றுள்ளது. இதற்கு சால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூல் தக்க சான்றாகும். தொகுதிகளை அல்லது கணங்களை (Sets) இனங்கான ‘குடும்பம்’ என்னும் கருத்தாக்கம் பொருத்தமுடையதாக அமையலாம்.

நாட்டார் அவர்தம் பண்பாட்டு மரபுகளுக்கேற்ப வழக்காறுகளை வகைமை செய்யும் ஒருங்கமைப்பைக் கொண்டுள்ளனர். “ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் வகைமை குறித்த ஓர் ஒழுங்கமைப்பு உள்ளது என்பதை மறுக்க இயலாது. இந்த ஒழுங்கமைப்பு தெளிவற்றதாக இருக்கலாம் அல்லது குழப்பமானதாக இருக்கலாம் அல்லது கல்பிப்புலம் சார்ந்த கருத்தாக்கங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் வசப்படாததாகவும் இருக்கலாம். இருப்பினும் பண்பாட்டினால் உருவாக்கப்பட்ட வகைமை ஒழுங்கமைப்பு கருத்துப்புலப்படுத்ததில் இன்றியமையாத பங்கு வகிக்கின்றது என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும்”. (ஞா.ஸ்டீபன் 2003 : 154) இவ்வாறு நாட்டாரால் உருவாக்கப்படும் வகைமைப் பெயர்கள் இன வகைமை என அழைக்கப்படுகின்றது. அழிப்பாங்கதை, சொலவடை, ஒப்பாரி தாலாட்டு போன்ற வகைமைப் பெயர்கள் குறிப்பிட்ட வழக்கற்றுத் தொகுதியைத் தனித்தனியாகப் பிரித்து அடையாளங்காட்டுபவை ஆகும்.

கதைக்குடும்பம்: பண்புகள்

கதைத் தொகுதியை அடையாளப்படுத்தும் போது வகைமையை விட பனுவலுக்வே முதலிடம் தருகின்றனர் எனலாம். “ஒரு வகைமையில் வரும் செய்தி இன்னொரு வகைமையில் வந்தமையலாம் அல்லது ஒரே செய்திப பல வகைமைகளில் பயின்று வரலாம். இருந்தாலும் வகைமையின் உள்ளடக்கம் என்பது பொதுவானது. அது பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்டதாக இருக்கலாம். இவ்வாறு பெறப்படும் உள்ளடக்கம் ஒரு குறிப்பிட்ட மரபில், ஒரு குறிப்பிட்ட அடிக்கருத்தை வெளிப்படுத்துவற்கான எவ்வாறு ஒரு குறிப்பிட்ட வகைமையைத் தேர்வு செய்கிறது? ஒரு குறிப்பிட்ட மரபு அல்லது பண்பாடு இதனை எவ்வாறு செயலாக்கம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

செய்கின்றது? என்பதனை உற்றுநோக்குவதன் வாயிலாக வகைமைகள் எவ்வாறு உருப்பெறுகின்றன என்பதனை அறிய முடியும்" (ஞா.ஸ்டீபன் 2003 : 153) வகைமைகள் உருவாக்கத்தின் அடிக்கருத்து இன்றியமையாத இடத்தை வகிக்கின்றது என்பதையே மேற்கண்ட கருத்து வலியுறுத்துகின்றது.

ஒரு கதை வகைமைக்குள் ஏராளமான உள்ளடக்கத் தொகுதிகள் இடம் பெறலாம். ஒவ்வொரு தொகுதியும் தனக்கே உரிய தனித்துவமான சில அடிக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இத்தொகுதியின் உள்ளடக்கம் பகுதிக்குப் பகுதி பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடலாம். இருப்பினும் அடிக்கருத்து நிலையில் பெரும்பாலும் அவை மாறுவதில்லை. அடிக்கருத்தில் மாற்றம் ஏற்படும்போது அது இன்னொரு தொகுதிக்கு உரியதாக அடையாளப்படுத்தப்படும். சின்ட்ரெல்லா கதைக்தொகுதி அடிக்கருத்தின் அடிப்படையிலேயே அடையாளப்படுத்தப்படுகின்றது. பிற கதைக் குடும்பங்களிலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்ட சில அடிக்கருத்துகளை அல்லது கதைக் கூறுகளைத் தனித்தன்மையுடையதாகப் பெற்றிருக்கும். இப்பண்புகளைக் கொண்டு நாட்டார் கதைகள் எவ்வகையான கதைக் குடும்பங்களைச் சார்ந்தவையாக உள்ளன என்பதை இனங்காணலாம்.

முடிவுரை

ஒரு மரபில் அல்லது பண்பாட்டில் எண்ணற்ற கதைகள் வழக்கில் இருந்தாலும் அவை எண்ணிக்கையில் குறைந்த கதைக் குடும்பங்களைச் சார்ந்தவையாக இருக்க இயலும் என்ற கருத்தை இக்கட்டுரை முன்வைக்கிறது. அடிக்கருத்து, தோற்ற உறவு ஆகியவற்றின் அடிப்படையில் உறவுடைய கதைக் தொகுதியைக் 'கதைக்குடும்பம்' எனக் கருதலாம். கதைகளை வகைப்படுத்த கதைக்குடும்பம் என்னும் கருத்தாக்கத்தைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் உள்ளன என்று கருதப்பெறுகின்றது.

துணைநின்ற நூல்கள்

1. லூர்து. தே. 2000 *நாட்டார் வழக்காற்றியல சில அடிப்படைகள்.* நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையம், பாளையங்கோட்டை.
2. லூர்து. தே. 1997 'அணிந்துரை' நாட்டுபுறக் கதைகள் (பதிப்பாசிரியர்கள் கி.ராஜநாராயணன், கழனியூரன்) நீலக்குயில் வெளியீடு, சென்னை.
3. ஸ்டீபன்.ஞா . 2003 "வகைமைக்கோட்பாடு" நாட்டுப்புறவியல் கள ஆய்வு தென்னிந்திய மொழிகளின் நெறிமுகைள், நாட்டுப்புறவியல் கழகம், திருவனந்தபுரம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

திணைமாலை நூற்றைம்பதில் தமிழர் பண்பாடு
Tamil Culture in *Thinaimalai Nootriaimbathu*

செ. சந்திரன், முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி – 24.

Abstract

The research article tries get hold of Tamil secularism and culture in the work "Thinaimalai Nootriaimbathu". The culture of the people is seen highly developed and seems lofty in all manners. It is seen in the verses of the work. It shows the dignified life of the Tamil people in the case of divinity, chastity, omens, heaven sport, food and other sorts of morale. Hence, the article brings forth the culture shown in the ethics of "Thinaimalai Nootriaimbathu".

Keywords: Tamil, Culture, *Thinaimalai Nootriaimbathu*

கணிமேதாவியார் இயற்றிய இந்நூல் குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்ற திணைவைப்பு முறையில் அமைந்து திணைக்கு முப்பது முப்பது பாடல்களைக் கொண்டுள்ளது எனலாம். இந்நூலில் குறிஞ்சி, நெய்தல், முல்லைத் திணைகளில் முறையே 31 பாடல்களும், பாலை, மருதம் எனும் இரண்டு திணைகளில் முப்பது முப்பது பாடல்களும், இறுதியில் வரும் பாயிரத்தையும் சேர்த்து 154 பாடல்கள் இடம்பெறுகின்றன.

துரை. இராசாராம் அவர்கள், அன்பின் ஆணிவேராகிய புணர்ச்சியின் போக்கினை (குறிஞ்சி) முன்னர்க்கூறி, பின் அன்பின் முதிர்வாகிய இரங்கலையும் (நெய்தல்), அதன்பின் இரங்குதற்குக் காரணமாகிய பிரிவையும் (பாலை), அதனையடுத்துப் பிரிவின்கண் ஆற்றியிருத்தலாகிய முல்லையினையும், இறுதியில் ஆற்றியிருத்தலின் பயனாகிய ஊடலையும் (மருதம்) ஊடலுக்குப்பின் கூடலையும் முறையாக வரும்படி எடுத்துக் கூறியுள்ளமை இன்புறற்பாலது. இதனால் தான் பாயிரத்தின் கண்,

"முனிந்தார் முனிமொழியச் செய்யுட்கண் முத்துக்
கணிந்தார் களவியற் கொள்கை"

எனத் திணைமாலை நூற்றைம்பது பற்றிக் குறிப்பிடுகின்றார்.[1] இந்நூலில் இடம்பெறும் தமிழர் பண்பாடுகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பண்பாடு

பண்பாடு என்பது மனித வாழ்வின் அனைத்து நிலைகளிலும் இருக்கக்கூடியது. அதுபோல நெடுங்காலம் நிலைத்து நிற்கும் பண்பாடு முடிந்த முடிவல்ல, அதன் தேவைக் கருதி சமூகத்தில் ஏற்படும் மாற்றத்தால் தன்னை மாற்றிக் கொள்ளக்கூடியது அல்லது மறைந்து போவது எனலாம்.

சு.அரங்கநாதன் அவர்கள், பண்பாடு என்பது பண்பட்டதன் வெளிப்பாடு, தொடர் நிகழ்வின் வெளிப்பாடு என்று வரையறுத்துக் கொள்ளலாம்[2] என்கின்றார்.

பண்பாடுதான் உலகை வாழவைக்கிறது. பண்பாடு இல்லாத நிலை உருவாகுமானால் உலகம் அழியும் என்பதை,

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"[3]

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

பண்டைய தமிழர்கள் சான்றோர்கள் அஞ்சுகின்ற பழிபாவங்களுக்குத் தாமும் அஞ்சி அவற்றைச் செய்யார், தாம் செய்யும் செயலால் தமக்குப் புகழ்வரும் எனத் தெரிந்தால் அதற்காகத் தம்முடைய உயிரையும் கொடுப்பர், உலகமே கிட்டுவதாக இருப்பினும் பழிதரும் பாவச்செயல்களைச் செய்யார், தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்கின்ற அத்தகைய பண்பாடுமிக்கச் சான்றோர்கள் வாழ்வதால்தான் நாம் வாழும் உலகம் அழியாது நிலைபெற்றுள்ளது என்று பாண்டிய மன்னாகிய கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி கூறுவதை,

"…அஞ்சுவது அஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"[4]

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் விளக்குகின்றன.

திணைமாலை நூற்றைம்பதில் இடம்பெறும் தமிழர் பண்பாடு

திணைமாலை நூற்றைம்பதில் இடம்பெறும் தமிழர் பண்பாடுகளை நன்றி மறவாமை, கற்பொழுக்கம், தெய்வ வழிபாடு, நல்ல நாளில் காரியம் தொடங்குதல், குறிகேட்டல், சுவர்க்கலோகம், அணிகலன், உணவுப்பொருட்கள், தொழில், விளையாட்டு என வகைப்படுத்தலாம்.

நன்றி மறவாமை

மணமாகாத குறிஞ்சி நிலப்பெண் தினைப்புனங் காத்திருந்தாள். நாளடைவில் அவளுடைய தோற்றத்தில் மாற்றம் காணப்பட்டதால், அவளுடைய நடத்தையில் ஐயமுற்ற பெற்றோர் தினைப்புனம் காவல்காத்தது போதும் வீட்டிற்கு வந்துவிடு என்று சொல்லி அந்தப்பெண்ணை வீட்டில் வைத்தனர். இருந்தும் அவளிடம் ஏற்பட்ட மாற்றம் மட்டும் மறையவில்லை. அந்தப் பெண்ணை வளர்த்த செவிலித்தாய் அம்மாற்றாத்திற்கான காரணத்தை அறிய அவளுடைய தோழியிடம் கேட்கிறாள்.

அதற்கு அவள் செவிலித்தாயிடம், ஒருநாள் தினைப்புனத்தில் நானும் தலைவியும் பரண்மேலமர்ந்து காவல் காத்துக்கொண்டிருந்தோம். அச்சமயத்தில் மதம்பிடித்த யானை எங்களை நோக்கிச் சினத்துடன் ஓடிவந்தது. அப்பொழுது ஒரு கட்டிளங்காளை அந்த யானை அலறிக்கொண்டு ஓடும்படி அடித்து விரட்டி எங்களைக் காப்பாற்றினான். எங்கள் உயிரைக் காப்பாற்றிய அவனுடைய நன்றியைத் தலைவி ஒருபோதும் மறக்கமாட்டாளென்பதால் அவனை மட்டும் என் தலைவியின் தோள்கள் தழுவிக்கொள்ளும், வேறொருவன் தோள்களைத் தழுவமாட்டாள். அதுதான் அவளிடம் ஏற்பட்ட மாற்றத்திற்கு காரணமென்று தனக்குத் தெரிந்ததை மறைக்காமல் சொன்னாள். இதனை,

"வருக்கை வளமலையுண் மாதரும் யானு
மிருக்கை யிதண்மேலே மாகப் - பருக்கைக்
கடாஅமால் யானை கடிந்தானை யல்லாற்
றொடாஅவா லென்றொழி தோள" (திணைமாலை நூற்.14)

என்ற பாடல் விளக்குகிறது. இப்பாடலின் மூலம் தமிழரின் நன்றி மறவாத உயர்ந்தப் பண்பாட்டைக் காணலாம்.

கற்பொழுக்கம்

கருத்து ஒருமித்த தலைவன் தலைவி இருவரும் மணம் புரிந்துகொள்வதற்கு ஏதேனும் தடை ஏற்பட்டால், தலைவன் தன் தலைவியை அவளுடைய பெற்றோர் அறியாமல் தன்னுடன் அழைத்துக் கொண்டுபோவது பண்டைய தமிழர்களின் வழக்கம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தலைவியை வீட்டில் காணாத செவிலித்தாய், அவளைத் தேடிக்கொண்டு பாலைநிலவழியில் போகும்போது, எதிரில் வந்த தம்பதிகளிடம் "உங்களைப்போல் இருவரை இவ்வழியில் கண்டீர்களா" என்று கேட்டதற்கு, "விரைந்து நீங்கள் நடந்து சென்றால் அவர்கள் உங்களிடம் அகப்பட்டுக்கொள்வார்கள். நீங்கள் நினைத்துக்கொண்டு வந்த சூரியனைப் போன்ற அந்த ஆடவனை நான் பார்த்தேன். சந்திரனைப் போன்ற அந்த மங்கையை என் துணைவி பார்த்தாளாம்" என்றான். இதனை,

"நண்ணிநீர் சென்மி னமரவ ராபவே
லெண்ணிய வெண்ண மெளிதரோ – வெண்ணிய
வெஞ்சுட ரன்னானை யான்கண்டேன் கண்டாளாந்
தண்சுட ரன்னாளைத் தான்" (திணைமாலை நூற்.89)

என்ற பாடல் உணர்த்துகின்றது. இப்பாடல் பண்டையகாலத் தமிழர்களின் கற்பொழுக்கத்திற்கு சிறந்த சான்றாகும். ஒரு ஆண் பிற பெண்களைக் கண்ணால் நோக்குதலும் தவறு எனும் உயர்ந்தப் பண்பை எடுத்துரைத்து, பெண்களைப் போல் ஆண்களும் பிற பெண்களைப் பார்க்காத கற்புள்ளவர்களாக இருக்கவேண்டுமென மேற்கண்ட பாடல் வலியுறுத்துகின்றது.

தெய்வ வழிபாடு

இருண்டகாலத்தில் வாழ்ந்த தமிழர்கள் திருமால், பலதேவன், முருகன், இந்திரன் எனும் தெய்வங்களை வழிபட்டனர் என்பதை,

"இருள்பரந் தாழியான் றன்னிறம்போற் றம்மு" (96:1)
"பாழிபோன் மாயவன்" (97:1)
"விருங்கடன்மா கொன்றான்வேன் மின்னி" (93:2)
"திந்திரன்போல் வந்தா னிடத்து" (145:4)

என்ற திணைமாலை நூற்றைம்பதின் பாடல்வரிகள் (தாழியான், மாயவன் - திருமால்; தம்முன் - மாயவனின் முன்னோன் பலராமன்; மாகொன்றான் - சூரபன்மனை கொன்ற முருகன்; இந்திரன் - மருதநிலத் தெய்வம்) தெளிவுபடுத்துகின்றன. இதன்மூலம் பண்டைய தமிழர்கள் தெய்வ வழிபாடு மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகின்றது.

நல்ல நாளில் காரியம் தொடங்குதல்

நல்ல நாளில் தொடங்கும் காரியம் இடையூறில்லாமல் வெற்றி பெறும் என்பது பழந்தமிழர் நம்பிக்கை. பெண் கேட்கச்செல்பவர்கள் நல்ல நாள் பார்த்து புறப்பட்டார்கள் என்பதை,

"தந்தாயல் வேண்டாவோர் நாட்கேட்டுத் தாழாது
வந்தானீ யெய்துல் வாயான்மற் - றெந்தாய்!" (திணைமாலை நூற்.46:1-2)

என்ற பாடல்வரிகள் விளக்குகின்றன. சிலரைக்கொண்டு திருமணம் செய்துகொள்ளலாமா என ஆராய்ச்சி செய்வதை தவிர்த்து, நல்லநாள் கேட்டுக்கொண்டு தாமதமில்லாமல் வந்தால் தலைவியை அடைவது உண்மை என்று தோழி தலைவனிடம் கூறியதை மேற்கண்ட பாடல்வரிகள் விளக்குகின்றன.

பண்டைய தமிழகத்தில் சோதிடர்கள்தான் நல்ல நாட்களைக் குறித்துக்கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஒத்த குலத்தவராகிய நமக்குள் மணப்பொருத்தம் முதலியவற்றை ஐயம்கொண்டு ஆராயாமல், நல்ல குறிகளை அறிந்து சொல்லும் சோதிடர்களை அழைத்து, ஓர் நல்ல நாளைத் தேர்ந்தெடுத்து மணம்புரிதல் நல்லதாகும் என்று தோழி தலைவனிடம் கூறினாள். இதனை,

"வாராய் வரினீர்க் கழிக்கான னுண்மணன்மேற்
றேரின்மா காலாழுந் தீமைத்தே – யோரிலோர்
கோணாடல் வேண்டா குறியறிவார்க் கூஉய்க்

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

நாணாடி நல்குத னன்று"

என்ற திணைமாலை நூற்றைம்பதின் 54வது பாடல் தெளிவுபடுத்துகின்றது.

குறிகேட்டல்

குறிகேட்கும் வழக்கம் பண்டைய காலத்தில் இருந்தது. குறி சொல்லுகின்றவர்கள் தெய்வத்தின் உதவியினால் கழங்குக் காய்களை வைத்துக்கொண்டு உண்மையை அறிந்து உரைப்பார்கள் என்று மக்கள் நம்பி வந்தனர்.

"வேறாக நின்னை வினவுவேன் றெய்வத்தாற்
கூறாயோ கூறுங் குணத்தினனாய் - வேறாக
வென்மனைக் கேறக் கொணருமோ வெள்வளையைத்
தன் மனைக்கே யுய்க்குமோ தான்" (திணைமாலை நூற்.90)

என்ற பாடலின் மூலம், நற்றாய் படிமத்தாளிடம், குறிசொல்பவர்கள் பலர் இருப்பினும் உன்னை வேறாகக் கருதி நான் கேட்கிறேன். உன் தெய்வீகக் கழங்கினாள் என் மகளை உடன்கொண்டு சென்றவன் என் மனைக்கு திருமணம் செய்து வைக்கும்படி தலைவியை அழைத்து வருவானா அல்லது தன்மனைக்கு தலைவியை அழைத்துச் செல்வானா என்று வினவியதைக் காணலாம். இப்பாடலின் கருத்தினைக் கொண்டு நற்றாய் படிமத்தாளிடம், தனக்கும் தலைவன்-தலைவிக்கும் எதிர்வரும் காலங்களில் ஏற்படும் நன்மை, தீமைகளை அறிவதற்காகக் குறிகேட்டதை உணரமுடிகின்றது.

சுவர்க்கலோகம்

பண்டைய தமிழர்கள் இவ்வுலகத்திற்கு அப்பால் இன்பம் நுகரக்கூடிய சுவர்க்கலோகம் ஒன்று உண்டென்று நம்பினர். இதனைக் கீழ்க்கண்ட திணைமாலை நூற்றைம்பதின் 62வது பாடல் விளக்குகின்றது.

"வில்லார் விழவினும் வேலாழி சூழலகி
னல்லார் விழவகத்து நாங்கணே – நல்லாய்!
உவர்க்கத் தொரோவுதவிச் சேர்ப்பனொப் பாரைச்
சுவர்க்கத் துளராயிற் சூழ்."

இப்பாடலில் கடல் சூழ்ந்த இவ்வுலகில் விற்போரில் வல்ல வீரர்களின் விழாவிலும், நல்ல பெண்களின் திருமணவிழாவிலும், அன்று கடற்கரையில் தலைவிக்கு உதவி செய்த இச்சேர்ப்பன்தான் தலைவிக்கு தக்கவன்; இச்சேர்ப்பனைப் போன்ற ஆடவரை நாங்கள் கண்டதில்லை; அவனல்லாத அவனைப் போன்ற ஆடவர் சுவர்க்கலோகத்தில் இருக்கின்றாரா என்று ஆராய்ந்து பார்ப்பாய் எனத் தோழி செவிலியிடம் கூறிய செய்தி இடம்பெறுகின்றது. இச்செய்தியின் அடிப்படையில் இருண்டகாலத்தில் வாழ்ந்த தமிழக மக்கள் சுவர்க்கலோகம் ஒன்று இருக்கின்றதென்று நம்பியதை உணரமுடிகின்றது.

அணிகலன்

குழந்தைகளின் கழுத்தில் கட்டப்படும் அணிகலன்களுள் ஐம்படைத்தாலியும் ஒன்றாகும். ஐம்படைத்தாலி என்பது திருமாலின் சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு எனும் பஞ்சாயுதங்களின் வடிவத்தை அமைத்துச் செய்த அணிகலன்களை குழந்தைகளின் கழுத்தில் கட்டியிருப்பதாகும். இவ்வழக்கம் திணைமாலை நூற்றைம்பதில் இடம்பெறுவதை,

"செல்வர் சிறார்க்குப்பொற் கொல்லர்போ- னல்ல
பவளக் கொழுந்தின்மேற் பொற்றாலி பாஅய்'' (66:2-3)

எனும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இதன் மூலம் குழந்தைகள் கழுத்தில் அணியும் நகையை பண்டையக் காலத்தில் தாலி என்று கூறிவந்தனர் என்பதையும் பிற்காலத்தில்தான் தாலி என்பது, கணவனால் மனைவியின் கழுத்தில் கட்டப்படும் ஒரு குறிப்பிட்ட அணியைச்சுட்டி வந்துள்ளனர் என்பதையும் உணரமுடிகின்றது.

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

உணவுப் பொருட்கள்

திணைமாலை நூற்றைம்பது தோன்றிய காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த குறிஞ்சி நில மக்கள் தினை, செந்தினை, கருந்தினை, ஐவனம் முதலியவற்றை உணவுப் பொருட்களாக உற்பத்தி செய்து, அதனை உணவாகப் பயன்படுத்தியுள்ளதோடு, உணவோடு மிளகையும் சேர்த்து உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதை,

"…துனைவிளைய" (5:2)

"அவட்காயி னைவனங் காவ லமைந்த
திவட்காயிற் செந்தினைகா ரேன" (8:1-2)

"தாலொத்த வைவனங் காப்பாள்கண் " (9:2)

"செந்தினை வித்துவார" (24:3)

"கறிவளர்பூஞ் சாரற" (7:1)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

மருத நிலத்தில் வாழ்ந்த மக்கள் செந்நெல் சோற்றோடு புளியையும் உணவில் சேர்த்து வந்துள்ளனர். இதனை,

"செந்தா மரைப்பூ வுறநிமிர்ந்து செந்நெல்" (128:1)

"…. …. புளிவேட்கை" (142:3)

எனும் திணைமாலை நூற்றைம்பதின் பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன.

தொழில்

இருண்ட காலத்தில் வாழ்ந்த தமிழக மக்கள் காளைமாடுகட்டி உழவுத்தொழிலை மேற்கொண்டு வந்துள்ளனர் என்பதை, "லெருதோ டுழல்கின்றா" (139:2) என்ற பாடலடி உணர்த்துகின்றது.

மற்றொரு பாடலின் மூலம் ஆண்கள் மீன்பிடிப்பதும், அம்மீன்களை பெண்கள் பறவைகள் பற்றிக்கொண்டு போகாமல் பாதுகாப்பதையும் தொழிலாகக் கொண்டிருந்தனர் என்பதை உணரமுடிகின்றது. இதனை பின்வரும் பாடல் விளக்குகிறது.

"பானலந் தண்கழிப் பாடறிந்து தன்னைமார்
நூனல நுண்வலையா னெண்டெடுத்த – கானற்
படுபுலால் காப்பாள் படைநெடுங்கண் ணோக்கங்
கடிபொல்லா வென்னையே காப்பு" (திணைமாலை நூற்.32)

இப்பாடலில் நெய்தல் மலர்கள் பூத்துள்ள உப்பங்கழிகளிடத்தில் மீன்கள் அகப்படும் வழிகளை அறிந்துகொண்டு, தன் தமையன்மார்கள், வலைகளினால் பிடித்துவந்த மீன்களை பறவைகள் பற்றிக்கொண்டு போகாமல் காக்கும் என் தலைவியின் வேற்படைப்போன்ற நெடிய கண்களின் பார்வையானது, கருவாட்டினைக் காத்தலில் நினைவு கொள்ளாமல், என்னை தன்கைப்படுத்திக் காத்தலில் வன்மை கொண்டுள்ளது என்று தலைவன் தான் தலைவி மீது கொண்டுள்ள அன்பினைத் தன் தோழனுக்குச் சொல்லிய செய்தி இடம்பெறுவதன் மூலம், நெய்தல் நிலத்தில் வாழ்ந்த ஆண்கள் மீன்கள் பிடித்தலும் பெண்கள் அம்மீன்களைப் பறவைகள் பற்றிக்கொண்டு போகாமல் காத்தலையும் தொழிலாகக் கொண்டிருந்ததை அறியமுடிகின்றது.

விளையாட்டு

பழங்காலத்தில் பெண்கள் வண்டல் விளையாட்டு விளையாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதனை,

"நின்னோக்கங் கொண்டமான் றண்குரவ நீழல்காண்
பொன்னோக்கங் கொண்டபூங் கோங்கங்காண் - பொன்னோக்கங்
கொண்ட சுணங்கணி மென்முலைக் கொம்பன்னாய்!

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

வண்ட லயர்மணன்மேல் வந்து"

என்ற திணைமாலை நூற்றைம்பதின் 70வது பாடல் விளக்குகின்றது. இப்பாடலில் உன்னுடைய பார்வையினுடைய மான்கள் குளிர்ந்த குரவமரத்தின் நிழலில் தங்கியிருக்கும் தன்மையையும், கோங்க மரங்கள் பொன்போன்ற மலர்களையும் கொண்டுள்ள இவ்வழகிய மணலில் அமர்ந்து விளையாடுதலை மேற்கொள்ள வேண்டுமென்று தலைவன் தலைவியிடம் கூறியதைக் காணலாம். இச்செய்தியின் மூலம், பழங்காலத்தில் வாழ்ந்த பெண்களுக்கு குளிர்ச்சியான மரநிழலில் அமர்ந்து மணலில் விளையாடும் பழக்கம் இருந்தது தெளிவாகின்றது.

மேற்கண்ட திணைமாலை நூற்றைம்பது பாடல்களின் கருத்துக்களைக் கொண்டு, பண்டைய தமிழர்கள் நன்றி மறவாமலிருத்தல், கற்பு ஒழுக்கம், திருமால், முருகன், இந்திரன் முதலான தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ளுதல், நல்ல நாளில் காரியம் தொடங்குதல், குறிகேட்டல், சுவர்க்கலோகம் உண்டென்ற நம்பிக்கை, குழந்தைகளுக்கு ஐம்படைத்தாலி அணிவித்தல், மிளகு, புளி முதலியவற்றை உணவில் சேர்த்தல், உழவுத்தொழில் செய்தல், பெண்கள் வண்டல் விளையாட்டு விளையாடுதல் முதலிய பண்பாடுகளை மேற்கொண்டிருந்தனர் என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகின்றது.

சான்றெண் விளக்கம்

1. துரை. இராசாராம், *பதினெண் கீழ்க்கணக்கு*, பகுதி - 2, பக்.131-132.
2. இரா.சாந்தி, சு.குமரன், கே.சுபாஷினி (ப.ஆ), *புத்திலக்கியங்களில் பன்முகப்பார்வை*, (பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்) தொகுதி - 1, ப.22.
3. பரிமேலழகர் உரை, *திருக்குறள்* எண் - 996.
4. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, *புறநானூறு மூலமும் உரையும்*. பகுதி 1,பா.182: 4-9.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

கொற்கை நாவல் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்
Life Ethics shown in the Novel *Korkai*

கோ.சந்திரா, (தமிழ்த்துறை), முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.

Abstract

The research article tries to unfold the life style of the Parathavars of the Korkai region of Tamil Nadu. Their simple lifestyle, challenging life, perseverance, dignity is shown in the novel "Korkai". The age old novel life of the Parathavars are clearly depicted in the novel by the writer with possible evidences. They are not exaggerations but a realm of facts in undercover for a long time. Hence, the article brings forth the culture shown in the novel "Korkai".

Keywords: Life, Ethics, Novel *Korkai*

முன்னுரை

சமூகத்தின் மீதும் அவற்றின் முன்னேற்றத்தின் மீதும் அக்கறை கொண்டுள்ள படைப்பாளிகள் வாழ்வின் இயக்கங்களை உள்வாங்கிக்கொண்டு அவற்றை தன் படைப்புகளில் வெளிப்படுத்துதிக்காட்ட முயற்சிக்கின்றனர். காலத்திற்கு ஏற்ப மாற்றம் பெறும் மக்களின் வாழ்வாதாரங்களை மையப்படுத்தி நவீன கால இலக்கியங்களில் ஒன்றாக கருத்தப்படுகின்ற நாவல்கள் படைக்கப்பட்டு வருகின்றன. கடல்சார் சமூகமான பரதவர் சமூகத்தின் மாற்றத்தை அவர்களது வாழ்வின் யததார்தங்களை மிக நுட்பமாக சித்தரித்துக் காட்டுவது கொற்கை நாவலாகும். 1964ல் நெல்லை மாவட்டம் உவரியில் பிற்நதவர் ஆர்.என்.ஜோடி குரூஸ் சென்னையில் வணிகக் கப்பல் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து கொண்டிருக்கிறார். பணி மாற்றல் நிமித்தமாக தூத்துக்குடிக்கு வந்த இவர் காலமாற்றத்தினால் கொற்கை துறைமுகமும் அங்கு வாழ்ந்த பரதவ மக்களின் வாழ்வியல் அவலங்களையும் கண்கூடாகச் கண்டு அவற்றை வெளிக்கொண்டு வர உருவாக்கப்பட்டதே கொற்கை நாவலாகும். 2013ல் சாகித்ய அகதெமி விருது பெற்ற இந்நாவல் பரதவ மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளை எடுத்துக்கூறும் தன்மையைக் கண்டறிவதே இக்கட்டுரை ஆகும்.

வாழ்க்கை முறை

கொற்கை துறைமுகம் அங்கு வாழ்ந்த பரதவர்களின் வாழ்வில் பசித்துயரை போக்கி தம் வற்றாத கருணையால் அவர்களின் வாழ்வை செழுமைப்படுத்திய கடரசியோடு இயைந்த வாழ்வு எனலாம். கட்டுமரத்திலும் மரக்கலத்திலும் கடலில் தொழிலுக்குச் செல்லும் பரதவர்களின் வாழ்வு தொடக்க காலங்களில் செல்வ செழிப்புடன் இருந்திருக்கிறது. "குண திசையில் பவ்வத்துள் திரும்பிய நீல நீட்சி, விட்டு வெளி வாங்கிப் பச்சை பசேலெனப் பாண்டியன் தீவு. இயற்கையின் அரண், குடாக்கடல், காட்டு முயற்கூட்டம். அலைவாய்க் கரையில் ஓடிப் பதுங்கும் கருவான நண்டுகள் அவற்றைக் கவர வானில வட்டமிடும் ஆலாக்கள்... தென்புறத்தே பரந்து வரிந்த வெள்ளை மணற்பரப்பு காணலம் பெருந்துறை..... புன்னையும் பூவரசும் தாழையும் ஞாழலும் வேம்பும் வாராசியும் பூத்துக் குலுங்கிப் பூச்சொரியும் நெய்தலின் பூஞ்சோலை... கடற்புறத்தே வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவரின் பனையோலைக் குச்சில்கள் உளைக்கும் தட்டுமடிகள், கட்டுமரங்கள் கரையேற்றிய தம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

திமில்களையும் மீளவும் கடுவிசையோடு அலையூடோ தள்ளும் கட்டிலாம் காளையர்.... ஆர்ப்பரிக்கும் அலையூடே பரதவரின் அம்பா ஓசை.... வீட்டு முற்றத்தில் உலர்மீனைக் கவர வரும் காக்கைகளைச் சங்கெடுத்து வீசி விரட்டும் பாம்பட பெண்டிர்.... விரிந்த வீதிகளில் கல்விச் சாலைகள்.... பல்வினைக் கலைஞர் உறையும் சத்திரங்கள்" (கொ.ப.16) என்று கொற்கை துறைமுகக் காட்சியும் அங்கு வாழும் மக்களின் வளமான வாழ்வு முறையும் இங்கு கண்முன் காட்சிகளாக எடுத்தக்கூறப்படுகின்றன.

இத்தகைய சிறப்புடன் காணப்பட்ட கொற்கை துறைமுகமும் அங்குள்ள மக்களின் வாழ்வும் இன்று கால வெள்ளத்தில் சிக்கித் தவித்து மக்கள் படும் துயரங்களையும். "நகர வீதிகளில் விதவிதமாய்க் கட்டிடங்கள் வணிக நிறுவனங்கள். ஆனால் எதுவுமே இன்று பரதவரின் கைகளில் இல்லை. கலாச்சார சின்னமாய் காலம் கடந்து நிற்க வேண்டிய பாண்டியபதி அரண்மனையோ சிதிலமடைந்து சின்னா பின்னமாய்க் காட்சியளிக்கிறது. ஒரு பெரியவர் மூன்று தேய்ந்து போன மிதியடிகளை ஒன்றாய்ச் சேர்த்து தைத்து அவர் அணிந்திருந்தது பார்ப்பதற்கு பாவமாய் இருந்தது. நெருங்கிப் பார்ததால் அந்தக் காலத்தில் தூத்துக்குடியில் கொடிகட்டி வாழ்ந்து கல்கத்தா சிங்கப்பூர் யாழ்ப்பானமெனக் கப்பலோட்டிக் வாழ்ந்த குடும்பத்தின் வாரிசு... பரதவரின் பூர்விக பூமியாக விளங்கிய தூத்துக்குடியில் அவர்களது பவுசும் மவுசும் இன்று பழங்கதையாகிப் போனது காரணம் இங்கு மாற்றமும் அதன் தேவையும் புரிந்து கொள்ளப்படவே இல்லை. காலத்திற்கு ஏற்றாற் போல் வாழ்க்கையில் மனநிலையில் தொழில் முறையில் பழக்க வழக்கத்தில் மாற்றம் ஏற்படாததன் விளைவுகள் தலைமுறை தலைமுறையாகத் தொடர்கின்றன" (கொ.ப.13,14) என்று கூறுவதிலிருந்து அவர்களின் இன்றைய நடைமுறை வாழ்க்கை முறையை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

தலைமைப் பண்பும் மாந்திரீகமும்

பரதவர்களின் இனத் தலைவர்கள் அம்மக்களிடம் அன்புடன் நடந்து கொண்டுள்ளனர். பரதவ மக்களுக்கு ஒரு துன்பம் என்றால் அதை உடனேயே நீக்கக்கூடிய பண்பு நலன்களைக் பெற்றுள்ளனர் தாங்கள் கற்றறிந்த மாந்தீரீக வித்தைகளைக் கொண்டு அம்மக்களை பிறருடைய துன்பங்களிலிருந்து காப்பாற்றி வந்துள்ளனர். பரதவ பெண்கள் மீன் வியாபாரம் செய்யவிடாமல் தடுத்த எதிர்த்தரப்பினரை மாந்திரீகம் கற்ற பரதவ சாதித் தலைவர்கள் காப்பாற்றியதை காண முடிகிறது. "சிங்கிகுளம் சந்தையின் உரிமை சம்பந்தமாக பிரச்சினை வந்தபோது பாண்டிய மணப்பாட்டையோ வந்திருந்தாராம். எதிர்த்தரப்பு குரங்கு ஒன்றை வைத்துக்கொண்டு பரதவ் பெண்களை மீன் வியாபாரம் செய்யவிடாமல் விரட்டியிருக்கிறது. சந்தையுள்ளே நுழைந்ததுமே அந்தக் குரங்கைப் பார்த்த மணப்பாட்டையா வியாபாரத்திற்காக பெண்கள்கொண்டு வந்திருந்த சம்பைக் கட்டிலிருந்து சாவாளைக் கருவாடொன்றை எடுத்தவர் முனை முறியாத மஞ்சள் துண்டு ஒன்றையும் பெண்களிடம் கொடுத்து அரைத்து கேட்டிருக்கிறார். அவர்களும் மஞ்சளை அந்த இடத்திலேயே அரைத்துக் கொடுக்க அரைத்த மஞ்சளை அப்படியே சாவாளைக் கருவாட்டில் தடவி பெருமூச்செடுத்து காய்ந்த கருவாட்டின் வாயில் ஊதி அதை அந்தரத்தில் உருவவிட்டிருக்கிறார். அதுவரையில் அங்குமிங்கும் துள்ளியடி ஆட்டம் போட்டிருந்த குரங்கை செங்குப் பூட்டாகப் பிடித்து குதறியிருக்கிறது, அந்த காய்நத சாவாளைக் கருவாடு அன்றிலிருந்து சிங்கிகுளம் சந்தையில் பயமில்லாம்ல் வியாபரம் பார்த்திருக்கிறார்கள் பரதவப் பெண்கள் (கொ.ப.26) என்று நாவல் எடுத்துக் கூறுகிறது.

இதே போன்று சூரசம்காரத்தின் போது திருச்செந்தூர் பிராமணர்கள் பரதவர்களை கோயில் வளாகத்திற்குள் வரக்கூடாது எனத் தடுத்துபோது "அந்த வழியாய் வந்து கொண்டிருந்த சாதித் தலைவமோர் கோவில் மண்டபத்தில் தலைமைக் குருக்களை வரவழைத்து பரதவர்களின் பாரம்பரியம் பற்றியும் கோவில் வரலாறு பற்றியும் சொல்லியிருக்கிறார்.... வாக்குவாதங்கள் நீண்டிருக்கின்ற தெய்வானை பரத்தியென்றும் முருகப்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

பெருமான் எங்கள்மச்சான் என்று எவ்வளவோ ஆணித்தரமாய் அடித்துக் கூறியும் பிராமணர்கள் அசைந்து கொடுக்கவில்லையாம். வெகு நேரம் பொறுமைகாத்தவர் வலது கரத்தை உயரே தூக்கிப் பெருவிரலால் ஆட்காட்டி விரலைத் தேய்த்துப் பூணூல் வரவழைத்துக் கொடுக்க பயந்தபோன பிராமணர்கள் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினார்களாம். அதன்பிறகு திருச்செந்தூர் பிராமணர்கள் அந்தப் பகுதி பரதவர்களை எதிர்க்கத்துணியவே இல்லையாம் (கொ.ப.28) என்பதிலிருந்து பரதவ சாதித்தலைவர்கள் தாங்கள் கற்ற மாந்திரீக வித்தைகளை மக்களின் நலனுக்காக பயன்படுத்தியிருக்கின்றர். மாந்திரீக வித்தைகளைக் கற்றவர்கள் அதை நல்ல செயல்களுக்குப் பயன்படுத்தும்போது அதன் பயனை நாம் நன்கு உணர்ந்து கொள்ள முடிகிறது. இன்று மனித வாழ்க்கையின் அனைத்து செயல்களுக்கும் குறிபார்த்தல் மாந்திரீகத் தொழில் மூலம் நன்மை தீமை கண்டறிதல் போன்ற செயல்பாடுகள் வாழ்வின் அங்கமாகவே இருப்பதை நாம் அறிய முடிகிறது. கொற்கை நாவல் மாந்தரீகம் கற்ற தலைவர்களின் பண்புகளை நமக்கு பிரதிபலிக்கின்றன.

இறை நம்பிக்கையும் வழிபாடுகளும்

ஒவ்வொரு சமயத்தவருக்கும் தங்கள் மதத்தின் மீது அளவற்ற அன்பும் பக்தியும் கொண்டிருப்பார்கள். சமுதாய அக்கறையுள்ள தலைவர்கள் தங்கள்மக்கள் பின்பற்றும் மத்தை அவர்கள் விரும்பும் வகையில் செயல்பட வழிகாட்டுவார். சிலர் சமய வழிபாட்டிற்கு பல சிறப்புக்களையும் செய்வது உண்டு. சமயக்காழ்ப்புணர்ச்சி இருந்தாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் செயல்படுவார்கள். “தொன்மிக்கேலுக்கு பதவியில் பெரியதாய் நாட்டமில்லாமல் இருந்தாலும் சமுதாய அக்கறை ஒருபடி அதிகமாகவே இருந்தது... பதவி ஏற்ற சிறிது காலத்திலேயே வெகுகாலமாய் கடைபிடிக்காமலிருந்த பாரம்பரிய வழக்கங்களுக்கு உயிர் கொடுத்தாராம்.. ஆயிரமாயிரமய் அப்பாவிப் பரதவரின் உயிரைக் காவு வாங்கிய கத்தோலிக்கம் இன்று அவர்தம் சமூகக் கட்டமைப்பே நிலைகுலைந்து போவதைக் கைகூட்டி வேடிக்கை பார்ப்பது கண்டு மனதுக்குள் பொறுமினர்.

நம்மிடம் இல்லாத தெய்வ நம்பிக்கையையா சீமையிலிருந்து கொண்டு வந்துவிட்டார்கள் என்று அடிக்கடி மனம் வெதும்பிச் சொல்வாராம் பழைய பாரம்பரியப்படி வருசா வருசம் மகுடமேற்ற நாளில் கன்னியாகுமரி, மதுரை மீனாட்சி திருஉத்திர கோசமங்கை கொற்கை சந்தனமாரி கோவில்களுக்கு தவறாமல் சென்று தரிசனம் செய்ததோடு கொடையும் வழங்கிச் சிறப்புச் செய்வாராம்” (கொ.ப.22) என்று கூறுவதிலிருந்து தலைவர்கள் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப செயல்பட்டு வந்துள்ளனர். பரதவ இன மக்கள் இந்து மத்திலிருந்து கத்தோலிக்க கிறிஸ்தவ மத்திற்கு மாறியது அதனால் பல பிரச்சினைகள் இழப்புகள் நேர்நதாலும் மக்களின் விருப்பங்களுக்கு ஏற்ப பரத தலைவர்களிடம் தன்னை மாற்றிக் கொள்ளும் போக்கு காணப்பட்டதை நாவல் எடுத்தியம்புகிறது.

இறை நம்பிக்கையுடன் கூடிய பக்தியை மக்களிடம் நாம் காணமுடியும். தொழில் வளர்ச்சி, நோயிலிருந்து விடுபட என்று ஒவ்வொரு செயலுக்கும் அதிகமாக இறைவனை நம்புவதுண்டு. அதேபோல் பரதவ இன மக்கள் தங்கள் தொழிலில் களைப்பு தெரியாமலிருக்கவும் தொழிலை வெற்றியுடன செய்து முடிக்கவும் இறைவார்த்தைகளை பயன்படுத்தி வந்துள்ளனர். அது மந்திரவார்த்தைகளாக மக்கள் தங்கள் மனதில் நினைத்துச் சொல்லி இருக்கின்றர். லாப்பே... உடனே மற்றவர்கள் குரலெழுப்பினார்கள் எழமா எழ.... அந்தோணியார் அய்யா அடியாருக்கிரங்கும் இரக்கத்தைப் பாரும். வழக்கத்தைத்தீரும் (கொ.ப.60) என்று கூறிக்கொண்டே தங்கள் வேலையைச் செய்தார்கள். “ஆழ்கடலிலும் சரி கரையிலும் சரி அதிக விசை தேவைப்படும்போதெல்லாம் ஏதோ ஒரு மந்திச்சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். அது எண்ணவார்த்தை என்று சீற்றனிடம் கப்பல் கேப்டன் கேட்டுக்கொண்டிருக்கும்போதே மரியே மாதவே என்ற குரலோடு ஸ்டீம் எஞ்சின் மேலே எகிறி முன்னோக்கிச் சாடியது” (கொ.ப.63) என்று கொற்கை நாவல் பரதவர்களின் உழைப்பின் களைப்பை தீர்க்கக்கூடிய தெய்வமாக மாதாவை வணங்கினார்கள். மேலும் அவர்கள்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தங்களுக்கு அமைதியான வாழ்வையும் நல்ல உடல் நலத்தையம் கொடுக்கும் மரியாள் மீது அளவற்ற நம்பிக்கையையும் பக்தியையும் கொண்டிருந்தார்கள் என்பதை புலப்படுத்திக் காட்டுகிறது.

தொழில் முறை

பரதவ இன ஆண்கள் தங்கள் தொழிலில் திறமையையும் தன்னம்பிக்கையுடனும் செயல்பட்டு வந்துள்ளனர். எவ்வளவு கடினமான பணியையும் கூட இலகுவாகக் கருதிச் செய்யும் பழக்கம் அவர்களிடம் மேலோங்கிக் காணப்பட்டிருக்கிறது. கடலின் கரையிலிருந்து கண்ணுக்குப் புலப்படாத வகையில் வெகுதொலைவிற்குச் சென்று மீன் பிடிக்கும் ஆடவர்களும் கொற்கை துறைமுகத்திற்கு வரும் பிறநாட்டு துறைமுகக் கப்பல் சரக்குகளையும் இறக்குவதும் ஏற்றுவதும் இயந்திரம் போன்ற கடினமான தொழிலைச் செய்யும் ஆடவர்களும் காணப்பட்டிருக்கின்றனர். எத்தொழிலையும் திறம்படச் செய்யும் பண்புகள் பதரவ ஆடவர்களிடம் காணப்பட்டிருக்கிறது.

> "வளர்ச்சி வேண்டுமென்றால் மாற்றம் வேண்டும் புதிய முயற்சி புதிய தொழில் நுட்பங்களால் வளர்ச்சி வருமென்று அழுத்திச்சொன்னார் கொற்கை தோணித் துறையையும் அதன் செயல்பாடுகளையும் பார்த்த பிறகு தான் இந்த முடிவுக்கே தான் வந்ததாகச் சொன்னார் சீற்றன். ஒரு தோணியிலிருந்து பாய்மரத்தை இறக்குவதிலிருந்து கட்டி முடித்த தோணியைக் கடலில் தள்ளிப் பின் பாய்மரம் நட்டி இதர வேலைகளும் பார்ப்பது வரையிலான அனைத்து வேலைகளையும் பரதவர்கள் எந்திரங்களின் உதவி இல்லாமலேயே முனைப்பாகச் செய்வதை ஏற்கனவே பார்த்து ரசித்திருக்கிறார் சீற்றன்"(கொ.ப.36).

> "தட்டு மிதப்பானில் வலைக்குடிக்காரர்கள் கைகோர்த்து நின்றிருந்தார்கள். அபயாகரமான வேலைக்காக நடுக்கடலில் நிற்கிறோமே என்ற கவலை அவர்கள் முகத்தில் இல்லை. கடல் வேலைகளில் அவர்களுக்கிருந்த ஈடுபாடும் அர்ப்பணிப்பும் ஆச்சரியமளிப்பதாய் இருந்தது" (கொ.ப.51)

என்று கூறுவதிலிருந்து உழைப்பை உயர்வாகக் கருதிய பரதவ இன ஆடவர்களின் தொழில் தன்மையை இந்நாவல் எடுத்துக்கூறுகிறது.

முதலாளி தொழிலாளி உறவு

உழைக்கும் தொழிலாளர்கள் மூலமே முதலாளிகளின் வாழ்வில் உயர்வும் செழுமையும் ஏற்படுகிறது எனலாம். முதலாளிகளின் அன்பும் அரவணைப்பும் தொழிலாளர்களின் உழைப்பில் ஊக்கத்தையும் சோர்வையும் நீக்கும் அருமருந்து போன்றது எனலாம். தொழிலாளி முதலாளிகளிடம் காணப்படும் நல்ல உறவுநிலையே மக்களின் வளர்ச்சிக்கு அடித்தளமிடக்கூடியவையாகும்…" இருக்கிற நாலு மொதலாளியில நல்ல மொதலாளி அவருதாம்" தொழிலாளிய கஷ்டக் தெரிஞ்ச மனுசம் நம்ம குடிக்கிற கூழுக்கும் திருக்க கருவாட்டுக்கும் கருப்பட்டிருக்கும் நம்மளால முடியும் எந்தக்காலத்துல மொதலாளிமார் தொழிலாளிய சங்கடத்தைப் பத்தி யோசிச்சிக்கான்வ ஆனாலும் தல்மெய்தா மத்தவங்க மாதிரியல்ல நியாமான கூலி தருவார்.. என்று கூறுவதிலிருந்து முதலாளி தொழிலாளர்களின் உறவுநிலை புலப்படுகிறது.

கல்வி

கல்வி கற்காத பெற்றோர்கள் உழைப்பின் கடினத் தன்மையைக் கருதி தம் பிள்ளைகளை எப்படியாவது நன்கு படிக்கவைக்க வேண்டும் என்று கருதுவதுண்டு. தன்னுடைய துன்பங்களையும் துயரங்களையும் தங்கள் பிள்ளைகள் அனுபவிக்கக் கூடாது என்று கருதி பிள்கைள் விரும்பிய வகையில் வாழ பெற்றோர்கள் பழகிக்கொள்கிறார்கள். "சங்குளி, மீன்புடி, வள்ளத்துக்குப்போ தோணிவச்சி நடசய்யி, எல்லாச்சரி ஆனா புள்ளையா

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

மட்டும் படிக்க வச்சிருங்கப்பா புள்ளயள நம்பித்தான் கட்டுமரத்த வித்திற்கு வள்ளம் எடுத்தோம்"(கொ.ப.66)

நாலு எழுத்து படிச்சா யாருக்கும் பயப்புடாண்டாம்(கொ.ப.67) என்று கூறுவதிலிருந்து இவ்வாறு கல்வியின் பயனை கொற்கை நாவல் எடுத்தியம்கிறதைக் காணலாம். சமுதாயத்தில் நிலவும் உயர்வு தாழ்வு ஏழை, பணக்காரர் சாதிமதக் கட்டமைப்பு முதலிய சீர்க்கேடுகளை அகற்றி அனைவரும் சமம் என்ற சிந்தனையைப் பதிவு செய்து நல்லதொரு சமுதாய மாற்றத்திற்கு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் விளங்குவது கல்வியே ஆகும். நல்லதொரு சமுதாயத்தை கல்வியால் மட்டுமே உருவாக்க முடியும் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

நம் முன்னோர்களின் கல்வியைப் பெரும் செல்வமாகப் போற்றியதோடு நில்லாது அத்தகு மேன்மைமிக்கக் கல்விச் செல்வத்தைப் பெறவேண்டிய வழிமுறைகளையும் நமக்கு எடுத்துரைத்துள்ளனர் சான்றாக

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" (புறம் 183)

என்ற புறநானூற்றின் பாடலடிகள் பறைசாற்றுகின்றன. (இம.பு.பக்.351)

முடிவுரை

இன்றைய சமூகத்தைப் பொறுத்த அளவில் மீனவ மக்களின் வாழ்வு தொடர்பான செய்தியை பலரும் அறியாத நிலையில் தூத்துக்குடி பரதவ இனமக்களின் வாழ்வியல் முறைகள் அவர்களின் பண்பாடுகள் போன்றவற்றை கொற்கை நாவல் விளக்குகிறது. ஆடம்பரமற்ற எளிமையான வாழ்விலும் இயற்கையைச் சாட்சியாக எண்ணி மனச் சாட்சியோடு வாழும் பரதவர்களின் வாழ்வு பதிவு செய்யப்பட்டுள்ளன. பகட்டான செல்வச் செழிப்புமிக்க வாழ்வினை சிறிதும் விரும்பாமல், எதிர்ப்பார்க்காமல் அன்றாட உழைப்பிற்கு ஏற்றவாறு தங்கள் வாழ்வை வாழ நினைக்கும் தன்மையை கொற்கை நாவலில் காணமுடிகிறது.

நூற்பாட்டியல்

1. ஜோடி குருஸ். ஆர்.என்.2009. *கொற்கை* நாகர்கோவில் காலச்சுவடு பதிப்பகம், வெளியீடு.
2. அழகுமலை, குருசாமி ஞா.சு 2010. *இலக்கியங்களில் மரபும் புதுமையும்* சிவகாசி அரசன் பதிப்பகம், வெளியீடு.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

சங்க இலக்கியத்தில் உளவியல் சிந்தனைகள்
Psychological Thoughts in Sangam Literature

முனைவர். செ. சமாதான சரோசாதேவி, உதவிப்பேராசிரியர்,
சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி, நல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.

Abstract

The research article stances to bring down the psychological applications on Sangam Literature. Today, psychological applications are viable in all sorts of disciplines to understand the nature of the discipline and the causes and effects. Literature is the reflection of the psyche. So, it is pertinent to identify the literary works in the scale of psychology. It would favour to understand the source in full for the benefit of the society. The present article tries to unleash the elements of Sangam Literature through psychology. The article explains about the meaning of psychology, body, mind and soul and the emotional settings that man and woman are withstanding. Consequently, the article brings forth the thoughts of Sangam Literature in the light of psychology.

Keywords: Psychological, Thoughts, Sangam Literature

இலக்கியம் என்பது மனிதர்களின் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டவல்லது. எக்காலத்திலும் ஒரு மனிதனுக்கு ஏற்படும் அனுபவங்கள் இலக்கியப் பாடுபொருளாகின்றன. சங்க காலத்திலும் புலவர்கள் தாங்கள் பெற்ற அனுபவங்களை, உணர்வுகளைத் தம்மைப் பாதித்த நிகழ்வுகளைப் பாடலாகப் பதிவுசெய்துள்ளனர். இலக்கியங்களில் இடம்பெறும் பாத்திரங்கள் அந்தக் குறிப்பிட்ட இலக்கியத்தைப் படைத்த புலவர்களின் உணர்வுகளையும் அனுபவங்களையும் பிரதிபலிக்கின்றன. மனித உள்ளத்தின் உணர்வே ஆக்கம், அழிவு போன்ற எல்லாச் செயல்களுக்கும் ஊற்றுக்கண்ணாக விளங்குகிறது. உளவியல் சாந்த இத்தகைய கருத்துக்களை சங்க இலக்கியப் பாடல்களில் கண்டறிவதாக இக்கட்டுரை அமைகிறது.

உளவியல் விளக்கம்

உளவியல் என்பது ஆன்மாவைப் பற்றிய ஆராய்ச்சி என்ற கருத்து காலப்போக்கில் கைவிடப்பட்டது. ஏனெனில், ஆன்மாவைக் காண இயலாது. புலன்களால் உணரமுடியாது. மனித உடலில் அதன் இருப்பிடத்தைக் குறிப்பிட முடியாது என்பதால் கைவிடப்பட்டது. கி.மு.384இல் கிரேக்க தத்துவ அறிஞர் அறிஸ்டாட்டில் எழுதிய 'ஆன்மாவின் இயல்புகள்' (Deanimia) என்ற நூலே உளவியல் பற்றி எழுந்த முதல் நூலாகும்.

"ஆன்மாவை ஆய்ந்து அறியும் ஓர் அறிவியல் பிரிவாகவே முதலில் உளவியல் அமைந்திருந்தது. உளவியல். மிகுந்த வளர்ச்சி காணத் தொடங்கியபோது கருத்து வேறுபாடுகள் எழலாயின. குறிப்பாக ஆன்மா என்பது தெளிவற்ற ஓர் எண்ணம்" என்று சந்தானம் தனது 'கல்வி உளவியல் நூலில் குறிப்பிடுகிறார். ஆன்மா பற்றிய விளக்கமே பழங்கால உளவியலின் முதற்படியாக அமைந்தது. உளவியல் ஆராய்ச்சி ஆன்மாவைப் பற்றியது என்ற கருத்திற்கு எதிர்ப்புகள் எழுந்தால் மனிதனுடைய மனம் (mind) அல்லது உள்ளத்தை ஆராய்வதற்குப் பெயரே உளவியல் என்றனர்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

மனமும் உடலும்

மனத்தைத் தனியாகவோ, உடலைத் தனியாகவோ பிரிக்க முடியாது. மனம் உடலையும், உடல் மனத்தையும் சார்ந்த இயங்குவன. அவை சேர்ந்தே வளர்கின்றன. "மனம் என்ற சொல்லுக்கு அதே பொருளில் உள்ளம், நெஞ்சம், அகம் எனப் பல சொற்கள் உள்ளன. 'மன்' என்ற அடிச்சொல்லிருந்து இது தோன்றியது எனக்கொள்ளலாம். 'மன்' என்பது 'நிலைபேறு' எனக் குறிப்புப் பொருளைக் கொண்டது" எனத் தமிழ்ப் பேரகராதி கூறுகின்றது. மனமானது புலனுணர்ச்சி உணர்வு எண்ணங்கள் போன்ற அனுபவங்களை பெறும் கருவியாக விளங்குகிறது. "ஒரு சாதாரண மனிதன் எதைப் புரிந்து கொள்கிறானோ அதுவே தற்கால உளவியல் நூல்களால் குறிக்கப்படும் மனம; (psyche) ஆகும்." என ஜி.டி.போவாஸ் கூறுகிறார். மனம் என்பதை ஆறாவது அறிவு எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

"ஆறறிவதுவே அவற்றொடு மனனே" (தொல். மரபு .571)

என்று விளக்கியுள்ளார். உடல் வளர்ச்சியோடு ஒத்த நிலையில் மனவளர்ச்சி அமைவதை உளவியல் அறிஞர்கள் வலியுறுத்துவர். அறிவும் உணர்வும் ஒரு சேர கொள்வதால் அவ்வளர்ச்சி சீரான மனவளர்ச்சி எனப்படும்.

"குழந்தைப் பருவத்திலிருந்து குமரப்பருவத்திற்கு ஏற்படும் மாற்றம் பதினொன்றிலிருந்து பன்னிரெண்டாவது வயதிற்குள் நிகழும் மாற்றம் என்றும் இப்பருவம் பதினெட்டு வயது வரை நீடிக்கும்" உளவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இத்தகைய கருத்திற்கு இணங்க ஒவ்வொரு பருவத்திலும் மனம் தன்னியல்பாலும், உடலியல்பாலும், சூழலாலும் தாக்கம் பெறுகின்றது. இத்தாக்கம் உடல் வளர்ச்சிக்கும் ஒரு வகையில் காணமாகின்றது. சங்க அகஇலக்கியங்களிலும், இப்பருவ வளர்ச்சி குறிக்கப்படுகின்றன. இதனைக் குறுந்தொகையில்,

"முலையே முகிழ்முகிழ்த்தனவே தலையே
கிளைஇய குரலே கிழக்கு வீழ்ந்தனவே
செறிநிறை வெண்பலும் பறிமுறை நிரம்பின
சுணங்கும் சிலதோன் றினவே அணங்குவதற்கு
யான்றன் அறிவலே தானறி யலளே
யாங்கா குவள்கொல் தானே
பெருமுது செல்வர் ஒருமட மகளே" (குறுந்: 337)

என்ற பாடலில் காணமுடிகிறது. குமரப் பருவத்தில் ஏற்படும் அகப்புறத் தாக்கங்களை உள்ளத்தின் இயல்பான நிலையிலிருந்து புதிய உணர்வுகளை நாடுதல், இயல்பூக்களின் நிறைவேற்றத்தை அறியும்வேட்கை பாலுணர்வு உந்துதால் எதிர்பாலரை நாடும் உணர்வு ஆகிய புதுமைகளை மனம் காண விழைகின்றது. இவ்விழைவு உள்ளத்திற்குள் நுட்பமாகவோ வெளிப்படையாகவோ போராட்டங்களை உருவாக்குகின்றது.

உணர்வுப் போராட்டத்தில் ஆடவரும் மகளிரும்

உணர்வுப் போராட்டத்தில் முதன்மைப் பாத்திரங்கள் தலைவனும் தலைவியும் ஆவர். தோழி, பரத்தை, பாங்கன், செவிலி, நற்றாய் ஆகியோர் துணைப் பாத்திரங்கள், துணைப்பாத்திரங்களுள் பாங்கன் தோழி ஆகியோர் உணர்வுப் போராட்டம் உள்ளவர்களாகச் சித்தரிக்கப்படுவதில்லை.

உணர்வுப் போராட்டம் சங்க இலக்கிய பாத்திரங்களின் உள்ளத்தில் அமைந்து, கூற்றாக வெளிப்படுகிறது. ஆண்கள் உணர்வுப் போராட்டங்களும், மகளிர் உணர்வுப் போராட்டங்களும் ஒரே மாதிரியாக அமைபவையல்ல. பால்வேறுபாடு காரணமாக அவை வேறுபடுபவையாயினும் அவற்றின் அடிப்படைகள் ஒன்றாகவே அமையும். வேறுபாட்டுக்கு உடலமைப்பு காரணமாக அமைகிறது. ஒற்றுமைக்கு பால் உணர்வு வேட்கை காரணமாகிறது என்பதை,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

"...காமம்
நம்மி'னும் தான்தலை மயங்கிய
அம்மா அரிவை உறைவுஇன் ஊரே" (அகம்: 284)

என்ற இடைக்காடனாரின் அகநானூற்றுப்பாடல் தெளிவுபடுத்துகின்றது.

கலக்கம் நிறைந்த உணர்வு

தலைவியைத் தலைவன் சந்தித்த பின்பு பிரிந்து செல்லும்பொழுதும் ஏற்படும் துன்பம், கலக்கத்தையும் ஏக்கத்தையும் தலைவனுக்கு உண்டாக்குகிறது. தலைவி மனதில் நீங்காது நிலைபெற்ற காதலுறவை நினைக்கவும் கூடாது என தடைசெய்வதால் கலக்கம் உண்டாகின்றது இதனால் உண்டான உணர்வுப் போராட்டம் தன் உள்ளத்தில் தலைவி நிலைப்பெற்றுள்ள இடத்தைத் தலைவன் ஒரு உவமை மூலம் வெளியிடச் செய்கின்றது. இதனை நற்றிணைப்பாடல்,

"மலை உறை குறவன் காதல் மட மகள்,
பெறல் அருங்குரையள் அருங்கடிக் காப்பினள்
சொல் எதிர் கொள்ளளாள் இளையள் அனையோள்,
உள்ளது கூடாது என்றோய்! மற்றும்,
செவ், வேர்ப் பலவின் பயம் கெழு கொல்லித்
தெய்வம் காக்கும் தீது தீர் நெடுங் கோட்டு" (நற்-21)

என்று வெளிப்படுத்துகிறது. செவ்வேர்ப் பலா மரங்களின் பழங்கள் நிறைந்த தெய்வத்தால் பாதுகாக்கப்படுகின்ற குற்றமற்ற நீண்ட சாரலையும், அழகிய வெண்மையான அருவியையும் உடைய குடமலையாகிய கொல்லிமலையின் கடுங்காற்று மோதினாலும் பெருமழை பொழிந்தாலும், இடி முழக்கம் செய்தாலும், வேறுபல இயற்கைச் சீற்றங்கள் ஊறுபடுத்தினாலும் இப்பெருநிலம் கிளந்தாலும் கொல்லிப்பாவை தனது இயற்கை வடிவம் மாறாமல் இருக்கும் என்று தலைவன் பேசுகின்றான். எத்தனை இடர்பாடுகள் தோன்றினாலும் தலைவியிடம் தலைவன் கொண்டுள்ள உறவு மாறாதது என்பதைக் குறிப்பிட்டுக் கூற இவ்வுவமை கையாளப்படுகிறது. இங்கு கொல்லிமலையின் சாரல் தன் தலைவியிடம் அவன் கொண்ட உறவின் உயர்வையும், அங்குள்ள கொல்லிப்பாவையின் மாறா அழகு அவ்வுறவின் நிலைபேற்றையும் தெரிவாக்குகின்றன.

சோற்றுவரையும் தவிப்பும்

தலைவியின் மனத்தில் ஏற்படும் போராட்டங்களுக்கு வேற்று வரைவு நிகழும் வாய்ப்பும் ஒரு காரணம். அயலார் தன்னைத் திருமணம் பேசிட வருகின்றதை அறிந்த தலைவி தன் எண்ணத்தைத் தோழியிடம் கூறுகின்றாள்.

"காணினி வாழிதோழி யாணர்க்
கடும்புன லடைகரை நெடுங்கயத்து இட்ட
மீன்வலை மாப்பட் டாஅங்கு
இதுமற்று எவனோ நொதுமலர் தலையே" (குறுந் 171)

மற்றோர் வரைவு முயல்வது மீன்பிடிக்க இட்ட வலையில் விலங்கொன்று பட்டது போன்றதாகும். "கடுபுனல் அடைகரை நெடுங்கயம்" என்ற தொடர் தலைவியின் உயர்குடிப் பிறப்பைக் குறித்து நிற்கிறது. மீன்வலையும் விலங்குபட்டது போல இங்கு உவமை விளங்கப்படுகிறது. அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படுவதென்பது உறுதி எனக் குறிப்பாக இவ்வுவமை சுட்டுகின்றது. அயலார்க்கு இச்செயல் என்ன பயனுடையது என தலைவிக் கேட்டதன் மூலம் ஆத்திரத்தை வெளிப்படுத்துகின்றாள்.

தலைவியின் களவுவாழ்க்கை, திருமணத்தில் நிறைவு பெறக் கால நீட்டிப்பு நிகழ்தல் உண்டு என்பதையும், பெற்றோர் வேற்று வரைவுக்கு உடன்பட்டு விடுவார்களோ என்ற

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

அச்சமும், தவிப்பும், தலைவியின் மனத்தை ஆட்கொள்ளுகின்றன. இத்தகைய உணர்வுப் போராட்டம் அவள் நெஞ்சிலிருந்த பின்வருமாறு வெளிப்படுகின்றது.

"மள்ளர் குழிஇய விழவினாலும்,
மகளிர் தழீஇய துணங்கை யானினும
யாண்டுங் காணேன் மாண்தக் கோனை
யானுமோ நாடுகள மகளே என்கைக்
கோடீரிலங்கு வளைநெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோர் ஆடுகள மகனே" (குறுந்.3)

இப்பாடலில் தலைவி தன்னை ஆடுகள மகனாக அறிமுகப்படுத்திக்கொண்டு தன் காதலை வெளிப்படுத்துகிறாள். தலைவன் பிரிவால் தவிக்கிறாள். இதைக் கண்ட தோழி ஆற்றுப்படுத்துகிறாள். கலை நீடிப்பு, வேற்றுவரைவுக்கு அமையும் என்ற அச்சம், தவிப்பும் ஆற்றாமை பற்றிக் கொண்டது இதனால் ஏற்படுகின்ற உணர்வுப்போராட்டம் அதிகமாகின்றதை காணமுடிகின்றது. இவைபோன்ற உணர்வுகளையும் போராட்டங்களையும் சங்கப்பாடல்வழியாக அறியலாம்.

முடிவுரை

மனிதனின் வாழ்வில் ஏற்படும் உள்ளுணர்வுகள் நடத்தைக்குக் காணரமாகின்றன அந்நடத்தை சூழல்களுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. அம்மாற்றங்களின் நிகழ்வுகளை உளவியல் ஆய்கிறது. இன்பமும் துன்பமும் மாறிமாறித் தோன்றுவதால் உணர்வுப் போராட்டங்கள் தோன்றுகின்றன. உணர்வுப் போராட்டங்கள் தலைவிக்கே அதிகமாகத் தோன்றுகின்றன. கலக்கம், ஏமாற்றம், ஆற்றாமை ஆகிய மனநிலைகள் உணர்வு போராட்டக் காரணியாக அமைகின்றது. இவ்வாறான உணர்வுப் போராட்டமே உளவியல் சிந்தனையாக அமைகின்றது.

பார்வை நூல்கள்

1. எஸ். சந்தானம், கல்வியல் மனவியல், ப.23.
2. நா. கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழியகராதி, ப.3126
3. G.D. Boaz, Elements of Psychology. p.170.
4. E. Robert Grinder, Adolesenene. p.2.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

திருவள்ளுவர் வகுத்த வாழ்வியல் நெறிமுறைகள்
Life Ethics Devised by Thiruvalluvar

திருமதி.கு.செ.சரஸ்வதி, பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம் - 631 501.

நல்லாசிரியர் ரத்னா. ச.ம.மாசிலாமணி, தேர்வுநிலை இடைநிலையாசிரியர்,
சுப்பிரமணியபுரம், திருத்தணி-631 209, திருத்தணி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

Abstract

The research paper delves deep on the life ethics devised by Thiruvalluvar. He is a universal poet for all ages. He had encoded supreme ideas on the way of living hygienic life with lofty moral codes. His novelty in the brevity of wit and eliciting the noble path of life seems that the culture he lived is a highly benevolent one. It makes clear of the moral ethics, humanity and charity in all of its phases because it propels life is the basic truth. Consequently, the piece of writing brings forth the opinions of choosen couplets from "Thirukkural".

Keywords: Life, Ethics, Thiruvalluvar

முன்னுரை

மனிதனைப் பண்பட்ட மனிதனாக வாழச் செய்வதற்காக அற இலக்கியங்கள் தோன்றின. அத்தகைய இலக்கியங்கள் மனிதனுக்குப் பல கட்டுப்பாடுகளை வகுத்து, அவர்களைப் பண்பாட்டில் சிறந்து விளங்குவதற்கு வழிவகை செய்கின்றன. அவ்வகையில் அதில் தலைசிறந்து விளங்கும் உலகப்பொதுமறையாம் திருக்குறளில் திருவள்ளுவர் வகுத்துக் காட்டியுள்ள வாழ்வியல் நெறிமுறைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

வாழ்வியல் நெறிமுறைகள்

மனித இனத்தின் நலத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும், மனித சமுதாயம் வரையறுத்துக்கொண்ட ஒழுக்க நெறிகளே வாழ்வியல் அறம் எனப்படுகிறது. அதாவது மனித வாழ்க்கையைச் செம்மையுடையதாகவும், அமைதியுடையதாகவும், பயனுடைவதாகவும் அமைவதற்கு நம் ஆன்றோர்களும், சான்றோர்களும் அன்றாட வாழ்க்கையில் பின்பற்றி உருவாக்கிய செயல்முறைகளே வாழ்வியல் நெறிகளாகும். அதாவது தனிமனிதன் உணர்ச்சி வெளிப்பாடுகளில் எழுவன முரண்பாடுகள், அம்முரண்பாடுகளின் முனைப்பை மழுங்கச் செய்வதற்கும், மாற்றுவதற்கும், போக்குவதற்கும் நம் சான்றோர்கள் நமக்கு வகுத்துக் கொடுத்த நுட்பமே வாழ்வில் நெறிமுறைகள் எனலாம்.

ஒழுக்க நெறி

ஒழுக்கமுடைமை என்பது நீதி நூல்கள் காட்டும் அறநெறியில் இடைவிடாது நடத்தல் என்பதாகும். இவ்வொழுக்க நெறியானது மனம், வாக்கு, செயல் ஆகியவற்றை அடக்கியவர்களே பின்பற்ற இயலும். ஒழுக்கம் இல்லாதவன் வாழ்வில் உயர்வு அடைய முடியாது. ஒழுக்கம் உயிரைவிட மேலானது என்பதையும், ஒரு மனிதனை நல்ல பண்புடையவனாக்குவது ஒழுக்கமே என்கிறார். இதனை,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

உயிரினும் ஓம்பப் படும்" (குறள்.131)

என்ற குறட்பாவின் மூலம் அறிய முடிகிறது. இக்கருத்தையே முனைப்பாடியார் "அழியா ஒழுக்கத்தின் மிக்கதூஉம் இல்லை; பழியாமல் வாழும் திறம்" (அறநெறிச்சாரம்.60) என்னும் பாடலடிகளால் குறிப்பிட்டுள்ளதால் அறியமுடிகிறது. மேலும் ஒழுக்கம் என்பது ஆண்களுக்கும், பெண்களுக்கும் வேண்டுமென்று இருபாலாருக்குமான அக, புற ஒழுக்கங்களைத் திருவள்ளுவர் எடுத்துரைக்கிறார். அதாவது பெண் என்பவள் தன்னைத்தானே காத்துக்கொள்ள வேண்டும் என்பதை,

"சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை" (குறள்.57)

குறட்பாவின் வழியே உணர்த்துகிறார். மேலும் பெண்களுக்கு மட்டுமே கற்பு என்பது இல்லை என்பதையும், ஆண்களுக்கும் கற்பு என்பது உண்டு என்பதையும், அதனை ஆண்களும் கடைபிடித்து இல்லற வாழ்வு வாழவேண்டும் என்பதையும் அறிவுறுத்துகிறார். இதனை,

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பு என்னும்
திண்மை உண்டாகப் பெறின்" (குறள்.54)

என்ற குறட்பாவின் வழியே பெண்களுக்கு மட்டுமே கற்பு என்ற கட்டுப்பாட்டை உடைத்தெரிந்து அது ஆண்களுக்கும் வேண்டுமென்ற உயர் சிந்தனையை வலியுறுத்துகிறார். மேலும் பிறன்மனைவியை விரும்புகின்றவன் பிணத்திற்கு ஒப்பானவன் என்று இழித்துரைக்கிறார். ஒரு சமூகம் ஒழுக்கமுள்ளதாக அமைய வேண்டுமானால் அதில் இருக்கக்கூடிய பெண்கள் மட்டுமல்லாது ஆண்களும் கற்புடையவர்களாக இருக்கவேண்டும் என்கிறார். இதனை,

"பிறன்மனை நோக்காத போராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு" (குறள்.148)

என்னும் குறப்பாவின் வழியே அறியமுடிகிறது. எல்லோரும் ஒழுக்கத்தால் உயர்வடைவர், ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவர் இவ்வுலகில் பெறத்தகாத பெரும் பழியை அடைவர் என்பதை,

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி" (குறள்.137)

என்னும் குறப்பாவின் வாயிலாக எச்சரிக்கை விடுக்கிறார். இதேகருத்தை முன்றுறை அரையனாரும் பழமொழி நானூறில் "இழுக்கத்தின் மிக்க இழிவில்லை இல்லை; ஒழுக்கத்தின் மிக்க உயர்வு" (பழமொழி.64) என்னும் பாடலடியால் சுட்டிக்காட்டுவதால் அறிய முடிகிறது. மேலும் நல்லொழுக்கம் உடனே பயன் தராது என்றாலும், அது பின்நாளில் பெரும் நன்மையைத் தருவதாக அமையும். ஆனால் தீயொழுக்கம் உடனே தீமையைக் கொடுப்பதோடு வாழ்வில் தொடர்ந்து வந்து துன்பத்தையே தரும் என்பதை,

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்" (குறள்.138)

என்ற குறட்பாவினால் அறியமுடிகிறது. மேலும் ஒழுக்க நூல்களைக் கசடறக் கற்பதோடு நின்றுவிடாமல் அதனைப் பின்பற்றி நடத்தலே சிறந்த வாழ்வியல் நெறிமுறையாகும் என்பதை,

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" (குறள்.140)

என்னும் குறட்பாவினால் அறியமுடிகிறது. இக்கருத்தை மதுரைக் கூடலூர்கிழாரும் "ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்; ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைமை" (முதுமொழிக்காஞ்சி.1) என்னும் பாடலடியால் குறிப்பிட்டுள்ளதால் அறியமுடிகிறது.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

அன்பு நெறி

மனிதன் பிற உயிர்களிடத்து எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி காட்டும் பாசமே அன்பு எனப்படும். உலகிலுள்ள உயிர்கள் அனைத்தையும் வாழ வழி செய்வதும், அன்பொன்றே இறைவனை அடையும் வழி எனறும் திருவள்ளுவர் எடுத்துரைக்கிறார். அன்பு என்பது பற்று, நேயம், அருள், பக்தி என்னும் அளவிலும் பொருள்கொள்ளலாம். அன்பெனும் உணர்வை நாம் மறைத்து தாழ்ப்பாள் போட்டுவைக்க முடியாது. ஒருவரிடம் நாம் கொண்ட அன்பானது அவர் துன்பப்படும்போது தம்மையறியாமலேயே அவருக்கு விடுகின்ற சிறு கண்ணீரே உள்நின்ற அன்பினை எல்லோரும் அறியச் செய்யும்படிக் காட்டிவிடும். இதனை,

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்" (குறள்.71)

என்னும் குறட்பாவில் எடுத்துரைத்துள்ளார். மேலும் அன்பு முதலில் பிறரிடம் விருப்பத்தை உண்டாக்கும், அந்த விருப்பம் ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழகப் பழக அன்பு அதிகமாகி அசைக்க முடியாத நட்பாக மலர்கிறது என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. இதனை,

"அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு" (குறள்.74)

என்னும் குறட்பாவின் வழியே வெளிப்படுத்தியுள்ளார். மேலும் எலும்பில்லாத உயிரினமான புழுக்களை வெயில் துடிக்கச் செய்வதுபோல, அறக்கடவுள் அன்பில்லாத உயிர்களாகிய மனிதர்களைத் துடி துடிக்கச் செய்யும் என்று சுட்டிக்காட்டுகிறார். இதனை,

"என்பு இலதனை வெயில்போலக் காயுமே
அன்பு இலதனை அறம் " (குறள்.77)

என்னும் குறப்பாவின் வழியே அறியமுடிகிறது. மேலும் அன்பில்லாத வாழ்க்கை பாலை நிலத்தில் முளைத்துப் பட்டுப்போன மரம் போன்றது. அம்மரம் மீண்டும் தளிர்க்காததுபோல மனதில் அன்பில்லாதவரின் வாழ்க்கை ஒருபோதும் செழிக்காது என்பதை,

"அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று" (குறள்.78)

என்னும் குறப்பாவின் வழியே அறியமுடிகிறது. அன்பு என்பது மனிதர்களிடம் மட்டுமின்றி அனைத்து உயிர்களிடத்திலும் உள்ளது. பிற உயிர்களிடத்திடத்தில் சிறிதும் அன்பில்லாதவர் தாம் சேர்க்கும் பொருள் அனைத்தும் தமக்கே எனக்கருதி அனுபவிப்பர். ஆனால் அன்புடையவரோ பிறர் துன்பம் போக்கத் தம் செல்வம் அனைத்தையும் செலவழிப்பர். பிற உயிரின் துன்பம் துடைக்கத் தம் உயிரை அளிக்கவும் தயாராக இருப்பர் என்கிறார் வள்ளுவர். இதனை,

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" (குறள்.72)

என்னும் குறட்பாவினால் அறிய முடிகிறது. மேலும் அன்புதான் இல்வாழ்க்கையின் பண்பு, அறம்தான் அதன் பயன் கணவனும், மனைவியும் கொண்டுள்ளது அன்பன்று, இங்குக் குறிப்பிபடப்பவது இருவருமாகக் சேர்ந்து பிறரிடம் கொண்டுள்ளதே சிறந்த அன்பாகும். அந்த அன்பும் அறத்தோடு பொருந்திய மிகச் சிறந்த அன்பாக அமையவேண்டும் என்பதைஇ

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்கை
பண்பும் பயனும் அது" (குறள்.45)

என்னும் குறட்பாலினால் அறியமுடிகிறது. மேலும் அன்பின் வழியே நடக்கும் உடலே உயிருடன் கூடிய உடல், அவ்வன்பில்லாதவர் எலும்பைத் தோலால் போர்த்து மூடிக் கட்டிய உயிர் இல்லாத உடலாகவேக் கருதப்படும். இதனை,

"அன்பின் வழியது உயிர்நிலை அ.்.திலார்க்கு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்புதோல் போர்த்த உடம்பு" (குறள்.80)

என்னும் குறள் வழியே அறியமுடிகிறது. அதாவது அன்புடன் கூடிய வாழ்க்கைத்தான் உண்மையானது, அன்பில்லாத வாழ்க்கை உயிரற்ற பிணம் போன்றது என்கிறார்.

அற நெறி

திருக்குறள் வாழ்க்கை அறத்தேயே அடிப்படையாகக் கொண்டது. முப்பாலிலுள்ள ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களுமே அறத்தையே அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது. அறமானது வீடு பேற்றையும், செல்வத்தையும் தரும். ஆதலால் உயிர்களுக்கு அவ்வறத்தைவிட நன்மைத் தரக்கூடியது வேறொன்றுமில்லை. இதனை,

"சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு" (குறள்.31)

என்னும் குறட்பாவினால் அறிய முடிகிறது. மேலும் மனதில் மாசு இல்லாமல் இருப்பதே அறம். எண்ணங்களின் விளை நிலமான மனம் தூய்மையானதாக இருத்தல், சொல்லும் செயலும் அதனை எதிரொலிக்கும். மனதிலுள்ள தீய எண்ணத்தை மறைத்துச் சொல்லப்படும் சொல்லும், செய்யப்படும் செயலும் அறமாகாது அது போலியானதே என்கிறார் திருவள்ளுவர். இதனை,

"மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற" (குறள்.34)

என்னும் குறட்பாவில் எடுத்துரைத்துள்ளார். மேலும் அறத்தோடு பொருந்திய நற்செயல்களால் வரும் இன்பமே உண்மையில் இன்பமாகும். அறத்தோடு பொருந்தாத மற்ற வழியில் வருபவையெல்லாம் இன்பமல்லாது துன்பமேயாகும் என்பதையும், அவற்றால் புகழொன்றும் வராது என்பதையும்,

"அறத்தான் வருவதே இன்பம் மற்றுஎல்லாம்
புறத்த புகழும் இல" (குறள்.39)

என்னும் குறட்பாவால் அறிய முடிகிறது. அறநெறி வழியில் வாழ்தலே சிறப்பெனப் பண்டைத் தமிழர் விரும்பினர். அறமல்லாத வழியே வரும் செல்வமும், இன்பமும் நிலையற்றவையாகவே கருதினர்.

ஈகை நெறி

தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் இயல்புடையவராய்த் தன்னிடமுள்ள செல்வத்தைப் பிறர்க்குக் கொடுத்து வாழ்வதே மனித வாழ்வின் மகத்தான பண்பாகும். ஈகையின் மாண்பு பண்டுத்தொட்டு இன்றுவரை போற்றப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. புசித்தவருக்குத் கொடுத்தல் புண்ணியப் பயனாகும். "பசி என வந்தோர்க்குப் புசி" எனத் தருதல் வேண்டும். பசியானது உயிரையும், உடலையும் மட்டும் வருத்தும். ஆனால் அழிபசியோ ஒருவனது பண்புகள் அனைத்தையும் வாட்டிவிடும். ஆதலால் அந்தக் கொடிய பசியைப் போக்குதல் பொருள் பெற்றார் கடமையாக விளங்குகிறது என்பதை,

"அற்றார் அழிபசி தீர்த்தல் அ∴துஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி" (குறள்.226)

என்னும் குறட்பாவினால் அறியமுடிகிறது. மேலும் ஈகை என்பது வறியவர்க்கு ஒன்றைக்கொடுத்து உதவும் தன்மையாகும். ஒரு பிடிச்சோறு இல்லாமல் ஒருவன் இறக்கும் நிலை வரும்போது ஈகையாளன் விரைந்துவந்து உதவவேண்டும். சமுதாயம் சார்ந்தது ஒப்புரவு ஆனால் ஈகையோ தனி மனிதனுக்கு உதவும் தன்மையுடையது என்பதை,

"வறியார்க்குஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து" (குறள்.221)

என்னும் குறட்பாவினால் அறிய முடிகிறது. மேலும் வறியோர்க்கு ஒன்று ஈதல் வேண்டும் அதனால் புகழ் பெற்று வாழ்தல் வேண்டும் என்பதை,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு" (குறள்.231)

என்னும் குறட்பாவினால் விளக்குவதோடு அப்புகழைத் தவிர இப்பிறவியில் நற்பயன் வேறேதுமில்லை என்பதை வலியுறுத்திக் கூறுகிறார்.

முடிவுரை

திருக்குறள் மனிதனின் பல்வேறு நிலைகளில் வாழ்வின் வாழ்வியல் கோட்பாடுகளைக் தனித்தனிக் கூறுகளாகத் தமிழ் மாந்தர்களுக்கேயன்றி, உலகம் முழுமைக்கும் எடுத்துரைக்கிறது. எனவேதான் பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரனார் அவர்கள் திருக்குறளையும், திருவள்ளுவரையும் புகழும் வகையில் "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொருநீதி" என்று சிறப்பித்துப் பாடியுள்ளார். அவ்வகையில் திருவள்ளுவர் வகுத்துத்தந்த ஒழுக்க நெறி, அன்பு நெறி, அற நெறி, ஈகை நெறி ஆகிய வாழ்வியல் நெறிமுறைகளைப் பின்பற்றி நெறிபிறழாமல் வாழ்வோமானால் நாம் அனைவரும் பார்போற்றும் நற்சான்றோர்ளாகத் திகழ்வோம் என்பது உறுதி.

துணைநூற் பட்டியல்

1. *திருக்குறள் தமிழ் மரபுரை*, மொழிஞாயிறு பேராசிரியர் ஞா.தேவநேயப் பாவாணர், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன், சென்னை-600 017, முதற்பதிப்பு - திசம்பர்-2000.
2. *தெய்வப் புலவர் அருளிய திருக்குறள்-உரை விளக்கம்*, உரையாசிரியர் ஜெ.ஸ்ரீசந்திரன், வாத்தமான் பதிப்பகம், சென்னை-600 017, முதற்பதிப்பு - திசம்பர்-2000.
3. *திருக்குறள் சமுதாயவியல் ஆய்வுத் தெளிவுகள்.* அருள்திரு திருக்குறள் தூயர் பேராசிரியர் முனைவர் கு.மோகனராசு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-600 108, முதல் பதிப்பு - திருவள்ளுவராண்டு 2047 (சூன்-2016).

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

நவீன கல்வி வளர்ச்சிக்கு *பதினெண்கீழ்க்கணக்கு* நூல்கள் ஆற்றிய பங்கு
The Development Rendered by *Pathinenkelkanakku* Collection for Modern Education

திருமதி.சி.சுகந்தி, தலைமையாசிரியை,
அரசு உயர்நிலைப்பள்ளி, தகடி, விழுப்புரம் மாவட்டம்.

Abstract

The research paper plans to render the role of "Pathinenkelkanakku" collection of books in developing the modern education. Tamil culture is a very systematic and noble one developed many thousand years back. It has fine treatises on all walks of life and have the capability of guiding anyone into a noble one. "Pathinenkelkanakku" is a collection of books chiefly deals with the ideologies of education. In the present day crisis, in developing the juveniles the core ideas from them will help amply to over come the crisis. Consequently, the ideas from the collection will aid the need of the society.

Keywords: Development, Rendered, *Pathinenkelkanakku*, Modern Education

முகவுரை

கல்வி (Education) என்பது, குழந்தைகளை உடல் மற்றும் மனவளர்ச்சியில் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புகளை வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும். கல்வியாளர்கள் கூற்றின்படி இளைய தலைமுறையினரை முறையாக வழி நடத்துவதிலும், சமுதாயத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும் நவீன கல்வி முறை முக்கிய பங்கு வகிக்கிறது. வான் புகழ் வள்ளுவர் கல்வியின் தன்மை குறித்து பேசும்போது

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று கூறுவதன் மூலம் தான் கற்ற கல்வி மூலம் பண்பாடு, நடத்தை போன்றவற்றை மாற்றி மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றும் நுட்பம் படைத்தது நவீன கல்வி முறை.

"ஒருமை கண் தான் கற்ற கல்வி
எழுமையிம் ஏமாப் புடைத்து"

என்பதன் மூலம் ஏழு பிறப்பிலும் தொடர்ந்து வருவது கல்வி என கல்வியின் பெருமையை வள்ளுவர் எடுத்து இயம்பியுள்ளார். கல்வி என்ற தமிழ்ச்சொல் கல் (ஆய்வு செய்) என்ற வேர்ச் சொல்லில் இருந்து வந்தது. கல்வி என்ற சொல்லிற்கான ஆங்கில சொல் "Education" என்பது வளர்த்தல் என பொருள்படும் ēducātiō என்னும் இலத்தீன் சொல்லில் இருந்து எடுக்கப்பட்டது. நவீன கல்வி வளர்ச்சி என்பது ஒரு மனிதனை முழுமையான மனிதனாகவும் சமுதாயத்திற்கு உதவிகளை அளிக்கும் படியும் மாற்றம் கொண்டு வருவதே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்தியாவில் கி.பி 5 ஆம் நூற்றாண்டிலேயே பீகார் மாநிலத்தில் நாளந்தா பல்கலை கழகம் செயல்பட்டு வந்திருக்கிறது என்பதிலிருந்து கல்வி எந்த அளவிற்கு முக்கியத்துவம் பெற்று இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

கல்வியின் சிறப்பு

கல்வியின் பயன் குறித்து புறநானூற்று பாடல் ஒன்று (183.3-10) மனிதன் சமூக நிலைபாடிலிருந்து விளக்குகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

"பிறப்போர் அன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயின் மனந்திரியும்
ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசன் செல்லும்
பேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே" (183.3.10)

இங்கு நவீன கல்வியின் பெருமையை நவீன படிநிலை நோக்கில் - 1. குடும்பம் (பெற்றோர்/உடன்பிறந்தோர்), 2. சொந்த சமூகத்துக்குள் அரசின் சிறப்பு, 3. மாறுபட்ட சமூக மதிப்பு உடைய பல்வேறு சமூக அமைப்புகளுக்கு இடையே கல்வி கற்றவருக்கு கிடைக்கப்பெறும் சமூக மதிப்பை அறிந்து கொள்ள முடிகிறது.

கல்வியின் வளர்ச்சி

நவீன காலத்தில் கல்வியின் வளர்ச்சியை நோக்கும் போது பண்டைகாலத்திலேயே குருகுலக்கல்வி மூலம் கல்வி கற்றனர் என்பதை பார்க்கமுடிகிறது. குருவிற்கு அருகில் இருந்தும் தேவையான பொருட்களைத் தந்தும் குருவிடம் கல்வி பயின்றதை புறநானூற்றுப் பாடலில் அறியமுடிகிறது.

"உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" (புறநானூறு - 183:1-2)

அய்யன் வள்ளுவர் நவீன கல்வியின் நோக்கமாக கருதப்படும் நுண்ணறிலோடு கூடிய கல்வியின் சிறப்பை

"நீரளவே யாகுமாம் நீராம்பல் தான் கற்றா
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு"

என்று ஒருவர் தான் கற்றுக் கொள்ளும் கல்வி அறிவினை பொறுத்தே அவர்களுடைய நுட்பமான அறிவுத்திறமை வெளிப்படும் என்று கூறியுள்ளார்.

"கல்வி கரையில கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கின் பிணிபல் - தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து"

கல்வி முடிவில்லாதன. கற்பவர்களுக்கு வாழ்நாள்கள் சில ஆதலால் நீரை நீக்கி பாலையே உண்ணுகின்ற அன்னப் பறவையைப்போல், தெரிந்து ஆராய்ந்து கற்பார்கள்.

மாசறக் கற்றல்

நவீன கல்வியில் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றாற்போல பல்வேறு பிரிவுகள் உள்ளடக்கி கல்வியை அவரவர். நுண்ணறிவுக்கு ஏற்றாற்போல கற்ற நிலை வளர்ச்சி கண்டிருக்கிறது. மாசற கற்றல் என்பது கல்வி வளர்ச்சியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாக இருப்பதை நான்மனிக்கடிகை நூலில் 72 ஆம் பாடலில்,

"பதிநின்று பல்லார் உறையின் ஒருவன்
மதிநின்று மாசறாக் கற்பின் - நுதிமருப்பின்
ஏற்றான் வீறெய்தும் இனநிலைதான் கொடுக்குஞ்
சோற்றான் வீறெய்துங்குடி"

குற்றமறும் படி கற்கும் போது தெளிவான அறிவை பெற முடியும் என கூறப்படுள்ளது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

இளமையில் கற்றல்

திரியின் சுடருக்கு கல்வி கற்ற இளையோனை ஒப்பிட்டு திரி சிறியதாக இருந்தாலும் உலகத்தார் கை கூப்பி வணங்குதலும், விறகின் எரியும் சுடருக்கு வயதில் பெரியவனாக இருக்கும் மூத்தவனையும் ஒப்பிட்டு விறகின் அழல் பெரிதாக இருந்தாலும் அதனை தொழாமல் இகழ்வது போல கல்வி அறிவு இல்லாத மூத்தவனை கைவிட்டு இளையவனை உலகத்தார் புகழ்வர் என்று கல்வியின் முக்கியத்துவம் அதனை நவீன காலத்திற்கு ஏற்ப மாற்றமடைந்த நிலை கொண்ட கல்வி கற்றலில் உள்ள சிறப்பினை அறியலாம்.

குழந்தைகளை மையமாகக் கொண்ட கல்வியானது இளமையிலேயே தெளிவான கல்வி அறிவு பெறவேண்டும் என்ற பொருளில் திரிகடுக செய்யுளில்

"முந்தை எழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு
தந்தையும் தாயும் வழிபட்டு-வந்த
ஒழுக்கம் பொருநெறி சேர்தலில் மூன்றும்
விழுப்ப நெறிதூரா வாறு" (திரிகடுகம் - பாடல் 56)

இளமையில் கல்வி கற்று கல்விப்பொருள் உணர்ந்து பெற்ற தாய் தந்தை போற்றி சான்றோர் செல்லும் நெறியில் செல்வது ஒருவனுக்கு உயிர் என கூறப்பட்டுள்ளது.

கற்றல் இடர்பாடுகள்- விழிப்புணர்வுகள்

நவீன காலத்தில் இளம் வயதிலேயே வறுமை காரணமாக கல்வி கற்காமல் சிறு குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதன் மூலம் அந்த சிறு குழந்தைகளின் கல்வி கற்றலின் மூலம் கிடைக்கும் அடைவுத் திறன்களை பெறுவது பாதிக்கிறது. அதனால் நவீன கல்வி வளர்ச்சியில் குழந்தைகள் பாதுகாப்பு சட்டம், அனைவருக்கும் கல்வி என்ற சட்ட பாதுகாப்பு மூலம் இளம் வயதிலேயே கல்வி கற்க பிரச்சாரங்கள், விழிப்புணர்வு பேரணிகள் நாடகங்கள் போன்றவை நடத்தப்படுகின்றன. இதனையே பழமொழி நானூறு

"ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்றுமெனவும் புணருமோ? - ஆற்றச்
சுரம் போக்கி உலகு கொண்டார் இல்லையே, இல்லை
மரம் போக்கி கடலி கொண்டார்" (பழமொழி நானூறு - கல்வி - பாடல்- 1)

இந்த பாடலில் மூன்றுரை அரையனார் ஆயத்துறையின் வழியை மிகவும் கடக்கவிட்டு வாணிக சரக்குகளின் மீது ஒருவனிடம் கடமை கொண்டவர் ஒடத்தினின்றும் போக்கிக் கரையேற்றி நின்று ஒடத்தில் ஏறி வந்தவர்களிடம் கூலி கொண்டவர் எவரும் இல்லை கற்கக் கூடிய இளமைப்பருவத்தில் கல்வி கற்காதவன் மூப்பு வந்த காலத்தில் கல்வியைக் கற்று போற்றுவான் என்று சொல்லப்படுவதும் ஒருவருக்கு கூடுமோ? என்று மிக அழகாக இளமைப்பருவ முதலே கல்வி கற்க வேண்டியதன் முக்கியத்துவத்தை கூறியுள்ளார்.

புரிந்துக் கற்றல்

நவீன கல்வி வளர்ச்சியானது புரிந்து கொண்டு கற்றலுக்கு வழிகோலுகிறது. இதனை அன்றே பழமொழி நானூறு

"சொற்றொறும் சோர்வு படுதலால் சோர்வின்றிக்
கற்றொரும் கல்லாதே னென்று வழியிரங்கி,
உற்றொன்று சிந்தித் துழன்றொன் றறியுமேல்
கற்றொறுந்தான் கல்லாதவாறு" (பழமொழி நானூறு - கல்வி - பாடல் - 1)

ஆசிரியர் சொல்லுந்தோறும், மறதி உண்டாதலால், சோம்பலின்றி, ஒருவன் கற்கும் தோறும், நான் கல்லாதவனென்று பின்னையும் பரிந்து அதன் கண்ணே மனம் பொருந்தி, ஒருமைபட சிந்தித்து முயன்று வருந்தி முன்பு அறிந்திராத ஒரு பொருளை அறிவானாயின் கற்கும் தோறும் தான் கல்லாதலாறாகவே கருதுமாறு போலும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

சிறுபஞ்ச மூலம் என்ற நூலில் கற்றலர்களை தேவர்களோடு ஒப்பிட்டும் கல்லாதவர்களை பிசாசுக்கும் ஒப்பிடப்பட்டுள்ளது.

"தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்
பூதரே முன்பொருள் செய்யாதார் - ஆதரே
துன்பமிலேம் பண்டுயாமேவனப்புடையேம்
என்பார் இருகால் எருது" (சிறுபஞ்ச மூலம் - பாடல் - 20)

மற்றொரு பாடலில் "கல்லாமை தீது" என்று தீமை என்று கல்வி கற்காமல் இருப்பது தீமை என கல்வியின் பெருமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. திரிகடுகம் என்ற நூலில்

"கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கருக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும் - பாத்துண்ணும்
தன்மையிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தலில்" (திரிகடுகம் - நூல் - பாடல்10)

கற்பிக்கும் ஆசான் இல்லாத ஊர், கல்வி கேள்விகளில் முதிர்ந்தவர்கள் இல்லாத சபையில் இருத்தலும் தீங்கு என கூறப்பட்டுள்ளதைக் காணலாம். திருக்குறளில்

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு" (திருக்குறள் அதிகாரம் - 40 குறாள் 396)

மணல் நிறைந்த கிணற்றில் தோண்ட தோண்ட நீர் ஊற்றெடுப்பது போல பல்வேறு நவீன வளர்ச்சி கண்ட நூல்களை கற்கும் போது திறம்பட்ட மேம்பட்ட அறிவு வளர்ச்சி காணும் என்று கூறப்பட்டுள்ளதை அறியலாம்.

"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு". (திருக்குறள் அதிகாரம் 40 குறள் : 392)

எண்ணும் எழுத்தும் ஆகிய இரண்டும் கொண்ட கல்வி அறிவினை முகத்தின் முக்கிய உறுப்புகளான இரண்டு கண்களுக்கு உவனமயாக இரண்டு வரிகளில் தெளிவாக கல்வி பெற வேண்டியதன் அவசியத்தை அய்யன் கூறியுள்ளார்.

கல்வி கற்காதவன் எந்த நிலையில் சமூகத்தில் வைத்து மதிக்கப்படுவான் என்பது இந்த நவீன காலத்தில் நாம் அறிந்திருக்கிறோம். இதனை சங்க இலக்கிய காலத்தில் வள்ளுவன்

"ஊர் என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர் அனையர் கல்லாதவர்" (திருக்குறள் - 41 கல்லாமை குறள் : 406)

கல்வி அறிவு இல்லாதவர் உயிரோடு இருக்கின்றார் என்று கூறலாமே தவிர கல்லாதவர்கள் ஒரு பயிரும் விளைய முடியாத களர் நிலத்திற்கு ஒப்பாவர். கல்வி கற்காதவர் விலங்குகளோடு ஒப்பிடப்படுவதையும் திருக்குறளில் காணலாம். முதுமொழிக் காஞ்சியில் அறிவு பத்தில் "கற்றதுடைமை காட்சியினறிய" என்று ஒருவன் கல்வி பயின்றதை அவன்தன் அறிவினாலேயே அளந்து அறிவர் என்று கூறி கல்வியானது பல்வெறு காலத்தின் சூழலுக்கு ஏற்ப வளர்ந்து பல்வேறு கிளைகள் கொண்ட துறையாய் வளர்ந்திருப்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.

முடிவுரை

அக்கால குருகுலகல்வி நிலையில் இருந்து கல்வி கற்கும் மாணவர்களின் மனநிலை, சமூக சூழல் குடும்ப சூழல் ஆகியவைகளை அறிந்து அவர்கள் இயல்பாகவே தானாகவே முயன்று கற்றல், ஆர்வமுடன் கற்றல் என்ற நிலையில் கல்வியானது நவீன யுக்திகளை பயன்படுத்தி கற்கும் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. அறியாமையை போக்கவல்லது கல்வி. இதனை நாலடியார் பாடலில்,

"இம்மை பயக்குமால் ஈயக்குறைவின்றால்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தன்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணோய் கல்வி போல்
மம்மரறுக்கும் மருந்து" - நாலடியார்.

கற்றவர் புகழை இம்மையிலும் மறுமையிலும் வாழச் செய்து அறியாமை எனும் நோயைப் போக்கக் கூடிய மருந்து இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை" என்று கல்வியின் சிறப்பினைத் தெளிவாக காணலாம். எனவே ஒவ்வொருவரும் கல்வியை பெறுவதன் மூலம் சமூகத்தில் பண்பாடு உள்ளவர்களாய், சமுதாயத்தில் தன் பங்களிப்பை செய்பவர்களால், உள்ளம் தெளிந்தவர்களாய் வாழ முடிகிறது. கல்வியானது நம் இறப்பு வரை தொடரக்கூடியது. ஆகையால் தான் ஔவையார், "ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்" என்று கூறியுள்ளார். பதினெண்கீழ்கணக்கு நூல்கள் நம் நவீன கால கல்வி வளர்ச்சியில் கல்வியின் பயன், கல்வி பயிலுவதன் முக்கியத்துவம் குறித்து பெரும்பங்கு ஆற்றியுள்ளது என்பதை மேற்கண்ட மேற்கோள் செய்யுள்களில் இருந்து அறிந்து கொள்ளமுடிகிறது.

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றயவை"

துணை நின்ற நூல்கள்

1. *பதினெண் கீழ்கணக்கு நூல்கள் மூலமும் உரையும்-* தொகுப்பாசிரியர்: S.கௌமார்ஸ்வரி M.A., M.L.I.S. புலவர் வெற்றியழகன் அவர்களின் ஆய்வுரையுடன்.
2. சுப்பிரமணியன் ச.வே.*தமிழ்செல்வியல் நூல்கள் மூலம் முழுமையும்* 2008.
3. கதிரைவேற்பிள்ளை நா.*தமிழ்மொழி அகராதி* 2005.
4. *கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி*, 1999.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

புதுக்கவிதைகளில் பெண் கவிஞர்களின் பெண்ணிய கருத்தாக்கங்கள்
Feministic Ideology of the Women Writers in Modern Poetry

சு.செல்லம்மாள், முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்.

Abstract

The research paper elucidates the feministic ideas in the modern poetry of the era. They putforth the reality in their poems to the audience. Every question or idea posed by them are really arational lance on the dominating or subjugating medium. Their poems are packed up with a feministic charge that can provoke a bid wave amidst the womwn gender and can make them as individuals apart and to overcome patriarchal stereotypes. Subsequently, the ideas from the collection of works like "Ambi", "Anathikalam", "Karuvarai Vasanai", "Neerilayum Mugam", "Oru Malayum Yunoru Malayum" will aid us to understand the ideas and stand of the modern women writers.

Keywords: Feminism, Ideology, Tamil Women Writers, Modern Poetry

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டு ஓர் இணையற்ற நூற்றாண்டு விடியலுக்கான வெள்ளிகள் முளைத்த வைகறை நேரம். மாற்றிப் போடப்பட்ட பலவற்றுள்ளும் பெண்ணும் மாறிப்போனாள். நம் சமகால வாழக்கை நிகழ்வுனளை, நம்மைச் சுற்றியுள்ள சமூகம் தொடர்பான செய்திகளைப் பதிவு செய்யும் ஆவணங்களாக இலக்கியங்கள் அமைகின்றன. எண்பதுகளுக்குப் பிறகு தொடங்கும் கவிதைகள் பெண்ணியம், தலித்தியம், ஏகாதிபத்தியம், உலகமயம் என விரிந்து பரந்து செழித்து தனி மனிதர்களாலும் சாதி அமைப்புகளாலும் ஒடுக்குமுறைக்கு ஆளான தலித்துகள் மற்றும் பெண்கள் அம்முறைக்கு எதிராகக் குரலெழுப்பத் தொடங்கினர். அவர்களின் எழுச்சி, கவிதை என்னும் ஊடகம் வழி மக்களைச் சென்றடையத் தொடங்கியது. இக்கட்டுரையானது புதுக்கவிதைகளில் பெண் கவிஞர்களின் பெண்ணியக் கருத்தாக்கங்களை விவரிப்பதாக உள்ளது.

பெண்ணியம் - சொல் விளக்கம்

1889 ஆம் ஆண்டு பெண்களின் உரிமை தொடர்பான பிரச்சனைகளையும் அதனடிப்படையிலான போராட்ட உணர்வுகளையும் 'Womanism' என்ற சொல்லால் குறிப்பிட்டனர். 1890 முதல் இச்சொல்லுக்குப் பதில் 'Feminism' என்ற சொல் வழங்கப்பட்டது. இது 'Femina' என்ற இலத்தின் மொழிச் சொல்லிலிருந்து உருவானதாகும். இதற்குப் "பெண்ணின் குணநலன்களைக் கொண்டுள்ள" (Having the Quality of Female) என்ற பொருள் அமைகின்றது. 'குநஅைைளைஅ' என்ற ஆங்கிலக் கலைச்சொல்லை தமிழில் பெண்ணியம் என்று வழங்குகின்றனர். "1895 ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் நாளன்று வெளியிட்ட அத்தீனா என்ற கிரேக்கப்பெண் தெய்வக்கோயில் என்ற நூலில் ஆலிஸ் ரோசி என்பவர் மேலே குறிப்பிட்ட பெண்ணியம் என்ற சொல்லை மகளிரியம் என்ற சொல்லுக்கு மாற்றுச் சொல்லாகப் பயன்படுத்தினார்." (பெண் கவிஞர்கள் பெண்ணியம் பக் 77). பாலினச் சமத்துவக் கோட்பாட்டையும் பெண்ணுரிமைகளையும் சிக்கல்களையும் முன்னிலைப்படுத்தும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

இயக்கங்களையும் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இருபதாம் நூற்றாண்டில் இச்சொல் வழக்கத்திற்கு வந்தது எனலாம்.

பெண் கவிஞர்கள் காட்டும் பெண்ணியம்

வீட்டிற்குள் பெண்ணைஅடக்கி வைத்தல், பெண்களுக்குக் கருத்துக்களை வெளியிட உரிமையில்லை, அடங்கி வாழ்தல், குடும்பத்தில் சுமை, வரதட்சணைக்கொடுமை, பாலியல் அடிமை, சுயமின்மை, கல்வி கற்க உரிமை இன்மை, வேலைப்பளு, திருமண வாழ்க்கை, விதவைநிலை, ஒருதலைப்பட்சமான கற்புக்கோட்பாடு, பெண்குழந்தையை வெறுத்தல், பெண்ணைக் காட்சிப் பொருளாகப் பார்த்தல் போன்ற நிலைகளில் பெண்கள் அடிமைகளாக இருந்து வருகிறார்கள்.

பெண்ணின் குறுகிய வட்டம்

அடிமைத்தளைகளை உடைத்தெறிந்து வெளியில் வருவதற்கான வாய்ப்புகள் இன்றித் தவித்துக் கொண்டிருக்கும் பெண்ணின் நிலையை 'உள்ளே ஒரு வானவில்' என்ற கவிதையில் வைகைச்செல்வி பதிவாக்கியுள்ளனர்.

“தாழ் திறக்கும் என்றால் தான்
காத்திருத்தல் சுகம்
இல்லையெனில்
மரண அவஸ்தை” (அம்பி ப.21)

'துக்கங்கள்' என்ற தேன்மொழியின் கவிதை தனிமையில் வீட்டினுள் அடங்கிக் கிடக்கும் பெண்களின் அவஸ்தையை வெளிப்படுத்துகின்றது. பெண் தன்னிலை மறந்து தூங்குமூஞ்சிப் பூவைப்போல் வீட்டில் உலவிக் கொண்டிருக்கும் நிலையைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

“தூங்கு மூங்சி பூவாய்
அசைந்து கொண்டே யிருக்கிறது என்
அறையில் ஒரு மெழுகுவர்த்தி” (அநாதிக்காலம் பக் 70)

சாதனைகளும் சரித்திரங்களும் படைக்க வேண்டிய பெண்கள் சமயலறையில் ஒஐங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வீட்டின் உள்ளறைகளில் உள்ளக்குமுறலுடன் உலவிக் கொண்டிருக்கிறார்கள். சுவர் தாண்டி வெளியில் வர மறுக்கின்றன அவர்கள் கால்கள். பெண்கள் முயற்சி செய்தால் தவிர அவர்கள் வெளியில் வருவதற்கு வேறு வழியில்லை. சல்மாவின், கவிதைகளில் சுவர் தாண்டத் திராணியற்ற கால்களின் நிலையைப் பதிவு செய்துள்ளன.

“சுவர் தாண்ட
திரணியற்ற கால்கள்
வளைய வருகின்றன
உள்ளறைகளின் இருட்டில்” (ஒரு மாலையும் இன்னொரு மாலையும் ப.36)

சொந்த வீட்டில் மட்டுமல்ல, சொந்தக்காரர்கள் வீட்டிற்குச் சென்றாலும் பெண்களுக்கு அடுக்களையே அடைக்கலமாகிறது. எந்நிலையிலும் பெண்கள் இரண்டாம் பட்சமாக பார்க்கக்கூடிய நிலையையே பார்க முடிகிறது. முன்னுரிமை கொடுக்க மறுக்கும் ஆண்களின் நிலையைச் சுட்டிக்காட்டுகிறார் வெண்ணிலா.

“அருகருகே அமர்ந்து
அவசரமில்லாமல் சாப்பிட்டு வர
விருந்துக்கு வந்தால்
ஆண் பந்தி முத்தி என்று
அங்கேயும்
அடுக்களைக்குள் காத்திருக்கச் சொல்கிறார்கள்” (நீரிலலையும் முகம் ப.79)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

யாரும் சொல்லித்தராமலே அடுக்களை வேலைகள் அம்மாவினுடையது என்றும், அதிகாரம் செய்வது அப்பாவினுடையது என்றும் தெரிந்து கொள்கிறது குழந்தை கருவிலேயே ஆரம்பமாகிறது அடிமைநிலை.

"உள்ளே வீசப்படும்
செய்தித்தாளை
அப்பாவிடம் கொடுக்கவும்
கீரை விற்பவர் வந்தால்
அம்மாவைக் கூப்பிடவும்
கற்றுக் கொள்கிறது குழந்தை
யாரும் கற்றுத் தராமலேயே" (நீரிலலையும் முகம் ப.79)

பொன்மொழியும் மரபு கட்டுடைதலும்

பெண்மொழி ஒடுக்கப்பட்ட உடலுக்குள் சுழல் மாற்றம் கிளர்த்தும் கிளர்ச்சி, வேட்கை, வலி, கனவு ஆகியன பற்றிய அகநிகழ்வுகள் சார்ந்து உருவாகிறது. இவ்வுணர்வுகள் குறியீடுகளாய் இடம் பெறுமானால் அக்கவிதை பெண்மொழிகவிதையாகக் கருத முடியும். பெண்மொழி தன்பால் சார்ந்த தனி அடையாளங்களை உடையது. "பெண்ணியச் சிந்தனைக் கவிதை அழகியல் சார்ந்து பெண் உணர்வாக மாற்றம் பெறும்போது கவிதைக்குள் பெண்மொழி சாத்தியப்படுகிறது." (பா.வெங்கடேசன், அவ்வை மண்ணின் பெண் எழுத்தாளர்கள் ப.10)

ஆழ்மன உணர்வுகளை, நனவிலி மனத்தை வெளிப்படுத்த மொழி என்றும் தடையாக இருப்பதில்லை. ஆனால் பெண்கள் தாம் அமைதியாகவும் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்பவனாகவும் பழக்கப்பட்டிருக்கிறார்கள். அவை இன்று கட்டுடைக்கப்பட்டுப் பெண்மொழியாக வெளிப்படுகிறது. "பெண்கள் தங்கள் அனுபவங்களை மொழி வரம்புகளையும் சமூக வரம்புகளையும் மீறிப் பதிவு செய்யும் போது தான் பெண்ணிய மொழி உருவாகும்." (எல்.இராமமூர்த்தி, பெண்ணிய ஆய்வுகள் ப.22)

உலகத்தில் மொத்த ஜனத்தொகையில் சுமார் பாதிக்கு மேல் உள்ள பெண்ணினம் அவர்களுக்கான ஒரு மொழியில்லாததாலல் தான் பெண்மொழி வளர்ச்சி நிலைகளை அடைய முடியவில்லை. மொழியின் வழியாகச் சித்தரிப்பதும், எண்ணங்களை வெளியிடுவதும் நடைபெறுகின்றன. இதை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் பெண்களின் சிந்தனைகளை முழுமையாக வெளியிட ஒரு பெண்மொழி வேண்டும். அம்மொழி ஆண்களின் மொழியிலிருந்து முற்றிலும் வேறானதாக அமைய வேண்டும்.

மொழித்திறனை முழுமையாகப் பெற்றுத் தாங்கள் நினைத்ததை வெளியிடும் வாய்ப்புப் பெண்களுக்குத் தரப்படவில்லை. மேலும் பெண்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட முடியாதவாறு சமூகக் கட்டுப்பாடுகளால் ஒடுக்கி வைக்கப்பட்டிருந்தனர். தற்பொழுது கட்டுப்பாடுகளைக் கட்டவிழ்த்து, மரபுகளை உடைத்துப் பெண்மொழி இயங்க்கிக் கொண்டிருக்கிறது. எல்லா நாடுகளிலும் இறைவழிபாட்டு மரபு அந்தந்த தட்ப வெட்ப நிலைக்கேற்ப மாற்றம் கொள்கிறது. குளிர் பிரதேசங்களில் கால்சராயும் பூட்சும் போட்டுக் கொண்டு பூசாரி நடமாடலாம். தேர்த் திருவிளைவிற்குத் திருப்பதி கோவிலுக்குப் போக முடியாவிட்டாலும் தி.நகரிலுள்ள பெருமாள் கிளைக் கோயிலில் காணிக்கை செலுத்தலாம். அறுபது நாள் தான் வேண்டுமென்று தெவையில்லை. மூன்று நாள் விரதமே போதும் ஐயப்பனைச் சென்று சரிசித்து வருவதற்கு. இப்படி எல்லாம் இந்து மதத்தில் எளிய வழிமுறையில் இறைவனைத் தேடுவதற்கு ஆண்களுக்கு வசதி வாள்ப்புகள் இருக்கிறது. ஆனால் மாதவிடாயுள்ள பெண்களை மட்டும் சிவன்கோவிலில் அனுமதிப்பதில்லை என்பது ஆணியப்புனைவு என்று வலுவாய் சாடுகிறார் கனிமொழி. திராவிடக் கொள்கை சார்ந்த கனிமொழி அதையும் மீறிப் பெண்ணியத்தை பெண்மொழியைக் கட்டமைக்கிறார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

“அரே ராமாவில்
ஆங்கிலேய அர்ச்சகர்
இந்தோனே‘சியக் கோவிலில்
செருப்புப் போட்டுக் கொள்ளலாமாம்
கணேசனுக்கும்
கோழிக்கறி படையல்
சட்டம் எழுதியாயிற்று
எல்லாச் சாதியும்
கோயிலுக்கு வர
என்னாடு போனாலும்
தென்னாடுடைய சிவனுக்கு
மாதவிலக்குள்ள பெண்கள் மட்டும்
ஆவதே இல்லை” (கருவறை வாசனை ப.72)

முடிவுரை

பெண்களுக்கு உணவு உண்ணவும், பேசவும், அடங்கியிருக்கவும், அலங்காரம் செய்து கொள்ளவும் எனப் பல நிலைகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. திருமணம் என்ற அமைப்பில் பெண் தனக்கென இருக்கும் சுயநிலையை மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது என்ற பெண்ணிய கருத்துக்களை பெண் கவிஞர்கள் தங்களுடைய புதுக்கவிதை படைப்புகளில் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளதை இக்கட்டடுரை புலப்படுத்துகிறது.

துணை நின்ற நூல்கள்

1. பா.வெங்கடேசன், *அவ்வை மண்ணின் பெண் எழுத்தாளர்கள்*
2. எல்.இராமமூர்த்தி, *பெண்ணிய ஆய்வுகள்*
3. *அம்பி*
4. *அநாதிக்காலம்*
5. *கருவறை வாசை*
6. *நீரிலலையும் முகம்*
7. *ஒரு மாலையும் இன்னொரு மாலையும்*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

கருத்தும் கருப்பொருளும்
Opinion and Karupporul of *Tholkappiam*

முனைவர் இரா. டயானா கிறிஸ்டி, உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி, மதுரை - 625 018.

Abstract

The paper tries to evince the part Karupporul from "Tholkappiam" to know about the life related matters in Tamil Culture. It deals with the deity, food products, fauna, flora, trees and plants, parai and musical Instruments of the Tamil culture. *They are related to the lifestyle of the people of the ancient times. It seems the people lived a close life with nature. Hence, the life of the people will help the people of the modern times to lead a good life without any contradictions.*

Keywords: Opinion, Karupporul, *Tholkappiam*, Lifestyle, Tamil Culture

மனிதனின் வாழ்வியலுக்கு நிலமும் நிலத்தில் உயிர்க்கும் உயிரினமும் பயிரினமும் அடிப்படையாகும். நிலத்தையும் நீரையும் உணவு உற்பத்திக்காகப் பயன்படுத்திய மனிதன் அவற்றில் தோன்றிய உயிரினங்களைக் கண்டு வாழவும் கலைகளையும் அழகுணர்ச்சிகளையும் வளர்க்கவும் கற்றுக் கொண்டான். மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் இருபக்கங்கள். அவற்றை வெளிப்படுத்தவும் ஒப்பிட்டுக்கூறி ஆறுதல் பெறவும் இயற்கையைப் பயன்படுத்திக் கொண்டான். சங்கப் புலவர்கள் மானுட வாழ்க்கையோடு நிலத்தில் கருக்கொண்ட பொருள்களையும் இணைத்துப் பாடியுள்ளனர். சங்க இலக்கியங்களில் வாழ்வியல் தத்துவங்களைக் கூறவும் இடித்துரைக்கவும், எடுத்துக்காட்டி அறிவுரை வழங்கவும் இன்பதுன்ப உணர்வுகளை வெளிப்படுத்தவும் அரசியல், வாழ்வியல் சிறப்புக்களைக் கூறவும் கருப்பொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை சங்கப் பாடல்கள் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

கருப்பொருள்

பழந்தமிழ் மரபு அகம், புறம் எனும் பாடல் பகுப்புக்களைக் கொண்டது. அகப் பாடல்களில் புலவர்கள் முப்பொருள்களைக்கொண்டு பாடியுள்ளனர். இதனைத் *தொல்காப்பியம்*

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலும் காலை முறைசிறந் தனவே
பாடலுள் பயின்றவை நாடுங் காலை" (தொல் - 949)

என்று கூறுகிறது. இவை அகத்திணைப் பாட்டுக்களுள் வரும் பொருள்கள் என்று விளக்கம் தருகிறது. சங்கப் பாடல்கள் நிலத்தில் தோன்றிய கருப்பொருளுடன் ஒப்பிடப்பட்டு உரிப்பொருளை விளக்குவன. உரிப்பொருளின் சிறப்பினை உணர்த்த கருப்பொருள்கள் பயன்பட்டன. நிலத்திற்கு உரிய தெய்வம் அந்நிலத்தில் கிடைக்கும் உணவு வகைகள், விலங்குகள், மரவகைகள், பறவைகள், பறை, தொழில் இசைக்கருவிகள் பிறவும் நிலத்தில் தோன்றும் கருப்பொருள்களாகும். இதனை *தொல்காப்பியம்*

"தெய்வம் உணாவே மா மரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ
அவ்வகை பிறவும் கரு என மொழிப" (தொல் - 964)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்கிறது. இக்கருப்பொருளைக் கொண்டே சங்கப் பாடல்களின் திணை உணரப்படுகிறது. சங்க அகப் பாடல்களில் உவமை உருவகங்கள் பாடலில் கூறப்படும் கருத்தின் ஆழத்தை உணரப் பயன்படுத்தப்படுகின்றன. இதனை ஆய்வாளர்கள் "தள்ளாதாகும் திணை உணர்வகையே" என்பர். அகப் பாடல்களில் கருப்பொருளின் பயன்பாடும் உணரப்படுகிறது. (தமிழண்ணல் - உள்ளுறை, தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் ப - 17) இவ்வகையில் நிலமும் நிலத்தில் தோன்றிய கருப்பொருள்களும் பயன்பட்டுள்ளன.

கொடை

'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று சங்ககால மக்கள் வாழ்ந்தனர். அதற்குக் காரணம் மன்னன் மக்கள் மீது கொண்ட அக்கறையும் வள்ளண்மையும் அரசாட்சி முறையுமாகும். இத்தன்மைப் பற்றி பாகுபாடு இன்றி மழையைப் பொழியும் மேகம் மன்னனின் கொடைப் பண்புக்குக் குறியீடானது.

"மாரியன்ன வண்மையின் சொறிந்து
வேனில் அன்ன என் வெப்பு நீங்க
அருங்கலம் நல்கியோனே..." (புறம் - 397)

எனறு வேனில் கால வெப்பு நீங்க மேகம் மழையைப் பொழிவது போல் பொருள்களை வழங்கி காத்தமை குறிப்பிடப்படுகிறது. 'நீரினும் இனியசாயல் பாரி (புறம் - 105), 'வேனில் புனல் அன்ன நுந்தை' (கலித் - 84) 'ஈரம் உடைமையின் நீரோர் அனையை' (பதிற் - 19) என்னும் பாடல் அடிகளும் விளக்குகின்றன. மனிதனுக்கு நிலமும் மேகமும் வழங்கும் தாய்மை வளம் கண்டு அவற்றை உவமையாக்கி மானுட பண்பைக் கண்டுள்ளமையை அறியமுடிகிறது.

துறைகேழ் ஊரன்

மருதநிலத் தலைவன் இல்லக் கிழத்தியுடன் கூடிவாழ்ந்ததை மறந்து பொருட் பெண்களுடன் காலம் கழிக்கிறான். இதனை நினைத்து வருந்தும் தலைவி

"கரைசேர் வேழம் கரும்பிற் பூக்கும்
துறைகேழ் ஊரன் கொடுமை நாணி..." (ஐங் - 12)

என்று கூறுகிறாள். இங்கு பேய்க்கரும்பு பொதுமகளிரைக் குறிக்க, இனிக்கும் கரும்பு குலமகளிரைச் சுட்டுகிறது. வேழம் கரும்புபோல பூக்கும் என்பது தலைவன் பொது மகளிரையும் குல மகளிரைப் போல சிறப்பு செய்கிறான் என்னும் பொருள்பட அமைகின்றது. இதனை ஊரார் அறியின் தனக்கு நாணம் என்பதால் நல்லன் என்று உரைக்கும் தலைவியின் உள்ளம் இங்கு புலப்படுகின்றது. இங்கு ஊரன், கரும்பு, வேழம், பூக்கும் எனும் கருப்பொருள்கள் வழி தலைவனின் வாழ்வியல் ஒழுங்கு கடியப்படுகிறது.

வரைவிடைவைத்துப் பிரிதல்

வரைவிடைவைத்துப் பிரிந்த தலைவனை நினைத்து வருந்துவதை அகநானூற்றுப் பாடல் எடுத்து வைக்கிறது. தலைவி தன் நெஞ்சுக்குக் கூறித் தன்னைத் தானே ஆற்றுவிக்கிறாள். தலைவன் வரைதல் பொருட்டுப் பிரிகிறான். பிரிந்தவன் திரும்பிவர காலம் தாழ்த்த ஆற்றாத தலைவி

"அழிநீர் மீன்பெயர்ந் தாங்கவர்
வழிநடைச் சேரல் வலித்திசின் யானே" (அகம் 303)

என்று கூறுகிறாள். பாரியின் பறம்பு மலைச் சாரலில் குருவிகள் காலையில் இரைத்தேடிச் சென்று துன்பம் தரும் மாலைப்பொழுதில் திரும்பி வந்தாற்போல தலைவனும் திரும்பி வருவார். அவ்வாறு வாரார் எனின் நானே அவர்வழிச் செல்வேன் என்று கூறுகிறாள். அகப்பாடல்களில் தலைவி தானே சென்று தலைவனை சேர்தல் மரபில்லை. நீரில் உள்ள மீன் கரைசேரின் இறந்துபோகும் என்பதை உணர்த்த தலைவி அவ்வாறு கூறுவதைக்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

காணமுடிகிறது. இங்கு கூறப்படும் கருத்தின் ஆழம் உணர்த்த கருப்பொருள் பயன்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

ஆற்றியிருக்கும் தலைவிக்கு ஆறுதல்

தமிழ்ச்சமூகத்தில் தலைவன் பொருள் கருதி பிரியும் வழக்கம் இருந்துள்ளது. பிரிந்த தலைவன் நெடுநாள் வாராமைப் பற்றித் தலைவி கவலைகொண்டு வருந்துகிறாள். அவளுக்கு ஆறுதல் சொல்லும் தோழி அஃறிணையின் குடும்ப வாழ்வை எடுத்துக்காட்டி ஆற்றுவிக்கும் நிலையைக் காணமுடிகிறது. தலைவன் தங்கியிருக்கும் இடங்களில் காணும் காட்சிகள் வீட்டை நினைக்கும்படி செய்யும் என்று நம்பிக்கை ஏற்படுத்தும் செயல்களைக் கூறி ஆறுதல்படுத்தும் நிலையை

“அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே” (தொல் - 1176)

என்று தொல்காப்பியம் விளக்குகிறது. ஆண்யானை தன் பிடியின் நாவறட்சிக் கண்டு யாமரத்தின் பட்டையை உரித்தெடுக்கிறது. அது நீர் பசையற்ற பட்டை. பிடியின் வருத்தம் தீர்க்க இயலாத களிறு தானும் வருந்துகிறது.

“உயங்கு நடை மடப்படி வருத்தம் நோனாது
நிலையுயர் யாஅம் தொலையக் குத்தி
வெண்ணார் கொண்டு கைசுவைத் தண்ணாந்து
அழுங்கல் நெஞ்சமொடு முழங்கும” (குறுந் - 307)

என்னும் குறுந்தொகைப் பாடல் இதனை விளக்குகிறது. ஆண்பல்லி தன் பெண் பல்லியை அழைக்கும் ஓசை தலைவன் காதில்விழ தலைவியின் நினைப்பூட்ட மீள்வான் எனத் தேற்றுவதை

“உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற்பல்லி தன் துணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந்தோரே” (குறுந் - 16)

எனும் பாடல் விளக்குகிறது. மலைகள் கொதிக்கும் அளவு சூரிய வெப்பம் தாக்க நிழல் இல்லாத காட்டு வழியில் பிணைமான் வருந்தும். அறிவுடைய கலைமான் ஓரிடத்தில் நின்று தன் மெய்நிழலில் பெண்மான் இளைப்பாற உதவுகிறது. இதுபோல் பல்வேறு காட்சிகளை அஃறிணைக் குடும்பத்தில் காணும் தலைவன் உன் நினைவு வந்து மறக்காமல் வருவான். இவ்வாறு கருப்பொருள் காட்சிகளைக் காட்டி ஆறுதல் வழங்குவதையும் அவற்றை எடுத்துக்காட்டி வாழ்வியலை உணர்துவதையும் காணமுடிகிறது.

இடித்துரை

ஓர் எருமை தன் கொட்டிலை வெறுத்து நள்ளிரவில் கயிற்றை அறுத்துக் கொண்டது. வீட்டு முள்வேலியைத் தகர்த்து வயலில் மீன்கள் ஓட, வள்ளிக்கொடிகள் சிதைய மிதித்து வண்டுகள் ஒலிக்கும் தாமரை மலரைத் தின்றது. இங்கு எருமை, மீன், தாமரை போன்ற கருப்பொருள்களைக் கொண்டு தலைவன் தான் திருமணம் முடித்த தலைவியை விட்டு, வீட்டுக் காவலை மீறி நாணமின்றி பரத்தமையை நாடினான் என்பதைப் புலப்படுத்துகின்றது. இதனை,

“சேற்று நிலை முனைஇய செங்கட் காரன்
ஊர்மடி கங்குலின் நோன்தலை பரிந்து
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி...” (அகம் - 46)

எனும் பாடல் விளக்குகிறது. இங்கு தலைவனின் கொடுமையான தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு இடித்துரைக்கப்படுகிறது. அதற்கு மருதநிலக் கருப்பொருள்களைக் கொண்டு புலவர் விளக்கியுள்ளமை அறியத்தக்கது. தலைவன் செய்யும் ஒவ்வொரு நிகழ்வையும் புலப்படுத்த எருமையின் செயல்களுடன் கூட்டி புலப்படுத்தும் புலவரின் புலமைத்திறம் சிறப்பானது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

இயற்கையின் காட்சி

அகத்திணைப் பாடல்களில் பல இடங்களில் இயற்கை அழகைத் தலைவியின் தோற்றத்திற்கு ஒப்பிடுதலைக் காண முடிகிறது. ஒரு பாடலில் தலைவன் கற்பனையில் இயற்கை அசைவுகள் தலைவியின் அசைவுகளாகக் காட்டப்படுகின்றது. இங்கு ஒரு தலைவனுக்கு அவன்தன் காதல் நினைவுகள் இயற்கையுடன் இணைந்துள்ளதைக் காணமுடிகிறது.

"நின்னே போலும் மஞ்ஞை ஆலநின்
நன்நுதல் நாறு முல்லை மலர
நின்னேபோல மாமருண்டு நோக்கு
நின்னே யுள்ளி வந்தனெள்
நன்னுதல் அறிவை காரினும் வரைந்தே" (ஐங் - 492)

எனும் பாடல் இதற்குத் தக்க சான்றாகிறது. வினை பொருட்டுப் பிரிந்த தலைமகன் மிக விரைந்து வந்ததற்கான காரணம் மயிலின் அசைவிலும் முல்லை மலரில் அவள் கூந்தல் மணத்தையும் மானின் பார்வையும் தலைவனுக்கு தலைவியின் செயலாகவே தெரிந்தது. இங்கு மருதநில கருப்பொருள்களை தலைவியின் செயலுக்கு உவமையாக்கியமையை உணரலாம். 'ஆம்பல் மலரினும் தான் தண்ணியளே' (குறுந் -84), 'தெண்ணீர் நிகர்மலர் புரையும், நன்மலர் மழைக்கண்' (குறுந் -329) என்னும் பாடல்களும் தலைவியின் பண்புகளுக்குக் கருப்பொருள்களை உவமையாக்கி அழகுணர்ச்சியை மிகுவிக்கும் தன்மைகளை விளக்குகின்றன.

அன்பின் ஆழம்

தலைவி தலைவன் மீது கொண்ட அன்பினை விளக்கக் கருதுகின்றாள். அதற்கு நிலம், வானம், பூமியைவிட தலைவனின் அன்பு பெரிது என்கிறாள். இதனை

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவு இன்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே." (குறுந் - 3)

என்னும் பாடல் விளக்குகிறது. இப்பாடலில் மலைச்சாரலில் கருங்கோல் குறிஞ்சிப் பூவைக் கொண்டு பெருந்தேனடை கட்டும் குறிஞ்சி நில நாடன் நட்பு நிலத்தைவிடப் பெரிது. வானைவிட உயர்ந்தது. நீரைவிட அளத்தற்கு அரிய ஆழமானது என்று கூறுவது குறைத்து மதிப்பிட முடியாத அன்பின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு காதல், அன்பின் ஆழம், இருவகைப் புணர்ச்சி, பிரிதல், பிரிவுத்துன்பம் என பல்வேறு அகக் கருத்துக்களை வெளிப்படுத்த இயற்கையைப் பயன்படுத்தியுள்ளனர்.

முடிவுரை

சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையான சூழல்களில் இயற்கையுடன் இணைத்தே கவிதைகள் புனையப்பட்டுள்ளன. தான் வாழும் இடத்தில் தோன்றும் பருப்பொருள்களை மானுட செயல்களுடன் ஒப்பிட்டுக் கண்டுள்ளனர். வாழ்வின் தத்துவங்களை இயற்கையின் செயல்பாடுகளிலிருந்து கற்றும் புனைந்தும் பாடியுள்ளனர். இங்கெல்லாம் வாழ்வியல் கூறுகளை விளக்கம்பெறச்செய்ய புலவர்கள் கருப்பொருள்களை நாடிய தன்மை புலவர்களின் புலமைத் திறனுக்கு எடுத்துக்காட்டுகளாகும். இலை மறைவு காயாக பேசக்கூடிய கருத்துக்களை இயற்கையுடன் ஒப்பிட்டு பேசும் நிலையையும் காணமுடிகிறது. கருப்பொருள்கள் வாழ்வியலை கற்பிப்பதுடன் வாழ வழிகாட்டும் தன்மையிலும் படைக்கப்பட்டுள்ளன. கருத்துக்களைக் கருப்பொருள்களைக் கொண்டு விளக்குவது கூறப்படும் கருத்தின் ஆழத்தை உள்ளவாறு உணர்த்தவும் படிப்போர் மனதில் அதே உணர்வலைகளை ஏற்படுத்துவதற்குமாகும். இவ்வாறு பாடப்படும் பாடல்கள் இறவாத் தன்மை பெறுகின்றன.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

பார்வை நூல்கள்

1. இளம்பூரணர் (உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1970.
2. நச்சினார்க்கினியம். தொல்காப்பியம் எழுத்ததிகாரம். தமிழ்மண் பதிப்பகம், சென்னை. 2003.
3. சண்முகம் பிள்ளை, மு.,(ப.ஆ). *குறுந்தொகை மூலமும் உரையும்*, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மறுபதிப்பு - 1994.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

பண்டைத் தமிழர்கள் கண்ட பயிற்று முறைகள்
Pedagogy Found by the Ancient Tamil Scholars

முனைவர் த. தமிழ்ச்செல்வன், உதவிப் பேராசிரியர் (தமிழ்),
கல்வியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

Abstract

The research paper elucidates the ancient pedagogic methods formulated ny the ancient Tamil scholars. The scholars of the Tamil culture were highly learned and objective based in every of their finding. Those treatises on education speaks of the types of teaching, lecturing, testing and other forms of educational techniques. The present paper fosters to bring forth the ideas od educational policies and methods from the Tamil sources. Subsequently, the ideas from them will help to solve the current problems in education.

Keywords: Pedagogy, Invent, Ancient Tamil Scholars

முன்னுரை

கல்வி கரையில, கற்றவர் நாள் சில மெல்ல நினைக்கும் பிணிபல. எனவே தேர்ந்தெடுத்த நல்ல நூல்களைக் கற்க வேண்டும் என நாலடியார் கூறுகின்றது. எனினும் எப்படி கற்பது எப்படி கற்பிப்பது என்னும் தகவல்களை தருகின்ற தமிழ் இலக்கியங்கள் குறைவாக இருந்தாலும், தமிழ் இலக்கண நூல்கள் ஆணித்தரமாக கற்பிக்கும் முறை, ஆசிரியர், மாணவர் இயல்பினைக் குறித்து அழுத்தம் திருத்தமாகவே கூறிச் செல்லுகிறது. பண்டைய காலத்தில் குருகுல வாசம் என்னும் முறையில் கல்வி போதிக்கப்பட்டது என்பது அனைவரும் அறிந்ததே! இருப்பினும் கற்பித்தலுக்கு பயன்படுத்திய நுட்பமான முறைகளை யூகித்தே அறிதல் வேண்டும். இக்கட்டுரை அது பற்றிய தகவல்களை சற்று ஆழமாகவே அலசுவதாக அமைகின்றது.

கற்றல் முறை

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய நச்சினார்க் கினியா் தமது சிறப்புப் பாயிர உரையில்,

> "கோடல் மரபே கூறுங் காலைப்
> பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
> முன்னும் பின்னும் இரவினும் பகலினும்
> அகலானாகி அன்பொடு கெழீஇக்
> குணத்தொடு பழகி குறிப்பின் வழி நின்று"

என்னும் வரிகளில் மாணவன் காலையில் சென்று குரு வணக்கம் செலுத்துவது தொடங்கி ஆசிரியரின் மனக் குறிப்பினை அறிந்து இரவும் பகலும் அவருடனேயே தங்கி கல்வி பயின்றதைக் குறித்துப் பேசுகின்றார். மேலும் கல்வி போதிக்கும் முறையினைப் பற்றிக் குறிப்பிடும் போது,

> "ஈதல் இயல்பே இயல்புறக் கிளப்பின்
> பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
> பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
> புகழ்ந்த மதியிற் பொருந்தும் ஓரையில்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

திகழ்ந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்
கொள்வோன் உணர்வகை அறிந்தவன் கொள்வரக்
கொடுத்தல் மறமெனக் கூறினர் புலவர்"

என்னும் பாயிர, பாடல் வழி கற்பிக்கும் முறைகள் பற்றிக் குறிக்கின்றார். இதன் மூலம் ஆசிரியர் என்பவர் விரித்தும், சுருக்கியும், நுட்பமாகவும் சொல்லும் தன்மையர் என்பதும், மாணவனின் மனநிலை அறிந்து அதற்குத் தகுந்தவாறு கல்வி போதிக்கும் தன்மையர் என்பது தெளிவாகும். *நன்னூல்* இயற்றிய பவணந்தி முனிவரும் பயிற்று முறை பற்றிய நூற்பா 36-ல்,

"ஈதல் இயல்பே இயம்பும் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்தவன் உளம்கொளக்
கோட்டமில் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப"

என்று பாடுகின்றார். நச்சினார்க்கினியரின் சிறப்புப் பாயிரத்தின் விரிவான விளக்கமாகவும் சற்று கூடுதலான தகவல்களை உள் சேர்த்தும் இது அமைக்கப்பட்டுள்ளது. இடம், பொருள், காலம் போன்றவை சரியாக அமைகின்ற தருணத்தில்தான் கல்வி சொல்லிக்கொடுக்கப்படல் வேண்டும். மேலும் ஆசிரியரின் மனதில் கற்றுக்கொடுக்க வேண்டிய பாடப்பொருள் செய்திகள் அனைத்தும் மனதில் தெளிவாக இடம்பெற்றிருக்க வேண்டும். மாணவனின் மனநிலையினை அறிந்து விருப்பத்தோடும், முக மலர்ச்சியோடும் கற்பிக்க வேண்டும். அன்றியும் பாடம் போதிக்கும்போது விரைவு கூடாது, கோபம் கூடாது என்று அறிவுறுத்துகின்றார். கற்றலின் பயன் குணம் மாறுதலும், ஒழுக்கத்துடன் நிற்றலும் என்பதை பல நூல்கள் எடுத்தியம்பியுள்ளன. கற்பித்தல் முறையினை சொற்பொழிவு முறை, விரிவுரை முறை, தடை விடை முறை, வினா விடை முறை, காரணகாரிய முறை, காரிய காரண முறை, உய்த்துணர் முறை, நெட்டுரு முறை, போலச் செய்தல் முறை என்னும் முறைகளாக உய்த்துணர முடிகின்றது.

சொற்பொழிவு முறை

இம்முறைதான் பலதரப்பு மக்கள் மத்தியில் ஒரு கருத்தினைக் குறித்து பேசுவதற்கு உகந்த முறை ஆகும். ஒரு பொதுவான இடத்தில் பலதரப்பட்ட மக்கள், பல வயதுடையோர், பல்வேறு உறவுடையோர் முன்னிலையில் வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களையும், விழுமங்களையும் பல்வேறு கதைகள், சம்பவங்கள், துணுக்குகள் வழி ஒருவர் நெடிய பேச்சாக அமையும்படி நிகழ்த்துவது சொற்பொழிவு முறை ஆகும்.

விரைவுரை முறை

இம்முறைதான் இன்றளவும் நாம் பின்பற்றி வருகின்ற, பயன்படுத்தி வருகின்ற ஒரு முறை ஆகும். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட கல்வித் தகுதி மற்றும் சம வயதுடைய மாணவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட கால அளவில் ஒரு குறிப்பிட்ட பாடப் பொருளில் மட்டும் பயிற்றுவிப்பது விரிவுரைமுறை எனப்படும். குருகுல வாசம் தொடங்கி இன்றளவும் உள்ள பல வகுப்பறைக் கற்பித்தலை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

தடை விடை முறை

சொற்பொழிவு முறையின் ஒரு அம்சமாக இதனைக் குறிப்பிடலாம். சொற்பொழிவு முறையைப் போன்று இதிலும் பயிற்றுவிப்பவர் ஒருவரே! கேட்பவர் பலராக பல வயதினராக இருக்கும் பேசும் ஆசிரியர் கேட்பவர்களுக்கு எங்கெல்லாம் ஐயம் ஏற்படுமோ? சந்தேகம் ஏற்படுமோ? அங்கெல்லாம் ஒரு வினாவினை எழுப்பி அதற்கு பதிலளிக்கும் அதற்கு பதிலளிக்கும் வகையில் உரை நிகழ்த்துவார். தொல்காப்பியம், இளம்பூரணர் உரையின்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

துவக்கம் இம்முறையிலேயே அமையும். எடுத்துக்காட்டாக இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின் நூண் மரபு என்னும் பெயர்த்து என அமையும்.

வினா விடை முறை

கேள்வி-பதில் பாவனையில் கற்பிக்கும் முறை வினாவிடை முறை ஆகும். கேட்பது பெரும்பாலும் மாணவனாகவே அமையும். இதனை குரு-சி'ய சம்பா'னை எனவும் சொல்வர். விவேக சிந்தாமணியில் பல பாடல்கள் இவ்வகையில் அமைந்துள்ளன. பொதுவாக கற்பித்தலின் தொடக்கத்தில் இம்முறை அதிகம் அமைவதில்லை. ஐயங்களை தீர்க்கும் வகையில் இம்முறை அதிகம் பயன்படும். சோதிட சாஸ்திரம், சில வைத்திய நூல்கள், மாட்டு வாகடன் போன்றவை இம்முறையிலேயே கற்பிக்கப்பட்டன.

காரண காரிய முறை

காரணம் இல்லாமல் காரியம் நிகழாது. மொழிக்கு முழுமுதற் காரணம் எழுத்துக்கள். தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள் முழுவதையும் கற்பித்து அதன் பின்னர் சொற்கள், வாக்கியம், கதை, கட்டுரை, இலக்கியம் எனப் பயிற்றுவிக்கும் முறை இது.

காரிய காரண முறை

எழுத்துக்களை அறிவதற்கு முன்பாகவே மனிதன் சம்பவங்களைச் சொல்ல ஆரம்பித்து விடுகின்றான். சித்திரக் கதைகளைப் பயிலவும், ஊமைப் படங்களை புரிந்து கொள்ளவும் மொழி தேவை இல்லை. எனவே சம்பவங்களை நினைவுப்படுத்தி சொல்லும் முறையினை மாணவன் முதலில் கற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின்னரே எழுத்துக்கள் அறிவிக்கப்படல் வேண்டும் என்னும் கொள்கையின் அடிப்படையில் தோன்றிய முறை இதுவாகும்.

உய்த்துணர் முறை

தருக்க ரீதியான சிந்தனைகளின் அடிப்படையில் விடை காணும் வினாக்கள் இன்று போட்டித் தேர்வுகளில் அதிகம் வினவப்படுகின்றன. அவ்வாறு அறிவினை அதிகம் பயன்படுத்தி விடைகாணும் வகையில் புதிர் கணக்குகள், சொலவடைகள், விடுகதைகள் என்பன போன்றவற்றின் அடிப்படையில் கல்வி கற்பிக்கும் முறை இது. பஞ்சதந்திரக் கதைகள் மூலமாக கற்பித்தல், தெனாலிராமன், பீர்பால் கதைகள் போன்றவை உய்த்துணர் முறை கற்பித்தல் வகையைச் சார்ந்தது.

போலச் செய்தல் முறை

குலவிச்சை கல்லாமல் பாகம்படும் என்பது பழமொழிநானூறு பாடல் அடிகள் குலத் தொழிலை தனியாக கற்க வேண்டியது இல்லை. காரணம் பெரியவர்கள் செய்வதைப் பார்த்துக் கற்றுக்கொள்கின்றோம். சமையல் செய்தல், கோலம் போடுதல், இசை, நடனம், சிற்பம், உள்ளிட்ட ஆயக்கலைகள் 64-ம் போலச் செய்தல் முறையிலேயே கற்கப்பட்டன, கற்பிக்கப்பட்டன.

நெட்டு முறை

திருக்குறள், சிலப்பதிகாரம், தொல்காப்பியம் போன்றனவற்றை முழுவதுமாக பாராயணம் செய்வது போன்று மனனம் செய்து படிக்கும் முறையே நெட்டுரு முறை ஆகும். புரியாமலேயே படிப்பது என்று சிலர் கூறுவர். தாய்மொழியில் மனனம் செய்தால் நாளடைவில் படித்த செய்திகள் மனதில் படியும். இரண்டாம் மொழியில் நெட்டுரு செய்வதால் பயனில்லை இன்று பெரும்பாலான மாணவர்கள் இம்முறைக் கற்றலை மேற்கொள்கிறார்கள் என்பது வேதனைக்குரியது.

முடிவுரை

பண்டைத் தமிழர்கள் மேற்சொன்ன முறைகளில் பாடம் பயிற்றினர், பயின்றனர். இருப்பினும் கற்ற வழியில் நிற்பது மற்றும் இறைவனடி பணிவது, ஒழுக்கத்துடன் வாழ்வது கற்றலின் பயனாகக் கொண்டனர். இன்று பொருள் தேடுதல், போகம் தேடுதலே கற்றலின் நோக்கமாக அமைவது வேதனைக் குரியது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

நூற்பட்டியல்

1. *நன்னூல்*
2. *தொல்காப்பியம்*

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

பட்டுக்கோட்டையார் பாடல்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்
Social Life Ethics in the Songs of Pattukottai Kalyanasundaram

உ.ச.எ.தமிழரசன், உதவிப் பேராசிரியர்,
முதுகலைத் தமிழ்த்துறை, அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.

Abstract

The research paper tries to pen down the social ethics and rational ideas evinced by the poet Pattukottai Kalyanasundaram. He is one of the poetic luminary of the 20th Century Tamil Poetic scenario and cine field. His songs are noted for his rational and logical ideologies. His songs had done many reformations in the society when it was taken to the cine field. He is a proponent of socialist ideology, non superstious concern and unity and all of these are vastly seen in all of his poems. Consequently, the ideas from his poetic works will help us to know the sense of the poet.

Keywords: Social Life, Ethics, Songs, Pattukottai Kalyanasundaram

முன்னுரை

"தோன்றின் புகழோடு தோன்றுக" என்று கூறிய வள்ளுவரின் வாக்குப்படி இப்பூமிதனில் குறைந்த காலம் மட்டுமே வாழ்ந்து, நிலைத்து நிற்கும் எளிய பாடல்கள் மூலம் சமுதாயப் பிரச்சினைகளைப் பாடி மக்கள் நெஞ்சங்களில் நிறைந்து இணையிலாப் புகழ் படைத்த கவிஞர் என்ற பெருமைக்கு உரியவர் பட்டுக்கோட்டை கலியாண சுந்தரனார் ஆவார். தன்மானக் கருத்துக்கள் மூலம் தூங்கிக் கொண்டிருந்த சமுதாயத்தைத் தட்டி எழுப்பிய பெருமை இவர்தம் பாடல்களுக்கு உண்டு. அவ்வகையில் கலியாண சுந்தரனாரின் பாடல்களில் உள்ள வாழ்வியல் கருத்துக்களை எடுத்துக்காட்டுவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

ஏற்றத் தாழ்வு இல்லா நிலை

பொதுவுடைமை இயக்கத்தில் பணியாற்றிய பட்டுக்கோட்டையார் உழவர் குடும்பத்தைச் சார்ந்தவராக இருப்பதால் அவர் தம் பாடல்களில் உழவர்களுக்கு ஆதரவான குரல் ஒலிப்பதைக் காணமுடிகிறது. உழவர்கள் அன்றாடம் மாடாய் உழைத்தாலும் அரைவயிற்றுக் கஞ்சி கூட அவர்களால் உண்ண முடியவில்லை என்பதை,

"மாடா உழைச்சவன் வாழ்க்கையிலே – பசி
வந்திடக் காரணம் என்ன மச்சான்?"
"அட காடு வெளஞ்சென்ன மச்சான் - நமக்கு
கையுங் காலுந்தானே மிச்சம்?"

என்று உழவர்கள் படும் துன்பத்தைச் சொல்லுகிறார்.

மேலும், அத்தகைய உழவர்களை ஆதரிக்க ஆள் இல்லை, ஏழைகளின் துயர் நீங்க விடிவு காலம் பிறக்கவில்லை என்பதை,

"ஏனென்று கேட்கவே ஆளில்லை என்பதாலே
தானென்ற அகங்காரம் தலைவிரித்து ஆடுதடா
ஊனுருக ஏழைகளின் உள்ளமெல்லாம் புண்ணாக
உயிரொடு கொல்பனைக் காலம் உயர்வாய் மதிக்குதடா"

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்று எடுத்துக் காட்டுகிறார்.

ஒவ்வொரு முறையும் தொடர்ந்து நசுக்கப்பட்டு வரும் மக்கள் ஒருநாள் பொங்கி எழுந்தால் என்ன நடக்கும் என்பதை,

"பொறுமை ஒருநாள் பொங்கி எழுந்தால் பூமி நடுங்குமடா
கொடுமை புரியும் பாதகனை – அவன்
குறைகள் விழுங்குமடா"

என்றும்

"ஏமாத்தும் போர்வையிலே ஏழைகளின் வேர்வையிலே
எக்காளம் போடுற கூட்டம் - நாட்டில்
எக்காளம் போடுற கூட்டம் மக்கள்
எதிர்த்துக் கிட்டா எடுக்கணும் ஓட்டம்"

என்றும் ஏழை மக்களின் காவலனாய் தன் குரலை உயர்த்திப் பேசுவதை அறிந்து கொள்ள முடிகிறது.

உலகத்தில் எத்துணை நல்லறிஞர்கள் தொடர்ந்து தோன்றி நற்கருத்துக்களைப் பரப்பினாலும், அந்நற்கருத்துக்களையும், தான் கற்ற கல்வியினையும் மக்கள் தம் வாழ்வில் பின்பற்றுவதில்லை என்பதை,

"சித்தர்களும் யோகிகளும் சிந்தனையில் ஞானிகளும்
புத்தரோட ஏசுவும் உத்தமர் காந்தியும்
எத்தனையோ உண்மைகளை எழுதிஎழுதி வச்சாங்க
எல்லாந்தான் படிச்சீங்க என்ன பண்ணிக் கிழிச்சீங்க?"

என்று கற்றறிந்த பெரியோர்களும் நற்கல்விதனைக் கற்றுக் கொண்டு தவறான பாதையில் செல்வதைத் தட்டிக் கேட்கிறார்.

மூடநம்பிக்கை

அறிவியல் தொழில்நுட்பம் வளர்ச்சியுற்ற இக்காலத்திலும் மக்கள் மூடநம்பிக்கைகளில் திளைத்து அறிவற்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். கடவுளின் பெயரால் பல மூடநம்பிக்கை செயல்களில் மக்கள் ஈடுபடுவதைப் பார்த்து,

"இங்கே தலைவலியும் நோயும் வந்தா
சாமிகளைச் சுத்துவீங்க
இன்னும் ஜாதகத்தைப் பார்த்துப்புட்டு
ஆடு கோழி வெட்டுவீங்க
பலவித வைத்தியமும் படிச்சிருக்கும் டாக்டரிடம்
உடல்நிலையைச் சொல்ல மாட்டீங்க
மூச்சுநின்னு போனா.......கத்துவீங்க"

என்று மக்கள் கடைபிடித்து வரும் மூடப்பழக்க வழக்கங்களுக்கு எதிராகத் தன் கருத்தை எடுத்துரைப்பதை அறிய முடிகிறது.

ஓரறிவு முதல் ஐந்தறிவு படைத்த மிருகங்கள் கூட ஒற்றுமையாய் வாழும் இந்நாட்டில் ஆறறிவு படைத்த மனிதன் மட்டுமே ஏழை-பணக்காரன், மேல்சாதி-கீழ்சாதி, உயர்ந்தவன்-தாழ்ந்தவன், முதலாளி-தொழிலாளி என்று ஏற்றத்தாழ்வு பார்த்து வாழ்ந்து வருவதை,

"மனிதரைக் காட்டிலும் மரமும் கொடியும்
வளரும் பயிரும் மாடும் பறவையும்
சேர்ந்து வாழுது சிறந்து விளங்குது
வீழ்ந்தாலும் எழுந்தாலும் வேற்றுமை யில்லே"

என்றும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

“உச்சி மலையிலே ஊறும் அருவிகள்
ஒரே வழியிலே கலக்குது
ஒற்றுமை யில்லா மனித குலம்
உயர்வும் தாழ்வும் வளர்க்குது”

என்று ஐந்தறிவு படைத்த உயிரினங்கள் வாழும் நல்ல வாழ்வையும், ஆறறிவு படைத்த மனித சமுதாயம் மட்டுமே சாதி சமயங்களில் மூழ்கி ஏற்றத்தாழ்வ பார்த்து வாழும் தீய வாழ்வையும் எடுத்துக்காட்டுகிறார்.

இவ்ஏற்றத்தாழ்வு எங்கே இருந்தாலும் அதைப் போக்க அங்கே செங்கொடி பறக்குமெனப் பொதுவுடைமைக் கட்சியின் கொடிப் பெருமையை,

“ஏற்றத்தாழ்வு இருக்குமிடம் எங்குமே – மாற்றம்
காணவே பறக்கும் - செங்கொடி”

என்று பொதுவுடைமை சிந்தனையை மக்கள் மனதில் பரப்புகிறார்.

ஒற்றுமை உணர்வு

நாட்டில் மக்கள், தம்மை ஏமாற்றுபவர்களை அடையாளம் கண்டு கொண்டு அவர்களிடம் எப்போதும் ஏமாறாமல் எச்சரிக்கையாகவும் ஏமாற்றுபவர்களுக்கு எதிராக ஒற்றுமையாகவும் இருக்க வேண்டும் என்பதை,

“திண்ணைப் பேச்சு வீரரிடம் - ஒரு
கண்ணாயிருக் கணும் அண்ணாச்சி- நாம்
ஒண்ணா யிருக்கணும் அண்ணாச்சி
எந்நாளும் உலகில் ஏமாற்றும் வழிகள்
இல்லாத நன்னாளை உண்டாக்கணும்”

என்று எடுத்துக்காட்டுகிறார்.

மேலும், எல்லார்க்கும் எல்லாம் என்னும் பொதுவுடைமை தோன்றும் போது நாட்டில் பொல்லாமை எதுவும் இருக்காது என்பதை,

“கொடுக்கிற காலம் நெருங்குவதால் இனி
எடுக்கிற அவசியம் இருக்காது
இருக்கிற தெல்லாம் பொதுவாய்ப் போனால்
பதுக்கிற வேலையும் இருக்காது
ஒதுக்கிற வேலையும் இருக்காது”

என்று பொதுவுடைமை சார்ந்த கருத்துக்களை எடுத்துரைக்கிறார்.

முடிவுரை

எளிய நடை, உள்ளத்தைப் பிணிக்கும் ஆற்றல், உணர்ச்சிக் கொந்தளிப்பு இவையே பட்டுக்கோட்டை கலியாண சுந்தரனாரின் பாடல்களின் அடையாளம். மக்களின் நல்வாழ்வுக்கான சிந்தனை ஒன்றையே தன் பாடல்களின் கருப்பொருளாய்க் கொண்ட பட்டுக்கோட்டையார் தன்பாடலிலே,

“பொறுமை யிழந்தனர் மக்களெ லாம்மனம்
பொங்கி எழுந்தனர் எரிம லைபோல்
உரிமை பறித்த உலுத்தர் எதிர்த்தனர்
ஒருமித்த ஜனசகதி வென்றது வென்றது”

என்று பொதுவுடைமை இயக்க ஏடான ஜனசக்தியின் பெயரைக் குறிப்பிட்டு மக்கள் ஒன்றிணையும் போது பொதுவுடைமை என்பது இப்பூமிதனில் பூக்கும் என்பதை பட்டுக்கோட்டையாரின் பாடல்கள் இன்றும் பறை சாற்றிக் கொண்டிருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

பார்வை நூல்

1. *பட்டுக்கோட்டையார் பாடல்கள்*, குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை-17.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

இருமுகமும் இருவரமும்
Duo faces and Duo Boon

முனைவர் முருகு தயாநிதி, முதுநிலை விரிவுரையாளர்
தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.

Abstract

The research paper clarifies about the dual face and the dual boon asked by Kaikeyi, the consort of the famed king Dhasaratha of the "Ramayana". The couple are a very lovable and sagacious one but at the circumstance of Dhasaratha's plan to inherit his first son Rama, Kaikei's was tricked by Kooni to inherit Bharatha on the throne. This leads to use the boon asked by Kaikeyi at the time of war and shattered the life of all. It becomes clear that fate is more powerful and it dominates everything is seen lucidly in the epic. Consequently, the ideas from "Ramayana" will help to know the life, will and the domination of fate.

Keywords: Duo faces, Duo Boon, *Ramayana*

தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலத்தினை வரையறுத்துக் கூறுவதற்கு வரலாறு இடங்கொடுப் பதில்லை. தமிழ் இலக்கியச் செல்நெறியானது எழுதப்படாத நிலையிலேயே வாய்மொழியாகப் பேணப்பட்டு வந்தது. பின்னர் சங்ககாலத்தில்தான் அவை எழுத்துவடிவம் பெறுகின்றது. இக்காலத்தினைத் தொடர்ந்து ஒவ்வொரு காலகட்டத்திலும் இலக்கியங்கள் எழுவதோடு, அவை புதுவடிவமும் பெறுகின்றன. காலவோட்டத்தில் சோழர் காலத்தில் பல இலக்கியங்கள் எழுவதற்கான அரசியல் சூழ்நிலை இருந்தமையினால் அக்காலத்தில் பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள், அரசவை இலக்கியங்கள், சைவசித்தாந்த நூல்கள், இலக்கணநூல்கள் என்று பல்வேறு இலக்கியங்கள் எழுகின்றன. இந்த இலக்கிய வகைகளுள் மாபெருங் காப்பியங்களாக கந்தபுராணம், பெரியபுராணம், கம்பராமாயணம் ஆகிய இலக்கியங்களும் படைக்கப்படுகின்றன. வான்மிகி வடமொழியில் பாடிய இராமாயணத்தினைக் கம்பர், தமிழில் கம்பராமாயணமாகப் படைக்கின்றார். இந்த இராமாயணம் வான்மிகி இராமாயணத்தில் இருந்து சில இடங்களில் விலகிப் பண்பாட்டின் உயர் தன்மையினைப் பேசுகின்றது. இவ்வாறுரைக்கும் கம்பராமாயணம்,

தசரதனுடைய அரசநிலையினை உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்கின்றது. இராமருக்கு முடிசூட்டு விழா இடம்பெற இருப்பதற்கு முன்னிருந்த நிலைபேற்று நிலையும், முடிசூட்டு விழா இடம்பெற இருக்கின்றபோது ஏற்பட்ட நிலைகுலைவும் பண்பாட்டுக் கோலத்தில் ஒருங்கினைப்பற்ற தன்மைகொண்டதாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது. இங்கு தசரதனின் உள்மனத்தில் ஊசலாடிய இருமுகமும், கைகேயின் வெளித்தோற்றத்தில் காட்டப்பட்ட இரு முகமும் இராமாயணத்தின் திசையினையே மாற்றிவிடுகின்றது.

தசரதனும் கைகேயியும் இணைபிரியாத குடும்பஸ்தர்கள். கைகேயி, தசரதனுடைய பல யுத்த வெற்றிகளுக்குக் காரணமானவள். எதனையும் எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டவள். இவற்றிலும் மேலாக இராமன்மீது அதிக அன்பு கொண்டவள். இவ்வாறாக இணைபிரியாமல் வாழ்ந்தவர்கள், வாழ்க்கை தொடர்கின்றது. தசரதனின் உடல்நிலையில் மாற்றம் வரும்போது இராமருக்கு முடிசூடுவதற்கு எண்ணுகின்றான். அதாவது, அவனுடைய தலையில் ஒரு மயிர் பழுத்திருந்தமையினைக் கண்டு அவனுடைய மனம் தடுமாறுகின்றது. தனக்கு வயது

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

வந்துவிட்டது என்பதனையும் புதிய தலைமுறையினை அது வேண்டி நிற்கின்றது என்பதனையும் அவன் உணர்ந்து கொள்கின்றான். இந்த நிலையில் முடிவினைத் தானே எடுக்காமல் அமைச்சரவையினைக் கூட்டி ஆலோசனை கேட்கின்றான். அமைச்சர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களைச் சொல்லி இராமனுக்கு நாட்டினை ஆள்வதற்குத் தகுதி இருக்கின்றமையினை உறுதி செய்கின்றனர். இவற்றுக்கு மேலாக வசிட்டரை அணுகிய தசரதன் அவரிடம் இருந்து தனிமையான கருத்தினைக் கேட்கின்றான். வசிட்டரும் "அமைச்சர்கள் ஆமோதித்துவிட்டனர், நீயும் இதனை விரும்புகிறாய், மக்களும் அதனை வரவேற்பர், இராமனுக்கும் தகுதி உள்ளது, இராமன் மாமன்னன் மகன், சீதைக்குப் பட்டத்தரசி ஆவதற்குரிய நல்லியல்புகள் யாவும் உள்ளது, நாட்டுமக்களும் அவன் நல்லாட்சியில் நம்பிக்கை கொண்டு அவனே வரவேண்டும் என்று விரும்புகின்றனர்.

ஆகவே நீங்கள் எடுத்த முடிவு நல்லதே" என்று தனது மனக்கருத்தினை முன்வைக்கின்றார். ஆனால், சுமந்திரன் நீங்கள் ஆட்சி துறப்பது தக்கதாகப்படவில்லை என்று கூறியபோது, அப்பேச்சினை தசரதன் விரும்பாமல் உடனே இராமனை அழைத்து வரும்படி கூறுகின்றான். அவனும் அவ்வாறே செயற்படுகின்றான். இங்குதான் பல சந்தேக வினாக்கள் எழுகின்றன.

- தசரதன் ஒரு பழுத்த மயிரைக் கண்டு ஆட்சியை மாற்ற நினைத்தது.
- இராமனுக்கு பட்டம் சூட்டவேண்டும் என்ற முடிவினை வைத்துக்கொண்டு மற்றவர்களை அழைத்து முடிவினை அவர்கள் சார்பாக எடுத்தது.
- பரதன் நாட்டில் இல்லாதபோது முடிசூட்டு விழாவினை ஏற்பாடுசெய்தது.
- வசிட்டரிடம் கேட்டபோது 'நீயும் விரும்புகின்றாய்' என்று கூறியது.
- சுமந்திரனின் பேச்சினைத் தட்டிக் கழித்தது.

இவ்வாறான ஒரு பின்னணியை வைத்துப் பார்க்கும்போது தசரதன் இராமருக்கே முடிசூடவேண்டும் என்பதில் தெளிவாக இருந்துள்ளான். இராமர் முடிசூடுவது முறைதான் என்றாலும் தசரதன் ஏன் அந்தச் செயற்பாட்டினை வேகப்படுத்தினான் என்ற வினா எழுகின்றது. அதுவும், பரதன் நாட்டில் இல்லாதபோது இந்தமுடிவினை எடுத்ததற்கான காரணம் என்ன? ஏன் பரதனையும் அழைத்து இந்தமுடிவினை எடுக்கவில்லை. 'வசிட்டரும் நீயும் விரும்புகின்றாய்' (முடிவினை எடுத்து விட்டீர் நாங்கள் என்ன செய்வது என்பதுபோல்) என்றுதான் கூறி இருக்கின்றார்.

தசரதனுடைய தேரோட்டி சுமந்திரன், தற்போது பதவி துறப்பது நல்லதல்ல என்று கூறியபோது அவனுடைய பேச்சு தசரதனால் தட்டிக்கழிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு பல நிலைகளில் சிந்திக்கும்போதும் வினாக்களை எழுப்புவதன் மூலமும் தசரதன், இராமருக்கு முடிசூடவேண்டும் என்ற கனவுடனே இருந்திருக்கின்றான். அதற்காக அவன் பலசந்தர்ப்பங்களை எதிர்பார்த்து இருந்திருக்கின்றான். அப்போதுதான் பழுத்தமயிர் தென்பட்டிருக்கின்றது. இதனைப் பிரதான காரணமாக வைத்துக்கொண்டு இராமருக்கு உடனே முடிசூட்டுவதற்கான செயற்பாட்டினை முடக்கிவிட்டிருக்கின்றான். இவ்வாறான வேகப்படுத்துகையின் தன்மை, தசரதன் மனதில் ஏதோ ஒரு சங்கடம் இருப்பதனைப் புலப்படுத்துகின்றது.

பட்டாபிஷேகம் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. மிதிலை நகரமே சந்தோஷத்தில் ஆழ்கின்றது. இந்த விடயத்தினைக் கூனியும் அறிகின்றாள். தேவலோகமே அதனை விரும்பியபோது கூனிமட்டும் அதனை மறுக்கின்றாள். அவளுக்கு ஆற்றாத கோபம் ஆறாகப் பாய்கின்றது. தனக்கு ஏற்பட்ட நிலைக்கு பழிதீர்ப்பதற்கு எதிர்பார்த்த அவளுக்கு இது நல்ல சந்தர்ப்பமாக அமைகின்றது. கைகேயினை நாடுகின்றாள். இராமன் பட்டாபிஷேகம் செய்யப்போகும் அந்த நாளை எண்ணி சந்தோஷத்தில் கைகேயி உறக்கத்தில் இருக்கின்றாள். கோபக்கனல் பறக்கச் சென்ற கூனி, கைகேயினைத் ஆவேசத்தால் தட்டி எழுப்புகின்றாள்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

- நீ பொறுப்பற்ற நிலையில் உறங்குகிறாய். நாளை இராமனுக்கு பட்டாபிஷேகம் என்றாள்.
- கைகேயி, 'இராமனைப் பெற்ற எனக்கு இடருள்ளதோ' என்றாள்.
- இராமன் அரசன், உனது மகன் பரதன் சேவகன் என்றாள்.
- நல்ல சேதி சொன்னதற்காக முத்துமாலையினைக் பரிசாகக் கொடுக்கின்றாள்.
- முத்துமாலையினை கோபக்கனல் பொங்க வீசி எறிகின்றாள்.
- கோசலை சமூதாயத்தில் உயர்ந்து நிற்க, நீ தாழ்ந்தாய் என்றாள்.

இவ்வாறான பல வினாக்களைத் தொடர்ந்து தொடுத்தவண்ணமே இருந்தாள். இந்த வினாக்கள் ஒவ்வொன்றும் மெல்ல மெல்ல கைகேயின் மனதில் இடரத் தொடங்கியது. இறுதியில் அவளின் மனமாற்றத்துக்குள்ளானாள். பரதன் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினாள், அவளுக்குப் பதட்டம் உண்டானது. செய்வதறியாது, கூனியிடம் பரதன் மன்னனாவதற்கான ஆலோசனையினைக் கேட்கின்றாள். அப்போது அவள், முன்னொரு காலத்தில் அசுரர்களிடம் யுத்தம் செய்தபோது அந்த யுத்த வெற்றிக்கு நீ காரணமாக இருந்தாய். அப்போது தசரதன் இரண்டு வரங்களைப் பரிசாக அளித்தான், அதனை நீ இப்போது கேட்டுப்பெற்றுக்கொள் என்று, அந்த இரண்டு வரங்களையும் கூறுகின்றாள்.

- பரதனுக்கு முடிசூட்டி, அவனை மிதிலைக்கு மன்னனாக்க வேண்டும்.
- இராமர் தண்டகாரண்ய வனத்திற்கு இன்றே (உடன்) செல்ல வேண்டும்.

இந்த இரண்டு வரங்களையும் மனதில் சுமந்தவளாக கைகேயி துக்கத்தில் இருந்தாள். கைகேயி முடிசூட்டு விழாவுக்கு வரவில்லை என்பதனை அறிந்த தசரதன், அவளை அழைத்துவருவதற்காக அவள் இருக்கும் இடத்திற்குச் விரைந்தான். தசரதன் அங்கு சென்றபோது, அவள் அழகிழந்து, நிலத்தில் புரண்டழுது, தலைவிரி கோலத்துடன் காணப்பட்டாள். அதனைக் கண்ட தசரதன் நிலைகுலைந்து அவளைத் தேற்றி, விடயத்தினைக் கூறும்படி கேட்கின்றான். அதற்கு அவள் அவனிடம், சத்தியம் வாங்கிய பின்னர் மேலுள்ள இரண்டு வரங்களையும் கேட்கின்றாள். இந்த இரண்டு வரங்களைக் கேட்டதும் தசரதன் நிலைகுலைந்து, மயக்கமுற்றான், நிலத்தில் புரண்டழுது ஈருக்கும் நிலையில்கூட, கைகேயிக்கு பல விடயங்களை எடுத்துரைக்கின்றான்.

- உன் மகன் பரதன் அரியணை ஏற்கமாட்டான்.
- அதற்கு உலகமும் துணை நிற்காது.

இங்கும் கூடப் பரதனை உன் மகன் என்றும், உலகம் அவனை விரும்பி ஏற்காது என்றும் கூறுவதன் வாயிலாக பரதன் எனினும், ஆட்சியைத் தருகின்றேன். இராமன் காடு செல்வதனை ஏற்கமாட்டேன் என்கின்றான். இராமனைப் பிரிந்து என்னால் வாழமுடியாது என்றான். இறுதியாக கொடு இல்லாவிட்டால் நான் இறந்துவிடுகின்றேன் என்றாள். இந்த நிலையில் தசரதனும் செயல் இழந்துவிடுகின்றான். அப்போது சுமந்திரனை அழைத்து இராமனை அழைத்துவரும்படி கூறுகின்றாள். அவனும் அவ்வாறே செயற்பட்டு அவனை அழைத்துவருகின்றான்.

இராமன் தசரதன் இருக்கும் இடம் செல்கின்றான். அவன் வருகையினை அறிந்த கைகேயி, தசரதனை அணுகாமல் தடுக்கின்றாள். கைகேயியினைக் கண்ட இராமன்,

> "அந்திவந்தடைந்த தாயைக் கண்ட ஆன் கன்று" போல குதுகலித்து நிற்கின்றான்.
>
> "நாயகன் உரையான் வாயால் நான் இது பகர்வன் என்னாத்
> தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்"

இது தந்தை கட்டளை என்றாள் கைகேயி. தொடர்ந்து அவள், "இந்தக் கடல் சூழ்ந்த உலகத்தைப் பரதன் ஆள்வான், நீ ஏழிரண்டு ஆண்டுகள் காடாண்டு திரும்பிவர வேண்டும்."

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

என்றாள். இந்த நிலையில் இராமன் எதுவித வியப்புமின்றி "அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்ற" முகத்தினை உடையவனாக "மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பேனோ" என்று சொல்ல வேண்டுமா? தாங்கள் காலாற் காட்டுவதை நான் தலையாற் செய்வேன் என்றும் "பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ" இதனைவிட உலகில் எனக்கு வேறுபேறுண்டோ என்றும் அந்தக் கட்டளையினைத் தலைமேற்கொண்டு கானகம் செல்வதற்குப் புறப்படுகின்றான். (இராமன் கானகம் செல்வதற்கு முன்பாக தனது தாய் கோசலையிடம் செல்கின்றான்) இராமன் மணிமுடிதரித்துவருவான் என்று கோசலை எதிர்பார்த்தாள், ஆனால், அவள் நிலைதடுமாற்றமின்றி, அவன் மரவுரிதரித்தே வந்துள்ளமைக்கான காரணத்தைக் கூறும்படி கேட்கின்றாள். இராமன் "பரதன் உன் நேயமகன் மணிமுடிதரிக்கின்றான்" என்று கூற, முறையன்று ஆனால், அவனிடம் "எந்தக் குறையும் இல்லை" என்று "நின்னிலும் நல்லான்" (உன்னிலும் நல்லவன்) என்று அவனை உயர்த்திப் பேசுகின்றாள்.

இந்த நிலையில் இரண்டாவது கட்டளையான தவசிகள் வாழும் காட்டுக்குச் செல்லவேண்டும் அதுவும் ஏழிரண்டு ஆண்டுகள்" என்றான். அதனை ஏற்க மறுத்துக் கோசலை கண்ணீர் விட்டழுகின்றாள், பலவாறு தெய்வங்களை நோகின்றாள்.அதன் போது இராமன் தனது அன்னையைத் தேற்றுகின்றான் "மன்னவன் சொல்கேட்டு நடப்பதுதானே உனக்குப் பெருமை, கணவன் சொல் காத்தல் இல்காப்பவருக்கு உரிய கடமை என்று" கூறுகின்றான். சொல்லின் கனதி அறிந்து கோசலை தசரதன் இருக்குமிடம் செல்கின்றாள். அங்கு அவன் உயிர் ஊசலாடுகின்றமையினை கண்டு அழுகின்றாள். அவளிடம் நடந்தவைகளைச் சொல்கின்றான். அப்போது முனிவர் இட்ட சாபத்தினையும் சொல்லி ,இது விதியால் வந்த வலி என்று தனது உயிரை விடுகின்றான்.

சுமந்திரனை அழைத்த கைகேயி, பரதனை அழைத்துவரும்படி கூறுகின்றாள். அவனும் அவ்வாறே செயற்பட்டு அவனை அழைத்துவருகின்றான். பரதனுக்கு முடிசூடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இங்குள்ள நிலைமையினை அறிந்த பரதன் முடிசூட மறுத்து, கைகேயியினை அம்புபோன்ற சொற்களால் சுடுகின்றான். தனது தகப்பன் இறந்தமையினை அறிந்த அவன் பதறுகின்றான். இராமன் காடு சென்றமையினை உணர்ந்த அவன் வேதனையில் ஆழ்கின்றான். கோசலையிடம் சென்ற அவன், நடந்த விடயங்களைக் கூறி தெளிவினை ஏற்படுத்துகின்றான். கோசலை இதற்கு முன்னர் பரதனை இருமுகம் உடையவனாகவே நோக்கினாள். அவளுக்கு பரதனுடைய இந்தச் செய்தி தெளிவினை ஏற்படுத்தியது. தனது தகப்பனுக்குரிய இறுதிக்கடனை முடித்த பரதன் இராமன் இருக்கும் கானகம் நோக்கிச் செல்கின்றான்.

தொகுத்து நோக்கினால், பண்பாட்டில் நிலைபேறுடைய குடும்பமாக இருந்த வாழ்வியல் பாத்திரங்கள், காலவோட்டத்தில் தங்களுடைய நடிபங்கினை மாற்றிக் கொள்கின்றன. அப்போது ஒவ்வொருவரும் மற்றவரைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற நிலைமைக்கு ஆளாகின்றனர். அதனால், அவர்களுடைய எண்ணங்களில் எற்பட்ட மாற்றம் முகமாற்றமாகவே அமைகின்றது. சில பாத்திரங்களின் நோக்கும் போக்கும் எதிர்மறைச் சிந்தனைகொண்டதாக இருந்து, பின்னர் ஏற்பட்ட தெளிவினால் அவை மாற்றமடைகின்றன.

கைகேயியோ தனது நிலையில் விடாப்பிடியாக இருந்து சாதிக்கின்றாள். ஆனால், கைகேயி இந்த இரண்டு வரங்களையும் விடாப்பிடியாகக் கேட்டு பெற்றமையினால் தசரதனின் வாக்குத்தவறாத புகழினை நிலைநாட்டுகின்றாள் என்பாரும் உளர். எவ்வாறாக இருந்தபோதும் விதிவசத்தால் ஒரு விடயம் நடக்க இருந்தால் அது நிறைவேறியே தீரும் என்பதனை வாழ்க்கையின் அடுக்கமைப்பில் கண்டுகொள்ளமுடிகின்றது. அதற்கு கம்பராமயணத்தில் வருகின்ற இந்த காட்சி சிறந்த திருப்புமுனையாகும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

நூற்பட்டியல்

1. *இராமாயணம்*, சுவாமி விவேகானந்த மடம். திருப்பராய்துறை பதிப்பகம், திருச்சி.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

கண்ணியமிகு காயிதே மில்லத்தின் சமூகச் சிந்தனைகள்
The Noble Quaid-E-Millath and his Socialist Thoughts

கவிஞர். தஸ்லிம்காஜா, சமூகச்சிந்தனை எழுத்தாளர்,
புரவலர், தமிழ்ச்சங்கம், இராமநாதபுரம்.

Abstract

The paper tries to give write up on the life of Quaid-E-Millath *and his socialist thoughts through the lens of his patriotic fervour, discipline, rationalism and religious faith. He is righteous man of the Tamil origin, followed the noble Islam religion. He was respected by all and a gracious soul who sagaciously dedicated his life for the Indian people. While at the time of partition of India and Pakistan, he supported India and came out of the company of the separationists. Consequently, he became a noble icon amidst the global arena. These traits of him induced the study to know much more about him. Hence, his life will help us to know the realms and virtues of life in the modern times.*

Keywords: Noble, Quaid-E-Millath, Socialist Thoughts

மனித நேயங்களை வளர்த்திடுவோம்
மனிதம் போற்றும்படி நாம் வாழ்ந்திடுவோம்
மகிமை மிக்க மனிதர்களை நினைத்திடுவோம்
மனித புனிதங்களை அறிந்து நடந்திடுவோம்.

ஆழகிய உலகமிது இங்கே மனிதர்களே அற்புதப் படைப்புமிது பல்லாயிரக்கணக்கான உயிரினங்களைப்படைத்த இறைவன், மிக அழகாகவும் ஆற்றல்மிக்க சக்தியோடும் உலகின் அனைத்துப் பணிகளையும் செய்திடும் திறனான அவயங்களையும் பெற்ற மனித இனம், உலகின் வேறு படைப்புகளையும் மற்ற அனைத்து உயிரினங்களையும் அறிந்தும் அடக்கி ஆளும் சக்தி பெற்றவர்களாக மனிதர்கள் உருப்பெற்றிருப்பது, மனிதன் ஒருஉயர்வான படைப்பென்பதற்கு நிதர்சனமான உண்மையே, அந்த சிறப்பு மிகுந்த மனிதன், தான் உலகின் படைப்புகள்அனைத்தையும் தன் இஷ்டப்படி ஆட்கொண்டாலும், ஆள நினைத்தாலும் பிறமனிதர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதை, அறிந்து நடப்பதே சிறப்பிலும் சிறப்பு, பெரும் சிறப்பு, இப்படி இந்த உதாரணங்களுக்கு நாம் சிலமனிதர்களை அடையாளம் காட்டியே ஆகவேண்டிஉள்ளது, எத்தனையோ மனிதர்கள் பிறக்கிறார்கள், வளர்கிறார்கள், வாழ்கிறார்கள், ஆள்கிறார்கள் மறைகிறார்கள் இதுவேஒவ்வொரு மனிதரின் பிறப்பின் இலக்கணமாகவும் வாழ்க்கையின் தத்துவமாகவும் உள்ளது, இதில் வாழ்க்கையின் ஏற்ற தாழ்வுகளையெல்லாம் அறிந்து மனிதனாகவும், மதி நிறைந்தோராகவும், அவயவங்கள் அழகானவராகவும் இந்தப்புவியில் மனிதராக பிறந்தோமே என்பதைஎண்ணி மகிழ்வோடும், மனநிறைவோடும், மனிதநேயத்தோடும், இந்த நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும், தன்வாழ்நாளில் ஏதாவது ஒரு நல்லகாரியத்தையோ நல்ல போதனைகளையோ, அல்லது நல்ல நடைமுறைகளையோ செவ்வனே செய்து, அதைப் பிறர் பின்பற்றிடவும், அதனால் பலர் பலன்பெற்றிடவும், அவரின் நற்செயல்களை உதாரணம்காட்டி, வாழும்மக்கள் வளம்பெற்று மகிழும் படி பல மனிதர்கள் இந்த பூமியில் வாழ்ந்துள்ளார்கள் அவர்களை நினைந்து என்றும் மகிழ்வோமாக அந்த வரிசையினில் தமிழகஅளவில் பல தலைவர்களும், அரசியல்மேதைகளும் வாழ்ந்த இந்தபூமியில் கண்ணியமிகு காயிதேமில்லத் அவர்களும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

ஒருவர் அவரின் மகத்தான சிந்தனைகளும் மனிதநேய நடத்தைகளும் மற்ற அனைத்து அரசியல்தலைவர்களும் காலமெல்லாம் பேசக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க அவர்வாழ்க்கையின் சில பகுதிகளை மட்டும் அறிவோம்.

காயிதேமில்லத் அவர்கள் சார்ந்துள்ள இஸ்லாம் மார்க்கம்பற்றி சில விளக்கங்களைக் குறிப்பிடுவது மிகப்பொருத்தமாக இருக்கும், "இஸ்லாம்" என்ற சொல்லுக்கு கீழ்படிதல், பணிவுடன் நடத்தல், ஒரே இறைவனை மட்டும் வழிபடுதல், இறைகடமைகளைப் பணிந்து நிறைவேற்றுதல், இறைவனால் வகுத்தளிக்கப்பட்ட *குர்ஆனின்* கட்டளைகளை அவனது ஏவல் படி நிறைவேற்றவேண்டிய கடமை ஒவ்வொரு இஸ்லாமியருக்கும் பொறுப்பாகும். இஸ்லாம் என்ற வேர்ச்சொல்லின் உள்ளார்ந்த பொருள் அமைதி, சாந்தி, அன்பு, என்பதை உள்ளடக்கியது இறைவனுக்கு முற்றிலும் கீழ்படிந்து நடப்பதால் மாத்திரமே ஒருவன் தன் உடலுக்கும் உள்ளத்திற்கும் உண்மையான சாந்தியைப் பெறமுடியும் என்பதையே இது சுட்டிக்காட்டுகின்றது. இஸ்லாம் ஒரு மார்க்கம் மார்க்கமென்றால் அன்பு, அடக்கம், பண்பு, பணிவு, ஒழுங்கு, முறையான ஒழுக்கம், இதுபோல் பல நெறிகள் அடங்கியதே "இஸ்லாம் மார்க்கம்" இந்த இஸ்லாம் மார்க்கம் அதன் கடமைகளை வலியுறுத்தியும் பெருமைகளை முன்னிறுத்தியும் இஸ்லாமியர்களுக்குப் பல போதனைகளை வழங்கினாலும், இஸ்லாம் அல்லாத பிறமார்க்கங்களையும் மதங்களையும் எந்த ஒரு இடத்திலும் குறைத்து மதிப்பிடவில்லை (லக்கும் தீனுக்கும் வலிய தீன்) அவரவர் மார்க்கம் அவரவர்க்கே உயர்வானதே என்ற பொருள்பட பெருமைபடுத்தியுள்ள இஸ்லாம், இஸ்லாம்மார்க்கம் இன்றைக்கு பலகோடி மக்களின் இதயத்திலே இடம் பெற்றிருக்கின்ற வாழ்க்கைநெறியாக - வழிமுறையாக இஸ்லாம்மார்க்கம் உள்ளது.

முதல் மனிதரும் முதல் இறைத்தூதருமான (நபி) ஆதம் (அலைஹிவஸல்லம்) அவர்களுக்கு இறைவன் நல்கியமார்க்கமே இஸ்லாம், இஸ்லாமிய நெறியில்இருந்து மனிதன் வழிதவறும் போதெல்லாம் இறைவன் தன்தூதர்கள் மூலம் இஸ்லாமிய நெறியைப் போதித்து நல்வழிப்படுத்துவான், இப்படி இறைவன் மனித குலத்திற்கு நல்வழிகாட்டுதலை காலங்காலமாகச் செய்துகொண்டேஇருப்பான். இதன் நம்பிக்கையிலேயே மனிதனின் அன்றாடவாழ்க்கை முறைகள் நகர்ந்துகொண்டே இருக்கும் இந்த நம்பிக்கையின் பயன்தான் பிறமனிதர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் நேர்மையான நடத்தைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் ஒருவரைப் பார்த்துவிட்டால் நாம் முந்திக்கொண்டு சலாம் சொல்லவேண்டும் இப்படிப் பல உயரியபோதனைகளை வழங்குவதே இஸ்லாம்.

நாட்டுப்பற்று, நாட்டுப்பற்று என்பதை மிகத் துல்லியமாக தெளிவுபடுத்துகின்றது இஸ்லாம், நாம் பிறந்தநாடு என்பதை நமது நாடு என்ற உணர்வோடு நம் ஆயுள் முழுவதும் அதைப் போற்றி பாதுகாக்க வேண்டும் நாட்டுக்காகப் பல தியாகங்களைச் செய்திட வேண்டும் நாடு மீது விசுவாசமாக இருந்திட வேண்டும், எந்த ஒரு நிலையிலும் நாட்டுப்பற்று என்பது நம்மிடம் இருந்து விலகிச் சென்றிடலாகாது, நமதுவாழ்நாளில் நம் பிறந்தமண்ணுக்கு மகிமைசேர்ப்பது நமது கடமையாகும் என்பதை இஸ்லாம் பல்வேறு நிலைகளில் வலியுறுத்துகிறது, இந்த சிறப்புகளை அறிந்த பல இஸ்லாமியமக்கள் நமது இந்திய நாட்டுக்காகப் பல தியாகங்களையும் பல சேவைகளையும் தன்னடக்க உணர்வுப் பூர்வமாகச் செய்துள்ளார்கள் அந்த வரிசையினில் பல தலைவர்கள் இருந்தாலும், இக்கட்டுரையின் மூலமாக கண்ணியமிகு காயிதேமில்லத் இஸ்மாயில்சாகிபு அவர்களின் சமூகச் சிந்தனைநிறைந்த, நடத்தையை உயர்வாக அறிவோமே பள்ளித்தோழர்கள் உட்பட அனைத்துமத நண்பர்களிடமும் அன்புடன் நடந்து கொண்டார் தமிழக வரலாற்றில் சுதந்திரம் பெறுவதற்கு முன், தமிழக முதல்வராக பணியாற்றிய பல தலைவர்களுடனும் சுதந்திரம் பெற்று குடியரசு ஆனபின் தமிழக முதல்வர்களாக பணியாற்றிய திரு. குமாரசாமிராஜா, மூதறிஞர் இராஜாஜி, கர்மவீரர் காமராஜர் திரு.பக்தவச்சலம், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கருணாநிதி, மற்றும் டாக்டர் அம்பேத்கார், தேவர் திருமகனார், தந்தை ஈவேரா

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

பெரியார், கம்யூனிஸ்ட் தலைவர் பி.ராம் மூர்த்தி, சி.பா.ஆதித்தனார் உட்பட பல தமிழக அரசியல் தலைவர்களுடனும் அகில இந்திய பல அரசியல் தலைவர்களுடனும் ஆழமான நட்புக் கொண்டிருந்ததோடு இவர்களால் "கண்ணியமிகு காயிதேமில்லத்" என்று அழைக்கப்பட்டவர் இந்தியப் பாராளுமன்றத்தில் தமிழுக்காக முதன்முதலில் குரல் கொடுத்தவரும் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றியவரும் அகிலஇந்திய முஸ்லீம்லீக்கின் தலைவராகச் செயல்பட்டவரும் இந்தியா சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்டவருமான பச்சைத்தமிழன்தான் முஹம்மது இஸ்மாயில் சாகிப் அவர்கள் இவருக்கு மக்கள் கொடுத்த பட்டம்தான் "கண்ணியமிகு காயிதேமில்லத்" என்பதாகும்.

"கண்ணியமிகு காயிதேமில்லத்" என்பதற்கு பொருள் மரியாதையுடன் மக்களை நல்வழிப்படுத்துபவர் என்பதாகும் காயிதேமில்லத்அவர்கள் சிறந்ததலைவர், சிறந்த நிர்வாகி, சிறந்தசமூக சீர்திருத்தவாதி, சிறந்த அரசியல்தலைவர், சிறந்த பாராளுமன்ற உறுப்பினர், சிறந்த எதிர்க்கட்சித்தலைவர், சிறந்த மக்கள் நலப்போராளி, சிறந்த சுதந்திர தாக்கமிகு போராளி, சிறந்த நாட்டுப்பற்றுமிக்க தலைவர். இப்படிப் பன்முகச்சிறப்புக்களைக் கொண்ட மாபெரும் போற்றுதலுக்குரிய மனிதராய்த் திகழ்ந்தார், அனைத்துக் கட்சியினரிடமும் அனைத்து சமுதாயத் தலைவர்களிடமும் பெரும் மதிப்பும் மரியாதையும் கொண்ட காயிதே மில்லத் அவர்களின் நாட்டுப்பற்றுமிக்க நற்செயல்கள் சிலவற்றை மட்டும் இந்த கட்டுரையின் வாயிலாகக்கீழே காண்போமே.

நபிகளார் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் பிறந்தநாட்டிற்கு பெரும் தொண்டு செய்திடனும் தன் ஆயுள ் முழுவதும் என்ற போதனையை நெஞ்சில் நிறைந்து வைத்து வாழ்க்கையைத் தொடர்ந்திட்ட காயிதேமில்லத் அவர்கள், திருநெல்வேலி பேட்டை என்ற இடத்தைச் சேர்ந்த மியான்கான் ராவுத்தர், முகைதின் பாத்திமா தம்பதியினருக்கு 1896ம் ஆண்டு ஜுன் ஐந்தாம்நாள் பிறந்தார். மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் உடன் பிறந்தநிலையில் தனது ஏழாவதுவயதில் தந்தை மியான்கான் மறைவுக்குப்பின் தாய்மாமாவின் அரவணைப்போடு வளர்ந்த காயிதேமில்லத் அவர்கள் சிறுவயதில் பள்ளியில் சேர்ந்து படிக்கும் தருவாயிலே, "பால்ய முஸ்லிம் சங்கம்" என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கி பிறமாணவர்களோடு இணைந்து சமுக நல்லிணக்கச் சொற்பொழிவுகள் பேச்சுத்திறன்போட்டி, பொதுஅறிவு, அரசியல்நடவடிக்கைகள், அனைத்து மதங்களும் கூறிடும் மனிதநேயச் சிந்தனைகள், சுதந்திரத்தாக்கத்தின் விளைவுகள், உட்பட நாட்டுப்பற்று நிறைந்த. மக்கள் நலம் சம்பந்தமான பல பயிற்சிகளை அளித்து மாணவர்களின் மனங்களில் நற்சிந்தனைகளை வளர்த்திட மிகவும் பாடுபட்டார், இது விபரம் அறிந்து கர்சன் பிரபு என்ற ஆங்கிலேய வெள்ளைக்கார ஆட்சியாளர் காயிதேமில்லத் அவர்களை அழைத்து விசாரித்து சில விளக்கங்களையும் கேட்டறிந்தார்.

தனது குடும்பத்தின் பூர்விகத்தொழிலான துணி வியாபாரத்தின் மூலமும் தோல் வியாபாரத்தின் மூலமும் செல்வசெழிப்போடு இருந்ததினால் தன் தந்தையின் நண்பரான திருநெல்வேலி மனோன்மணியன் சுந்தரம்பிள்ளை உட்பட பலரின் ஆலோசனையின்படி தன்பள்ளிப்படிப்பை நிறைவு செய்த காயிதேமில்லத் அவர்கள். திருச்சியில் உள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் பயின்றார்கள் பின் மேலும் ஒரு பட்டப்படிப்பைத் தொடர்ந்திட சென்னையில் உள்ள கிறிஸ்தவ கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நிலையில் சென்னை விஜயம் செய்திருந்த மகாத்மாகாந்தி அவர்கள், காயிதேமில்லத்தின் முழு விபரமும் அவரின் செயல்பாடுகளும் அவரின் சுதந்திரத்தாக்கமும் மாணவர்களின் தகுதிமிக்கத் தலைமையைப் பெற்றிருந்ததையும், கிலாபத் கமிட்டி மூலமாக அறிந்த மகாத்மா காந்தி அவர்கள். காயிதே மில்லத்தை அழைத்திட காந்தியின் அழைப்பை ஏற்று வருகை தந்த காயிதேமில்லத் அவர்கள் பட்டப்படிப்பை பாதியிலேயே விட்டுவிட்டு வந்தவர் தன்படிப்பை விட நாட்டின் சுதந்திரமும் நாட்டின் பாதுகாப்புமே முக்கியமென முடிவெடுத்த அவர் காந்தியடிகளால்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தொடங்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கம் மற்றும் கிலாபத் கமிட்டி இயக்கத்தில் தீவிரபங்கு கொண்டு நாட்டு நலனுக்காகப் பாடுபட்டார்கள்.

தனது முப்பதாவது வயதினில் தஞ்சை ஆடுதுறையில் ஹமிதா என்ற பெண்மணியை மணந்து இரண்டு குழந்தைகளுக்கு தந்தையான நிலையிலும், தன் குடும்பத்தைக் காட்டிலும் நாட்டு நலனே முக்கியம் என்ற கோணத்தில் நாடு சுதந்திரம் பெறவேண்டுமென தீவிரத்தாக்கமுடன் தமிழகம் உட்பட இந்தியாவெங்கும் பல திட்டங்களை வகுத்து ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் பலபோராட்டங்களை முன்னெடுத்துச் சென்றிட இத்துடன் ஒத்துழையாமை இயக்கம், கிலாபத் கமிட்டி உட்பட பல முனைகளில் போராட்டம் தொடர்ந்து நடந்திட பல பணிகளை செய்துக் கொண்டே இருந்தார்கள்.

1945ல் சென்னை மாகாண முஸ்லிம் லீகின் தலைவராக காயிதேமில்லத் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் பின் 1946ல் நடைபெற்ற மேல் சபையின் பொதுத் தேர்தலில் எந்தவித எதிர்ப்பும்இன்றி தேர்வாகிச் சென்னைமாகாணச் சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவராகச் செயல்பட்டார் சட்டசபையில் பிரதான எதிர்க்கட்சியாக முஸ்லிம்லீக்கே இருந்தது தமிழகசட்டமன்ற வரலாற்றில் "கண்ணியமிகு காயிதே மில்லத்" என்று பலரால் போற்றப்பட்டார்.

நீண்ட போராட்டத்திற்கு பின் 1947 ஆகஸ்ட் பதினைந்தில் சுதந்திரம் கிடைக்கப்பெற்றது, பாகிஸ்தான் பிரிவினைக்கு கடைசி வரை எதிர்ப்புத் தெரிவித்த காயிதே மில்லத் அவர்கள், பாகிஸ்தான் பிரிவினையை எண்ணியே மனம் நொந்தவராக இருந்த நிலையில், முஸ்லிம் லீக்கை கலைப்பதற்கு பல தரப்பினரும் பகீரத முயற்சி செய்த நிலையில் அதை தன் சாமர்த்தியத்தால் முறியடித்த காயிதேமில்லத் அவர்கள் அகில இந்திய முஸ்லீம்கின் தலைவரானார். அப்பொழுது முஸ்லிம்லீக் கட்சியில் இருந்து கட்சி நிதியாக பிரித்து கிடைக்கப் பெற்ற கட்சியின் பணம் ரூபாய் பதினெட்டு லட்சத்தை வாங்க மாட்டேன் என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டார். பிரிவினைவாதிகளிடம் கடுமையாகவும் சாடிவிட்டார் (அந்த பதினெட்டு லட்சத்தின் இன்றைய மதிப்பு சுமார் ஒரு லட்சம் கோடியாகும்) அந்த அளவிற்கு நாட்டுப் பற்று தாக்கம் கொண்டவர் காயிதேமில்லத் அவர்கள். சுதந்திர இந்தியாவைக்காண, இந்திய முஸ்லிம்கள் ஆண்கள் பெண்கள் என்ற பாகுபாடின்றிக் குடும்பம் குடும்பமாக மன தைரியமுடன் செயல்பட்டதை வரலாற்று ஆசிரியர் சோப்ரா "வீக்லி இந்தியா" உட்பட பல ஊடகங்களும் அயல்நாட்டு அறிஞர்களும் ஆங்கிலேய அதிகார வர்க்கமும் ஆச்சரியமுடன் பாராட்டின.

காயிதே மில்லத் அவர்கள் சென்னை வந்த சைமன் கமிசனை எதிர்த்து கருப்புக் கொடி போராட்டம் உட்பட பல நூற்றுக்கணக்கான போராட்டங்களில் கலந்து கொண்டதோடு 1962இல் சீன ஆக்கிரமிப்பு சமயத்தில் ஜவஹர்லால் நேரு அரசுக்கு முழுஆதரவு தந்து தனது வருமானத்தின் ஒருபகுதியை போர் நிதிக்காக தந்து முதன் முதலாக போர் நிதிதிரட்டலைத் துவக்கிவைத்தார்கள். இந்திய முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராக செயல்பட்ட காயிதேமில்லத் அவர்கள் சமூக சீர்திருத்தவாதி, மூடநம்பிக்கை, லஞ்சம், வரதட்சனை, மதுக்கலாச்சாரம், தீண்டாமை, பெண் கொடுமைகளுக்கு எதிரானவர், சாதிய தீண்டாமைகளுக்கு முற்றிலும் எதிரானவர் மனிதராகப் பிறந்த அனைவரும் சமம் இதில் ஏற்ற தாழ்வுகள் எதுவும் இல்லையென்று சொல்லும் காயிதேமில்லத் அவர்கள், தன்பிறந்த மண்ணான மஹாராஷ்ராவில் வெற்றி பெற இயலாத டாக்டர் அம்பேத்கரை மேற்குவங்கத்தில் நின்று வெற்றி பெறவைத்திட பெரும் பங்காற்றியவர் காயிதேமில்லத் அவர்கள். அதேபோல், கர்மவீரர் காமராஜர் அவர்கள் முதல்வராக தேர்ந்தெடுக்கும் முன் அவர் நின்ற சட்டமன்றத் தொகுதித் தேர்தலில் அவர் வெற்றிக்கு மிகவும் பக்கபலமாக இருந்து செயல்பட்டு வெற்றி பெறவைத்தவர். அதேபோல் 1967ல் நடைபெற்ற தமிழக சட்டமன்றத்தேர்தலில் திமுக ஆடசியைக் கைப்பற்ற பெரும் பங்காற்றியவர் காயிதேமில்லத் அவர்கள்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

மேல்சபை உறுப்பினராக இருந்த காயிதே மில்லத் அவர்கள் 1962 முதல் தொடர்ந்து மூன்று முறை வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராகவும், இந்திய அரசியலமைப்பின் நிர்ணயசபையின் பலம்பொருந்திய உறுப்பினராகவும் இருந்து தன் செயல்பாட்டால் பலரின் பாராட்டைப்பொற்றார் பாராளுமன்றத்தில் பல உணர்வுப் பூர்வமான இந்திய நாட்டிற்குத் தேவையான பல நல்ல திட்டங்களை வலியுறுத்திப் பேசி உள்ளார் அவரின் பாராளுமன்ற உரையைக் கேட்ட பல அமைச்சர்கள் உறுப்பினர்களும் பாராட்டிய நிலையில் 1950-இல் பாராளுமன்ற உரையின் போது இந்தியாவில் முழு மதுவிலக்கு கொண்டு வரவேண்டுமென்றும் பொதுஇடங்களில் புகை பிடிப்பதைத் தடைசெய்ய வேண்டுமென்றும் தமிழகத்தின் வடஆற்காடு மாவட்டம் பழுப்பு நிலக்கரி கனிமவளம் நிறைந்த பகுதியெனவும் இங்கு தொழிற்சாலை அமைத்து தர வேண்டுமென்றும் பேசியதோடு வரலாற்றுச்சிறப்புமிக்க அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்தில் இந்தியாவின் ஆட்சிமொழியாக எந்த மொழியைக் கொண்டுவரலாம் என்ற விவாதம் நடைபெற்ற நிலையில், சமஸ்கிருதம், இந்தியை விட பலவகைகளில் உயர்வானதும் தொன்மையானதும் இலக்கணம் இலக்கியம் வடிவம் பெற்று கல்தோன்றி மண்தோன்றாக் காலம் முன்தோன்றிய மூத்தமொழியான தமிழ்மொழியே இந்தியாவின் ஆட்சி மொழியாக வரவேண்டுமென்று முதல் முதலில் இந்திய பாராளுமன்றத்தில் குரல்கொடுத்த முதல் தமிழ் மகன் காயிதேமில்லத்து தான். இப்படி ஏராளமான உணர்வுப்பூர்வமான உயர்சிந்தைகளோடு, நாட்டுப்பற்றுமிக்க மக்கள்நலன் சார்ந்த நல்லதேசிய தலைவரைப் பெருமைபடுத்திடும் விதமாக, பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித்தலைவி ஜெயலலிதா போன்றோர்கள் காயிதேமில்லத்திற்கு பல வகையான கௌரவமும் புகழ்மாலையும் சூட்டி கௌரவித்துக் கொண்டே இருந்தார்கள் என்பதை நாமும் நினைத்து அவர்வழி தொடர்ந்து காயிதேமில்லத்தைப் பின்பற்றி நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் வளம் சேர்ப்போம், பலம் பெறுவோம்.

துணைநூற்பட்டியல்

1. https://tamil.oneindia.com/news/2013/06/05/tamilnadu-nation-remebers-kaithe-millath-on-his-118th-birthday-176652.html 12. 30. P.m., 2019.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரங்களில் பண்கள்
Music in the Devarams of Sundaramoorthy Swamigal

நந்தகுமார் சஞ்ஜீவன், விரிவுரையாளர்,
இசைத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை.

Abstract

The paper tries to give details of the genre style used by Sundarar in his "Devaram". It is really peculiar that he had followed a equisite model of musical note in all of his verses. Tamil language is considered for its musical quality and most of the Tamil people feel medicinal qualities in the rhyme and rhythm of Sundarar's "Devaram". The present paper tries to put forth the genre quality, places where he sang the verses and minute technical details of music in "Devaram". Hence, the paper will help us to know the musical function.

Keywords: Music, *Devarams*, Sundaramoorthy Swamigal

அறிமுகம்

தொன்மைத் தமிழிசையின் மூலமாகவும் இசையுடனும் தாளத்துடனும் கூடிய முதல் இசைவடிவமாகத் திகழ்வது தேவாரங்ளேயாகும். இத்தேவாரங்களை தேவாரமுதலிகள் என அழைக்கப்படும். திருஞானசம்பர் திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்போர் இயற்றியுள்ளனர். இத்தேவாரங்கள் குறிக்கப்பட்ட பண்களில் அமையப்பெற்றுள்ளது. இத்தேவாரங்கள் என்பது தெய்வத்தின் மீது பாடப்படும் வாரப்பாடல்களாகும். இதனை வேதாசாரம் என்றும் கூறுவர். இத்தேவாரங்கள் பாடப்படும் இசையமைப்பு பண்கள் என்றழைப்பர். அதாவது தற்காலத்தில் கூறப்படும் இராகங்களிற்கு ஒப்பானதாகும். பண்கள் எனப்படுவது உண்டாக்குதல். அதாவது பலவகைச் செயல்களால் உண்டாக்கப்படுவதால் இசைக்குப் பண் எனும் பெயர் வந்தது. இப்பண் பெரும்பண், திறப்பண் என இருவகைப்படும். பெரும்பண் சம்பூர்ண இராகத்தையும் திறம்பண் பண்ணியல், திறம், திறத்திறம் என்று மூவகைப்படும். பழந்தமிழ் இசை நூல்களில் யாழ், பாலை அராகம் இசை என்ற பெயர்களாலும் பண்கள் குறிக்கப்படுகின்றன. பெரும்பண்கள் ஏழு நரம்புகளையும் முழுமையாகப் பெற்றிருக்கும் திறப்பண்கள் சில நரம்புகள் குறைவாகப் பெற்றிருக்கும். 6 நரம்புடையவை பண்ணியல் 5 நரம்புடையவை திறம், 4 நரம்புடையவை திறத்திறம் இவ்வாறு ஆரோசையில் அல்லது அவரோசையில் அல்லது இரண்டிலும் வருதலுண்டு.[1]

இற்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன்னே தேவாரத் திருப்பதிகங்கள் இயற்றப்பட்டன. ஏறத்தாழ 1000 ஆண்டுகளுக்கு முன்பே நம்பியாண்டார்நம்பியால் தேவாரப்பாடல்கள் தொகுக்கபபட்டன. அவற்றிற்கு இசை வல்லுனர்களைக் கொண்டு பண்கள் வகுக்கப்பட்டன்.[2] கட்டளைகளும் வகுக்கப்பட்டன. அதன்பின் நானூறு ஆண்டுகள் கழித்து கொற்றவன்குடி உமாபதிசிவம் என்பவரால் இன்ன இன்ன பண்ணில் வரும் பதிகங்கள் ஓதுவார்களால் இத்தனை வகையான கட்டளைகளில் பாடப்படுகின்றன. என்ற கணக்கும் எழுதிவைக்கப்பட்டது. அன்று முதல் தேவாரப்பாடல்கள் குறிப்பிட்ட பண்ணும் கட்டளையும் வழுவாமல் ஓதுவார் பெருமக்களால் போற்றிப்பாடப்பட்டுச் செவிவழியாக வாழ்வு பெறுகின்றன. இத்திருமுறைப்பண்களில் மூன்றாவது நாயணாராகிய சுந்தரமூர்த்திசுவாமிகளின் பதிகங்களின் அமைவுபற்றி இவ் ஆய்வு இடம்பெறுகின்றது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

சுந்தரர் வரலாறு

சுத்தார் தாம் செய்த ஒரு பிழைக்காக தண்டனை பெற்று திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் பிள்ளையாகப் பிறந்தார். இவருக்கு நம்பியாரூர் என்று பெற்றோர் பெயர் சூட்டினர். சிங்கமுனையர் என்ற மன்னர் இவரை பொறுப்பேற்று வளர்த்து வந்தார். இவ்வாறு சந்தார் சிறுவயதில் அரண்மனையிலிருந்து வளர்ந்து மணப்பருவமெய்தினார். இதன்போது புத்தூர்ச்சடங்கவி சிவாச்சாரியாரின் மகளை திருமணம் செய்வதற்கு ஏற்பாடு செய்து நடைபெற ஆயத்தமானபோது சிவபெருமான் கிழப்பிராமண வடிவம் தாங்கி சுந்தரரைத்தடுத்து அடிமைகொண்டார். இவ்வாறு திருவருட்துறைக் கோயிலில் சிவன் தம்மை மறைத்து இடபாரூடராய் காட்சிகொடுத்து சுந்தரருக்கும் "வன்தொண்டர்" எனும் நாமம்சூட்டி தம்மைப்பாடும்படி பணித்தார்.

இதன்போது சிவனின் ஆணைப்படி "பித்தாபிறைசூடி"[3] எனும் பதிகத்தை இந்தளப் பண்ணில் சுந்தரர் பாடினார். இதன்பின் திருவதிகைத்தலத்தில் உறங்கியிருந்த சுந்தரருக்கு இரண்டுமுறை சிவபெருமான் காலால் உதைத்து திருவடித்தீட்சை வழங்கினார். பின்னர் திருவாரூர் முதலிய தலங்கள் சென்று திருமூலட்டானத்தில் "நம்மை உமக்குத் தோழமையாகத் தந்தோம்"[4] எனவும் மணக்கோலத்தில் வருவாயாக என்று சிவபெருமானால் அருளப்பட்டது.

பின்னர் திருவாரூர் கோயிலில் பரவையாரைத் திருமணம் செய்து பின்னர் இறைவனால் "தில்லை வாழ் அந்தனர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியும் தொடங்கி சுந்தரர் திருத்தொண்டர் தொகையைப் பாடி முடித்தார். இவ்வாறு பல தலங்கள் சென்று வழிபட்டு திருமுதுகுன்றத்தில் பொன்பெற்று மணிமுத்தாற்றில் போட்டு இறை அருளால் திருவாரூர்க்குளத்திலிருந்து பொன் செய்த மேனியினீர்"[5] என்ற பதிகத்தைப்பாடி எடுத்தார் சிறுகாலங்கழித்து சுந்தரர் தலயாத்திரைகள் சென்று திருவொற்றியூரில் வசித்த சங்கிலியாரை மணந்து வாக்குப்பணினார் இடையில் திருவாரூர் ஞாபகம் வரும்போது வாக்கை மீறி திருவெற்றியூரை நீங்கும் போது இருகண்களும் குருடாகின பின்னர் திருவெண்பாக்கம் சென்று "பிழையுளன பொறுத்திடுவர்"[6] எனும் பதிகத்தைப் பாடினார். ஆனால் கண் பார்வை கிடைக்கவில்லை. பின்னர் ஊன்று கோல் கிடைக்கப்பெற்றது. பின்னர் பல தலங்களைத் தரிசித்து கச்சியேகம்பத்தை அடைந்தார். அங்கு "கடையானேன்"[7] எனும் பதிகத்தைப்பாடி இழந்த இடக்கண் பார்வை பெற்றார். இவ்வாறு திருவாரூரை அடைந்து வன்மீகநாதரைத் தரிசித்து இடக்கண் மட்டும் போதாதென்று "மீளா அடிமை"[8] எனும் பதிகத்தை செத்துருத்திப்பண்ணில்பாடி வலக்கண்பார்வையையும் கிடைக்கப் பெற்றார்.

திருவாரூரில் முதல் மனைவியார் பாரவையாரிடம் செல்ல நினைத்தபோது பரவையார் ஏற்காதமையினால் இறைவனே தூது சென்று இறுதியில் இருவரும் சேர்ந்து வாழ்ந்தனர். இதன்பின் திருப்புன்கூர் சென்று "அந்தநாளனுன்"[9] எனும் பதிகத்தை காம்போதி இராகத்தில்பாடி சேரநாடு சென்று சேரமான் பெருமானின் சினேகிதம் கிடைக்கப்பெற்றார். சுந்தரர் சேரமான் பெருமானுடன் இராமேஸ்வரம் சென்று அங்கிருந்து இலங்கை திருக்கேதீஸ்வரம் மீது பதிகம் பாடினார்.

பின்பு சேரநாட்டைவிட்டு கொங்குநாட்டு வழியாக திருமுருகன் பூண்டிவந்து களவுபோன பொருட்கள் கிடைக்க "கொடுகு வஞ்சிலை"[10] எனும் பதிகம்பாடி பொருள் கிடைக்கப்பெற்றார். பின்னர் திருவாரூர் சென்று மீண்டும் சேரநாடு செல்லும் நோக்கில் செல்லலானார். வழியில் முதலை விழுங்கிய பிராமணக் குழந்தையை "ஏற்றான் மறக்கேன்"[11] எனும் பதிகத்தைப்பாடி "கரைக்கான் முதலைப்பிள்ளை தரச்சொல்லு காலனையே" என்று வேண்டினார். அதன்போது கழிந்த ஆண்டுகளுக்கான வளர்ச்சியோடு குழந்தையை இறைவன் திருவருளால் முதலை உமிழ்ந்தது. அப்பிள்ளைக்கு பூனூற் சடங்கும் செய்வித்து சேரநாடு சென்றார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

பின்பு "தலைக்குத்தாமாலை"[12] எனும் பதிகத்தைபாடி முத்திதரும்படி திருவஞ்சைக் கோயில் இறைவனை வேண்ட தேவர்கள் வந்து வெள்ளையானையில் ஏற்றிக்கொண்டு கையிலை சென்றனர். பின்னே சேரமான் பெருமானும் தமது குதிரையில் கயிலை சென்றார். இதன்போது சுந்தரருக்கு 18 வயதுகளாகும். பின்னர் பரவையாரும் சங்கிலியாரும் கயிலையை அடைந்தனர். சுந்தரர் இறைவனுடன் தோழமை பூண்டதனால் யோக நெறியில் நின்றவராயினர். சுந்தரர் காலம் பற்றி மா.இராசமாணிக்கனார் கி.பி 685 முதல் கி.பி 840 வரையுள்ள காலத்தினர் என்கிறார். சுந்தரை நம்பியாரூரர், ஆளுடையநம்பி, வன்தொண்டர், தம்பிரான்தோழர், சேரமான்தோழர், சிங்கடியப்பன், வனப்பகையப்பன் என்ற பெயர்களுமுண்டு.

சுந்தரர் பதிகம்

சுந்தரரால் இயற்றப்பட்ட தேவாரப்பாடல்கள் திருமுறை வகுக்கப்பட்டபோது 7வது திருமுறையில் அடக்கப்பட்டுள்ளது. இவற்றில் 100 பதிகங்களும் 1026 பாடல்களும் அடங்குகின்றன. ஆனால் சுந்தரர் 3800 பாடல்களுக்கு மேல் பாடியுள்ளதாக அறியமுடிகின்றது.

பதிகங்கள் இடம் பெற்ற தலங்கள்

சுந்தரர் திருவெண்ணை நல்லூர், திருப்பரங்குன்றம், திருநெல்வாயிலரத்துறை, திருவஞ்சைக்களம், திருவோணகாத்தன்றளி, திருவெண்காடு, திருவெதிர்கொள்பாடி திருவாரூர், திருவரிசிற்கரைப்புத்தூர், திருக்கச்சியனேகதங்காவதம், திருப்பூவளம், திருத்துறையூர், திருப்பாச்சிலாச்சிரமம், திருநாட்டியத்தான்குடி, திருக்கலய நல்லூர், திருநாவலூர், திருவேள்விக்குடி, திருநின்றியூர், திருக்கோளிலி திருக்கச்சி மேற்றளி, திருப்பழமண்ணிப்படிக்கரை, திருக்களிப்பாலை, திருமழபாடி, திருமுதுகுன்றம், திருக்காளத்தி, திருக்கற்குடி, திருக்கடவூர் வீரட்டம், திருக்திருக்கருகாவூர்வெள்ளடை, திருக்கருப்பறியலூர், திருஇடையாறு, திருக்கோடிக்குழகர், திருப்புகலூர், திருப்புரம்பயம், திருப்பைஞ்ஞீலி, திருவாரூர், திருவதிகை திருவீரட்டானம், திருகாணாட்டுமுள்ளூர், திருக்கச்சூராலாக்கோயில், திருவெஞ்சமாக்கூடல், திருமுதுகுன்றம், திருவாமத்தூர், திருநாகைக்காறோவர், திரப்பாண்டி கொடுமுடி, திருமுருகன்பூண்டி, திருபுணவாயில், திருவாரூர், திருவாலங்காடு, திருக்கடவூர்மாயானம், திருவொற்றியூர், திருப்புன்கூர், திருநீடூர், திருவாழ்கொளிபுத்தூர், திருக்களுமலம், திருவிடைமருதூர், திருக்கச்சியேகம்பம், (காஞ்சி), திருக்கோலக்கா, திருவாவடுதுறை, திருத்தினைநகர், திருவலிவலம், திருநள்ளாறு, வடதிருமுல்லைவாயில, திருமறைக்காடு, திருவானைக்கா, திருக்கேதாரம், திருப்பருப்பதம், திருக்கேதீஸ்வரம், திருக்களுக்குன்றம், திருச்சுழியல், திருக்கூடலையாற்றூர், திருவென்பாரத்தான்பனங்காட்டூர், திருவீழிமிளலை, திருநாகேச்சரம், முதலிய தலங்கள் மீது பதிகங்கள் பாடியுள்ளார்.

பதிகங்களில் பண்கள்

சுந்தரரின் பதிகங்கள் திருப்பாட்டு என்று அழைக்கப்படுகின்றது. சுந்தரர் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்த பல அகச்சான்றுகள் உள்ளன.

"ஏழிசையால் இசைந்து ஏத்திய பத்திவையும்" [13]
"இசை ஏழு" 14 (ஆறுகந்தாரங்க…) [14]
"ஏழ்நரம்பின் ஓசை" [15]
அறுபதம் பண்பாடு [16] (குரும்பைமுலை…)
பண்பயத்த [17]
பண்ணிடை தமிழ்ஒப்பாய் [18]

முதலிய திருப்பாடல்களில் ஏழிசை, பண் முதலிய இசையின் பிரதான கூறுகள் இடம்பெறுகின்றன.

இப்பண்கள் பற்றி பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்கள் "பண்ணென்பது இராகம் பண் எனும் பதத்திற்கு பாட்டு, சம்பூர்ணராகம் என வேறு இரண்டு பொருள்களும் உண்டு" என்கிறார். அதேபோல பண்களின் சொரூபங்களை அறிவதற்கு தேவாரங்களே மூலமாகும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

என்கிறார். பொதுவாக பண்களை இராப்பண், பகற்பண், பொதுப்பண் என்ற மூன்று வகையில் பகுத்துள்ளார்.[19]

தற்காலத்தில் வழங்கும் இராகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பல இலட்சணங்கள் பண்களிலும் காண முடிகின்றது. அவை கானகாலம், ஆரோகணம், அவரோகணம் எனும் ஆரோசை அமரோசை, விலக்கப்பட்ட ஸ்வரங்கள், ஜீவஸ்வரங்கள், அன்னியஸ்வரங்கள், நியாசஸ்வரங்கள், ரக்திப்பிரயோகங்கள் சொரூபத்தை விளக்கும் நுட்ப சுருதிகள், கமகங்கள் முதலியனவும் உள்ளன. இந்திய இசையில் உள்ள பாஷாங்க ராகம் என்னும் வடிவத்தை முதன் முதலில் தேவாரப்பண்களிலேயே காணலாம். கௌசிகம் (பைரவி), வியாழக்குறிஞ்சி (சௌராஸ்டிரம்) என்பவை இதற்கு உதாரணங்கள் ஆகும்.

தற்போது கிடைத்துள்ளள தேவார முதலிகள் மூவரது பதிகங்களிற்கு வகுக்கப்பட்டுள்ள பண்கள் 24 ஆகும். இதில் சுந்தமூர்த்தி சுவாமிகள் 17 பண்களை கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சுந்தரர் தன் பாடல்களை இசைக்கிளவி என்று “கன்னலை” எனும் பதிகத்தில் அரூரான்பண்ணும் இசைக்கிளவி பத்திவை”[20] என்று குறிப்பிடுகின்றார்.

சுந்தரர் பதிகங்களில் இந்தளம், தக்கராகம், நட்டராகம், கொல்லி, கொல்லி கௌவாணம், பழம்பஞ்சுரம், தக்கேசி, காந்தாரம், பியந்தைக்காந்தாரம் காந்தாரப்பஞ்சமம், நட்டபாடை, புறநீர்மை, சீகாமரம், குறிஞ்சி, கௌசீகம், பஞ்சமம், செந்துருத்தி முதலிய பண்கள் இடம்பெறுகின்றன. இவற்றில் இந்தளப் பண்ணில் திருவெண்ணைநல்லூர், திருப்பரங்குன்றம், திருநெல்வாயிலறத்துறை, திருவஞ்சைக்களம், திருவோணகாந்தள்தளி, திருவெண்காடு, திருவெதிர்கொள்பாடி, திரவாரூர், திருவகிசித்கரைப்புத்தூர், திருக்கச்சிஅனேகதங்காவதம், திருப்பூவணம் பொதுப்பாடலாகிய திருநாட்டுத்தொகை பதிகங்கள் என்பனவும்

தக்கராகங்கள்

திருத்துறையூர் திருப்பாச்சிலாச்சிரமம், திருநாட்டியத்தான்குடி, திருக்கலய நல்லூர் முதலிய தலப்பதிகங்களும்.

நட்டராகத்தில்

திருநாவலூர், திருவேள்விக்குடி, திருத்நின்றியூர், திருக்கோளிலி திருக்கச்சி மேற்றனி, திருப்பளமண்ணிப்படிக்கரை, திருக்காளிப்பாலை, திருமளபாடி, திருமுதுகுன்றம், திருக்காளாத்தி, திருக்கற்குடி, திருக்கடவூர்வீரட்டாணம், திருக்கறுக்காவூர், வெள்ளடை, திருப்பற்றியலூர் பதிகங்களும்.

கொல்லிப்பண்ணில்

திருஇடையாறு, திருக்கோட்டிகுளகர், பொதுப்பதிகம், திருப்புகலூர், திருப்புறம்பயம், திருப்பைஞ்ஞீலி, திருவாரூர் முதலிய தலப்பதிகங்களும்.

கொல்லி கௌவாணப் பண்ணில்

திருவதிகைதிருவீரட்டாணம், திருத்தொண்டர்தொகை , திருக்காணாட்டு, முள்ளுர், திருக்கச்சூராளக்கோயில், திருவெண்ஞ்சாமக்கூடல், திருமுதுக்குன்றம், திருவாமத்தூர், திருநாகைக்காரோணம், பொதுப்பதிகம் என்பனவும்.

பழம்பஞ்சுரப் பண்ணில்

திருப்பாண்டிக்கொடுமுடி, திருமுருகன்பூண்டி, திருப்புணவாயில், திருவாரூர், திருவாலங்காடு, திருக்கடவூர் மயாணம், பதிகம் என்பவும்.

தக்கேசிப்பண்ணில்

திருவெற்றியூர், திருப்புண்கூர், திருதீருர், திருவாழ்கொழிபுத்தூர், திருக்கழுமலம், திருவாரூர், திருவிடைமருதூர், திருகச்சிஏகாம்பம், திருக்கோலக்கா, பொதுப்பதிகம், திருச்சினைநகர், திருநின்றியூர், திருவாவடுதுறை, திருவலிவலம், திருநள்ளாறு, வடதிருமுல்லை வாயில், திருவாவடுதுறை முதலிய திருப்பதிகங்களும்,

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

காந்தாரப்பண்ணில்

திருமறக்காடு, திருவலம்புரம், திருவாரூர், திருத்திருத்தியும் திருவேள்விக்குடியும், திருப்வானைக்கா தலப்பதிகங்களும்,

பியந்தைக்காந்தாரப்பண்ணில் - திருவாஞ்சியப்பதிகமும்
காந்தாரப்பஞ்சப்பண்ணில் - திருவையாற்றுப்பதிகம்
நட்டவாடைப்பண்ணில் - திருக்கோதாரம், திருப்பருப்பதம், திருக்கேதீச்சரம், திருக்களுக்குன்றம், திருச்சுழியல் முதலிய தலப்பண்களும்.
புறநீர்மைப்பண்ணில் - திருவாரூர், திருக்கானப்பேர், திருக்கூடலையாற்றூர் புதிகங்களும்.
சீகாமரப்பண்ணில் - திருவன்பார்த்தான் பனங்காட்டூர், திருப்பனையூர், திருவீழிமிழலை, திருவெண்பாக்கத் தலப்பதிகங்களும்
குறிஞ்சிப்பண்ணில் - கோயில், திருவொற்றியூர், திருப்புகழியூரவினாசி, திருநறையூர்சித்தீச்சரம், முதலிய தலப்பதிகங்களும்
கௌசிகப்பண்ணில் - திருச்சோற்றுத்துறைப்பதிகம்
பஞ்சமப்பண்ணில் - திருவாரூர் பரவையுன்மண்டலி, திருநனிபள்ளி, திருநள்நிலத்துப் பெருங்கோயில், திருநாகேச்சரம், திருநொடித்தாண்மலை பதிகங்களும்
செந்துருத்திப்பண்ணில் - திருவாரூர் தலப்பதிகங்களும் பாடப்ப்டுள்ளன.

தேவாமுதலிகளில் சுந்தரர் மாத்திரமே *செந்துருத்திப் பண்ணைக்* கையாண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுந்தரர் பாடிய பண்களும் அதற்கு நிகரான தற்கால ராகங்களும்.

சுந்தரர் பாடிய 17 பண்களின் இயல்புடனும் அதன் சாயிலையும் அவை பாடப்பட்டுவரும் இசை வடிவத்தையும் கொண்டு தற்காலத்தில் பயன்படுத்தப்படும் இராகங்களுக்கு எவை எவை ஒப்பானவை என்பன பேராசிரியர் சாம்பமூர்த்தி முதலானோரால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தளம்	- மாயமளவகௌளை
தக்கராகம்	- காம்போதி
நட்டராகம்	- பந்துவராளி
கொல்லி	- நவரோஜ்
கொல்லிக்கௌவானம	- நவரோஜ்
பழம்பஞ்சுரம்	- சங்கராபரணம்
குறிஞ்சி	- கரிகாம்போதி
கௌசிகம்	- பைரவி
பஞ்சமம்	- ஆஹிரி
செந்துருத்தி	- மத்தியமாவதி
தக்கேசி	- காம்போதி
காந்தாரம்	- நவரோஜ்
பியந்தைக்காந்தாரம்	- நவரோஜ்
காந்தாரபஞ்சமம்	- கேதாரகௌளை
நட்டபாடை	- கம்பீரநாட்டை
புறநீர்மை	- பூபாளம்
சீலாமர	- நாதநாமக்கிரியை

முதலியனவாகும். இவற்றில் பகற்பன்களாக பஞ்சமம், இத்தாளம், பௌசீகம், காந்தாரபஞ்சமம், தக்கேசி, பழம்பஞ்சுரம், நட்டபாடை என்பனவும் இராகப்பணிகளாக சீகாமரம், கொல்லி

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

முதலியனவும் பொதுப்பண்களில் கொல்லி, செந்துருத்தி முதலியனவும் இடம்பெறுகின்றன. எனவே, சுந்தருடைய தோவரப்பதிகங்கள் சுந்தரர் வரலாறு, பதிகங்களில் பண்கள், தலங்கள், தற்கால இணை இராகங்கள் எனும் வகைகளில் இவ் ஆய்வு இடம்பெற்றுள்ளது.

அடிக்குறிப்புக்கள்

1. இசை வரலாறு தமிழ்மரபு - முதுகலைமானி முதலாம் ஆண்டு, சென்னை பல்கலைக்கழும் பக் 126.
2. இசை வரலாறு தமிழ்மரபு - முதுகலைமானி முதலாம் ஆண்டு, சென்னை பல்கலைக்கழும் பக் 130.
3. சைவநெறி தரம் 10 - இலங்கைக் கல்வி வெளியீட்டுத்திணைக்களம், 1980 பக்கம் 49.
4. சைவநெறி தரம் 10 - இலங்கைக் கல்வி வெளியீட்டுத்திணைக்களம், 1980 பக்கம் 50.
5. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப்பதிகங்கள்.
6. திருநெல்துணி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1929 பக்கம் 60.
7. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப்பதிகங்கள்
8. திருநெல்துணி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1929 பக்கம் 218.
9. சைவநெறி தரம் 10 பக்கம் 56.
10. சைவநெறி தரம் 10 பக்கம் 231.
11. சைவநெறி தரம் 10 பக்கம் 131.
12. சைவநெறி தரம் 10 பக்கம் 116.
13. சைவநெறி தரம் 10 பக்கம் 225.
14. சைவநெறி தரம் 10 பக்கம் 12.
15. சைவநெறி தரம் 10 பக்கம் 123.
16. சைவநெறி தரம் 10 பக்கம் 19.
17. சைவநெறி தரம் 10 பக்கம் 213.
18. சைவநெறி தரம் 10 பக்கம் 42.
19. சைவநெறி தரம் 10 பக்கம் 111.
20. சைவநெறி தரம் 10 பக்கம் 18.
21. கர்நாடகசங்கீத புத்தகம் மூன்றாம் பாகம் - P. சாம்பமூர்த்தி பக்கம் 223.
22. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப்பதிகங்கள்
23. திருநெல்துணி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1929 பக்கம் 210.

உசாத்துணைகள்

1. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரப்பதிகங்கள் - திருநெல்வேலி தென்னிந்திய நூற்பதிக கழக வெளியீடு – 1929
2. சைவநெறி தரம் 10 - இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்கள வெளியீடு – 1980.
3. கர்நாடக சங்கீத புத்தகம் மூன்றாம் பாகம் - 16ம் பதிப்பு – P.சாம்பமூர்த்தி 2001.
4. இசைவரலாறு – தமிழ்மரபு M.Music – சென்னைப்பல்கலைக்கழகம்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

சுந்தரமூர்த்திநாயனார் தேவாரங்களில் இசைக்கருவிகள்
Musical Instruments in Sundaramoorthi Nayanar's *Devaram*

செல்வி. பரமேஸ்வரி கணேசகம்பர், சிரேஷ்ட விரிவுரையாளர்,
இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

Abstract

The paper tries to give ample details of the musical instruments used in the songs of Sundara moorthy Nayanar. The present paper tries to put forth the types of musical instruments in the time of use at the time"Devaram" songs were written. It also deciphers the musical instruments of the Saive tradition of Hindu culture. Musical instruments like Veena, Kokkarai, Kodukotti, Thunthubi, Kudamuzha, Yal are spoken in the "Devaram" which are used in dedication of music to the Lord Shiva. Hence, the paper will help us to know the musical tools in the "Devaram" times.

Keywords: Sundaramoorthi Nayanar, *Devaram*, Musical Instruments, Veena, Yal

முன்னுரை

திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூர் என்னும் தலத்தில் ஆதி சைவ அந்தணரான சடையனார் இசைஞானியார் தம்பதியினருக்கு மகனாக சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்தார். இவருக்கு இயற்பெயர் நம்பியாரூரான். திருமுனைப்பாடி நாட்டின் சிற்றரசன் நரசிங்கமுனைவர் என்பவர் நம்பியாரூரரை தனது வளர்ப்பு மகனாக வளர்த்தார். இவரது திருமண நாளன்று இறைவர் இவரைத் தடுத்தாட் கொண்டார். வயோதிப வடிவம் பூண்டு வந்தவர் சிவபெருமானே என அறியாது இறைவனை பித்தன் என உரைத்தார் நம்பியாரூரர். இதனால் ஈசன் இவரை "பித்தன் என்றே பாடுக" என உரைத்தார். அதன்படியே பித்தாபிறைசூடி என தொடங்கி தனது முதலாவது திருப்பதிகத்தை பாடினார். சுந்தரமூர்த்தி நாயனார் தாம் பாடிய தேவாரங்களில் இசைக்கருவிகளை எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதனை இவ் ஆய்வுக் கட்டுரையில் முன்வைக்கவுள்ளேன்.

சுந்தரமூர்த்தி நாயனார்

அறுபத்து மூன்று சைவசமயாச்சாரியருள் மூன்றாமவர். சமயகுரவர்கள் நால்வருள் மூன்றாமவர்- இறுதியுமானவர் இவரே. இவர் கி.பி 694 – கி.பி 912 ஆண்டுவரை 18 ஆண்டுகள் இறைபணியும் இசைத்தொண்டும் புரிந்தார். பக்திச்சுவை சொட்ட தேவார திருப்பதிகங்கள் பாடி சைவசமய வளர்ச்சிக்கு பங்காற்றியவர். இவர் பாடியபாடல்கள் 38000 இவை 114 தலங்களில் பாடப்பட்டவையாகும். ஆனால் இன்று நமக்குக் கிடைத்தவை 96 தலங்களில் பாடப்பட்ட 1026 பாடல்கள் மட்டுமே. இவை சைவத்திருமுறைகள் பன்னிரெண்டினுள் ஏழாம் திருமுறைகளில் இடம்பெறுகின்றன. சுந்தரார் பாடிய தேவாரப் பாடல்கள் "திருப்பாட்டு" என அழைக்கப்படுகின்றன.

பன்னிரு திருமுறைகளில் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய தேவாரங்கள் ஏழாம் திருமுறையில் அடங்கியுள்ளன. இரண்டாவது பதிகத்தில் ஆறாவது பாடலில், "படம்பக்கம் கொட்டும் திருவொற்றியூர்" இங்கு படம்பிக்கும் என்னும் பறையைக் கொட்டும் திருவொற்றியூர் ஈசன் பற்றி கூறுகிறார். நான்காவது பதிகத்தில் நான்காவது பாடலில்,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

"வண்திரைகள்வரிகொற்றிமுழங்கி

வலம்புரி கொண்டு அழைக்கும் கடல்"

வலிய அலைகள் வலம்புரிச் சங்குகளைப் பற்றி ஈத்து எறிந்து முழங்கி மோதுகின்ற கடல் எனவும் வலம்புரிச் சங்கின் இனிய ஓசையில் யாவரையும் தன்னால் ஈர்க்கின்ற கடல் எனவும் கூறுகின்றார். நான்காவது பதிகத்தில் பத்தாவது பாடலில்,

"மத்தமுழவும் குழலும் இயம்பும் வளர் நாவலர் கோன்"

இதில் மத்தமுழவும் குழலும் ஒலிக்கும் திருநாவலூரில் வாழும் சுந்தரர் என குறிப்பிடுகின்றார் எட்டாவது பதிகத்தில் முதலாவது பாடலில்,

பறை இழிந்து அணைய போர்வை பற்றியான்

இறைகழல் இறைஞ்சும் ஆரூர் அப்பனே

பறையைக் கிழித்தலைப் போன்ற தோற் போர்வையை உடைய நான் ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்த திருவடிகளை வளங்குவதற்கு ஏற்ற இடமான திருவாரூரில் விளங்கும் ஈசனே எனப் பாடுகிறார். பதினொராவது பதிகத்தில் ஐந்தாம் பாடலில்,

துடியிடை நன் மடவாளொடு

உடுக்கை போன்ற இடையை உடைய உமாதேவியாரோடு ஈசன்

எனவும், பன்னிரண்டாம் பதிகத்தில் ஐந்தாம் பாடலில்,

குழலை வென்ற மொழி மடவாளை ஓர் ஊறனாம்

குழலிசையை வென்ற மொழிகளால் பேசுகின்ற உமாதேவியாரை ஒருபாகமாக கொண்ட ஈசன் எனவும் கூறுகின்றார்.

மேலும் பன்னிரண்டாவது பதிகத்தில் பதினொராவது பாடலில்,

"வன் தொண்டர் சொல் பாணியால் இவை ஏத்துவார்சேர் பரலோகமே"

வன்தொண்டன் யான் பாடிய பாடல்களைப் பாணி என்னும் தாளத்தோடு பாடித் துதிப்பர். அடையும் இடம் சிவலோகமே என்று கூறுகின்றார். மேலும், "கொடுகொட்டி காலர் கழலரோ வீணைதானவர் கருவியோ" (பதிகம்33பாடல் 05). ஈசன் கொடுகொட்டி இசைக்க ஒரு காலில் கழல் உடையவரோ? வீணைதான் அவர் இசைக்கருவியோ? எனவும்

"கைகள் எட்டினோடும் இலயம் படஆடுவார்" (பதிகம் 33 பாடல் 08)

என்பதில் ஈசன் எட்டுக் கைவிரல்களினாலும் குறிப்புணர்த்தி "இலயம்" எனும் வாத்தியத் தாளத்தோடு ஆடவல்லர் என கூறுகிறார்.

"தக்கை தண்ணுமை தாளம் வீணை தருணிச் சங்கினைசல்லரி

கொக்கரை குழமுழா விரோடிசை கூடிப்பாடிநின்றாடுவீர்" (பதிகம் 36 பாடல் 09)

என்பதில் இறைவன் தக்கை, தண்ணுமை தாளம், வீணைத குணிச்சம் - கிளை சல்லரி–கொக்கரை குழமுழா என்பவற்றின் இசையோடு கூடிப்பாடி நின்றாடுவார்.

"மண்ணாள் முழவும் குழலும் இயம்ப

மடவார்நடமாடும் மணியரங்கில்" (பதிகம் 42 பாடல் 04)

இதில் மண்ணார் முழவும் குழலும் ஒலிக்க மாந்தர்கள் நடனமாடும் அழகை வர்ணிக்கிறார். "பறையர் முழவம் பர்டடோடுபயிலும் தொண்டர்" (பதிகம் 53, பாடல் 04) இதில் அடியவர்கள் பறைமுழவு ஆகிய வாத்தியங்களில் பாட்டுக்களோடு சேர்ந்து இசைக்க திருக்கடவூர் மயானத்தில் வீற்றிருக்கின்ற ஈசன் எனப் பாடுகின்றார்.

"பொறிவண்டாழ் செய்யும் யென்மலர்க் கொன்றை" (பதிகம் 59 பாடல் 05)

ஈசன் யாழின் இசைகொண்டு ஆரவாரிக்கும் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரை சூடிய சடைமுடியினை உடையவர் என்று சுந்தரர் கூறுகின்றார்.

"பைக்கழலிற் சிலம்புஆர்த்தசோதியை" (பதிகம் 62 பாடல் 05)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

இறைவன் கழலை அணிவதற்குரிய திருவடியின் ஒலிக்கும் சிலம்பை அணிந்துள்ளார் எனக் கூறுகிறார்.

"யாழைப் பழித்தன்ன மொழி மங்கை ஒருபங்கன்" (பதிகம் 71 பாடல் 01)

இறைவன் யாழின் இசையை பழிக்கும் மொழிகளைப் பேசுகின்ற உமாதேவியாரை ஒரு பாகமாகக் கொண்டவர் என்கிறார்.

"வலம்புரியோடு சஞ்சலம் கொண்ர்ந்து ஏற்றும் திருமறைக்காடே" (பதிகம் 71 பாடல் 08) "வலம்புரிசஞ்சலம் மணம்புணர்ந்து" என்பதில் திருவலம்புரம் தலம் பற்றி கூறுகையில் வலம்புரிச் சங்குகளும் சஞ்சலச் சங்குகளும் தம் பெண் சங்குகளோடு மணம் செய்யும் திருவலம்புரம் என்று கூறுகிறார். திருக்கேதாரம் கூறுகையில்,

"பழவேய் முழவதிர"என்கிறார்.

பழமையான வேய்ங்குழலும் முழவும் ஒலிக்கின்ற கேதாரம் எனக் கூறுகிறார்.

திருக்கேதீச்சரம் பற்றி கூறுகையில், "சிறையார் பொழில் வண்டியாழ் செய்யும் கேதீச்சரத்தானை" சிவபெருமான் வண்டுகள் யாழிசையை உண்டாக்குகின்ற சோலைகளுடைய கேதீச்சரத்தில் உறைபவன் என்கிறார். அதுபோல்திருநாரையூரில் உள்ளஈசன் "பாணர் குழலும் முழவும் வழவில்" பண்ணிறைந்த குழல்களின் ஓசையையும் முழவின் ஒலியும் நிறைந்த திருநாறையூர் எனவர்ணிக்கிறார்.

முடிவுரை

சிவபெருமான் எழுந்தருளும் தலத்தைப் பற்றி கூறுகையில் சுந்தரர் வீணை, கொக்கரை, கொடுகொட்டி துந்துபி குடமுழா யாழ் முழவு ஆகிய இசைக்கருவிகளையும் சிவபெருமான் திருநடனம் பற்றி வர்ணிக்கையில் பறைகொட்டு தக்கை தண்ணுமை சல்லரி கொக்கரை முழவு குடமுழா ஆகிய இசைக்கருவிகளையும் உமாதேவியாரைப் பற்றிக் குறிப்பிகையில் குழல் யாழ் துடி என்பவற்றை உவமிக்கிறார். கொடுகொட்டி, வீணை தமருகம் சங்கு என்பவை சிவனின் கைளிலும் கழல் ஒரு காலும் சிலம்பு ஒரு காலிலும் காணபப்படுகிறது. இவ்வாறு சுந்தரமூர்த்தியானார் தேவாங்களில் இசைக்கருவிகள் பல்வேறு கோண்ஙகளில் பயன்படுத்தி எற்பட்டுள்தை காணக்கூடியதாய் உள்ளது.

உசாத்துணை நூல்கள்

1. அங்கயற்கண்ணி. இ. *சுந்தரர் தேவாரப்பாடல்களில் இசை*, தஞ்சாவூர், 2000.
2. சுந்தரம்பிள்ளை. சே. *இந்து நாகரீகத்தில் கலை*, சென்னை, 2001.
3. அகளங்கன் (இலங்கை) *பன்னிரு திருமுறை அறிமுகம்*, வவுனியா, 1994.
4. சொர்ணலிங்கம். சே. *ஏழிசையாய் இசைப்பயனாய்*, கொழும்பு, 2013.
5. ஞானாம்பிகை.கு. *நூனகானம்*, தஞ்சாவூர், 2003.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தமிழர் தம் மெய்யியலும் வாழ்வியலும்
Meyiyal and Lifestyle of Tamils

முனைவர் சு. பாபு, தலைமை பேராசிரியர்,
கல்வியியல் துறை, அண்ணாமலை பல்கலைகழகம்

முனைவர் சு. கலைவாணி, உதவி பேராசிரியர்,
கல்வியியல் துறை, அண்ணாமலை பல்கலைகழகம்.

Abstract

The paper tries to elicit the life oriented ethics and the life style of the Tamil people. The culture of the people have been evolved after many pragmatic changes. The people also adopt themselves to the existing set up to uplift them. It seems they lived optimistic in all phases. The basics of life are decoded in this paper. Hence, the paper will lend a hand to know the musical life basics followed by the Tamil People.

Keywords: Meyiyal, Lifestyle, Tamils

கருத்துரை

- முன்னுரை
- தமிழர் மெய்யியல்
- மெய்யியல் விளக்கம்
- மெய்யியல் வரையறு
- மெய்யியல் தத்துவம்
- மெய்யியல் கருத்துகள்
- மெய்யியல் முக்கியத்துவம்
- தமிழர் வாழ்வியல்
- மெய்யியல் அறிவு
- முடிவுரை

முன்னுரை

தமிழர் மெய்யியலை அறநூற்களில் இலக்கியங்களில் மட்டுமல்லாமல் வாழ்வியலையும் வரலாற்றையும் நோக்கியே புரிந்து கொள்ள முடியும். யாரும் எக்காலத்துக்கும் ஒரே மெய்யியலை எடுத்தாள்வதில்லை சூழல் மாறும் பொழுதும் அறிவியல் வளர்ச்சிக்கேற்ற மாதிரியும் மெய்யியல் மாறும் என்பதை பற்றியும் தமிழரின் வாழ்வியல் முறைகள் இக்காலத்தே தமிழ் மக்களிடையே பரவியுள்ள பழக்க வழக்கங்கள் பற்றியும் இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

தமிழர் மெய்யியல்

தமிழ்ச் சூழலில் மரபில் தமிழ் மொழியில் முதன்னையாக உருவான மெய்யியல் தமிழர் மெய்யியல் அல்லது தமிழ் மெய்யியல் ஆகும். இந்த மெய்யியல் தமிழர் எத்தகைய உலகப் பார்வையுடன் அல்லது அணுகுமுறையுடன் உலகை எதிர்நோக்கினார்கள் விளங்கிக் கொண்டார்கள் என்று அறிய உதவுகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தமிழ் மொழியில் தொல்காப்பியர் உலகின் தோற்றத்தை ஐம்பூதங்களின் உறவு என்று குறிப்பிடுகிறார். திணையியலின் மையமாக விளங்கும் பொருளுக்கும் கருத்துக்கும் இடையேயான உறவுநிலையிணைத் தொல்காப்பியம் பல இடங்களிலும் சுட்டிக்காட்டி உள்ளது.

நிலமும் பொழுதும் உடைய முதற்பொருள் கருப்பொருள்களுடன் உறவு பூண்டு உரிப்பொருளாக மாற்றம் பொறுகிறது. அகத்திற்கும் புறத்திற்கும் உள்ள உறவு வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது எனவும் உயிருக்கும் மெய்க்குமான உறவு இயக்கத்தைத் தீர்மானிக்கிறது எனவும் தொல்காப்பியம் வரையறுத்துள்ளது.

"மெய்யோடு இயையினும்
உயிரியல் திரியா"

என்னும் எழுத்ததிகார நூற்பா (10)-ல் கூறப்படுகிறது.

மெய்யுடன் உயிர் உறவு கொள்வதை நுட்பமாகத் தொல்காப்பியம் வெளிப்படுத்துகிறது.

"மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே"

எழுத்ததிகார நூற்பா 18-களில் மெய்யின் மூலமாக உயிர் தோன்றுவதை விளக்கிகிறது. இவ்வாறு உயிருக்கும் மெய்யுக்குமான திணையியல் சார்ந்த மெய்யியல் உறவைத் தொல்காப்பியம் விளக்கியுரைக்கின்றது.

மெய்யியல் விளக்கம்

மெய்யியல் = மெய் + இயல்

தத்துவம் என்றால் உண்மை உள்ளதை உள்ளவாறே அறிவதைப் பற்றிய கொள்கை, இயல் என்று பொருள் மெய்க்கோட்பாட்டு இயல் (அ) தத்துவம் என்னும் அறிவுத்துறையானது எது உண்மை, எது சரி, எது அறம், எது கலை, எது அறம், கடவுள் என்று ஏதும் உண்டோ எது அழகு என்பது போன்ற அடிப்படையான கேள்விகளைப் பற்றி விளக்குவது ஆகும்.

மெய்யியல் வரையறு

மெய்யியல் இயற்கை, சமுதாயம், சிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சியின் மீது ஆட்சி செய்யும் மிகப் பொதுவான விதிகளைக் குறித்த அறிவியலே மெய்யியல் எனப்படும். மெய்யியலானது இருப்பு, அறிவு, விழுமியம், காரணம், மனம், மொழி தொடர்பான பொதுவானதும், அடிப்படையானதுமான பிரச்சனைகள் பற்றிய படிப்பு என வரைலயறுக்கப்படுகிறது.

மெய்யியல் தத்துவம்

நான் ஏன் பிறந்தேன்? என்னைப்
படைத்தது யார்? இப்படிப்
படைப்பதற்கான காரணம் என்ன?
இறைவன் உண்டா? இல்லையா?
இறைவன் தான் என்னைப்
படைத்தான் என்றால் இத்தனைத்
துன்பங்களை ஏன்
படைக்க வேண்டும்?

இவ்வாறுக வாழ்க்கைக்கு அடிப்படையான கேள்விகளை உள்ளடக்கியது மெய்யியல். தத்துவம் என்ற சொல் மெய்யியல் என்பதற்கு நிகரான சொல் இல்லை, தத்துவம் என்பது அது நீ, நீயே பிரம்மம் என்று பொருள் தரும் வடசொல் மெய்யியல் என்பது இதிலிருந்து வேறுபட்டது. வாழ்வின் அடிப்படை என்ன? மனித துயரங்களுக்கு எது காரணம்? என்று ஆராய்வது வள்ளுவர் கூறுவது போல

"எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

மெய்ப்பொருள் காண்பது தறிவு" (423)

என்பது மெய்யியல் ஆகும்.

மெய்யியல் கருத்துகள்

தமிழ் மெய்யியல் கருத்துகள் பழந்தமிழிலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன இவை பெரும்பாலும் உலகாய்ந்த சிந்தனைகளைக் கொண்டுள்ளது. தொல்காப்பியரிடம் இடம் பெறும் தமிழ் மெய்யியலை வாழ்வியல் இன்பம் என்பது அடிப்படை நோக்கம் ஆகும். முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும் இவற்றின் அடிப்படையில் தோன்றும் கருப்பொருளில் ஒன்று தெய்வம். தெய்வம் என்பது முழுமுதற் பொருளன்று மனிதன் படைத்துக் கொண்டே கருப்பொருளில் ஒன்று தெய்வம் தெய்வம் தான் தமக்கான இன்ப துன்பங்களை வகுத்துது ஆகும். மெய்யியல் என்ற சொற்பதத்திற்கு சரியான துல்லியமான வரைவிலக்கணத்தை வழங்குவது ஓர் இயலாத விடயமாகவே காணப்படுகின்றது. ஏனெனில் மெய்யியலானது அனைத்து அறிவியல் துறைகளுக்குத் ஓர் அடிப்படை ஊற்றாக காணப்படுவதுடன் மனித வாழ்ன்கையுடன் பின்னிப்பிணைந்ததாகவும் காணப்படுகின்றது.

உண்மையில் மெய்யியலின் தோற்றமானது கிரேக்கம் என்று கூறப்பட்டு வந்த பொழுதிலும் மனிதனிடத்தில் உண்மையிணை அறிய வேண்டும் என்ற ஆர்வம் எப்போது தோன்றியதோ அன்றில் இருந்து மெய்யியல் தோற்றம் பெற்றதாகக் கொள்ளலாம். அந்த வகையிலேயே மெய்யியல் என்ற சொற்பதமானது ஞானத்தின் விருப்பு அல்லது அறிவின் மீதான தீவிரப்பற்று எனக் கூறப்படுகிறது.

மெய்யியலின் முக்கியத்துவம்

நாம் மனித வாழ்வில் மெய்யியலின் முக்கியத்துவத்தை நோக்கும் பொழுது மனிதனின் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் செல்வாக்கினை செலுத்தி வருகின்றது. உதாரணமாக நமது வாழ்வில் நாம் பயன்படுத்தும் அர்தத்துடன் கூடியதான மொழியானது மெய்யியலில் இருந்தே தோன்றுகிறது. சமூகத்தில் காணப்படும் ஒவ்வொரு நிறுவனங்களும் மெய்யியல் சிந்தணைகளை அடிப்படையாகக் கொண்டே கட்டியமைக்கப்படுகின்றது. மெய்யியலானது உண்மையினை பொய்யிலிருந்தும் மூட நம்பிக்கையிலிருந்தும் முற்கற்பிதங்கள் வியாக்கியானங்கள் போன்ற மாயை இருளை அகற்றும் ஓர் ஆயுதமாகவும் விளங்குகின்றது. அதே வேளை அறிவினையும் தெளிவினையும் பெற்றுக் கொள்வதற்கு முக்கிய கருவியாகவும் காண்பபடுகின்றது.

பொதுவாகவே மெய்யியல் அறிவு இல்லாதவனை முட்டாளுக்கு சமம் என்றே கூறலாம். யார் என்ன கூறினாலும் அதுதான் உண்மை என எந்தவித சந்தேகத்திற்கும் இடமின்றி ஏற்றுக் கொள்வனாயின் அவன் முட்டாளாகவே கருதப்படுவான். மெய்யியல் அறிவினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் ஒருவன் ஒரு விடயம் பற்றி திறனாய்வின் அடிப்படையில் பல வினாக்களை பல கோணங்களில் அலசி ஆராய்வதன் ஊடாக உண்மையான அறிவைப் பெற்றுக் கொள்வதுடன் தனது புத்திசாலித்தனத்தை நிலைநாட்டுபவனாக காணப்படுகின்றான்.

தமிழர் வாழ்வியல்

தமிழர் வாழ்வியல் முறைகள் இக்காலத்தே தமிழ் மக்களிடையே பரவியுள்ள பழக்க வழக்கங்கள், கடல் கொண்ட தென்னாடாம் குமரிக் கண்டத்தில் வாழ்ந்திருந்த தொல் பழந்தமிழர்களின் வாழ்வியலுக்கு முற்றிலும் மாறுபட்டவையாகவே உள்ளன. தமிழர் வாழ்க்கையில் ஆரியப்பண்பாடு பெருமளவும் ஆங்கிலப் பண்பாடு ஓரளவும் பின்னிப் பிணைந்துவிட்டனர். ஆகவே தமிழர் பண்பாட்டைத் தனிமைப்படுத்திக் காண்பது ஒவ்வாத ஒன்றாகிவிட்டது.

இந்தியத் தேசியத் தலைவர்கள் எனப்படும் தமிழா, குமரி முதல் பனிமலை வரை பரவியுள்ள நாகரிகம் "பாரத நாகரிகம்" என்றும் நாம் யாவரும் இந்தியர் என்றும் ஒருமைப்பாடு வரைக்கின்றனர். பண்டைத் தமிழர் வாழ்வியலை முழுமையாக அறிவதற்கு கருவிகள் எவையும் இன்றில்லை, சிந்து வெளியில் உள்ள அரப்பா, மொகஞ்சதாரோ, சங்குதாரோ

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

ஆகிய இடங்களில் நடத்திய அகழ்வாய்வு ஐயாயிரம் ஆணடுகளுக்கு முன்னர் சிந்து ஆற்றச் சமவெளியில் வாழ்ந்திருந்த திராவிடர்களின் (தமிழர்களின்) நாகரிகத்தைப் புலப்படுத்துவது ஆகும்.

உதாரணம்

சிந்து வெளி நாகரிகம் என்னும் நூல் அதற்குச் சான்றாகும்.

மெய்யியல் அறிவு

மெய்யியல் அறிவு இல்லாதவன் வாழ்க்கையானது உயிரோட்டம் அற்ற சலிப்புத் தன்மையுடையதாகவும் மொத்தத்தில் அர்த்தம் இல்லாத வாழ்கையாகவுமே காணப்படும். மெய்யியல் அறிவானது மற்றவர்களின் சிந்தணையினை விமர்சன ரீதியில் மட்டுமன்றி மற்றவர் கூற்றினை நம்புவதற்கு பதிலாக எவ்வாறு சிந்திக்க வேண்டும் என்ற கற்றல் முறையினையும் நமக்கு காட்டுகின்றது.

முடிவுரை

மெய்யியலை கற்பதன் மூலம் மனித இருப்பின் முக்கியத்துவத்தினை உணர்வதுடன் மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்ற யதார்த்தத்தையும் காட்டி ஒரு தனி மனிதனுக்குத் சமூகத்திற்கும் இடையில் ஓர் உறவுப்பாலமாக தமிழர் வாழ்வியலும் காணப்படுகின்றனர். தமிழர் தம் மெய்யியலும் வாழ்வியலும் என்ற தலைப்பில் சில நுனுக்கமான செய்திகளைப பற்றி இக்கட்டுரையின் மூலம் அறியப்படுகிறது.

நூற் பட்டியல்

1. இளம்பூரணர் (உ.ஆ), *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. கழக வெளியீடு, சென்னை, 1970.
2. நச்சினார்க்கினியம். *தொல்காப்பியம் எழுத்ததிகாரம்*. தமிழ்மண் பதிப்பகம், சென்னை. 2003.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

ஔவையார் பாடல்களில் வாழ்வியல் சிந்தனைகள்
Life Acquainted Ethics in the Verses of Avvaiyar

முனைவர் சு. பாஸ்கர், உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி - 5.

Abstract

The research paper tries to bring down the ethics spoken in the songs of Avvaiyar. Abolishing partiality, humanity, friendship with the good, the power of the tender words, earning and expense, goriness of poverty, instability of wealth, glory of the learned and unity in diversity are the themes widely seen in the verses of Avvaiyar. "Moothurai" and "Nalvali" are the works chosen to bring down the themes aforesaid. Those verses are the cascade of philosophical facts and will be useful for ever. Hence, the paper will aid to know the life acquainted ethics from the works of Avvaiyar.

Keywords: Life, Ethics, Verses, Avvaiyar *Moothurai, Nalvali*

அறிமுகம்

மனிதர்களாகப் பிறந்த நாம் நல்ல எண்ணங்களை மனதில் சுமந்து, சிறப்போடு வாழவேண்டும். அன்பு உள்ளத்தை மனதில் போற்றி, அறிவை வளர்த்து, பண்பைக் கடந்து பிறர்க்கு உதவி செய்து, ஒற்றுமையோடு வாழவேண்டும். மனிதர்களாகப் பிறந்தும் மனிதப்பண்போடு வாழாத மனிதர்களுக்காகத் தோன்றியதே அற இலக்கியமாகும். ஔவையாரும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை போன்ற அற இலக்கியங்களைப் பாடி மனிதர்களுக்கு வாழ்வியல் சிந்தனைகளை விதைத்திருக்கின்றார்.

வேற்றுமை களைதல்

மனிதர்களாகப் பிறந்த அனைவரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் என உணர வேண்டும். அதோ உயிரினங்கள் அனைத்துமே ஒன்றாகக் கருத வேண்டும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வள்ளுவர் சொன்ன வார்த்தைகளை நினைவில் கொள்ளவேண்டும். 'குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்ற பாரதியின் கூற்றையும் மறக்கக்முடியாது. மக்களிடம் வேற்றுமை எண்ணம் தோன்றக்கூடாது. அவ்வாறு தோன்றினாலும் மனதை விட்டு நீக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வரும் ஔவை,

> "சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
> நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
> இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
> பட்டாங்கில் உள்ள படி" (நல்வழி- பா. 2)

என்று கூறுகின்றார். இந்தப் பரந்த உலகில், நன்கு ஆராய்ந்து பார்த்தால், இல்லை என்று வந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் இருப்பதைக் கொடுப்பவர்கள் ஒரு வகையினர். பொருள் வைத்துக்கொண்டே இல்லையென்று தர மறுப்பவர் மறுவகையினர் என்று பிரிக்கிறார். கொடுப்பவர் உயர்ந்த பிரிவினர். கொடுக்காதவர் இழிகுலத்தவர் என்று கூறி, கொடுப்பதை உயர்த்திக் காட்டுகிறார். மக்களைத் தீண்டத்தகாதவர் என்று கருதி இந்நாட்டைக் குப்பை மேடாக உயர்த்தியதைக் கண்டு மனம்பொறாமல், பிறப்பால் பிரிக்கக்கூடாது, அவர்களின்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

குணத்தால் பிரித்துப் பார்ப்பதே சிறந்தது என்று கூறுகிறார். உயர்வும் இழிவும் மனதால் அமைகிறது என்பதை உணர முடிகிறது.

உயிர்த்தொழிலைக் காப்போம்

நாம் உயிர்வாழ உணவின் தேவை அவசியமாகிறது. உணவை வளர்க்க உழவுத்தொழிலை மறக்கக்கூடாது. நம் உயிர்த்தொழில் உழவுத்தொழிலாகும். முன்னோர்கள் அனைவரும் மூடர்கள் அல்லர். ஆறுகளை வெட்டி, அணைகளைக் கட்டி, எதிர்காலத்தை மனதில் வைத்துத் தொலைநோக்குச் சிந்தனையுடன் உழவுத்தொழிலை வளர்த்தார்கள். உழவுத்தொழிலை 'சுழன்றும் ஏர்பின்னது உலகம்' என்று வள்ளுவர் கூறுகின்றார். மன்னன் புகழ் உயரவேண்டுமானால் உழவுத்தொழில் வளரவேண்டும் என்கிறார் ஔவையார். உணவு, உடை, உறையுள் என்ற வகையில் உணவைத்தான் சான்றோர்கள் முதலில் வைத்தனர். அத்தகைய உணவை வழங்கும் உழவுத்தொழிலை ஔவையார்,

"ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"(நல்வழி- பா. 12)

என்று கூறுகிறார். நீரோட்டத்திலேயே வளமாக இருப்பது ஆற்றங்கரையில் உள்ள மரங்கள் அதுகூட காலத்தால் அழிந்துவிடும். அரசன் படைபலத்துடன் பாதுகாப்பாய் இருப்பவன். அவன் வாழ்க்கைக்கூட காலத்தா் அழிந்துவிடும். ஆனால், எப்பொழுதும் அழியாதது அழிக்க முடியாதது. உயிரோடு வாழ்வது உழவுத்தொழிலாகும். அதற்குப் பிறகுதான் மற்ற தொழில்கள் எல்லாம் என்றும் அதைச் சார்ந்துதான் பிற தொழில்களும் வளர்கின்றன என்றும் கூறுகின்றார். காலம் மாறினாலும் பசி ஒன்று உள்ளவரையில் வேளாண்மைத் தொழிலை யாராலும் மறக்கமுடியாது் அழிக்க முடியாது. உயிர்த்தொழிலாம் உழவுத்தொழிலைப் போற்றுவோம், அத்தொழிலைக் கண்ணெனக் காப்போம்.

நல்லவர்களின் நட்பு

மனித வாழ்க்கை என்றும் நிலையானதல்ல. வாழும்போது நல்ல நட்பை வளர்க்க வேண்டும். நல்லவர்களுடைய நட்பைவளர்த்தால் நல்எண்ணங்கள் மனதில்வளரும். நல்லவர்களைப் பார்ப்பது நல்ல செயலாகும். நல்லவர்களின் சொற்களைக் கேட்பதும் நல்ல செயலாகும். சிறப்புமிக்க பெரியோர்களின் பண்புகளைப் பேசிக்கொண்டிருப்பது நன்மை பயக்கும் செயலாகும். அவர்களோடு நட்பு கொண்டு இணங்கி இருப்பதும் நன்மை பயக்கும் செயலாகும். இக்கருத்தை,

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே- நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே" (மூதுரை- பா.8)

என்ற பாடலில் ஔவைாயர் காட்டுகின்றார். இயற்கையில் சில் விளைவுகள் தோன்றும். அதை மாற்றுவது கடினமனது. ஒருவன் தன்னைச் சுற்றியிருக்கும் சுற்றத்தையும் நட்பையும் தன்னால் தேர்வு செய்ய முடியும். இது செயற்கையில் ஏற்படும் விளைவுகளாகும். அந்த வகையில் நாமே முடிவு செய்யும் நட்பை, நல்ல வகையில் தேர்ந்தெடுத்து, அவர்களோடு கூடியிருந்தால் நல்விளைவுகளைக் கொடுக்கும் என்ற கருத்தை இப்பாடலில் அறியமுடிகிறது.

மென்சொற்களின் வெற்றி

இவ்வுலகத்தில் பிறந்து நல்லவர்களாக வாழ்வது மிகவும் கடினம். எல்லோரிடமும் பழகி, ஒற்றுமையாக வாழ வேண்டுமானால் பிறர் மனதைத்தொடும் அளவு பேச வேண்டும். பேசியபடி செயலில் காட்டவேண்டும். உண்மையான அன்பைக் காட்டினால் மட்டுமே வெற்றிபெற முடியும். உண்மை அன்பினால் உயர்ந்த நட்பைப் பெறமுடியும். இதை உணர்ந்த ஔவையார்,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

"வெட்டனவே மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது- நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்." (நல்வழி- பா.33)

என்ற பாடலில் உவமையோடு உணர்த்துகிறார். போர்க்களத்தில் சினத்துடன் முன்னேறி வரும் வலிய யானையின் மேல்பட்டு உள்ளே ஊடுருவி தைக்கும் ஈட்டியானது பஞ்சின் மேல் செலுத்த முயன்றால் அது முடியாது. பெரிய இரும்பு பாரைக்கோலுக்குப் பிளவு படாத கருங்கல் பாறையானது பச்சை மரத்தின் வேருக்குப் பிளவு பட்டுவிடும். ஆகவே இயற்கையில் பல இடங்களில் வன்மை பொருட்கள் மென்மை பொருட்களை வெற்றி கொள்ள முடியாது. இதில் நாம் அன்பாய் பேசும் மென்மையான குணத்தைக் கடைபிடித்தால் பஞ்சில் ஈட்டியைச் செலுத்த முடியாததைப்போல பிறர் நம்மிடம் வன்மையாக நடந்து கொள்ளமாட்டார்கள். கருங்கல் பாறையானது பசுமரத்தின் வேருக்கு வழிவிடுவதுபோல வன்மையானவர்கள் மனதில் மென்மையானவர்கள் இடம்பிடிப்பார்கள். மென்சொற்கள் எந்த நிலையிலும் வெற்றி பெறுவது உறுதியாகும். அதனால் மென்மைபோக்கை நாம் கடைபிடிக்க வேண்டும் என்பது புலனாகிறது.

வரவும் - செலவும்

வாழும் வாழ்க்கை மேலும் சிறப்பாக அமைய வேண்டுமானால் திட்டமிட்டு செயல்பட வேண்டும். திட்டமிடாத வாழ்க்கை அழிவை நோக்கிச் செல்லும். வருமானம் எவ்வளவு? நம் செலவு எவ்வளவு? என்று அறிந்து அதற்கேற்ப வரவு - செலவு அமைந்தால் நலம் பயக்கும். வருமானத்திற்குமீறி செலவுசெய்தால் துன்பம் உண்டாகும். இக்கருத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்த,

"ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு." (நல்வழி- பா.25)

என்ற பாடலில் கூறுகிறார். வரவுக்குமிஞ்சி செலவு செய்பவன் பல கேடுகளுக்கு ஆளாக வேண்டி வரும். அவனுடைய பெருமை கெட்டுப் போய்விடும். செலவு பணத்தை ஈடு செய்ய, திருடனாய் மாற வேண்டி வரும். அனைவருக்கும் திருடனாய் தென்படுவான். அவனிடம் தீய பண்புகளும் தொற்றிக் கொள்ளும். நல்லவர்களுக்கும் பொல்லாதவனாக காணப்படுவான். இவ்வளவு தீய எண்ணங்களை வளர்க்கும் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டும். வரவுக்குத் தக்க செலவை மேற்கொள்ளும் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

வறுமையின் கொடுமை

உலகத்தில் மேடு - பள்ளம் இருப்பதுபோல வாழ்க்கையில் வசதி படைத்தவர், வறுமையுற்றவர் என இருவகையினர் உண்டு. இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு கொடுத்து மகிழ வேண்டும். 'கொடிது கொடிது வறுமை கொடிது என்று சொன்னவர் ஔவையார். இந்த வறுமையை மையமாக வைத்து, தன் வயிற்றிடம் பேசுவது போல அமைந்த,

"ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளுக்கு ஏலென்றால் ஏலாய் - ஒருநாளும்
என்னோவு அறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது" (நல்வழி- பா. 11)

என்ற ஔவையார் பாடலைக் காணலாம். இதில் இன்று உணவு கிடைக்கவில்லை. அதனால் ஒருநாள் உணவு உட்கொள்ள வேண்டாம் என நினைத்தால் வயிறே நீ எனக்கு ஒத்துழைப்பு தர மறுக்கின்றாய். இன்று உணவு அதிகமாகக் கிடைக்கிறது. அதனால் இரு நாட்களுக்கு உணவைச் சேமித்து வைத்துக்கொள் என்றால் உன் இயலாமையால் அதையும் மறுக்கிறாய். வயிறே ஒருநாள் கூட என் துன்பத்தை அறியாமல் இருக்கிறாய். மிகுதியாகத் துன்பத்தைத்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தரும் என் வயிறே உன்னோடு சேர்ந்து வாழ்வது கடினமான செயலாகும் என்று கூறுகின்றார். வறுமையில் வாழ்பவர்கள் வயிற்றுடன் நடத்தும் போராட்டத்தை இப்பாடல் எடுத்துரைக்கிறது. வறுமையின் கொடுமையைக் காணமுடிகிறது.

செல்வம் நிலையாமை

வறுமையாளன் தன் வறுமையினால் புலம்பியதைப்போல செல்வம் படைத்தவன் எவ்வாறு வாழவேண்டும் என்று வறுமையானவனுக்குத் துணையான கருத்தை ஔவையார் கூறுகின்றார். ஒருவர் மிகவும் பாடுபட்டுப் பணத்தைச் சேகரித்து வைப்பவன் அவனும் அவனால் உதவி பெறுபவர்களும் பயனடைய வேண்டும். அல்லாமல் சேர்த்த பணத்தைக் களவு போய்விடுமோ என்ற அச்சத்தில் பூமியில் புதைத்துவைக்கும் கேடுகெட்ட மனிதர்களும் இவ்வுலகத்தில் இருக்கிறார்கள். உடலிலிருந்து உயிர் போனபிறகு அந்தச் செல்வத்தை முன்பின் அறியாதவர்களுக்குப் பயன்படுத்த நேரிடும் என்கிறார். இக்கருத்தை,

“பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டு
ஆவிதான் போயினபின்பு யாரோ அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்” (நல்வழி- பா. 22)

என்ற பாடலில் காணலாம். செல்வம் யாரிடமும் நிலையாக இருப்பதில்லை. இறப்புக்குப் பின்னால் அந்தச் செல்வத்தை அவர் தக்க வைத்துக்கொள்ள முடியாது. தன் காலத்திலேயே அந்தப் பணத்தை நல்லபடியாகப் பயன்படுத்த வேண்டும். இதுவே அறிவுடைமையாகும். பணம் இல்லாமல் துன்பப்படுபவர்களுக்கு அதைக் கொடுத்து உதவிசெய்து மற்றவர்களையும் காப்பாற்ற வேண்டும். இதுபோன்ற நல்ல வாழ்வியல் நெறிகளை ஔவையார் பாடலில் காணமுடிகிறது.

கற்றோரின் புகழ்

நாட்டை ஆளும் மன்னன் இறைவனுக்கு நிகரானவன். ஊயிரினங்களைப் படைத்துப் பாதுகாப்பவன் இறைவன். நாட்டு மக்களைப் பாதுகாப்பவன் மன்னன் ஆவான். இந்த மன்னனைவிட கற்றோன் சிறந்தவனாவான். இக்கருத்தை,

“மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லாமல் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு” (மூதுரை- பா. 26)

என்ற பாடலில் அரசனையும் கற்றறிந்தவரையும் ஆராய்ந்து பார்த்தாய் அரசனைவிட கற்றறிந்தவரே சிறப்புடையவர் ஆவார். சங்க காலத்தில்கூட ‘அவனை அவர் பாடியது’ என்று கூறுவார்கள் மன்னனை அவன் என்று சொல்லலாம். ஆனால், புலவரை அவர் என்றுதான் கூறுவார்கள். அரசனுக்குத் தன்னுடைய நாட்டில் மட்டும் சிறப்புக் கிடைக்கும். ஆனால், கற்றறிந்த அறிஞர்களுக்கு அவர்கள் போகும் நாடுகளிலெல்லாம் சிறப்பு உண்டாகும். இதுவே கல்வியின் சிறப்பாகும். கற்றவர்களின் புகழ் நாடுகளின் எல்லையைக் கடந்து செல்வதாகும். அவர்களின் கல்வியறிவு, செயல்திறன் மற்ற நாடுகளிலும் அவர்களுக்கு வரவேற்பைப் பெற்றுத் தருகின்றது.

ஒற்றுமையைப் போற்றுவோம்

பிறந்த உயிரினங்கள் அனைத்தும் இறப்பது உறுதி. மனிதர்கள் வாழ்க்கை நிலையில்லாதது. நிலையில்லாத வாழ்க்கையை உணர்ந்து நிலைத்திருக்கும்போதே சிறந்த வாழ்க்கை வாழவேண்டும் என்பதை,

“ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா
நமக்கு அதுவழியே நாம்போம் அளவும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

எமக்கென்ன என்று இட்டுஉண்டு இரும" (நல்வழி- பா. 10)

என்ற படலில் அறியலாம். நாட்டு மக்களே! இறப்பது உறுதி என அறிந்தும் வருந்த வேண்டாம். உலக உண்மையை உணர்ந்து, எல்லாருடனும் ஒற்றுமை எண்ணத்துடன் ஒன்றுகூடி, சேர்ந்து உணவு உண்டு, மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் இயற்கையின் நிகழ்வுகளை மனிதன் ஏற்றுக்கொண்டு களிப்புடன் வாழவேண்டும். ஔவையார் இப்பாடல் மூலம் நிலையாமைத் தத்துவத்தை உணர்த்தி ஒற்றுமை எண்ணத்தை வளர்க்கிறார்.

நிறைவு

நீதிக் கருத்துக்களை மிகுதியாக உவமைகளோடு ஒப்பிட்டுக் காட்டியவர் ஔவையார். வாழ்வியல் சிந்தனைகளை வளமாகத் தன் பாடல்களில் விதைத்தவரும் இவரே. சாதி வேற்றுமையைக் களைந்து, உணவை வளர்க்கும் வழியை அறிந்து, கொடுக்கும் குணத்தைப் போற்றி, நல்லவர் நட்பை வளர்த்து இனிய சொற்களைப் பேசிச் சிறப்பாக வாழவேண்டும். மேலும், வரவிற்குள் செலவுசெய்து வறுமையின் கொடுமையையும், நிலையாமையின் தன்மையையும் உணர்ந்து, செல்வத்தைப் பகிர்ந்து கொடுக்கும் மனதை வளர்க்க வேண்டும். கற்றோரின் புகழை நினைத்துக் கல்வியை வளர்த்து, நாம் நிலைத்திருக்கும்போதே ஒற்றுமை எண்ணத்துடன் மனிதர்கள் இணைந்து வாழவேண்டும். தீமைகளைக் களைவோம்! நல்எண்ணங்களை வளர்ப்போம்!

துணைநின்ற நூல்கள்

1. வேங்கடசாமி ந.மு., (உ.ஆ.), *நல்வழி*, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருச்சி.
2. வேங்கடசாமி ந.மு., (உ.ஆ.), *மூதுரை*, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருச்சி.
3. வரதராசனார் மு., *திருக்குறள்*, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

நாட்டுப்புற வழக்காறுகளில் காணலாகும் சிறுதெய்வங்களின் வகைப்பாடு
Classification of the Deities in the Folk Tradition

ச.பாக்கியலெட்சுமி, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி - 8.

Abstract

The research paper tries to tell about the origin of the deities in the Tamil tradition. The classification of those deities are done rationally and the deities such as deities of creed, clan, village, patrol and other sorts of deities are explained in detail. Hence, the paper will aid to be acquainted with the life familiar amidst the deities of the Tamil tradition.

Keywords: Classification, Deities, Tamils, Folk Tradition

முன்னுரை

கிராமங்களுக்கு சிறுதெய்வங்கள் உயிர்நாடியாக விளங்குகின்றன. அவை கிராம மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக அவர்களால் உருவாக்கப்பட்டவை. மக்களைக் காக்கும் காவல் தெய்வங்களே சிறு தெய்வங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இத்தெய்வங்கள் அந்தணர்கள் வேதம் ஓதி, தொண்டு செய்கின்ற பெருந்தெய்வங்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன. இத்தெய்வங்களுக்கு சில சக்திகள் இருப்பதாக நம்பப்படுகின்றன. மக்களுக்கு நோய் ஏற்படுத்தும் வகையிலும், அச்சமூட்டும் வகையிலும் அமைந்திருப்பதால் அச்சக்திகளே சிறு தெய்வங்களாக வழிபடப் பெறுகின்றன. இவ்வாறு மக்களின் வாழ்வு நிலையோடு தொடர்புடைய இத்தெய்வங்கள் சிறுதெய்வங்கள் என அழைக்கப்படுகின்றன. இத்தெய்வங்களின் வகைகளை பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

சிறுதெய்வங்களின் தோற்றம்

மனித மனத்தில் தோன்றிய அச்சம், குற்ற உணர்வு போன்ற மனவியல் பண்புகளின் பரிணாம வளர்ச்சியே வழிபாட்டு நெறிக்கு வித்திட்டது என்ற கருத்தும், காடுகளில் வாழ்ந்த கொடிய விலங்குகளும், இயற்கையின் தீய சக்திகளும் மனித வாழ்வில் எதிர்பாராத பல மரணங்களைத் தோற்றுவித்த பயமும், பயம் விளைவித்த அமைதியின்மையும் நன்னெறிப்பட்ட தெய்வ வாழ்விற்கு அவர்களை அழைத்துச் சென்றன என்ற கருத்தும் சிறு தெய்வங்கள் தோன்றக் காரணமாயிருந்தன.

வேட்டையாடித் திரிந்த மனிதன் விவசாயக் குழுக்களாகப் பிரிந்து ஓரிடத்தில் நிலையாகத் தங்கி வாழத் தொடங்கிய காலத்தில் சிறு தெய்வங்களின் தோற்றத் அமைந்தது. பழங்கால மக்கள் உலகம் நல்லதும் கெட்டதுமான ஆவிகளால் நிரம்பியது என்றும், இயற்கைக்கு மாறுபட்ட செயல்களுக்கும், நோய், பெருந்துன்பம் ஆகியவற்றுக்கும் காரணம் ஆவிகளே என்றும் நம்பினர். இந்நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றி வளர்ச்சி பெற்றவையே இச்சிறு தெய்வங்களாகும்.

சிறு தெய்வங்களின் பாகுபாடு

மக்களுள் சிலர் தாங்கள் வாழ்ந்த சமுதாயத்திற்காகப் பல வீரதீரச் செயல்களைச் செய்து இறந்து விட, அவ்வாறு இறந்தவர்கள் காலப்போக்கில் சிறுதெய்வங்களாக வழிபடப்படுகின்றனர். இந்த ஆன்மாக்களுக்கு உயிர் இருக்கின்றது, அவை மனிதர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடியவை என்று மக்கள் நம்பியதன் விளைவே சிறுதெய்வங்கள் பல உருவாவதற்குக் காரணமாய் அமைந்தன.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

இச்சிறு தெய்வ வழிபாடு, நடுகல் வழிபாடான வீரவணக்கத்திலிருந்து தொடங்கியது. 'வீரவணக்கம்' என்பது பழந்தமிழரின் வழிபாட்டு முறைகளில் ஒன்றாகும் என்றும் 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்றும் கொள்கைக்கு ஏற்பச் சிறுதெய்வங்கள் தோன்றின என்றும் கூறுவர். தாங்கள் வணங்கம் தெய்வங்கள் உயர்ந்தவை என்றும், ஆக்கவும் அழிக்கவும் காக்கவும் ஆற்றலுடையவை என்றும் எண்ணி தங்கள் சமுதாயத்திற்கென்று அமைத்து வணங்கத் தொடங்கினர். நாட்டுப்புறத் தெங்வங்களை ஊர்த்தெய்வம், இன தெய்வம், குலதெய்வம், மாலைத்தெய்வம், சமாதித் தெய்வம், துணைத் தெய்வம் என ஆறு வகைகளாகப் பாகுபடுத்துவர்.

ஊர்த் தெய்வம்

ஒவ்வோர் ஊரிலும் ஒன்றுக்கு மேற்பட்ட தெய்வங்கள் காணப்பட்டாலும், ஒரு தெய்வம் மட்டுமே அவ்வூரின் சிறப்புத் தெய்வமாகக் கருதப்படுகின்றது. அக்கிராமத்தின் நிலம், நீர், கால்நடைகள், மக்கள் ஆகிய அனைத்தையும் காக்கும் பொறுப்பு இத்தெய்வங்களைச் சேர்ந்தது என்று மக்கள் நம்பினர். அதனால் இத்தெய்வங்களை வழிபட்டால் தங்களுக்கு நன்மை கிட்டும் என்று எண்ணி சடங்குகள் செய்தும், காணிக்கைகள் செலுத்தியும் தெங்வங்களை வழிபடுகின்றனர். ஒரு கிராமம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களில் வாழும் அனைத்துச் சாதியினரும் ஒன்று சேர்ந்து வழிபடும் தெய்வம் ஊர்ப் பொதுத் தெய்வம் ஆகும்.

இனத் தெய்வம்

ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் வழிபடும் தெய்வம் இனத் தெய்வமாகும். இதில் குலம் பார்ப்பதில்லை. எடுத்துக்காட்டாக ஒரு கிராமத்தில் கோனார் சாதியினர் குடியிருப்பர். இவர்களில் சிலர் பூர்வீகக் குடிகளாக இருப்பர். சிலர் வேறு ஊர்களிலிருந்து இங்கு வந்து குடியேறியிருப்பர். இருப்பினும் அவர்கள் அனைவரும் கோனார் இனம் என்ற பொதுமையினால் சேர்ந்து வணங்கம் தெய்வமே இனத் தெய்வமாகும். இத்தெய்வங்களை வேறு இனமக்கள் வழிபடுவதில்லை. ஓர் இனத்திற்குரியது என்பதால் இத்தெய்வம் இனத்தெய்வம் ஆயிற்று.

குல தெய்வம்

ஒவ்வோர் இனத்திற்குள்ளும் பல உட்பிரிவுகள் உள்ளன. ஒவ்வோர் உட்பிரிவினரும் தனித்தனி தெய்வத்தை வணங்குகின்றனர். ஓர் இனத்தின் உட்பிரிவுதான் குலம். இதனை வடமொழியில் கோத்திரா என்று அழைப்பர். குலம் என்பது கூட்டம், பங்காளி, கிளை, சொக்காரன் எனப் பல்வேறு சொற்களால் சுட்டப்படுகின்றது. ஒரு குடும்பம் பல குடும்பங்களாகப் பிரிந்து போய் அக்குடும்பப் பங்காளிகள் எல்லாம் ஓரே முறையாகும்போது குலம் ஆகிறது. ஒரு பொது மூதாதையரின் மரபு வழியில் தோன்றியதன் மூலம் ஒருவருக்கொருவர் உறவு கொண்டுள்ள குழுவே குலம் ஆகிறது.

இல்லுறை தெய்வம்

குடும்பத் தெய்வமாக இல்லத்தில் வைத்து வழிபாடு செய்யும் தெய்வமே இல்லுறை தெய்வமாகும். குடும்பத்திலுள்ள ஒருவர் அகால மரணமடைந்தால் அவருடைய ஆன்மா அவ்வீட்டில் குடியிருப்பதாகவும், அவ்வான்மாவிற்கு உயிர் உண்டு என்றும் இறந்தவரை வணங்கினால் அக்குடும்பத்திற்கு நன்மை கிட்டும் என்றும் நம்பினர். இந்நம்பிக்கையே அக்குடும்பத்தில் உள்ளோரை வழிபடச் செய்துள்ளது. இவ்வீட்டுத் தெய்வமே காலப்போக்கில் குலதெய்வமாக மாறியது.

மாலைத் தெய்வம்

உயிருடன் பூக்குழியில் இறங்கி தெய்வமானவர்களை மாலைத் தெய்வம் என்றழைப்பது வழக்கமாக உள்ளது. நல்லவர்களாயிருந்து வாழ்ந்து பூக்குழி என்று சொல்லப்படும் நெருப்பில் பாய்ந்து உயிரைப் போக்கித் தெய்வமாகிய பெண்களே மாலைத் தெங்வங்களாகப் போற்றப்படுகின்றனர். மாலைத் தெய்வம் தோற்றம் குறித்து கிராமப்புற மக்களிடம் செவி வழிச் செய்தி சொல்லப்படுகிறது. மனித நிலையில் எங்கு வாழ்ந்தனரோ

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

அல்லது எங்கு இறந்தனரோ அந்த இடத்தில் வைத்து வணங்கப்படுவதுதான் மாலைத் தெய்வமாகும். குலதெய்வம் உருவான பழங்கதையோடு தொடர்பு கொண்ட இடத்தில் கதை நிகழ்ந்த காலத்தில் தோன்றயதாகக் கருதப்படும் மூலக்கோவில் மாலைக்கோவில்கள் என்று கூறுவர்.

சமாதித் தெய்வம்

பெரும்பான்மையான இன மக்கள் இறந்தவர்களை எரிப்பதில்லை. மாறாக பூமியில் புதைத்து விடுகிறார்கள். தொன்றுதொட்டு வரும் மிகப்பழைய இனத்தார் இறந்தவர் உடல் பூமாதேவியோடு ஒன்றியிருப்பதுதான் சிறப்பு என்று கருதி புதைத்தே வந்திருக்கிறார்கள். புதைத்த இடத்தில் நினைவிடம் ஒன்றமைத்து வழிப்பட்டு வந்திருக்கின்றனர். இதுவே சமாதித் தெய்வம் என்றழைக்கப்படுகிறது. ஆரியர்கள் பிணங்களை எரிப்பதையும், திராவிடர்கள் புதைப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆரியர்கள் சமாதி வைக்க விரும்பினால், எரித்த எலும்பை எடுத்து சமாதி வைக்க வேண்டிய இடத்தில் மீண்டும் அவ்வெலும்பை ஆகம முறைப்படி எரித்து அவ்விடத்தில் சமாதி கட்டினர். திராவிடர்கள் பிணத்தை உட்கார்ந்த நிலையிலேயே குழியில் வைத்து மூடி சமாதி கட்டினா. பொதுவாக தங்கள் குடும்பத்தில் இறந்தவர்களின் மேல் உள்ள மதிப்பால் உயர்வால் அன்பால் சமாதி கட்டியிருக்க வேண்டும் என்பதை அறிய முடிகிறது.

துணைத் தெய்வம்

முதன்மைச் சிறு தெய்வத்தின் அருகில் இருக்கும் தெய்வங்கள் துணைத்தெய்வங்கள் என்று அழைக்கப்படுகின்றன. குலதெய்வ வழிபாட்டுடன் இணைந்ததே துணைத் தய்வ வழிபாடாகும். இத்துணைத் தெய்வங்கள் மனிதனாக இருந்தபோது குல தெய்வத்திற்கு எவ்வாறு துணை நின்றனவோ, அவ்வாறே தெய்வமான பின்னரும் குல தெய்வத்துடன் சேர்ந்து மக்களைக் காக்கும் பணியில் உறுதுணையாக இருக்கின்றன என்ற நம்பிக்கை நிலவி வருகின்றது. மக்கள் செலுத்தும் நேர்த்திக் கடன்களைப் பெற்று முதன்மைத் தெய்வத்திடம் கொடுக்கும் பாலமாகவும் நின்று துணை செய்கிறது என்ற நம்பிக்கையும் உள்ளது.

காவல் தெய்வம்

மக்கள் தாங்கள் வாழ்ந்து வரும் கிராமத்தைக் காத்து வரும் தெய்வத்தைக் காவல் தெய்வமாகக் கருதி வழிபட்டு வந்துள்ளனர். கிராமத்தில் தீய சக்திகள் நுழைந்து விடாமல் காப்பதற்கும், கொடிய நோய்களிலிருந்து மக்களைக் காப்பதற்கும் வழிபாடு மேற்கொள்ளப்படும் தெய்வங்கள் காவல் தெய்வங்களாகும். பெரும்பாலும் இத்தெய்வங்களை வீரத்தன்மையுடையனவாகப் படைத்து அதிக வீரத்துடனும், சக்தியுடனும், ஊரைக் காக்கும் தெய்வங்களாக்கியுள்ளனர். கொடிய நோய்கள், பேய், பிசாசு போன்ற தீய சக்திகளிலிருந்து தங்களைக் காக்கின்றன என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே ஒவ்வோர் ஊரின் முகப்பிலும், கோயில் வாயிலிலும் காவல் தெய்வங்களை ஏற்படுத்தியுள்ளனர். இத்தெய்வங்கள் பலிகளையும் காவுகளையும் ஏற்றுக்கொண்டு ஊரைக் காப்பதாக மக்கள் நம்புகின்றனர். 'பூதம் காக்கும் புகல் அருங் கடிநகர்' என்ற பட்டினப்பாலை அடி நகரைப் பூதம் காவல் காத்து வலந்ததைக் குறிப்பிடுகின்றது.

பிடிமண் தெய்வம்

மக்கள் தாங்கள் வாழும் ஊரைவிட்டு ஏதாவது ஒரு காரணத்தினால் குடிபெயர்ந்து வெளியேறிச் சென்று வேறு ஓர் ஊரில் குடியேறும் பொழுது அங்கேயும் தங்களது குலதெய்வக்டீகாயிலை உருவாக்கி வழிபடுகின்றனர். தங்கள் குலதெய்வம் எங்கு இருந்ததோ அவ்விடத்தில் ஒரு பிடிமண்ணை எடுத்து வந்து குடியேறிய இடத்தில் வைத்துக் கோயில் கட்டி வழிபடுகின்றனர். இப்பிடிமண் தெய்வம் பற்றி குலதெய்வம் தோன்றிய இடத்தில் மண்ணை எடுத்து மஞ்சள் துணியில் வட்டி வந்து கோவில் அமைக்கும் இடத்தில் வைத்துக் கோவில் கட்டுவது பிடிமண் கோவில் என்று கூறுவர்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

முடிவுரை

இக்கட்டுரையானது சிறுதெய்வங்களின் தோற்றம் குறித்தும், அவை உருவான விதங்களையும் குறிப்பிடுவதோடு மட்டுமல்லாமல் சிறுதெங்வங்களை எவ்வாறு இனத்தவரும் வழிபடுகின்றனர் என்பதை தெளிவாக குறிப்பிட்டுள்ளது. மேலும் சிறு தெங்வங்கள் எவ்வாறு பாகுபடுத்ப்பட்டுள்ளது என்றும் குலதெய்வம் முதல் சமாதித்தெய்வம் வரை எவ்வாறு உருவானது என்பது குறித்த அனைத்து செய்திகளும் இக்கட்டுரையில் தெளிவாக குறிப்பிடப்பட்டடுள்ளது.

துணை நூல்கள்

1. நா. வானமாமாலை. *பழங்கதைகளும் பழமொழிகளும்.* நியுசெஞ்சுரி புக் ஹவுஸ், 2008.
2. கோபாலையர் தி.வே. *தமிழ் இலக்கணப் பேரகராதி எழுத்து* (தொகுதி.1,2,), தமிழ்மண் பதிப்பகம், சென்னை. 2003.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

திரிசடை போற்றிய அறம்
Moral Code of Thirisadai

ந.மாரீசன் ஆய்வியல் நிறைஞர்,
உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

கலாகோபி.க. உதவிப் பேராசிரியர்,
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி.

Abstract

The research paper tries to tell about the moral code followed by Thirisadai, an asura woman and the daughter of Vibishana, the younger brother of the great Asura King Ravana. "Kamba Ramayana" is an epic of Tamil Nadu which tells of the story of Rama and sita. When Sita was as the hostage of Ravana at the Asokavana of Lanka, Thirisadai was deputed as the maid to help her. Even she an asura woman, she gave confidance and render moral support to Sita. These evidences are seen in the "Kamba Ramayana". Hence, the paper proposes to trace down the details related to the moral ethics of Thirisadai.

Keywords: Morale, Thirisadai, Sita, *Ramayana*

கம்பராமாயணம் அழியாத சிறப்புடைய மகா காவியம். கம்பன் உலகமகா கவிஞருள் தலைமையில் வைத்து எண்ணத்தக்கவன். அவனுடைய ஒப்பற்ற படைப்பை முழுவதுமாக அளந்து அறிவதற்கு இன்னொரு கம்பன் வரவேண்டும். தமிழர் பழக்கவழக்கங்களை நன்கு அறிந்தவன் கம்பன். தமிழர் பண்பாட்டையும், நாகரீகத்தையும் அவர்தம் காவியத்தில் ஆங்காங்கே அமைத்துப் பாடியுள்ளான். மக்கள் தவறான வழியில் சென்று தடுமாறாமல் உயர்ந்த ஒழுக்கத்தை, சிறந்த அறத்தைப் பின்பற்றி ஒற்றுமையுடன் வாழவேண்டும் என ராமாயணத்தின் முதலிலிருந்து இறுதிவரை அறத்தை நிலைநாட்டுவதில் வெற்றி பெற்றவன். தமிழ் இலக்கியங்கள் உண்த்தும் அறம் பொதுவானது. அவ்வறத்தினை இல்லறம், துறவறம் எனப்பாடுவது பொதுமரபு. கம்பன் தன் காப்பியத்தில் பெண்களை அறநெறிச் செல்வர்களாகக் கண்டு களிக்கிறான். அறமென்றால் என்ன என்பதற்கு ஒரு வாக்கியத்தில் விடை கூற இயலாது.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

என்று அறத்துக்கு இலக்கணம் கூறுகிறது குறள். மனத்தாலும், சொல்லாலும், செயலாலும் தூய்மையாக இருப்பவர்களின் செயல்களும் அறச்செயல்களாகவே இருக்கும். மனதில் மாசில்லாமல் இருத்தலே அறம். அத்தகு அறத்தை உடையவர்கள் பிறருக்கு தீங்கு செய்யார், இன்னாத சொற்களை ஒருபோதும் பேசார். இப்படி மனதாலும், செல்லாலும் செயலாலும் விளையும் அறங்களை கம்பன் தன் காப்பியத்தில் வரும் மாதர்கள் வாயிலாக காட்டுகின்றான். கோசலை, சுமித்திரை, சீதை, மண்டோதரி, திரிசடை ஆகியோர் கம்பன் கூறும் அறம்தாங்கிய மங்கைகள் ஆவர். இவர்களுள் திரிசடை பற்றி பேசுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

அறம்தாங்கிய மங்கை

கம்பன் காட்டிய மாதர்களுள் கோசலை, சுமத்திரை, சீதை போன்ற கதாபாத்திரங்கள் இயல்பிலேயே உயர்குடியில் பிறந்து நற்குணங்கள் கொண்டு அறம்தாங்கியவர்கள். ஆனால் ராமாயணத்தில் இடம்பெறும் திரிசடையோ அரக்கர் குலத்தில் பிறந்தவள். அரக்கத்தன்மை ஒரு சிறிதும் இல்லாமல் அறம் தாங்கியவள். எனவே தான், கம்பர் அவளை

"இருந்தனள் திரிசடை என்னும் இன்சொலின்
திருந்தினாள்"

இன்சொலினாள், திருத்தம் பெற்றவள் என அறிமுகம் செய்கிறார். திரிசடை என்னும் இன்சொல் சொல்வதில் திருத்தம் பெற்றவளான ஒருத்தியைத் தவிர மற்றைய அரக்கியர் தம்மை மறந்து உறங்கிக் கொண்டிருந்தனர் என்கிறார் கவிஞர். திரிசடை தவிர என சாதாரணமாகக் கூறாமல் இன்சொல் மிக்கள் என சிறப்பித்துக் கூறுகிறார். இவள் சீதையிடம் மிகுந்த அன்புடையவளாகக் காணப்படுகினறாள். அசோகவனத்தில் வயிற்றில் வாயையும், நெற்றியில் கண்களையும், பயங்கரப் பார்வையும், குகை போன்ற வாயையும், பத்துக் கைகளையும், இருபது தலைகளையும், மலைபோன்ற மார்பினையும், உடைய இரக்கமற்ற அரக்கியர்கள் சீதையை சூழ்ந்து கொண்டனர். சீதையோ அவர்களைக் கண்டு அஞ்சி யாதும் பேசாமலிருந்தாள். அச்சூழலில் சீதையின் துன்பங்களை மாற்றி ஆறுதல் செய்தவள் திரிசடை என்கிறான் கவிஞன்.

"ஆயிடை திரிசடை என்னும் அன்பினாள்
தாயினும் இனியவள் தன்னை நோக்கினாள்
தூயநீ கேட்டிஎன் துணைவி ஆம்எனா
மேயதுஓர் கட்டுரை விளம்பல் மேயினாள்"

என்ற வரிகளில் திரிசடை அன்பினால் தாயினும் உயர்ந்தவள் எனச் சிறப்பிக்கிறார் கம்பர். அதனாலேயெ சீதை தன் உறுப்புக்கள் இடப்பக்கம் துடிப்பதையும், தனக்கு ஏற்பட்ட நற்குறிகளையும் கூறி இதனால் தனக்கு நன்மை உண்டாகுமா? தீமை உண்டாகுமா? தெரியவில்லை என அவளிடம் வினவுகிறாள். திரிசடையோ சீதையிடம் 'உனது உறுப்புக்கள் இடப்பக்கம் துடித்தல் உனக்கு மிகுந்த நன்மையை கொடுப்பதாம்" நீ விரைவில் உன் கணவனை அடைதல் உறுதி என ஆறுதல் மொழி கூறி அதனோடு நிற்காமல் உனக்கு உறக்கமில்லாத காரணத்தினால் கனாக்கள் தோன்றுவதில்லை. நான் கனவு ஒன்றினைக் கண்டேன்.

"பயில்வன பழுதுஇல பரிவின் ஆண்டன
வெயிலினும் மெய்யன விளம்பக் கேட்டியால்"

குற்றமுள்ள இந்நாட்டில் ஏற்படும் கனவுகள் குற்றமற்றவை, சூரியனைக் காட்டிலும் தவறாது பலிப்பவை என நம்பிக்கையூட்டுகிறாள். இராவணன் பத்து தலைகளில் எண்ணெய் தேய்த்து கழுதை பூட்டப்பட்ட தேரில் சிவந்த ஆடை அணிந்தவனாய் தெற்கு நோக்கிச் சென்றான். பிள்ளைகளும், உறவினர்களும் அத்திசை நோக்கிச் சென்றனர்.

"மங்கையர் மங்கலத் தாலி மற்றையோர்
அங்கையின் வாங்குநர் தாலி மற்றையோர்
கொங்கையின் வீழ்ந்தன"

மங்கையர் தாலி தானே அறுந்து மார்பில் விழுந்தது. மண்டோதரி கூந்தல் பின்னல் அவிழ்ந்து விழுந்தது. இவையெல்லாம் ராவணனுக்கு துன்பம் நேரிடும் என்பதைக் காட்டுகிறது என தான் கண்ட தீக்கனா திறமுறைக்கிறாள். அத்துடன் தான் கண்ட நன் நிமித்தங்களையும் கூறுகிறாள். ஆயிரம் விளக்கு பொருந்திய தேரினை எடுத்துக் கொண்டு ஒரு பெண் இராவணன் வீட்டிலிருந்து புறப்பட்டு என் தந்தை விபீடணன் வீட்டில் நுழைந்தாள் என தான் கண்ட நன்நிமித்தக் கனவினைக் கூறி ஆறுதல் செய்கிறாள் தாயினும் இனியவளான திரிசடை.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

துன்பத்தில் இருப்போர்க்கு ஆறுதல் கூறுவது இயல்பு. ஆனால் திரிசடை தன்நாடு, தன் மன்னன், தன் உறவினர்கள் அழிந்து போவதாக தான் கண்ட தீய கனவினை சீதையின் நன்மைக்கான நிமித்தம் எனக் கூறுவது அவளின் உயர்ந்த பண்பையும், மனதாலும், சொல்லாலும், செயலாலும் அறச்செல்வியாய் திகழ்ந்தாள் என்பதையும் உணர்த்துகிறது.

இராவணன் சீதையைக் கண்டு தன் விருப்பத்திற்கு இசையுமாறு பலவிதமாக எடுத்துக் கூறிய பின்னும், சீதை அவனை நீ ராமபிரானுடைய கணையால் அழிந்தொழிவாய், உன் குலம் முழுவதிற்கும் அழிவு ஏற்படும் என இகழ்ந்துரைக்கிறாள். கோபத்தீயினால் ராவணன் அரக்கியர்களை நோக்கி சீதையை எதுகூறியும் பணிய வைக்கமாறும், இல்லையெனில் உங்களை கொன்றொழிப்பேன் எனவும் கட்டளையிடுகிறான். இதனால் அரக்கியர்கள் சீற்றம் கொண்டு, சீதையை கொல்லுங்கள், கொன்று தின்னுங்கள் என்று பயமுறுத்தினர். நீ பிறந்த குலத்திற்கும், புகுந்த குலத்திற்கும் ஒருங்கே அழிவை உண்டாக்கிக் கொண்டாய் என்றனர் சில அரக்கியர்கள். இவர்களின் கொடுமையை எண்ணி சீதை வருந்தினாள்.

“இன்னோரன்ன எய்திய காலத்து இடைநின்றாள்
முன்னே சொன்னேன் கண்டகனாவின் முடிவுஅம்மா
பின்னேவாளா பேதுறுவீரேல் பிழை என்றாள்
அன்னே நன்றுஎன்றாள் அவர்எல்லாம் அமைவுற்றார்”

அப்போது அங்குவந்த திரிசடை அரக்கியர்களை அதட்ட அவர்கள் அமைதியுற்றனர். அவள் சீதையை நோக்கி நான் கண்ட கனவினை உன்னிடம் கூறிய பின்பும் வீணாக கவலையடைய வேண்டாம் என்கிறாள். சீதையும் அவளை நோக்கி என் அன்னை போன்றவளே இனி கவலையடையேன் என கூறுமாறு திரிசடை அவளுக்கு ஆறுதலாக இருந்தாள். அதோடு நில்லாமல் தான் கண்ட கனவையும் அதின் பயனையும் மற்ற அரக்கியர்களிடம் கூற அவ்வரக்கியர்கள் நல்லறிவு பெற்று கோபத்தைவிட்டு, சீதையை அச்சுறுத்து வதையும் விட்டுவிட்டனர். இவ்வாறு அசோகவனத்தில் சீதைக்கு ஆறுதலாக இருந்த திரிசடை அரக்கியர்களை நல்வழிப்படுத்தியதால் அவளை அறிஞருக்கு ஒப்பானவர் என்கிறான் கம்பன்.

ராவணனின் தம்பி விபீடணனுடைய அருமை மகள் திரிசடை. அரக்கர் குடியில் பிறந்திருப்பினும் அரக்கத்தன்மை ஒரு சிறிதும் இல்லாமல் தன் தந்தையைப் போல் நற்குணமுடையவளாகத் திகழ்கின்றாள். சீதையின் துணைநின்று அவள் துயர் துடைத்து அவளோடு துயிலின்றி வாடுகின்றாள். அரக்கியே ஆயினும், தாயுள்ளம் கொண்டவளாகத் தாயினும் இனியவளக, அறிஞரை ஒத்திருப்பவளாக, அறத்தன்மை உடையவளாகத் திகழும் திரிசடை கம்பனின் அறம் போற்றிய மங்கையாகவேத் திகழ்கின்றாள்.

துணைநூற்பட்டியல்

1. பி.ஜி.கருத்திருமன். *கம்பர் கவியும் கருத்தும்.* தமிழ்ப் புத்தகாலயம், திருவல்லிக்கேணி, சென்னை-05.
2. பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன். *கம்பன் கலை,* கங்கை புத்தக நிலையம், சென்னை 17, 1996.
3. பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன். *கம்பன் நோக்கில் நாடும் மன்னனும்,* கங்கை புத்தக நிலையம், சென்னை 17, 1995.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

தமிழில் ஊடோடிய இலத்தின் அமெரிக்கத் திறனாய்வும் தொன்மமும்
Latin-American Magical Realism in Tamil

பி. மைக்கேல் சைனி, முனைவர் பட்டஆய்வாளர், தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிஷேகப்பட்டி- 627 012.

Abstract

The research paper tries to inform about the introduction of new genre Magical Realism, a Western genre, mostly Latin-American of origin in the Tamil Literary Tradition. Basically, at the present times Magical realism is considered the interesting one to consider and many of the works filled with the theme of it are highly successful. Hence, the paper proposes to trace down the details related to magical realism and its employment in the Tamil Literary arena.

Keywords: Latin-American, Magical Realism, Tamil Literature

முன்னுரை

உயர்ந்த சிந்தனைகளானது மக்களுடைய வாழ்வியலோடும் அழகியலோடும் சேர்ந்து இலக்கியமாகப் பிறக்கிறது. இவ்வாறு பிறக்கும் இலக்கியமானது மக்களைப் புரிந்துக் கொள்வதற்கான களமாக உள்ளதென்றால் இவ்விலக்கியத்தினைப் புரிந்துக் கொள்வதற்கான களமாக அமைவது திறனாய்வு ஆகும். இத்திறனாய்வானது நவீன எழுத்து முறைக்குப் பின்பு பின்நவீனத்துவத் தமிழ் இலக்கியங்களில் யதார்த்தவாதத்தைக் கடந்த மிகு கற்பனை, மிகை யதார்த்தம், மாய யதார்த்தம் போன்ற திறனாய்வாக உருவாகியுள்ளன. இலத்தின் அமெரிக்க நாடுகளில் பின்காலனித்துவ காலக்கட்டத்தில் அறிமுகமாகி மக்களுக்கு புத்துயிர் அளித்த மாய யதார்த்தவாதம் என்னும் இலக்கிய இயக்கியமாக உருவாகியுள்ளது. இவ்வாறு இலக்கிய இயக்கமான மாய யதார்த்தவாதத்தில் தொன்மத்தின் முக்கியத்துவத்தினைப் பற்றிக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

மாய யதார்த்தவாதம்

மாய யதார்த்தவாதம் என்பது பெரும்பாலும் ஒரு குழப்பமான போக்காகக் கருதப்படுகிறது. இந்த யதார்த்தமானது ஒரு தனித்துவமான வகையைக் கொண்ட இலக்கிய முறை என்று கூறுவது மிகையாகாது. மாயம், யதார்த்தம் என்ற இரு முரண்பாடான கருத்துகளின் முன்னோக்குகளால் வகைப்படுத்தப்படுகிறது. இது உண்மையில் யதார்த்தமான பார்வை என்று அழைக்கப்படுவதன் அடிப்படையில் இருந்தாலும் இயற்கைக்கு ஏற்றவாறு தன்னை விவேகமான தன்மையில் ஏற்றுக்கொள்ளும் வகையினதாக அமைவதாகும். மாய யதார்த்தம் என்பது தூய கற்பனைக்கு முரணாக இருக்கிறது. ஏனென்றால் மனிதர்கள் மற்றும் சமுதாயத்தின் உண்மையான விளக்கங்களுடன் ஒரு சாதாரண நவீன உலகில் இது அமைந்திருக்கிறது. மாய யதார்த்தமானது இலத்தீன் அமெரிக்காவில் தோன்றிய ஒரு வகை மிகுபுனைவு ஆகும். இந்த நாட்டினுடைய நாட்டுப்புறக் கதை மரபிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு இலக்கிய உத்தியாகக் கருதப்படுகிறது. மாய யதார்த்தவாதம் என்பது ஒரு கதை சார் புனைவு ஆகும். இது மூன்றாம் உலக நாடுகளின் புகழ்பெற்ற அற்புதங்களை வெளிப்படுத்துவதற்காக கதாபாத்திரங்கள், தொன்மங்கள், உருவகங்கள், புராணங்கள், நாட்டுப்புற கதைகள், கனவுகள் ஆகியவற்றினை உள்ளடக்கியதாக அமையும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

சொற்பொருள் விளக்கம்

மாய யதார்த்தவாதம் என்பது இயல்பாக வரும் ஒரு கதை சூழலுக்குள் இயல்புக்கு மீறிய விந்தைக்கூறுகள் அல்லது அற்புதக் கூறுகளானது வருவது. இந்த இரண்டையும் கதையானது இணைத்துக் கூறுவது ஆகும். மாய யதார்த்தவாதம் முதன்முதலாக ஆங்கில இலக்கியத்தில் தோன்றிய போது Magischer Realisums என்ற வார்த்தையானது இருந்தது. பின்னர் ஆங்கிலத்தில் Magical Realism என்பர். மேலும் இதனை Magic Realism (மாந்திரீக யதார்த்தவாதம்), Marvellous Realism (அற்புத யதார்த்தவாதம்), Dramatic Realism (வியத்தகு யதார்த்தவாதம்), கற்பனை யதார்த்தவாதம் என்றும் அழைப்பர். இவை யாவும் அடிப்படையில் ஒரே பண்பினைத் தன்னுள் கொண்டிருந்தாலும் கூட இவைகளுக்கு இடையில் சில வேறுபாடுகளானது காணப்படுகின்றன. இலக்கியத்தில் மாய யதார்த்தமானது இயற்கைக்கு மாறான உலகியல் சூழலில் அமைகிறது.

மாய யதார்த்தவாதத்துடன் தொடர்புடைய பிற பதங்கள்

இந்த நூற்றாண்டில் அறிவுத் துறைகளின் போக்கில் எந்தவொரு துறையும் பிறிதொரு துறையின் நிழற்படாமல் இருந்ததில்லை. ஒரு இலக்கிய பாணியை வரையறுக்க முயற்சிக்கும் போது அதோடு தொடர்புடைய பிற இலக்கிய பாணிகள் அதனை வரையறுக்க உதவுகிறது. இந்த வகையில் மாய யதார்த்தவாதமானது எதனுடன் எல்லாம் தொடர்புள்ளது என்பது பற்றி பேராசிரியர் எஸ் தோதாத்ரி என்பவர், “இது பின்நவீனத்துவம், பின்னைக்காலனியம், சர்ரியலிசம், பிராய்டிசம், யுங்கின் உளவியல், பக்தினின் நாவல் கொள்கை, காண்டின் தத்துவம், இருத்தலியம் ஆகியவற்றுடன் தொடர்புடையது. இதில் மார்க்சியத்தையும் இணைத்துக் கொள்கிறார்கள். இவை எல்லாம் கலந்த கலவையாக இது உள்ளது.” என்று கூறுகிறார். இதுமட்டுமல்லாமல் கற்பனை யதார்த்தவாதம், பேபிலிசம், ஸ்லிப்ஸ்ட்ரீம், வரலாற்று பேண்டஸி, அறிவியல் புனைவு, ஆகியவற்றோடு தொடர்புடையதாக உள்ளது. தொன்மவியல், குறியீட்டியல், மெட்டாபிக்ஷன், மானுடவியல், ஆண்டலாஜி ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடையதாக மாய யதார்த்தவாதத்தின் கூறுகள் காணப்படுகின்றன.

தொன்மம் - சொல் விளக்கம்

தொன்மம் என்பதை மித் (Myth) என்று ஆங்கிலத்தில் கூறுவர். தொன்மவியல் ‘ஆலவாழடழபல’ என்று அழைக்கப் பெறும். பழங்கால இதிகாசங்களிலும், புராணங்களிலும் சொல்லப்பட்டுள்ள பாத்திரங்களைக் கவிதையில் எழுதி அவைகளின் செயல்பாடுகளை எடுத்துச் சொல்லி அவற்றின் மூலம் சொல்ல வரும் கருத்துக்களைக் கூறுவது தொன்மம் ஆகும். இது தொன்மக் கருத்து எனவும் அழைக்கப் பெறும்.

தொல்காப்பியர் கூறும் தொன்மம்

தொன்மை + காப்பியர் = தொல்காப்பியர், காப்பியர் குடியிலே தொன்மையானவர் என்பதால் ‘தொல்காப்பியர்’ எனப் பெயர் பெற்றார். இவர் தொன்மையானவர் என்பதைக் குறிப்பதற்காகவே ‘தொல்’ எனும் அடைமொழி பெற்று விளங்கினார். தொல்காப்பியர் தான் இயற்றிய தொல்காப்பியத்தில் தொன்மை பற்றி,

“தொன்மை தானே தானே செல்லுங்காலை
உரையோடு புணர்ந்த பழமை மேற்றே” (தொல். பொருள். 538)

என கூறுகின்றார்.

தொன்ம உருவாக்கம்

தொடக்கத்தில் இயற்கையோடு இணைந்து வாழத் தலைப்பட்ட மனித சமுதாயம் பின்பு இயற்கையைத் தன் ஆற்றலுக்குக் கட்டுப்படுத்தி உணவு உற்பத்திக்கு ஆதாரமான வேளாண்மை உருப்பெறவும், வளரவும் வழி வகுத்தது. இயற்கையைத் தன் மந்திர ஆற்றலால் கட்டுப்படுத்த முடியும் என நம்பிய அதே வேளையில் இயற்கையின் அபரிதமான

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

ஆற்றல்களைக் கண்டு அந்த ஆற்றல்களை வணங்கத் தலைப்பட்டான் மனிதன். இயல்பு மீறிய நிகழ்வுகளின் தொகுப்புகளாக அமைந்த தொன்மக் கதைகள் நடப்புகளின் அடித்தளத்திலேயே கட்டமைக்கப்பட்டுள்ளன. தான் நம்பும் ஒன்றன் ஆற்றலை மிகுவித்துக் காட்டும் இயல்பினவாகத் தொன்மங்கள் படைக்கப்பட்டன. புராணவியல் சிந்தனைகள் உருப்பெற்றதை மனிதனின் வளர்ச்சியின் மூன்றாவது காலகட்டமாகக் காட்டும் மாக்ஸ்முல்லர்,"மாறுபட்ட பண்பாட்டு வளர்ச்சியில் புராணங்களின் உருவாக்கத்தைப் பற்றிய காலக்கட்டத்திற்குக் கொண்டு செல்கிறார். அவர், தொல்பழங்கால மனிதன் சில நிகழ்வுகளை முழு அமைதியுடனும் யதார்த்தத்துடனும் கண்டான் என்றும் முழுவதும் தெளிவான் மூலக் கருத்தாக்கங்கள் இருண்மை அடையத் தொடங்கிய பின்னரே இயற்கை நிகழ்வுகளைக் குறித்துப் புராணக்கதை வடிவில் தெளிவற்ற மங்கலான விளக்கங்களை உருவாக்கினான்." என்று கூறினார். இயற்கையை இயல்பாக உணர்ந்து பல்வகை உயிர்களைப் பஞ்சப்பூதச் சேர்க்கை வேறுபாட்டின் விளைவுகள் எனக் கூறிய பூதவாதம் போன்ற பொருள் முதல்வாதங்கள் தோன்றிய பின்னரே எல்லாம் இறைவனின் ஆற்றலால் விளைந்தவை எனும் கருத்து முதல் வாதங்கள் உருவாயின. இறையாற்றலை மிகுவித்துக் காட்டும் தொன்மங்கள் உருவாவதற்குக் கருத்து முதல்வாதங்கள் தான் வித்திட்டன.

தொன்மவியல் ஆய்வு

இலக்கியத் திறனாய்வுத் துறைகளில் ஒன்றான தொன்மவியல், பிற துறைகளுடன் இணைந்த ஒன்றாகவே அமைகிறது என்பதைக் கீழ்வரும் கூற்று உணர்த்துகிறது. "தொன்மம் என்பது தனித்த ஒன்றாக இல்லை. மாறாக அது சமுதாயத்தோடும் நாட்டுப்பாடலோடும் மானிடவியலோடும் சமூகவியலோடும் உளவியல் நுண்முறை அறிவோடும் நுண்கலைகயோடும் தொடர்பு கொண்டு பலவகைப் பொருள் உணர்ச்சி பொத்தியங்கும் செறிவு மிக்க ஒரு சொல்லாக உள்ளது." என்கிறார் யாழ். சு. சந்திரா. "இவ்வுலகின் படைப்பிலே உள்ள உயிர்கள் அவற்றிள் பண்புகள், பண்புகளுக்கிடையேயுள்ள ஒற்றுமைகள், அவ்வொற்றுமைகளைப் பிரதிபலித்துக் காட்டும் மூல உருக்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆய்வது தொன்மவியல் அணுகுமுறை" எனலாம்.

இவ்வகை தொன்மவியல் ஆய்வு வழி சமூகத்தின் மனித வாழ்வின் அடிமன எண்ணங்களையும், மரபு முறைகளையும், நடத்தை விதிகளையும், வரலாற்றுச் சூழல்களையும், சமயக் கருத்துக்களையும் மூலபடிவத் தேடலையும் கண்டு உணரலாம். இத்தொன்மம் பற்றி ஆய்வுகள் கார்ல் ஆட்பிரைடு முல்லர், என்பவரால் தொடங்கப்பட்டு பிரேசர் வெளியிட்ட "கோல்டன் பௌ" ஜே.ஏ.ஹாரிசன், கில்பர்ட் முர்ரே, எப்.எம். காண்போர்டு, ஏ.பி.ஹீக் போன்றோர் தொடர்ந்து ஆய்வு செய்துள்ளனர். பின்னர் சிக்மண்ட் பிராய்டின் "கனவுகளின் விளக்கம்", "அன்றாட வாழ்வில் மனநோய் ஆராய்ச்சி", "தன்னுணர்ச்சியும் இச்சையுணர்ச்சியும்" போன்றன தொன்மவியல் திறனாய்வில் புதியதொரு வீச்சினை ஏற்படுத்தின.

பிராய்டின் மாணவரான யுங் என்பாரின் "கூட்டு நனவிலி", "மன உணர்வுகள்", "மூலபடிவங்கள்" போன்ற தொன்மங்களை மையமிட்ட ஆய்வுகள் தொன்மவியல் திறனாய்வின் புதிய போக்கிற்கு வித்திட்டன. இதையடுத்து உளவியல் அடிப்படையில் மாட்பாட்கின் "கவிதைகளில் மூலபடிவத் தேடல்" என்னும் தளத்திற்கு இட்டுச் சென்றது. இவ்வகையில் தமிழில், உளவியலோடு தொன்மவியலை இணைத்து, பல்வேறு திறனாளிகள் ஆய்வு செய்துள்ளனர். அவர்களுள் சி.இ.மறைமலையும், அரங்க நலங்கிள்ளியும் குறிப்பிடத் தகுந்தவர்கள். இவ்வாறு தொன்மவியல் ஆய்வு உள்ளடக்கிய அனைத்தையும் தொன்மத்தினைத் தன்னகத்தே கொண்டு செயல்படும் மாய யதார்த்தவாதமும் மேற்கூறியவற்றினை உள்ளடக்கியே அமையும் என்றால் அது மிகையாகாது.

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தொன்மமும் மாய யதார்த்தவாதமும்

தொன்மங்கள் என்பது "புராணகதைகளான சமுதாயத்தில் அடிப்படை பங்கைக் கொண்டிருக்கும் கதைகளை உள்ளடக்கிய ஒரு நாட்டுப்புற வகையாகும்." தொன்மங்கள் தெய்வங்கள், தெய்வீகங்கள், இயற்கைக்கு மாறான மனிதர்கள் போன்ற மூன்று முக்கிய பாத்திரங்களை உள்ளடக்கியதாக அமைகிறது. இதில் கலாசச்சாரங்கள் அல்லது மத நம்பிக்கைகளுக்கு இடையில் கதைகள் பரவியுள்ளதால் தெய்வீகப் பாத்திரங்கள் மனிதர்களாக அல்லது விலங்குகள் போன்ற மனிதர்களாகவும் அமையலாம். கட்டுக்கதைகள் பெரும்பாலும் அதிகார வர்க்கத்தால் தங்களுக்குச் சாதாகமாகக் கூறுகின்றனர். இது மத, ஆன்மீகத்தினால் மிகவும் நெருக்கமாக இணைக்கப்படுகின்றன.

தொன்மங்கள் என்பவை மனித நடத்தையின் உக்கிரமான நிலை, குழப்பங்கள், மனப்பாங்குகள், புதிர்கள் ஆகியவற்றைப் படம் பிடித்துக் காட்டுபவை. தொன்மங்களில் இருந்து கற்பனையை நீக்கினால் சலிப்பூட்டும் நிலைக்குத் தள்ளப்படும். வானூர்திகள், பல தலைகள், பல கைகள், அறிவியல் புனைவு என்று சொல்லப்படக் கூடிய அனைத்து வகையான எந்திரங்கள் என தொன்மப் பழமையில் ஊறிய வளமான கற்பனைகள் ஏராளம் உள்ளன. தொன்மவியல் மக்களுடன் இணையும் போது தொன்மவியல் மதத்துடன் சிக்கிக் கொள்கிறது. கற்பனை என்பது ஆற்றல்மிக்கப் படைப்பாக்க சக்தியாகத் தொடர்ந்து இருக்கிறது. இவ்வாறான கற்பனைகளை உள்ளடக்கிய தொன்மங்கள் முற்காலத்தில் உள்ளது போல தற்காலத்திலும் உருவாகியுள்ளன. சிறிதளவில் யதார்த்தமும் பெருமளவில் மாய சக்தியும் அடங்கிய புனைகதைகளுடனான கட்டுமானத்தை உடையது என்ற வகையில் தொன்மவியலை மாய யதார்த்தவாதம் என்ற கூற்றிற்குள் பொருள் கொள்ளலாம்.

அக்காலத்தில் தொன்மங்களில் உள்ள மூன்று முக்கியப் பாத்திரங்களை நம்பியிருந்த அக்கால மக்களுக்கு அது யதார்த்தமானதாகத் தோன்றியிருக்கலாம். ஒரு மர்மமான மாயாஜால சக்தியாக இருந்தாலும் அது அவர்களின் வாழ்க்கையைப் பாதிப்பதாக அமையும். மறுபுறம் நகர்ப்புறக் கட்டுக்கதைகள் உண்மையான உலகில் மிகவும் அடிப்படையாக இருக்கின்றன. இந்த கட்டுக்கதைகள் உண்மையானவை என்று பல மக்கள் நம்புகிறார்கள். இவ்வாறு இக்கதைகள் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குச் செல்கின்றன என்ற உண்மையை நம்பக் கூடியவையாக மாயமாக யதார்த்தமானவைச் செய்கிறது. தொன்மங்கள் என்பது மாய யதார்த்தவாதத்திற்கு விவாதிக்கப்படக்கூடிய ஒரு கருப்பொருள் ஆகும். மாய யதார்த்தம் என்பது ஏற்கனவே இருக்கும் ஏதாவது ஒன்றை விவரிப்பதற்கு ஒரு புதிய காலமாக இருக்கக்கூடும் என்றாலும் அது முற்றிலும் புதியதல்ல.

முடிவுரை

இந்நூற்றாண்டின் அறிவுத் துறைகளின் போக்கில் எந்தவொரு துறையும் பிரிதொரு துறையின் நிழற்படாமல் இருந்ததில்லை. மாய யதார்த்தவாதம் என்னும் இலக்கியத் திறனாய்வின் நகர்வு முறைக்கு தொன்மத்தின் பங்கு என்பது மிக முக்கியமான ஒன்றாகவும் தேவையான ஒன்றாகவும் இருக்கிறது. தொன்மமானது மானுட வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாகவும் அவை மாய யதார்த்தவாதம் போன்ற இலக்கியத் திறனாய்விற்கு வலிவும் பொலிவும் ஊட்டுகின்ற ஒன்றாகவும் இருக்கிறது என்பதை இக்கட்டுரையின் வழிக் காணலாம்.

பார்வை நூல்கள்

1. இளம்பூரணம். *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* தமிழ்மண் பதிப்பகம், சென்னை. 2003.
2. நச்சினார்க்கினியம். *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* தமிழ்மண் பதிப்பகம், சென்னை. 2003.
3. கோபாலையர் தி.வே. *தமிழ் இலக்கணப் பேரகராதி எழுத்து* (தொகுதி.1,2,) தமிழ்மண் பதிப்பகம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தனுஷ்கோடி ராமசாமி படைப்பில் தீண்டாமை உணர்வு
The Sense of Untouchability in the Works of Thanuskodi Ramasamy

முனைவர் ஆ. மெர்சி ஆஞ்சலா, உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி, மதுரை.

Abstract

The article tries to do a close study on the shades of untouchability in the works of the eminent writer Thanuskodi Ramasamy. The paper evinces the meaning of human rights, untouchability in comparision with the short story *Suthantira Sirayile.* The pain of affiliation to the social vice, untouchability is keenly shown in the story becomes the need of the hour to get hold of secularism. The writer is keen enough to bring such vices through pathos in his story. *Hence, the article brings forth the sense of untouchability in the story.*

Keywords: Sense, Untouchability, Thanuskodi Ramasamy, *Suthantira Sirayile*

முன்னுரை

உலகிலுள்ள மக்கள் அனைவரும் அமைதியாகவும் சுதந்திரமாகவும் மனிதமாண்புடனும் வாழவேண்டியவர்கள் ஆனால் ஆண்டான்-அடிமை என்ற பேதங்கள் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்துகின்றன.மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் பல்வேறு எழுச்சியாளர்களால் உரிமைக்கான முழக்கம் எழுந்தது. ஐ.நாவின் தலையீட்டினால் அடிப்படை உரிமைகள் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தாலும் மக்களை அடக்கியாளும் அதிகார வர்க்கத்தினரின் கொடுஞ்செயல்கள் குறைந்தபாடில்லை. நாட்டில் நிலவியஊழல், சுயநலச் சுரண்டல்கள், சுகபோக வாழ்க்கை அரசியல் சீர்கேடுகள், ஏற்றத்தாழ்வுகள், சாதி, இனவேற்றுமைகள், அத்துமீறல்கள் என்று மனிதத்துவத்தைச் சிதைக்கும் தீமைகளைக் களையப் போராடியவர் தனுஷ்கோடி ராமசாமி. அதன் தாக்கம் அவருடைய படைப்புகளிலும் வெளிப்படுகின்றது. அவருடைய படைப்புகளில் பதிவுசெய்யப்பட்டுள்ள மனித உரிமை மீறல்களுள் ஒன்றான தீண்டாமை உணர்வை ஆராய்ந்து எடுத்துரைக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

மனித உரிமை விளக்கம்

மனித சமுதாயம் ஓர் அரசின் கீழ் கட்டுப்பட்டு அமைகிறது. மக்கள் தங்களுக்குள் இருப்பதைப் பகிர்ந்து கொள்ளவும் பழகிக் கொள்ளவும் தமக்கென்று ஒன்றைப் பெற்றுக்கொள்ளவும் உரிமை உடையவர்களாக இருக்கின்றனர். இதனை மனித உரிமை என்று கூறலாம். ஆங்கிலத்தில் இதனை ‘Human Rights’ என்பர்.

இந்திய அரசின் மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம் (1993) “மனித உரிமைகள் என்றால் அரசியல் அமைப்புச் சட்டத்தால் உத்திரவாதம் அளிக்கப்பட்டுச் சர்வதேச உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டு இந்தியாவில் உள்ள நீதிமன்றங்களால் செயல்படுத்தத்தக்க தனிநபரின் வாழ்க்கை சுதந்திரம், சமத்துவம் மற்றும் மதிப்பு போன்றவற்றிற்குத் தொடர்புடைய உரிமைகள்”[1] என விளக்கம் அளித்துள்ளது.

தனி மனித உரிமைகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாத நிலையொன்றே ஒரு சமுதாயத்தை நாகரிகமுடையதாக்கும். நாட்டை எல்லா வகையிலும் முன்னேற்றமடையச்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

செய்கின்ற மாபெரும் சக்தியாக இருப்பதும் மனித உரிமையே. இது சிதையாவண்ணம் காக்க வேண்டியது ஆள்வோரின் கடமையாகும்.

இந்திய அரசியலமைப்புச் சாசனம் விதி எண். 14 முதல் 32 வரை மக்களின் அடிப்படை உரிமைகளைப் பற்றிக் கூறுகிறது.

1. "சமத்துவ உரிமை (விதி எண். 14 முதல் 18 வரை)
2. சுதந்திர உரிமை (விதி எண். 19)
3. உயிர் பாதுகாப்பும், தனி மனித சுதந்திரமும் பெற உரிமை (விதி எண். 21)
4. சட்டத்திற்கு எதிராகக் கைது செய்வதிலிருந்து பாதுகாப்பும், வலுக்கட்டாயமாகத் தடுப்புக்காவலில் முறையற்ற வகையில் வைக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பும் பெற உரிமை. (விதி எண். 22)
5. உழைப்பு மற்றும் பல்வேறு வகையான சுரண்டல்களிலிருந்து விடுதலை அடையும் உரிமை. (விதி எண்கள் 23 மற்றும் 24)
6. கலாச்சார மற்றும் கல்வி உரிமை (விதி எண்கள் 29 மற்றும் 30)"[2]

இத்தகைய அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரான செயல்பாடுகளை மனித உரிமை மீறல்கள் என்கின்றனர்.

தீண்டாமை உணர்வு

வேதகாலத்தில் மனிதன் தான் விரும்பிய தொழிலை மேற்கொள்ள உரிமை பெற்றிருந்தான். பிறப்பையும் தொழிலையும் அடிப்படையாகக் கொண்டு சமூகம் வரையறுக்கப்பட்டது. பின்னர் அத்தொழில் அடிப்படைப் பிரிவானது சாதி அடிப்படையாக மாறியது. நிறத்தின் அடிப்படையிலும் மக்கள் பிரித்துப் பார்க்கப்பட்டனர்.

ஆரியர்கள் இந்தியாவிற்குள் வந்தபொழுது அரசு வம்சத்தினர் அல்லது போர்வீரர்கள், மதவாதிகள், பொதுமக்கள் என்று மூன்று சமூகக்குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். அப்பொழுது சாதிய உணர்வு யாரிடமும் இல்லை. ஆரியர்களின் மேலாதிக்கம் எழுந்தபொழுது தங்களது மேலாண்மையைப் பாதுகாப்பதற்காகச் சாதிய அமைப்புகளை அவர்கள் உருவாக்கி பூர்வீகக் குடிமக்களை அடிமைகளாகக் கருதத்துவங்கினர்.

உயர் சாதியினர் தங்களது சுகமான வாழ்விற்காக இவர்களை அடிமைகளாகவும் தீண்டத் தகாதவர்களாகவும் வைத்திருந்தனர். சாந்தோக்ய உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளவர்கள் ஐந்தாவது பிரிவினைச் சேர்ந்த பஞ்சமர் பிற சாதியினரோடு சேர்ந்து வாழ முடியாமல் குடியிருப்புகளிலிருந்து வெகுதொலையில் சேரியில் வாழ்ந்தனர். பசிக்கொடுமை, நிர்வாணக்கோலம், கேவலமான குடிசைகளில் வாழும் கொடூரம், எது கிடைத்தாலும் உண்ணுகின்ற நிர்பந்தம் போன்ற துயர் நிரம்பிய, இழிந்த, சக்தியற்ற நிலையில் இவர்கள் இருக்கின்றனர்.

இந்தியாவில் மேலைநாட்டார் வருகையினால் இவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. கி.பி. 1858-ஆம் ஆண்டில் ஆங்கில அரசால் ஏற்படுத்தப்பட்ட பள்ளிகளில் இவர்களும் கல்வி பெறும் வாய்ப்பினைப் பெற்றனர். 1922ஆம் ஆண்டு அரசு உத்தரவு ஒன்றை பிறப்பித்தது. இதில் பஞ்சமரை 'ஆதி திராவிடர்' அல்லது 'ஆதி ஆந்திரர்' என்று அழைக்குமாறு கூறியுள்ளது." இவர்களின் முன்னேற்றத்திற்காக டாக்டர் அம்பேத்கார், காந்தியடிகள், பெரியார் போன்றோர் குரல் கொடுத்தனர். பொருளாதார முன்னேற்றத்தை இம்மக்கள் எட்டும் வகையில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றால் இக்கொடுமைகளிலிருந்து ஓரளவு விடுதலை பெற்றனர். இன்று கலப்புத் திருமணத்தின் மூலம் பிரச்சனைகள் எழுந்தாலும் சிலர் அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனநிலை ஏற்பட்டுள்ளது.

நம் இந்திய நாட்டில் சாதியப் பாகுபாடும் தீண்டாமைக் கொடுமையும் இல்லாதிருந்தால் மக்கள் சக்தி ஒன்றிணைந்து செயல்பட்டு எப்பொழுதோ வல்லரசு நாடாக விளங்கியிருக்கும். நம் முன்னேற்றத்திற்கான தடைக்காரணிகளுள் ஒன்று தீண்டாமையே. இன்று இவ்வுணர்வு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

வெகுவாகக் குறைந்துள்ளது. இதற்குக் காரணம் ஒதுக்கப்பட்ட மக்கள் கற்ற கல்வியும் மற்றும் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளதுமாகும்.

தீண்டாமை உணர்வு மனிதத்துவத்தைச் சிதைத்து மனித மாண்பைக்குலைக்கம் தன்மையுடையது. எனவே அதை நாட்டை விட்டே ஒழிக்கவேண்டுமென்ற நோக்கில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. “தீண்டாமை ஒழிக்கப்படுகிறது. அதனை எந்தவிதத்தில் நடைமுறைப்படுத்துவதும் தவிர்க்கப்படுகிறது. தீண்டாமை பற்றி ஒரு தகுதி இன்மையை வலியுறுத்த முனைவது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம்.”[3] (விதி எண். 17) என்று கூறப்பட்டுள்ளது.

“சுதந்தரம் சிறையிலே’ என்ற சிறுகதையில் விளிம்புநிலை மக்களை உயர்சாதியினர் ஒதுக்கி வைத்திருப்பதும் அவர்கள் கல்வி கற்றிருந்தால் கூட அவர்களோடு உறவில்லாமல் விலகிச்செல்வதும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியரான முத்துப்பட்டன். ஆசிரியர் உரிமைகளுக்காக நடத்தப்பட்ட போராட்டத்தில் கைது செய்யப்பட்டார். சிறையில் இருக்கும்பொழுது இவரது தாய் இறந்துவிட்டதாகச் செய்தி வருகிறது. உயர்சாதியினர் வாழுகின்ற ஊரில் இவரது குடும்பம் இருப்பதால் தமது குடும்பத்திற்கு ஆதரவாக யாரும் உதவமாட்டார்களே என்ற ஆதங்கம் இவருக்குள் கலக்கத்தை ஏற்படுத்துகிறது.

“எங்கம்மா செத்துட்டாங்கறது எனக்கு ஒண்ணும் ரொம்பக் கவலை இல்லை சார். நான் அரிசன். அரிசன்லேயும் நாங்க தாழ்ந்த சாதி. அந்த ஊர் முழுக்கவுமே உயர்ந்த சாதிக்காரங்க. அந்த ஊர்லே எங்களுக்கு சொந்தபந்தமே கிடையாது”. (த.ரா.சி., ப. 234) என்று புலம்புகிறார். தாய் இறந்துவிட்ட சோகத்தைவிட அவளை நல்லடக்கம் செய்ய ஆதரவின்றித் தமது குடும்பம் துன்பப்படுமே என்ற எண்ணம் தான் அவரைச் சோகத்திலாழ்த்துகிறது. அனைத்துச் சாதியினரும் ஒன்றுபட்டு, போராடிப் பெற்ற சுதந்திர நாட்டில் சாதியின் பெயரால் மக்களை ஒதுக்குவது மிகுந்த அவமானச் செயலாகும். மனிதன் இறக்கின்ற சூழலில் கூட சாதியின் அடிப்படையில் அவனை உதாசீனப்படுத்துகின்ற இரக்கமற்ற மனிதர்களாகவே உயர்சாதியினர் வாழ்கின்றனர் என்பதை ஆசிரியர் தனது படைப்பில் தெளிவுபடுத்துகின்றார். தீண்டாமையை எதிர்த்து சட்டங்கள் இயற்றப்பட்டாலும் பல்வேறு சமூக ஆர்வலர்கள் குரல் எழுப்பினாலும் இன்றும் அதன் வேர் முற்றிலும் அழிக்கப்படாத நிலையே உள்ளது.

முடிவுரை

தற்பொழுது கற்கின்ற மாணவர்களிடையே இந்த வேற்றுமை உணர்வு இல்லை என்றாலும் சாதி சான்றிதழ், இடஒதுக்கீடு, கல்விச் சலுகைகள் என்ற நிலையில் பாகுபாடுகள் இருக்கின்றன.சாதி இரண்டொழிய வேறில்லை என்னும் சான்றோரின் கூற்று பொய்யாகிப்போனது. இந்திய நாட்டில் அனைவரும் ஒரே குலம் என்ற அடிப்படையில் சமூகம் அமைந்து சலுகைகள் என்பதும் இடஒதுக்கீடு என்பதும் ஏழைமக்கள் அனைவருக்கும் சமம் என்ற நிலை ஏற்பட்டால் தான் சாதியற்ற சமுதாயம் மலரும். உயர் சாதியினரிலும் வறுமையின் பிடியில் சிக்கித்தவிக்கின்ற ஏழைமக்கள் இருக்கின்றனர். எனவே பேதங்கள் களைந்து ஒற்றுமை உணர்வுடன் வளமான சமுதாயத்தை உருவாக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. ஆ.ஜெகதீசன், இலக்கியத்தில் மனித உரிமைக்கோட்பாடுகள், ப.40
2. எஸ்.ஸ்டீபன் குழந்தைசாமி, நமது அடிப்படை உரிமைகளும் கடமைகளும்,பக்.8-9
3. சி.எஸ். தேவ்நாத், அடிப்படை மனித உரிமைச் சட்டங்கள், ப.27

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

இன்றைய கல்வி முறையிலுள்ள சவால்களும் தீர்வுகளும்
Challenges and Solutions in Today's Educational Pedagogy

முனைவர். செ.வில்சன், உதவிப்பேராசிரியர்,
அரசு கல்வியியல் கல்லூரி, ஒரத்தநாடு-614 625, தஞ்சாவூர்- மாவட்டம், தமிழ்நாடு.

Abstract

The significance of the article is to do a close study on the present state of challenges and solutions in educational pedagogy of the current situation. The modern era is highly valuable and murky in its dimension due to the increase of juveniles. It becomes hard to improve them in the face of digital era. Day- by-day the values of education gets low, so there is an immanent need to face those challenges and to bring solutions to overcome those obstacles. Hence, the article brings forth the ideas related to educational pedagogy.

Keywords: Challenges, Solutions, Education, Pedagogy

முன்னுரை

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார். ஔவையார். அத்தகைய அரிய மானிடப் பிறவியை பொருளுடையதாகவும், பயனுடையதாகவும் நாம் அமைத்துக் கொள்ள ஊன்றுகோல் போன்று உதவுவதுதான் கல்வி. வாழ்க்கை என்னும் ஆற்றினைக் கடக்கவும், அதில் வரும் தடைகளைக் களையவும், காப்பாற்றிக் கொள்ளவும் நமக்கு உதவுவது நாம் பெறும் கல்வியறிவும், கேள்வியறிவும் ஆகும். பண்டைக்காலத்தில் கல்வி கற்றுக் கொடுப்பவர்கள் தெய்வத்திற்குச் சமமாக மதிக்கப்பெற்றனர். மண்ணுலகில் வாழ்ந்தாலும், அவர்களைத் தொழுது வணங்கினர். நாடாளும் மன்னனாக விளங்கினாலும், சிறுவயது குருகுலப்பயிற்சி என்பது கட்டாயமாக அளிக்கப்பட்டு வந்தது என்பதை நாம் புராண, இதிகாச காலத்திலிருந்தே வழக்கத்தில் இருந்ததை வாய்மொழிக்கதைகளிலும், இதிகாசங்களிலும், இலக்கியங்களிலும் நாம் காணலாம். இத்தகைய இளமைப் பருவம் என்பது அவனது எதிர்கால வாழ்க்கையில் அவன் சந்திக்கின்ற சிக்கல்களிலிருந்தும், சோதனைகளிலிருந்தும் காத்துக் கொள்ளவும், திறமையாக சவால்களை எதிர்கொள்வதற்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. ஆனால் இன்றைய கல்வி முறை இத்தகைய வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக் தருவதில்லை. மாறாக மாணவர்களை மதிப்பெண் வாங்கும் எந்திரங்களாக உருவாக்கத்தான் பாடுபடுகின்றது. அதில் ஏற்படும் சிக்கல்களையும், அதற்கான தீர்வுகளையும் ஆராயும் பொருட்டு இக்கட்டுரை அமைகின்றது.

பாடத்திட்டம்

அன்றை காலத்தில் ஆறு, ஏழு வயதுவரை தாய்ப்பால் குடித்து வளர்ந்தவர்கள் அதிகம். அவர்களின் உடல்நலத்திற்கு அடிப்படைக் காரணங்களுள் அதுவும் ஒன்றாகும். ஆனால் பள்ளியில் சேர்வதற்கு ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளுகின்றனர். அரசுப் பள்ளிகளை விட தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணம் பாடத்திட்டத்தில் காணப்படும் வேறுபாடுகள்தான் முக்கியக் காரணமாக விளங்குகிறது. அரசுப் பள்ளிகளை விட தனியார் பள்ளிகளின் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்குத் தரப்படும் பாடத்திட்டம் , தனியார் பள்ளி மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு மிக எளிதாக இருக்கின்றது. இன்றைய அவரச உலகில் நிதானமாகச் செயல்பட நேரம் என்பதே

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

இல்லமால் போய்விட்டது. மாணவர்களிடையே போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தி முடிந்தவரை இலாபம் சம்பாதிப்பதையே இன்றைய தனியார் பள்ளிகளின் இலட்சியமாக இருக்கின்றது. சொல்லித் தரப்படும் பாடங்கள் மாணவர்கள் மனதில் பதிகின்றதா? அதற்கானப் பதிலை அவன் புரிந்து எழுதுகின்றானா? என்பதைப் பற்றிய கவலை ஆசிரியர்களுக்கில்லை. தாளில் பதில் இருந்தால் போதும் என்ற நிலைதான் தற்போதுள்ளது.

படைப்பாக்கம்

இன்றைய கல்விமுறையில் படைப்பாக்கம் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய நல்ல நிகழ்வாகும். தனியார் பள்ளிகளில் இத்தகைய பயிற்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதன் வாயிலாகத்தான் அதிக வசூல் செய்யும் பணியும் நடந்தேறுகின்றது.ஆனால் இதில் ஏற்படும் சிக்கல் என்னவென்றால், ஆசிரியர் ஒரு குறிப்பிட்ட பணியை (எ.கா. விதைகளைப் பயன்படுத்தி ஓவியம் வரைதல்) பற்றிய வகுப்பில் செய்முறைகளை விளக்கிவிட்டு வீட்டில் நீங்கள் செய்துகொண்டு வாருங்கள் என்று சொல்லி விடுகின்றனர்.மாணவர்களும் ஆசிரியர்களிடம் நல்ல பெயரை வாங்க வேண்டும் என்பதற்காக அலைந்து திரிந்து (பொருட்களுக்காக அல்ல. இந்தப் பணியைச் செய்பவருக்காக) பணியை நிறைவு செய்து ஆசிரியரிடம் நல்ல பெயரை பெற்றுவிடுகின்றனர். இந்த முறையினால் மாணவர்களுக்க என்ன பயன் விளைந்துவிடப் போகின்றது. அந்தக் கலையை உண்மையில் மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், அதற்கான பொருட்களை மாணவர்களை எடுத்துவரச் செய்து அவர்களின் நேர்ப்பார்வையில் செய்யப் பழக்க வேண்டும். தெரியாத மாணவர்களுக்குச் சற்றுக் கூடுதல் கவனம் செலுத்திப் புரிய வைக்கலாம். கூட்டு முயற்சியாக செய்யும்போது மாணவர்களிடையே மகிழ்ச்சியும், ஆர்வமும் ஏற்படுவதோடு, அவர்களிடையே ஒற்றுமையுணர்வை வளர்க்கக்கூடிய சூழலையும் இதன்மூலம் ஏற்படுத்த இயலும்.

ஆசிரியர் மாணவர் உறவு

கல்வியைப் போதிக்கும் குருவை தெய்வமாக வழிபட்டவர்கள் நம் முன்னோரகள். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசைமுறை வழக்கு, பெற்றோர்க்கு அடுத்த நிலையில் நம்மீது அன்பு காட்டுவதிலும் , பேணி வளர்ப்பதிலும் பெரும்பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. பெற்றோர்க்கு தம் குழந்தைகள்மீது பாசம் வைத்திருப்பதில் வியப்பில்லை.ஏனெனில் அவர்கள் அவர்களின் சொத்து .ஆனால் ஆசிரியர்கள் அப்படி இருப்பதில்லை. தன்னிடம் பயிலும் மாணவர்ச்செல்வங்கள் அனைவரையும் அவர்களின் பிள்ளைகளாகக் கருதுகின்றனர். அவர்களை நல்வழிப்படுத்தி, அறிவுச்செல்வத்தை வழங்கி, இன்றைய வாழ்க்கைச் சூழலை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும்? பெற்றோர்க்கு ஆற்ற வேண்டிய கடமைகள், இல்லத்தார்க்கு செய்ய வேண்டுய கடமைகள், சமூகத்திற்கு ஆற்ற வேண்டுய கடமைகள், சமூதாயத்தில் அவனுக்கான இருப்பினை வெளிப்படுத்தலில் அவனுக்கு இருக்கும் பங்களிப்பு போன்றவற்றை உணர்த்துதல் ஆசிரியரின் கடமையாகும்.

மாணவர்களும் தங்களுக்கான இளமைப் பருவத்தின் மதிப்பினைத் தெரிந்து நடந்து கொள்ளவேண்டும் . இன்றைய மகிழ்வை மட்டும் மனதில் எண்ணி மனம்போன போக்கில் நடந்து கொள்ளக்கூடாது. ஆசிரியர்களிடம் பணிவுடனும் அன்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.இந்தப் பணிவானது அடிமைத்தனம் இல்லை. வகுப்பறை இணக்கமாக இனிய சூழலோடு இருந்தால்தான் கற்பிப்பவரும், கற்பவரும் நல்ல மனநிலையில் தங்கள்கடமையை செல்வனே செய்ய இயலும். ஆசிரியர் கூறும் பாடங்களை நன்கு கவனித்து வருதல், புரியாத நிலை ஏற்பட்டால் விரலை உயர்த்தி அனுமதிபெற்று தங்கள் ஐயத்தை வெளிப்படுத்துவது என்பது நாகரிகமான செய்கையாகும். அதைவிடுத்து வகுப்பில் ஆசிரியர் இருக்கும்போது மாணவர்கள் பேசிக்கொண்டிருப்பது, சொல்லவரும் கருத்துக்ளைக் கவனியாது, எதிர்மறை விவாதங்களை முன்வைப்பது வகுப்பறை ஆரோக்கியமற்ற சூழலை உருவாக்கிவிடும்.இதுபோன்ற நடப்புகள் ஆசிரியர் மாணவரிடையே ஒரு விரிசலையும்,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

வளரத்தொடங்கும்போது அவர்கள் யாரையும் மதிக்காமல், எவர் பேச்சையும் கேட்காமல், தீயவழியில் சென்று சமூகத்தில் அவப்பெயருடன் அவதிப்பட நேருகிறது.

பெற்றோர் கடமை

இன்றைய சமுதாயத்தில் கூட்டுக்குடும்ப வாழ்க்கை என்பது சிதைந்துவிட்ட நிலையில் தனிக்குடும்பங்கள் பெருகிவிட்டன.பொருளாதாரச் சிக்கல் என்பது மேம்போக்கான காரணம். ஆனால் மனிதனின் மனித சுய நலம் தான் தனிக்குடும்பங்கள் பெருகுவதற்கு உண்மையான காரணமாகும்.இதில் பெரிதும் பாதிக்கப்படுவது இன்றையக் குழந்தைகள்தான். இருவரும் வேலைக்குச் செல்லும் வீடுகளில் வளரும் குழந்தைகள் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாக மாறிவருவதைப் புள்ளிவிபரப் பட்டியல் தெரிவிக்கின்றது. பேசுவதற்கு ஆளின்றி, விளையாடுவதற்கு நண்பர்களின்றி தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன்பும், காணொளி விளையாட்டுகளிலும் தங்கள் நேரத்தைச் செலவிடுகின்றனர். இதனால் அவர்கள் உடலளவிலும், உள்ளத்தளவிலும் பாதிக்கப்படுகின்றனர். மாறிவிட்ட உணவு முறையாலும், மருந்தற்ற நோய்களாலும் மனிதர்களின் ஆயுள் காலம் குறைந்துகொண்டே வருகின்ற இன்றையச் சூழ்நிலையில், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல ஆரோக்கியமான உணவினையும், கற்பதற்கு ஏற்ற சூழலையும் உருவாக்கித் தரல் வேண்டும். அவர்களிடம் மனம்விட்டுப் பேசுதல், அவர்களின் தேவையான விருப்பங்களை காரணம் கூறி மறுத்தல், முடிந்தவரை அவர்களிடம் மனம்விட்டுப் பேசுதல், அவர்களின் தேவையான விருப்பங்களை நிறைவேற்றுதல், தேவையற்ற விருப்பங்களை காரணம் கூறி மறுத்தல், முடிந்தவரை அவர்களிடம் கோபம் காட்டாமல் இருத்தல், தங்களின் குடும்பச்சூழலை விளக்கி அதற்கேற்றவாறு குழந்தைகளை வளர்த்தல். முதியோரிடம் அன்பு காட்டச் செய்தல் பெரியவர்களிடம் மாரியாதையாக நடந்துகொள்ளச் செய்தல் ஆசிரியர்களிடம் குழந்தைகளின் நடவடிக்கைகளைப் பற்றி கேட்டுத் தெரிந்துகொள்ளுதல் போன்றவை பெற்றோரின் கேட்டுத் தெரிந்துகொள்ளுதல் போன்றவை பெற்றோரின் கடமையாகும்.பள்ளிக் கட்டணம் கட்டுவது.தேவையானவற்றை வாங்கிக் கொடுத்துவிடுவது மட்டும்தான் பெற்றவர்கள் கடடை என்று நினைத்துக் கொண்டு செயலாற்றும் பெற்றோர்கள் எதிர்காலத்தில் தங்களின் செயலை நினைத்து வருந்தும்படி ஆகிவிட நேருகிறது. அதனால் பெற்றோரும் தங்கள் கடமையின் உணர்ந்து செயல்பட வேண்டும்.

தாய்மொழிக் கல்வி

தமிழ்நாட்டில் பிறந்து , தமிழைக் தாய்மொழியாகப் பேசும் மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு தாய்மொழியைத் தவறின்றிப் பேசவும், எழுதவும் கற்றுக்கொடுக்க வேண்டியதைக் தங்கள் கடமையாக நினைக்க வேண்டும். தமிழ் பேசுவதைத் தகுதிக் குறைவாக நினைக்கும் மனப்பான்மையை மாற்றவேண்டியது இன்றைய ஆசிரியர், பெற்றோர்கள், கையில் தான் உள்ளது. அறிவு வளர்ச்சிக்காவும் பொருள் ஈட்டவும் பிற மொழிகளைக் கற்றாலும், தாய் மொழியில் பயிற்சியுடையவராக இருத்தல் மிகவும் அவசியம். ஏனெனில் ஜப்பான் போன்ற நாடுகளிலும் கர்நாடகா போன்ற மாநிலங்களிலும் தங்கள் மொழியை வளர்ப்பதிலும், பாதுகாப்பதிலும் அதிகம் கவனம் செலுத்தகின்றனர். இவற்றைவிட தொன்மையும், சிறப்பும் வாய்ந்த நம் தமிழ்மொழி சிறப்பை நாம் மறப்பதோ புறக்கணிப்பதோ தாயைப் பழிப்பதற்கு ஒப்பாகும். இந்த ஏற்றத் தாழ்வு களையப்பட வேண்டும். மாணவர்கள் சிலர் தமிழ் தெரியாது என்று கூறுவதை பெருமையான செயலாக நினைக்கின்றனர். அது மிக அவமான செயல் என்பதை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

தீர்வுகள்

ஆசிரியர்களுக்கு

1. மாணவர்களிடத்தில் உண்மையான அன்பு செலுத்தி உள்ளம் ஒன்றிய நிலையில் கற்பித்தல் வேண்டும். ஆசிரியப் பணி அறப்பணி என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

2. மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வு (கல்வியின் தரத்தை வைத்து) பார்க்கக் கூடாது. அது மாணவர்களிடையே தாழ்வு மனப்பான்மையையும், பகையுணர்வையும் ஏற்படுத்தி விடும்.
3. நன்கு கற்கும் மாணவர்களைவிட குறைவான திறனுடைய மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களின் திறனை ஓரளவு வளர்த்தெடுக்க முயலுதல்.
4. ஆசிரியரின் சொந்த விருப்பு வெறுப்புக்களை மாணவர்களிடத்தில் காட்டக் கூடாது. இது மாணவர்களிடையே தேவையில்லாத விவாதப் பொருளை உண்டு பண்ணிவிடும்.
5. கல்வி பற்றிய விழிப்புணர்வினை கல்லாமையின் இழிநிலையை விளக்குதல் எதிர்கால வேலைவாய்ப்பு நிலைக்கேற்ப தங்களைத் தகுதிப்படுத்திக்கொள்ள கல்வியின் இன்றியமையைப் புலப்படுத்தல்.
6. செயல்முறைப் பயிற்சி வகுப்பில் மாணவர்களோடு கலந்து அவர்களை ஊக்குவித்தல் அவர்களைச் சிறப்பாகச் செயல்பட வழிவகுக்கும்.
7. மாணவர்களின் செயல்பாட்டில் ஏதேனும் மாற்றம் கண்டால் உடனடியாகப் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்துதல்.அவர்களுக்குத் தெரியப்படுத்தாமல் எந்தவொரு முடிவும் தன்னிச்சையாக எடுத்தல் கூடாது. அதனால் தேவையில்லாத விவாதங்களைத் தவிர்க்கலாம்.

மாணவர்களுக்கு

1. ஆசிரியர்களிடம் அன்புடனும், பணிவுடனும், தோழமையுடனும் பழக வேண்டும். வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் அது கைக்கொடுக்கும்.
2. சொல்லிக் கொடுக்கும் பாடங்கள் புரியவில்லை என்றால் பணிவாகத் தெரியப்படுத்த வேண்டும்.அதைத் தெரிந்து கொள்ளுவதில் ஆர்வத்துடன் செயல்பட வேண்டும்.
3. பாடம் நடத்துகையில் தேவையில்லாமல் பேசக் கூடாது, நல்ல நட்பு வட்டத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.
4. திரைப்படம், தொலைக்காட்சி, கைபேசி (இணையத் தொடர்புள்ள) போன்ற ஊடகங்களின் ஈர்ப்பிலிருந்து விடுபடல் வேண்டும்.
5. காலத்தின் அருமையை உணர்ந்து செயல்பட வேண்டும். அன்றைய பாடங்களை, பயிற்சிகளை உரிய நேரத்தில் படித்து முடிக்கப் பழகுதல் வேண்டும்.

பெற்றோர்களுக்கு

1. பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்திற்கும், உள்ள ஆரோக்கியத்திற்கும் ஏற்ற சூழலை உருவாக்கித் தருவதில் பெற்றோர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது.
2. பிள்ளைகளைக் கண்டிப்புடனும், கனிவுடனும், கடமையை உணரச்செய்து வளர்த்தெடுப்பதில் பெற்றோர்க்கு பங்கு அதிகம்.
3. அவர்களின் செயல்பாடுகளைக் கூர்ந்து கவனித்தால் கல்வியில் அவர்கள் காட்டுகின்ற ஈடுபாட்டின் அவ்வப்போது சரிபார்த்தல் , முடிந்தவரை அவர்களோடு பொழுதைக் கழித்தல் குழந்தைகள் சிறப்பாக படித்து வளருவதற்கான சூழலை ஏற்படுத்தும்.
4. ஓரிரு மதிப்பெண்கள் குறைந்துவிட்டால் பிள்ளைகளைத் தண்டிப்பது மிகப்பெரிய தவறு என்பதை பெற்றோர்கள் உணரவேண்டும். அவர்கள் பந்தயக் குதிரைகள் அல்ல. முதலில் வருவதற்குத் தூண்டக்கூடாது. அது அவர்களிடையே மனச்சோர்வை ஏற்படுத்தி விடும்.
5. அதிகப் பணம் வாங்குகின்ற பள்ளிகள் தான் சிறந்த கல்வியைத் தருகின்றது என்ற போலியான மாயையைப் பெற்றோர்கள் உணரவேண்டும் .கிராமங்களில் படித்த ஏழைக் குழந்தைகள் இன்று கல்வி நிலைகளில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றமையை பத்திரிக்கைகள் தெரிவிக்கின்றன. முடிந்தவரையில் குழந்தைகளைத் தங்கள் கண்பார்வையில் வைத்திருக்கவே பெற்றோர்கள் எண்ணம் வேண்டும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

6. மாணவர்களின் தனித்திறன்களுக்கு மதிப்பளித்து வாய்ப்பு கிடைத்தால் அதற்கான பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.
7. முடிந்தவரை குழந்தைகளின் உள்ளங்களில் நல்ல செய்திகளைப் பதிவு செய்தல் நல்ல கதைகள் கூறுதல் நல்ல புத்தகங்களைப் வாங்கிக் கொடுத்துப் படிக்கச் சொல்லுதல் ஆசிரியர்களிடத்தில் தங்கள் குழந்தைகளின் கல்வித்தரம் பற்றி அவ்வப்போது கேட்டுத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

முடிவுரை

இன்றைய நிலையில் கல்விச்சூழல் என்பது மிகவும் கவனிக்கப்பட் வேண்டிய ஒன்றாகும்.இதில் ஆசிரியர்கள் மாணவர்கள் ,பெற்றோர்கள் , தங்கள் கடமைகளை உணர்ந்து செயலாற்ற வேண்டும். கற்றலின் ஏற்படும் சிக்கல்களுக்கு சில நேரங்களில் கல்வி மட்டும் காரணமாக இருப்பதில்லை. அதைச் சார்ந்த பிற செயல்களும் காரணமாக இருப்பதில்லை. அதைச் சார்ந்த பிற செயல்களும் காரணமாகி விடுகின்றன.இவற்றையெல்லாம் தாண்டி நாம் கற்கும் கல்வியானது உண்மையில் நம்மை நல்வழிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

மேற்கோள் நூல்

1. ரவி, கல்வி சிந்தனை, அறம் பதிப்பகம் ஈரோடு.
2. கோவிந்தன், கல்வி, நிலவு பதிப்பகம் சென்னை.
3. இராமச்சந்திரன், இன்றைய கல்வி நிலை, பல்லவி பதிப்பகம் நாகர்கோவில்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

குறுந்தொகையில் நீர்
Water in *Kurunthokai*

மோ. விஜய், முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி (த), தஞ்சாவூர்.

Abstract

The implication of the article is to do a close study on the presence of water in the work "Kuruntokai". Tamil culture gives more importance to water and insists there is no life without water, mentioned in the "Thirukkural". The work taken for analysis belongs to the Sangam Age. It is the Golden Age of the Tamils. The people of that time gave more importance to preserve water and nature to live a peaceful life. Lots of evidences are seen in th work. Hence, the article brings forth the ideas related to water in the chosen work.

Keywords: Water, *Kurunthokai*, Life, Agriculture

சங்ககாலம் தமிழர்களின் பொற்காலம் எனப்படுகிறது. அக்காலத்தில் தொகுத்து வழங்கிய நூல்கள் தமிழ் மக்களின் வாழ்வியலைப் பறைசாற்றுவதாக அமைவதே அதற்கு காரணமாகும். மனித வரலாற்றில் நீர் முதன்மையான அடிப்படை உயிர்ப்பு பொருளாக இருக்கிறது. தமிழர்களின் வரலாற்றுப் பெருமைகளை எந்நாளும் நீர் சார்ந்த மனித வாழ்வியல் தெளிவுபடுத்தும். 'நீர் இன்றி அமையாது உலகு' என்னும் வள்ளுவரின் வாக்கின் மூலம் நீரின் முக்கியத்துவத்தை அறியமுடிகின்றது. நிலம் உண்டாவதற்கு முன்னரே நீர் உருவாகிவிட்டது என்பதை,

"…… முதுநீர்ப்
புணரி திளைக்கும்" (குறுந்.299:1-2)

என்ற குறுந்தொகைப் பாடல் சுட்டுகிறது. சங்க கால மக்களின் வாழ்வியல் கூறுகள் நீரினை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தது என்பதையும், அவர்களுடைய அன்றாட நிகழ்வுகளிலும், கலாச்சாரம், பண்பாடு, பழக்கவழக்கம் முதலானவற்றில் நீரின் பங்கீடு குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நீர்

நீர் என்பது 'எச்.2.ஓ.' (H_2O) என்ற மூலக்கூறின் அடிப்படையில் உருவானதொரு சேர்மம் என்று அறிய முடிகின்றது. நீர் என்பது நீர்மை என்ற பண்பின் அடிப்படையில் உருவானப் பெயர்ச்சொல். நீர்த்து இருத்தல், நீர்த்துப் போகுதல் அல்லது நீர்த்துக் காணப்படுதல் என்பது இதன் தன்மை. அதாவது இயல்பு. நீர்மையிலிருந்து உருவானதால் நீர் என்ற இச்சொல் உணர்ந்து கொள்ளப் படுகின்றது. உலகில் உள்ளப் பொருட்களிலேயே நீர் மட்டும் திரவ நிலையிலும், 'பனி' என்ற திடப் பொருள்நிலையிலும், 'நீராவி' என்ற வாயுப் பொருள் நிலையிலும் வேறுபடுத்தி அறியப்படுகின்றது.

தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் நீர் என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டமைந்த பற்பல கொற்கள் காணப்படுகின்றன. தமிழர் மிகவும் தொன்மையான நிலையில் நீரை வேறு பெயர்களாலும் நீர் நிலைகளை வேறுபடுத்தியும் அறிந்திருந்தனர்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

பிங்கல நிகண்டானது நீரைக் குறிக்கின்ற ஐம்பது சொற்களை பதிவு செய்துள்ளது. தமிழ் மக்கள் நீரை வகைப்படுத்தும்போது ஐவகையாகக் கூறுகின்ற பழக்கமுண்டு.

தொல்காப்பியர் வகுத்துரைக்கின்ற எட்டு வகையான கருப்பொருள்களில் நீர்நிலை பற்றி தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இதனை,

"தெய்வம் உணவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"[1]

என்ற நூற்பா விளக்குகிறது. இந்நூற்பாவிற்கு இளம்பூணர் விளக்கம் அளிக்கும்போது 'பிறவும் என்றதனால்' முல்லைக்கு கான்யாறும்; குறிஞ்சிக்கு சுனைநீரும் அருவி நீரும்; பாலைக்கு அறுநீர்க் கூவலும் அறுநீர்ச் சுனையும்; மருதத்திற்கு ஆற்று நீரும் பொய்கை நீரும்; நெய்தற்கு கேணி நீரும் கடல் நீரும் என ஐந்து திணைகளுக்கான நீர்நிலைகளைச் சுட்டுகிறார்.

உழவும் உணவும்

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் மனிதனுக்கு மிகவும் தேவை. இவை அனைத்தும் விவசாயத்தின் அடிப்படையில் பெற வேண்டும் உணவு இல்லையெனில் எவ்வுயிரும் உயிர்வாழ முடியாது. இவ்வுலகம் தன்னிலை திரியாமல் இருக்க நீர்ப்பதத்தோடு கூடிய மண் இன்றியமையாததென்பதைப் பழந்தமிழர் உணர்ந்திருந்தனர். உயிர்கள் வாழ உணவு எவ்வளவு இன்றியமையாத தேவையோ அதைப்போல இந்நிலம் வளமாக இருக்க நீர் இன்றியமையாத மூலமாகும். இதனை,

"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே"[2]

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன.

உழவுத்தொழில் செய்ய நீர் இன்றியமையாத ஒன்று. சங்ககால மக்கள் எப்பொழுதும் நீர் கிடைக்கப்பெரும் இடங்களிலும் நீர் நிலைகளுக்கு அருகிலேயும் உழவுத்தொழிலை மேற்கொண்டனர். இதன் காரணமாக நேரமும் செலவும் மிச்சப்படும். சிறுக்குடில்களில் வாழக்கூடிய நீரின் உதவியினைக் கொண்டு மலைநெல்லை விதைத்தனர் என்பதை,

"அருவிப் பரப்பின் ஐவனம் வித்தப்
பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்கும" (குறுந்.100:1-2)

என்ற பாடலடிகளின் வாயிலாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது. மேலும் நீர் நிலைகளை அருகே உடைய நாடு (ஊர்) செழிப்பாக இருக்கும் என்பதை,

"…நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை" (குறுந்.61:4-5)

என்றும், ஊரினைச் சார்ந்து இருக்கக்கூடிய வயலில் உள்ள பயிர்கள் பொய்கைநீரின் மூலமாக செழுமையடைந்தது என்பதை,

"கழனி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம்
பழன வாளை" (குறுந்.8:1-2)

என்ற பாடலடிகள் எடுத்தியம்பியுள்ளது.

உலகில் உள்ள எல்லா நீர்நிலைகளுக்கும் தன்மையாக அமைவது மழையாகும். மழையே எல்லா உயிர்களுக்கும் அடிப்படை. மழைப்பொழியும் போது குளம், குட்டை, பொய்கை, அருவி என எல்லாம் நிறம்பி அவற்றின் மூலமாக நீரினை சிறுக சிறுகத் தந்து மற்ற உயிரினை வாழச்செய்யும். வானிலிருந்து மழைத்துளி வீழாவிட்டால் பசும்புல்கூட இவ்வுலகைக் காண்பது அரிது என்பதை,

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

பசும்புல் தலைகாண் பரிது"[3]

என்று வள்ளுவர் பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவுபடுத்தியுள்ளார். குறிஞ்சி நில மக்கள் மழைபொழிகின்ற போது காலம் கடத்தாமல் நெல்லினை விதைத்தனர். மேலும் மழை இல்லாத காலங்களில் அருவியிலிருந்து வரக்கூடிய நீரின் மூலமாக அதனை விளைவித்தனர் என்பதை,

"மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி
அருவியின் விளைக்கும்" (குறுந்.371:2-3)

என்ற குறுந்தொகைப் பாடலடிகளின் வாயிலாக தம் கண்முன்னே புலவர்கள் காட்சிப்படுத்துகின்றன.

தமிழர்களுடைய பாரம்பரிய உணவு என்று அறியப்படுகின்ற நெல், வரகு, தினை முதலான பயிர்கள் மழையின் உதவியுடன் சங்ககால மக்கள் பயிரிட்டனர். இதனை,

"பழமழைக் கலித்த புதுப்புன வரகின் (குறுந்.220:1)
...பொன்போல் சிறுதினை"
"கிளிகுரைத்து உண்ட கூழை இருவி (குறுந்.133:1)
"அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
"படுஇலைக் குளவியொடு பசுமரல் கட்டும் (குறுந்.100:1-2)
பழமழை பொழிந்தெனப் பதன் அழிந்துஉருகிய"
"சிதட்டுக்காய் எண்ணின் சில் பெயற் " (குறுந்.261:1-2)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

சிறிய அளவில் விவசாயம் செய்பவர்கள் குறுகியகால பயிரினையே தேர்வு செய்வர். ஏனெனில் அதன் மூலம் வரும் வருவாயினைக் கொண்டே அவர்களுடைய பொருளாதார நிலைப்பாடு காணப்படும். அதனை அனுபவரீதியில் உணர்ந்த பழந்தமிழர்கள் குறுகிய காலப்பயிர்களை விளைவித்தனர். சிறுதினை என்கிற குறுகியகாலப் பயிரினை அருவியின் பயனைக்கொண்டு மலையருகே உள்ள கொல்லையில் விளைவித்தனர் என்பதை,

"...சாரல்
சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்து
இரவு அரிவாரின் தொண்டகச் சிறுபறை" (குறுந்.375:2-4)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

மழையின்மையின் காரணமாக நிலம் வற்றி நீரற்றுக் காணப்படும். நீர் வேட்கையைப் போக்க 'உகாய்' என்கிற மரத்தின் பட்டையை மென்று சுவைத்து நீர் வேட்கையைத் தனித்துக் கொள்கின்ற இயல்பு ஆறலைக் கள்வர்க்கும் வழிச் செல்வோருக்கும் இருந்ததை,

"நீர்நசை வேட்கையின் நார்மென்று தனியும" (குறுந்.274:5)

என்ற பாடலடிப் புலப்படுத்துகின்றது. மேலும் நீரிலாத பாலைவழியில் செல்வோர் நீர் வேட்கையைத் தனிப்பதற்கு நெல்லிக்காயைத் தின்று தன் தாகத்ததைப் போக்கியதை,

"சுரந் தலைப்பட்ட நெல்லிஅம் பசுங்காய்
மறப்புலிக் குருளை கோள்இடம் கரக்கும்" (குறுந்.209:1-2)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன.

இயற்கையின் வரமாக இருக்கின்ற அ∴றிணை உயிரினங்கள் நீர் சார்ந்து விளைகின்ற உணவினை விரும்பி உண்ணும் மலைச்சாரலில் விளைந்த பெரிய கதிர்க் கொத்துகளையுடைய தினையை கிளிகள் உண்ண வந்ததை,

"...சாரல்
பிடிக்கை அன்ன பெருங்குரல் ஏனல்
......குளிரே" (குறுந்.360:4-6)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

கோடை காலத்தில் பெண்யானையின் பசியைப் போக்க ஆண்யானை ‘யா மரத்தின்’ பட்டையை உரித்து அதன் நீரை தன் துணைக்கு அளித்ததையும், அருவியால் தரப்பட்ட இனிய சொறுக்கட்டித் தட்டையை உணவாக கிடைத்ததை,

“பிடிபசி களைஇய பெருங்கை வேழம்

மென் சினை யாஅம் பொளிக்கும” (குறுந்.37:2-3)

என்ற பாடலடிகள் விளக்கியுரைக்கின்றன.

நீர்ப்பாதுகாப்பு

ஒரு நாட்டின் நீர்நிலைகள் என்பவை அந்நாட்டின் உயிர் நாடிகளாக அமைகின்றன. அவ்வகை நீர்நிலைகளை உருவாக்கினால் மட்டும் போதாது. அவற்றை இயற்கை சீற்றங்களிலிருந்தும், எதிரிகளிடமிருந்தும், விலங்குகளிடமிருந்தும் பாதுகாத்தல் வேண்டும். நீர் நிலைகளை உருவாக்குதலும் அவற்றைக் காத்தலும் நாட்டின் வளர்ச்சிக்கு ஏற்ற செயல்களாக அமைகின்றன. மழைக்காலங்களில் வெள்ளம் போன்ற அழிவுகள் ஏற்படுவது இயல்பு. அதன் காரணமாக அணை, ஏரி, குளம் போன்றவற்றின் கரைகள் உடையாமல் பாதுகாக்க காவலர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இவ்வகையான நீர்நிலைகளில் உடைப்பு ஏற்பட்டால் அதன் காரணமாக வரும் விளைவானது மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். மழைக்காலத்தில் நீர் நிரம்பிக் காணப்படும் குளத்தின் கரைகளை காவலர்கள் உடையாமல் பாதுகாத்தனர் என்பதை, மாரிக் குளத்துக் காப்பா ளன்னன்[4]

என்ற பாடலடி எடுத்தியம்புகிறது.

மழைக்காலங்களில் பெய்யும் அதிக மழையின் காரணமாக அருவிகளில் அதிகமான நீர்வரத்து இருக்கும். அது மேலும் வெள்ளமாக மாறுகின்ற சூழ்நிலையில் அருவியின் அருகே வாழக்கூடிய மக்களுக்கு பாதிப்பு ஏற்படும். அவ்வகையில் அருவிகளுக்கு அருகே தினைப்புனம் காப்பதற்காக சிறு காவல் குடில்கள் அமைக்கப்பட்டிருந்தது என்பதை,

“வரையின் தாழ்ந்த வால்வெள் அருவி

…இன்னாது இருந்தஇச் சிறுகுடியோரே” (குறுந்.284:6-8)

என்ற பாடலடிகளில் காணமுடிகின்றது.

மழைக்காலங்களில் பொழியும் நீரினை வீண்செய்யாது குளம் குட்டை வாய்க்கால் முதலியவற்றை செயற்கையாக வெட்டி நீரினை சேமித்தனர். இவ்வகையான நீர்நிலைகளைப் பாதுகாக்க இன்றளவும் தேக்கு, மருதம், சவுக்கை, ஆத்துப்பூசனம், வேங்கை முதலான மரங்களை நட்டு கரைகளை பலப்படுத்தும் பழக்கம் உள்ளது. சங்ககாலத்தில் அதிகமான நீர்ப் பொருக்கத்தையுடைய குளத்தின் நீர் மோதுகின்ற குளக்கரைகளில் மரங்கள் காணப்பட்டதை,

“இடிகரைப் பெருமரம் போல” (குறுந்.368:7)

என்ற பாடலடி எடுத்தியம்புகிறது. பாதுகாக்கப்பட் நீர்நிலை ‘காப்புடைகயம’ எனப்பட்டது.

கோளில் அரண்மனை முதலான இடங்களில் நீர் அரன் காணப்பட்டது. இதனை மதுரை மாநகரத்தின் கோட்டை மதிலுக்கு வெயிப்புறத்தில் ஆழமான அகழி மதிலைச் சூழ்ந்திருந்நது. இது ஆழமும் நீர்நிறைந்துாக இருந்தது. இந்த அகழியை ‘மண்ணுரை ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கு’ (351) என்று மதுரைக்காஞ்சியும், குண்டு நீர் வரைப்பின் கூடல் (347) என்று புறநாநூறும் கூறுகின்றது.

நம்பிக்கை, வழிபாடு

பண்டையத் தமிழர்களின் வாழ்வில் இயற்கையின் கொடைகள் சிறப்பிடத்தினை கொண்டிருக்கின்றன. அதில் குறிப்பிடத்தக்க ஒன்றான நீர் மட்டும் முதன்மை பொருளாக நான்கு வகயான நிலங்களிலும் இடம்பெறுகின்றன. அருவி, ஆறு, கடல் ஆகியவற்றின் மூலமாக மக்களின் பழக்கவழக்கங்கள் பண்பாடு மற்றும் வமிபாட்டோடு நீர் ஒன்றிப்போவதை அறியமுடிகின்றது. மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான நீர் இல்லாமல் இவ்வுலகில்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தோன்றக்கூடிய ஒரு செல் உயிரினமான 'அமீபா' முதல் எவ்வுயிரியானாலும் வாழ இயலாது என்பதை,

"நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையா ஒழுக்கு"[5]

என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

பழந்தமிழர்கள் இயற்கையைக்கண்டு அஞ்சியதால் ஐம்பூதங்கள் என்று கூறப்படுகின்ற நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றை வழிபடத் தொடங்கினர். இதனை தொல்காப்பியரும்,

"வழிபடு தெய்வம் நின்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து"[6]

என்று குறிப்பிடுகின்றார். வழிபாடு என்ற சொல்லிற்கு வணக்கம், வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, பூசனை, வழக்கம் என்று நிகண்டுகளும் அகராதிகளும் புலப்படுத்துகின்றன. இதன் காரணமாக நீரையும் நீர்நிலைகளையும் தெய்வமாகவே வணங்கத் தொடங்கியுள்ளனர்.

உழவுத்தொழிலினை தொடங்குகின்ற மாதத்தில் பெய்யக்கூடிய பெரிய மழையினை அந்நாட்டு மக்கள் அனைவரும் வழிபட்டு ஆரவாரத்துடன் வரவேற்றனர். இதனை,

"தொய்யல் மாமழை தொடங்கலின் அவர்நாட்டுப்
பூசல் ஆயம் புகன்றுஇழி அருவி" (குறுந்.367:4-5)

என மதுரை மருதன் இளநாகன் எடுத்தியும்பியுள்ளார்.

சங்ககால மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத நீரினைத் தரும் கடல் ஆறு போன்றவற்றைக் கடவுளாக வழிபட்டனர் என்பது நாம் அறிந்த ஒன்றே. குன்றுகளில் உற்பத்தியாகும் அருவிகளில் தெய்வீகத் தன்மை உண்டெனக் கருதி வழிபட்டனர். இதனை,

"கடவுள் கற்சுனை அடையிறந் தவிழ்ந்த"[7]

என்ற பாடலடியின் மூலம் அறியலாம். கடையேழு வள்ளல்களில் முதன்மையானவன் பாரி. அவன் கொடையில் சிறந்தவனாகக் காணப்பட்டான். அவனுடைய மலை வற்றாத நீர் வளம் உடையதாக காணப்பட்டது. பாரி அறவொழுக்கம் தவறாது பின்பற்றியதன் காரணமாகவே நீர்நிலைகள் நிரம்பிக் காணப்பட்டதாக நம்பப்படுகின்றது. இதனை,

"பாரிபறம்பின் பனிச் சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்" (குறுந்.196:3-4)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன.

இல்லற வாழ்வினைத் துறந்து துறவு வாழ்வினை மேற்கொள்ளும் அறிவர்கள் முக்காலத்தின் இயல்புகளை அறிந்து கூறுவர். இவர்கள் தன் வாழ்வில் சோறும் நீரும் தவிர மற்ற எவற்றையும் விரும்ப மாட்டார்கள். இதன் மூலமாக நீரினையுடைய புனித்தத் தன்மையை அறிய முடிகின்றது. இதனை,

"ஓர்இல் பிச்சை ஆர மாந்தி
...வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பில் பெறிஇயரோ (குறுந்.277:3-5)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. நிகழ்காலத்தில் உடல் உருப்புதானம், கண்தானம், இரத்ததானம் முதலானவை மிகுந்துக் காணப்படுகின்றன. ஆயினும் அக்காலம் முதல் இக்காலம் வரை உயர்ந்த தானமாக உணவு தானம் உள்ளது. 'தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்' என்கிற பழமொழயை அறியாதோர் எவரும் இலர். அவ்வாறாக சங்க காலத்தில் அந்தணர்களுக்குத் தானம் வழங்கப்பெறும் பொருள்களை நீர்வார்த்துக் கொடுக்கும் மரபு சுட்டப்பட்டுள்ளது. இதனை,

"...உயர்ந்தோர்க்கு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

நீரொடு செறிந்த மிச்சில்'' (குறுந்.233:4-5)

என்ற பாடலடிகளின் வாயில் அறியலாம். மேலும் மாலை நேரத்தில் செவ்வானம் பூத்தால் மழைப் பொழயும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. இதனை,

''செவ்வான் செவ்வி கொண்டன்று (குறுந்.108:4)

என்ற பாடலடி உணர்த்துகிறது.

மேற்காணப்பட்ட இவை சங்க காலத்தின் எச்சமாக இன்றும் வழக்கத்தில் உள்ளதை உறுதிபடக் கூறமுடியும்.

நீர்விளையாட்டு

விளையாட்டு, ஆடல், பாடல், உரையாடல் இவை எல்லோருடைய உள்ளங்களையும் கவரக்கூடியது. குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை ஒரு மனிதருடைய வாழ்வில் விளையாட்டு நீடிக்கிறது. ஒரு நாட்டு மக்களின் சீரிய பண்பாட்டை அறிவதற்கு அவர்களுடைய பழக்கத்தில் கொண்டுள்ள விளையாட்டுகளும் துணைபுரிகின்றன. தொல்காப்பியத்தில்,

''செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டெென
அல்லல் நீத்த உவகை நான்கே''[8]

என்ற நூற்பா வாயிலாக விளையாட்டினுடைய முதன்மைப் பாங்கினை அறியமுடிகின்றது.

விளையாட்டை நீர் விளையாட்டு, நில விளையாட்டு என இருவகையாகப் பகுப்பர். சங்க இலக்கியத்தில் முப்பத்தேழு விளையாட்டுகள் இருந்தனவாக சு.சிவகாமசுந்தரி சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம் என்ற (ப.32) நூலில் தெளிவு படுத்தியுள்ளார்.

புதுமழைப் பெய்து ஆற்றில் புதுவெள்ளம் வந்தால் அதனை வரவேற்று வணங்கி மகிழ்ந்து விளையாடும் பழக்கம் தமிழர்களிடம் உண்டு. குறுந்தொகை, பரிபாடல் முதலான இலக்கியங்களில் புதுவெள்ளம், ஆற்றின் சிறப்புகள், நீர் விளையாட்டு பற்றிய செய்தி குறிப்புகள் இடம்பெறுகின்றன.

தலைவன் தலைவி காதல் ஒழுக்கத்தில் ஈடுபடும்போது தலைவன் தலைவிக்கு மலர்க்கொத்து கொடுத்து இருவரும் நீர் நிலையில் நீராடினர். இதனை,

''கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி
பெரும்புனல் வந்த இருதுறை விரும்பி
யாம்அஃது அயர்கம் சேறும் தான்அஃது
அஞ்சுவது உடையாழ் ஆயின்'' (குறுந்.80:1-4)

என்ற பாடல் எடுத்தியம்புகிறது. சங்ககால மக்கள் ஆறு, ஊற்று, கடல், குளம் போன்ற நீர்நிலைகளில் விளையாடுதலை வழக்கமாகக் கொண்டிருந்தனர். பழந்தமிழர் அருவிகளில் விளையாடுதலை இனிமையாகக் கருதினர் என்பதை,

''பாடுஇன் அருவி ஆடுதல் இனிதே'' (குறுந்.353:3)

என்ற பாடலடி உணர்த்துகின்றது.

கலையை மறந்தும் போய்விட்டோம். பெண்கள் கடல் நீரில் விளையாடினர் என்பதை,

''கடல் ஆடுமகளிர் கானல் இழைத்த'' (குறுந்.326:2)

என்ற பாடலடி சுட்டுகின்றது.

நீரில் விளையாடும்போது நேரம் விரையமாவது தெரியாது. நீண்டநேரம் நீரில் விளையாடுவதால் கண்கள் சிவந்து உடல் சோர்வாகிவிடும். இதனை நாம் நிகழ்கால வாழ்விலும் காணமுடியும். நெடும்பொழுது நீரில் விளையாடினால் சிவக்காத கண்களும் சிவக்கும் என்பதை,

''நீர்நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்'' (குறுந்.354:1)

என்ற பாடலடி காட்சிப்படுத்துகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தொகுப்புரை

- மனித வாழ்வின் இன்றியமையாதத் தேவையாக நீர் உள்ளதை சங்க இலக்கிய குறுந்தொகைப் பாடல்கள் தெள்ளிதின் எடுத்தியம்புகிறது.
- பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய பல்வேறு இலக்கியங்கள் நீரினையுடைய தேவையையும், இன்றியமையாமையையும் எடுத்தியம்புவதை மேலே கொடுக்கப்பட்ட ஆய்வின் முடிவாக தரப்பட்டுள்ளது.
- இவ்வுலகில் உருவான உயிரினங்கள் அனைத்தும் நீரை மையப்படுத்தியே வாழுகின்றன. இதனை சங்க இலக்கியம் நேரடியாகவே எடுத்தியம்பியுள்ளது.
- சங்ககால மக்கள் நீரோடு இரண்டரக்கலந்து வாழ்ந்தனர் என்றும் நீர்நிலைகளை சார்ந்து வாழ்ந்தனர் என்றும் அறியமுடிகின்றது.
- ஒரு நாட்டினுடைய பாதுகாப்பு என்பது அந்நாட்டினுடைய புறக்காவலை சார்ந்து அமையும். அதனைப் போன்றே அந்நாட்டின் பொருளாதார பாதுகாப்பு என்பது நீரை மையப்படுத்தியே அமையும். இவ்வகையான செய்திகள் குறுந்தொகைப் பாடல்களில் காணமுடிகின்றது.
- இயற்கை மற்றும் செயற்கை நீர்நிலைகளில் உடைப்பு ஏற்படுமாயின் மிகப்பெரிய இழப்பும், உயிர் சேதமும் நிகழும் என்பதை உணர்ந்த சங்ககால மக்கள் நீர்நிலைகளுக்கு காவலர்களை நியமித்திருந்தனர் எனபதை குறுந்தொகைப் பாடலடிகளின் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகின்றது.
- காலம் காலமாக தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து காணப்படும் பழக்க வழக்கங்களில் நம்பிக்கை மற்றும் வழிபாடு பிரிக்க இயலாத ஒன்று. அவற்றில் நீர் மற்றும் நீர்நிலைகள் சார்ந்த வழிபாடு குறிப்பிடதக்க ஒன்றாகும். இவை சங்க காலத்தின் எச்சமாக இருப்பது தமிழர்களின் வாழ்வியல் பிணைப்பை எடுத்தியம்புகிறது.
- மனித வாழ்வில் நீர்விளையாட்டு என்பது வாழ்வியல் கூறுகளின் ஒரு அங்கமாக இருப்பதை குறுந்தொகைப் பாடல்கள் எடுத்தியம்புகின்றதைத் தெரிந்துகொள்கிறோம்.
- மேற்கண்ட ஆய்வின் மூலமாக நீர் சார்ந்த வாழ்வியல் சங்க காலத்தில் பெரும்பான்மையான இடங்களில் பதிவாகியுள்ளதை தக்கச் சான்றுகளுடன் முன்னிருத்தப்பட்டுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. மு. சண்முகம்பிள்ளை (ப.ஆ), *தொல்காப்பியம் பொருளதிகாரம்* இளம்பூரணம் பகுதி-1, அகத்.நூ.20.
2. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, *புறநானூறு மூலமும் உரையும்* பகுதி-1, பா.வரி.18:18-20.
3. கழக வெளியீடு, *திருக்குறள்* பரிமேலழகர் உரை, குறள்.16.
4. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, *ஐங்குநூறு மூலமும் விளக்கவுரையும்*, பா.வ.206:2.
5. கழக வெளியீடு, *திருக்குறள்* பரிமேலழகர் உரை, குறள்.20.
6. மு. சண்முகம்பிள்ளை (ப.ஆ), *தொல்காப்பியம் பொருளதிகாரம்* இளம்பூரணம் பகுதி-3, மரபு.நூ.106:1-2.
7. பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், *நற்றிணை நானூறு மூலமும் உரையும்*, பா.வ.34:1.
8. மு. சண்முகம்பிள்ளை (ப.ஆ), *தொல்காப்பியம் பொருளதிகாரம்* இளம்பூரணம் பகுதி-3, மெய்ப்.நூ.11.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

பாலைத்திணைப் பாடல்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்
The Norms of Life Enunciated in the Songs of Palai (Desert) Land

முனைவர் பா.வைடூரியம்மாள், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி.

Abstract

The inference of the article is to do a secure study on the life oriented norms in the songs sung in the Palai Land, a land area of sand and bushes, simply a parched land. There are lots of songs seen in the Tamil culture on the life style and the basics of the Palai people. The paper describes about the Palai land, Marriage Customs, Hospitality, Celebration, Valour, Fate, Sorcery, Stonehenge Erection and other related details. Hence, the article brings forth the details related to the desert land of Tamil Nadu.

Keywords: Norms, Life, Songs, Palai (Desert) Land

முன்னுரை

சங்கச் சான்றோர் நிலங்களை குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என நில அடிப்படையில் பலவாறு பிரித்துள்ளனர். இதில் பாலை நிலம் என்பது மணலும் மணல்சார்ந்த பகுதியாகும். தமிழகத்தைப் பொறுத்தவரை பாலை என்று தனியான நில அமைப்பு கிடையாது. இதனை சிலம்பு குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் தன் இயல்பில் மாறும்போது பாலை நிலமாக வடிவம் பெறும் என்கிறது. பாலை நிலத்தை அடிப்படையாகக் கொண்டு சங்கப் பாடல்கள் பல அமைந்துள்ளன. அவற்றில் பேசப்பட்டிருக்கம் வாழ்வியல் நெறிமுறைகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

பாலை நிலம்

காடாகவும் இல்லாமல் மலையாகவும் இல்லாமல் இரண்டும் கலந்து மயங்கி வெப்ப மிகுதியால் திரிந்த சுரமும் சுரம் சார்ந்த இடமுமாய் இருப்பது பாலைநிலமாகும். இது பரந்து விரிந்த நெடிய மணல் பரப்புடன் உயிரினங்கள் வாழ்வதற்கு தகுதியற்ற வெப்பம் நிறைந்த நிலப்பகுதியாகும். உயிரினங்கள் அனைத்தும் வாழ்வாதாரத்திற்குப் போராடும் நிலமாகும். இந்நிலத்திலே வாழும் மக்கள் எயினர் எயிற்றியர் என அழைக்கப்படுகின்றனர்.

திருமண முறைகள்

பாலைத் திணைப்பாடல்களில் திருமண முறைகள் நேரடியாகக் கூறப்படவில்லை. எனினும் கிடைக்கும் ஒன்றிரண்டு குறிப்புகளின் மூலம் ஒரு தார மணத்தையே குறிப்பிட்டதை அறியமுடிகிறது. புரத்தமை ஒழுக்கச் செய்திகள் சுட்டப்படவில்லை. குறந்தொகையில்,

> "இவனி வளைம்பால் பற்றவும் இவளின்
> புன்றலையோடு வாங்கு நள் பரியவும
> துணை மலர்ப் பிணைய லன்னவிவர்
> மணமகிழ் இயற்கை காட்டியோயே" (குறுந்-229)

என்ற பாடல் இதனை விளக்குகிறது. சிறுவயதில் தலைவியின் கூந்தலைத் தலைவன் பிடித்து இழுக்கவும் தலைவி தலைவன் கூந்தலைப் பிடித்து வளைத்து இழுக்கவும் இப்படி சிறு சிறு சண்டைகள் போட்டவர்களைச் செவிலித்தாய் இடைமறித்து தடுத்திருக்கிறாள். இப்படிப்பட்டத் தலைவனும் தலைவியும் இன்று மலர்கள் பிணைந்த இரட்டை மாலை போல மணமுடித்து

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

வாழ்கின்றனர் என்று கூறுகிறாள். சிறுவயதில் உள்ள உறவு நிலையிலிருந்து என்றும் மாறாமல் மணமுடித்து மகிழ்வோடு வாழ்ந்த இக்காட்சியின் வழி பாலை நில மக்கள் ஒருவனுக்க ஒருத்தி என்ற உயரிய வாழ்வியல் கோட்பாட்டினைப் பின்பற்றியுள்ளமையை அறிய முடிகிறது.

விருந்தோம்பல் நெறி

தமிழரின் உயரிய பண்பாடு விருந்தோம்பலாகும். தமிழர் வாழ்வியல் நெறியில் விருந்தோம்பல் முறை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. பசியென வருபவருக்கு உணவளித்தல் மனிதநேயத்தின் வெளிப்பாடாகும். இதனை புறமும்,

“நீர் இன்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” (புறம்- 18)

என்று விளக்குகிறது. பாலை நிலம் வறட்சியான நிலம். அங்கு உணவுப் பொருட்கள்குறைவாகவே கிடைக்கம். எனினும் பாலை நில மக்கள் தங்களுக்குக் கிடைத்த உணவுப் பொருட்களை அவ்வழியே வரும் பாணர்களுக்கு கொடுத்து உபசரித்துள்ளனர். செந்நெல் அரிசியால் சமைத்த சோற்றுடன் முள்ளம் பன்றிக் குழம்பும் உடும்புப் பொரியலும் கொடுத்ததாகப் பாலைத்திணைப்பாடல்கள் கூறுகின்றன.

விழாக்கள்

மனித சமூகத்தின் மகழ்ச்சியை பறைசாற்றுபவை விழாக்களேயாகும். விழாக்கள் கொண்டாடப்படுவதன் மூலம் அச்சமுதாயத்தின் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றையும் ஒற்றுமையையும் அறியமுடிகிறது. பாலை நிலத்திலே பங்குனி விழா, கார்த்திகை விழா, காமன்விழா, பூந்தொடைவிழா எனப் பல்வேறு விழாக்கள் கொண்டாடியதற்கான குறிப்பகள் காணப்படுகின்றன. இதன்வழி பாலை நில மக்களின் ஒற்றுமை உணர்வை அறியமுடிகிறது.

வீரம்

இறந்தவர்களைத் தெய்வமாக எண்ணி வழிபடும் பழக்கத்தை பாலை நிலம் மட்டுமே காட்டுகிறது. வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு நடப்படும் நடுகல்லைத் தெய்வமாக எண்ணி அதற்கு காட்டு மல்லிகைப் பூக்களைக் கொண்டு நாட்பலியிட்டு வழிபாடு செய்தள்ளனர். இதனை,

“உயர்பதுக்கு இவர்ந்த ததர்கொடி அதிரல்
நெடுநிலை நடகல் நாட்பலிக் கூட்டமும்” (அகம்- 289)

என அகநானூறு கூறுகிறது. வீரக்குடிகளாய் பிறந்த பாலைநில மக்கள் தாங்கள் நோய்வாய்ப்பட்டு இறந்தாலும் குழந்தை இறந்தே பிறந்தாலும் வாளால் மார்பில் கீறி புதைப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்திருக்கின்றனர். இதன்வழி பாலை நில மக்கள் வீரத்திற்கு முக்கியத்துவமும் முதலிடமும் கொடுத்து வாழ்ந்தவர்கள் என்பதை அறியமுடிகிறது.

தொய்யில் எழுதுதல்

தலைவன் தலைவியின் மார்பில் தொய்யில் எழுதுவதைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர். “தலைவியின் மார்பில் மலர்களை அப்பி விட்டதைப் போன்று இருந்தது தலைவன் தொய்யில் எழுதியது” (அகம்-389) என்று தோழியிடம் தலைவி கூறுகிறாள். பெண்கள் ஆண்களுக்குத் தொய்யில் எழுதியதாக குறிப்புகள் இல்லை.

ஊழ்வினை நம்பிக்கை

ஒருவனுக்கு இப்பிறவியில் நடக்கும் நன்மை தீமை ஆகிய காரணங்களுக்கு அவன் ஊழ்வினையே காரணமாக அமைகிறது என்பது மக்களின் நம்பிக்கை ஆகும். இதனைச் சிலம்பும், “ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்” என்று கூறுகிறது. பாலைத் திணையிலும் செவிலித்தாய் ஒருத்தி தலைவன் மற்றும் தலைவி சிறுவயதில் கொண்ட நட்பினால் ஊரார்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

அனைவரும் காணும்படி திருமணத்தில் முடிந்ததற்கு அவர்களது ஊழ்வினையே காரணம் என்கிறது.

"நல்லை மன்றம்ம பாலே மெல்லியல்
துணை மலர்ப் பிணைய லன்னவிவர்
மணமகிழ் இயற்கை காட்டியே" (குறுந்- 229)

என்ற குறுந்தொகைப்பாடல் வழி பாலை நில மக்கள் ஊழ்வினையின் மீது கொண்டிருந்த நம்பிக்கையை அறியமுடிகிறது.

நிமித்தம் பார்த்தல்

பாலை நில மக்கள் நிமித்தம் பார்ப்பதில் நம்பிக்கை உடையவர்களாக இருந்துள்ளனர். பறவைகளின் ஒலி, இயக்கம், இடப்பெயர்ச்சி ஆகியவற்றைக் கொண்டு நிமித்தம் பார்த்துள்ளனர். பாலை நிலத்தில் கள்ளியில் வாழும் உயிரினம் பல்லியாகும். இதன் கால் செந்நிறமானது. புல்லியின் ஒலி நன்னிமித்தமாகவே கருதப்பட்டிருக்கிறது. குறுந்தொகை,

"உகிர் நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன் துணை பயிரும்" (குறுந் - 16)

என்கிறது. பாலை நிலத்திலே பல்லியானது தனது துணையை அழைக்கும் ஒலியினைக் கேட்கும் தலைவன், தலைவியை நினைப்பான் என்றும் தலைவி ஞாபகத்தில் மீண்டு விரைவில் வருவான் என்றும் தோழி கூறுவதாக அமைகிறது. "இனியகூறும் பல்லி (நற் 246), நல்லதைக் கூறும் பல்லி (நற்-333), நிகழ்வதைக்கூறும் பல்லி (அகம்-151), முதவாய்ப்பல்லி (அகம்-387), கணிவாய்ப்பல்லி (அகம்-151) போன்ற கூற்றுக்கள் வழி பல்லி சொல் நன்னிமித்தமாகக் கருதப்பட்டதை அறியமுடிகிறது.

ஓந்தி பற்றிய நம்பிக்கை பாலை நில மக்களிடம் மட்டுமே காணப்படுகின்றது. பாலை நிலம் வழியேச் செல்பவர்கள் கருக்குவாளை போன்ற முதுகுடைய முதிய ஆண் ஓந்தியைக் கண்டால் நன்னிமித்தமாக கருதியதை,

"வேதின வெரிநின் ஓதிமுது போத்து
ஆறு செல் மாக்கள் புட்கொளப் பொருந்தும்"

என்று கூறுவதிலிருந்து அறியமுடிகிறது.

கழங்கு போட்டு பார்த்தல்

பாலை நில மக்கள் கழங்கினைப் பயன்படுத்தி நன்மை தீமைகளைக் கணித்துள்ளனர். அகநானூற்றில் "உடன்போக்கில் தலைவியைக் கொண்டுசென்ற தலைவன் அவளை தலைவி வீட்டிற்கு முதலில் அழைத்து வருவானா? ஆல்லது தன் வீட்டுக்கு முதலில் அழைத்து வருவானா? தலைவனின் மனம் எத்தகைய மனநிலையில் இருக்கும்? என்பதை தலைவியின் நற்றாய் கழங்கு போட்டு குறி கூறுபவனிடம் கேட்பதாக அமைந்திருப்பது அக்கால மக்களின் நம்பிக்கையினை எடுத்துரைப்பதாக அமைகிறது எனலாம்.

பிறை வணக்கம்

பிறைதொழும் பழக்கம் தமிழகத்தில் பழங்காலம் முதல் இன்று வரை மரபாக இருந்து வருகிறது. ஒளிவீசும் அணிகலன்களை அணிந்த மகளிர் உயர்ந்த பிறைச் சந்திரனை வணங்கியதை,

"ஒள்இழை மகளிர் உயர்பிறை தொழுஉம்
புல்லென் மாரல" (அகம்- 239)

என அகநானூறு விளக்குகிறது.

தோள்வளை இறுகுதல்

பெண்களின் உடலில் ஏற்படும் சில மாற்றங்களை நன்நிமித்தமாகவே கருதியுள்ளனர். பெண்களின் தோள்வளை இறுகுதல் நல்நிமித்தமாகப் பாலை நிலத்தில் கருதப்பட்டுள்ளது. தோள்வளை என்பது சங்ககால மகளிர் அணியும் அணிகலன்களுள் ஒன்று. தற்காலத்தில்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தோள்காப்பு என்று அழைக்கப்படுகிறது. புாலை நில மகளிர் தனக்கு, தலைவனைப் பிரிந்த காலத்தில் தோள்வளை இறுகினால் பிரிந்த தலைவன் விரைவில் வருவான் என்ற நம்பிக்கை உடையவர்களாக இருந்துள்ளனர். இதனைக் குறுந்தொகை,

"அரிவளைப் பொலிந்த தோளும் செற்றும்
வருவர் கொல் வாழி தோழி பொருவார்" (குறுந்- 260) என்று கூறுவதன் வழிக் காணமுடிகிறது.

நடுகல்

வணிகருடன் போரிட்டு இறந்த பாலை நில ஆறலைக்கள்வர்களுக்கு 'நடுகல்' வைத்து வழிபட்டுள்ளனர். இதனை அகநானூறு "நட்ட போலும் நடாஅ நெடுங்கல்" (அகம்-269) எனக் கூறுகிறது. தலைவி தலைவனுடன் உடன்போக்கு மேற்கொள்கிறாள். இதனை அறிந்த செவிலித்தாய்,

"நெறி இருங்கதுப்பின் என் பேதைக்கு
அறியாத் தேஎத்து ஆற்றிய துணையே" (அகம்-35)

என வேண்டுகிறாள். வீரமிக்க ஆடவனுடன் கொலைத்தொழிலைச் செய்யும் மறவர்கள் இருக்கும் காட்டுவழியேச் செல்லும் அவர்கணை நடுகல் தெய்வமே காப்பாற்ற வேண்டும் என்று வேண்டுவதாகக் கூறப்பட்டுள்ளது.

பதுக்கைகள்

பாலை நில மக்களிடையே இறந்தோரை இலை தழைகள் மற்றும் கற்களைக் கொண்டு மூடி பதுக்கையமைத்தல் என்ற பழக்கம் காணப்படுகிறது. பதுக்கை என்பது ஏதேனும் ஒரு பொருளைப் பிறர் அறியாதவாறு மூடிவைப்பதாகும். இவ்வாறு மூடி வைக்கும் பழக்கம் பாலைத் திணை மக்களிடையே காணப்படுவதை சங்கப்பாடல்கள் விவரிக்கின்றன.

வழியில் வரும் வணிகர் மற்றும் வழிப் போக்கர்களைத் தாக்கி அவர்களின் உடல்களைப் பதுக்கி வைத்துள்ளனர். இப்பதுக்கைகள் "உவல் இடு பதுக்கை" என்று அழைக்கப்பட்டுள்ளன. இதுவே பின்னாளில் இறந்தவர்களைப் புதைத்து அவர்களை வழிபடுகின்ற பழக்கமாகிப் பெருங்கற்படைச் சின்னங்களாக உருவாகி இருக்கலாம் என்பதையம் அறியமுடிகிறது.

முடிவுகள்

- தமிழில் தோன்றி வளர்ந்துள்ள இலக்கிய வகைகளுள் மிகவும் புகழும் பரவலும் உடையது திணை இலக்கியமாகும். இது நிலத்தை அடிப்படையாக உடையது
- உயிர்கள் வாழ்வதற்கே போராடும் நிலமான பாலைநிலத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயரிய கோட்பாட்டு நெறி பின்பற்றப்பட்டு வந்துள்ளது.
- பாலை நிலம் வறட்சியான நிலம் என்றாலும் அந்நில மக்கள் தங்களுக்கு கிடைத்த உணவுப் பொருட்களை தாங்கள் மட்டும் உண்ணாமல் வந்த விருந்தினருக்கும் பங்கிட்டு உண்ட நிலையைக் காணமுடிகிறது.
- ஒற்றுமையுடன் வாழ்ந்தவர்கள் பாலை நில மக்கள் என்பதற்கு அவர்கள் கொண்டாடிய விழாக்கள் சான்றாக அமைகின்றன.. இறந்தவர்களைத் தெய்வமாக வழிபட்டிருக்கின்றனர். அவர்களுக்கு நடுகல் நாட்டியுள்ளனர்.
- ஊழ்வினை நம்பிக்கை, நிமித்தம் பார்த்தல்,குறிகேட்டல், பிறை வணக்கம், தோள்வளை இறுகுதல் மாற்றம் ஆகியவற்றில் நம்பிக்கையடையவர்களாக இருந்துள்ளமையைக் காணமுடிகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

ஆய்வுக்குப் பயன்படுத்திய நூல்கள்

1. *அகநானூறு*, ந.சி.கந்தையா, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2008.
2. *இலக்கிய மானிடவியல்*, பக்தவத்சலபாரதி, அடையாளம் பதிப்பகம், 2014.
3. *தொல்காப்பியம், பொருளதிகார மூலமும் உரையும்*, நச்சினார்க்கினியர் பதிப்பகம், 2007.
4. *குறுந்தொகை*, ஔவை. துரைசாமிப்பிள்ளை உரை, தமிழ்மண் பதிப்பகம், 2008.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

மலைபடுகடாம் காட்டும் மக்களின் வாழ்வியல்
People's Life in *Malaipadukadam*

முனைவர். பெ. ஜெயமாரி, உதவிப்பேராசிரியை (தமிழ்த்துறை)
நோபிள் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாலவநத்தம்.

Abstract:

The purpose of the article is to decode the life of people as depicted in "Malaipadukadam". The book is one of the book in the "Pattupattu" collection. The depiction of musical instruments, infrastructure of Moothur, hospitality and other sorts of common life are explained from the taken source. Hence, the article favours to decode the like related messages from the Tamil culture.

Keywords: People, Life, *Malaipadukadam, amil culture*

முன்னுரை

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மலைபடுகடாம். பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற நூல் மலைபடுகடாம். நன்னனிடம் பரிசில் பெறவரும் கூத்தனுக்குப் பரிசில் பெற்றுத் திரும்பும் கூத்தன் உரிய முறையில் வழி கூறி ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது இந்நூல். பத்துப்பாட்டில் உள்ள ஆற்றுப்படை நூல்களுள் பெரியது. இந்நூலுக்குக் கூத்தராற்றுப் படை என்ற பெயரும் வழங்கப் பெறுகிறது. மலைபடுகடாம் என்றால் மலையில் உண்டாகும் ஓசை என்று பொருள். "மலைக்கு யானையை உவமையாக கூறப்பட்டு, அதன்கண் பிறந்த ஓசையைக் கடாமெனச் சிறப்பித்ததனால் இப்பாட்டு மலைபடுகடாம் என்று பெயர் பெற்றது" என்பார் நச்சினார்க்கினியர்.

கூத்தர் இசைக்கும் கருவிகள்

கூத்தர் கூட்டத்தினர் நன்னனை பார்த்து பாடிப் பரிசில் பெறுவதற்காக அவனது ஊரை நோக்கிச் செல்கின்றனர். அவர்கள் மத்தளம், சிறுபறை, கஞ்சதாளம், நெடுவங்கியம், கொம்பு, குழல், கரடிகைப் பறை, சல்லிப்பறை, ஒருகண் மாக்கிணை ஆகியவற்றுடன் இன்னும் சில இசைக் கருவிகளையும் பைகளில் போட்டுக் கட்டித் தண்டின் இருபுறமும் தொங்கவிட்டுக் காவடியாகத் தூக்கிச் செல்வர்.

யாழ் வருனணை

கூத்தர் கையில் பேரியாழ் வைத்திருந்தனர். பேரியாழ் ஒன்பது வார்க்கட்டுக்களை உடையதாக இருக்கும். வேலைப்பாடு அமைந்த பேரியாழ் ஆராய்ந்து பார்த்துக் கட்டப்பெற்ற நரம்புகளை உடையது. புத்தல் பசையினால் சேர்க்கப்பெற்று வரகுக் கதிர் போன்ற நுண்மையான துளைகள் சிறிய ஆணிகளால் இறுகத் தைக்கப் பெற்றுள்ளன. யானைத் தந்தத்தாலாகிய யாப்பு இணைக்கப் பெற்றுள்ளது. மங்கையின் வயிற்றுப் பகுதியைப் போல யாழின் வயிற்றுப்பகுதி அமைந்திருந்தது. அது கரிய நிறத்தையுடைய வளைந்து ஏந்திய கோட்டினை உடையது. பேராசை உடையது. பேரியாழை இசைப்பதற்கு இசைத்துறையில் முதிர்ந்த ஞானமுடைய பாணர்கள் இருந்தனர். பாணர் இசைக்கும் இசைக்கு ஏற்ப நடனமாடும் விறலியரும் இருந்தனர்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

மூதூர் அமைப்பு

செல்வ வளம் மிகுந்து விளங்கும் சிறப்பினை உடையது நன்னனது மூதூர். ஸ்ரீ ஓங்கிய மதில்களை உடையதாய் பழங்குடி மக்கள் நிறைந்ததாய், பெரிய அங்காடித் தெருக்களைக் கொண்டதாய் இருக்கும். பேரிய தெருக்களையும், குறுந்தெருக்களையும் உடையதாய் மலை போன்ற மாடங்கள் நிறைந்ததாய், எப்போதும் இனிதுறைந்து வாழ்வதற்குரிய தன்மையினைக் கொண்டதாய், சேயாற்றின் கரைக்கு மிக அருகில் அவனது ஊர் இருந்தது.

கோபுர வாயிலில் பசுவின் கன்றுகள், யானைக் கன்றுகள், கரடிக் கன்றுகள், வரையாடுகள், செம்மறிக் கடாக்கள், கீரிப் பிள்ளைகள், மான் குட்டிகள், உடும்புகள், மயில்கள்இ கானங் கோழிகள் ஆகியன இருக்கும். பலாப்பழங்கள், பழச்சாற்றில் செய்யப்பெற்ற பண்டங்கள், நறைக் கொடி, நூறைக் கிழங்கு, கருப்பூரம், யானைத் தந்தம், காந்தள் பூ, நாகப்பூ, திலகப்பூ, சந்தனம், பச்சை மிளகு, கள், தயிர், தேன், ஈரப்பலா ஆகியன நிறைந்து காணப்படும்.

இயற்கை வளம்

மூதூர் இயற்கை எழில் கொஞ்சும் ஊராக இருந்தது. மலையில் வாழும் மக்கள் இயற்கையோடு வாழ்ந்தனர். அவர்களின் இருப்பிடத்திலே பல வகையான இயற்கை உணவுகள் மூலிகைகள் இருந்தது. முசுண்டைக் கொடிகள் விரிந்து மலர்ந்திருந்தன. காய்கள் நிறைந்த எள் செடிகள் பசுமையாக வளர்ந்திருந்தன. தினைக் கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராக இருந்தன. அவரைக் கொடிகள் விளைந்த காய்களை மிகுதியாகக் கொண்டிருந்தன. வரகுக் கதிர்கள் அரியப் பெற்றன. ஐவன நெல்லும், வெண்ணெல்லும் நன்கு விளைந்தன. கரும்பு அறுக்கப்பெற்று ஆலைக்குச் சென்றது.

மூங்கில் நெல்மணிகள் முற்றி அவல் இடிக்கும் பதத்தை அடைந்தன. தோட்டத்தில் உழுகாமல் விதைக்கப்பெற்ற வெண் சிறு கடுகு செறிந்து விளைந்தது. அறுவடை செய்யப் பெற்ற வயல்களில் நெய்தல் மலர்கள் பூத்திருந்தன. இஞ்சிக் கிழங்கும், கவலைக் கிழங்கும் செழித்து முற்றியிருந்தது. வாழை மரங்கள் குலைகளை உடையதாய் முற்றிப் பழுத்தன. காய்க்கும் காலமல்லாத காலத்திலும் காய்த்த நாவல் மரங்கள் கனிகளை உதிர்த்தன. சுவை மிகுந்த மாங்கனிகள் உண்போரை வேறு கனிகளை விரும்பாதவாறு தடுத்தன. பலாவின் கனிகள் முற்றிப் பழுத்து வெடித்தமையால் விதைகளைச் சிந்தின. பலாக்காய்கள் மத்தளங்களைப் போல மரங்களில் தொங்கின, செங்காந்தளின் சிவந்த மொட்டினை ஊன் துண்டு என்று நினைத்து பருந்து எடுத்துப் பறந்து பின்பு உண்மையறிந்து அதனைக் கீழேபோட விழுந்ததால் சிதறிய செங்காந்தள் மொட்டின் இதழ்கள் பலவும் பாறை மீது கிடந்த காட்சி வேலன் வெறியாடும் களத்தைப் போல் இருந்தது.

மலையில் கேட்கும் பல்வேறு ஓசைகள்

அருவி நீரைக் கைகளால் தடுத்துத் தேவமகளிர் நீராடும் ஓசை, தினைப்புனத்தில் புகுந்த யானையைப் பிடிக்க முயலும் போது கானவர் எழுப்பும் ஓசை, முள்ளம் பன்றியின் கூரிய முள் குத்திய வருத்தத்தில் கானவர் அழுகின்ற ஓசை, புலி தாக்கியதால் தம் கணவர் மார்பில் ஏற்பட்ட ஆழமான புண்ணை ஆற்றுவதற்காகக் கொடிச்சியர் காவல் கருதிப் பாடுகின்ற பாடல் ஓசை, வேங்கைப் பூக்களைக் கொய்வதற்காகப் 'புலி' 'புலி' என்று மலை மகளிர் கத்தும் மகிழ்ச்சி ஆரவார ஓசை, தன்னைக் காத்துவரும் ஆண்யானையின் மீது புலி பாயப் பெண்யானை தன் சுற்றத்துடன் முழங்குகின்ற இடியொலி போன்ற ஓசை, பள்ளத்தில் வீழ்ந்த குட்டியைக் காப்பாற்ற இயலாத கையிறு நிலையில் தாய்க்குரங்கு கத்தும் ஓசை, உயரத்தில் இருந்த தேனடையைக் கொள்ளைக் கொண்ட களிப்பில் கானவர் எழுப்பிய ஓசை, நன்னனுக்கு அன்பளிப்புச் செய்வதற்காகப் பொருள்களைச் சேர்த்துவிட்ட மகிழ்ச்சியில் குறவர்கள் தம் மகளிருடன் சேர்ந்து சிறுபறையை ஒலித்தலால் தோன்றிய 'கல்ஷ எனும் ஓசை, குறவைக் கூத்தின் ஓசை, மலையில் ஓடி வரும் ஆறுகள் குகைகளில் விழுவதால்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

தோன்றும் ஓசைஇ காட்டாற்றுச் சுழியில் அகப்பட்ட யானையின் சினத்தைத தணித்துத் தூணில் கட்டுவதற்காகப் பாகர் எழுப்பும் ஓசை, கிடையிலிருந்து பிரிந்து வந்த காளையும் மலையிலிருந்து வந்த காளையும் இடையரும் குறவரும் ஆரவாரம் செய்ய ஒன்றோடொன்று முட்டி சண்டையிடும் ஓசை, பலாக் கொட்டைகளைக் கொள்வதற்காகக் கன்றுகளைப் பிணைத்துக் கடாவிடும் சிறுவர்களின் ஆரவார ஓசை, கரும்பினை ஒடித்து ஆலைகளில் இட்டு ஆட்டும் ஓசை, தினை குற்றும் பெண்டிர் பாடும் வள்ளைப்பாட்டு ஓசை, சேப்பங்கிழங்கையும் மஞ்சளையும் பன்றிகளிடமிருந்து காப்பதற்காகக் காவலிருப்போர் முழங்குகின்ற ஓசை, இந்த ஓசைகளெல்லாம் மலையில் எதிரொலிப்பதால் தோன்றும் ஓசை ஆகிய அனைத்த ஓசைகளும் ஒன்றினைந்து மலையாகிய மதயானையின் பிளிரல் ஒலி போலக் கேட்கும்.

மக்களின் விருந்தோம்பும் பண்பு

புல்லால் வேயப்பெற்ற குடிசைகளில் வசிக்கும் மக்கள் மூங்கிலரிசி, நெல்லரிசி, அவரை விதை, ஆகியன சேர்ந்த புளியங்கூழை தங்கள் வீட்டிற்கு வருபவர்களுக்கு உணவாகத் தருவர். மலை மீது ஏறிக் கொண்டு வந்த மலைப் பொருட்களை உணவாக கொடுப்பர். குறமகளிர், பலாக்கொட்டை, கடமானின் தசை, முள்ளம் பன்றியின் தசை ஆகியவற்றை ஒன்றாய்க் கலந்து புளி சேர்த்து மோர் உலையில் மூங்கில் அரிசியைப் போட்டு ஆக்கிய சோற்றை உணவாக அளிப்பர். நன்னனிடம் பரிசில் பெறுவதற்காகப் புறப்பட்ட கூத்தரர்கள் தாங்கள் வந்த நோக்கத்தை மறக்கும் அளவிற்கு மூதூர் மலைவாழ் மக்களின் விருந்தோம்பல் சிறப்புடையதாய் இருக்கும்.

வழிப்போக்கருக்கு வழங்கப்படும் உணவுகள்:

திருமண வீடு போன்று மணக்கின்ற மலைச் சாரலில் கானவர்கள் தேன், ஊன் கிழங்குக் கூடைகளை வைத்திருந்தனர். கானவர்களின் சிறுகுடியில் நெய்யில் பொரிக்கப் பெற்ற தசைப் பொரியலுடன் தினைச் சோற்றை கூத்தருக்குத் தருவர். மலைமீது ஏறிக் கொண்டு வந்த மலைப் பொருட்களை தருவர்.

ஆட்டுக் கிடையர் வாழும் பகுதியில் கூத்தர் செல்வாராயின் அவர்கள் தமக்காகச் சமைத்து வைத்திருந்த பாற் சோற்றினை அளிப்பர்.

நாடுகாக்கும் வேடர்கள் தசைகளையும், கிழங்குகளையும் கொடுத்து வற்புறுத்தி உண்ணச் செய்வர். மருத நிலத்திற்கு செல்லும்போது அங்குள்ள உழவர்கள் மீன் உணவை வழங்குவர். நெல் முளைகளால் உண்டாக்கப் பெற்ற கள் தெளிவினைத் தருவர்.

முடிவுரை

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றினையுடைய தமிழ் இலக்கியத்தின் மகுடமாகத் திகழ்வது சங்க இலக்கியம். பத்துப்பாட்டில் ஒன்றான மலைபடுகடாமில் கூத்தர்கள் பற்றிய குறிப்பு, விறலியர், யாழ் வருனணை, நன்னனது மூதூரின் சிறப்பு, இயற்கை வளம், மக்களின் விருந்தோம்பும் பண்பு, மலையில் கேட்கும் பல்வேறு ஓசைகள் பற்றிய செய்தியினை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

அடிக்குறிப்பு

1. முனைவர். மு.இ. அகமது மறைக்காயர். *மலைபடுகடாம் தெளிவுரை.*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

Status of Women in Tamil Society under the Cholas

Dr. S. Anusuya, Assistant Professor, Department of History, Government College for Women, (Autonomous), Kumbakonam, Thanjavur (Dt), Tamilnadu.

Abstract

Amid the time of the incomparable Chola lords, women were given equivalent significance. Engraving and scholarly works demonstrate that women were offered opportunity to do anything in the general public. Women were put under no limitations in their public activity and exercises, however unobtrusiveness was considered the most elevated among their graces. The engravings give numerous instances of women of the high societies owning property in their own and discarding it as they picked. The impact applied by a portion of the princess of the Chola illustrious family on the open strategy of decision rulers has just been taken note. Be that as it may, in the event of standard women, the work of female work in the less talented occupation was maybe very as normal.

Keywords: Status, Women, Tamil Society, Cholas

Women in Family

Women awere given certain previleges in all phases of life and they lived a secured life. Many evidences are here to know about te state of women under the Chola regime.

As Wife

The family was the fundamental of social structure. The father was the leader of the family and the lady as spouse of the house holder was a definitive turn of society. A lady as spouse is meant by the words Jaya, Jani, and Patni each signifying uncommon normal for wife-hood. Jaya implies the sharer of the spouse' affections; Jani implies, the mother of kids; and Patni, the accomplice in the recognition and execution of religious sacrifices.1 The house wife was additionally called Illal, and Irkilattimanai (i.e the woman of the house, the place of wife) or grahalakshmi, and so on., and she was considered as the illuminating presence of the home. She was spoken incredibly exceptionally of and with extraordinary veneration on the off chance that she was a flawlessly faithful spouse. Customarily women needed to embrace virtuousness as the noblest of all ideals in family life. Resistance despite being abused on account of their spouses was instructed to them to support relatives and for accomplishing concordance in families.

Women were celebrated as the 'light of home'. “Nanmanikkadigai” laid down that a 'house is a void without a women to run it'. It additionally said 'an upright spouse gives a decent status to her home. Thiruvalluvar depicts the spouse as 'illal'. The family unit women delighted in opportunity. The spouse involved a significant spot in the family. The devoted

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

housewife's significant worry at home were cooking, taking care of the youngsters and dealing with the economy of the family. For spouse, the husband was more deserving of love than any other person. Hindu content praise, Kunti, Madri, Gandhari, Mandodari, Sita, Savithri, Kannagi, Damyanthi and different as models of wifely dedication and responsibility. The spouse should dependably take up to her better half for direction like the Nerunji bloom which dependably took up to the sun.

Women Rulers like Sembian Mahadevi, Kundavai Pirattiyar, the sister of Rajaraja I, Lokamahadevi, and numerous others were noted for their altruistic exercises that made magnanimous gifts to sanctuary. Ruler Sembiyan Mahadevi built a sanctuary for the sake of her consecrated spouse at Trinallam amid the rule of her child Uttama Chola. Like that Rajendira I, the Chola ruler fabricated a sanctuary in memory his ruler Panchavan Mahadevi called Panchavan Mahadevisvaram at Ramanathan Koil (mudikonda solapuram) in the seventh year of his rule. Thiagavalli, the central ruler of Kulottunga I practiced equivalent rights and power like her significant other. The ruler of the Chola Rajadhiraja II was a ruler in her very own inflexible.

As Mother

The situation of a lady as a young lady, lady of the hour and widow, she absolutely involved a most decent position in the public eye as mother. Further the mother is the most respected individual in this world, considerably more than the dad all through the ages. When a spouse turns into a mother, her responsibility to the kid adds another measurement to the proceeding with disintegration of her own character. The introduction of kids was excitedly invited; it was the obligation of the mother to bring forth a kid. Childlessness was viewed as a genuine setback. The youngsters gave the solid obligation of relationship between the dad and mother. It will be worth a lot to see how mothering in the Tamil nation was a necessary piece of the most punctual training of the kid. The up bring of the youngster, until the tyke was sufficiently matured to get guidance from an educator or father was primarily the worry of the mother. Widow from the get-go in youth, Sembiyan Mahadevi, gave her life for the childhood of his child Uttama Chola and showered all her fondness on her child. Isaignaniyar, the mother of Sundarar merits extraordinary commendation since it was her child Sundarar who gave out the rundown of Nayanmars and he himself incorporated the name of his mom in the Tiruttondarttogai, in this manner demonstrating his respect to her.

As Daughter

Thiruvalluvar held that kids establish the genuine abundance of the family also, it is the obligation of the spouse to bring forth a kid. In Tamil nation the act of the spouse paying a specific measure of cash for the lady called 'vaduvai mulai vilai' was in vogue. The Ulas notice a few gatherings of women who were utilized as cultivates in the places of wealthy to bosom – feed, to raise and to secure the offspring of the rich. They were known by the names Perattayar, Mudukilavit-tayar, Mulaittayar, Kat-tayar and Koi-tayar. So also there were gathering of lady who were utilized in the place of the rich as housekeepers to support their

young little girls and to stay with them in. They were known as Pankiyar,SediyarandTaliyar. Amid the period young women of higher strata of the general public lived in a different quarter of the royal residence called Kanniamadam.

At the larger amount training was the privilege of moving young women and a couple what's more, refined women. In any case, troublesome of the normal young lady at the base of the general public was discouraged. Then again male youngsters when they had accomplished the age of 13 years were rejected from their family. They said that the young men were then of an age to get their living in terms of professional career. Indeed, even in the regal family when the ruler kicks the bucket none of the youngsters sets out to contact his fortune. In this way, the being of a women had been sold to conventional culture, while her getting to be had been sold the desires of her significant other and family. Women were celebrated it they relinquished their very own objectives and keep on living for other.

Regal Women

Women were not put under any restriction in their public activity and exercises. Women in the upper strata of the general public delighted in equivalent benefits with men. The ruler sat on the honoured position alongside the lord and reserved the privilege to issue regal requests. The Queen of the incomparable Chola rulers had equivalent power with the lords. The royal residence where the ruler and Queen lived was called as koyil, the murram (yard) was called koyilpuramand the private spot where the Queen lived, was called as 'Antappuram' (Cinena). She took a functioning part in the royal celebration service and was delegated alongside the ruler. She was commended as Aruntati, the encapsulation of Karpu (chastity). They applauded in the tribute of lords and in abstract functions as "Pen Perumaal", Anthappura Perumaal", and "Anthappura Chakkravarthi". The rulers were delegated alongside rulers; they sat alongside the ruler on the position of authority and issued arranges in the get together; they likewise reserved the option to issued arranges individually. They went with the ruler amid chasing excursions or obligations other nation trips as well. The ruler reserved the option to raise sanctuaries or found for the development of sanctuaries or include in like manner works of the general population. Numerous women of illustrious heredity have done numerous works like development and redesign of sanctuaries and streets, gift of land and gold, and so forth. It is recorded that Kundavai Pirattiyar, the little girl of Sundra Chola Parantakan and sister of Rajaraja Chola have given numerous gifts. Engraving specifies that Kundavai Pirattiyar assembled Sundarachola Vinnagar in Tanjore in memory of Alwar Seeriparantakan's dad and furthermore manufactured a clinic at Thirumalavadi.

Marriage System

Amid the Chola times, relational unions were led on favourable days with much grandeur and show. The festival of marriage (called Vivaham or Kalyanam) was considered by the Tamils as an issue of essential significance. Early Tamil writing talks around eight sorts of relational unions rehearsed in the Tamil society. They are Brahmana (Brahma), that of gods (Diava),that of the Rishis (Arsha), that of thePrajapati (Prajapatya), that of the

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

Gandharvas (Gandharva), that of the Asuras (Asura), that of the Rakshsasa (Rakshsasa) and that of the Pisakas (Paisaca). Of these eight types of marriage the initial four are commonly endorsed as religious relational unions and these are perceived as idealistic relational unions. These four relational unions are trailed by Brahma ceremony. These relational unions do have the best characteristics of people.

Child Marriage

The Smiritis accentuation that the pre-adolescence marriage the perfect one. The period of marriage is 16 for male and 12 for young lady. There are stray references about the establishment of marriage in the Ulas of the Chola times. Vaduvai or Manam implied marriage. The Brahminical marriage included expands rituals and the most fundamental parts of any Brahminical marriage were the saptapati (seven stages by the lady of the hour and the groom). The tying of the Tali or symbol of marriage, around the lady of the hour's neck by the groom. Bone the image of marriage is named as Mangala Ani. Bone was viewed as consecrated and was attached to the lady of the hour by the husband on the event of marriage. Today additionally bone are the significant image of hitched life for lady. The act of tying the Tali to the lady may have showed up about the time Rajaraja-I (9851014 C.E.) in light of the fact that we find inscriptional proof of bone being attached to picture of goddess in the sanctuary.

Women's Property

In the antiquated smritis and 'dharma sastras (generally going back to B.C.E.200 - C.E. 400), which were the primary orderly treatment of Hindu law, the subject of property rights and legacy framed one of the significant parts of common law, with the more disputable inquiry of women' rights likewise being examined. Indeed, even the Manusmriti perceived women' property or stridhan, and the privilege of unmarried little girls to an offer of the dad's property.

Stridhana

The share was given by the groom to the dad of the lady of the hour. Occasions of grounds given as shares to young ladies of rich and working class are found in engraving. The Chola share framework made ruins ladies and the wedded restored land gifts called Mahakkodai or Stridhanam. Attributable to their love for the girl the guardians may have gotten a kick out of the chance to give a section and at some point even the entire of the lady of the hour cost to be delighted in by her as a different bequest amid her very own life time. The ruler Tribhuvana Mādēvi, spouse of Uttama Chola (C.E. 973-985) had obtained lands, which were allowed as Stridhanam to two women of Sembiyan Mādēvi Chattuvedimangalam.

Sati

The significance of the word 'Sati' in course of time changed from 'temperate spouse' to self-immolating widow. i.e, the widow entering her significant other's memorial service fire. The most punctual reference to Sati in the Tamil society is followed to a memorial

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

service song in the Rig Veda. The Sangam Tamil writing outfits recorded proof for the predominance of Sati in the Tamil society. The word 'Sati' happens in that writing; its reciprocals in Tamil 'tippaidal', 'tikkulittal'. Sati implies in Tamil udankattai erudal or tidppaidal, by and large, it implies self-immolation of a widow on the burial service fire of her significant other. This malicious practice existed in Chola period. *Tolkappiyam* specifies a thinai called kanchi; the subject of which is the temporariness of life. It has a subdivision under the subtitle palai nilai (condition of hardship) which manages wonders of Sati. The Tiruvalangadu plates and Tirukkovilur engraving notice the instance of Vanavan Madevi, the ruler of Sundara Chola, took her life on fire when her better half kicked the bucket in C.E. 973. The mother of Rajaraja I submitted sati. It was clear that his was considered as her commendable demonstration that drove her girl Kundavai to set her mom's picture in the Tanjore sanctuary. She likewise displayed gems to accommodate its love. In the rule of Parantaka Chola I, Gangamadeviyar, the spouse of Kodumbalur feudatory King Virasola Ilangovelan submitted Sati. She was consuming herself alongside her better half. She blessed a light to sanctuary before entered the flame.

Rajendra Chola I died in C.E.1044 Viramadevi, one of his spouses submitted Sati. Amid the rule of Virarajendra Choladeva, another case of sati draws our consideration. After the passing of the feudatory ruler named Rajarajamalayakularasan, his significant other submitted sati. A statement was made by a lady before submitting Sati. She asserted that on the off chance that she lived after death of her better half, she would turn into the captive of co-spouses. On the off chance that she didn't pass on, the individuals who accumulated there tossed her into the flame and killed.

The Devaradiyar

Amid the Chola Period, numerous house cleaner hirelings called devaradiyars were utilized in sanctuaries. The foundation of devaradiyars was in presence sooner than Parantaka I and proceeded after him. They figure in a few sanctuary records and assumed a significant job in the social exercises of the age. They believed themselves to be the little girls of the god. Fanning God with a fly whisk, offering Kumbhadipa on exceptional events, performing moves before the divinity and singing shaped a basic piece of their job in every day love. Amid celebration times, they displayed their imaginative capacity; Proficient artists were given the title Talaikkoli. These moving young ladies were likewise called Kuttapillai devaradiyars were known as Kaliyaga Lakshmis. Devaradiyars were given grounds for their support. The Thanjavur Inscriptions notice the arrangement of 400 devaradiyars at the Brahadiswara sanctuary of Thanjavur. Separate quarters were designated them. They were additionally exchanged starting with one sanctuary then onto the next by the request of the lord. The Bahur Inscription of Kannaradeva records devaradiyar as one of the gatherings related with the neighborhood organization of Bahur Village. The directed renown in the general public and worked alongside the Ganapperumakkal. Being sanctified to God they

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

were regarded individuals from the network and they were well-accommodated by the sanctuary and the network in the Chola period.

Women are given such kind of privileges. These are the customs and the state of women in the times of the Cholas. This article expressly portrays the picture and the job of Women in old India. It additionally centers upon the province of Women, regard which was given to them and how ladies are treated in the Society, in general, it portrays the image and Women amid the Cholas Regime.

References

1. K.K. Pilly, *A Social History of Tamils* , Vol. I, Madras, 1975, p.385.
2. A. Devanesan, *History of Tamilnadu up to 2000 A.D*, Marthandam, 2004, pp-55-56.
3. R.K. Tondon, *State of Women in India*, Delhi, 1998, p.48.
4. B.S.Chandrababu, *History of People and Their Environs*, Chennai, 2011, p.36.
5. *Kurunthogai*, V.315; M.Arokiaswami, *The Classical Age of the Tamils*, University of Madras, 6.
6. *S.I.I.*, Vol.II, No.144.
7. Kanakalatha Mukund, “Turmeric Land: Women's Property Rights in Tamil Society since Early Medieval Times”, *Economic and Political Weekly*, Vol. 27, No. 17, Apr. 25, 1992, p.WS-2.
8. A.Sivasubramanian, *Sati through the Ages in Tamilnadu*, Trivandrum, 1981, p.151.
9. *A.R.E*, No. 492 of 1906-1910.
10. Dr. C. Manoranjithanoni, *History of Tamilnadu upto 1565 A.D*, Tirunelveli, 2012, p.394.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

A Rare Form of Maartanda-Bhairava- A Probe into Stylistic Evolution

Dr.A.Karkuzhali, Assistant Professor of History
Kunthavai Naachiyar Govt Arts College For Women(A), Thanjavur-7.

Abstract

A syncretic picture which happens over and over among the education and archeological confirmations, is the type of Martanda-bhairava, for example Surya and Siva. It is intriguing to take note of that the relationship of Visnu (initially an Aditya) and Surya is famous, yet that of Surya and Siva is relatively uncommon. There are even some archeological remains which particularly demonstrate the composite portrayal of Brahma, Siva and Surya. The present studt reveals some facts about the concerned theme.

Keywords: Rare Form, Maartanda-Bhairava, Stylistic Evolution

It is clear that both the prior and the later Puranas give plentiful materials with respect to the starting point of this picture. The *Samba Purana* outfits an intriguing scene with regards to which we discover how this type of Martanda-bhairava created. It is expressed there that in the wake of tearing without end Brahman's head, Rudra tokk the skull in his grasp and went bare to Daruvana for rehearsing repentance. At seeing Rudra, the brains of the spouses and little girls of the sages wound up fomented. So the sages pushed Rudra far from the spot. Rudra went to the sun based area where the Sun's main chaperon exhorted him to interest the Sun for disposing of the wrongdoing submitted. Rudra praised the Sun, the outcome being that he was purged and given the name Dandi. The Sun exhorted Rudra to live in a sacrosanct spot on the earth where he himself would live with him in organization with his eighteen boss chaperons just as fourteen others. The sun additionally given celestial learning on Rudra, gave the name of Avimukta-ksetra to where Rudra rehearsed starknesses to pick up his support, and guaranteed Rudra that those individuals, who might bow down to the last mentioned and the Sun at that place, would end up perfect. The story in this way demonstrates there is no distinction among Siva and Surya. In this association we may specify the record of the Matsya Purana which contains somewhere around two references demonstrating such an affiliation mahesvara ought to be performed under the name of the Sun (Uma-mahesvarasy-arcam=arcayet Surya-namabhih).

A similar Purana further expresses that there is no contrast among Umapati and Ravi. At that point in the wake of having counted the Sun's names and the spithets by which Siva is signified, the content includes: "Tribute to that one, who conveys noose, urge, skull-container, snake, moon and bow" (namo='stu pas-nkusa sula-padma-kapala-sarp-endu-dhanur-dharaya). It is to be noted in this association that of the various traits referenced above, disjoin are Saiva and just one. i.e., the lotus or padma, is the trademark image of the

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

Sun. The nearby association among Siva and Surya is additionally exhibited by the record of the section on 'Navagraha-homa-sant-vidhana which clarifies a custom out of appreciation for the nine grahas, every one of them being related with one main holiness (Adhidevata), that is, Isvara is that of the Sun, Uma and the Moon and such (Bhaskarasy=Esvaram vidyad-Umam ca Sasinas=tatha). The Linga Purana additionally alludes to such a syncretic type of Surya and Siva. The two partisan Puranas, viz. Samba and Linga, classed as Saura and Saiva separately, notice this type of Siva thoroughly.

The *Agni-purana* gives us a nitty gritty portrayal of te characteristics of Martanda-bhairava. These characteristics are commonly indistinguishable with those given in the Narayana Tantra, refered to by Raghava-bhatta on the Tantra. The line 'Sindura-arunam=Isanam vam-ardha-dayi-cap Ravim' has been deciphered by Raghava-bhatta in the accompanying manner 'Isana is of red vermilion shading having Ravi on the left as his adoring better half'. Truth be told, the veracity of this stanza is suspicious in light of the fact that the type of the Sun-god with his significant other in the left half of his body is neither alluded to in any of the Puranas nor has any sculptural portrayal of this sort yet discovered. Siva, then again, is portrayed in numerous education fills in as having his adored goddess on the left. We have just referenced some composite iconographic portrayals in which Siva has been involved the correct side of the model.

This composite structure is strikingly portrayed in the Saradatilaka Tantra. The divinity is lauded in the content as pursues: "we render praise to the god who has a natural shine as the bud of a brilliant lotus and has in his grasp khatvanga, padma, cakra, pasa, srni, aksamala and kapala. Deference to him who has four faces and is improved by three eyes each, and wears atiara of valuable pearls and is ornamented with a necklace." Thus, the Dhyana-mantra of a specific assortment of Sun (Martanda) showing up in the said Tantra adjusts of an extraordinary degree to its iconographic highlights, and the content says that such an assortment of the Sun-god is 'a large portion of' (a section) of Siva (Ballabharddha). It is intriguing to take note of that D.K.Biswas is slanted to follow the root of a Javanese Kutamantra 'Om hrm sah Sivasurya-parantejasvarupaya namah' to India. In this association he alludes to the Saura Purana, the fundamental reason for which, as indicated by Winter-nitz, is to laud Siva. Once more, Siva has been related to the Sun god in the Puranas which we have referenced before. To reinforce his view a similar researcher further alluded to the Nirmand plate of the Mahasamanta Maharaja Samudrasena, wherein in Siva linga is called Mihiresvara, Mihira being a notable name of Surya. Armada likewise opines that it particularly demonstrates the affiliation and distinguishing proof of the Sun with Siva.

The portrayal of three distinct sorts od Martanda-bhairava is to be found in the Srihayasirsapancaratra, in particular, six-gave, twelve-gave and eighteen-gave. The content likewise gives us a thorough record with respect to the traits in different hands. In this manner when the god is six-given, he is spoken to as remaining on the lotus sprung from the sea, or in a moving frames of mind on a pontoon. He uses different weapons and has a savage

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

face with the entire scope of teeth uncovered. His tangled hair is tied up with a snake. He should wear a laurel of human heads (munda-mala). In his correct hands, he uses the cakra, trisula and parigha and in the left the damaru, gada and khatvanga. He hasa wide chest and well-formedhands. He ought to be spoken to as encompassed and served by his orderlies Dandin and Pingala, his rulers, the kinnars and other gods.

At the point when the god is spoken to with twelve hands, he holds khadga, khetaka, capa, sula, mukura, ghanta, madhupatra, kartrka, cakra, parigha, trisula, and damaru. In his eighteen-gave structure, he uses khadga, dhanus, musala, pasa, mukura, churika, pattisa, khetaka, sula, ghanta, madhupatra, kartrka, cakra, parigha, trisula, dmaru, gada and khatvanga. It is intriguing to take note of that a large portion of these symbols are the trademark signs of the Saivite faction, dants of Surya, viz., Dandin and Pingala, are alluded to the most significant characteristic of Surya, the lotus is missing here.

Achaeological confirmations of the medieval ages are not having any desire to validate the commonness of this syncretic type of picture. There are brilliant precedents, sculptural or iconographical of this type of picture in the sanctuary of Surya at Konarok, Orissa One such sort of picture can be perceived in the portrayal of a six-furnished composite picture found at Madhia in the old Panna state in Bundelkhand Hiralal couldn't recognize the picture properly. He alludes to every one of them as the portrayal of Trimurtis, the constituent components being depicted by him as Brahma, Visnu, and Shiva. However, it gives the idea that this symbol makes them bear on the aforementioned origination of Martanda-bhairava as it holds in two of its left hands a trisula and a padma, the third hand being in the varada present; one of the correct hands is broken, the other two holding a padma and a mrganka images. The boots on the legs and the lotuses in the hands are no uncertainty the sun powered highlights, while the trident and the deer tokens are Saivite attributes. In Bengal, this sort of picture has been found. A Martanda-bhairava symbol having a place with the twelfth century A.D. was found at the town of Manda in the Rahshahi District. While concentrating the picture K.C.Sarkar seen that it speaks to the Martanda-bhairava type of the god as indicated by the Dhyana referenced in the Saradtilaka with some minor varieties. The two fore-arms which held lotus stalks, and the two underneath them are broken. Despite the fact that the essence of the primary figure and the crown are marginally damaged, the pointed tilaka are the third eye is yet obvious. The picture is three-confronted and ten-furnished. The left hands convey sarpa, damaru, kumudi and a full-blownlotus, and its correct hands hold khatvanga, trisula, sakti and padma. The picture has a pointed radiance with kirtimukha at the top back are appeared decreasing towards the top. The picture is luxuriously befitted with different decorations, for example, kantha-hara, karna-kundala, sirobandha, kati-bandha and yajnopavita. Every one of the other two faces on the left and the correct sides of the principle figure likewise wears jatamakuta and has three eyes, and one of the two is appeared unshaven with the entire scope of teeth uncovered . the focal figure of the board, i.e., the fundamental god stands erect on an out and out lotus or padma-pitha. A little blade goes through the gridle

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 **Available at: www.ijtlls.com**

and is appended to one side of the picture. On either side there are two female figures, most likely Usa and Pratyusa. Pingala holding pen and inkstand is appeared on the extraordinary right. On the left of the picture, stands Dandin getting a handle on the handle of a sword. There are likewise two female figures holding whisks, who are the consorts of the Sun-god. On a padma-pitha before the primary picture, the goddess Prthvi. Another female figure put before this picture has been recognized by K.C.Sarkar asAruna, the charioteer of the Sun-god. Be that as it may, the distinguishing proof isn't right. The portrayal of two created bosoms of the figure, a snake hood behind her head and a line in her correct hand demonstrated without a doubt that it is a female figure. The divinity is riding on a Makara and waves are obvious close by. She may speak to Ganga. Be that as it may, there can be no uncertainty that syncretistic belief system was completely at work in the development of this picture.

We have just talked about the significance and importance of this composite type of portrayal in various districts. There is no denying the way that the Sun-god once involved a conspicuous spot in India, especially in northern and eastern India, and this most likely asked the Saiva educators to join these two factions into one.

Refernces

1. The twelve Adityas of the Vedic list are – Mitra, Aryaman, Bhaga, Varuna, Daksa, Amsa, Surya, Martanda, Dhata, Indra, Vivasvat and Visnu.
2. DHI., pp.550-552.
3. Samba-Purana, chs.16-17.
4. MP., ch.55, L.v.5;The Skanda-purana as well as Sauradharma (cited by Hemadri) refers to the Sun as Hiranyaretas or Suvarnaretas who is equal to Siva, MP., ch.55, L.v.6.
5. Ibid., L.v.16, ch.93.
6. Ibid., XCIII.13; Uttarakhanda XIX.24: Suryah Sivo Jagannathah Somah sak sad= Uma svyam'.
7. LP., Uttarakanda, ch.XIX.
8. Agni-purana, ch.CCCI, 12-14.
9. Some scholars argue that the interpretation is not free from doubt, because Siva is not red-complexioned. According to them Isana, in the sense of Siva, cannot be the correct reading. Here Isana may be an epithet of Ravi in the sense of 'lord'.
10. D.C.Sircar, Foreigners in Ancient India and Lakshmi and Saraswati in Art and Literature, pp.140-141.
11. Saradatilaka, XIX, 71.
12. IHQ.VI, 1930, pp.465-70, Ibid., XXIX.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

13. SI.p.290; D.C.Sirkar thinks that Siva was so named because the god was installed by a Mihiralakshmi. He further says that Siva installed by Mihirakula was likewise called Mihiresvara (Raj.tar.I.306)
14. CH.III, p.288.
15. Tarapada Bhattacharya, Sihayasirsapancaratra, Saurakanda, XXVII.
16. Ibid., Saura Kanda, XXVII. 18-25, 25-26, 28-32
17. Journal of the Asiatic Society, XXI, 1955, No.2, p.83.
18. IA., 1918, p.137.
19. Varendra Research Society Report, 1929-30, pp.9-10, fig.2.
20. IHQ., VI, 1930, pp.465-70

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

The Ethical Standards for the Teaching Profession for a Constructivist Teacher

Dr. C. Muralikumaran, Assistant Professor,
Raja Duraisingam Government Arts College, Sivagangai.

Abstract

Constructivism is a generally ongoing point of view in epistemology that sees the majority of our experience. In this way, our insight does not really mirror any outer or " information as "developed" in that it is dependent upon show, human discernment and social otherworldly" substances. In this data age, instructor's job has changed from information disseminator to tutor. Understudies are currently not expected to be inactive in the homeroom rather they are relied upon to be dynamic, members and makers of learning. Thusly, the educators are relied upon to be completely furnished with substance information as well as with moral gauges to manage students. In this specific circumstance, this paper examined about the moral guidelines for instructing that is a constructivist in way to deal with learning in the study hall and furthermore out of study hall. Likewise clarifies about certain procedures for educating perfection.

Keywords: Ethical Standards, Teaching Profession, Constructivist Teacher

The moral norms for the education are given in detail to instruct the teachers, parents and well-wishers.

1. Care: The moral standard of Care incorporates empathy, acknowledgment, intrigue and knowledge for building up understudies' potential. Individuals express their promise to understudies' prosperity and learning through positive impact, proficient judgment and sympathy by and by.
2. Regard: Intrinsic to the moral standard of regard are trust and honesty. Individuals respect human nobility, enthusiastic wellbeing and psychological advancement. In their expert practice, they should regard for profound and social qualities, social equity, privacy, opportunity, popular government and nature.
3. Trust: The moral standard of Trust epitomizes decency, transparency and trustworthiness. Individuals' expert associations with understudies, partners, guardians, gatekeepers and the open depend on trust.
4. Trustworthiness: Honesty, unwavering quality and good activity are exemplified in the moral standard of Integrity. Nonstop reflection helps individuals in practicing uprightness in their expert duties and obligations.

These are some of the points that favour teaching methods. Below the standards of ethical manner of teaching methodologies and its impact and its effects on the target group are also embedded for clear understanding.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

Standards of Ethical College and University Teaching

1. Content Competence - A college educator keeps up an abnormal state of topic information and guarantees that course content is current, precise, delegate, and proper to the situation of the course inside the understudy's program of study.
2. Educational Competence - An academically equipped instructor conveys the destinations of the course to understudies, knows about option instructional techniques or systems, and chooses strategies for guidance that are compelling in helping understudies to accomplish the course targets.
3. Managing Sensitive Topics - Topics that understudy are probably going to discover delicate or discomforting are managed in an open, genuine, and positive way.
4. Understudy Development - The superseding obligation of the educator is to add to the insightfulness advancement of the understudy, in any event with regards to the instructor's very own specialized topic, and to dodge activities, for example, misuse and separation that take away from understudy improvement.
5. Double Relationships with Students - To stay away from irreconcilable situation, an educator does not go into double job associations with understudies that are probably going to cheapen understudy advancement or lead to genuine or saw bias with respect to the instructor.
6. Secrecy - Student grades, participation records, and private correspondences are treated as secret materials and are discharged just with understudy assent, for genuine scholastic purposes, or if there are sensible justification for trusting that discharging such data will be valuable to the understudy or will forestall mischief to other people.
7. Regard for Colleagues - A college educator regards the poise of her or his associates and works agreeably with partners in light of a legitimate concern for cultivating understudy advancement.
8. Substantial Assessment of Students - Given the significance of appraisal of understudy execution in college educating and in understudies' lives and vocations, educators are in charge of finding a way to guarantee that evaluation of understudies is legitimate, open, reasonable, and consistent with course destinations.
9. Regard for Institution - in light of a legitimate concern for understudy improvement, a college instructor knows about and regards the instructive objectives, strategies, and guidelines of the foundation in which he/she educates.

AAUP Statement of Ethics

AAUP Statement of Ethics in Teaching: In 1987, the American Association of University Professors (AAUP) distributed a Statement on Professional Ethics. From this announcement, morals in educating depend on the accompanying standards:

- Developing and improving insightful capability.
- Encourage the free quest for learning, show regard for people, and cling to their appropriate jobs, as scholarly aides and instructors.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

- Avoid any abuse, badgering, or unfair treatment of understudies/partners.

Systems of instructing brilliance

There are various instructing angles that advance perfection in educating. Among them most significant are: arranging, conveying, conveyance, question procedures, exercises, and inspiration.

1. Arranging

- Learning objectives
- Defining rules
- Preparing exercise plan
- Having supporting materials

2. Imparting

- Encourage understudies to take an interest
- Comment on understudy execution and practices
- Make a push to become familiar with understudies' name and use them
- Avoid unnecessary convention, yet don't get excessively close
- Do not overlook troublesome understudy conduct

3. Conveyance

- Keep pace with address advance
- Make associations among parts of the course
- Use pertinent models
- Use strong conveyance aptitudes

4. Questions

- Ask inquiries to check the perception of the understudies
- Prepare inquiries ahead of time
- Ask basic and maintain a strategic distance from immaterial inquiries
- Accept understudy reactions

5. Exercises

- Favour high learning exercises
- Give clear guidelines
- Encourage understudies to include
- Complete in time

6. Inspiration

- Create enthusiasm among the understudies
- Acknowledge and thank investment
- Commend great execution
- Relate with the past learning

Instructing is noteworthy and persuasive position in our general public. Related with this respect and impact comes a colossal duty. In this paper we have talked about the morals that acquire perfection instructing. Morals in an instructor are must to assemble solid

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com

countries. This turns into an ethical obligation of an instructor to be moral and educate in an extremely productive way. Instructing is viewed as a respectable calling. The understudy depends more on his/her instructor than his/her folks. Instructor is a genuine guide for an understudy. Thus, every educator ought to understand their own duties and pursue morals of showing calling for better eventual fate of our understudies and country.

References

1. Schurr, G. M. (1982). “Toward a Code of Ethics for Academics”. *Journal of Higher Education*, 5 3 (3), 318-134.
2. Tabachnick, B., Keith-Spiegel, P. & Pope, K. S. (1991). “The Ethics of Teaching: The beliefs and behaviors of psychologists as educators”. *American Psychologist*, 46, 506-515.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

A Study on *Dheiva Pulavar* Views in Functions of Business Management

Dr.R.Sakthivel, Assistant. Professor,
Department of Commerce, Thiru Kolanjiappar Govt Arts College, Vriddhachalam-606001

Abstract

The essential goal of considering the board is to pick up learning about how to oversee associations in order to enhance the accomplishment of their destinations, and to spread this information, different administration hypotheses and standards have been created. Indian directors have explicit motivations to be disappointed with the hypotheses created in modernly propelled nations and are followed in India setting. This situation is deplorable since this present reality is a definitive research center for the social researchers. On the off chance that terrible hypotheses are made that don't work the hole among hypothesis and practice is augmented. Along these lines, it is essential to recognize the reasons why hypotheses don't work practically speaking. Notwithstanding, chiefs, while putting the board standards into training, should stay aware of Dheiva Pulavar Thiruvalluvar's "Thirukkural" will be useful in getting good results in the Functions of Business Management.

Keywords: Study, *Dheiva Pulavar* Thiruvalluvar, Functions, Business Management

Planning

Arranging is the start of the procedure of the board. Arranging is on scholarly procedure which requires a supervisor to think before acting. It is thinking ahead of time. In this way arranging methods in business association administrators can choose "What could possibly be done, it is to be done, how it is to be done and who is to do it.

"No action take, no foe despise
Until you have surveyed the place". Thirukural Number: 491

Benefits of Planning

Aides in accomplishing destinations. Better use of assets. Economy in activity. Lessens vulnerability and hazard. Improves focused quality. Energize appropriate inspiration. Aides in basic leadership. Improves proficiency. To dispense with business the executives emergency. Advisers for viable control.

Organising

Sorting out methods characterizing and appointing duty and specialist and setting up connections to empower individuals to work most viably together in achieving their targets.

"Money and means, time, place and deed
Decide these five and than proceed". Thirukural Number: 675

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

Merits of Organising in Business Management Functions

Encourage organization builds the productivity of the executives. Encourages development and broadening. Guarantees ideal utilization of man and material assets. Encourages appropriate coordination and correspondence. Licenses ideal utilization of Technological development. Invigorates inventiveness and activity. Encourages advancement of administrative capacity.

Staffing

Staffing implies the chief endeavors to locate the opportune individual for each activity staffing helps in finding skilled and equipped laborers and creating them to climb the professional bureaucracy. Staffing guarantees more noteworthy generation by putting the correct man in the correct activity. Staffing gives data to the executives to the inward progression of administrative faculty in case of an unexpected turnover.

"This work by this, this man can do
Like this entrust the duty due". Thirukural Number: 517

Importance of Manpower Planning (Staffing)

Plant Expansion and Successful Employee Development program. Decrease in Labor Cost. Give Efficient Work Force. To Avoid Interruption in Production. Better and smooth mechanical relationship in business the board capacities.

Direction

Direction is a fundamental administrative capacity. For the powerful execution of any authoritative choice, arranging, sorting out and staffing are insufficient. The director must animate activity by provide guidance to his subordinates through requests and furthermore manage their work to guarantee that the plans and strategies accomplish the ideal activities and results.

"Well ordered seasoned act is cord
That Fortune Binds In Bon Accord". Thirukural Number: 482.

Vital Role of Directing in Business Management Functions

Issuing requests and directions. Managing, Counseling and showing the subordinates. Managing crafted by subordinates. Propelling to subordinates. Looking after Discipline. Consultative Direction .

Motivation

Inspiration implies a procedure of invigorating individuals to activity to achieve wanted objectives. Inspiration is the way toward endeavoring to impact others to do your will through the likelihood of remuneration.

"Fortune enquires enters with boom
Where tireless strivers have their home." ThiruKural Number: 594

Importance of Motivation

- Proper utilization of human resources can possible by providing monetary incentives like cash emoluments, fringe benefits.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

- Proper motivation improves the efficiency of business operation.
- Motivation leads to job satisfaction. As a result of this labour absenteeism and turnout are low.

Inspiration tackles the representatives and keeps up smooth connection among worker and boss in business. High inspiration lessens protection from change. By giving appropriate inspiration every one of the representatives will endeavor to be as productive as could be expected under the circumstances and to enhance their expertise and learning. Monetary and non-budgetary motivations hold the current workers as well as draw in the able representatives from outside the undertaking.

Leadership

Leadership is generally defined as the process of influencing people. So the process of influencing people. So that they will strive willingly towards the achievement of group goals.

"To lead is to guide
conduct, direct and precede"

A good leader this does not stand behind a group to push but he places himself before the group and inspires the group to accomplish organisational goals"

"Who have wisdom they are all full
Whatever's they own. Misfit are nill." Thirukural Number: 430

Importance of Leadership

Great administration in the business association itself is a rousing element for the people. Pioneer should make the earth to work proficiently. A pioneer actualizes the plans, approaches and projects of an association to use the accessible labor adequately and get most astounding creation with least human expense. A decent pioneer may make confidents in his devotees by guiding them, offering them to exhortation and traversing them great outcomes in the association. The individual lead and conduct of a pioneer can guide requests to accomplish hierarchical objectives. High assurance prompts high efficiency and authoritative steadiness. A decent pioneer utilizes punishments for the infringement of guidelines and concentrates more on self-restraint or deliberate restriction.

Communication

Communication is a trade of certainties, thoughts, assessments or feelings, by at least two man. Correspondence is as the way toward passing data and comprehension starting with one individual then onto the next. It constructs scaffolds of importance between individuals, empowering them to securely cross the streams of misconception.

"Know first the secret from experts
That is the way of fruitful acts." Thirukural Number: 677

Benefits of Communication

Good communication guarantees a smooth and unhindered working of business association. Correspondence brings to fundamental administrative choices. Correspondence helps for snappy and deliberate usage of the authoritative activities in business the board.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

Correspondence acquires a great deal arranging legitimately and co-ordinating the different administrative capacities. It maintains a strategic distance from fantasies , develops the spirit of the representatives and disposes of contentions and confusion. Correspondence helps in accomplishing most extreme dimension of efficiency with least expenses. Controlling includes contrasting working outcomes and plans and making restorative move when results veer off from plans.

Advantages of Good Control System

A good control system enables empowers business the board to confirm the nature of different plans and approaches. A control framework guarantees the accomplishment of goals. Control encourages business directors to release their obligations. Control holds the subordinates under check and makes discipline among them. Viable control guarantees proficiency and viability in the business association.

"The out flow must not be excess
No matter how small income is." Thirukural Number: 478

Co-ordination

Co-ordination is the deliberate game plan of collective endeavor, to give solidarity of activity in the quest for regular reason. Co-ordination is the deliberate synchronization of endeavors to give in amicable and brought together activities to an expressed goal." It is the organized synchronization of endeavors of the subordinates to give the best possible sum, turning and nature of execution, with the goal that their brought together endeavors lead to an expressed goal, in particular, the normal reason for undertakings. Co-ordination as the embodiment of overseeing on the grounds that the accomplishment of agreement of individual exertion towards the achievement of gathering objectives is the very reason the board.

"This crows hide not; they call and eat
Welfare abides a man of heart." Thirukural Number: 527

Benefits of Co-ordination

Co-ordination guarantees solidarity of heading through masterminding unconstrained cooperation with respect to various offices. It advances the proficiency of the business association and representatives. Co-appointment tones up the worker spirit and gives work fulfillment and keeps away from clashes between representatives. Co-appointment is an imaginative power . It makes something new our of the gathering which is dependably grater than separated or singular endeavors. It creates cooperation and guarantees an ideal domain of work. It stays away from intrusions on business tasks because of commission wrong assignment of obligations. Co-appointment disposes of irregularities in the business destinations and strategies.

Suggestion and Conclusion

The essential target of considering the board is to pick up information about how to oversee associations to enhance the accomplishment of their goals, and to spread this

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019 Available at: www.ijtlls.com

learning, different administration hypotheses and standards have been created. In any case, a typical articulation made by chiefs is, "That is fine in principle, however, by and by, it doesn't work." While this is valid for the administrators at the worldwide dimension, Indian directors have explicit motivations to be disappointed with the hypotheses created in modernly propelled nations and are followed in India setting. These supervisors might be right in saying so as the hypotheses they have connected probably won't have worked. This situation is heartbreaking since this present reality is a definitive lab for the social researchers. In the event that terrible speculations are made that don't work the hole among hypothesis and practice is broadened. Along these lines, it is imperative to recognize the reasons why speculations don't work practically speaking. In any case, supervisors, while putting the executives standards into training, should stay aware of "Dheiva Pulavar sees in Functions of Business Management.

References

1. Ka. Naa. Subramanyam, *Thiruvalluvar and His Thirukkural*. Bhartiya Jnanpeeth, New Delhi, 1987.
2. P. S. Sundaram, *The Kural*. Penguin Books: London, 1990.